





# வலிகாமம் வடக்கு
# பிரதேச மலர்

# வலிகாமம் வடக்கு பிரதேச மலர்

# VALIKAMAM VADAKKU

# PRADHESA MALAR

**வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக வெளியீடு**


மலராசிரியர்

**திருமதி பத்தினியம்மா திலகநாயகம்**



**மார்கழி - 2000**



39314



**பிரதேச செயலகம்**
**வலிகாமம் வடக்கு**
**தெல்லிப்பளை**

TITLE : Valikamam Vadakku Pradhesa Malar

EDITOR : Mrs. Paththiniammah Lionel Thilaganayagam

PUBLICATION: Divisonal Secretariat, Valikamam North.

FIRST PUBLISHED : 2000 December

COPY RIGHT : Mrs. P.L. Thilaganayagam

COVER DESIGN:UNIE Arts (PVT) Colombo.

TYPE SETTING : Ganesan Communications. Kokuvil

BOOK PRINTING: Pillaiyar Press, Nallur, Jaffna.

NUMBER OF COPIES : 750

PRICE: Rs.500.00

தலைப்பு - வலிகாமம் வடக்கு பிரதேசமலர்

பதிப்பாசிரியர் : திருமதி பத்தினியம்மா லயனல் திலகநாயகம்

வெளயீடு : பிரதேசச் செயலகம், வலிகாமம் வடக்கு

முதற்பதிப்பு : 2000 மார்கழி

முன் அட்டை பதிப்பு :யுனி ஆட்ஸ் - கொழும்பு

கணனி வடிவமைப்பு : கணேசன் கொமினிக்கேசன்ஸ், கொக்குவில்.

நூல் அச்சுப் பதிவு - பிள்ளையார் அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம்

நூல் எண்ணிக்கை - 750

விலை: ரூபா 500.00

# மலர்க்குழு

**திருமதி ப. திலகநாயகம்**
இலங்கை நிர்வாக சேவை தரம் I பிரதேசச் செயலர்

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**
ஓய்வு பெற்ற அதிபர்

**கலாபூசணம் ஏ.ரி பொன்னுத்துரை**
ஓய்வுபெற்ற ஆசிரியர்

**திரு. செ. சச்சிதானந்தம்**
கிராம உத்தியோகத்தர்

**திரு. க. கணேசதாஸ்**
கிராம உத்தியோகத்தர்

**திரு. ந. ரவீந்திரன்**
கிராம உத்தியோகத்தர்

**திரு. ஐ. சிவலோகநாதன்**
தொழில் அத்தியட்சகர்



# பிரதேசகீதம்

முந்தையரின் நுண்ணறிவே மூலதனமாக
எந்தையரும் அன்னையரும் வாழ்ந்த பிரதேசம்
செந்தமிழும் செந்நெறியும் செம்புலம்பெய் நீராய்
சந்ததமும் வளம்கொழிக்க வாழி! நிதம் வாழி!!

செங்கழனி நீர்நிலைகள் இறையருளின் தேக்கம்
நஞ்சையுடன் புஞ்சையுமே நம்மவரின் தேட்டம்
கொஞ்சும் எழில் மிஞ்சுமிடம் வலிகாமம் வடக்கே
பஞ்சமென்ன! தொழில் வளங்கள் வாழி! நிதம் வாழி!!

பஞ்சரதம் ஊர்ந்துவரும் மாவிட்டபுரமும்
நெஞ்சுருகப் பண்ணிசைக்கும் பக்தர் பரவசமும்
சங்கரனின் அருள்பெற்ற நகுலமுனி பெயரில்
இங்கு நகுலேஸ்வரமும் வாழி! நிதம் வாழி!!

தங்கம் முதல் பொருள்களுடன் பொதுமக்கள் பலரும்
வந்திறங்கும் துறைமுகமே காங்கேசன்துறையாம்
வங்கமெனும் கடல்வெளியில் மீனவர்கள் துறையாய்
என்றுமுள மயிலிட்டி வாழி! நிதம் வாழி!!

தென்னகத்தின் தளபதியாம் காங்கேயன் வந்த
மண்ணினிலே சீமெந்துத் தொழிற்சாலை கண்டோம்
எம்மகத்தில் மேல்நாட்டார் கொண்டு வந்து வைத்த
செஞ்சிலுவைக் கோயில்களும் வாழி! நிதம் வாழி!!

சிங்கமதன் மீதமர்ந்து அருளாட்சி செய்யும்
துர்க்காபுரம் உளது 'புஷ்கரணி' தீர்த்தம்
செங்கமலத் திருவுறையும் வெற்றிலை முந்திரிகை
நிந்தமெனும் வலிவடக்கு வாழி! நிதம் வாழி!!

எங்கோ உயரப் பறந்துவரும் விமானங்கள்
தங்கும் பலாலி நிலையம் நமதன்றோ
என்றோ உளநலமும் உடல்நலமும் பேணிவந்த
நன்றாம் வைத்தியசாலைகள் வாழி! நிதம் வாழி!!

சங்கீத சாகித்ய சமரச மெஞ்ஞான
வித்தகர்கள் வல்லுனர்கள் விற்பன்னர் மக்களுமே
மங்கள வாழ்வுடனே மங்காப் புகழும் பெற
வலிகாமம் வடக்குப் பிரதேசம் வாழி! நிதம் வாழி!!. வாழி !!

**"சிதம்பர பத்தினி"**

# நுழைவாயில்

வாருங்கள்! உங்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த அன்பு வணக்கம். ஈழமணித் திருநாட்டின் வடபால் கிரீடமென அமைந்துள்ள வளம் நிறை வலிகாமம் வடக்கின் களந்தரும் சேதியைக் கனிவுடன் கேளுங்கள்.

சங்க இலக்கியங்கள் நவிலும் ஐவகை நிலங்களுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களையும் இயல்பாகவே மூலவளங்களாகத் தன்னகத்தே கொண்டிருந்த வளம்நிறை வலிகாமம் வடக்கு இன்று ஐந்தாம் நிலமான பாலையாக மாறிவிடுமோ என்ற ஆதங்கத்தில் உங்களை அழைக்கின்றேன். நித்திலங்கொழிக்கும் வங்கக்கடல் ஓயாது தாலாட்டி அரவணைக்க, செம்பவள மேனியிலே மரகதப்பட்டுடுத்தி, அன்றலர்ந்த தாமரையாய் விளங்கிய வலிகாமம் வடக்கினுடைய பொற்புடைய இளமையை, பழைமையை, வளங்களை, ளங்களை, நிலங்களை, நலன்களை, மதங்களை, மதத்தலங்களை, புண்ணிய தீர்த்தங்களை, தொழில் நிறுவனங்களை, விமான ஓடுதளத்தை, காங்கேசன்துறை முகத்தை, புகையிர நிலையத்தைக் காணலாம் வாருங்கள். அதுமட்டுமா? நித்தநித்தம் செல்வம் கொழிக்கும் செம்மண் அழகை அள்ளி உண்டால் அமுத தாரையாயப் பசிப்பிணி தீர்க்கும் முத்தொழிரும் தண்ணீரை, நன்நீரை, பச்சைப்பசேலென மரகத ஒளிவீசும் நிலவளத்தை, திருமகள் உலாவும் வெற்றிலை வளத்தை, நீலக்கடல் மீதில் துள்ளிப்பாயும் மீனினங்கள் நண்ணிவாழும் கடல் வளத்தை, கைநிறைய கண்மலரும் தொழில் வளத்தைக் கண்டுகளிக்கலாம். வாருங்கள்!

நீங்களும் இவற்றையெல்லாம் அறிய வேண்டும். அறிந்தவற்றின் இனிமையை என்றும் மறவாமல் நினைவுகூரவேண்டும். எமது சந்ததியினருக்கும் உணர்த்த வேண்டும். என்றும் அழியா நினைவுச் சின்னமாக இவை நிலைக்கவேண்டும் என்பதால், உங்களை உள்ளே அழைக்கின்றேன். தயவு செய்து உள்ளே வாருங்கள். வந்து நீங்கள் இதுவரை கண்டும், கேட்டும், கற்றும், உணர்ந்தும் அனுபவித்த உங்கள் - தாயகம் - வலிகாம் வடக்கு மேலும் உன்னதமாக வாழ, வளர, இழந்தவற்றை மீளப்பெற இன்னும் என்ன செய்யலாம் என்று உரிமையோடு ஒருகணம் சிந்தியுங்கள். உள்ளே உங்களுக்குப் பல சுவையான விருந்துகள் காத்திருக்கின்றன. உங்களுக்குப் பிடித்தமானவற்றை நீங்கள் எடுத்துச் சுவைக்கலாம். ரசிக்கலாம். மகிழலாம். விருந்தை ருசிக்கமட்டும் மறந்து விடாதீர்கள். மறுத்தும் விடாதீர்கள்.

“பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தன” அன்றோ

ஆதலால் உங்கள் உறவுக்கும், உணர்விற்கும், உயிரிற்கும் முதற்காரணியான உங்கள் தாயகத்தின் பலப்பல தோற்றங்களை, வடிவங்களை, காண்பதற்கு மிகவும் ஆவலாய் உள்ளீர்கள் என்பதளை உங்கள் முக மலர்வே எடுத்துக்காட்டுகின்றது. இன்னும் தாமதம் ஏன்? இதோ! வாசல் வழியே உள்ளே போகலாம் வாருங்கள் முதலில் அருளாசியைக் கேளுங்கள்.

*திருமதி ப. திலகநாயகம்*
மலர் ஆசிரியர்



# மாவைக் கந்தனின்
# நல்லாசியால்

## வலிகாமம் வடக்கு
## பிரதேசமலர்
## மலர்ந்து

# திக்கெட்டும்
# மணம் பரப்பட்டும்!

# அருளாசிச் செய்தி

அன்புசால் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் வலி வடக்கு பிரதேசத்தின் பணிகளைச் சிறப்பிக்கும் முகமாக ''வலிவடக்கு பிரதேசமலர்'' எனும் நூலினை வெளிடுவதையிட்டு மனநிறைவடைகின்றோம். வரலாற்றுப் பெருமைமிக்க பிரதேசம் வலிவடக்கு. கற்றவர்களும் கற்றபடி ஒழுகுபவர்களும், சமய ஆசார நெறி நிற்பவர்களும் வாழ்கின்ற தேசம் வலி வடக்கு. இன்று மக்களுடைய தேவைகள் அதிகரிக்கின்ற நேரத்தில் பிரதேச செயலகப் பணிகள் மிகவும் வேண்டப்படுவது ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்பது முதுமொழி. மக்களுடைய துயரத்தை உணர்ந்துகொண்டு செய்வதே பிரதேச செயலகத்தின் முக்கிய பணி. இப்பணியிற் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றும் பிரதேச செயலர், ஏனைய பணியாளர்கள் பாராட்டுதற்கு உரியவர்கள்

''காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

இக்குறள் நெறிநின்று பிரதேச மக்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்கும், இம் மலரில் வரும் கட்டுரைகள் யாவும் சிந்தனையைத் தூண்டுவதாக அமையவும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
உவது குருமஹாசந்நிதானம்
***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்.***

# அருளாசி

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் வெளியிடவுள்ள பிரதேச மலருக்கு ஆசிவழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வடமாநிலத்தில் நிலவளம், நீர்வளம், கலைவளம், தெய்வீக வளம், மனிதவளம், தொழில் வளம் முதலான அனைத்து வளங்களையும் ஒருசேரத் தன்னகத்தே கொண்டுள்ள பெருமைக்குரிய பிரதேசம் வலி வடக்கு. ஆயினும் போர் அனர்த்தங்களால் இங்குள்ள வளங்கள் எல்லாம் பேரழிவுக்குள்ளாக எதிர்காலத்திலும் என்னாகுமோ என்ற அச்சத்திற்கு உரியதாயுள்ளது.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழம்பெருமைவாய்ந்த கீரிமலை நகுலேஸ்வரமும், மாவிட்டபுரம் முருகன் கோயிலும், வலிவடக்கிற்குத் தெய்வீகவளம் சேர்க்கும் ஆலயங்களாகும். இந்த இரு ஆலயச் சூழல்களிலுமே மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை தொடர்வதும் இவ்வாலயங்கள் பாரிய அழிவுகளுக்குள்ளாகி இருப்பதும் இன்னும் பல ஆலயங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருப்பதும் மறைக்க முடியாத உண்மைகளாகும்.

இப்பிரதேச வளங்களையும் இன்றைய நிலையையும் ஆவணப்படுத்தி வைக்க வேண்டிய வரலாற்றுக் கடமை இன்றுள்ளவர்களுக்குரியது. இந்த அரும்பெரும் பணியை இப்பிரதேச் செயலர் அவர்களே முன்னின்று செய்வது மிகப் பொருத்தமானதும் பாராட்டுக்குரியதுமாகும்.

சென்ற காலத்தின் பழுதிலாத்திறத்தை அறியவும், இனி எதிர்காலத்தின் சிறப்பை நிலை நாட்டவும் வல்லதாகிய இப்பிரதேசமலர் மிகச்சிறப்பாக மலர்ந்து மணம்பரப்பிப் பயன்தர வேண்டுமென எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
நகுலேஸ்வர ஆதீனம்
நகுலேஸ்வரம்

# பயன் பெருக்கி வாழிவாழி !

திருவளரும் இலங்கை யாழ்ப் பாணத்தோர்பால்
திகழும்வலி வடக்குப்பிர தேசம்; செல்வம்
தருவளங்கள் சோலைவளம், நிலவளங்கள்
தகவுடைய நீர்வளங்கள் தெய்வம் மேவும்
உருவளரும் ஆலயங்கள் உயர்ந்த கல்வி
உதவுகலா சாலைகள்நூல் நிலையம், சேமம்
தருவைத்ய சாலைஇவை சிறப்புச் செய்யும்
சகல நலம் நிறைந்த பெரும் பகுதியாகும்

பேரான இந்தப்பிர தேசம் மேன்மேற்
பிரகாசம் பெறமிகுந்த சேவை தாங்கும்
சீரான பிரதேசச் செயலர், தேடித்
திரட்டியநற் சரித்திரநூல் போல் விளங்கும்
தாராரும் பிரதேச மலர் மலர்ந்து
சமூகத்தின் பழமைபுது மைகள், சொல்லும்
பாராரும் ஊருணியாய் அறிவுநல்கிப்
பல்லாண்டு பயன்பெருக்கி வாழிவாழி.

**நாகேஸ்வரம்**
**அளவெட்டி**
**7.8.2000**

**அருட்கவி சீ. விநாசித்தம்பி**

# ஆசியுரை

## வலிகாமம் வடக்கு பிரதேச மலர்

யாழ் குடாநாட்டில் வலிகாமம் வடக்குப் பிரதேசம் மண்வளமும், மனவளமும் நிறைந்த ஒரு இடமாக விளங்குகிறது. இப்பகுதி திருக்கோயில்களினாலும், கல்விக் கூடங்களினாலும், பண்பாட்டு நலன்மிக்க மக்களின் வாழ்விடங்களினாலும் சிறப்புப்பெற்று விளங்குகிறது. இலட்சுமி கடாட்சத்தை எடுத்துக்காட்டுகின்ற வெற்றிலைச்செடி நிறைந்த பயனைத் தருகின்ற பிரதேசம் வலிகாமம் வடக்குப் பிரதேசமாகும். அத்துடன் சிறந்த கமக்காரர்களினாலும், உயர்ந்த மங்கலவாத்தியக் கலைஞர்களினாலும், சிறப்புப் பெற்ற இடமும் இதுவே. நவநீத கிருஷ்ணபாரதியார், புலவர் மகாலிங்கசிவம், எழுத்தாளர் சண்முகசுந்தரம், பல்துறைப்புலவர் மாவை சச்சிதானந்தன், கவிஞர் கதிரேசபிள்ளை, மகாகவி உருத்திரமூர்த்தி, தவில் வித்துவான் தட்சணாமூர்த்தி ஆகியோரைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய பெருமைக்குரியது இவ்விடமாகும்.

அந்தன சிரேஷ்டர்களினாலும் அருள்வளம் பெற்ற இடம் வலிகாமம் வடக்குப் பகுதி என்பதை இந்நாடும் ஏடும் நன்கறியும். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் மாவை ஆதீனகர்த்தர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள், சிவஸ்ரீ இரத்தினக் குருக்கள், சிவஸ்ரீ. துரைச்சாமிக் குருக்கள், சிவஸ்ரீ. ஐயாச்சாமிக்குருக்கள், சிவஸ்ரீ. பாலசுந்தரக் குருக்கள், ஸ்ரீ சிவானந்த ஐயர் ஆகியோரை இந்த இடத்தில் நாம் நினைவு கூரவேண்டும். மேலும் இப்பகுதி வாழ் மக்கள் ஆலய வழிபாட்டிலும், விரத அநுட்டானங்களிலும், அறப்பணிகளிலும் மிக்கவர்கள் என்று போற்றப்பட்டார்கள். அரசியற் துறையிலும் நேர்மையான வழியில்நின்று மக்களுக்கு நல்வழி காட்டிய அமரர். எஸ்ஜேவி. செல்வநாயகம் அவர்களை நாம் மறக்க முடியுமா? அவரும் வலிகாமம் வடக்குப் பகுதியில் அமைந்த தெல்லிப்பழையைச் சேர்ந்தவரே என்பது பெருமைப்படத்தக்கது.

கல்விப்பணியில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு நூற்றி என்பது ஆண்டுகளுக்கு முன்பாக தெல்லிப்பழையில் துவிபாஷா என்ற பாடசாலைப் பெயரில் இன்றைய யூனியன் கல்லூரியை ஆரம்பித்து வைத்தவர்கள் எமது பெருநன்றிக்குரிய தென்னிந்திய திருச்சபையினரேயாவர். யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிலையம் இதுவேயாகும். மேலும் சிலகாலத்தின் பின் சைவப்பிள்ளைகள் கற்று முன்னேறுவதற்கு தனித்துவமான ஒரு கல்வி நிறுவனமாக பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் மகாஜனாக் கல்லூரியை ஆரம்பித்து வைத்தார்கள். இந்த இரண்டு கல்லூரிகள் இன்றைக்கும் அனைத்துத்துறையிலும் உயர்ந்து நிற்பதை நாம் காணுகிறோம், மேலும் கடல் ஓசை மிகுந்த காங்கேசன்துறை மயிலிட்டி ஆதியாம் இடங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது வலிகாமம் வடக்குப் பிரதேசமாகும்.

எனவே இவற்றையெல்லாம் நல்லபடி வெளிக்கொணரும் முயற்சியாக அமைந்த வலிகாமம் வடக்கு பிரதேச மலர் வெளியீட்டை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதற்கான பணிகளில் முன்னின்று ஈடுபடும் வலிவடக்கு அரச அதிபர் அவர்களையும் மற்றும் பிரதேச அலுவலர்,, கிராமசேவர்கள் மற்றும் அன்பர்கள் அனைவரும் எமது பாராட்டுக்குரியவர்களே என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

**கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா

# வலிகாமம் வடக்கு வழிகாட்டட்டும்

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் வெளியிடவுள்ள மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் எனக்குள் ஒருவகைத் திருப்தி உணர்வு மேலோங்குகின்றது. ஏனெனில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மண்ணின் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் எனது பங்களிப்பையும் வழங்கியிருக்கின்றேன் என்பதனாலாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபகுதியிலிருந்தும் வலிகாமம் வடக்கப் பிரதேசம் பலவகையில் முக்கியம் பெற்றதாகும். மாவிட்டபுரம், நகுலேஸ்வரம் போன்ற புராதரான பெருமை கொண்ட இந்து சமய ஸ்தலங்கள, கீரிமலைக்கேணி, என்பவற்றுடன் தையிட்டி, மயிலிட்டி, போன்ற பாரம்பரிய மீனவர் குடியிருப்புக்கள், வெற்றிலை விளையும் செம்மண் பரப்பு, கட்டுவன், குரும்பசிட்டி காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை என்றவாறான முக்கியத்துவங்கள் ஒரு புறம், தந்தை செல்வாவின் தொகுதி எனப் பெருமை கொண்ட தொகுதி என வரலாற்றுச் சிறப்புக்குரிய காங்கேசன்துறை தேர்தல் தொகுதியை அது உள்ளடக்கியதாகும்.

பலாலி விமானத்தளம், காங்கேசன்துறைத் துறைமுகம், என இரு முக்கிய பாதுகாப்பு மையங்களையும் கொண்டுள்ளது. இங்கு முகாமிட்டிருக்கும் படையினரது செயற்பாடுகளினாலே இம் மண் தற்போது வெளியுலகத்துடன் போக்குவரத்து, தகவல்தொடர்பு எனப் பல்வேறு வகை உறவுகளையும் பேணமுடிகின்றது. இருந்தபோதும் இந்தப் பிரதேசத்தை "இன்னது எனக் குறித்து ஒதுக்கப்படாத ஒரு தேவைக்காக" சுவீகரிப்பு செய்யமுற்பட்ட போது அதனை எதிர்த்து குரல் கொடுத்ததுடன் அந்தத்திட்டத்தைத் தடுத்து நிறுத்தவும் செய்ற்பட்டுள்ளோம். எனது செயற்பாட்டின் பெறுபேறாக ஜனாதிபதி காணி சுவீகரிப்பு திட்டத்தை உடனடியாக இடைநிறுத்தியிருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

எனவேதான் அர்த்தமற்ற வீரவசனங்கள், விவேகத்தை வெளிப்படுத்தாத மோதல்கள், என்பவற்றைவிடவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பயன் பொருத்தமான பின் விளைவைப் பெற்றுத்தரும் என்பதற்கு வலிகாமம் வடக்கு பிரதேசம் ஓர் எடுத்துக்காட்டு. அதனாலேயே இம்மலருக்கான எனது செய்தியை வழங்குவதில் ஒரு உளத்திருப்தி ஊற்றெடுக்கின்றது.

நன்றி
மக்கள் சேவையிலுள்ள

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பா.உ,**
**வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு**
**மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகார அமைச்சர்,**
**செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.**

# ஆசியுரை

வலி வடக்கு பிரதேச செயலகம் அப்பிரதேசத்தின் மலரொன்றினை வெளியிட முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். வலி வடக்கு, மண்வளமும், நீர் வளமும் நிறைந்த அழகான பிரதேசம் இதன் கல்விமரபு பண்டைக்காலம்தொட்டு வளர்ந்து வருவது யாழ் பிரதேசத்தின் தலைசிறந்த மகான்கள் பலர் இங்கு தோன்றியிருக்கின்றனர். திரு. வி.கனகசபைப்பிள்ளை, தந்தை செல்வா திரு. கு. வன்னியசிங்கம் பாவலர் துரையப்பாப்பிள்ளை முதலிய பெரியார்கள் உலகுக்கு அளித்த பெருமையுடையது.

இப்பிரதேசத்தின் அமைதியையும் கல்வியார்வத்தையும் சனத்தொகையையும் கண்டே அமெரிக்க மிஷனரிமார் தமது முதலாவது பணிக்களத்தைத் தெல்லிப்பழையில் தொடங்கினார். யூனியன் கல்லூரி நீண்ட காலமாக கல்விச்செல்வத்தை வழங்கியது. அமெரிக்க மிஷனரிமாரின் முதலாவது தமிழ்பள்ளிகள் 1818ல் தெல்லிப்பழையிலும் மல்லாகத்திலும் ஆரம்பிக்கப்பட்டன. பாவலர் துரைய்ப்பாபிள்ளை, யூனியன் கல்லூரியில் கற்பித்த காலத்தில் மகஜனாக்கல்லூரியை ஆரம்பித்து பலரும் வியக்கும் வண்ணம் அதனை நடத்திக் காட்டினார்.

இன்று இப்பிரதேசத்தின் பலபகுதிகள் மக்களின் பாவனையில் இல்லை ஆனால் விரைவில் இப்பிரதேசங்களுக்கு மக்கள் சென்று வாழ அனுமதிக்கப்படுவார்கள் என்று திடமாக நம்பலாம். கீரிமலையையும் மாவிட்டபுரத்தையும், காங்கேசன்துறையையும் விட்டுவிட்டு நாம் வாழ முடியுமா?

வலிவடக்கு பிரதேசத்தின் செயலர் ஆற்றல் மிகு திருமதி பத்தினியம்மா திலநாயகம் போல் அரும்பெரும் காரியங்களைச் செய்கின்றார். என்று அறிந்து பெருமை அடைகின்றேன். செல்வி. சிதம்பரப்பிள்ளையாக பல்கழக்கழகத்தில் அவர்என்னிடம் ஆங்கிலம் கற்ற நாள்களை நினைத்துப் பார்க்கின்றேன். திருமதி பத்தினியம்மாவினதும் வலி வடக்கு உத்தியோகத்தரினதும் மக்களினதும் முயற்ச்சியைப் பாராட்டி மலர் சிறப்புற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராயர் அதிவண கலாநிதி
**எஸ் ஜெபநேசன்**

# என்றும் இனிது வாழ்க !

ஈழமணித்திருநாட்டின் சிரசெனப் போற்றப்படும் வலிகாமம் வடக்கு நிலவளம், கடல்வளம், தொழில்வளம், கொண்ட புகழ் பூத்த பிரதேசமாகப் பொங்கிப் பொலிந்த பொற்காலம் நினைவில் இனிமைதருகின்றது. முப்பத்தேழு கிராமங்களையும் 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் கொண்ட வலிகாமம் வடக்கு வானுயர் கோவில்களையும், வளமார் பாடசாலைகளையும், வான்பயிர், செய்பயிர்களையும், கடல்வளம் கொண்ட காங்கேசன்துறை, மயிலிட்டித்துறைகளையும், தொழில்வளம் மிக்க சீமெந்துத் தொழிற்சாலையையும், பலாலி விமானத்தளத்தையும் கொண்ட வளம்கொழிக்கும் பிரதேசமாக இருந்ததை யாரும் மறக்கமுடியாது. செம்மண்ணழகும் வெற்றிலைப் பயிரும் இப்பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்தன. ஆனால் இடைக்கால இடப்பெயர்வால் தெல்லிப்பளைக்கு அப்பால் பொதுமக்கள் நடமாடமுடியாத பிரதேசமாகவும் இருப்பதுடன் அழிவுகள், சிதைபாடுகளுடன் கூடிய தரிசு நிலமாகவும் ~ அதாவது பொன்விளையும் பூமிதரிசு நிலமாகவும் ~ மாறிவருவது வேதனைதருவது.

கீரிமலை, மாவிட்டபுரம் போன்ற புண்ணிய தலங்களும், கீரிமலைப் புண்ணிய தீர்த்தம் அவ்விடமக்களின் கனவுக்கோலங்களாக, நெருங்குதற்கு அரியனவாக ஆகிவிட்டன. இசையாளர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், அறிஞர்களும் வாழ்ந்த இப்புண்ணிய பூமி, ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து பல நாடுகளிலும், பல பிரதேசங்களிலும் வாழ்வதாலும் சொந்த இடத்திற்குத் திரும்பமுடியாமல் வருந்துவதாலும் வாடிவதங்கி நிலகுலைந்து வளங்குன்றிக் காணப்பட்டாலும் மிக விரைவில் மக்கள் மீளக்குடியேறி மீண்டும் வளங்கொழித்துப் பூத்துக் குலுங்கும் நன்னாள் அல்லது பொன்னாள் வெகுதூரத்தில் இல்லை. மீண்டும் வலிகாமம் வடக்கு, செழிக்க, வளம்கொழிக்க, தலைநிமிர்ந்து தன்னிகரற்று மண்ணாலும், மனிதராலும் பெருமையுற எழுச்சிபெற, அவ்வூர்மக்கள் என்றும். இனிது வாழ என் இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

க. சண்முகநாதன்
அரச அதிபர்
யாழ்ப்பாணம்

# வேண்டுதல்

நிறையுடை அறிவால் அன்பால்
நிகரிலாச் செயலால் என்றும்
கறைபடாத் தொழிலால் பண்பால்
திறந்த பல்கலைக்கழகம் போல
நறையுடைச் செழுந்தாதுள்ள
நறுமலர் போல் மலர்ந்து
பொறையுடன் ஆற்றும் சேவை
தொடர்ந்திட அருள் செய்தாயே

உறைந்திடும் பனிபோல் உள்ளம்
பளிங்கெனத் தூய்மை காட்டக்
குறைந்திடும் வசதி ஒன்றே
குறைவற்ற இன்பமாக்கி
அறந்தனில் நிலைத்து நின்று
அறிஞர்கள் துணையாய் என்றும்
சிறந்தநற் சேவை செய்ய
சிந்தையில் அருளும் தாயே

கறங்குபோற் சுழன்று நின்று
காதவழி போய் அலைந்து
திறந்த மனத் துணிவினோடு
திக்கெட்டும் குரல் கொடுத்துத்
திறம்படு சேவை செய்து
நிறைவுடன் நிமிர்ந்து நின்று
அறம்பல காத்து வாழ
அருளிட வேண்டும் தாயே.

ஆதர வற்றோர் வாழ
அரியதோர் நிதியம் பேணிப்
போரினும் கல்வி மேன்மை
துலங்கிடத் துணை இருந்து
சாய்ந்திடும் சமூகம் தன்னைச்
சரிநிகர் சமானம் ஆக்கும்
சீரிய பணியைச் செய்ய
செகத்தினில் அருளும் தாயே.

சீறுதல் ஒழிந்து கண்ணால்
சிரித்திடும் முகமும் கொள்கை
மாறுதல் கொள்வோர் தம்மை
மனமறிந்து இதமாய்ப் பேசி
நேரிய வழியிற் செல்ல
நெறிப்படும் இனிய பண்பும்
பாரினில் எனக்கு வேண்டும்
பரிவுடன் அருளும் தாயே.



வலிகாமம் வடக்குப் பிரதேச செயலரும் அரசாங்க அதிபருர் திருமதி ப. திலகநாயகம் போல்



மலர்க் குழுவினர்

# உள்ளடக்கம்

பக்கம்


1. ஆசியுரைகள் ....................................................

2. எங்கே போகிறோம் ........................................ 1

3. வளம் பல கொண்ட வலிகாமம் வடக்கு.... 4

4. வலிகாமம் வடக்கு ஒரு பார்வையில் ........... 6

5. வலிவடக்கு பிரதேச செயலகத்தில் மீளக்குடியமர்ந்த கிராம...... 10

6. ஒரு புனிதப் பிரதேசம்(வலி .வடக்கு) எங்கே போகிறது? ...... 14

7. ஒற்றுமை ........................................................ 16

8. வலி வடக்கின் பெருமையினை வியந்துபாடு ...... 17

9. வலிகாமம் வடக்கும் மூலவளங்களும்.......... 20

10. வலிகாமம் வடக்கும் விவசாயமும் ............. 22

11. வலி வடக்கும் கால்நடை வளர்ப்பும் ....... 26

12. வலிவடக்கின் அரசகாணிகளும் குடியேற்றங்களும் ...... 30

13. வலிகாமம் வடக்கு பிரதேச கடல்வலயம் ....... 32

14. தொழில் வளம் ........................................... 36

15. காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ....... 38

16. வலி வடக்கில் தும்புத்தொழிற் பயிற்சி...... 40

17. வலிகாமம் வடக்கின் வரலாற்றுச்சிறப்பு ... 41

18. வலிகாமம் வடக்கு பிரதேச செயலக நிர்வாக வரலாறு...... 46

19. வலி வடக்கும் உள்ளூராட்சி வரலாறும்......... 51

20. வலி வடக்கில் வீதிகளும் குளங்களும் ...... 57

21. வலி வடக்குப் பிரதேச மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு 63

22. வலிகாமம் வடக்கு கலைப்பூமி .................. 69

23. வலிவடக்குப் பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்கள்............ 78

24. வலிகாமம் வடக்கும் சைவத்திருக்கோயில்களும்.................. 83

25. நகுலேஸ்வரம் ............................................. 103

26. வலி வடக்கும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலும் .............. 105

27. வலி வடக்கில் கத்தோலிக்க தேவாலயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்.... 108

28. வலி வடக்கில் அமெரிக்க மிஷனரிமாரின் சமய ~ மருத்துவ ~கல்விப்பணி .... 113

29. கடந்த இரு தசாப்தங்களில் வலிகாமம் வடக்கு எதிர்நோக்கிய கல்விச் சவால்களும் ............ 115

30. கடந்த மூன்று ஆண்டுகளில் விளையாட்டுத்துறையில் மாகாண மட்டத்தில் பெறுப்பட்ட ........ 128

31. வலிகாமம் வடக்கு பிரிவின் நீதி பரிபாலனம்........... 130

32. அறிவியற் துறையில் வலிகாமம் வடக்கு ............... 132

33. அரசியலும் சட்டமும் ...................................... 134

34. வலி .வடக்கும் பத்திரிகைத்துறையும்.................... 136

35. வலிகாமம் வடக்கில் பெண்கள் ......................... 139

36. வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் 143

37. வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சனசமூக நிலையங்களின் ஆரம்பங்களும் ...... 148

38. வலிவடக்கில் கூட்டுறவு வாணிபமும் வங்கியும் 156

39. தேசிய இளைஞர் சேவைகளும் வலிகாமம் வடக்குப் பிரதேசமும் 160

40. வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சாரணியம் 164

41. சிறுவர் நலன் பேணல் அன்றும் இன்றும் .... 167

42. சமூக சேவை உதவிகளும் வலி வடக்கும். 171

43. வலி வடக்கில் சித்த மருத்துவமும் அதன் பாரம்பரியமும் 173

44. வலிவடக்குப் பிரதேசசபையும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையும் 175

45. வலி வடக்கு பிரதேச சித்த வைத்தியர்கள் 176

46. மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை 181

47. அளவெட்டி மத்திய மருந்தகமும் மகப்பேற்று இல்லமும் 182

48. வலிகாமம் வடக்கு தமிழியல் அறிஞர்கள் அறிமுகம் 183

49. வலிகாமம் வடக்கின் இசை வளர்ச்சி................ 208

50. விளையாட்டுத்துறையில் வலிவடக்குப் பிரதேசம் 210

51. வலிகாமம் வடக்கின் பத்திரிகைத்துறையும், பிரசுரத்துறையும் 215

52. ஊரும் பேரும் வலிகாமம் வடக்கில் ஓர் ஆய்வு . 220

53. வலிவடக்கும் இடப்பெயர்வும் ........................ 234

54. என்று தீருமோ எம்துயர் ................................. 236

55. வலி வடக்கில் நிர்வாகமும் மீள் குடியமர்வும்.. 237

56. பிறந்த மண். .................................................. 239

57. மௌனங்கள் ................................................ 240

58. வலி வடக்குப் பிரதேசமும் புனர்வாழ்வு, புனரமைப்பு 241

59. வலி வடக்கில் மீளக்குடியமர்வும் பெண்கள் தலைமைத்துவமும் 246

60. கடந்த காலங்களில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் 251

61. நிகழ்காலம் சேவைசெய்யும் உத்தியோகத்தர்கள் 253

62. நன்றிக்கு வித்தானோர் .................................. 256

# எங்கே போகிறோம் !

வலிகாமம் வடக்கின் நிலமாட்சியை, வளமாட்சியை, கலைமாட்சியை, எழில்மாட்சியை, இசைமாட்சியை, இயல்மாட்சியை உளம் கொள்வோம் வாருங்கள். வலிகாமம் வடக்கு வளங்கொழிக்கும், நிலம்செழிக்கும், தொழில் வளரும், பணம் மிளிரும், சொர்க்கபூமியாகப் பேரோடும், புகழோடும் புகழ்பூத்து அருள் சேர்த்து அமுதசுரபியாகப் பொங்கிப் பொழிந்த காலம் அது; அந்தப் பொற்காலத்துக்கே உங்களை அழைத்துச் செல்கின்றேன். அதனைத் தற்காலத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பீர் களாயின் கலங்காத உங்கள் மனமும் கலங்கும். கலங்காமல் என்னுடன் கூட வாருங்கள். இதோ! தன் அலைக்கரங்களால் ஓயாது இறைவன் புகழ்பாடிய வங்கக்கடல் இன்று இந்நாட்டிற்கு ஏற்பட்ட அவலங்களை "யாரிடம் சொல்வேன்" என்று அலமந்து தன்னிச்சையின்றி இசைவாக்கம் கொண்டதுபோல் மெதுவாக அலைக்கரங்களை வீசி இரைந்து மோதுவதைப் பாருங்கள். வானுயர்ந்த கோபுரங் களில் மணியோசை தெய்வீகநாதத்தை மீட்டாததுதான் இதற்குக் காரணமோ!

"சிவபூமி" என்றழைக்கப்பட்ட இலங்கையின் வடபாலமைந்துள்ள வலிகாமம் வடக்கை குன்றுகளினால் உயர்ந்து "கீரிமலை" என்றும், "நகுலகிரி" என்றும், புகழ்பெற்றுக் குறிஞ்சி நிலமாக்கிய பெருமையைக்கேளுங்கள். நகுலமுனிவர் பலகாலம் வழிபட்டதால், தன் கீரிமுகம் மாறப்பெற்ற புண்ணியதலத்தை – கீரிமலையை – அவ்விடம் திருக்கோயில் கொண்ட நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரரைப் பாருங்கள். அவ்ஈஸ்வரனின் அருள்வெள்ளம் போல கடலருகே முத்துப் போன்ற நன்னீர் கொண்ட அழகுமிகு கேணியை, ஜபம், தபம் செய்வோர் நீராடிய புண்ணிய தீர்த்தத்தைப் பாருங்கள். அதன் இன்றைய கோலத்தையும் பாருங்கள்.

சித்தர் பலர் வாழ்ந்து அற்புதம் செய்த புண்ணிய பூமியைப் பாருங்கள். இதோ குழந்தைவேற்சாமி, சடையம்மா ஆகியோரின் புனித சமாதிகளையும் பாருங்கள். அவர்களின் சமாதிகளில் இருந்து எழும்மந்திர ஓசை களைச் சற்றுக் காது கொடுத்துக் கேளுங்கள். புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று கனவு கண்ட கீரிமலைப் பிரதேசம் இன்று … சிதைவுகளையும், அழிவுகளையும் கொண்ட அவல நிலையை, அநாதரவு நிலையை எண்ணும்பொழுது நெஞ்சே வெடித்துவிடும் போலுள்ளதே. இதோ இதற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள மாவையம்பதிக்கு வாருங்கள். இந்திய இளவரசி மாருதப்புரவீகவல்லி இந்தியாவிலிருந்து கொண்டுவந்த காங்கேயனை, முருகனை நீண்டநாள் வழிபட்டுக் குதிரை முகம் நீங்கப்பெற்ற கதை உங்களுக்கு நன்கு தெரியும் தானே. குதிரை முகம் நீங்கப் பெற்றதால், மா – குதிரைமுகம், விட்ட – விடுபட்ட, புரம் - கோயில், என்ற பொருள்பட மாவிட்டபுரம் முருகன் கோவில் திருவருளும் பொருளும் பூத்துக்குலுங்கும் தெய்வீகத் திருத்தலமாக விளங்கியதைப் பாருங்கள். இந்தப் புண்ணிய பூமியிலேதான் சித்தத்தை சிவன்பாலே வைத்த "யோகர்சுவாமி" என அழைக்கப்பட்ட சிவயோக சுவாமிகள் அவதரித்தார். அவர் ஒரு பெரும் ஞானியாக - சித்தனாக – பலரின் குருவாக வழிகாட்டியாக வழிபடுவோனாக இருந்தது நீங்கள் ஒருவேளை அறியாதிருக்கலாம். அந்தப் புண்ணிய புருஷர் பிறந்த பூமி, திருத்தலம் ….. இன்று ஏன் இப்படி இடிபாடுகளுடன் …..! இடர்களைய வந்தவர்களின் இதயத்தில் வேல்பாச்சியது போல் மூளியாகக் காட்சி அளிக்கிறது? இது யாரிட்ட சாபமோ – "எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்" என்று யோகர் சுவாமிகள் தான் சொல்லிப் போய்விட்டாரே. விதியை வெல்ல யாரால் முடியும்?. எனினும், இன்று கீரிமலை எனப்படும் நகுலேஸ்வரமும் மாவிட்டபுரமும் வடமாகாண புனர்வாழ்வு புனரமைச்சின் துணையுடன் புனருத்தாரணம் செய்யப்படுவது இதயத்திற்குச் சற்று சாந்தியளிக்கின்றது.

இவற்றோடிணைந்த ஏழு பிள்ளையார் கோயில்களையும் பாருங்கள். மாருதப்புரவீக வல்லி குதிரைமுகம் நீங்கியபின் தன்நேர்த்திக் கடனை நிறைவேற்ற ஏழு பிள்ளையார் கோவில்களை நேரில் கட்டச் சொன்னதாக ஒரு ஐதீகம் உண்டு. அந்த ஏழு பிள்ளையார்

கோவில்களும் ஒரே நேரில் வரிசையாக அமைந்துள்ளதைப் பாருங்கள் அவைதான்

1. கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார் கோவில்
2. பன்னாலை வறுத்தலைப் பிள்ளையார் கோவில்
3. அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோவில்
4. அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில்
5. அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவில்
6. சண்டிலிப்பாய் கல்வயல் பிள்ளையார் கோவில்
7. மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவில்

மாவிட்டபுரத்தின் வாயிலில் இருந்து சற்று நிமிர்ந்து பாருங்கள் அங்கே மாவிட்டபுரம் கோபுரத்துக்கு அடுத்ததாகத் தலைநிமிர்ந்து நிற்கும்சீமேந்துத்தொழிற்சாலையைப்பாருங்கள். ஒரு காலத்தில் ஆயிரம் பேருக்கு மேல் தொழில் புரிந்த பெரிய தொழிற்சாலை! இலங்கையிலேயே மிகப்பெரியதும், சிறந்த சீமெந்தை உற்பத்தி செய்ததுமான காங்கேச சீமெந்துத் தொழிற்சாலை! ஆயிரக்கணக்கான சீமெந்துப்பைகளை உற்பத்திசெய்வதுடன் ஆயிரக்கணக்கான குடும்பங்களை வாழவைத்த அரிய பெரிய தொழிற்சாலை இன்று முடங்கிக் கிடக்கிறது. கோயிலின் வாசலில் எதிரே பாருங்கள். தன்னை இனங்காட்டும் அலுமினியத் தொழிற்சாலையைப் பாருங்கள். இலங்கையிலேயே தரமிக்க அனுமினிய பாத்திரங்களை உற்பத்தி செய்த டொலர் அலுமினித் தொழிற்சாலை இன்று தான் இருந்த அடையாளம் மட்டும் காட்டிச் சோகத்துடன் காட்சியளிப்பது வருத்தம்தருவது. இதன் தொழிலதிபர் – தொழிலாளிகள் நூற்றுக்கணக் கானோர் தொழிலின்றி வளமின்றி வாடி வருந்துவதை என்னென்று சொல்வது. நிலவளம், நீர்வளத்துடன் தொழில்வளம் கொண்டிருந்த வலிகாமம் வடக்கின் இன்றைய நிலையைப் பாருங்கள். மீண்டும் தொழில்வளம் ஓங்காதா, பொருள்வளம் பெருகாதா என நீங்கள் பெருமூச்சு விடுவது எனக்கும் கேட்கிறது. என்னசெய்வோம். இதெல்லாம காலத்தின் கோலம். நாம் அழிவுகளையும், இடிபாடுகளையும் காண்பதற்குக் கடல்கோள் கொண்ட ஹரப்பா, மொகஞ்சதாரா என்ற நகரங்களை ஆராய வேண்டியதில்லை, எம்காலத்தில், எம்கண்முன்னே நிகழ்ந்த அழிவுகளையும், இடிபாடுகளையும் ஒரு முறை பார்த்து – எமது எதிர்காலத்தை வளம்படுத்தும் வழிகளை வகுத்துக் கொண்டாற்போதும்.

மாவிட்டபுரத்திலிருந்து வடக்கே இரண்டரை மைல் செல்வோம் வாருங்கள். அதே வங்கக் கடல் தெரிகிறது – காங்கேசன் துறைமுகம் தெரிகிறது. காங்கேயன் சிலை இந்தியாவிலிருந்து வந்திறங்கிய துறைமட்டு மன்றி, அன்றிலிருந்து இன்றுவரை பெரிய கப்பல்களில் மனிதர்களும், உணவுப் பண்டங்களும் வந்திறங்கும் துறையாக – துறைமுகமாக – காங்கேசன்துறை விளங்குவது மகிழ்ச்சி தரத்தக்க ஒரு நிகழ்வாகும். இன்று கூட நம்மவர்கள் காங்கேசன்துறைக்கு எப்போ உணவுக்கப்பல்வரும், எண்ணெய்க் கப்பல் வரும், பயணிகள் கப்பல் வரும் என்று எதிர்பார்த்திருப்பது ஒன்றும் புதுமையல்ல.

அப்படியே காங்கேசன்துறைக் கடற் கரையோரமாக ஓரிரு மைல் தூரம் கிழக்கே சென்றால் அங்கே நம்மை வரவேற்பது மயிலிட்டித் துறை – காங்கேசன்துறையில் மனிதர்கள் இறங்கினார்கள் என்றால் மயிலிட்டித் துறையில் மீன்கள் இறங்கின. ஆம்! பல இடங்களிலிருந்து வரும் மீன்களைப் பிடித்து ஏற்றுமதி வியாபாரம் செய்யும் இறங்குதுறையாக மீன்பிடித்துறையாக மயிலிட்டித்துறை – துறை முகம் விளங்கியது. இன்று கூட நெருக்கடி நிலையில் மயிலிட்டித்துறையூடாக உணவுப் பொருட்களைக் கப்பலிலிருந்து இறக்கியதை நாம் மறந்துவிடமுடியாது. அதுமட்டுமல்ல துள்ளிவந்து வலையிற் சிக்கும் பெரு மீன்களை பழுதடையாது பாதுகாத்து ஏற்றுமதிசெய்ய பனிக்கட்டித்தொழிற்சாலையும் அமைக்கப்பட்டமை பொருளாதார வளத்தையும் எடுத்துகாட்டா நிற்குமன்றோ! இவ்வாறு நீண்ட கடற்கரையின் அரவணைப்பிலே மணலாற் சூழப்பட்டு இரண்டு துறைமுங்களுடன் கூடிய நெய்தல் நிலமாக வலிகாமம் வடக்கு மிளிர்ந்த வனப்பை – எழிலை – அழகை நாம் மீண்டும் காண்போமா?

சற்று உள்ளே சென்றால் முக்கனிச் சோலைகள் - மாவும், பலாவும், வாழையும் நிறைந்து, குவிந்து கமுகஞ்சோலையும், வேப்பஞ்சோலையும் இணைந்து காட்சியளிப்பது கண்கொள்ளாக்காட்சி. கீழே குனிந்து பார்த்தால் செம்பவள மண்ணினிலே நஞ்சையும், புஞ்சையும்

காலத்திற்கேற்ப மாறிமாறிக் காட்சியளிப்பது இன்னும் என்ன குறையென்று கேட்பதுபோல் இருக்கும். அவற்றிடையே வாய்க்கால்களில் நீர் செல்லும் அழகு, துல்லியமான நீர் ஓடைகளுடன் கூடிய மருத நிலமாகக் கண்ணைப்பறிக்கும் அழகு: அது சொல்லில் அடங்காது. மாவிட்டபுரத்திலும், இளவாலையிலும் கணவனைப்பற்றிப்படர்ந் திருக்கும் பூங்கொடிபோல நேராக ஒரு சீராக நடப்பட்ட முள்முருக்கம் மரங்களைச் சுற்றிபடர்ந்திருக்கும் பூங்கொடியராக ...... வெற்றித் திருமகளான வெற்றிலைக்கொழுந் துகள்.... அவற்றைக்காணக்கண் ஆயிரம் வேண்டும்...! திருமகள் வலிகாமம் வடக்கிலேயே உறைந்து விட்டாளா என எண்ணத்தோன்றும். வாழ்வைத்தொடங்கும் திருமணத்தின் ஆரம்பத் திற்கூடக் கன்னிக்கால் நாட்டப் பயன்படும் முட்களையுடைய முருக்கந் தடிகளும் - எந்த மங்கள காரியத்திலும் லக்ஷ்மி கரமாக முதன்மைவகிக்கும் வெற்றிலைகளும் ஒன்றாக இணைந்திருப்பது வாழ்வின் அர்த்தங்களை உணர்த்தத்தானோ?

இவைகள் தவிர கோயில்களுக் கருகே முக்கியமாக அம்மன்கோயில்களருகே வளர்ந்து ஓங்கி நெருங்கிப்பற்றையாகக் காட்சியளிக்கும் காடுகள் முல்லை நிலத்தை நம்கண்முன்னே நிறுத்தும். இவற்றிற்கும் மேலாக உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கும் பனை மரங்களும், அவற்றின் இடையே வளர்ந்திருக்கும் தென்னை மரங்களும் நாட்டின் மழைவளத்தைப் பெருக்கத் துணை புரிவதுடன், புயலில் இருந்தும் பாதுகாக்கவும் உதவும். பனம் நுங்கும், தென்னை இளநீரும் இயற்கைப் பானங்களாக மட்டுமன்றி நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படும். அது மட்டுமா? யாழ் மக்களுக்கு மட்டுமன்றிப் பிற இடங்களில் இருந்துவரும் உல்லாசப்பிரயாணி களையும் காலம்தோறும் மகிழ்விக்கும் கூவிற்கள்ளை மறந்துவிட முடியுமா? ஆண், பெண், பாலகர்கள் அனைவரையும் மகிழவைக்கும் தோலகட்டி நெல்லிரசத்தையும், திராட்சை ரசத்தையும் மறக்கமுடியுமா? மௌனித்தே கிறிஸ்தவத்தை வளர்த்த தோலகட்டி ஆச்சிரமத்தை மறக்கமுடியுமா? இன்னும் வாருங்கள்

காசநோயைத் தீர்க்கவந்த மயிலிட்டி வைத்தியசாலையும், புற்றுநோய் தீர்க்கவந்த தெல்லிப்பளைப் புற்றுநோய் வைத்தியசாலையும், பாழடைய – எம்மக்கள்நோய்தீர்க்க கொழும்பு செல்லும் அவல நிலை பரிதாபத்திற் குரியது. பழகாத இடத்தில், புரியாத மொழியில் பொருளின்றி, துணையின்றி நோயாளிகள் படும்பாடு சொல்லும் தரமன்று. இந்நிலை என்று நீங்குமோ?

அதோ! வடமாகாணத்தின் ஒரேயொரு விமானத்தளமான பலாலி விமான நிலையத்தைப் பாருங்கள். ஒரு காலத்தில் பறந்துவரும் விமானங்களைக்கண்டு பெருமகிழ்ச்சியடைந் தோம். ஆனால் இன்று வலிகாமம் வடக்கின் கரையோரங்களான பலாலி மயிலிட்டிப் பகுதிகளைத் தன்னகத்தே விழுங்கிக் கொண்ட தனால், அவ்விட மக்களை இன்றுவரை ஏதிலிகளாக்கிய கதையை மறப்போமோ?

வடக்கின் புகையிரதப்பாதையின் ஆரம்ப நிலையமாக விளங்கிய காங்கேசன் புகையிரத நிலையத்தையும் அதன் சீரழிவையும் திரும்பிப் பாருங்கள். இவ்வாறு கோவில்களும், குளங்களும், கலைஞர்களும், கவிஞர்களும் நிறைந்து, இசைஞர்களும், நாதஸ்வர வித்து வான்களும் கானமழைபொழிந்த புண்ணிய பூமி இன்று புதர் மண்டியும், பற்றை வளர்ந்தும் தரிசாயும் அழிவுகளும், சிதைவுகளும் இடிபாடு களும் நிறைந்து வெறுமையாக – வெற்று நிலமாக - பாலைநிலமாகக் காட்சியளிக்கும் அவல நிலையைப் பாருங்கள்.

அருளும், பொருளும், வளமும் நிறைந்த அற்புத பூமியான வலிகாமம் வடக்கு எங்கே! வளங்குன்றி, நிலம் கன்றிப்பொருளின்றிக் காட்சியளிக்கும் இன்றைய நிலை எங்கே? இன்னும் சிறிதுகாலம் இப்படியே விட்டால், வலிகாமம் வடக்கே பாலைவனம் ஆகிவிடாதா..!? இதனைத் தடுப்பார் யாருமே இல்லையா? நீங்களும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இன்னும் அறிய வேண்டிய விடயங்கள் பலவுண்டு. தயவு செய்து உள்ளே சென்று பாருங்கள். நான் இங்கேயே நின்று மற்றவர்களையும் வரவேற்க வேண்டும். எனவே உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

வணக்கம் !!!

நன்றி

தங்கள்

அன்பையும் ஆதரவையும் நாடும்

***பத்தினியம்மா திலகநாயகம்***

# வளம் பல கொண்ட வலிகாமம் வடக்கு

**மு. திருநாவுக்கரசு** JP U. M
(முன்னைநாள் மாவட்ட நீதிபதியும் தற்காலிக
பதில் நீதிபதியும்)

ஈழத் திருநாட்டினை ஒன்பது மாகாணங்களாக வகுத்தனர் அன்றைய ஆட்சியாளர்கள். இதில் வடக்கே வவுனியாவை எல்லையாகக் கொண்டு யாழ் தீவகங்களை உள்ளடக்கிய வட மானிலம் முழுமையும் யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்ட இலங்கையின் வட மாகாணம் என வகுக்கப்பட்டது.

இந்த வடமாகாணம் தமிழர் தம் தாயகத்தில் புதிதாக உருவான பளைப் பிரிவையும் சேர்த்து (15) பதினைந்து உதவி அரசாங்க அதிபர் அல்லது பிரதேச செயலர்பிரிவுகளைக் கொண்டதாக இவ் வடமானிலம் அமைந்துள்ளது. இதில் வலி வடக்கு எனும் பிரிவு முப்பத்தேழு கிராமங் களையும் (45) நாற்பத்தைந்து கிராமசேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

இனி வலி வடக்கென்னும் இப்பிரதேசம் வளம் பல கொழித்து, வளமார் கல்விக் கூடங்களையும், வான்புகழ்சேர் ஆலயங் களையும், சீரான செய்பயிர், வான் பயிர்களை யும் கொண்ட, சிறப்புறு சுந்தரபூமியாகத் திகழ்ந்து வந்தது.

மாவைக்கந்தன் ஆலயமும்,துர்க்கையின் புகழ் பரப்பும் துர்க்காதேவி திருத்தலமும், நகுலேஸ்வரமும் இன்னும் பற்பல வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலங்களையும் கொண்டு மிளிர்ந்ததோடு கீரிமலை என்னும் புனித நீரூற்றையும் கொண்டிருக்கிறது.

அளவெட்டி கும்பிளாவளை விநாயகர் ஆலயம் முதலாக நூற்றுக்கும் அதிகமான புராதன திருத்தலங்கள் இம் மண்ணின் தெய்வீகத்தை மெருகூட்டி நிற்க, காங்கேசன் சீமெந்து ஆலையும், கடல் கொஞ்சும் கரை ஓரமும், மீன் பிடித்துறைமுகமும், கடல் வளத்தின் பெருமையைப் பறைசாற்ற, வலிவடக்கு தெல்லிப்பளை, மயிலிட்டி, காங்கேசன்துறை, மல்லாகம் என நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட பிரதேசசபையாகத் திகழ்கின்றது.

ஐம்பத்தெட்டு தசம் ஐந்து (58.5) சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை கொண்ட இப்பிரதேசத் தின் அன்றைய நிலையையும் இன்றைய நிலை யையும் ஒரே கண்ணோட்டத்தில் நோக்குவது நம்மினமும் நாமும் கண்டுவரும் சோக வரலாற்றைச் சொல்லி நிற்கும் என எண்ணுகிறேன்.

காங்கேசன் நெடுங்சாலையில் தெல்லிப்பளைச் சந்திக்கும் அப்பால் நீண்ட காலமாக மானிட வாழ்வு பெருமளவில் இல்லை யெனலாம். காங்கேசன்துறைப் பட்டினமும் அதனை அடுத்துள்ள மயிலிட்டி, கீரிமலை, பளை, வீமன்காமம், கொல்லன்கலட்டி, வயாவிளான் முதலான பல்வேறு கிராமங்களை விட்டு மக்கள் குடிபெயர்ந்துள்ளமையால், வலி வடக்கின் வளமிக்க கடற் பரப்பும், திருத்தலங்களும், குடிமனைகளும், பாடசாலை களும், வாசிகசாலைகளும், புகையிலை, வெற்றிலை, வெங்காயம், போன்ற உப உணவுப் பொருட்களும் விளையாது பெருமளவு நிலம் தரிசு நிலமாக மாறிவருவதும் வேதனையைத் தந்து நிற்கின்றது.

இதனைப் போக்க அண்மைக்காலத்தில் ஆர்வலர்கள் அயராது முயன்றதால் மகாஜனாக் கல்லூரியும், மாவைக்கந்தனும், சிவராத்திரியிற் கீரிமலையும் புத்துயிர் பெறமுடிந்ததை உணர முடிகின்றது.

வலிவடக்கைக் குறிப்பாகவும் வடபுலத்தைப் பொதுவாகவும் நோக்கினால், நம் நாட்டிற் பிறந்து, இம் மண்ணிற் தவழ்ந்து.

வளர்ந்து, தள்ளாடி நடந்து, பின் ஓடிவிளையாடி, ஒய்யாரமாகக் கூடி மகிழ்ந்து, குலாவியிருந்த பல்லாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து இலட்சக்கணக்கில் மேலைநாடுகளில் வாழ இடம்பிடித்துவிட்டதோடு இன்னமும் நாளாந்தம் பயணம் கட்டல் பல்வேறு மேலை நாடுகளில் தம் உற்றார் உறவினரை வாருங்கள் வாருங்கள் என வலுக்கட்டாயமாக வரவேற்கும் பண்பினையும் காண்கின்றோம்.இப்படியாக தமிழர்தம் தனிப்பெரும் பண்பாட்டின் பெட்டகமாக தமிழர் தம் கலை கலாச்சா, பண்பாட்டினை இதுகாலவரை பேணிக் காத்த பெருமக்கள் இம் மண்ணை இனியும் மிதியோம், நாம்மட்டும் வாழ்ந்தால் போதுமெனப் பிரியாவிடை பகன்று சென்று விட்டால், இவர்கள் இம்மண் விடிவு பெற்று, விமோசனம் பெற்று, சுதந்திரமும் சுபீட்சமும் பெற்று மிளிரும் நாளிலும் இங்கு வருவார்களா? எனில் அம்மக்கள் மேலை நாட்டு நாகரிகத்தில் பின்னிப்பிணைந்து விடின், இங்கு மீண்டும் வருவர் என எதிர்பார்ப்பது வீணாகும். அவர்கள் இங்கு வரமனம் கொள்ளார்.அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்டி வலிவடக்கில் 5,695 குடும்பங்களைக் கொண்ட 19,686 மக்களே வாழ்கின்றனர். இன்னும் ஒரு பகுதியினர் வன்னியில் வாழ்கின்றனர். இவர்களையும் கணக்கில் சேர்த்தாலும் கூட இம்மண்ணை விட்டுபோய்விட்டவர்கள் தொகையின் விகிதாசாரத்தை நீங்களே கணக்கிட்டுக்கொள்ளலாம்.

இனி வலிகாமம் வடக்கில் 17 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட விதவைகள் 30 பேர் என்றும், முப்பதிற்கும் ஐம்பதிற்கும் இடைப்பட்ட விதவைகள் 143 பேர் என்றும் ஐம்பதிற்கு மேற்பட்ட விதவைகள் 332 பேர் என்றும் வலிவடக்கில் விதவைகள் தொகை 505 எனவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இப்படியாக யாழ்ப்பாணத்தில் 19076 விதவைகள் உளர் என 97ம் ஆண்டின் புள்ளிவிரம் காட்டுகின்றது. இத் தொகை இன்று பன் மடங்காகி இருக்கும்.

இவற்றையெல்லாம் ஈடு செய்து பெற்றோரை இழந்த குழந்தைகட்கும் கணவனை இழந்த கைம்பெண்மாருக்கும், மனைவியரை வன்செயலில் இழந்து வருந்தும் கணவன் மாருக்கும், நாடும், நாமும் வெளிநாடுகளில் தங்கி அங்கே நிரந்தர வாழ்வை மேற்கொள்ளும் நல்ல உள்ளங்களும் ஆக்கபூர்வமாக பல நல்ல உதவிகளைச் செய்ய கடப்பாடுடையோம்.

இவற்றை விட வலிவடக்கில் நாம் கண்ட வியத்தகு விழாக்களை, கரகங்களை, காவடிகளை, இசையரங்குகளை, தெய்வீக மணம் பரப்பும் திருவிழாக்களை, அங்கு கூடியிருந்து விடிய விடிய நாம் பார்த்து ரசித்த பல கூட்டம் தவில் சமாக்களை, சின்னமேளத்தை

ஒன்று இரண்டு என்று நூறுவரை எண்ணிப்பெருமை கொண்ட வாழைக்குலைப் பந்தல்களை, மணிப பந்தல்களை, முத்துச் சப்பறங்களை, வாணவேடிக்கைகளை, கற்பனையில் மீண்டும் ஒருமுறை கண்டு அகமகிழும் பெருமக்கள் தான் வலிவடக்கில் இன்றும் வாழ்கின்றனர். வலிவடக்கில் உலகப்புகழ் பூத்த தவில், நாதஸ்வர இசை மேதைகளும் நடிக வேளென மயானகாண்டத்தில் மணிமகுடம் தரித்த மேதைகளும் வாழ்ந்தகதை பொய்யாய், பழங்கதையாய் இனிப்போய்விடும்.

அதே நம்பிக்கையில் எமது கலையும் கலாச்சாரமும், பண்பும் பண்பாடும், இசையும் நாடக நாட்டியமும், மீண்டும் அங்கு ஓடிய தாய் வேரிற் தளிர்விட்டு மீண்டும் தழைக்கத்தான் போகின்றது. என்ற மனநிறைவடன் ஆக்கமான பணிகள் பலவற்றை, ஊக்கமுடன் செய்யவாரீர் எனக்கேட்டு இம்மலரில் வலிவடக்கின் மைந்தனான எனக்கும் இடம்தந்த மலர் வெளியீட்டுக் குழுவை வாழ்த்தி விடை பெறுகின்றேன.

நன்றி

புகழோ, அன்றி இகழோ எதைப்பற்றியும் கவனத்தில் கொள்ளாதீர்கள். ஏனெனில் மனசாட்சி என்பது உங்களுடையதுதான்.

# வலிகாமம் வடக்கு ஒரு பார்வையில்

**திருமதி . யாழினி நந்தகுமார்**
திட்டமிடல் இணைப்பாளர்

யாழ் குடாநாட்டின் வடபால் அமைந் துள்ள வலிவடக்குப் பிரதேச செயலாளர் பிரிவு சிறப்பான நீர்வளம், நிலவளம், மனிதவளம் பொருந்திய ஒரு பிரதேசமாகக் காணப்படு கின்றது. இது 55.8 சதுர கிலோமீற்றர் நிலப்பரப் பினைக் கொண்டுள்ளது. இங்கு காணப்படும் சகல வளங்களும் இப்பிரதேசத்தின் தனித்துவத் திற்கு காரணமாக அமைகின்றதென்றால் அது மிகையாகாது. இருந்தும் தனித்துவமான வலிவடக்குப் பிரதேசம் இன்று போர்ச் சூழ்நிலை களின் காரணமான மக்கள் இடம்பெயர்வு, மீள்குடியேற்றமின்மை, உயர் பாதுகாப்பு வலயத்தின் அமைவு ஆகியவற்றினால் மிகவும் நலிவுற்றதாகி, பிரதேசங்களின் விடுவிப்பையும், புனர்வாழ்வையும் வேண்டி நிற்கின்றது.

வலி வடக்குப் பகுதியில் கடலும், சுண்ணக்கற்பாறைகளும், செம்மண்ணும் முக்கிய வளங்களாகக் காணப்படுகின்றன. இவ் வளங்களை மையமாகக் கொண்டு மயிலிட்டி மீன்பிடித் துறையும், மார்பு நோய் சிகிச்சை நிலையமும், காங்கேசன் துறை துறைமுகமும் அதை அண்மித்த ஹாபர் வியு ஹொட்டலும், சீமெந்து தொழிற்சாலையும், இவற்றை விட பலாலி, விமான நிலையமும், ஆசிரியர் பயிற்சி கல்லூரியும், நடேஸ்வராக் கல்லூரி, யூனியன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி போன்ற சிறந்த கல்விக் கூடங்களும், தெல்லிப்பளையில் வைத்தியசாலையும், புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமும், சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கீரிமலை போன்ற புனித ஸ்தலங் களும், புகையிரதப் பாதைகளும், பெரிய சிறிய வீதிகளும் இப்பகுதியில் அமைந்து பிரதேசத்திற்குச் சிறப்பினைக் கொடுத்து வந்தது.

1990க்கு முன் இப் பிரதேசம் நிர்வாக நோக்கில் 45 கிராம அலுவலர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. இதில் 15 பிரிவுகள் மட்டும் (மல்லாகம் தெற்கு (J/212),மல்லாகம் மத்தி(J/213),மல்லாகம் வடக்கு(J/214), அளவெட்டி வடக்கு (J/215),அளவெட்டி மத்தி (J/216), அளவெட்டிகிழக்கு(J/217), கணேஸ்வரம்(J/218), அளவெட்டி தெற்கு(J/219), அளவெட்டி மேற்கு(J/220), இளவாலை வடக்கு(J/221), இளவாலை வடமேற்கு(J/223),பன்னாலை(J/224),தெல்லிப்பைள கிழக்கு(J/227), துர்க்காபுரம் (J/229), வயாவிளான் கிழக்கு(J244),ஆகியன விடுவிக்கப்பட்ட மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு, மீள வாழ்க்கை நிலைமைக்கு மக்களைக் கொண்டு வருவதற்கான உதவியுடன் ஈடுபட்டுவருகின்றது. அண்மையில் 1999ல் கட்டுவன் மேற்கு(J/239), வித்தகபுரம்(J/223), தந்தை செல்வாபுரம்(J/230), கட்டுவன்(J/28), ஆகிய நான்கும் பகுதியளவில் விடுவிக்கப்பட் பிரதேசங்களாக மிகக் குறைந்தளவில் மக்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் இயங்கி வருகின்றன. இப்பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

வலி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் ஏனைய 26 கிராம அலுவலர் பிரிவுகளும் உயர்பாதுகாப்பு வலயம் எனக் குறிப்பிடப்பட்டு இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதுடன், மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாததாகவும் காணப்படுகின்றன. இப் பாதுகாப்பு வலயத்திலுள்ள சில பிரதேசங்கள் அடர்ந்த பற்றைக்காடுகளாகவும், மிதிவெடிகள் போன்ற அபாயங்கள் சூழ்ந்த பிரதேசங்களாகவும் உள்ளன.

## நிலவளம் :-

வலி வடக்கின் வடபகுதி முழுமையாகக் கடல்சார்ந்த பகுதியாகவும் ஏனைய பிரதேசங் கள் வளமான மண்கொண்ட பரந்த நிலப்பரப் பினைக் கொண்ட பிரதேசமாகவும் காணப்படுகிறது. மொத்த நிலப் பரப்பு 6110 ஹெக்டர்களாகும். இந்நிலப்பரப்பானது இடப் பெயர்வுக்கு முன் பின்வருமாறு பயன்பாட்டிற் குட்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

| | | |
|---|---|---|
| நெல் | 328 | ஹெக்டர் |
| உபஉணவு | 1007 | ஹெக்டர் |
| பனை | 1696 | ஹெக்டர் |
| தென்னை | 20 | ஹெக்டர் |
| குடியிருப்பு | 2316 | ஹெக்டர் |
| கல், மணல், பற்றை | 483 | ஹெக்டர் |
| | 6110 | ஹெக்டர் |

இப்பிரதேசத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளக் கூடிய வகையில் கல்சியம் கலந்த சிவப்பு செம்மண் பிரதேச மானது மல்லாகம் வடக்கு, தெற்கு, மத்திய பகுதிகளிலும் கட்டுவன், கட்டுவன் மேற்கு, வயாவிளான், துர்க்காபுரம், தெல்லிப்பளை கிழக்கு, ஆகிய இடங்களிலும் நெற்பயிர்ச் செய்கைக்குகந்த இருவாட்டி மண் கொண்ட பிரதேசமாக அளவெட்டிப் பகுதியும் காணப்படு கிறது. இடப்பெயர்விற்கு முன்னர் 361.5 ஹெக்டர் நிலப்பரப்பில் செய்கைபண்ணப்பட்டு வந்த நெற்பயிர்ச் செய்கை இன்று 225 ஹெக்டர் நிலப்பரப்பிலேயே மேற்கொள்ளப்படுகிறது. மிகுதி 12.5 ஹெக்டர் நிலப்பரப்பும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் பாதுகாப்பு அரண்களும்வரு வதனால் அங்கு நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளப்பட முடியாத நிலை காணப்படு கிறது.

இன்னும் வெற்றிலைச் செய்கையில் அதி உச்சப்பயனைத் தந்த மாவிட்டபுரம், கொல்லங் கலட்டி பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளதனால், இப் பயிர்ச்செய்கை மூலம் விவசாயிகள் பெற்று வந்த பெருமளவு வருமானத்தை இன்று பெற முடியாத நிலையிலுள்ளனர். விவசாயப் பெருநிலப்பரப்பினை உள்ளடக்கிய பலாலி வயாவிளான், தெல்லிப்பளைப் பகுதிகளும் முற்றாக விடுவிக்கப்படாத நிலையில், விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தோடு சேர்ந்த கால்நடை வளர்ப்பிலும் எமது பிரதேசம் கணிசமான பங்கினை வகித்தது எனலாம். இதன் மூலம் மக்கள் பால், முட்டை., இறைச்சி போன்ற போஷாக்கு நிறைந்த உணவு வகைகளையும் மற்றும் பயிர்ச்செய்கைக்கு தேவையான பசளைகயும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அத்துடன் மக்களின் வருமானத் தேவையின் ஒரு பகுதியையும் இக் கால்நடை வளர்ப்பின்மூலம் பூர்த்திசெய்யமுடிந்தது தற்போது விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இது மிகக் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விடுவிக்கப்படாத பல பிரதேசங் களைக் கொண்ட வலிவடக்குப் பிரதேசத்தில் கற்பகதருவான பனை வளத்திலிருந்து இன்று பூரண பயனைப்பெற முடியாதநிலை காணப்படுகிறது. பொதுவாகப் பனைவளம் அருகிவரும் நிலை காணப்படுவதனால், இவ் வளத்தினைப் பேணிப் பாதுகாக்கவென பனம் விதை நடல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## நீர்வளம் :

வலிவடக்குப் பிரதேசம் முழுமையாகவும் தரைக்கீழ் நீர் கொண்டதாக இருந்தாலும் 260 ஹெக்டர் பிரதேசம் சிறந்த நீர்வளம் கொண்ட தாகக் கொள்ளப்படுகிறது மேலும் இப்பிரதேசம் பனாக்கைக் குளம் உட்பட 34 குளங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இப் பிரதேசம் முழுமையாக சுண்ணக்கற் பாறைகளினால் ஆனதால், பலவற்றாத கிணறுகள், நல்ல நீர் ஊற்றுக்கள் கொண்ட கிணறுகள் அமையப் பெற்றுக் காணப்படுகிறது.

வலி வடக்கின் பெருமளவு பகுதி நன்னீர்வளப் பிரதேசமாகக் காணப்படுவதனால் பெரும்பகுதி விவசாயச் செய்கைக்கு உட்படுத்தக் கூடியதாக உள்ளது. சுண்ணக்கற் பிரதேசமாதலால் நிலத்தடி நீரோட்டம் நன்னீர் நீரை கடலில் கொண்டு சேர்ப்பதனால் நன்னீரும் கடல்நீரும் கலக்கப்பட்டு நீர்வளம் குன்றத் கூடிய ஒரு சாத்தியக் கூறும் காணப்படுகின்றது. விவசாயச் செய்கையின் பொருட்டு நீரைத் தொடர்ச்சியாக இறைப்பதன் மூலம் நன்னீர்ப்படுக்கை, நன்னீர் வற்றி உவர் நீராக மாறக் கூடிய நிலமையைக் காண முடிகிறது.

வலி வடக்கின் 15 கி.மீற்றர் நீளமானது கடற்கரைப் பிரதேசம். வலிவடக்குப் பகுதியின் வடக்குக் கரையோரமாக பருத்தித்துறை, பொன்னாலை வீதியில் இளவாலையை மேற்கு எல்லையாகவும், பலாலியை கிழக்கு எல்லையா கவும் கொண்டமைந்துள்ளது. இப்பிரதேசமானது இளவாலை, வலித்தூண்டல், காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, பலாலி, சேந்தான்குளம், ஆகிய கடற்கரையோரக் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது.

பலாலியிலிருந்து சேந்தான்குளம் வரையிலான இந்து சமுத்திரப் பகுதியைக் கொண்டதால் மீன்வளம்மிக்கதாக எமது பகுதி விளங்கியது. போதியளவு மீன்கள் பெறக்கூடியதாக இருந்ததால், அது உள்ளூர்

### காலநிலை

இப்பகுதியானது வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் கிடைக்கும் மழையை மட்டும் பெறும்பிரதேசமாகவும், தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் குறிப்பிட்டளவு மழை கிடைக்காத பிரதேசமா கவும் அமைந்துள்ளது.

பெற்றுக்கொள்ளும் சராசரி மழைவீழ்ச்சி வருடாந்தம் 1250 மில்லி மீற்றராகும். இது குறிப்பாகள் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மாதங்களிற் கிடைக்கிறது.

உஷ்ணத்தைப் பொறுத்தவரையில் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்கள் கூடிய வெப்பநிலையைக் கொண்ட மாதங்களாக உள்ளன வெப்பநிலையானது சராசரியாக 26°C - 30°C இடைப்பட்டதாக காணப்படுகிறது.

### மனிதவளம்

நிலவளம், நீர்வளமும் பொருந்திய வலி வடக்குப் பிரதேசம் திறன்மிக்க மனிதவளத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தமை இப் பிரதேசத்தின் தனித்துவத்திற்குக் காரணமாயிற்று. இத்தகைய சிறப்பம்சம் கொண்ட மனித வளம் நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வினால் சீரகுலைவிற்குள்ளாகியது. இப் பிரதேச மனிதவளத்திற்கு ஏற்பட்ட சீர்குலைவுகள் யாராலும் ஈடுசெய்ய முடியாத தொன்றாகிவிட்டது.

1981ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி குடிசன மதிப்பீடு பின்வருமாறு அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

| ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|
| 36228 | 36220 | 72448 |

1981ம் ஆண்டின் பின்னர் புள்ளிவிபரத் திணைக்கம் எவ்வித குடிசன மதிப்பீட்டையும் மேற்கொள்ளவில்லை எனினும் 1990ம் ஆண்டு வலி வடக்கின் இடப்பெயர்விற்கு முன் 45 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 23351 குடும்பங்களில் 83618 அங்கத்தவர்கள் இருந்தனர்.

| ஆண்டு | கி.அ.பிரி. எண் | குடும்பஎண் | மொ.அங். எண் |
|---|---|---|---|
| 1990 | 45 | 23351 | 83618 |
| 1990 யூன் | 30 | 15920 | 60320 |
| 1992 | 12 | 2991 | 9272 |
| 1995 ஒக்டோபர் | 03 | 4432 | 14026 |
| 1996 டிசம்பர் | 07 | 1,018 | 3563 |
| 1997 டிசம்பர் | 15 | 3058 | 10703 |
| 1998 டிசம்பர் | 15 | 4339 | 14965 |
| 1999 டிசம்பர் | 17 | | |

**வயது ரீதியான பகுப்பாய்வு - 1999 டிசம்பரில் உள்ளவாறு (அட்டவணை போடப்படல் வேண்டும்)**

எமது பிரதேசத்தில் விவசாயமும், மீன்பிடியுமே பிரதான தொழில்களாகும். இதைவிட அரசதுறை, தனியார்துறைகளிலும் கணிசமான தொகையினர் ஈடுபட்டனர். மேலும் இப்பிரதேசத்தில் கட்டடத்தொழில், சீவல் தொழில், சலவைத்தொழில், முடிவெட்டும் தொழில், வர்ணம் பூசும் தொழில், நகைசெய்யும் தொழில் போன்றவற்றுடன் மின்சாரம், சிவில் போன்ற தொழில் நுட்பவியல் வாயந்த தொழில்களும் காணப்படுகின்றன. இப் பிரதேசத்தில் உள்ளவர்களில் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்தவர்களும், வாகனம் ஓட்டத் தெரிந்தவர்களும் கூடுதலாக மத்திய கிழக்கு நாடுகளை நாடிச் சென்றுள்ளனர். பெண்களிலும் ஒரு சிலர் வீட்டுப் பணியாட்களாகச் சென்று இருக்கிறார்கள்.

எமது பிரதேச கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின்படி தற்போதுள்ள மொத்தச் சனத்தொகை 16,369இல் விதவைகளின் எண்ணிக்கை 902. விவசாயத் தொழில் ஈடுபட்டுள்ளோர் தொகை 1293,அரசதுறையில் ஈடுபட்டுள்ளோர் தொகை வங்கிவர்த்தகத் துறையில் கூட்டுறவுத்துறையில்

| | |
|---|---|
| ஈடுப்டடுள்ளோர் தொகை | 404 |
| தபால், போக்குவரத்துறையில்ஈ.ப | 180 |
| கைத்தொழில்துறையில் ஈ.ப. | 50 |
| கட்டத்துறை,கலைத்துறையில் ஈ.ப | 41 |
| வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுளோர் தொகை | 369 |

இன்று இலங்கையில் சனத்தொகை அதிகரிப்பும் கல்வி கற்றவர்கள் தொகை அதிகரித்துச் செல்வதும் வேலைவாய்ப் பின்மையை தோற்றுவித்துள்ளது. இந்நிமைக்கு எமது பிரதேசம் விதிவிலக்கல்ல. அத்துடன் வளமுள்ள எமது நிலங்கள் விடுவிகப்படாமை யும் பிரதேச வேலைவாய்ப் பின்மைக்கு முக்கிய காரணமாகும். விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் கிராம அலுவலகளின் தகவல்களின் படி வேலைவாய்ப்பற்றோர் எண்ணிக்கை 3023 வன்செயலால் ஊனமடைந்தவர்களும், குடும்பத்தலைவரை இழந்து விதவைகளானோர், பெற்றோரை இழந்து அனாத்தைகளானோர் எனப் பலதரப்பட்டவர்கள் காணப்படுகின்றனர்.

1990 - 1999 இடைப்பட்ட காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக் குடியமரவிடப்பட்ட பகுதிகளிலுள்ள கிராம அலுவலகளின் தகவல்களின் படி அப்பகுதிகளில்

| | |
|---|---|
| வன்செயலால் விதவையானோர் | 54 |
| வன்செயலால் அனாதைகளானோர் | 14 |
| ஊனமடைந்தோர் | 53 |
| மரணமடைந்தவர்கள் | 97 |

ஆவர். மேலும் கல்வி அடிப்படையிலான சனத்தொகைப் பரம்பலை பிரதேச ரீதியாக நோக்குகையில் கிராம அலுவலர்களின் தகவல்களின்படி விடுவிக்கப்பட்ட பிரதேச மக்களின் க.பொ.த சாதாரணதரம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1684, க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 635 பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 203 தொழிநுட்பக் கல்லூரிகளில் கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை 89, க.பொ.த. சாதராண தகமையற்றோர் எண்ணிக்கை 2740 ஆகும்.

மேலும் இங்கு காணப்படும் முக்கிய இயற்கை வளமான சுண்ணக்கற் பாறைகளை மூலப்பொருளாகக் கொண்டமைந்த காங்கேசன் துறை சீமெந்த உற்பத்தி தொழிற்சாலை எமது பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியதில் பெரும் பங்கு ஆற்றியது. இன்றும் காங்கேசன் துறையிலமைந்த துறைமுகமும், பலாலியில மைந்துள்ள விமான நிலையமும், மயிலிட்டி மீனவர்துறைமுகமும், இயற்கை இப்பிரதேசத் திற்கு அளித்த வரப்பிரசாதம் எனலாம். மேலுமமார்பு நோய்ச் சிகிச்சை நிலையம், காங்கேசன்துறை ஹாபா வியு ஹேறாட்டல் என்பன முறையே நோயாளர் உல்லாசப் பயணிகள் போன்றோருக்கு தமது சேவைகளை தடையின்றி வழங்குவதில் முன்நின்றன.

மேற்குறிப்பிட்ட வளங்களைக் கொண்டமைந்த எமது வலிவடக்குப் பிரதேசம், இன்று வளங்கள் என அடையாளம் காணப் பட்டவை எல்லாம் உயர்பாதுகாப்பு வலயத்துக் குள் அமைந்திருக்க, அவ்வளங்களைப் பயன் படுத்திய மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து, தொழில் முயற்சிகளில் ஈடுபடமுடியாத வகையில் முக்கியமாக மீன் பிடித்தலை தொழிலாகக் கொண்ட குடும்பங்கள், இப் பிரதேச செயலர் பிரிவில் முகாம்களிலும் குடாநாட்டின் ஏனைய பிரதேச செயலாக பிரிவுகளிலும், கஷ்டமான நிலையில் அடிப்படை வசதிகளின்றி, மனம் நொந்தநிலையில் வாழ்க்கையினை நடாத்திக் கொண்டிருக் கின்றனர். விவசாய பெருநிலப் பரப்புக்கள் பல உயர் பாதுகாப்பு அரண்களுக்குள் அமைந்துள்ள தன்மையும் விவசாய உற்பத்தியில் கணிசமான இழப்பினை ஏற்படுத்தியுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகமும், பலாலி விமான நிலையமும் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள போதும் அன்றும் இன்றும் தமது சேவையை மக்களுக்கு அளிப்பதில் முன்நிற்கின்றன. இன்று யாழ் குடா நாட்டிலிருந்து ஏனய பிரதேசங்களுக்கான போக்குவரத்து போர்ச்சூழ்நிலைகளின் மததியில் கடல் வழியாகவும், ஆகாய வழியாகவும் மட்டுமே செய்யக் கூடியதாக இருப்பதாலும் உணவுப் பொருட்கள், உணவல்லாப் பொருட்கள் தென் பகுதியிலிருந்து யாழ் குடாநாட்டுக்கு கொண்டு வருவதற்கும் இத்துறைமுகமும், விமான நிலையமும் மிகவும் இன்றியமையா தவையாக இருப்பது எமது பிரதேசத்தின் பெருமைக்குரிய நிகழ்வாகும்.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து 1990க்கு முன் வளம் மிக்கதாக விளங்கிய வலி வடக்குப் பிரதேசம் இன்று, வளங்களை முற்றாகப பயன்படுத்த முடியாத நிலையில், உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் தனது மொத்த நிலப்பரப்பில் அரைப்பங்கிற்கு மேலாகப் பறிகொடுத்த நிலையில், பாதுகாப்பு வலயத்தைச் சொந்த வதிவிடமாகக் கொண்ட மக்கள் இன்னமும் சொந்த வீடுகளில் குடியமர முடியாத நிலையில் வாழந்து கொண்டிருக் கின்றமை ஒரு வேதனை மிக்க விடயமாகும். இப்பிரதேசம் முற்றாக விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்க்குடியமர்த்தப்பட்டு புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ் இரண்டு பணிகளும் மேற் கொள்ளப்பட்டபின்னரே இப்பிரதேசம் அபிவிருத்தி என்ற செயற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

# வலிவடக்கு பிரதேச செயலகத்தின் மீளக்குடியமர்ந்த கிராம அலுவலர் ரீதியான தகவற் திரட்டு 2000– 2001)

| கிராம அலுவலர் பிரிவு | J/212 மல் தெற்கு | J/213 நிர மல்.மத்தி. | J/213இ.பெ மல்.மத்தி. | J/214 மல்.வடக்கு | J/215 அள. வடக்கு | J/216 அள.மத்தி | J/217 அள. கிழக்கு | J/218 கணேஸ்வரம் | J/219 அள.தெற்கு | J/220 அள.மேற்கு | J/221 நிர. இள.வடக்கு. | J/221 இ.பெ. இள.வடக்கு. | J/222 இள. வட.மேற்கு | J/223 வித்தகபுரம் | J/224 பன்னாலை. | J/227 தெல். கிழக்கு. | J/229 நிர துர்க்காபுரம். | J/229 இ.பெ துர்க்காபுரம். | J/239 கட். மேற்கு. | J/244 வசாவிளான். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தச்சு | 12 | 29 | 04 | 09 | 07 | 05 | 38 | 04 | 16 | 10 | 01 | - | - | - | - | 03 | 03 | - | - | - |
| சீவல் | 15 | 12 | 07 | 10 | 15 | 07 | 20 | 02 | 31 | 06 | 02 | - | 04 | - | 02 | 27 | 05 | - | - | 05 |
| வியாபாரம் | 03 | 28 | 24 | 42 | 10 | 05 | 11 | 07 | 45 | 13 | - | - | 01 | - | 03 | 03 | 12 | 01 | 03 | 01 |
| மின் இணைப்பாளர் | 02 | 01 | 01 | 03 | 02 | 01 | 05 | 01 | 01 | 02 | - | - | - | - | - | 02 | 01 | - | - | - |
| திருத்துனர் | 04 | 13 | 03 | 03 | 02 | 01 | 02 | 02 | 10 | 03 | 01 | 01 | - | - | - | 02 | 01 | - | - | - |
| நெசவாளர் | - | - | - | - | 05 | 01 | - | - | - | 04 | - | - | - | - | - | - | - | - | - | - |
| கடைச்சல் | 05 | 05- | - | 01 | - | 02 | - | - | 03 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கொல்வேலை | 02 | 06 | - | - | - | - | 03 | - | 05 | 03 | - | - | - | - | - | - | - | - | - | - |
| முகாமையாளர் | 01 | 01 | 02 | 05 | 03 | 05 | 02 | 02 | 02 | 02 | 05 | - | - | - | - | - | 03 | - | - | - |
| தட்டெழுத்தாளர் | 02 | 01 | 01 | - | 02 | - | - | - | - | 07 | 01 | - | - | - | - | - | - | - | - | - |
| எழுதுநர் | 05 | 03 | 04 | 01 | 03 | 05 | 01 | - | 05 | 02 | 02 | - | - | - | 02 | 01 | 01 | - | - | - |
| மேசன் | 08 | 05 | 08 | 53 | 07 | 03 | 23 | 09 | 19 | 11 | 03 | - | - | - | 01 | 12 | 03 | - | - | 04 |
| பொருத்துனர் | - | 07 | - | - | - | - | 02 | - | - | 04 | 01 | - | - | - | - | - | - | - | - | - |
| சுருக்கெழுத்தாளர் | - | 01 | - | - | - | - | - | - | 01 | 02 | - | - | - | - | - | - | - | - | - | - |
| விவசாயம் | 125 | 58 | 20 | 27 | 125 | 63 | 32 | 59 | 75 | 126 | 93 | 13 | 24 | 03 | 72 | 155 | 85 | 14 | 19 | 53 |
| கூலி | 92 | 17 | 35 | 99 | 25 | 40 | 57 | 16 | 185 | 52 | 11 | 05 | 20 | 03 | 15 | 25 | 25 | 02 | 11 | 13 |
| சலவை | 08 | 11 | 01 | 01 | - | 08 | - | - | - | - | - | - | - | - | 06 | - | - | - | - | - |
| வர்ணம் தீட்டுபவர் | 02 | - | 19 | 03 | 02 | 01 | 05 | - | 03 | 05 | - | - | - | - | - | - | - | - | - | - |
| சிகை அலங்கரிப்பவர் | 04 | 06 | 01 | - | 05 | - | - | - | 04 | - | - | - | - | - | - | - | - | - | - | - |

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடற்றொழில் | - | - | 13 | 02 | - | - | - | - | 01 | - | 01 | 01 | 01 | - | - | - | - | - | - | - |
| படப்பிடிப்பாளர் | 03 | 02 | 02 | 01 | 01 | 03 | - | - | 01 | - | - | - | - | 01 | - | - | - | - | - | - |
| தையல் | 05 | 03 | 02 | - | 10 | 05 | 05 | 04 | 04 | 10 | 03 | 02 | 01 | - | - | 02 | 04 | - | - | - |
| சாரதி | 03 | 04 | 06 | 05 | 05 | 01 | 02 | - | 04 | 02 | 08 | 02 | 01 | - | 02 | 01 | 02 | - | - | 01 |
| ஆசிரியர் | 12 | 21 | - | 13 | 11 | 11 | 04 | 07 | 18 | 12 | 11 | 01 | 02 | 01 | 04 | 04 | 05 | 02 | - | 01 |
| சட்டத்தரணி | 01 | 01 | - | 01 | - | - | - | 01 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | |
| ஓய்வூதியர் | 25 | 31 | 14 | 23 | 13 | 11 | 12 | 20 | 22 | 13 | 27 | 20 | - | 02 | 04 | 11 | 28 | - | 03 | - |
| தும்புத்தொழில் | - | 01 | 02 | - | 03 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | |
| பொற்தொழிலாளர் | - | - | - | - | - | - | - | 02 | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | |
| பொறியிலாளயர் | - | 01 | - | - | - | - | - | - | - | - | 01 | | - | - | - | - | - | - | - | |
| மருத்துவர் | 01 | - | - | - | - | 01 | - | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டடவரைஞர் | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | |
| ஆயுள்வேத வைத்தியர் | 01 | 02 | - | - | - | 01 | 02 | - | 01 | 01 | 01 | - | - | - | - | - | - | - | - | - |
| வெதுப்பகர் | 01 | 01 | - | 02 | 01 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | |
| ஆடு/மாடு பண்ணையாளர் | - | - | - | 01 | 02 | - | - | - | 01 | 01 | - | - | - | - | 03 | - | - | - | - | - |
| தாதி | 02 | - | 03 | 02 | - | 02 | 01 | - | 03 | 02 | 01 | - | - | - | - | 01 | 01 | 01 | - | -- |
| ஐந்துவயதிற்குட்பட்டோர் | 132 | 83 | 78 | 161 | 64 | 12 | 120 | 60 | 205 | 176 | - | - | 30 | 04 | 15 | 75 | 08 | 06 | 26 | 20 |
| ஐந்தாம் வகுப்புவரை படித்தோர் | 65 | 148 | 116 | 132 | 32 | 27 | 350 | 70 | 300 | 154 | 55 | 10 | 23 | 03 | 45 | 40 | 142 | 25 | 46 | 100 |
| எட்டாம் வகுப்பவரை படித்தோர் | 40 | 108 | 65 | 218 | 25 | 35 | 200 | 97 | 200 | 236 | 60 | 07 | 82 | - | 180 | 60 | 40 | 15 | 41 | 40 |
| க.பொ.த.சாதாரண தரம் | 100 | 35 | 25 | 88 | 74 | 217 | 125 | 10<br>2 | 103 | 627 | 98 | 23 | 20 | - | 62 | 74 | 131 | 10 | 56 | 03 |
| க.பொ.உயர்தரம் | 125 | 229 | 75 | 22 | 56 | 14 | 75 | 36 | 77 | 284 | 60 | 05 | 18 | - | 15 | 30 | 60 | 08 | 04 | 07 |

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பட்டதாரி | 05 | 02 | - | 07 | 08 | 01 | 05 | 02 | 02 | - | 03 | - | 04 | - | - | 02 | 04 | - | - | 02 |
| முதுகலைமாணி | - | - | - | - | 02 | - | - | - | - | - | - | - | - | - | 02 | - | - | - | - | - |
| வேலையற்றோர் | 75 | 122 | 103 | 40 | 19 | 400 | 105 | 150 | - | 22 | - | 57 | - | - | 75 | 191 | 38 | - | 20 | |
| சனசமூகநிலையம் | 03 | 02 | - | 03 | 03 | 02 | 01 | 02 | 01 | 05 | 02 | - | - | - | 01 | 02 | 03 | - | 02 | 02 |
| வைத்தியசாலை | 01 | - | - | - | - | - | - | - | 01 | 01 | 01 | - | - | - | - | 01 | - | - | - | - |
| தபால்கந்தோர் | - | 01 | - | - | - | 01 | - | 01 | - | 01 | - | - | - | - | 01 | - | 01 | - | 01 | 01 |
| பாடசாலை | - | 02 | - | 02 | 01 | 01 | - | 01 | 02 | 02 | 01 | - | - | - | 01 | - | 01 | - | - | 01 |
| கி.அ.சங்கம் | 01 | 01 | - | - | 01 | 01 | 02 | 01 | 02 | 02 | 01 | - | - | - | 03 | - | 01 | - | - | 01 |
| நெசவுஆலை | - | - | - | - | - | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | - |
| தொழிச்சாலை | 01 | - | - | - | - | - | - | - | 01 | - | 01 | - | - | - | 01 | - | - | - | - | - |
| பாலர்பாடசாலை | 02 | 02 | 01 | 03 | 02 | 01 | 01 | 02 | 03 | 02 | 01 | - | 01 | - | 01 | 02 | 02 | - | - | 01 |
| ஆரம்பசுகதார நிலையம் | 01 | - | - | - | - | 01 | - | - | - | 01 | 01 | - | - | - | - | - | - | - | - | 01 |
| கோவில் | 08 | 07 | - | 08 | 0 6 | 06 | 05 | 06 | 04 | 15 | 08 | - | 08 | - | 11 | 10 | 08 | - | - | 04 |
| தேவாலயம் | - | 02 | - | 01 | - | - | - | - | 01 | 03 | 03 | - | 04 | - | - | - | - | - | 01 | - |
| வியாபார நிலையம் | 05 | 31 | - | 14 | 04 | - | 04 | 08 | 13 | 20 | 03 | - | 01 | - | 01 | 01 | 17 | - | - | 01 |
| தபாலகம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | - | - | - | - |
| தொலைத் தொடர்பு நிலையம் | - | 06 | - | 02 | - | - | - | 02 | 01 | 05 | - | - | - | - | 01 | - | 01 | - | - | - |
| பெற்றோர் அற்ற பிள்ளைகள் | 26 | 10 | 26 | 03 | 07 | 02 | 05 | - | 05 | 02 | - | - | 20 | - | - | - | 25 | - | - | - |
| விதவைகள் | 50 | 73 | 55 | 69 | 33 | 43 | 53 | 55 | 75 | 22 | 45 | 02 | 30 | 01 | 09 | 48 | 43 | 10 | 11 | 15 |
| கணவனால் கைவிடப்பட்டோர் | 05 | 03 | 04 | 12 | 06 | 02 | 07 | 02 | 08 | 25 | 04 | 01 | - | - | - | 06 | 05 | - | 01 | 01 |
| ஊனமுற்றோர் | 18 | 08 | 11 | 26 | 02 | 09 | 17 | 03 | 13 | 20 | 09 | - | 08 | - | 06 | 08 | 06 | - | - | 02 |
| அனர்த்தங்களால் பாதிப்புற்றோர். | 02 | - | - | 02 | 05 | 03 | 05 | - | 06 | 01 | 02 | - | - | - | - | 02 | - | - | - | 02 |

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காணாமற்போனோர் | 01 | 04 | 03 | 02 | 03 | - | 01 | - | 03 | 02 | 01 | - | - | - | - | 02 | 02 | - | - | - |
| வன்செயலால் இறந்தோர். | 01 | 01 | 04 | 06 | 04 | 06 | 01 | 10 | 09 | 16 | 08 | - | 12 | - | - | 01 | 06 | - | - | 02 |
| கார் | 05 | 06 | - | 03 | 01 | 03 | 01 | - | 07 | 04 | 04 | - | 02 | - | 01 | 01 | - | - | - | - |
| லொறி | 01 | 01 | - | 01 | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மினிபஸ் | - | 02 | - | - | - | - | 01 | - | 01 | - | - | 01 | - | - | - | - | 01 | - | - | - |
| சைக்கிள் | 145 | 300 | 200 | 213 | 525 | 400 | 150 | 210 | 700 | 462 | 150 | - | 85 | 05 | 92 | 240 | 400 | - | - | 40 |
| வானொலி | 80 | 150 | 50 | 95 | 85 | 200 | 75 | 105 | 400 | 215 | 55 | - | 45 | 02 | 47 | 75 | 160 | - | - | 05 |
| முச்சக்கர வண்டி | 03 | 01 | - | 01 | 01 | - | - | - | 01 | 03 | 02 | - | - | - | 01 | - | 01 | - | - | - |
| உழவு இயந்திரம் | 05 | - | - | - | - | 01 | - | - | 01 | 02 | - | - | - | - | 01 | - | 01 | - | - | - |
| மாஸ்டர் | 07 | 03 | 01 | 01 | - | 01 | 02 | 05 | 03 | 08 | 04 | - | - | - | - | 01 | 01 | - | - | 02 |
| மாட்டுவண்டி | 06 | 02 | - | 01 | 10 | - | 02 | 01 | 25 | 06 | 01 | - | 02 | - | 01 | 01 | 10 | - | - | - |
| மோட்டார் சைக்கிள் | 15 | 14 | 06 | 21 | 32 | 15 | 10 | 14 | 25 | 32 | 30 | - | 08 | - | 04 | 10 | 10 | - | - | 03 |
| ரிக்சாவண்டி | - | - | - | - | - | - | 01 | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தொலைக்காட்சி பெட்டி | 15 | 02 | 03 | 15 | 05 | 10 | 10 | - | 25 | 16 | 17 | - | 05 | - | 02 | 15 | 05 | - | - | 01 |
| ஏனையவை | 10 | - | - | 17 | 10 | - | 60 | 28 | 15 | 08 | 14 | - | 04 | - | - | - | - | - | - | 04 |
| குடும்பங்கள் மொத்தம் | 565 | 587 | 77 | 638 | 335 | 252 | 420 | 426 | 610 | 588 | 203 | 26 | 72 | 08 | 154 | 280 | 344 | 12 | 99 | 90 |
| அங்கத்தவரின் மொத்தம் | 1926 | 1881 | 300 | 2268 | 1200 | 808 | 1560 | 958 | 2332 | 2041 | 580 | 80 | 258 | 29 | 530 | 1003 | 1126 | 45 | 339 | 361 |

# ஒரு புனிதப் பிரதேசம் (வலி வடக்கு) எங்கே போகிறது...?

ஆக்கம்
**மாவிட்டபுரம் பகுதி**
**கிராமநிர்வாகம்**

"படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"
-(குறள் 38)

(நாட்டின் நலத்திற்கு போதிய படையும், ஆட்சியை ஆதரிக்கும் குடிமக்களும், உண்பதற்கு போதிய உணவும், அறிவாற்றல் உள்ள அமைச்சரும், அயல் நாட்டவர் நட்பும், இயற்கை அரண்களும் உடையவனே, அரசர்களுள் ஆண்சிங்கம்)

இடப்பெயர்வுகளின் கொடுமையால் பாதிக்கப்பட்டு விரக்தியும் வேதனையும் மக்களிடையே வளர்ந்து ஆற்றொணாத்துயருடன் அலமந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் மக்கள்சேவையே மகேசன் சேவையாக கருதி செயற்படப்போகும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டிடத்திறப்பு விழாவிற்கு சமர்ப்பணமாக இக்கட்டுரை வரையப்படுகிறது.

"யாதும் ஊரே
யாவரும் கேளிர்"
(Every conutry is my country
Every man is my kinsman)

ஆண்டாண்டு காலமாக எம்முன்னோர் வாழ்ந்தநிலம், பண்போடு கல்விச் செழிப்பும் பக்திநெறியும் கூடிய மக்கட்சமுதாயம். இயற்கைவளங்கள் கொண்ட புனிதபிரதேசம் இலங்கையின் வடபாகத்தில் வங்கக்கடலோரத்தில் தொண்டமானாற்றங் கரையை அண்மித்து கீரிமலைச் சாரலிற் பரந்துகிடக்கின்ற செம்மண் நிலப்பரப்பெனச் சொன்னால், அப்பெருமை பல்லாயிரக்கணக்கான இலங்கைத்தமிழ்மக்கள் வாழ்கின்ற வலிகாமம் வடக்கு பிரதேசத்தையே சாரும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட கொடிய யுத்தம் காரணமாக இன்று பொலிவிழந்து காணப்படுமிப்பிரதேசம் அகதிகளாகி இடம்பெயர்ந்து அலையும் அப்பாவிமக்களையும், காலம் கடந்தும் மணமாகாத மங்கையர்களையும் அகதிகளாக்கி வேலையின்றி தவிக்கும் இளைஞர் யுவதிகளையும், கவனிப்பாரற்றுக்கிடக்கும் மனிதவுயிாகளையும், கூரையில்லாது உடைக்கப் பட்ட வீடுகளையும், பூசையில்லாது கிடக்கும் சேதமுற்ற கோவில்களையும், செயலிழந்து போயுள்ள பாரிய தொழிற்சாலைகளையும், கல்விகற்க முடியாத கல்விக் கூடங்களையும் பற்றைகள், செடிகள், முட்கள் நிறைந்த பாதைகளையும், யுத்தத்தினால் சீரழிந்துபோன விளைநிலங்களையும், வாழ்க்கையோசலித்து மனம்நொந்து போயிருக்கின்ற மக்கட் சமுதாயத்தையும் சுமந்திருக்கின்ற நாற்பத்தைந்து கிராம அலுவலர் பிரிவுகளை யும் கொண்ட யுத்த சூனியப் பிரதேசமே இன்றைய வலிகாமம் வடக்குப்பட்டினம் இதன் அன்றைய நிலை கீழே தரப்படுகின்றது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"
(அருணகிரிசுவாமிகள்)

வங்கக்கடல் அலையோசையுடன் தாவிவரும் இளம் தென்றல், கள்ளூறுகின்ற பனைமரங்கள், ஏடுகள் தந்து எழுத்துக்களை வளர்த்த பெருமையோடு உயர்ந்து நிற்க வானுயர் தென்னைமரமும் அருகே வளர்ந்திருக்க, குயில்கள் தரும் சுதந்திர கீதம் பச்சைப்பசேலென்ற வெற்றிலைத் தோட்டங்கள் முக்கனியோடு அனைத்துக் கனிகள் தரும் மரங்கள் யாவும் வளரக்கூடிய வளமான பொன்விளையும் பூமி. இங்கு வாழ்பவனோ.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தாள் என்ற
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"
(குறள் - 012)

என்றதமிழ்மறை தந்த வள்ளுவர் பெருமான் மணிவாக்கின்படி வாழ்பவன் இங்கு வாழும் தமிழன் இதற்குப் பெருமை சேர்த்தாற்போல் கண்கண்ட கடவுளராகிய பகலவனும் சந்திரனும்

ஒரேசமயத்தில் கூடி மனிதகுலம் ஆண்டாண்டு தோறும் வாழ்ந்து மடியும் செய்தியை அகிலமெங்கும் பரப்பும் ஆடிஅமாவாசை தினத்திலே தென்புலத்தார் என அழைக்கப்படும் பிதுர்களின் கடமைகளை நிறைவேற்றும் புனித கீரிமலை, அதற்கு அப்பால் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், தெல்லியூர் துர்க்காதேவி, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் போன்ற நூற்றுக்குமேற்பட்ட புராதன ஆலயங்கள் சோழர்கால கலையம்சமும், சிற்பவேலைப் பாடுகளும் கொண்ட இராஜகோபுரங்களுடனும் மண்டபங்களுடனும் இங்கு அமைக்கப்பட்டு இருந்தன. சிறந்த கல்வி முறை, முப்பதிற்கும் மேற்பட்ட தெல்லிப்பளை மகாஜானாக்கல்லூரி, யூனியன்கல்லூரி, வயாவிளான் மத்தியகல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, அருணோதயாக்கல்லூரி போன்ற புகழ்பெற்ற பாடசாலைகள், காங்கேசன்துறை, மயிலிட்டிதுறை என இருபெரும் துறைமுகங்கள், வெளிச்சவீடு, விமானங்கள் வந்துபோகும் விமான தளம், சீமெந்துக் கூட்டுத்தாபனம், அலுமினியம், வாளி, தும்பு, குளிர்பானங்கள், மட்பாண்டங்கள், பனங்கட்டி, மதுபானம், மீன்பதனிடல் இன்னும் பல பொருட்களை உற்பத்திசெய்யும் பலநூறு பெரிதும் சிறிதுமான தொழிற்சாலைகள், தேவாலயங்கள், வேதபாடசாலைகள் என்பனவும் இங்கு காணப்பட்டன. இவை மட்டுமல்ல. சிறந்த போக்குவரத்து வசதிகள், புகையிரதம், பேருந்து, விமானம், கப்பல் என்பவற்றிக்கான பாதை வசதிகள் அவை தரிக்கக்கூடிய இடங்கள் என்பனவும் இங்கு காணப்பட்டன.

ஆழக்கிணறு வெட்டி அகலப்பாத்தி கட்டி கிணற்று நீர் மூலம் மரக்கறிப்பயிர்களையும், படிப்பயிர்களையும், குரக்கன், சாமை போன்ற சிறு தானியப்பயிர்களையும் இச்செம்மண் நிலப்பரப்பிற் பயிரிட்டு சிறப்பான விவசாயிகளாக இங்கு விவசாயிகள் வாழ்ந்து வந்தனர். அத்துடன் சிற்பம், ஓவியம், கட்டடக்கலை, மீனபிடி, வணிகம், கல்வி கற்பித்தல், தொழில் நுட்பம், போன்ற அனைத்துத் துறைகளிலும் இங்கு வாழ்ந்தவர்கள் கைதேர்ந்து காணப்பட்டனர்.

சிறந்த கல்வியமைப்பு, தொழில்நுட்பம், கடல், நிலவளங்கள் கூடிய இயற்கை வளங்கள் கொண்ட இப்புனித பிரதேசத்தின் பெரும் பகுதி இன்று முற்றாக அழிவுற்று மக்கள் எவரும் மீளக்குடியர்த்தப்படாத பிரதேசமாக இருப்பது மிகவும் வேதனை தருவதோடு, இங்கு வாழும் எந்தவித துன்பமும் செய்யாத அப்பாவிப் பொதுமக்கள் கடந்த பத்து வருடமாக தமது சொந்த இருப்பிடங்களை விட்டு அகதிகளாக பிறமாவட்டங்களிற்கும் வெளிநாடுகளுக்கும் சென்று சொல்லொணா துன்பங்களை அனுபவிப் பதோடு, கூலித்தொழில், விறகுவெட்டிவிற்றல், போன்ற கூலிவேலைகள் துன்பச் சூழலில் செய்து தமது வாழ்க்கையை நடாத்திவருகின்றனர். இன்றும்கூட காடுகளில் திரிந்து விறகுகள் சேகரித்து துவிச்சக்கர வண்டிகளில் சுமந்து சென்று தமது குடும்பத்தை காப்பாற்றுபவர்களும், வேலையற்றுக் கிடக்கின்ற இளைஞர்கள், ஊனமுற்றுள்ள பொதுமக்கள், இப்படியான மக்கள் முற்றாக அரசு கொடுக்கும் நிவராண உணவிலேயும், அனாதைச் சம்பளத்திலுமே தங்கி தமது சீவியத்தை நடாத்துகின்றனர். இதன் காரணமாக இங்கு கடமைபுரியும் கிராம உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலக அரச ஊழியர்கள், அதிகாரிகள் பிரதேச செயலர் மற்றும் அரச ஊழியர்கள் சொல்லொணா துன்பத்தின் மத்தியில் இயன்றளவு தமது வேலைகளை செய்து வருகின்றனர்.

எனவே இன்று நடைபெறுகின்ற இக்கொடிய யுத்தம் முடிவுற்று, இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரசையும் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தமது சொந்த இடங்களிற்குச் சென்று மீண்டும் குடியமர்ந்து எல்லா இனங்களும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வலிகாமம் வடக்கு வாழ் பல்லாயிரக்கணக்கான மக்களுடன் சேர்ந்து நாங்களும் வேண்டி பிரார்த்திப்போமாக.

**நற்சிந்தனை**

தோன்றாத் துணையை என்றும் துதிப்போம்
ஈன்றாளையும் அப்பனையும் மதிப்போம்
எல்லாம் சிவன் செயல் என்றிருப்போம்
ஆன்றோர் விதிப்படி நடப்போம்
அந்தி சந்தி மந்திரத்தை படிப்போம்
நான், தான் எனும் இரண்டும் தடுப்போம்
நாதன் அடியிணைக்கீழ் கிடப்போம்
வஞ்சம் பொறாமை நெஞ்சில் வையோம்
கொஞ்சம் கொஞ்சமாய் மனதை வெல்வோம்

## ஒற்றுமை

01. மொழி என்று இல்லாமல் உலகத்தை வலம்வரும்
தெளிவான ஒன்றுண்டு அதுவே சங்கீதம்
இனமென்று இல்லாமல் அகிலத்தில் நிலைக்கின்ற
உணர் வொன்று உண்டு அதுவே நல்பக்தி.

02. சிந்தித்துப் பார்த்ததால் வாழ்நாளோ கொஞ்சம்
மிஞ்சும் மனப்போக்கில் மாறாதோ நெஞ்சம்
வஞ்சம் நம்நெஞ்சத்தில் தஞ்சம் அடைந்தால்
மிஞ்சுவது துஞ்சுகின்ற வாழ்க்கை ஒன்று தான்

03. எல்லோரும் இந்நாட்டு மக்கள் எனக்கொண்டே
நல்லோர்கள் இந்நாட்டை பொன்னாடாய் கொள்வர்
கல்லாரும் கற்றோரும் இல்லாரும் உள்ளோரும்
பல்காலம் பகிர்ந்துண்டு வாழ்ந்திடிற் பேரின்பம்

04. இறைவன் சந்நிதானமதில் மக்கள் எல்லாம் ஓர்குலம்
இறைவன் நீதிக் கரங்களின் முன் எல்லோருமே சமம்
முறையோடு நிறைவாக மக்கள் வாழ்வதே நலம்
கரைகாணா இறையன்பு நிலைத்து விட்டாலே பலம்

**எல். திலகநாயகம் போல்**

ஆசைதான் துன்பத்தின் காரணம்
என்று சொன்னார் புத்தர்
உன்னைப்போல் பிறரையும் நேசி
அன்று மொழிந்தார் இயேசு


மயக்கமேன் மனிதா உனக்கு
மறந்ததேன் இனிதாம் நினைப்பு

அறிவைப் படைத்தான் இறைவன் நீ
அழிவைப் பெருக்க முனைந்தாய்
உறவைப் படைத்தான் இறைவன் - நீ
உயிரைப் பறிக்க நினைந்தாய்
உதட்டில் உள்ளதோ சிரிப்பு - உன்
உள்ளத்தில் உள்ளதோ கசப்பு


விலங்குகள் பறவைகள் கூட
விரும்பியே அன்பு பேணிடுதே
ஒன்று பட்டால் உண்டுவாழ்வு
கற்றுமேன் இதையுணராய் நீ
காலங் கடந்து மிக் கருத்து
கனிவொடு காப்பது சிறப்பு

**~ பத்தினியம்மா திலகநாயகம்**

# யாழ்ப்பாண மாவட்டம்
# JAFFNA DISTRICT




# வலிகாமம் வடக்கு பிரதேசச் செயலர் பிரிவு.




Source - Toposheets

# வலிவடக்கில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள். 2000


Skotoh of A.G.A's Division, - Vali North, (New Division) After - 1990





No. & G.S.O. Division

01. J/212 Mallakam South
02. J/213 Mallakam Centre
03. J/214 Mallakam North
04. J/215 Alaveddy North
05. J/216 Alaveddy North
06. J/217 Alaveddy East
07. J/218 Kaneswaram
08. J/219 Alaveddy South
09. J/220 Alaveddy West
10. J/221 Elavalai North
11. J/222 Elavalai North-West
12. J/223 Vithakapuram
13. J/224 Pannalai
14. J/225 Kollankaladdy
15. J/226 Naguleswaram
16. J/227 Tellippalai East
17. J/228 Tellippalai
18. J/229 Thurkkapuram
19. J/230 Tjamtjao Selvapuram
20. J/231 Maviddapuram
21. J/232 Maviddapuram South
22. J/233 Kankasanthurai West
23. J/234 Kankasanthurai Centre
25. J/236 Palai Veemankamam North
26. J/237 Palai Veemankamam South
27. J/238 Kadduvan
28. J/239 Kadduvan West
29. J/240 Thenmayilai
30. J/241 Varuththalaivilan
31. J/242 Kurumpasiddy
32. J/243 Kurumpasiddy East
33. J/244 Vayavilan East
34. J/245 Vayavilan West
35. J/246 Myliddy North
36. J/247 Thyiddy East
37. J/248 Myliddythurai South
38. J/249 Thyiddy North
39. J/250 Thyiddy South
40. J/251 Myliddythurai North
41. J/252 Palaly South
42. J/253 Palaly East
43. J/254 Palaly North
44. J/255 Palaly North-West
45. J/256 Palaly West.

# வலிகாமம் வடக்கு கி. சேவகர்பிரிவுகள் 1977-1987 வரை



# வலிவடக்கில் உயர்பாதுகாப்பு வலயம்




No. & G.S.O. Division

01. J/212 Mallakam South
02. J/213 Mallakam Centre
03. J/214 Mallakam North
04. J/215 Alaveddy North
05. J/216 Alaveddy North
06. J/217 Alaveddy East
07. J/218 Kaneswaram
08. J/219 Alaveddy South
09. J/220 Alaveddy West
10. J/221 Elavalai North
11. J/222 Elavalai North-West
12. J/223 Vithakapuram
13. J/224 Pannalai
14. J/225 Kollankaladdy
15. J/226 Naguleswaram
16. J/227 Tellippalai East
17. J/228 Tellippalai
18. J/229 Thurkkapuram
19. J/230 Tjamtjao Selvapuram
20. J/231 Maviddapuram
21. J/232 Maviddapuram South
22. J/233 Kankasanthurai West
23. J/234 Kankasanthurai Centre
25. J/236 Palai Voomankamam North
26. J/237 Palai Voomankamam South
27. J/238 Kadduvan
28. J/239 Kadduvan West
29. J/240 Thenmayilai
30. J/241 Varuththalaivilan
31. J/242 Kurumpasiddy
32. J/243 Kurumpasiddy East
33. J/244 Vayavilan East
34. J/245 Vayavilan West
35. J/246 Myliddy North
36. J/247 Thyiddy East
37. J/248 Myliddythurai South
38. J/249 Thyiddy North
39. J/250 Thyiddy South
40. J/251 Myliddythurai North
41. J/252 Palaly South
42. J/253 Palaly East
43. J/254 Palaly North
44. J/255 Palaly North-West
45. J/256 Palaly West.

☐ RESETTLED AREA - 1997
▭ HIGH SECURITY LINE


# வலிவடக்கு பிரிவும் வீதியமைப்பும்

| G.S.O. Division Numbers and Names | |
|---|---|
| 212 | Mallakam South |
| 213 | Mallakam Centre |
| 214 | Mallakam North |
| 215 | Alaveddy North |
| 216 | Alaveddy Centre |
| 217 | Alaveddy East |
| 218 | Ganeshwaram |
| 219 | Alaveddy South |
| 220 | Alaveddy West |
| 221 | Ilavalai North |
| 222 | Ilavalai North West |
| 223 | Vithakapuram |
| 224 | Pannalai |
| 225 | Kollankaladdy |
| 226 | Naguleswaram |
| 227 | Tellippalai East |
| 228 | Tellippalai |
| 229 | Thurkkapuram |
| 230 | Thanthai Selvapuram |
| 231 | Maviddapuram |
| 232 | Maviddapuram South |
| 233 | Kankesanthurai West |
| 234 | Kankesanthurai Centre |
| 235 | Kankesanthurai South |
| 236 | Palai Veeman kamam North |
| 237 | Palai Veemankamam South |
| 238 | Keddavan |
| 239 | Keddavan West |
| 240 | Thenmylai |
| 241 | Varuthalaivilan |
| 242 | Kurumbasiddy |
| 243 | Kurumbasiddy East |
| 244 | Vasavilan East |
| 245 | Vasavilan West |
| 246 | Myliddy North |
| 247 | Thaiyiddy East |
| 248 | Myliddythurai South |
| 249 | Thaiyiddy North |
| 250 | Thaiyiddy South |
| 251 | Myliddythurai North |
| 252 | Palaly South |
| 253 | Palaly East |
| 254 | Palaly North |
| 255 | Palaly North West |
| 256 | Palaly West |



# வலிவடக்கின் மண்தன்மை

SOIL MAP   Valikamam North A G A Division





Source – Land Use Policy Division.   1:50,000

# வலிவடக்கின் நிலத்தின் பௌதிகத்தன்மை


PHYSICAL FEATURES

— Valikamam North A.G.A. Division




Source: Surveyor Department

## வலிவடக்கின் நிலப்பயன்பாடு




# வலிவடக்கில் குளங்கள் பாதைகள்

Tracing Showing the Location of Tanks/Ponds in Valikamam North A.G.A Division in Jaffna District

Scale 1 50000

S.G.s Rega No. 6/92/C41

| No. | Name of Ponds/Tanks |
|---|---|
| 1. | Palaly Sudalaikkulam |
| 2. | Mann kulam |
| 3. | Paraiyanseemakulam |
| 4. | Thondamankulam |
| 5. | Thunnanthaikkulam alies Kulaththady |
| 6. | Karandahakkulam |
| 7. | Mullaikkulam alies Vannamanaikkulam |
| 8. | Kammikkulam |
| 9. | Kanayavilkulam |
| 10. | Keethiyawaththaikkulam |
| 11. | Vannankulam |
| 12. | Valavudaikkulam |
| 13. | Pokkanaikkulam (Sandoned) |
| 14. | Niravigaffuppallam (abandoned) |
| 15. | Uchchalaikkulam |
| 16. | Pandavanaikkulam ✓ |
| 17. | Maddivanaikkulam (abandoned) |
| 18. | Ampanaikkulam ✓ |
| 19. | Pokkankulam |
| 20. | Periyathampirankulam ✓ |
| 21. | Poothankulam ✓ |
| 22. | Nukkarankaddaikkulam |
| 23. | Alakollaivannankulam ✓ |
| 24. | Alakollaikkaddukkulam ✓ |
| 25. | Kumpalaikkulam ✓ |
| 26. | Vattakkulam ✓ |
| 27. | Ampalavarkulam ✓ |
| 28. | Kiluvanaikkulam ✓ |
| 29. | Panakakulam ✓ |
| 30. | Uthirikkaikulam ✓ |
| 31. | Kundikkulam alies Pond |
| 32. | Achchalaikkulam ✓ |
| 33. | Periyathampiran kulam ✓ |
| 34. | Neeliyampanaikkulam ✓ |




Reference
+ Hospital
^ Hindu Temple
S School
† Church
O Pond/Tank

Prepared by
I Eeswaramoorthy
Surveyor, Survey Dept.
in November 1992

Checked by
1992.12.03
T. Sabanathan, Asst. S.S.

# வலி வடக்கின் பெருமையினை வியந்துபாடு!

வலிவடக்கின் பெருமையினை வியந்து பாடில்
வானுயர்நற் கோபுரங்கள் அழகுசேர்க்கும்
ஒலிமிகுசெய் நாதமணி ஓசைகூட்டும்
ஓங்கார மந்திரத்தின் பொருளே காட்டும்
வலி மிகுசெய் நோய்கள்பிணி சாபம் மற்றும்
வனப்புமிகு சுனைகீரி மலையி லோங்கும்
கலிநீக்கிக் கதிபெறுவார்கண் டகியை நாடி
கைதொழுவார் நகுலகிரி மாவைதேடி

இயற்கைதரு அழகுகடல் மீதிற்கான
இசைபெறுநல் மீனினங்கள் கரையிற்சேரும்
உயர்ந்தபெருந் தொழிற்சாலை அழகு கூட்டும்
உழைப்பினிலே மனநிறைவு காணத்தூண்டும்
தூயதொரு வெண்சுண்ணக் கற்களள்ளி
சூளையிலே இட்டவர்கள் துகளாய்க்காண்பர்
ஆயபெருந் தொழிலினிலே வந்தசெல்வம்
அள்ளியுமே கடல்கடந்து வணிகம் செய்தார்

கடல்மீதில் விளையாடும் துறைகள் கண்டு
கப்பல்கரை சேரும்துறை முகங்கள் உண்டு
உடல்வளைத்து பயிர்விளைக்கும் நிலைகள் உண்டு
உயர்ந்தபனை தென்னையொடு கமுகுவாழை
ஒளடதமாய் அமுதமதாய் அளிக்கும் செல்வம்
ஆயிரமாம் பணம்படைக்கும் தொழில்கள் கண்டு
திடமுடனே நடமாடும் மனிதர் கூட்டம்
திறம்படைக்கும் திருவிடமே எங்கள்பூமி

வளருதமிழ் அறிவினுயிர் காக்கும் கல்வி
வளரவழி காட்டுமுயர் கல்விச்சோலை
உளப்பிணிகள் உடற்புற்று நோய்கள்மாற்றும்
உயிர்வருத்தும் பெரியக நோயை நீக்கும்
தளமுண்டு தளர்வறியா முயற்சியாலே
தமைக்காக்கும் திறங்கொண்டு உழைக்கும் மக்கள்
வளமுண்டு வாழ்விலுயர் வண்ணம் காண
வைத்ததொரு கைத்திறம்சொல் தொழில்கள் நூறே!

அதிமுயற்சித் திறங்கொண்ட மக்கள் தாமும்
ஆக்கமுறும் பணிவளர்க்கும் நாட்டம் பொங்க
கதியினிலே கடும்முயற்சித் திறத்தினாலே
கைத்திறஞ்சொல் பொற்பனைத்தும் உயர்ந்தேயோங்க
வாளியொடு அலுமினியப் பொருளின் ஆக்கம்
வளர்ந்தோங்க வகைவகையாம் வண்ணம் தோன்ற
ஒளிகொண்ட வெற்றிலைநற் கொடிகளோடி
உதயனவன் முகம்பார்த்துச் சிரிக்குமன்றோ!

பக்திநெறி தனைவளர்க்கும் மாவைக்கோட்டம்
பண்பினில்நற் சிந்தனையாம் நூலைத்தந்தோன்
சித்தமதில் சிவநாமம் சொல்லும் தீரன்
சிவயோக சுவாமிகளின் ஊரி தென்றால்
பக்கமதில் உறைகீரி மலையிற் சித்தர்
பற்பலராம் குழந்தைவேற் சாமியோடும்
உத்தமியாள் சடையம்மா சமாதிகண்ட
உறைவிடத்தும் எழில்தீபம் சுடருமன்றோ!

மீன்வளங்கள் நிறைகடலின் ஓரம்தாவும்
மிகையான நல்லவளி நோயைநீக்கும்
என்றறிஞர் கண்டதனால் கசநோய்தீர்க்கும்
எழிலான மருத்துவநல் மனையைவைத்தும்
முன்பெருகும் மீனவர்தம் செல்வம் பேண
முயன்றுபெரும் பனிக்கட்டி ஆலை செய்தும்
பின்னுமலர் நிலைகண்டு தொழிலில் ஓங்க
மீன்பிடிநற் துறைமுகமும் வைத்தார் மயிலை

கல்வியெனும் தண்சுனைநீர்க் கடலில் நீந்த
கவின்கொண்ட பூமியிது என்றே பாட
தெல்லிநகர் தன்னிலொளி கூட்டியாடும்
தேசுடைநல் மகாஜனாவும் யூனியன் தாயும்
வல்லகடல் காங்கேசன் துறையில் ஓங்கும்
வாணியருள் சிந்துமுயர் நடேஸ்வராவும்
கல்விகண் திறந்துபெரும் ஊற்றாய் நின்ற
காலமதை நினைந்திடக்கண் ஊற்றாய்ப் பாயும்

உல்லாசப் பிரியர்களின் நகராம் கொழும்பு
ஊர்வலம்செய் காட்சிமிகு காட்டும் வேளை
நல்லதொரு யானையுறை சின்னம் காட்டும்
நாடியவர் தேடிவரத் தாகம் தீர்க்கும்
வல்லதொரு பானமுண்டோ? இந்த மண்ணில்
வாழ்வதற்கோர் வழியுண்டோ? என்பார் முன்னே
சொல்லரிய சுவையூட்டும் தோலகட்டி
நெல்லிரசம் தன்னருமை மறக்கலாமோ?

தலைநகரில் இராமநாத வள்ளல் செய்த
தண்ணளிசேர் பொற்கோயில் கருங்கற் சிற்பம்
அலையெனவே நிலைகடந்து தோன்றும் அதுபோல
அழகுறவே எழுந்தபெருங் கோயில் என்றால்
கலையழகுக் கண்திறக்கும் கோயிலென்றே
கவின்படைக்கும் தலைசிட்டி வைரவர்தானும்
நிலையிலுயர் சிற்பத்தின் சிறப்புக் காட்டும்
நீண்டுயரும் நந்திநவில் கதைகள் கோடி

இத்தனைநல் அழகுபெற நின்ற பூமி
இலங்குமொளி மறையவரு நிலையினாலே
அத்தனையும் புல்லர்களின் கையிற்பட்டே
ஆக்கமது இழந்ததிரு மகளேபோன்று
சித்தமதில் சூழ்ந்தபெரு இடிகளாலே
திலகமது இன்றிநடை பயில்வாள் போன்றும்
வித்தான தன்விதியை நொந்துநொந்து
வீழ்த்துகின்றாள் கண்ணீர்ப்பூ மாலைதானே

முத்துநிகர் கடலழுக் கோலத்தோடும்
முகம்மலரவிமானமது தரித்தே நிற்க
சித்திரநல் மீனினங்கள் பாடும் பூமி
சித்தர்களின் நடையழகுப் பெருமைகண்டும்
வித்தைபல காட்டியுயர் வினோதம்கண்ட
விதிவசமோ? இதுதவமோ என்றேயேங்க
சத்துநிறை மண்மகிமை பாடிப்பாடி
தன்னருமை கெட்டநிலை நினைகின்றாளே!

வானின்று வந்துபொழி மழையினாலும்
வற்றாதே கடலலைகள் தெறிப்பதாலும்
தானின்று தரையில்வரு முழக்கத்தாலும்
தன்னிலைகள் இழந்துபலர் வீழந்ததாலும்
சனிநின்று நடம்செய்த கோலத்தாலும்
சஞ்சலமே பேரிடியாய்க்கு விந்ததாலும்
மனிதமெனும் பண்பிந்த மண்ணில் நீங்கி
மறைந்து பின்னும் மலர்ந்ததனால் மாட்சிகண்டாள்

ஆக்கம்

**கொல்லங்கரட்டி** **சு. குகதேவன்**

பற்ற வேண்டிய பற்றிவிட்ட பிறகு உங்கள் இலக்கை அடையும்வரை அந்தப்பற்றை விடாதீர்கள்.

விரும்ப வேண்டியதை விரும்பியபிறகு, அந்த விருப்பம் நிறைவேறும்வரை அதைக் கைவிடாதீர்கள்.

கேட்க வேண்டியதைக் கேட்டபிறகு கேட்டது கிடைக்கும் வரை முயற்சியைக் கைவிடாதீர்கள்.

நினைக்க வேண்டியது எதுவோ அதனை நினைத்தபிறகு
அதில் வெற்றி கிட்டும்வரை விடாதீர்கள்.

பகவானாது களைத்துப்போய் உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்
அல்லது நீங்களாவது முழு மனத்துடன் ஆழ்ந்து அதனைத்தருமாறு கேட்க வேண்டும்.

இதுதான் உண்மையான பக்தன் கடைப்பிடிக்க வேண்டிய பாதை!

-(தெலுங்குகவிதை)

# வலிகாமம் வடக்கும் மூலவளங்களும்

திரு வெ. மாணிக்கம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பிரதேசம் விடயமாகும், இப்பிரதேசத்துக்குள் கடல்வளம், நிலவளம், சீமெந்து உற்பத்திக்கான முருகைக்கல், பனைவளம், மீன்பிடித்துறைமுகம், காங்கேசன்துறை துறைமுகம், கட்டிடவேலைக்குத் தேவையான சல்லிக் கல் போன்ற மூலவளங்கள் பல உண்டு.

வலிகாமம் வடக்குப் பிரதேசம் விவசாயத்திற்கு உகந்த செம்பாட்டு மண் வளத்தைக் கொண்டது, குறிப்பாக பலாலி, மயிலிட்டி வடக்கு செறிந்த பகுதிகளாகும், இக்கிரமங்கள் உப உணவு உற்பத்திற்கு மிகவும் வாய்பான பகுதிகளாகும். குறிப்பாக மரவள்ளி, தக்காளி, வெங்காயம், குரக்கன், புகையிலை போன்ற பயிர்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளன. மரவள்ளிக் கிழங்கிற்கு பலாலியும், தக்காளிப் பழத்துக்கு மயிலிட்டி வடக்கு, பலாலிப் பகுதியும், வெங்காயம் ஏனைய பயிர்களுக்கு ஏனைய பகுதிகளும் பெயர் பெற்று விளங்குகின்றன. இக்கிராமத்து விவசாயிகள் மிகவும் ஊக்கமுடையவர்கள். ஒவ்வொரு விவசாயியும் 500 கன்றுகள் குறையாது விவசாயம் செய்துவந்தார்கள் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இப்பகுதிக் கிணறுகள் ஆழமானதாக விருந்தாலும் வற்றாத நீரூற்றுத் தன்மையுடையவை. தற்பொழுது இக்கிராமங்கள் அனைத்தும் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளன. சிறந்த செம்பாட்டு மண்ணைக் கொண்ட பகுதிகள் தற்பொழுது காடுமண்டிக் காட்சியளிக்கின்றது. வலிவடக்கில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம், காங்கேசன்துறை துறைமுகம், மாவிட்டபுரம் அலுமினியம், வாளித்தொழிற்சாலைகள் குறிப்பிடத்தக்கன.

வலிவடக்குப் பகுதி கடல்வளத்தையும் கொண்டது. வலிவடக்கை மையமாகக்கொண்ட காங்கேசனதுறைத் தொகுதி கரையோரப் பிரதேசம் 16 கி.மீற்றர்வரை மீன்பிடித்தொழிலும் கடற்கரையும் சீரழிந்து போயிற்று. இப்பிரதேசம் சேந்தாங்குளம், காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, பலாலி, வளலாய் வரை உள்ளடங்கியதாகும். மயிலிட்டி மீனவர்கள் பாக்குநீரிணையிலும், தீவுப்பகுதிகளிலும், மன்னார் குடாவிலும், முல்லைத்தீவிலும், கொக்கிளாயிலும் ஆழ்கடல் மீன்பிடித்தொழிலிலும், கரைவலைத் தொழிலிலும் கடுமையான உழைப்பாளிகளாக விளங்கினர். அவர்களின் வேண்டுகோளின் பேரிற் தந்தை செல்வநாயகம் அவர்கள் மயிலிட்டியில் மீன்பிடித்துறைமுகத்தை அமைப்பித்துக் கொடுத்தார். இலங்கையிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களில் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகமும் ஓர் பழமைவாய்ந்த துறைமுகம் என்பது வெள்ளிடைமலை. யாழ் மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீனில் 1/3 பகுதி மயிலிட்டி மீனவர்களால் பிடிக்கப்பட்டு வந்ததென்பது யாவரும் அறிந்த விடயமாகும். இங்கு 3ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைகள் இயங்கி வந்துள்ளன. மயிலிட்டிப் பகுதியிலிருந்து நாளாந்தம் 15க்கு மேற்பட்ட லொறிகளில் மீன், கருவாடு கொழும்புக்கு அனுப்பப்பட்டுவந்தது. பலாலி, சேந்தாங்குளம், காங்கேசன்துறை, ஊறணிப் பகுதி மக்கள் சிறுதொழில்களில் ஈடுபட்டு வந்தார்கள். இன்றும் பலர் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் பற்றி அறியாமல் இருப்பது வியப்பாகவுள்ளது.

இலங்கையிலுள்ள துறைமுகங்களில் காங்கேசன்துறை துறைமுகம் மிகவும் பழமைவாய்ந்தது. இத்துறைமுகம் 1851ல் திறக்கப்பட்டது. இது ஓர் இயற்கைத் துறைமுகமாகும். இங்கு கப்பலிலிருந்து மூடைகள் வத்தைகளில் ஏற்றிவரப்பட்டு, தண்ணீருக்குள் தொழிலாளர்கள் சென்று, கழுத்தில் மூடையைச் சுமந்து கரை சேர்ப்பார்கள். அவர்களது திறமை போற்றுதற்குரியது. சில வருடங்களுக்கு முன் இத்தொழிலாளர்கள் 1140 தொன் எடையுள்ள மூடைகளைப் பறித்து சாதனை படைத்திருந்தார்கள். இது பலருக்குத் தெரியாது. ஏனைய துறைமுகத் தொழிலாளர்களுடன் ஒப்பிடும் போது இது ஓர் மாபெரும் சாதனையென்றே கூறலாம். 1ம், 2ம் உலகப்போரிலும் இத்துறைமுகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை 1950களில், 50 ஆண்டுகள் செயல்திறனையும், உற்பத்தி எல்லையையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஏறக்குறைய 800 ஏக்கர் நிலத்தில் இத்தொழிற்சாலை அமைந்துள்ளது. 1990ல் தொழிற்சாலை மூடும் வரை ஏறக்குறைய 2000 தொழிலாளர்கள் வரை வேலை செய்து வந்துள்ளார்கள். ஆண்டொன்று க்கு 5,00,000 தொன் வரை சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டது. சீமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலவளமான முருகைக் கற்கள் வலிவடக்கு, மாவிட்டபுரம் கீரிமலைப்பகுதிகளில் ஏராளம் உண்டு. நிலத்திற்கு கீழ் 10,20 அடி ஆழம் வரை "டைனமெற்" வெடிவைக்கப்பட்டு முருகைக்கல் தோண்டியெடுக்கப்பட்டது. இதன் மூலம் "கிலிங்கர்" இங்கிருந்து காலி, புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன. தொழிலாளர்கள் எந்தவிதமான உடல் நல மருத்துவப் பாதுகாப்பு இன்றி கடுமையாக உழைத்தனர் என்பது வெள்ளிடைமலை.

வலி வடக்கில் வீடு கட்டுவதற்கும் சீமெந்து கொங்கிறீற் கல் அரிவதற்கும், கொங்கிறீற் போடுவதற்கும் உபயோகிக்கப்பட்ட சல்லிக் கல் மயிலிட்டி வடக்கு, தையிட்டிப் பகுதிகளில் நிலத்துக்கு அடியில் உண்டு, எறத்தாழ 4 முதல் 5 அடிவரை தோண்டி, இச் சல்லிக்கல் பெறப்பட்டது. இச் சல்லிக் கல் வலி வடக்கில் மட்டும் உண்டு. பலர் இத்தொழில் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

யாழ் மாவட்டத்தில் வெற்றிலைக்குப் பெயர்பெற்ற பகுதி வலிவடக்காகும். வெற்றிலை குறிப்பாக இப்பிரதேசத்தில் மாவிட்டபுரம், கொல்லன் கலட்டி, கீரிமலை, இளவாலைப் பகுதிகளிலேயெ உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளன. வெற்றிலைக்கு மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி கிராமங்கள் பெயர் பூத்த கிராமங்களாகும். இப்பகுதிகளில் தான் கண்ணி வெடித்து வெற்றிலை வளரும். ஏனைய பகுதிகளில் வளராது. இதற்குக் கராணம் இப்பகுதி மண்வளமேயாகும் என்பது யாவரும் அறிந்த உண்மை. இளவாலைப் பகுதி முந்திரிகைச் செய்கைக்கு உகந்த பூமியாகும். வலிவடக்கு பிரதேசம் பனைவளத்தையும் உள்ளடக்கிய பகுதியாகும். இதனால் இப்பகுதி சீவல்தொழிலிலும் முக்கிய பங்கை வகித்துவந் துள்ளது. காய்வெட்டிக்கள் சேகரிப்பதில் வலி வடக்கு தொழிலாளர்கள் பெயர் பெற்றவர்கள் குறிப்பாக கூவில், சேந்தாங்குளம், மயிலிட்டி, தையிட்டிப் பகுதி சீவல் தொழிலாளர்கள் நிகரற்றவர்களாவர். இத்தொழிலாளர்களினாலேயே ஏனைய குடநாட்டுப் பகுதிகளுக்கும் இம்முறை பரப்பட்டுள்ளது என்பது உண்மை. இத்தொழிலுக்கு கடற்கரைப் பிரதேசமும், மண் வளமுமே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. சிங்களப் பகுதிகளிலிருந்து யாழ் மாவட்டத்துக்கு வருகை தருபவர்கள் கீரிமலைக் கோயிலில் நீராடி, கூவில் கள்ளை சுவைபட அருந்தியே செல்வார்கள் என்பது உண்மை.

மேற் கூறப்பட்ட விடயங்களை உற்று நோக்கும் பொழுது வலி வடக்குப் பிரதேசம் சகல வளங்களிலும் முன்னணி வகிக்கின்றது என்பது வெளிப்படையாகும். அளவெட்டி, அம்பனை, கந்தரோடை - சிறுபோக நெற்செய்கை, சிறுதானியம் ஆகியவற்றிலும், மாவிட்டபுரம் - மண்சட்டி பானை உற்பத்தியிலும், மாவிட்டபுரம், பன்னாலை, கொல்லன்கலட்டி - கமுகுச் செய்கையிலும், பலாலி - ஆசிரியர் கலாசாலை அமைந்ததாலும், பலாலி - விமான நிலையும் இருப்பதாலும், காங்கேசன்துறை - உணவுக்களஞ்சியம், உல்லாசப்பயணிகள் வருகை, புகையிரத நிலையம், காசநோய் வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியாசலை இங்கு இருப்பதாலும் சிறப்புற்று விளங்குகின்றன.

**கீதாசாரம்**

எதுநடந்ததோ, அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதி,

# வலிகாமம் வடக்கும் விவசாயமும்

*சி. விஜயரத்தினம்*
*விவசாய போதனாசிரியர்*
*கீரிமலை*

வலிகாமம் வடக்கு விவசாயத்துக்கு ஏற்ற நீர்வளம் நிலவளம் கடின உழைப்பைக் கொண்ட மனிதவளம் ஆகியவற்றைக் கொண்ட சிறந்த விவசாயப் பூமியாகும். விவசாயக் காலநிலையுடன் சம்பந்தப்பட்ட கடல் வளம், விவசாய உற்பத்திகளை மறுநுகர்ச்சிப் பொருட்களாக்கும் தொழிற்சாலைகள் சரித்திரப் பிரசித்திபெற்ற வணக்க ஸ்தலங்கள் என்பவற்றை விசேடமாகத் தன்னகத்தே கொண்ட பிரதேசம் என்பது வலி வடக்கிற்கேயுரிய சிறப்பம்சமாகும்.

**மண் தன்மை**

வலிகாமம் வடக்குப் பிரதேசம் கல்சியச் செம்மஞ்சள் "லற்றசோல்" தொகுதியைக் கொண்ட சிறந்த இருவாட்டி மண்ணாகும். இம் மண் சிறந்த காற்றோட்டத்தையும் அதிகளவு நீர்கொள் திறமையும் கொண்ட சிறப்புடைய தாகும்.. இரும்பு, கல்சியம், மகனீசியம்போன்ற சுவட்டு மூலகங்கள் போதியளவு காணப்படினும் பிரதான மூலகங்களாகிய நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பன குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. இதனால் இவை அவ்வப்போது செயற்கைப்பசளைகள் மூலம் மண்ணுள் செலுத்தப்படுகின்றன. மாற்றுப் பயிர்ச்செய்கை மூலமும் பசும்தாழ், கூட்டெரு வகைகளைக் கூடுதலாகப் பயன்படுத்துவதன் மூலமும் மூலகங்களை மண்ணுள் நிலைநிறுத்தும் இருபுற வெடிக்கனிப் பயிர்வகை களையும் தானியப் பயிர் வகைகளையும் சுழற்சி முறையில் அதிகளவு செய்கை பண்ணுவதன் மூலமும் இக்குறைபாடு பெருமளவு நிவர்த்தி செய்யப்படுவதுடன், மண்ணின் கட்டமைப்பு பேணப்பட்டு நிலைபேறான விவசாய நடடிவக்கைகளுக்கு ஏதுவானதாக அமையும்.

**காலநிலை**

இப்பிரதேசம் உலர்வலய பள்ளநாட்டு விவசாயக் காலநிலை (DL3) பிரிவுக்குள் அடக்குகிறது. இங்கு சித்திரை வைகாசியில் தென்மேற் பருவகாற்றால் சிறுபோக மழையும் புரட்டாசி ஐப்பசியில் வடகீழ் பருவக்காற்றால் பெரும்போக மழையும் கிடைக்கிறது.

**நீர் வளம்**

இங்கு விவசாய நடவடிக்கைகளுக்கு நிலத்தடி நீர்வளமே பாவனையில் உள்ளது. இந்நீர்வளத்தைப் பேணும் வகையில் பல சிறு குளங்கள் பெரிதும் உதவுகின்றன. கிடைக்கும் மழைநீரை விரயமாகவிடாது தேக்கிவைப்பதன் மூலம் இவ்வளம் பேணப்படலாம். இதன் முக்கியத்துவத்திற்காக இப்பகுதியிலுள்ள பிரதான நீர்கொள்ளும் குளங்களாகிய நீலியம் பனைக்குளம், நாக்கணாகட்டுக் குளம் என்பன ஆழமாக்கப்பட்டுச் செப்பனிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஏனைய சிறுகுளங்களும் இவ்வாறு செப்பனிடப்படுவதுடன் இக்குளங் களுக்கு நீர் எடுத்துச் செல்லும் வழுக்கையாறும் ஏனைய சிறிய வாய்க்கால்களும் செப்பனிடப்பட்டுத் தேவையான நேரங்களில் நீரைத் தடுத்துத் தேக்கி வைக்கும் வழிவகைகள் கண்டறியப்படுவது முக்கிய தேவையாகும். அத்துடன் வலி வடக்கின் மற்றொரு பிரதான வளமாகிய பனைமரங்கள், மா, பலா, இலுப்பை,வேம்பு, ஆல், அரசு போன்ற விருட்சங்கள் நீர்வளத்தையும் சீதோஷ்ண நிலையையும் பேணிப்பாதுகாத்து வந்தன. இவை பல்வேறு காரணங்களால் அருகிக் கொண்டு போயுள்ளது துரதிஸ்டவசமானது இவை மீளவும் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

| இல | குளத்தின் பெயர் | அமைவிடம் | பயன்படுத்தக் கூடிய விஸ்தீரணம் (ஏக்கர்) | பயனடை யும் குடும் பங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | உத்திரக்கைக் குளம் | அளவெட்டி | 20 | 42 | |
| 02 | நொச்சிக்குளம் | மல்லாகம் | 15 | 33 | |
| 03 | அச்சாலைக் குளம் | மல்லாகம் | 20 | 38 | |
| 04 | கும்பலைக் குளம் | மல்லாகம் | 15 | 17 | |
| 05 | நாக்கணான் கட்டுக் குளம் | மல்லாகம் | 20 | 35 | |
| 06 | மட்டியவளைக்குளம் | இளவாலை வடக்கு | 05 | 19 | |
| 07 | உப்புக்குளம் | மல்லாகம் | 01 | - | பயன்பாட்டில் இல்லை |
| 08 | பண்டவளைக் குளம் | இளவாலை வடக்கு | 20 | 38 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 09 | முல்லைக்குளம் (மேட்டுநிலம்) | மல்லாகம் | 07 | 09 | பயன்பாட்டில் இல்லை |
| 10 | உச்சாலைக்குளம் | இளவாலை வடக்கு | 12 | 20 | |
| 11 | கிளுவனைக்குளம் | அளவெட்டி தெற்கு | 30 | 52 | |
| 12 | பிணாக்கைக்குளம் | அளவெட்டி தெற்கு | 25 | 40 | |
| 13 | வட்டக்குளம் | அளவெட்டி தெற்கு | 12 | 12 | பயன்பாட்டில் இல்லை |
| 14 | அம்பலவாணர் குளம் | அளவெட்டி தெற்கு | 15 | 29 | |
| 15 | நீலியம்பனைக் குளம் | மல்லாகம் தெற்கு | 15 | 12 | |
| 16 | அழகோலைக்கட்டுக் குளம் | அளவெட்டி வடக்கு | 20 | 42 | பயன்பாட்டில் இல்லை |
| 17 | அழாகோலைக்குளம் | அளவெட்டி வடக்கு | 04 | 12 | |
| 18 | புலாத்திக்குளம் | அம்பனை | 03 | 09 | ப.பா.இ |
| 19 | பூதன்குளம் | அம்பனை | 05 | 08 | ப.பா.இ |
| 20 | அம்பனைக்குளம் | அம்பனை | 10 | 18 | |
| 21 | பெரியதம்பிரான்குளம் | தெல்லிப்பளை | 20 | 38 | |
| 22 | முல்லிக்குளம் | தெல்லிப்பளை | 01 | - | ப.பா.இ |
| 23 | பலாலிநிலாவெளிக் குளம் | பலாலி | 10 | 12 | பயன்பாட்டி இல்லை |
| 24 | மண்குளம் | பலாலி | 15 | 28 | ப.பா.இ |
| 25 | மயிலிட்டிக்குளம் | மயிலிட்டி | 10 | 12 | ப.பா.இ |
| 26 | வறுத்தலை விளான்குளம் | கட்டுவன் | 05 | 17 | பயன்பாட்டில் இல்லை |
| 27 | கடத்தியாவத்தைக் குளம் | பளைவீமன்காமம் | 08 | 12 | பயன்பாட்டில் இல்லை |
| 28 | பெரியதம்பிரான் கோயில் குளம் | விளான் | 05 | 17 | (மேட்டுநிலம்) |

## விவசாயச் செயற்பாடுகள்

யாழ்மாவட்டத்திற் கிடைக்கக் கூடிய அனைத்து மரக்கறிவகைகள், பழவகைகள் என்பன இங்கு உற்பத்தியாகின்ற போதும்
தக்காளி
வெற்றிலை
புகையிலை
சிறுதானியம்
கிழங்குவகை
மிளகாய்

என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த பிரதேசமாகும். 1970 களில் 1980களில் இலங்கைபூராகவும் சிறப்பான விளைச்சலை தந்த மிளகாய் இனமாகிய MI I ன் பெற்றார் இப்பிரதேசத்தின் மயிலிட்டி கறுப்பனும் மாதகல் கறுப்பனுமேயாவர். தற்போது இவ்வினம் தவிர்க்கப்பட்டு MI 2, KA2 போன்ற இனங்களே செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

பலாலி, மயிலிட்டி, தையிட்டி போன்ற கிராமங்களில் அதிகளவு செய்கைபண்ணப்பட்டு வந்த உள்ளூர் இனத் தக்காளி கையாளும் போது விரைவிற் பழுதடைவதால் இறக்குமதி செய்யப்படும் புதிய இனத் தக்காளியுடன் கூடிய KCI இனம் இருபோகங்களுக்கும் ஏற்ற இனமாகும் 1990 காலவரை யாழ்குடா நாட்டின் வெற்றிலைத் தேவையை மாவிட்டபுரம், கொல்ல ங்கலட்டி, இளவாலைக் கிராமங்களே பூர்த்தி செய்து வந்தன இக்கிராமங்கள் கடலையண்டிய கிராமங்களாகையால் கடல் காற்று அதனோடிணைந்த சீதோஷ்ண நிலை வெத்திலை செழித்து வளர ஏதுவாக இருந்தது. 1990ல் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது இப்பகுதி விவசாயிகள் தம்முடன் நடுகைத் துண்டங்களை எடுத்தச் சென்று இடம்பெயர்ந் திருக்கும் பகுதிகளில் செய்கை பண்ணி வந்தார்கள். இருப்பினும் இப்பகுதிக்குரிய சீதேஸ்ண நிலை அங்கு குறைவாகக் காணப்பட்டதால் எதிர்பார்த்த பலன் கிடைக்க வில்லை. இதனால் வெற்றிலைக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதை ஈடுசெய்யும் வகையில் விவசாயத் திணைக்களத்தால் கொழும்பு வெற்றிலைத் துண்டங்கள் நடுகைக்காக தென்பகுதியிலிருந்து தருவிக்கப்பட்டு விவசாயப் போதனாசிரியர்

மூலம் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு தொழிநுட்ப ஆலோசனையுடனான விரிவாக்க செயற்பாடுகள் செய்யப்பட்டன. இதன்படி இப்பகுதிக்கு இரண்டாயிரம் (2000) நடுகைத் துண்டங்கள் விநியோகிக்கப்பட்டன. இதிலிருந்து மேலும் நடுகைத்துண்டங்கள் பெறப்பட்டு பரவலாக எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத் தப்பட்டு வருகின்றன.

இத்துடன் அன்னாசி, இஞ்சி, மஞ்சள் நடுகைத்துண்டங்களும் தென்பகுதியிலிருந்து தருவிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இவை இப்பிரதேசத்தில் ஓரளவு வெற்றி கண்ட போதும் மேலும் விரிவுபடுத்துவதாயின் குறிப்பாக அன்னாசியைப் பொறுத்தவரை மேலும் புதிய நடுகைத்துண்டங்கள் தருவிக்கப்பட வேண்டிய நிலையேயுள்ளது.

குரக்கன் தினை, சாமை, வரகு போன்ற சிறுதானியங்கள் இப்பிரதேசத்தில் கூடுதலாகச் செய்கை பண்ணப்பட்டுவந்தன. இருப்பினும் மக்களிடையே ஏற்பட்ட உணவுப் பழக்கமாற்றம் காரணமாகவும் பல்வேறு புறக்காரணிகளாலும் இவை குறைவடைந்துள்ளன. இன்றைய காலகட்டத்தில் இவற்றின் முக்கியத்துவம் உணரப்பட்டு செய்கை விரிவுபடுத்தப்படுகிறது. மண்வளத்தைப் பேணுவதில் இவை பெரும் பங்காற்றுவதாலும் உடல் நலத்திற்கு அவசியமானதாலும் இவற்றின் செய்கை மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியது இங்கு வலியுறுத் தப்படுகிறது.

மல்லாகம் தெற்கு, மல்லாகம் வடக்கு, அளவெட்டி மத்தி, அளவெட்டி கிழக்கு, அளவெட்டி தெற்கு, இளவாலை வடக்கு, துர்க்காபுரம், பளை வீமன்காமம் ஆகிய கிராமங்கள் நெற்செய்கை நிலங்களைக் கொண்டதாகும். இவற்றில் பளை,வீமன்காமம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் செய்கைக்குட் படுத்தக்கூடியதாக இருந்தாலும், இன்றைய சூழ்நிலைகாரணமாக இவற்றில் 70% மான நிலம் மட்டும் செய்கை பண்ணப்படுகிறது. உள்ளூர் நெல் இனங்களான மொட்டைக்கறுப்பன் பெரியவெள்ளை போன்றவையும் பழைய திருந்திய இனங்களான ஏச்4, பீ.ஜீ 34 - 6, போன்றவையும் செய்கைபண்ணப்பட்டாலும் இவற்றின் வயது, விளைதிறன், என்பன விவசாயிகளின் முயற்சிக்கு ஈடுகொடுப்பனவாக இல்லாத காரணத்தால் குறைந்தவயதுடைய சாயும் தன்மையற்ற விளைவு கூடிய புதிய இனங்களான ஏ.ரீ.402, பீடபிள்யு 351, பீ.ஜீ 350 அறிமுகப்படுத் தப்பட்டு விவசாயிகள் மத்தியில் வயல்விழாக்கள், பயிற்சிக் கருத்தரங்குகள் மூலம் பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. நாளடைவில் சகல விவசாயிகள் கையிலும் புதிய இனங்கள் கிடைக்க வசதியாக இருக்கும். இதன் மூலம் குறுகிய காலத்தில் கூடுதல் உற்பத்தியை பெற்றுக் கொள்ள முடியும்.

அட்டவணை - 02
(நெற்செய்கை நிலம்)

| கிராம அலுவலர் பிரிவு | விஸ்தீரணம் (ஹெக்டயர்) |
|---|---|
| மல்லாகம் தெற்கு | 82.1 |
| மல்லாகம் வடக்கு | 08.1 |
| அளவெட்டி மத்தி | 22.6 |
| அளவெட்டி கிழக்கு | 19.84 |
| அளவெட்டி தெற்கு | 56.76 |
| இளவாலை வடக்கு | 66.24 |
| துர்க்காபுரம் | 67.0 |
| பளைவீமன்காமம் | 04.92 |

அட்டவணை - 03
(விவசாய வளங்கள் 90க்கு முன்னும் பின்னும்)

| | 90க்குமுன் (கெக்டயர்) | 90க்குப்பின் (கெக்டயர்) |
|---|---|---|
| நெற்காணி | 324 | 220 |
| மேட்டுக்காணி | 1197 | 250 |
| விவசாயக்குடும்பங்கள் | 17612 | 9023 |
| கிராமஅலுவலர்பிரிவுகள் | 45 | 17 |

அட்டவணை 04
(ஏனையவளங்கள்தற்போதைய பாவனையில்)

| | |
|---|---|
| * கைத்தெளிகருவி | 250 |
| * 2 நீரிறைக்கும் இயந்திரங்கள் | 300 |
| * 2 சில்லு உழவு இயந்திரங்கள் | 75 |
| * 4 சில்லு உழவு இயந்திரங்கள் | 30 |

## அரசசார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும்

1990ம் பின்னரும் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு காரணமாக விவசாயிகளால் இழக்கப்பட்ட அசையக்கூடிய விவசாய வளங்களை மீளப்பெற்றுக் கொள்ளும் வகையில் உணவு விவசாய நிறுவனத்தின் (FAO)

உதவித்திட்டத்தின் கீழ் ஐவரைக் கொண்ட 145 குழுக்களுக்கு, குழுவுக்கு ஒரு நீரிறைக்கும் இயந்திரம், ஒரு தெளிகருவி அதனோடு உதிரிப்பாகங்களும் வழங்கியதுடன் குழு உறுப்பினர்களுக்கு தலா ஐந்து பழமரக் கன்றுகளும், மரக்கறி விதைப் பொருட்களும் வழங்கி ஆரம்ப விவசாய நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுத்தமை வரவேற்கக்கூடியது. இதன்படி 725 குடும்பங்கள் இன்னும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து கொண்டிருத் கிறார்கள். இத்துடன் யாழ்ரக மண்வெட்டிகளை விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விசாயத் திணைக் களத்தினூடாக வழங்கி உதவியிருக்கிறது. பழப்பயிர்ச் செய்கையைப்புனரமைத்து விரிவுபடுத்தும் வகையில் "பட்டினிக் கெதிரான நிறுவனம்" பழப்பயிர் நடுகைபொருட்களையும் அவற்றை உரிய முறையில் பராமரிப்பதற்கான தொழில்நுட்பஅறிவையும் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வழங்கியதுடன், அவற்றைப் பராமரிப்பதற்கான உபகரணங்களையம் வழங்கியுள்ளது. இப்பிரதேசத்தில் பழவகைகள், மரக்கறிவகைகள் குறிப்பிட்ட சில காலத்தில் மேலதிகமாகக் கிடைப்பதால் அவற்றைப் பதனிட்டுச் சேமித்துப் பயன்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை செயன்முறையில் பண்ணைப் பெண்களுக்கு வழங்கியிருப்பதுடன் இச்செயற் பாட்டுக்காகச் சிறிய தொழிற்சாலையைக் குடா நாட்டில் நிறுவுவதற்கு முன்வந்து, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவது சிறந்த பணியாகும்.

## மேட்டு நிலப்பயிர்கள் - 2000 ம் ஆண்டுக்கான இலக்கும் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியும்

| | | 99/ 2000 காலபோகம் | | 2000 சிறுபோகம் | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு கெக்டயர் | உற்பத்தி மெ.தென் | இலக்கு கெக்டயர் | உற்பத்தி மெ.தொன் |
| 1 | மிளகாய் | 15 | 22.5 | --- | ----- |
| 2 | சின்னவெங்காயம் | 25 | 300 | 42 | 504 |
| 3 | கௌபி | 05 | 4.5 | 02 | 1.8 |
| 4 | பாசிப்பயறு | 20 | 16 | 05 | 04 |
| 5 | நிலக்கடலை | 02 | 02 | 05 | 05 |
| 6 | சோளன் | 01 | 01 | -- | -- |
| 7 | குரக்கன் | -- | -- | 10 | 08 |
| 8 | எள்ளு | 03 | 1.5 | -- | -- |
| 9 | புகையிலை | 05 | 25 | -- | -- |
| 10 | உருளைக்கிழங்கு | 03 | 30 | -- | -- |
| 11 | போஞ்சி | 02 | 12 | -- | -- |
| 12 | கறிமிளகாய் | 02 | 20 | 02 | 20 |
| 13 | தக்காளி | 03 | 45 | 02 | 30 |
| 14 | கோவா | 02 | 20 | 03 | 30 |
| 15 | கரட் | 02 | 30 | 07 | 105 |
| 16 | பீற்றூட் | 02 | 30 | 05 | 75 |
| 17 | லீக்ஸ் | 01 | 10 | 01 | 10 |
| 18 | பயத்தை | 08 | 64 | 12 | 96 |
| 19 | புசித்தாவோ | 01 | 08 | 01 | 08 |
| 20 | வெண்டி | 03 | 30 | 07 | 70 |
| 21 | புடொல் | 07 | 140 | 02 | 40 |
| 22 | பாகல் | 05 | 50 | 07 | 70 |
| 23 | டுபாய்பூசணி | 03 | 30 | 03 | 30 |
| 24 | பூசணி | 02 | 36 | 04 | 72 |
| 25 | கத்தரி | 06 | 120 | 05 | 100 |
| 26 | கறணை | -- | -- | 20 | 440 |
| 27 | கறிவாழை | 01 | 20 | -- | -- |
| 28 | இலைமரக்கறி | 16 | 128 | 16 | 128 |
| 29 | இராசவள்ளி | -- | -- | 06 | 90 |
| 30 | மோதகவள்ளி | -- | -- | -6 | 90 |
| 31 | மரவள்ளி | 17 | 340 | 10 | 200 |

# வலி வடக்கும் கால் நடை வளர்ப்பும்

**பொ. மகாதேவன்**
கால்நடைவைத்தியர்
வலி வடக்கு.

வலி - வடக்குப்பிரதேசம் நீண்ட காலமாக கால்நடை வளர்ப்பில் பெருமளவில் ஈடுபாடுள்ள பிரதேசமாக விளங்கிவந்துள்ளது. யாழ் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சகலவிதமான கால்நடை வளர்ப்புச் செயற்பாடுகள், நல்லினப் பண்ணை வளர்ப்பு, உயர் கலப்புஇனக்கால் நடைகள் பராமரிப்பு என்பன இங்கு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதற்கு ஏற்ற சாதகமான காரணியாக இப்பிரதேசத்தின் வளம்மிக்க செம்மண் கொண்ட மண்ணமைப்பு பல பகுதிகளில் காணப்படுகின்றது இதன் காரணமாக விவசாயத் தொழில் இங்கு அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக கால்நடை வளர்ப்பும் அதிகமானோரால் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனலாம்.

இப்பகுதி மக்களில் விவசாய முயற்சிகளில் ஈடுபடாமல், வேறு தொழில்துறைகளிலீடுபட்டு வருபவர்களும் தமது பாரம்பரிய நடைமுறைப் பழக்கமாகவும், பகுதி நேரத் தொழிலாகவும், பொழுது போக்காகவும் கால்நடை வளர்ப்பிலீடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக தமது சுயதேவை யைப் பூர்த்தி செய்வதுடன், ஏனைய பகுதிகளு க்கும் பால், முட்டை, இறைச்சி போன்ற கால்நடை உற்பத்திப் பொருட்களை வழங்கி வந்துள்ளனர், கடந்த காலங்களில் இலங்கையின் தென் பகுதிக்கும் இங்கிருந்து நல்லி னக்காளைகள், கன்னிப் பசுக்கள், நல்லின கடாக்கள் என்பன அரசாங்க மூலமும், தனியார் மூலமும் கொள்வனவு செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

துரதிஸ்டவசமாக 1990ம் ஆண்டிலும், அதன்பின் 1995ம் ஆண்டிலும் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வுகள் காரணமாக ஏனைய துறைகளைப் போலவும் கால்நடை வளர்ப்பும் அதிகளவிற் பாதிப்படைந்தது. மக்கள் இடம்பெயர்ந்தும், பல்வேறு இடங்களில் தங்கியிருந்து இன்னலுற்ற போதும், மக்களின் ஆர்வம், விடாமுயற்சிகள் காரணமாக இயன்றவரை சிறியளவிலேனும் கால்நடைகளை வளர்த்து வந்தனர். இதனால் மீண்டும் மீளக் குடியமரும்போது எஞ்சியிருந்த கால்நடைகளுடன் இங்குவந்து தமது முயற்சிகளைத் தொடர்ந்தனர்.

இப்பிரதேசத்தில் கால்நடைவளர்ப்பினை அபிவிருத்தியடையச் செய்வதில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துடன், பிரதேச செயலகம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன முன்னின்று ஒத்துழைப்பு நல்கி வருகின்றன.

இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறு கால்நடை வளர்ப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளைத் தனித்தனியாக ஆராய்ந்து மதிப்பீடு செய்யும்போது சகலவித கால்நடை வளர்ப்புச் செயற்பாடுகளுக்கும் ஏற்ற பிரதேசமாக விளங்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## மாடு வளர்ப்பு

இப்பகுதியில் ஆரம்ப காலத்தில் c s ஊரினப் பசுக்கள் பெருமளவில் வளர்க்கப்பட்டு வந்தபோதிலும் இயற்கைமுறை மற்றும் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் கலப்பினங்கள் பெருமளவில் பெறப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளன. 1982ம் ஆண்டில் இப்பகுதியில் காணப்பட்ட மாடுகளின் இன வாரியான புள்ளி விபரங்கள் பின்வருமாறு அமைந்திருக்கின்றன.

| இனம் | காளை | பசுக்கள் |
|---|---|---|
| | 1503 | 5685 |
| உள்ளூரினம் | 1281 | 5339 |
| நல்லினம் | 429 | 719 |
| கலப்பினம் | 544 | 1645 |
| பாலினம் | 1930 | 2116 |
| இழுவை இனம் | 646 | 23 |

இதன் பின்னர் இப்பகுதியில் கறவை மாடு வளர்ப்பு மேலும் அபிவிருத்தியடைந்துள்ளது.

1988 ம் ஆண்டில் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாடுகளின் எண்ணிக்கை 17,971 ஆகக் காணப்பட்டது.

1999இல் பின்வருமாறு காணப்பட்டது
காளைகள் - 385,
பால்கறக்கும் பசுக்கள் - 620
ஏனையவை -812
எனும் எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

## ஆடு வளர்ப்பு

இப்பிரதேச மக்களுடன் ஒன்றிணைந்த ஒரு செயற்பாடாக ஆடு வளர்ப்பு விளங்கி வந்துள்ளது. நல்லின ஆடுகள் சிறந்த முறையில் இப்பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் பராமரிக்கப்பட்டன. ஆடுகளில் சிறந்தஇனங்களான ஜமுனாபாறி, சாணன் என்பனவும் அவற்றின் கலப்பினங்களும் பரவலாக இங்கு வளர்க்கப் பட்டன.

கடாவளர்ப்பு மிகவும் பிரபல்யமானதாக இன்று வரை விளங்குகிறது. ஆடுவளர்ப்பு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் குட்டிகளின் இறப்பு வீதம் ஆடுகளின் அபிவிருத்தியை மட்டுப்படுத்தும் காரணியாக இருந்து வந்துள்ளது. இதற்கு குட்டிகள் ஏற்பு நோயாலும், குடல்புழுக்களால் தாக்கப்படுவது காரணமென அவதானிக்கப் பட்டுள்ளது.

தற்போதும் இப்பகுதியில் நல்லின ஆடுகளின் அபிவிருத்தியை எல்லைப்படுத்தும் காரணிகளாக ஏற்புநோய், பராமரிப்புக் குறைபாடு என்பவைகளே விளங்குகின்றன. எனவே வளர்ப்பாளர்கள் இவற்றைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அவசியமாகும்.

ஆடுகளின் புள்ளிவிபரம்

| 1982 | 1988 | 1999 |
|---|---|---|
| 8331 | 13,384 | 2112 |

## செம்மறி வளர்ப்பு

இப்பிரதேசத்தின் பலாலி, அளவெட்டி பகுதிகளில் இவ்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வந்தது. விவசாய நிலங்கள், தோட்டங்களில் எருவுக்காக கட்டப்படுதல், இறைச்சிக்காக விற்பனை செய்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இச் செம்மறிகள் வளர்க்கப்படுகின்றன. 1989ம் ஆண்டில் வலி - வடக்கில் 3 - 5 வரையிலான செம்மறிப்பட்டிகள் காணப்பட்டன. ஒவ்வொன்றிலும் 35 - 60 வரையிலான செம்மறிகள் காணப்பட்டன. தற்போதும் அளவெட்டிப் பகுதியில் செம்மறிகள் வளர்க்கப்படுகின்றன. செம்மறி வளர்ப்பு வருமானம் தரக்கூடிய ஒரு தொழிலாக விளங்குகின்றன. செம்மறி வளர்ப்பு வருமானம் தரக்கூடிய ஒரு தொழிலாக விளங்குவதனால் விவசாயத்திலீடு படுவோர். இதனையும் வளர்த்து பயன்பெறமுடியும், இவ்வளர்ப்பிற்கேற்ற பிரதேசமாகவும் இது விளங்குகின்றது.

## கோழி வளர்ப்பு

வலி - வடக்குப் பிரதேசத்தில் பண்ணைக் கோழி வளர்ப்பு மிகவும் பிரபல்யமடைந்திருந்தது. 1985ம் ஆண்டு வரை இப்பகுதியில் 100 தொடக்கம் 500 வரையான முட்டைக் கோழிகளைக் கொண்ட பண்ணைகள் 60 தொடக்கம் 70 வரை இருந்தன. 1989ம் ஆண்டில் 100க்கு மேற்பட்ட கோழிகளைக் கொண்ட பண்ணைகளின் எண்ணிக்கை 40 தொடக்கம் 50 குறைவடைந்தது. 1995ம் ஆண்டில் இடம்பெற்ற வலிகாமம் மக்கள் இடம் பெயர்வோடு பண்ணை வளர்ப்பு முற்றாக கைவிடப்பட்டது. தற்போது ஒரு சிலரே பண்ணை முறையில் சிறிய எண்ணிக்கையில் முட்டைக் கோழிவளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## கால்நடை வளர்ப்பினை மேம்படுத்துவதற்காக செயற்பட்டு வரும் நிறுவனங்களும் அமைப்புகளும்

1. கால்நடை வைத்திய அலுவலகம் :

1985ம் ஆண்டு வரை வலி - வடக்குப் பிரதேசம் யாழ்ப்பாண கால்நடை வைத்தியப் பிரிவுக்குட்பட்டதாக இருந்தது. 1986ம் ஆண்டில் தெல்லிப்பளையில் கால்நடை வைத்திய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது.

அங்கே கால்நடைகளுக்கு செயற்கை முறைச் சினைப்படுத்தல் செய்வதன் மூலம் தரமான கலப்பினங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இச்செயல்பாடு இவ்வலுவலகம் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதுடன், நோய்த்தடுப்பு நடவடிக்கைகள், நல்லின ஒரு நாட்கோழிக்குஞ்சு விநியோகம், பசுந்தீவன அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பிற்கான விசாலிப்புச் சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கால்நடை வளர்ப்பை

**2. பிரமாண அடிப்படை மூலதன ஒதுக்கீடு ~ 1997 பால் சேகரிப்பு நிலையம் நிறுவுதலும் உபகரணங்கள் கொள்வனவு செய்தலும்.**

இத்திட்டத்தின் கீழ் பால் சேகரிப்பதற்கான உபகரணங்கள், வெண்ணெய் பிரிகருவி ஆகியவை கொள்வனவுசெய்யப்பட்டன. இதற்காக ரூ 50,00/= ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிலையம் வலி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தினால் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகின்றது.

**3. பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு~ 1997 இயற்கை இன விருத்திக் கான ஆட்டுக்கடா நிலையங்கள் அமைத்தல்**

இத்திட்டத்திற்கமைய அளவெட்டி கிராமிய கால்நடை அபிவிருத்தி நிலையம், மல்லாகம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களில் இரு கடா நிலையங்கள் நிறுவப்பட்டு 6 நல்லின கடா ஆடுகளும் கொள்வனவு செய்யப்பட்டன. இதற்கு 50,000/= ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் இப்பகுதியில் சிறந்த கலப்பின ஆட்டுக்குட்டிகள் தோன்றியுள்ளன.

அன்றிலிருந்து 2000ம் ஆண்டு புரட்டாதி மாதம் வரையுள்ள காலப்பகுதியில் 571 ஆடுகளுக்கு இயற்கை இனவிருத்தி மேற் கொள்ளப்பட்டுள்ளது

**4. பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு ~ 1998 பாற்பொருட்கள் உற்பத்தியும் சேமிப்பும்**

இத்திட்டத்தின் கீழ் பாலிலிருந்து யோகட், சுவையூட்டப்பட்ட பால், ஐஸ்கிறீம், சர்பத் என்பவற்றை உற்பத்தி செய்வதற்காக இரு குளிர்சாதனப் பெட்டிகள் (Deep Freezer) கொள்வனவு செய்யப்பட்டன. இதற்காக ரூ 70,00/= ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டது.

இதற்கமைய தனியான பால்சேகரிப்பு, பால்பொருட்கள் உற்பத்தி நிலையம் வலி - வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கததினால் மல்லாகப் பகுதியில் அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

1999 ஆம் ஆண்டிலிருந்து 2000ம் ஆண்டு புரட்டாதி மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட பால் சேகரிப்பும், தயாரிக்கப்பட்ட பாற்பொருட்கள் விற்பனையும் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தப் பால் 8099(லீட்டர்)

| | | | |
|---|---|---|---|
| (1) | விற்பனை செய்யப்பட்டபால் | 6741 | லீற்றர் |
| (2) | தயிர் உற்பத்தி | 437 | லீற்றர் |
| (3) | சுவையூட்டிய பால் (யூஸ்) | 509 | லீற்றர் |
| (4) | பால் சர்பத் | $25^1/_2$ | லீற்றர் |
| (5) | ஐஸ்கிறீம் | 16 | லீற்றர் |
| (6) | நெய் உற்பத்தி | $142^1/_2$ | லீற்றர் |

**5 பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு~1998 நல்லினக் கடா நிலையம் அமைத்தல்**

இத்திட்டத்திற்கு 50,000/= ஒதுக்கப்பட்டு கடாக்கள் கொள்வனவு செய்யப்பட்டு, வலி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சேவைக்கு விடப்பட்டு வருகிறது.

**6 பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு ~ 1998**

கால்நடைத் தீவனம் அரைக்கும் இயந் திரம் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு 1,00,000/= ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் 1999ம் ஆண்டிலிருந்து 2000ம் ஆண்டு புரட்டாதி வரை உற்பத்தி செய்யப்பட்ட தீவணம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | கறவைத் தீவனம் | 17,383 | கி.கி |
| 2. | கோழித் தீவனம் | 8902 | கி.கி |
| 3. | எலும்புஅரைத்தது(எலும்புத்தூள்) | 5429 | கி.கி |

**7 பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு ~2000**

இதன் கீழ்மின் பிறப்பாக்கியும் மின் இணைப்பு வயர்களும் கொள்வனவு செய்யப்பட்டன. இதற்கு 70,000/= ஒதுக்கீடு செய்யப் பட்டது. மின்சாரம் இடைநிறுத்தப்படும் போது மின் பிறப்பாக்கி உபயோகிக்கப்படுகிறது.

**1997 ஆம் ஆண்டு தொடக்கம் வலி வடக்குப் பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்**

1. 1997 வலி வடக்குப் பிரதேசத்தின் அளவெட்டிப் பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களில் இருவரைத் தெரிவு செய்து UNHCR நிறுவனத்தின் உதவியுடன் இரண்டுமாதம் கால்நடைப் பராமரிப்பு சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

2. இப்பயிற்சிகள் முடிவடைந்த பின்னர் அளவெட்டிப் பகுதியில் கிராமிய கால்நடை

அபிவிருத்தி நிலையத்தை 1997 ஆனி மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, இக்கிராமிய கால்நடை அபிவிருத்தி உதவியாளர்களுக்கு UNHCR நிறுவனத்தினால் முதலுதவி சிகிச்சைக்குரிய உபகரணங்களும் வழங்கப்பட்டன. அதனால் அப் பகுதி மக்களின் கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பு அவர்களினால் செய்யப்பட்டு வந்தது.

ஊக்குவிப்பதற்காகவும், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தவும் 1987 இல் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமாக இவ்அலுவலகத்தை ஏற்படுத்தியது.

## II வலி வடக்கு பிரதேச செயலகம் :

வலி வடக்கு பிரதேசத்தில் கால் நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதி உதவி காலத்திற்குக் காலம் வலி - வடக்கு பிரதேச செயலகம் மூலம் வழங்கப்பட்டு வந்துள்ளன. 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வலிகாமம் பகுதி மக்கள் இடப்பெயர்வின் பின்னர், 1996ம் ஆண்டில் மீண்டும் மக்கள் மீளக்குடியமர்ந்தனர். அன்று முதல் இப்பகுதியில் கால்நடை வளர்ப்பை சகல விதத்திலும் அபிவிருத்தியடையச் செய்வதற்காக தொடர்ந்தும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு நிதி ஒதுக்கீடுகளை முன்னுரிமை அடிப்படையில் வழங்கி வருவதன் மூலம் கால்நடை வளர்ப்பு மேன்மையடைய இப்பிரதேச செயலகம் முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது.

### 1996ம் ஆண்டு முதல் வலி வடக்கு பிரதேச செயலக நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

**1. பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டின் கீழ் 1996 இல் நல்லின ஒருநாட் கோழிக் குஞ்சுகள் விநியோகம்.**

இப்பிரதேசத்தில் நல்லின கோழி வளர்ப்பை மீண்டும் மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கான நல்லின ஒரு நாள் வயதான 25 பேட்டுகுஞ்சுகள் வீதம் 100 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டன நிறுவனத்தினால் கிராமிய கால்நடை அபிவிருத்தி பல கிராம அலுவலகர் பிரிவைச் சேர்ந்தவர்கள் இதன் மூலம் பயன் பெற்றனர். இதற்காக ரூ 75,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3. 1997 இல் UNHCR உதவியாளருக்கு நல்லின ஒரு நாள் குஞ்சு 200 விநியோகிக்கப்பட்டு, ஒரு மாதம் வரை வளர்த்து விற்பதற்குத் தேவையான நீர்ப்பாத்திரம், குஞ்சுவதி, இலாம்பு, தீவன பாத்திரம் போன்றவையும் முதலுதவி மருந்து வகைகளும் வழங்கப்பட்டன. இதனாற் கிடைக்கும் இலாபத்தில் மேலும் மேலும் திணைக்களத்திடமிருந்து ஒருநாட் குஞ்சுகளை வாங்கி வளர்த்து அப்பகுதி மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

4. UNDP நிறுவனத்தினால் 1998 இல் சூரியக் கதிரினால் இயங்கும் குளிர்சாதனப் பெட்டி தெல்லிப்பளை கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. இது தொடர்ந்து இயங்கக் கூடியதாகையால் கால்நடைகளின் நோய்தடுப்பு மருந்துகள், செய்கை முறைச் சினைப்படுத்தலுக்குப் பாவிக்கப்படும் சுக்கிலம் போன்றவை பாதுகாக்கப்படக் கூடியதாக உள்ளது.

5. UNDP நிறுவனத்தினால் 1998ல் வலி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தி னூடாக நன்கு பராமரிக்கக்கூடிய அங்கத்தவர்களைத் தெரிந்து, அவர்களுக்கு இது இயக்குவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு 60 முட்டைகள், 180 முட்டைகள் பொரிக்கக் கூடிய அடைப்பொறிகள் வழங்கப்பட்டன.

.

அதனால் நல்லினக் கோழிகளின் முட்டைகளைத் தெரிந்து அடைப்பொறியில் வைத்து நல்லினக் குஞ்சுகளைப் பெறக் கூடியதாக இருக்கிறது. கோழியில் அடைவைத்தோ அல்லது திணைக்களத்திட மிருந்து ஒருநாட் குஞ்சுகளை வாங்கி வளர்க்க முடியாதவர்கள் இவர்களிடம் வாங்கி வளர்க்கலாம்

6. 1999ம் ஆண்டு கெயர் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலி வடக்கு பிரதேச கால்நடைவளர்ப்பாளர்களுக்கு ஆடு மாடு, கோழி வளர்ப்பு, நோய்கள், நோய்த்தடுப்புகள் போன்ற விடயங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

# வலிவடக்கின் அரசகாணிகளும் குடியேற்றங்களும்

சி. சிவசுப்பிரமணியம்
குடியேற்ற உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
தெல்லிப்பளை.

"காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும்"

என்ற பாரதியாரின் பாடலில் அவர் அன்னை பராசக்தியிடம் தனக்கு ஒரு துண்டு காணி தரும்படி வேண்டிப் பாடியுள்ளார். இதன் பிரகாரம் உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு வருக்கும் ஒரு துண்டு காணி அத்தியாவசியம் என்பது வெள்ளிடைமலை. ஆனால் இவ் ஆசை அளவோடு நிற்காவிட்டால், இதனால் ஏற்படும் அழிவோ அளப்பரியது. மண் ஆசையால் உலகில் அழிந்த நாடுகளையும், அரசர்களையும் இதிகாசங்களும் சரித்திரங்களும் வெளிப் படுத்தியுள்ளன. இதே போல் தற்போதைய 20ம், 21ம் நூற்றாண்டின் உலகில் நடக்கின்ற போருக்கும் நமது நாட்டில் நடைபெறுகின்ற போருக்கும் மூல காரணம் மண் ஆகும்.

எமது ஆய்வுகளின் பிரகாரம் பன் நெடுங்காலமாக தமிழ் பூர்விக குடிகளைக் கொண்டுள்ள இப்பிரதேசம் தமிழ் பரம்பரையினர் ஆண்டு வந்தனர் எனவும், அதன் பின் போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆண்டு வந்ததாகவும், ஆங்கிலேயர் ஆண்ட காலத்திலே 1935ம் ஆண்டில் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டு இங்கு இருந்த அரச காணிகளை காணியற்ற விவசாய குடும்பங்களுக்கு பங்கீடுசெய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் 1952ம் ஆண்டில் எமது பிரதேசத்தில் (L.R.Oசட்டப்படி) காணி மீட்பு சட்டப்படி 1 ஏக்கர் 1 றூட் 31பேச் காணி வழங்கப்பட்டது. எமது வலி வடக்கு பிரதேச செயலக பிரிவு 6110 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. வலி வடக்கு பிரதேச செயலக பிரிவு நெய்தல், குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை என்று சொல்லப்படுகின்ற ஐவகை நிலங்களையும் கொண்டது. விவசாயம் செய்வதற்கேற்ற செம்மண்ணும் இப்பிரதேசத்தில் பரந்து கிடக்கின்றது. இங்குள்ள அரச காணிகளை இனங் கண்டு அவற்றின் தன்மைக்கு ஏற்ப நிலஅளவை செய்து அவற்றை சிறிய காணித் துண்டுகளாகப் பிரித்து

காணி யற்ற மக்களுக்கு காணிக்கச்சேரி மூலம்

காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. இதே போல் அரச காணி சட்டத்தின் கீழ் நீண்டகால குத்தகை, குறுகிய கால குத்தகை மூலம், காணி சுவீகரிப்பு திட்டத்தின் கீழ் சீமெந்து தொழிற்சாலை விமான நிலையம் ஆகியவற்றிற்கும் காணி வழங்கப் பட்டது. அத்துடன் வீடு அற்ற மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு தேசியவீடமைப்பு அதிகார சபைக்கும்காணிகள் பராதீனப்பட்டன.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் கடற்கரை அண்டிய மீன்பிடி தொழிற்சாலை அபிவிருத்தி செய்வதற்கு மீனவ குடியேற்றங்களும், சிவந்தமண் பிரதேசத்தை விவசாய வளங்கொழிக்கும் பிரதேசமாக மாற்ற விவசாய குடியேற்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதன் பிரகாரம் 1959 ஆண்டில் தெல்லிப்பழை வட மேற்கு கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒவ்வொருவருக்கும் 1றூட் 1பேச் வீதம் 50 பேருக்கு வீடுகட்டியிருக்கவும், விவசாயம் செய்யவும் காணி வழங்கப்பட்டது. வீமன்காமம் கிராம விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் 1965ம் ஆண்டில் ஒவ்வொருவருக்கும் சராசரி 29 பேச் வீதம் 96 பேருக்கும், மல்லாகம் கிராம விஸ்தரிப்பு திட்டத்தின் மூலம் ஒவ்வொருக்கும் சராசரி 22 பேச் வீதம் 18 பேருக்கும், பலாலி மீனவ குடியேற்ற திட்டம் பகுதிIIல் 2 பேச் வீதம் 40 பேருக்கும், பலாலி மீனவ குடியேற்றம் பகுதி Iல் 15 பேச் வீதம் 26 பேருக்கும், 0. 30 கெக்டர் வீதம் 40 பேருக்கும், தெல்லிப்பளை தென்மேற்கு கிராம அபிவிருத்தி திட்டத்தின்கீழ் சராசரி 32 பேச் வீதம் கீரிமலையில் 85 பேருக்கும், மயிலிட்டி கடற்கரையில் 1962 ல் ஒவ்வொரு வருக்கும் 12 பேச் வீதம் 25 குடும்பங்களுக்கும். காணிகள் வழங்கப்பட்டன

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் மொத்தமாக 343 பேருக்கு காணி வழங்கப்பட்டு உள்ளது. இதன் விஸ்திரணம் 57 ஏக்கர் 0 றூட், 32 பேச். இங்கு காணி வழங்கப்பட்ட வர்களுக்கு முதலில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டது. அதன் பின் அக்காணிகள் நில அளவைத்திணைக்கத்தால் அளந்து எல்லை போடப்பட்ட காணிகளில் 194 காணிகளுக்கு சொர்ணபூமி அளிப்புக்கள் தயாரிக்கப்பட்டு மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஜனாதி பதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட சொர்ணபூமி அளிப்புக்களில் ஒரு பகுதி ஜனாதிபதி அவர்களால் கையொப்பம் இடப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இவற்றில் 123 அளிப்புக்கள் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட அளிப்புக்களில் 89 அளிப்புக்கள் காணிச் சொந்தக்காரருக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன. என்பன இங்கு கடமையாற்றிய வெளிக்கள போதனாசிரியர், குடியேற்ற உத்தி யோகத்தர் அறிக்கை மூலம் அறியக்கிடக் கின்றது. மிகுதியாக இருந்த அளிப்புக்களில் சிலவும் காணிப் பேரேடுகளும் 1995ம் ஆண்டு வலிகாமம் மக்களும் காரியாலயங்களும் இடம்பெயர்ந்தபோது ஏற்பட்ட இயற்கை அழிவுகளாலும், அனர்த்தங்களாலும் இராணுவ நடவடிக்கைகளினாலும் சேதமடைந்துவிட்டன. மிகுதியான 78 அளிப்புக்கள் சேதமடைந்த நிலையில் காரியாலயத்தில் இருக்கின்றது.

வலிவடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள குடியேற்றங்களில் இருந்த மக்களின் காணிப் பேரெடுகளும், காணி சேவைகளும் சேதமுற்று அழிந்தமை வலிகாமம் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு ஆகும். அத்துடன் 1987ல் "ஒபரேசன் லிபரேசன்" நடவடிக்கையாலும், 1995 மே மாதத்தில் ஏற்பட்ட "முன்னேறிப்பாய்தல்" நடவடிக்கையாலும் 1995 ஐப்பசி மாத கடைசியில் நடைபெற்ற "சூரியபிரகாச" நடவடிக்கையாலும் இடம்பெயர்ந்து அலைந்து திரிந்து, வீடிழந்து மனநிம்மதியற்று, பொருளாதார நிலை அழிந்து, உடல்தளர்ந்த நிலையிலும் தம் மண்மீது கொண்ட பற்றுதலால் 1996ல் மீண்டும் மீள்குடியேற்றம் என்ற பேரில் குடியேறி முன்னைய நிலையை அடைவதற்கு முயற்சிக்கின்றார்கள். அவர்கள் தம் மண்ணில் நிம்மதியாக வாழ இறைவன் காப்பாற்ற வேண்டும்.

## வலி வடக்கு பிரதேசசெயலக பிரிவில் வழங்க்கபட்ட அரச காணி விபரம்

| குடியேற்றதிட்டங்களின் பெயர் | மொத்தக்காணித் துண்டுகள் | ஏ றூ பே | வழங்கப்பட்ட வெற்றுக்காணிகள் | வெற்றுக்காணி | இரத்துச் செய்யப் பட்ட காணிகள் | உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்ட காணிகள் | உத்தரவு பத்திரம் வழங்கப்படாதகாணிகள் | அளிப்புதயாரிக்கப்பட்ட காணிகள் | அளிப்பு தயாரிக்க வேண்டியகாணிகள் | பதிவு செய்த அளிப்புத் தொகை | பதிவு செய்யாத அளிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வீமன்காமம் கிராம அபிவிருத்தித்திட்டம் | 96 | 15–0 –30.1 | 67 | | 29 | - | 67 | 47 | 20 | 20 | 40 |
| 2. தெல்லிப்பளை வட மேற்கு கிராம அபிவிருத்தித் திட்டம் | 50 | 15–1– 30.6 | 49 | 1 | - | 49 | - | - | 49 | 50 | - |
| 3. மயிலிட்டி கடற்கரை | 25 | 1 –3- 20.2 | 25 | | - | 25 | - | 22 | 03 | 03 | 19 |
| 4. பலாலி மீனவத் குடியேற்றத் திட்டம் பகுதி I | 66 | 2 – 1- 24.4 | 66 | | | 26 | 40 | 60 | 06 | 05 | 19 |
| 5. தெல்லிப்பளை தென்மேற்கு கி.அ.திட்டம் கீரிமலை | 85 | 16 – 1 –37 | 79 | 1 | 05 | 63 | 16 | 52 | 27 | 28 | 45 |
| 6. மல்லாகம் கி. வி. திட்டம் | 18 | 2 – 2- 31 | 17 | | 01 | 1 6 | 01 | 13 | 04 | 05 | - |
| 7. பலாலி மீனவர் குடியேற்றத் திட்டம் பகுதி II | 40 | 3 – 0 –20 | 40 | | - | - | 40 | - | 40 | 40 | - |
| | 380 | 57–0–33.4 | 343 | 2 | 35 | 196 | 164 | 194 | 149 | 151 | 123 |

# வலிகாமம் வடக்கு பிரதேச கடல்வலயம்

*து. விக்னேஸ்வரன்*
கடற்தொழில்பரிசோதகர்

**இடப்பரப்பும் குடிசனத்தொகையும்**

இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்டு இருப்பதாலும் மீன்பிடித்துறை க்கேற்ற பல குடாக்கள், காணப்படுவதாலும் இது கடல்வளம் மிக்க ஒரு நாடாக கருதப்படுகிறது. இலங்கையின் வடக்குப் பகுதியில் ஒன்றான வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் வடக்குக் கரையோரமாக பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் இளவாலை மேற்கு எல்லையாகவும், பலாலியை கிழக்கு எல்லையாகவும் கொண்ட 15கி.மீ நீளமான கடற்கரையை கொண்ட இப்பிரதேசமானது இளவாலை, சேந்தாங்குளம், வலித்தூண்டல் காங்சன்துறை, ஊரணி, மயிலிட்டி, பலாலி ஆகிய கடற்கரையோரக் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. இக்கரையோரப்பகுதி வாழ் மக்களின் பிரதான தொழில் மீன்பிடித் தொழிலாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வட இலங்கையில் உள்ள பெரிய மீன்பிடித்துறைமுகங்களில் ஒன்றான மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் இப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. சுமார் 20 வருட காலத்திற்கு முன்பு நிர்மானிகப்பட்ட இத்துறைக் முகத்தில் 500 ற்கும் மேற்பட்ட மீன்பிடிப்படகுகள் நங்கூரமிடக்கூடியாதாக இருக்கின்றது. 1990 ம் ஆண்டு இடப்பெயர்விற்கு முன்பு இக்கரையோரக் கிராமங்களில் 1470 கடற்றொழிலாளர் குடும்பங் களைச் சேர்ந்த 6250 குடிமக்கள் வசித்து வந்தனர். இவர்களில் 1850 பேர் முழுநேரக் கடற்றொழிலில் ஈடுபட்டுவந்தனர். காங்கேசன் துறை துறைமுகமாக, இறங்குதுறையாக அன்றும், இன்றும் இருந்துவருகிறது. கொழும்பி லிருந்து கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு வரும் உணவுப்பொருட்கள் இங்கேயே இறக்கப்பட்டு கினறன. கப்பற்பயணிகளும் இங்கேயே கப்பலில் ஏறியும் இறங்கியும் வருகின்றனர்.

**1990ம் ஆண்டு இடப்பெயர்விற்கு முன்னிருந்த குடித்தொகை விபரம்**

| கிராமம் | குடும்பத்தொகை | குடிசனத்தொகை | கடற்றொழில் ஈடுப்டோர் தொகை |
|---|---|---|---|
| பலாலி | 436 | 1915 | 540 |
| மயிலிட்டி | 698 | 2938 | 865 |
| ஊரணி | 97 | 358 | 130 |
| காங்கேசன்துறை | 101 | 414 | 120 |
| வலித்தூண்டல் | 50 | 218 | 70 |
| சேந்தாங்குளம் | 48 | 237 | 65 |
| இளவாலை | 40 | 170 | 60 |
| | 1470 | 6250 | 1850 |

மேற்குறிப்பிட்ட 1470 குடும்பங்களும் இதுவரை மீளக்குடியமர்த்தப்படவில்லை. இக்குடும் பங்களுள் 540 குடும்பங்கள் தற்போது வடமராட்சிப் பிரதேசத்திலும் மிகுதிக் குடும்பங்கள் வன்னிப் பிரதேசத்திலும் இடம் பெயர்ந்து வசித்து வருகின்றனர். இப்பிரதேசத் தில் கிராம மட்டத்திலான 7 கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் செயற்பட்டு வந்தன. சங்கரீதியாக அங்கத்தவர் விபரம் பின்வருமாறு.

| கிராமம் | மொத்த அங்கத்தவர் தொகை | தற்போது யாழ் மாவட்டத்தில் வசிக்கும் அங்கத்தவர் தொகை |
|---|---|---|
| பலாலி | 300 | 232 |
| மயிலிட்டி | 470 | 185 |
| ஊரணி | 70 | — |
| காங்கேசன்துறை | 131 | 57 |
| வலித்தூண்டல் | 75 | 35 |
| சேந்தாங்குளம் | 75 | 35 |
| சீந்திப்பந்தல் | 34 | — |
| | 1123 | 580 |

**கடல் வளம்**

வலிகாமம் வடக்கு கரையோரப்பிரதேசம் மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கரையை அண்டிய பகுதியில் சூடை, நண்டு, சிங்கிஇறால், போன்றவையும் சற்று தூரத்தே சீலா,வாளை, கும்பிளா, திருக்கை போன்றன மீன் இனங்களும் தூரக்கடற் பகுதியில் அறக்குளா, சுறா,பாரை போன்றவையும் காணப்படுகின்றன. ஏற்றுமதி செய்யக்கூடிய கைத்தொழில் முக்கியத்துவம் வாய்ந்த சில பாசி வகைகளும் குறிப்பிட்ட பருவகாலங்களில் அதிகமாக காணப்படுகின்றன. மேலும், பதனிடப்பட்டு ஏற்றுமதி செய்யக்கூடிய நண்டு, சுறாச்செட்டை, சிறிய சங்குவகைகள் போன்ற கடல் உற்பத்திப் பொருட்களும் இப்பிரதேசத்தை அண்டிய கடலில் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

1983 – 1990ம் ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காங்களில் இப்பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு கடன் உதவிகளோ மானிய உதவிகளோ எதுவும் கிடைக்காததால் இப்பகுதியை அண்டிய கடலில் உள்ள வளங்கள் முழுமையாக பெறப்படவில்லை.

**மீன்பிடி முறையும் மீன்பிடிக்கலங்களின் வகையும்**

பண்டைக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த கடற்றொழிலாளர்கள் கட்டுமரங்களில பாய் போட்டும், தண்டு வலித்தும், தூண்டில்களின் உதவியுடனும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்தனர். பின்னர் நவீனமீன்பிடிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதும், இழுவை வலை,திருக்கை வலை, முப்புரிவலை, சூடை வலை, அறக்கொட்டிவலை, தூண்டல்வலை போன்றவைகளையும், வெளியிணை இயந்திரம் பூட்டப்பட்ட 17 ½ அடி நீளமுள்ள தும்புக்கண்ணாடியிலான படகுகளையும், உள்ளிணை இயந்திரம் பூட்டப்பட் 28 – 32 நீளமுள்ள 3 ½ தொன் படகுகளையும் இழுவைப் படகுகளையும் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுத்தத் தொடங்கினர். நவீன மீன்பிடி வசதி அறிமுகப் படுத்தப்பட்டதும் இத்துறையில் ஏற்பட்ட அதிக மீன் உற்பத்தியாலும் அரசாங்க மானிய உதவிகளாலும் பல அபிவிருத்திகள் ஏற்படத் தொடங்கின. இதனால் மீன்பிடித்தொழிலுக்கு உதவும் சேவைகளான சந்தைப்படுத்தல், குளிரூட்டல், பதப்படுத்தல், தொழிநுட்ப உதவிகள், நவீன மீன்பிடி பற்றிய பயிற்சிகள், ஆலோசனைகள், திணைக்கள உதவிகள் என்பன ஏற்படுத்தப்பட கடற்றொழில் வளமும் வளர்ச்சியும் பெற்று பெரும் அபிவிருத்தியடைந்து வந்தது. பல வழிகளிலும் முன்னேற்ற மடைந்து வந்த இக்கடற்றொழிலாளர்கள் கடந்த பத்து வருடங்களாக ஆழ்கடற்தொழிலும், கரையோரத் தொழிலும், இன்றி இடம்பெயர்ந்து தொழிலற்று வாழ்கின்றனர். பல வசதிகளுடன் சிறப்பாக வாழ்ந்த இப்பிரதேச கடற்றொழிலாள குடும்பங்கள் தங்கள் தொழில் உபகரணங்களையும், வீடு வாசல்களையும் முற்றாக இழந்து இருப்பிட வசதியின்றி உதவியற்ற தன்மை என்ற நிலையில் அரசாங்க நிவாரணத்தை நம்பிவாழ்கின்ற ஆண்டிற்கு முன் இப்பிரதேச கடற்றொழிளர் களிடமிருந்த மீன்பிடிக்கலங்கள் பின்வருமாறு. நிலையை காணக்கூடியதாக இருக்கின்றது. 1990 ஆண்டிற்கு முன் இப்பிரதேச கடற்றொழிளர்களிடமிருந்த மீன்பிடிக்கலங்கள் பின்வருமாறு.

| கிராமம் | இழுவைப்படகு | 3 ½ தொன் படகு | 17½ அடி தும்பிக் கண்ணாடிப் படகு | கட்டுமரம் |
|---|---|---|---|---|
| பலாலி | — | — | 125 | 50 |
| மயிலிட்டி | 05 | 31 | 300 | 100 |
| ஊரணி | — | — | 20 | 25 |
| காங்கேசன்துறை | — | — | 06 | 40 |
| வலித்தூண்டல் | — | — | 12 | 25 |
| சேந்தாங்குளம் | — | — | 11 | 45 |
| இளவாலை | — | — | 08 | 30 |
| | 05 | 31 | 482 | 315 |

மேலும் இப்பிரதேசத்தில் பனிக்கட்டிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மூன்றும், உப்பு அரைக்கும் ஆலைகள் எட்டும், வெளியிணை இயந்திரம் திருத்தும் தொழிற்சாலைகள் நான்கும் செயற்பட்டு வந்தன.

### மீன் உற்பத்தியும் விற்பனையும்

1990ம் ஆண்டு இடப்பெயர்விற்கு முன்பு மாதாந்தம் சராசரி 280 தொன் மீன் இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாளாந்தம், பதினைந்திற்கு மேற்பட்ட லொறிகள் மூலம் கொழும்பிற்கு அனுப்பட்டு வந்தன. தனிப்பட்ட முறையில், தனியார் வர்த்தகர்களும் இம் மீனவர்களின் மீன், கருவாடு மற்றும் கடல் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் முகவர்களாக செயற்பட்டு வந்தனர். 1985ம் ஆண்டிற்கு முன்பு மீன் கொள்வனவில் கடற்றொழில் கூட்டுத்தாபனமும், இப்பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழில் முதலாளிமார்களிடம் இங்கு பிடிப்டும் மீனை கொழும்பிற்கு அனுப்புவதற்கு பதினைந்திற்கு மேற்பட்ட லொறிகளும் சிறிய வான்களும் இருந்தன.

சீநோர், கடற்றொழில் கூட்டுறவுச்சங்கள் என்பனவும் உதவிபுரிந்து வந்தன.

### அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள்:

இடம்பெயர்ந்து வடமராட்சிப்பகுதியில் வசிக்கும் வலிவடக்குப் பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களினூடாக கடனுதவி வழங்கியுள்ளன. இதுவரை உதவிபெற்ற கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்களின் விபரம் பின்வருமாறு

| கூட்டுறவுச் சங்கம் | கடன் வழங்கிய நிறுவனம் | கடன் தொகை |
|---|---|---|
| பலாலி | யூ.என்.எச்.சி.ஆர். | 500,000/= |
| | கியூடெக் | 100,000/= |
| | யூ. என்.டி.பி | 40,000/= |
| மயிலிட்டி | யூ.என.எச.சி.ஆர் | 500,000/= |
| | கியூடெக் | 100,000/= |
| | யூ.என்.டி.பி | 40,000/= |
| காங்கேசன்துறை | கெயர் 100,000/= | |
| வலித்தூண்டல் | | |
| சேந்தாங்குளம் | கியூடெக் | 75,000/= |

### கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூக பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

இடம்பெயர்ந்த நிலையிலும் மேற்படி திட்டத்தில் இதுவரை 129 கடற்றொழிலாளர்கள் இணைந்துள்ளனர். இவர்களுள் ‍ɔ6 பேர் முழுமையாக பணத்தை செலுத்தி ஓய்வூதிய கழிவுத்திட்டத்திலும். 93 பேர்

தவணை முறையிலும் பணத்தை செலுத்தும் திட்டத்திலும் இணைந்துள்ளனர்.

இப்பிரதேச கடற்றொழிலாளர் குடும்பங்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டு அவர்களிற்குக் கடற்றொழில் செய்வதற்கேற்ற சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களது வாழ்க்கைத்தரம் முன்னேற்றம் காணப்படுவதுடன் மேலும் பல நூற்றுக்கணக்கான கடற்றொழி லாளர்கள் இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு ஆர்வம் கொள்வார்கள்.

## சிந்தனைத்துளிகள்

1. அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
2. இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
3. பணிவாய் இரு. ஆனால் கோழையாய் இராதே
4. கண்டிப்பாய் இரு ஆனால் கோபப் படாதே
5. சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே
6. சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதற்றப்படாதே
7. வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே
8. தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே
9. பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே
10. உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறவாதே

---

## ஒன்றேதான்

கிழக்கில் ஒளிர்ந்தவன் சிவன் என்றார்
மேற்கில் மலர்ந்தவன் யேசு என்றார்
உளத்தில் பலப்பல பெயர் சொன்னார்
எங்கும் நிறைந்தவன் ஒருவன் தான்

கிழ்க்கில் வாழ்ந்தவர் கறுக்கின்றார்
மேற்கிற் பிறந்தவர் வெளுக்கின்றார்
இன்னும் பலப்பல நிறங்கொண்டார்
எங்கும் வாழ்பவர் மனிதர்தான்

வெளுத்தவர் கறுத்தவர் இழப்பென்றார்
கறுத்தவர் தமக்குளே பிரிக்கின்றார்
ஜாதிகள் பலப்பல குறிக்கின்றார்
ஆயினும் வளர்வது ஒருஇனந்தான்

எங்கும் நிறைந்த தொரு தெய்வந்தான்
பொங்கி வழிவ தொரு மதமேதான்
இங்கு வளர்வ தொரு குலமேதான்
நன்கு உணர வேண்டும் இதையேதான்

*"திலக்"*

# தொழில் வளம்

**எஸ். சச்சிதானந்தம்**
கிராம உத்தியோகத்தர்

யாழ்குடாநாட்டில் உள்ள பிரதேசங்கள் அனைத்தும் ஒரு சில வளங்களை தம்மகத்திற் கொண்டு சிறப்புப் பெறுகின்றன. அந்தவகையில் வலிவடக்குப் பிரதேச செயலகப் பிரதேசங்கள் ஒரு தனிநாட்டிற்குத் தேவையான சகல வளங்களையும் கொண்டு பெருமைக்குரிய பிரதேசமாக அமைந்து சிறப்புப் பெறுகின்றன.

வலிவடக்கு பிரதேசத்தின் வளங்களின் வலுவினைப் பின்வருமாறு ஒப்புநோக்கலாம். கடல்வளம், துறைமுகம், மீன்பிடித்தளங்கள், மண்வளம் (விவசாய மண்), இலங்கையிலுள்ள பெரிய சீமெந்துத் தொழிற்சாலை, விமான நிலையம், புகையிரத நிலையம், யாழ்குடா நாட்டின் பெரிய குளமான பிணாக்கைக்குளம் உட்பட பல குளங்கள், யாழ்குடாநாட்டின் இரண்டாவது பெரிய வைத்தியசாலை உட்பட மனநோயாளர் வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை, காசநோயாளர் வைத்திய சாலை, வலிகாமம் முழுமைக்கான மாவட்டநீதிமன்றம், ஆரம்ப நீதி மன்றம் ஆகியவற்றையும், சரித்திரப் பிரசித்தி பெற்ற கீரிமலை நன்னீர்க் கேணி, நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், துர்க்காபுரம் போன்ற பல ஆலயங்களும், பிரபலபாடசாலைகளான யா/மகாஜனாக்கல்லூரி, யா/யூனியன் கல்லூரி, யா/வயாவிளான் மத்தியமகாவித்தியாலயம், யா/நடேஸ்வராக்கல்லூரி, போன்ற பாடசாலை களும் வங்கிகளும், கூட்டுறவுச் சங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு பெருமை சேர்க்கின்ற பிரதேசமாகும்.

எமது பிரதேசத் தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டால் இலங்கையில் முதலாவ தாக நிறுவப்பட்டது சீமெந்துத் தொழிற்சாலை யாகும். இத்தொழிற்சாலை 1948ம் ஆண்டு தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் Q.C கைத்தொழில் மந்திரியாக இருந்த போது நிறுவிய மூன்று தொழிற்சாலைகளில் ஒன்றாகும். இத்தொழிற்சாலையில் 1900 பேர் வரையான தொழிலாளர்கள் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் கூட பணியாற்றினார்கள். ஆனாலும் அவர்களில் 50 சதவீதமானவர்கள் வலிவடக்குப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இத்தொழிற்சாலையின் மூலம் வலிவடக்கின் பல பணியாளர்களின் குடும்பங்கள், நல்ல வாழ்க்கையை வாழ்ந்தற்கு மேலாக லொறி உரிமையாளார்கள், தேனீர்க்கடை உரிமையாளர்கள், வர்த்தகர்கள், தரகர்கள், கூலியாட்கள் எனப் பல்வேறுபட்ட தொழிலாளர்களும் தொழில் பெறக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. 1979ம் ஆண்டில் இத்தொழிற்சாலை விரிவுபடுத்தப்பட்டு மேலும் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்தது. 1984ம் ஆண்டில் இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஒரு பகுதியை இலங்கைச்சீமெந்து நிறுவனம் ஆக்கியதன் மூலம் இருநிர்வாகத்தின் கீழ் இருதொழிற்சாலைகள் பல ஆயிரம் தொழிலாளர்களுக்கு வாழ்வளத்தது. இத்தொழிற் சாலை இன்று இனப்பிரச்சினை காரணமாக ஏற்பட்ட போரினாலும் இடப்பெயர்வுகளினாலும் சீரழிந்து மக்கள் நடமாட்டமற்ற பகுதியாகக் காணப்படுகினறது. இங்கு வேலை செய்த பணியாளர்கள் தொழிலிழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அடுத்து, எமது பிரதேசத்தில் பெருமையுடன் விளங்கும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குத் தெற்கே அமைந்திருந்த வாளித் தொழிற்சாலையும் யாழ் குடாநாட்டில் உள்ள ஒரே ஒரு வாளித் தொழிற்சாலை என்ற பெயரைப் பெற்றது. இது கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பர் என்பவரின் தனிப்பட்ட தொழிற் சாலையாகும். இங்கும் நூற்றி ஐம்பது பேர் வரையான தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். இன்று இதுவும் மக்கள் குடியேற அனுமதிக்கப் படாத இராணுவப்பாதுகாப்பு வலயமாக உள்ளதால் செயலிழந்து தொழிலாளர்களை தவிக்கவிட்டுள்ளது.

அலுமினியம் தொழிற்சாலைகள் இரண்டு இயங்கி வந்தன. அவற்றுள்ள ஒன்று மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் மாவிட்டபுரம் முருகன் ஆலயத்தில் இருந்து. 100யார் தூரத்தில் அமைந்திருந்தது. இது சம்பந்தன் என்பவருடைய தனிப்பட்ட தொழிற்சாலை ஆகும். இங்கு 125 தொழிலாளர்கள் வரை பணிபுரிந்தனர். இத் தொழிற்சாலையில் இருந்து தென்னிலங்கைக்கு உற்பத்திப் பொருட்களான அலுமினியப்பானை, சட்டி போன்ற பொருட்கள் அனுப்பிவைக்கப் பட்டன. இத்தொழிற்சாலையும் இன்று செயலிழந்து கருகிவிட்டது.

இரண்டாவது அலுமினியத் தொழிற் சாலை 50 பேர் வரையிலான தொழிலாளர் களைக் கொண்ட தொழிற்சாலை. தெல்லிப்பளை - விளான் வீதியில் மகாஜனாக் கல்லூரிக்கு அண்மையில் அம்பனைச் சந்தியில் *அமைந்திருந்தது. இத்தொழிற்சாலை* சண்முகலிங்கம் என்பவருடைய தனிப்பிட்ட தொழிற்சாலை ஆகும். இத்தொழிற்சாலையில் இருந்தும் அலுமினியப் பொருட்கள் தென்னிலங் கைக்கு அனுப்பப்பட்டன.இத் தொழிற்சாலையும் இப்போது இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

கடல்வளத்தைச் சிறப்பாகக் கொண்டமைந்த எமது பிரதேசத்தில் மீன்பிடித் துறை மிகவும் பெரியதொரு கைத்தொழிலாக அமைந்திருந்தது மயிலிட்டித்தறைமுகம் இதற்குப் பெயர் பெற்றது. இப் பாரிய கைத்தொழிலின் மூலம் பெருமளவு மீன்கள் பிடிக்கப்பட்டு. ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வாறு பெருந் தொகையாகப் பிடிக்கப்படும் மீன்கள் பதனிடப் படுவதற்காக மயிலிட்டிப்பகுதியில் இரண்டு ஐஸ்கட்டி (பனிக்கட்டி) பதனிடம் தொழிற்சாலை அமைந்திருந்தது. இங்கு பெருமளவில் *பதனிடப்படும் மீன்கள் தென்னிலங்கைக்கு* அனுப்பிவைக்கப்பட்டன. இன்று இத்தொழிற்சாலைகளும் மூடப்பட்டு, மீன்பிடிக் கைத்தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

அடுத்து, தொழிற்சாலைகள் வரிசையில் தோலகட்டித் தொழிற்சாலையை எடுததுக் கொண்டால் இத்தொழிற்சாலை கத்தோலிக்கப் பாதிரிமார்களினால் நடாத்தப்பட்டு வந்தது. வயாவிளான் பகுதியில் அமைந்திருந்த இத்தொழிற்சாலை நூற்றுக்கணக்கான தொழிளார்களுக்குத் தொழில்வாய்ப்பு வழங்கி யது. இங்கு தரமான, சுவையான நெல்லிரசம், திராட்சைப்பழரசம், ஊறுகாய், ஜாம் போன்றன உற்பத்தி செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு கூட அனுப்பப்பட்டு வந்தன. இப்போது இத்தொழிற்சாலை யும் செயலிழந்து காணப்படுகின்றது.அடுத்து அளவெட்டி வடக்கு "வெள்ளியம்பதி" என்னும் பகுதியில் "விங்" (VINK)மை, அலுவலக உபகரணங்கள் என்பன உற்பத்தி செய்யப்பட்டு யாழ் குடாநாட்டு மட்டுமல்ல தென்னிலங்கை முழுவதற்கும் விநியோகிக்கப்பட்டன. இத்தொழிற்சாலை சி. சுந்தரமூர்த்தி என்பவருடையது. இங்கு 40 பேர் *வரையிலான பணியாளர்கள் பணியாற்றி* வந்தனா. இத்தொழிற்சாலையும் இடம்பெயர்வின் பின்செயலிழந்துவிட்டது.

"சன்பிராண்ட்" (Sun Brand) என்ற இனிப்பு ரொபித் தொழிற்சாலை அளவெட்டி வடக்கில் அமைந்திருந்த. 30 - 40 பேர் வரையிலான தொழிலாளர்களைக் கொண்ட இத்தொழிற் சாலை வடபகுதி முழுவதற்கும் தமது உற்பத்திப் பொருட்களை விநியோகித்து வந்தது. இடப்பெயர்வுடன் இத்தொழிற்சாலையும் செயலிழந்துவிட்டது.

இவ்வாறு சகலவளங்களையும் தொழிற் சாலைகளையும் தன்னகத்தே கொண்டு சிறப்புடன் மிளிர்ந்த எமது பிரதேசத்தில் இன்று 2500க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், தொழில் பாதிக்கப்பட்டும், பின்தள்ளப்பட்டும் எமது வளங்கள் அனைத்தும் கலைந்து, பொலிவிழந்து காணப்படுவதுடன், எமது பொருளாதாரமும் பாரிய வீழ்ச்சியடைந்து பரிதாபத்துக்குரிய நிலையிற் காணப்படுகின்றது.

## இனிக்கும் நினைவு

இனிக்கும் நினைவினிலே - நெஞ்சில்
உதிக்கும் கவிதைகளே
பனிக்கும் நிலவினிலே – எழில்
கொழிக்கும் முழுமதியே
நெஞ்சிலினிக்கும் கொஞ்சியணைக்கும்
மிஞ்சி வெறுக்கும் தஞ்சமளிக்கும் (இனிக்கும்)

கலக்கும் கனவினிலே - தினம்
மிதக்கும் புதுமைகளே
உவக்கும் மனதினிலே - நிதம்
மணக்கும் கலையமுதே
தினம்கலக்கும் மனம்நினைக்கும்
கலைவடிக்கும் சிலையெடுக்கும் (இனிக்கும்)

# காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை

ஆக்கம்:- **கி. மனோகரன்**
எரியூட்டுனர் (Burner)
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
காங்கேசன்துறை

இலங்கை அரசாங்கம் சீமெந்து உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஆறாம் (1946) ஆண்டு வெளிநாட்டிலிருந்து நிபுணர்களை வரவழைத்தது. அந்நிபுணர்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சீமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருளா கிய சுண்ணாம்புக்கல் காங்கேசன்துறைப் பகுதியில் அதிகளவு உண்டெனக் கண்டறிந்து அப்பகுதியில் சீமெந்து தொழிற்சாலையை நிறுவுவதற்கு சிபாரிசு செய்தனர். நிபுணர்களின் சிபார்சிற்கமைய காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு அரசாங்கம் முடிவு செய்தது. அந்த வகையில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஏழாம் (1947) ஆண்டு அரசாங்கத்தின் பிரதிநிதியாகிய உயர் திரு. ஏ.சீ கொறியா என்பவரால் அடிக்கல் நாட்டப்பட்டது. சீமெந்து உற்பத்தியின் மூலப் பொருள்களில் ஒன்றாகிய களிமண்ணை மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் பிரதேசத்தி லிருந்து புகையிரத மூலம் எடுத்துவர காங்கேசன்துறைப் புகையிரத நிலையம் அமைந்து இருந்தது ஒரு வரப்பிரசாதமாகும். இத்தொழிற்சாலை நிறுவப்பட்ட அக்காலத்தில் கைத்தொழில், மீன்பிடி அமைச்சராகப் பதவி வகித்த கௌரவ திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை இலங்கை அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழிற்சாலை என்ற பெயரைப் பெற்றது. இத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு தேவையான பாரிய இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன வெளிநாட்டிலிருந்து கொழும்புத்துறை முகத்திற்கு கப்பல் மூலமாகக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து புகைவண்டி மூலமாக தொழிற்சாலை நிறுவப்படும் இடத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இதற்கென விசேடமான புகையிரதப் பாதை ஒன்று மாவிட்டபுரத்திலிருந்து அமைக்கப்பட்டது. பிற்காலத்தில் இப்பாதையினூடாக, தொழிற்சாலையில் உற்பத்தியான சீமெந்து புகையிரத மூலமாக நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்ப வசதியாக இருந்தது. இத்தொழிற்சாலையை இயக்குவதற்கு தேவையான மின்சாரத்தை பெற்றுக் கொள்வதன் நோக்கில் காங்கேசன்துறைச் சந்திக்கு அருகாமையில் மின்சார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. இம்மின்சாரநிலையம் மூலம் பெறப்பட்ட மின்சாரம் தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றது மட்டுமல்லாது யாழ்குடாநாடு பூராகவும் மின்சாரம் வழங்க ஏதுவாக அமைந்தது.

இத்தொழிற்சாலை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்பதாம் (1949) ஆண்டு நவம்பர் மாதமளவில் பூர்வாங்கமாக நிறுவப்பட்டு டிசம்பர் மாதமளவில் பரீட்சார்த்த மாக உற்பத்தி செய்து பார்க்கப்பட்டது. அக்காலத்தில் இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த கௌரவ டி.எஸ் சேனாநாயக்கா அவர்கள், கைத்தொழில் மீன்பிடி அமைச்சராகப் பதவி வகித்த கௌரவ திரு. ஜீ.ஜீ பொன்னம் பலம் அவர்களின் அழைப்பை ஏற்று ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் (1950) ஆண்டு பெப்ரவரி மாதம் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். அன்றிலிருந்து அரசாங்கத் தொழிற்சாலையாக இயங்கி சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டது. 112 இறாத்தல் இடையுள்ள ஒரு பைக்கற் 6ரூபா 25 சதத்திற்கு பாவனை யாளர்களுக்கு அப்போது விற்பனை செய்யப்பட்டது. இத்தொழிற்சாலை நிறுவப்பட்ட காலத்திலும், உற்பத்தி செய்யப்பட்ட காலத்திலும் பல தொழிலாளர்கள் விபத்தில் இறந்தும், காயப்பட்டு அங்கவீனர்களாகியதும் குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். இத்தகைய விபத்துக்கள் தொழிலாளர்களின் அனுபவக் குறைவாலும், சீமெந்து ஆலையினது இயந்திரங்களின் இயக்கச் செயற்பாட்டில் உள்ள

விளக்மின்மை யினாலும் அடிக்கடி நிகழ்ந்து வந்தது. தொழிற்சாலை வரலாற்றில் ஆறு தொழிலாளர் கள் தம் இன்னுயிர்களை நீத்தும், 11 தொழிலாளர்கள் அங்கவீனர்களாகியு முள்ளனர். இந்நிலை 1954 ஆம் ஆண்டு வரை. இதன் பின் தொழில் இலாக்காவின் கீழ் இயங்கும் தொழிற்சாலைப் பரிசோதகர்களும், பொறியிய லாளர்களும் தொழிற்சாலைக்கு வருகை தந்து இயந்திரங்களின் சுழற்சிகளையும் அதில் ஏற்படக் கூடிய விபத்துக்கள் பற்றிய விளக்கங்களையும் பாதுகாப்பு உபகரணங்களைப் பாவிப்பது பற்றிய பல கருத்தரங்குகளையும் நடாத்தி தொழிலாளர் களை விபத்துக்களிருந்து பாதுகாப்பதற்கான புரிந்துரைகளை நிர்வாகத்திற்கு வழங்கியதன் மூலம் விபத்துக்கள் குறைந்து போயின.

1957ம் ஆண்டுவரை கைத்தொழில் இலாக்காவின் கீழ் இயங்கிவந்த இத்தொழிற் சாலை அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் எனக் கூட்டுத்தாபனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை காலத்திற்குக் காலம் உற்பத்தியில் முன்னேறிச் சென்றதுடன் இங்கு உற்பத்தி செய்யப்படும் சீமெந்தின் மூலப் பொருளாகிய "கிலிங்கறை" இலங்கையின் தென்பகுதியிலுள்ள காலிக்கு அனுப்பி அங்கு சீமெந்து உற்பத்தி செய்வதற்கு வழியமைத்தது. இலங்கைச்சீமெந்துக் கூட்டுத்தாபனம் தொழிற் சாலையின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு 1965 - 1966ம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டாவது ஆலையைப் புதிதாக நிறுவி நிகர உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்தது. அந்த இரண்டு சூளைகள் மூலமாக வருடமொன்றிற்கு 240,000 ஆயிரம் மெற்றிக் தொன் கிலிங்கறை உற்பத்தி செய்ய முடிந்தது. தொழிற்சாலை சூளைகளின் எரிபொருள் தேவைக்கான எண்ணெயை ஆரம்பகாலத்தில் புகைவண்டி மூலமாகவும், பிற்காலத்தில் கப்பல் மூலமாகவும் கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டன. இத்தொழிற்சாலையை இயக்குவதற்கும் ஏனைய வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆரம்பகாலத் தில் 650 பேர் வேலைக்கமர்த்தப்பட்டனர். பிற்காலத்தில் உற்பத்தி அதிகரிக்கவும், பல அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கும் பணிக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை கூடிச்சென்றது.

1983ம் ஆண்டு ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் 70% பங்கினை தனதாகக் கொண்டு லங்கா சீமெந்து லிமிட்டெட் என்னும நிறுவனத்தின் மூலம் புதியதொரு தொழிற்சாலையை காங்கேசன் சீமெந்து தொழிற் சாலைக்கு அருகாமையில் அமைத்து சீமெந்து உற்பத்தியை அதிகரிக்க வழியமைத்தது. வருடமொன்றிற்கு 500,000 மெற்றிக்தொன் கிலிங்கறை இந்நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்ய முடிந்தது. எல்லா வகையிலும் திறம்பட இயங்கி வந்த இவ்விரு தொழிற்சாலைகளும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைகாரணமாக 1990ம் ஆண்டு தொடக்கம் இயங்காமல் இருப்பது எமது பிரதேசத்தின், குறிப்பாகக் குடாநாடு முழுவதும் சகல வகைகளிலும் பாதிப்படைந் துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும் எமது பிரதேசத்தில் பாரிய உற்பத்தியை செய்து வந்த தொழிற்சாலைகள் செயலற்றுக் கிடப்பதால் புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு குடாநாட்டு மக்கள் பன்மடங்கு விலை கொடுத்துத் சீமெந்தினைக் கொள்வனவு செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர் என்பதை சீமெந்துத் தொழிற்சாலை சமூகம் மிகவும் வேதனையுடன் கண்ணுற்று நிற்கிறது.

## இனிக்கும் நினைவு

உயிர்க்கும் சிரிப்பினிலே - நெஞ்சில்
உறங்கும் கவலைகளே
பயிர்க்கும் பருவத்திலே - உயிர்
கொடுப்பான் கதிரவனே
நெஞ்சிலுயிர்க்கும் மிஞ்சிவெடிக்கும்
கொஞ்ச நினைக்கும் அன்பை விதைக்கும் (இனிக்கும்)

வெடிக்கும் வெறுப்பினிலே - உளம்
படிக்கும் அனுபவமே
நடிக்கும் உலகினிலே - கலை
வடிப்பான் கவிஞனுமே
உளம் வெடிக்கும் கதைபடிக்கும்
தினம் நடிக்கும் உயிர்கொடுக்கும். (இனிக்கும்)

"சித்தி"

# வலி வடக்கில் தும்புத்தொழிற் பயிற்சி

**செ. சோதிரராஜா**
தும்புத்தொழில் போதனாசிரியர்

அளவெட்டியில் இயங்கும் எமது தும்புத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டில் இருந்து மிகச் சிறப்பாக நடைபெற்றுவருவது மிகவும் மகிழ்ச்சியான விடயம் என்பது கருத்திற் கொள்ளக்கூடியது. இதன்மூலம் பெற்ற பயிற்சி அருமையிலும் அருமை. இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1990. முதன்முதலில் மல்லாகம் கி. மு. சங்கத்தில் 1995ம் ஆண்டுவரை பயிற்சி நடைபெற்றது. 1998 இல் மல்லாகத்தில் நடைபெற்றது. பின்பு 1999இலிருந்து அளவெட்டியில் தும்புத்தொழில் பயிற்சி நிலையம் நடைபெற்று வருகிறது.

"தன்காலில் நிற்க எது உதவுமோ அதுவே கல்வி". "சிந்தனையின் முதிர்ச்சி தான் ஞானம்" அந்தவகையில் நமக்கோர் இடம் இருக்கிறது. அதை நாம் பிரயோசனமாகப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் பொன்னானது. எமது நிலையத்தில் பலவகையான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். முன்னர் வெளிமாவட்டத்தி லிருந்து மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்து பயிற்சிகள் நடைபெற்றன. தற்போது உள்ளூரிற் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு, அதாவது தும்பின் மூலம் தும்புத்தடி, கயிறு, கால்மிதி, துடைப்பம், மெத்தை ஆகிய பொருட்களை செய்து விற்பனைசெய்ய முடிகிறது. இதன் மூலம் எவ்வளவோ பயனைப் பெறமுடிகிறது. இப்பயிற்சிப் பட்டறையின் நோக்கம், செய்யும் பொருட்கள் மிகவும் அழகாகவும், பார்ப்பவர்களைக் கவரக்கூடிய வகையிலும், நீண்ட நாட்கள் பாவிப்பதற்கும், வறுமைக் கோட்டில் கீழ் உள்ள மக்களும் பயன்பெறுவதுமேயகும். எளிதில் எல்லாப் பொருட்களையும் பழகக்கூடிய வகையில், இந்தப் பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெறும் மாணவர்கள் பூரணமாகப் பயிற்சி பெறுவதுதான் சிறந்த முறையாகும். உள்ளூரில் என்னவளம் இருக்கிறதோ, அதைக்கொண்டு எவ்வகை யான பொருட்களைத் தயாரிக்க முடியுமோ அதைக் கொண்டு, தும்புத் தொழிற் சாலையில் பொருட்களைச் செய்து வருகின்றோம். இந்த நிலையத்திற் பயிற்சிபெறும் மாணவர்களின் மூலம் மற்றைய மாணவர்களுக்கும் இப் பயிற்சியைப் புகுத்தமுடிகிறது. இப்பயிற்சி எதிர் காலத்திற்கு மிகவும் பிரயோசனமான பயிற்சியாக அமைகிறது என்பதனை அவதானிக்க முடிகிறது.


மீண்டும் மீண்டும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தும் இப்பயிற்சி 06 மாதம் வரையும் தான் தற்போது பயின்று வருகின்றார்கள். 06 மாதம் முடிவடைந்து பின் புதிய பயிற்சியாரைத் தெரிவு செய்துவருவது தற்போதைய நடைமுறை. 06 மாதம் வரை சிற்ந்த பயிற்சியை மாணவர்கள் பெறுகின்றார்கள். இப்பயிற்சி இந்நிலையத்திற் பயிற்சி பெறுபவர்கள் ஒவ்வொருவரும் பெற்ற பயிற்சியின் மூலம் தாங்களாகவே பொருட்களை உற்பத்திசெய்து சந்தைப்படுத்தி வருமானம் பெற்று வாழ்வில் உயர்தலே இந்தத் தும்புத் தொழிற்சாலைப் பயிற்சி நெறியின் குறிக்கோள் ஆகும்.

**தூய்மை:~**

தெய்வீகத்தை அடைந்த வேண்டுமானால் முதலில் தூய்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் அத்தகைய தூய்மை வளர அனைவருடனும் ஒத்திசைவாகப் பழகவேண்டும் அப்போதுதான் உங்கள் இலக்கை அடையமுடியும்.



வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக வெளிக்கள அலுவலர்கள்



வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக கிராம அலுவலர்கள்

# வலிகாமம் வடக்கின் வரலாற்றுச்சிறப்பு

*கலாநிதி. கந்தையா குணராசா*

[illegible]மம் வடக்கின் ஆள்புல முக்கிய [illegible] இந்தியாவிற்குத் தெற்கே பாக்குத் [illegible]லின் தென் எல்லையாக [illegible] வாய்ப்பான நிலையும், மக்கள் [illegible]திற்கும் வரலாற்றினை [illegible]யவர்களின் வருகைக்கும் [illegible]மாக விளங்கியுள்ளன. இலங்கை [illegible] முக்கிய நிகழ்வுகளுக்குக் காற்கோள் [illegible]மாக வலிகாமம் வடக்கு விளங்கி [illegible] கர்ணபரம்பரைக் கதைகள், ஊகித்து [illegible]பட்ட வரலாறுகள், ஆதாரபூர்வமான [illegible] சான்றுகள் என்பன வலிகாமத்தின் [illegible] முக்கியத்துவத்தினை நிரூபிப்பனவா [illegible]

[illegible]த் தீவின் ஆதிக்குடிகள் இயக்கர், [illegible] என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட [illegible]ாகும். எனவே ஈழத்தின் நாகரிக [illegible] இராக்கத ரென விதந்துரைக்கப்பட்ட [illegible] என்பது புனைாகும். சிங்கள விஜயன் [illegible] வருவதற்கு முன்னரே நாகரிகமான [illegible] தீவில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். [illegible] தென்னிலங்கையில் இயக்க [illegible] வடவிலங்கையில் நாகர்களும் ஆள்புல [illegible] விளங்கியுள்ளனர். நாகதீபத்தின் ஒரு [illegible] பகுதியாக வலிகாமம் வடக்கு [illegible]ள்ளது. பின்னர் உத்தரதேசமென்ற [illegible]கையின் பிரதானபிரதேசமாகவும் [illegible]க்கு சிறந்திருந்துள்ளது. வலிகாமம் [illegible] ஆதிக்குடிகள் நாகமக்களாவார்கள்.

[illegible] வடவிந்தியாவில் நிலைகொண்ட [illegible] திராவிடர்கள் ஆரியர்களால் நெருக்குப் [illegible] இந்தியாவின் தென்பாகத்திற்கும் [illegible] குடிபெயர்ந்தார்கள். அவ்வாறு [illegible] திராவிடரின் குடியேற்றங்கள் [illegible] வடக்கில் அதிகம் நிகழ்ந்திருக்க [illegible] எனக்கொள்வதற்குக் காரணம் [illegible] எதிர்கொள்ளும் அமைவிட [illegible] வலிகாமம் வடக்குக் கொண்டிருந் என்பதாகும். இந்தியாவிலிருந்து ஆக முப்பது தமையாகும். சேர். போல் . பீரிஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி, விஜயன் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வடஇலங்கையிற் குடியிருப்புக்கள் விருத்தியுற்றன மைல் கடலே வலிகாமம் வடக்கின் வடகரையைப் பிரிக்கின்றது. அதனால் இலகுவில் கலங்களில் கடந்து இங்கு குடியிருப்புகளை அமைத்துக் கொள்வதில் பெரும் சிரமம் இருந்திருக்க முடியாது.

வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறை, கீரிமலை முதலான மையங்கள் முக்கியமான குடியிருப்புப் பகுதிகளாக விளங்கியிருக்கின்றன. இப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் ஆரம்பத்தில் திராவிடர்கள் என்பதற்கு இப்பிரதேசத்திலும் அயலிலும் கண்டெடுக்கப்பட்ட ஈமச்சின்னங்கள், ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள், இம்மக்களது சமயவழிபாட்டு முறைகள் என்பன காரணங்களாகின்றன என்பது வரலாற்று, தொல்லியலாளர்கள் என்போரது கருத்தாகும். பெருங்கற் கலாசாரத்தைக் கொண்ட இம்மக்கள் மரணமடைந்த தலைவனைப் பெருந் தாழி (பானை) ஒன்றினுள் இட்டுப் புதைகின்ற ஈழத்தாழி / முதுமக்கள்தாழி முறையைக் கைக்கொண்டிருந்தனர். இது திராவிடர்களின் கலாசார முறையாகும். அவ்வகைத்தாழியொன்று வலிகாமம் வடக்கின் தென்பகுதியிலமைந்த ஆனைக்கோட்டையில் அகழ்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது இப்பிரதேச மக்கள் திராவிடர் என நிருபிக்கின்றது.

பிராமி வடிவ எழுத்துக்களைத் திராவிடர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். வட பிராமியில் காணப்படாத சிறப்பெழுத்துக்களான இ, ம, ழ, ற, ன, ள போன்ற எழுத்துக்கள் தமிழ்ப்பிராமியில் காணப்படுகின்றன, இவை தமிழ்ப்பிராமி அல்லது திராவிடி எனப்படுகின்றனவென தமிழகத் தொல்லியலாய்வாளர் மகாதேவன் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாணத்திற் கிடைத்த மிகப்பழைய

பிராமிச் சாசனம் வலிகாமம் வடக்கின் அருகே கந்தரோடை யில் தான் கிடைத்தது. கந்தரோடையில் மட்பாண்ட மொன்றில் பொறிக்கப்பட்டிருந்த "ததஹபத" (தத்தவின் பாத்திரம்) கி.பி 3 அல்லது 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முத்திரைச் சாசனமென இந்திரபாலா கண்டறிவித்துள்ளார். கந்தரோடையில் கிடைத்த இன்னொரு சாசனத்தில் "விஷ்ணு பூதிஸ்ய" (விஷ்ணுபூதியனுடைய) என்றொரு தென்பிராமி எழுத்திலமைந்த சாசனத்தையும் இந்திரபாலா கண்டெடுத்துள்ளார். மேலும் தமிழர் வரலாற்றுப் பாரம்பரியம் தொடர்பாக மூலாதாரங் களைத் தேடும் பணி ஒன்றின்போது கந்தரோடை யில் தமிழ்ப்பிராமி வடிவம் பொறிக்கப்பட்ட கறுப்புச் சிவப்பு மட்பாண்டத்துண்டுகள் கிடைத்துள்ளன. இம்மட்பாண்ட வகையைச் சேர்ந்த தட்டையான சட்டியொன்றின் விளிம்பில் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்த "குனி" என்ற வாசகம் கிருஷ்ணராஜாவால் கண்டெடுக்கப்பட்டது. பிக்குனி என்ற தமிழ்ப்பதத்தின் இறுதிப்பதமாக அமையக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார். இது கி.பி முதலாம் இரண்டாம் நூற்றாண்டு தமிழ்நாட்டு வரிவடிவ முறையைத் தழுவியதாகும். முதுமக்கள் தாழியும் பிராமிவடிவ எழுத்துக்களும் வலிகாமம் வடக்கின் ஆதிக்குடியினர் திராவிடர் என நிறுவுகின்றன.

கி. மு 483 ஆம் ஆண்டு நிகழ்ந்த விஜயனதும் அவனது தோழர்கள் எழுநூறு பேரினதும் இலங்கை வருகை (புத்தளம்) தாமிரபரணிப்பகுதியில் நிகழ்ந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்து வரலாற்றுப் பனுவலாகக் கருதப்படும் யாழ்ப்பாண வைபவமாலை, விஜயன் கதிரைமலையில் வந்து குடியேறினான் எனச் செப்புகின்றது. அவன் நீலகண்டாசாரியார் எனும் குருவையும் அவர் பத்தினியாகிய அகிலாண்ட வல்லியையும் புத்திர புத்திரிகளையும் கூட்டிக்கொண்டு தன் பரிவாரங் களுடன் கதிரைமலையிற் சேர்ந்தானென யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. கதிரமலை என்பதைக் கந்தரோடையெனப் பலர் அடையாளங் கண்டுள்ளனர். கதிரமலை என்பது மாந்தை அல்லது கீரிமலையென இராசநாயகம் முதலியார் குறிப்பிடுகின்றார். அவன் தன் பரிவாரங்களுடன் கீரிமலையில் இறங்கி கந்தரோடையிற் குடியமர்ந் தானெனக் கொள்ளில் விஜயனின் வருகை வலிகாமம் வடக்கில் நிகழ்ந்ததொன்றா கிறது.

விஜயராசன், கீரிமலைச் சாரலில் திருத்தம் பலை எனும் பதியில் திருத் தம்பலேச்சுரம், திருத்தம்பலேசுவரி கோயில்களையும் அவற்றின் சமீபத்தில் கதிரையாண்டவர் கோயிலையும் கட்டுவித்தானென யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது.. திருத்தம்பலேச்சுரம் என்பது நகுலேஸ்வரம் எனவும் திருத்தம்பலேசுவரி நகுலாம்பிகையம்மன் கோயிலெனவும் அறியப் படுகின்றன. நகுலமுனிவர் கீரிமலையில் வீற்றிருந்து தவமியற்றித் தன் அங்கவீனம் நீங்கப்பெற்றமையால் அவர் பெயரால் பிற்காலத்தில் இக்கோயில்களின் பெயர்கள் மாற்றமடைந்தன வென்பதும் வைபமாலை நூலில் காணப்படும் தகவலாகும். கதிரையாண்டவர் கோயில் என்பது மாவிட்டபுரக் கந்தசாமி கோயிலின் ஆரம்பவடிவ மென்பதும் அவதானிக்கத் தக்கது. விஜயனால் தாபிக்கப்பட்ட இந்த மூன்று கோயில்களுக்கும் பூசை நடாத்தும்படி நீலகண்டாசாரியாரின் மூன்றா வது மகன் வாமதேவாசாரியனையும் "அவன் மனைவி விசாலாட்சியம் மாளையும் அழைப்பித்து அக்கிரகாரங்களை அமைத்து இருத்தினான் என்பது கர்ணபரம்பரை. இக்கோயில்கள் இப்பிரதேசத்தில் தோன்றியதால் இந்தக்கிராமம் கோயிற்கடவை எனப்பெயர் பெற்றதென்பது வைபவமாலை தரும் செய்தி.

வடவிலங்கையில் நாகர்களினதும் அவர்களுடன் கலந்த திராவிடர்களினதும் குடியிருப்புகள் வளர்வது தென்னிலங்கை ஆட்சியாளருக்குத் தலையிடியைக் கொடுத்திருக்க வேண்டும். இந்தியாவுடனான சகலதொடர்புகளும் வடவிலங்கைத்துறை முகங்களான மாந்தையூடா கவோ, அல்லது வலிகாமம் வடக்கிலமைந்த ஜம்புகோளப்பட்டினமூடாகவோ நடந்து வந்தன. ஜம்புகோளப்பட்டினம் என்பது முன்னைய காங் கேசன்துறை என அடையாளங் காணப்பட்டுள்ளது. அதனால் கி.மு 1 ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன்னர் தென்னிலங்கையிலிருந்து வடக்கே பெரும் படையெடுப்பொன்று நிகழ்ந்திருக் கவேண்டும். அந்தக் கால கட்டத்தில் கந்தரோடை எனப்படும் கதிரமலையே ஈழமண்டலத்தின் ஆட்சியாளரின் தலைநகரமாக இருந்திருக்க வேண்டும். தென்னிலங்கை ஆட்சியாளர் கதிரமலையைக் கைப்பற்றியதும் அப்பிரதேசத்தில் வாழ்ந்தவர்களில் ஒருபகுதியினர் வல்லிபுரப்

பகுதிகளில் ஏற்கனவே குடியிருந்தவர்களுடன் சேர்ந்து குடியேறிக் கொண்டனர். கந்தரோடையிலும் வல்லிபுரப்பகுதியிலும் கிடைத்த தொல்லியற் சாசனங்கள் இப்பகுதிகளில் பௌத்தம் நிலைபெற்றிருந்த தென்பதைச் சுட்டுகின்றன. தமிழ் நாட்டில் பௌத்தம் பரவிய காலகட்டத்தில் வடவிலங்கைத் தமிழர்கள் பலரும் பௌத்தத்தைத் தழுவியிருப்பர். கிமு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 1 ஆம் நூற்றாண்டுவரை வடவிலங்கையில் பெரும்பாலும் பௌத்த தென்னக ஆதிக்கம் நிலவியதெனலாம்.

ஈழத்தின் வரலாற்றுக்காலம் தேவநம்பிய தீசனுடன் ஆரம்பமாகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் (கி.மு. 259 - 210) வரை அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த இந்த மன்னன் காலத்தில் தான் இந்தியாவிலிருந்து பௌத்தமதத் தூதுவர்கள் இலங்கைக்கு வந்தனர். தேவநம்பியதீசனின் வேண்டுகோளின்படி இந்திய மன்னனாக விளங்கிய அசோகன் பௌத்த தூதுவர்களை இலங்கைக்கு அனுப்பி வைத் துள்ளான். அவ்வகையில் இலங்கைக்கு வந்த மகிந்ததேரரும் அவரைத்தொடர்ந்து புனித வெள்ள ரசுக்கிளையுடன் இலங்கைக்கு வந்த சங்கமித்த தேரியும் வலிகாமம் வடக்கின் பிரதான துறைமுகமான ஜம்புக்கோளப்பட்டினமூடாகவே வந்திறங்கினர். அக்காலத்தில் ஜம்புக்கோளப் பட்டினம் பிரதான துறையாகவிளங்கியிருக்க வேண்டும். எனவே தான் இந்த ஜம்புக்கோளப் பட்டினத்தில் மன்னன் தேவநம்பியதீசன் ''ஸமுத்த பண்ணை ஸாலா'' என்ற மண்டபத்தையும், ஜம்புக்கோள விகாரையையும் கட்டுவித்தானென வரலாற்றில் அறியக்கிடக்கின்றது.

சங்குமித்ததேரி வெள்ளரசுக்கிளையுடன் வந்திறங்கிய ஜம்புக்கோளத்துறை வலிகாமம் வடக்கிலுள்ளது என்பதில் ஐயப்பாடில்லை. காசிச் செட்டி என்பார் ஜம்புக்கோளத்துறை யாழ்ப்பாணத் திலுள்ள கொழும்புத்துறையென வாதிட்டார். பவுல் பீரிஸ் எனபார் காங்கேசன்துறையே ஜம்புக்கோள துறையென கூறிச்சென்றார். மாதகலிலுள்ள சம்பல்துறையே ஜம்புக்கேளாத்துறையென குமாரசாமிப்பிள்ளை என்பார் சுட்டிக்காட்டியதை சுவாமி ஞானப்பிரகாசரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

மகாவம்சம் ஜம்புக்கேளாத்துறை நாகதீபத்தில் அமைந்திருப்பதாகவிபரிக்கின்றது. தேவநம்பியதீசன் தான் வரவழைத்த வெள்ளரசுக்கிளையிலிருந்து உண்டாகிய கன்று ஒன்றை ஜம்புக்கோளத் துறையில் நாட்டி ஜம்புக்கோள விகாரை, திசமகா விகாரை, பாசீனாராம ஆகிய கட்டிடங்களைக் கட்டுவித்தானென மகாவம்சம் குறிப்பிடுகின்றது. ஜம்புக்கோளம் என்பது தற்காலத் திருவடிநிலை யென முதலியார் இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் வரலாற்றுப் புகழ்மிக்க ஜம்புக்கோளத்துறை வலிகாமத்தின் வடபகுதியில் அமைந்துள்ளமை மறுப்பதற்கில்லை.

பௌத்தத்தை இலங்கைக்குக் கொண்டு வந்த பெருமையும் வலிகாமம் வடக்குக்குரியதா கின்றது. தேவநம்பியதீசனுக்குப் பின்னர். வடவிலங் கை இராச்சியம் தென்னிலங்கை மன்னர்களால் நிருவகிக்கப்பட்டுவந்துள்ளது. கி.பி 1ஆம் நூற்றாண்டிலிருந்து 8 ஆம் நூற்றாண்டு வரை வடவிலங்கை தென்னிலங்கையின் கட்டுப்பாட்டிற் குள் இருந்துள்ளது. 2 ஆம் மகிந்தன் என்ற மன்னன் காலத்தில் (777 - 797) சிங்கள ஆட்சிக்கு எதிராக உத்தரதேசத்து மக்கள் கிளர்ச்சி செய் தனர். அக்கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவன் கலிங்க தேசத்தவனாக இங்கு குடியேறியிருந்த உக்கிரசிங்கன் என்ற தலைவனாவான். நெடுங்காலம் இழந்திருந்த உரிமையை மீட்கும் வகையில் போரிட்டு வடவிலங்கையை உக்கிரசிங்கன் பெற்றுக்கொண்டான். வெற்றி கொண்ட உக்கிரசிங்கன் கதிரமலை (கந்தரோடை) யினைத் தலைநகரமாக் கொண்டு ஆட்சி செய்தான். யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாக உக்கிரசிங்கனையே அறிய முடிகின்றது.

உக்கிரசிங்கன் கதிரமலையில் ஆட்சி செய்த காலத்தில் சோழ இளவரசியாகிய மாருதப் புரவீகவல்லி என்பாள் தீர்த்த யாத்திரைமேற் கொண்டு கீரிமலைக்கு வந்தாள். அவளை வலிந்து சிறைகொண்டு உக்கிரசிங்கன் மணந்து கொண்டான். அவளின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து மாவிட்டபுரத்தில் முன்னர் இருந்த கதிரையாண்டவர் கோயிலைப் பெரும் கந்தசுவாமி கோயிலாகச் சமைப்பித்தான். இந்தியாவிலிருந்து அக்கோயிலுக்குரிய

விக்கிரகங்களையும் பெரிய மனத்துளார் என்ற பிராமணோத்தமரையும் வரவழைத்தான் என வைபவமாலை கூறும். மாவிட்டபுரம்கந்தசாமி கோயில் வலிகாமம் வடக்கின் ஒரு வரலாற்றுச்சின்னம். மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்குத் தேவையான கந்தசுவாமி, தெய்வநாயகி அம்மன், வள்ளியம்மன் விக்கிரகங்களை இந்தியாவிலிருந்து எடுத்துக் கொண்டு பெரியமனத்துளார் வந்து இறங்கிய துறை காயாத்துறை ஆகும். பௌத்தர்கள் இந்தியாவிலுள்ள காயாவிற்குப் யாத்திரைமேற் கொள்ளும்போது இத்துறையூடாகப் பயணப்பட்டு வந்தனர். அதனால் இது காயாத்துறையென அழைக்கப்பட்டது. இப்பொழுது மாவிட்டபுரம் ஆலயத்திற்கான விக்கிரகங்கள் வந்திறங்கியதால் அத்துறைக்கு காங்கேசன்துறையென்றாயிற்று என வரலாறு கூறுகின்றது.

வலிகாமம் வடக்கில் வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த இடங்கள் இன்றுமுள்ளன. கந்தரோடை, கீரிமலை, காங்கேசன்துறை என்பன வற்றினைவிட கோயிற்கடவை, வளவர்கோன் பள்ளம், குமாரத்திபள்ளம் என்பனவும் குறிப்பிடத்தக்கவை. நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் அமைந்து பிரதேசம் கோயிற்கடவை எனப்பட்டது. சோழன் பாளையம் இட்ட பிரதேசம் ''வளவர்கோன் பள்ளம்'' எனப்பட்டது. மாருதப்புரவீகவல்லி தங்கிய பிரதேசம் ''குமாரத்திபள்ளம்'' எனப்படுகின்றது. இந்துக்களின் புனித தலமான திருவடிநிலையும் முக்கியமான மையமாகும்.

உக்கிரசிங்கன் காலத்தில் கந்தரோடைத் தலைநகரைக் கைவிட்டுப் புதியதொரு தலைநகர மாகச் சிங்கைநகரைத் தாபித்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கதிரைமலையைக் கைவிட்டுப் புதியதொரு தலைநகரைத் தாபிப்பதற்கான காரணங்கள் தெளிவானவை. கந்தரோடைப் பிரதேசம் பௌத்த மக்களது முக்கியபிரதேசமாக மாறிவிட்டிருந்தது. சங்கமித்ததேரியின் வருகைக்குப் பின்னர் இலங்கைக்கு வருகைதந்த பௌத்தர்கள் வலிகாமம் வடக்கின் துறைகளையே வரவும் போகவும் பயன்படுத்தத் தொடங்கியிருந்தனர். விகாரைகளும் இப்பகுதிகளில் கட்டப்படன. கந்தரோடையில் மாத்திரமன்றி வல்லிபுரப் பகுதியிலும் பௌத்தர்கள் பரவியிருந்தனர். உக்கிரசிங்கன் காலத்தில் பௌத்தம் நாகதீபத்தில் நன்கு பரவியிருந்தது. தீவிர சைவனாக விளங்கிய உக்கிரசிங்கன் தன் தலைநகர் பௌத்தபின்னணியில் விளங்குவதை விரும்பியிருக்கவில்லைப் போலும். அதனால் புதியதொரு நகரத்தினை பூநகரிக்கரையில் நிறுவிக்கொண்டான். தன் பெயரைத் தாங்கி சிங்க(ன்) நகர் என அதற்குப் பெயரிட்டு அழைத்தான். சிங்கைநகர் வல்லிபுரப்பகுதியில் இருந்ததென்றும் நல்லூருக்கு அருகில் இருந்த தென்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுவது ஏற்புடைய தல்ல.

தலைநகர் இடமாற்றத்துடன் வலிகாமம் வடக்கின் முக்கியத்தவம் சிறிது குன்றியதாகினும் அதன் துறைமுகமுக்கியத்துவமும் புராதன ஆலயங்களும் புனித தீர்த்தங்களும் அதன் முக்கியத்துவத்தினைக் குன்றவிடவில்லை. வடவிலங்கையை ஆண்ட மன்னர்கள் மாவிட்டபுரம் கோயிலிற்கு வருகை தந்துள்ளனர். சிங்கையாரி யன் எனப்படும் விசயகூழங்கையாரியன் (உண்மை யில் விசயகாலிங்கன்) மாவிட்டபுர ஆலயத்தின் குருக்களாக விளங்கிய சின்னமனத்துளாரின் இல்லத்தில் மந்திரி புவனேகபாகுவுடன் விருந்துண்ட செய்தி வரலாற்றில் அறியப்படுகின்றது.

போர்த்துக்கேயராட்சியில் அதன் முதற்திதேசா பதியாக விளங்கிய பிலிப் தோஒலிவேறா யாழ்ப்பாணத்திலிருந்து சைவக்கோயில்களை யெல்லாம் இடிப்பித்துத் தரைமட்டமாக்கினான். அவ்வேளை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும் இடிக்கப்பட்டது. அக்கோயில் இடிக்கப்படு முன்னர். அக்கோயிலின் விக்கிரகங்களை அக்கோயிற்குருக் களான பரசுமணி ஐயர் ஒரு கிணற்றிலிட்டு மண்ணால் தூர்த்துவிட்டு நீங்கினார் என அறியப் படுகின்றது என முத்துத்தம்பிப்பிள்ளை குறித்துள் ளார். ஒல்லாந்தர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் சைவக்கோயில்கள் மீளப்புனருத் தாரணம் செய்யப்பட்டன. அவ்வகையில் நகுலேஸ்வரமும் புதியதாகியது.வடவிலங்கை வரலாற்றில் வலிகாமம் வடக்கின் முதன்மை மறுப்பதற்கில்லை. இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் நிகழ்ந்த அரசியல் வரலாற்றில் வலிகாமத்திற்கு ஏற்பட்ட நிலவிழப்பு ஐம்பது சதவீதமாகும். பலாலி விமானத்தள விஸ் தரிப்பும்

தமிழ்த்தேசியப் போராட்டமும் வலிகாமம் வடக்கின் வடபகுதியை மக்கள் வாழாத விதமாக்கி விட்டன. தாம் பாரம்பரியமாக பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணைக் கைவிட்டு ஏதிலிகளாக அப்பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து துன்புறுகின்று நிலை ஏற்பட்டுவிட்டது. புண்ணியத்தலங்களான கீரிமலை,நகுலேஸ்வரம், திருவடிநிலை, மாவிட்டபுரம் ஆகியனவற்றிற்குச் சுதந்திரமாக மக்கள் சென்று வழிபட்டுத் தமது சமயக் கடமைகளைச் செய்யவும், நிம்மதியாகத் தம் நிலங்களில் வாழந்து முடிக்கவும் இயலாத அவலம் இன்னமும் எத்தனை ஆண்டுகளோ?

இக்கட்டுரைக்கான ஆதார நூல்களும் கட்டுரைகளும்


1 யாழ்ப்பாண வைபவமாலை, குல சபாநாதன் பதிப்பு சுன்னாகம் 1949
2. யாழ்ப்பாணச் சரித்திரம், எஸ்.ஜோன், யாழ்ப்பாணம் 1882
3. யாழப்பாண வைபவ கௌமுதி க.வேலுப்பிள்ளை வசாவிளான் 1918
4. யாழ்ப்பாண வைபவவிமர்சனம், சுவாமி ஞானப்பிரகாசர், அச்சுவேலி 1928
5. யாழ்ப்பாணச் சரித்திரம், டானியல் ஜோன், யாழ்ப்பாணம் 1930
6. யாழ்ப்பாணச் சரித்திரம், ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை, யாழ்ப்பாணம் 1933
7. யாழ்ப்பாணச் சரித்திரம், முதலியார் செ. இராசநாயகம், யாழ்ப்பாணம் 1933
8. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், கா. இந்திரபாலா, கண்டி 1972
9. யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும், பொ. ஜெகந்நாதன், யாழ்ப்பாணம் -1987
10. நல்லைநகர் நூல் க. குணராசா, யாழ்ப்பாணம் - 1987
11. யாழ்ப்பாண இராச்சியம், சி. க. சிற்றம்பலம், யாழ்ப்பாணம் -1992
12. ஈழத்தவர் வரலாறு, க.குணராசா, யாழ்ப்பாணம் -1996
13. யாழ்ப்பாண அரச பரம்பரை, க. குணராசா, கொழும்பு 2000
14. தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத்தொன்மையும், செல்லையா கிருஷ்ணராசா, யாழ்ப்பாணம் -1998
15. Mahavamsa, W.Geiger, Colmbo 1950
16. TheNorthern Kingdom,S.Natesan, Co1960
17. The Kingom of Jaffna, S.Pathmanathan Colombo - 1978
18. Early Settlement in Jaffan P.Ragupathy, Madras - 1987


## நம்பிக்கை:~

மக்கள் நம்பிக்கை என்னும் கண்களை இழந்துவிட்டனர். மனித உயர்குண நலன்களைப் பொறுத்தவரையில் குருடாகிவிட்டனர். எப்போதும் அடுத்தவர் உதவி செய்வார் என்ற நம்பிக்கையில் வாழக்கூடாது. உங்கள் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையைத்தான் அடிப்படையாகக் கொண்டு வேண்டும்

உங்கள் மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, இறைவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கைக்குச் சமம். இது தான் சிறந்தவனாக உயர்வதற்கான ரகசியம். சுயநம்பிக்கை கொள்வது தான் உண்மையிலேயே கடவுளின் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை எனக் கொள்ளலாம். ஏனெனில் நீங்கள்தான் தெய்வம் உறையும் வாசஸ்தலமாக இருக்கிறீர்கள்.

கடவுளுக்கென்று தனியாக வடிவம் இல்லை. நான் என்கிற ஆத்மாதான் கடவுள் உங்களுக்கு ஒற்றுமையின்மேல் அத்தகைய நம்பிக்கை வேண்டும் பலதரப்பட்ட மக்களிடையே இருக்கும் ஒற்றுமை மட்டுமே நமது தேசத்தைப் பாதுகாக்கும்.

# வலிகாமம் வடக்கு பிரதேச செயலக நிர்வாக வரலாறு

அ.தனபாலரத்தினம்
(கிராம உத்தியோகத்தர்)

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில்
1. யாழ்ப்பாணம்
2. நல்லூர்
3. வலிகாமம் தென்மேற்கு
4. வலிகாமம் மேற்கு
5. வலிகாமம் தெற்கு
6. வலிகாமம் வடக்கு
7. வலிகாமம் கிழக்கு
8. தென்மராட்சி
9. வடமராட்சி தெற்குமேற்கு
10 வடமராட்சி வடக்கு

ஆகிய பத்து பிரதேச செயலக பிரிவு களும்.
1. நெடுந்தீவு
2. தீவுகள் தெற்கு
3. தீவுகள் வடக்கு
4. வடமராட்சி கிழக்கு

ஆகிய நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் உள்ளன.

பத்து வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர கணக்கெடுப்பின் பிரகாரம் குடித்தொகை, பிரதேச வளர்ச்சி, நகர மயமாதல் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டு காலத்திற்குக் காலம் பிரிவுகளின் தொகை அதிகரிக்கப்படுகின்றது.

வடமாகாணத்தில் முல்லைத்தீவுத் தொகுதி உருவாகிய பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தினுள் இருந்த துணுக்காய் காரியாதிகாரி பிரிவு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு வவுனியா மாவட்டத்தில் புதிதாக உருவான முல்லைத்தீவு தொகுதியுடன் இணைக்கப்பட்டது.

முல்லைத்தீவு தொகுதி பின்னர் முல்லைத் தீவு மாவட்டமாக வவுனியா மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டது.

கிளிநொச்சி என்ற தேர்தல் தொகுதி கிளி நொச்சி மாவட்டமாக உருவாக்கப்பட்ட பொழுது பூநகரி, கரைச்சி, மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், யாழப்பாண மாவட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் தான் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கு என்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது.

கிளிநொச்சி தேர்தல் தொகுதியை தனியான ஒரு நிர்வாக மாவட்டமாக உருவாக்கிய பொழுது பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் உள்ளடக்கப்பட்ட பருத்தித்துறை தேர்தல் தொகுதியின் செம்பியன் பற்றுகிராமசபை, குடத்தனை கிராமசபை, முள்ளிப் பற்று கிராமசபை எல்லைப்பரப்புக்கள் வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டு, பின்னர் தனியாக பிரிக்கப்பட்டு மருதங்கேணியில் வடமராட்சி கிழக்கு என்ற பெயருடன் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது.

இதுவே யாழப்பாண மாவட்டத்தில் இறுதியாக உருவாக்கப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவாகும்.

வடமராட்சி என்ற பிரிவு வடமராட்சி வடக்கும் கிழக்கும், மற்றும், வடமராட்சி தெற்கும் மேற்கும் என்றும், தென்மராட்சி என்ற பிரிவு தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி என்றும், தீவுகள் என்ற பிரிவு தீவுகள் தெற்கு மற்றும் தீவுகள் வடக்கு என்றும். யாழ்ப்பாணம் என்ற பிரிவு யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் என்றும். வலிகாமம் மேற்கு பிரிவு, வலிகாமம் தென்மேற்கு மற்றும், வலிகாமம் மேற்கு என்றும் வலிகாமம் வடக்கு பிரிவு வலிகாமம் தெற்கு மற்றும், வலிகாமம் வடக்கு என்றும், காலத்திற்குக் காலம் பிரிக்கப்பட்டு வந்துள்ளது.



வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக அலுவலக அலுவலர்கள்



வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக சமுர்த்தி அலுவலர்கள்

இந்தவரிசையில் 22 கிராம சேவகர் பிரிவு களை கொண்ட வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவு இரண்டாக்கப்பட்டு சுன்னாகம் பட்டினசபை ஏழாலை கிராமசபை மற்றும் உடுவில் கிராமசபை ஆகிய பகுதிகளை கொண்ட வலிகாமம் தெற்கு என்ற பிரிவு ஏழு கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. இப்பிரிவில் உடுவில் தேர்தல் தொகுதியின் ஒரு பகுதி நிலப் பரப்பு அடங்கும். வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக உடுவிலை பணிமனை யாகக் கொண்ட வலிகாமம் தெற்கு 1972.03.15 முதல் செயற்பட ஆரம்பித்தது.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் பண்டத்தரிப்பு கிராமசபை தவிர்ந்த காங்கேசன் துறை பட்டினசபை, மயிலிட்டி கிராமசபை, தெல்லிப்பளை கிராமசபை மற்றும் மல்லாகம் கிராமசபை ஆகியவற்றையும் கோப்பாய் தேர்தல் தொகுதியிலுள்ள மயிலிட்டி கிராம சபையின் எஞ்சிய பகுதியான வயாவிளான் கிராமத்தையும் உள்ளடக்கிய 15 கிராம சேவையாளர் பிரிவுகளையும் கொண்ட நிலப்பரப்பு வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவாகத் தொடர்ந்தும் செயற்பட்டு, பின்னர் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றப்பட்டது.1977ல் அளவெட்டி என்ற கிராம சேவையாளர் பிரிவு அளவெட்டி வடக்கு மற்றும் அளவெட்டி தெற்கு என்று இரண்டாக பிரிக்கப்பட்டு மொத்தம் பதினாறு பிரிவுகளாக 1987ம் ஆண்டு வரை செயற்பட்டு வந்தது.

1987ம் ஆண்டு வரை இருந்த கிராமசேவை அலுவலர் பிரிவுகள் வருமாறு

யா / 61 மல்லாகம்
யா / 62 அளவெட்டி வடக்கு
யா / 62A அளவெட்டி தெற்கு
யா / 63 தெல்லிப்பளை தென்மேற்கு
யா / 64 தெல்லிப்பளை வடமேற்கு
யா / 64A கீரிமலை
யா / 65 தெல்லிப்பளை கிழக்கு
யா / 66 மாவிட்டபுரம்
யா / 67 காங்கேசன்துறை
யா / 68 பளை, வீமன்காமம்
யா / 69 கட்டுவன்
யா / 70 மயிலிட்டி தெற்கு
யா / 71 வயாவிளான்
யா / 72 மயிலிட்டி வடக்கு
யா / 72A மயிலிட்டிக்கரை
யா / 73 பலாலி

1987ல் விசேட சேவை அலுவலர்கள் கிராமசேவை அலுவலர்களாக ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட பொழுது பதினாறு பிரிவுகள் இருபத்து நான்கு பிரிவுகளாக அதிகரிக்கப்பட்டது அவையாவன.

யா / 102 மல்லாகம் தெற்கு
யா / 103 மல்லாகம் வடக்கு
யா / 104 அளவெட்டி வடக்கு
யா / 105 அளவெட்டி கிழக்கு
யா / 106 அளவெட்டி தெற்கு
யா / 107 தெல்லிப்பளை வடமேற்கு
யா / 108 பன்னாலை
யா / 109 நகுலேஸ்வரம்
யா / 110 தெல்லிப்பளை
யா / 111 துர்க்காபுரம்
யா / 112 மாவிட்டபுரம்
யா / 113 கொல்லங்கலட்டி
யா / 114 காங்கேசன்துறை வடக்கு
யா / 115 காங்கேசன்துறை தெற்கு
யா / 116 வீமன்காமம்
யா / 117 கட்டுவன்
யா / 118 மயிலிட்டி தெற்கு
யா / 119 குரும்பசிட்டி
யா / 120 வயாவிளான்
யா / 121 மயிலிட்டி வடக்கு
யா / 122 தையிட்டி
யா / 123 மயிலிட்டித்துறை
யா / 124 பலாலி கிழக்கு
யா / 125 பலாலி மேற்கு

1990ல் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயவிஸ்தரிப்பு அலுவலர்கள் கிராமசேவை அலுவலர்களாக இணைக்கப்பட்ட பொழுது 24 பிரிவுகள் 45 பிரிவுகளாக அதிகரிக்கப் பட்டது. தற்பொழுது நடைமுறையிலுள்ள அப்பிரிவுகள்.

யா / 212 மல்லாகம் தெற்கு
யா / 213 மல்லாகம் மத்தி
யா / 214 மல்லாகம் வடக்கு
யா / 215 அளவெட்டி வடக்கு
யா / 216 அளவெட்டி மத்தி
யா / 217 அளவெட்டி கிழக்கு
யா / 218 கணேஸ்வரம்
யா / 219 அளவெட்டி தெற்கு
யா / 220 அளவெட்டி மேற்கு
யா / 221 இளவாலை வடக்கு
யா / 222 இளவாலை வடமேற்கு
யா / 223 வித்தகபுரம்
யா / 224 பன்னாலை

யா / 225 கொல்லங்கலட்டி
யா / 226 நகுலேஸ்வரம்
யா / 227 தெல்லிப்பளை கிழக்கு
யா / 228 தெல்லிப்பளை
யா / 229 துர்க்காபுரம்
யா / 230 தந்தைசெல்வாபுரம்
யா / 231 மாவிட்டபுரம்
யா / 232 மாவிட்டபுரம் தெற்கு
யா / 233 காங்கேசன்துறைமேற்கு
யா / 234 காங்கேசன்துறை மத்தி
யா / 235 காங்கேசன்துறை தெற்கு
யா / 236 பளைவீமன்காமம் வடக்கு
யா / 237 பளைவீமன்காமம் தெற்கு
யா / 238 கட்டுவன்
யா / 239 கட்டுவன் மேற்கு
யா / 240 தென்மயிலை
யா / 241 வறுத்தலைவிளான்
யா / 242 குரும்பசிட்டி
யா / 243 குரும்பசிட்டி கிழக்கு
யா / 244 வயாவிளான் கிழக்கு
யா / 245 வயாவிளான் மேற்கு
யா / 246 மயிலிட்டி வடக்கு
யா / 247 தையிட்டி கிழக்கு
யா / 248 மயிலிட்டித்துறை தெற்கு
யா / 249 தையிட்டி வடக்கு
யா / 250 தையிட்டி தெற்கு
யா / 251 மயிலிட்டித்துறை வடக்கு
யா / 252 பலாலி தெற்கு
யா / 253 பலாலி கிழக்கு
யா / 254 பலாலி வடக்கு
யா / 255 பலாலி வடமேற்கு
யா / 256 பலாலி மேற்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிக்கு அடுத்ததாக கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கொண்டதாக வலிகாமம் வடக்கு பிரிவு அமைந்துள்ளது அதன் விபரம் வருமாறு.

| உதவி அரசாங்க அதிபர் / பிரதேச செயலக பிரிவு | 1985 முன்னர் (கிராம உ | 1987 இல் த்தியோகத்தர் | 1990 பின்னர் பிரிவுகள்) |
|---|---|---|---|
| 1. நெடுந்தீவு | 03 | 04 | 06 |
| 2. தீவுகள் தெற்கு (வேலணை) | 10 | 16 | 30 |
| 3. தீவுகள் வடக்கு (ஊர்காவற்துறை) | 09 | 14 | 24 |
| 4. யாழ்ப்பாணம் | 07 | 11 | 28 |
| 5. நல்லூர் | 10 | 15 | 40 |
| 6. வலிகாமம் தென்மேற்கு (சன்டிலிப்பாய்) | 09 | 13 | 28 |
| 7. வலிகாமம் மேற்கு (சங்கானை) | 10 | 15 | 25 |
| 8. வலிகாமம் தெற்கு (உடுவில்) | 08 | 13 | 30 |
| 9. வலிகாமம் வடக்கு (தெல்லிப்பளை) | 16 | 24 | 45 |
| 10. வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) | 11 | 17 | 31 |
| 11. தென்மராட்சி (சாவகச்சேரி) | 23 | 35 | 60 |
| 12. வடமராட்சி தெற்கும்மேற்கும்(கரவெட்டி) | 12 | 19 | 35 |
| 13. வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) | 18 | 20 | 35 |
| 14. வடமாரட்சி கிழக்கு (மருதங்கேணி) | - | 11 | 18 |

நாடு பூராவும் 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவு என்று உருவாக்கிய பொழுது வலிகாமம் வடக்கு பிரிவில் 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 78 ஆக அதிகரிக்க சிபார்சு செய்யப்பட்டது. தென்பகுதியில் இவை நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுதும் யாழப்பாணத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லைதற்பொழுது வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவு காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் காங்கேசன்துறை பட்டினசபை, மயிலிட்டி கிராம சபை, தெல்லிப்பளை கிராமசபை, மல்லாகம் கிராமசபை ஆகியவற்றின் நிலப் பரப்பைக் கொண்டதாகவும்

உள்ளூராட்சிப் பிரிவில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தை உள்ளடக்கியதாகவும்.

# வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட விழாக்கள்



திருமதி M. சோமசுந்தரத்தின் பிரியாவிடை விழாவில்



ஊனமுற்றோர் தின விழாவில் பிரதேச செயலாளர் பரிசில் வழங்குகின்றார்.
அருகில் S.S.O. திரு S. பாலபாஸ்கரன்



தையல் கண்காட்சியைப் பிரதேசசபைத் தலைவர் க.ஸ்ரீ பாஸ்கரனும்
பிரதேச செயலரும் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தல்



முதியோர் தின விழாவில் முதியவர் ஒருவர் மாலை அணிவித்து
கௌரவிக்கப்படுகின்றார்



வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் மல்லாகத்தில் தற்காலிகமாக இயங்கிய வீடு



மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் வலிகாமம் வடக்குப் பகுதி மீனவருக்கு
வலைகள் வழங்கிய போது



U.N.H.C.R பிரதேச சபைக்குக் கட்டிக்கொடுத்த பாலர் பாடசாலை
குத்துவிளக்கேற்றித் திறக்கப்பட்ட பொழுது



உலக பட்டினிக்கெதிரான நிறுவனம் மல்லாகத்தில் ஆழமாக்கப்பட்ட குளத்தைப்
பாவனைக்குத் திறந்து விட்டபோது

பொலிஸ் பிரிவில் காங்கேசன்துறை மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலைய அதிகார பிரிவின் பகுதிகளை கொண்டதாகவும்

நீதி பரிபாலனத்தில் மல்லாகம் மாவட்ட நீதி மன்று பிரிவாகவும், சுகாதார மருத்துவ அதிகாரி எல்லைப்பரப்பில் முன்னர் காங்கேசன்துறை தற்பொழுது தெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவையும்.

பதிவாளர் பிரிவு பிரதேசத்தில் திருமணம் பொது வலிகாமம் வடக்கு என்றும், இறப்புப் பிறப்பு

விடயத்தில் மயிலிட்டி, தெல்லிப்பளை, மல்லாகம், என்றும்.

கல்வி விடயத்தில் முன்பு காங்கேசன்துறை வட்டார கல்வி அதிகாரி பிரிவாகவும், கொத்தணி அமைப்பில் பண்டத்தரிப்பு கோட்டமாகவும் பின்னர் தெல்லிப்பளை கோட்டமாகவும். வலய முறையில் வலிகாமம் கோட்டமாகவும்.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் தொழிற்பரப்பை கொண்டதாகவும். விளங்குகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தனித்துவமானதாகவும் விசேடமானதாகவும் வலிகாமம் வடக்கு விளங்குகின்றது.

1. காங்கேசன்துறை துறைமுகம்
2. பலாலி விமான நிலையம்
3. மயிலிட்டி கடற்றொழில் துறைமுகம்
4. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை
5. லங்கா சீமெந்து நிறுவனம்
6. ஈஸ்வரத்தில் ஒன்றான நகுலேஸ்வரம்

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக தெல்லிப்பளையில் தனியார் கட்டடம் ஒன்றில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை செயற்பட்டு வந்தது 1990ம் ஆண்டு இடப்பெயர்வுக்கு பின்னர்மல்லாகத்திலுள்ள தனியார் கட்டடத்தில் செயற் பட்டு வந்தது. 2000ம் ஆண்டில் துர்க்காபுரத்தில் பிரதேச செயலகத்துக்கென வடிவமைத்து நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டு செயற்பட்டு வருகிறது.

நிர்வாக ரீதியாக பிரதேசத்தின் பிரிவு பெயர் காலத்துக்கு காலம் மாற்றமடைந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் மணியகாரர் பிரிவு என்பதா கவும், பின்னர் காரியாதிகாரி (இறைவரி உத்தியோகத்தர்) பிரிவாகவும், அதன் பின்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும், தற்பொழுது பிரதேச செயலர் பிரிவாக (பிரதேச செயலகமாக) மாற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரிவில் காரியாதிகாரி உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலராக கடமையாற்றியவர் விபரம் வருமாறு.

திரு. S. பாலச்சந்திரன் காரியாதிகாரி
திரு S. கந்தப்பிள்ளை காரியாதிகாரி
திரு A. பெருமையினார் காரியாதிகாரி
திரு. T. முருகேசம்பிள்ளை காரியாதிகாரி
திரு P. L. பற்றிக் காரியாதிகாரி
திரு. R.அமிர்தசாகரன் இ.நி.சே.உ.அ.அதிபர்
திரு க. மகாதேவா "" ""
திரு S. சுப்பிரமணியம் "" ""
திரு S. இராசரத்தினம் "" ""

செல்வி.மைதிலி சோமசுந்தரம் இ.நி.சே உ.அ.அ
திரு. வை. இராசையா ”
திரு. K. நடராஜர் ”
திரு கா.சந்திரராசாஇ.நி.சே உதவிஅரசாங்க அதிபர்
திரு நா. வேதநாயகன் இ.நி.சே. உ.அ. அதிபர்
திருமதி பத்தினியம்மா லயனல் திலகநாயகம் இ.நி.சே பிரதேசசெயலர்

இவர்களில் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு Iஐ சார்ந்தவர் திருமதி பத்தினியம்மா லயனல் திலகநாயகம் மாத்திரம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவரே இப்பிரதேச முதலாவது பிரதேச செயலரும் ஆவார். தற்பொழுது இலங்கை நிர்வாக சேவை 1ம் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பிரதேசச் செயலராகவும், 2ம் வகுப்பு தரம் ஒன்று I அல்லது இரண்டாம் II ஐ சேர்ந்தவர்கள் உதவிப்பிரதேச செயலராகவும் நியமிக்கப் படுதலுமே நிர்வாக நடைமுறையாகும்.

இறுதியாக இப்பணிமனையில் சேவை யாற்றும் காலத்தில் இயற்கை மற்றும், வன்செயல் காரணமாக காலமானவர்களை நினைவு கூர்வது பொருத்தமாக அமையும்

| உத்தியோகத்தர் பெயர் | பதவி / உத்தியோகம் | காலமானவருடம் |
|---|---|---|
| திரு S. சுப்பிரமணியம் | உதவி அரசாங்க அதிபர் | 1984 |
| திரு ந. குலசிங்கம் | பதவிநிலை உதவியாளர் | 1996/7 |
| வன்செயலினால் காலமானவர்கள் | | |
| திரு K. கிருஸ்ணமூர்த்தி | கிராம உத்தியோகத்தர் | 1989 |
| திரு த. சண்முகநாதன் | கிராம உத்தியோகத்தர் | 1990 |
| திரு வே. வன்னியசிங்கம் | கிராம உத்தியோகத்தர் | 1995 |
| திரு அ. க. நவரத்தினம் | (DES)அலுவலகசிற்றூழியர் | 1993 |
| திருமதி மனோன்மணி ஜெயராஜா | தையல் போதனாசியர் | 1995 |

## கவிதை

நானொரு வனிதை - எங்கும்
நாடுதல் தனிமை
நானொரு கவிதை - இங்கு
பாடுதல் புதுமை புதுமை

பாடுதல் புலமை - என்றும்
தேடுதல் இனிமை
பாவினில் பொருளை - நன்கு
ஓதுதல் பெருமை பெருமை

உணருதல் உரிமை - பண்பு
உயருதல் மகிமை
ஊனுடன் உயிரைப் - பாவில்
ஊட்டுதல் அருமை அருமை

உயிரதன் உறவை - யாரும்
உணருதல் அருமை
உணர்வினில் கவிதை - ஒன்று
கூடுதல் திறமை திறமை

**பிரக்ஞா**

**எல்லோரும் ஒன்றே:-**

**பகவான் அனைவரையும் விரும்புகிறார். அவருக்கு யார் மேலும் வெறுப்புக்கிடையாது எல்லோரும் அவருடைய பக்தர்கள் நண்பர்கள், குழந்தைகள் பகவானின் கண்களில் அனைவரும் ஒன்றே.**

**இந்த பிரபஞ்சமே ஒரு பெரிய புத்தகம். அந்தராத்மா என்பது உங்களுடைய குரு .கடவுள் உங்களுடைய நண்பர். காலம் என்பது கூட கடவுளின் வடிவம்தான். ஆகையால் காலத்தை வீணாக்காதீர்கள்.**

**காலத்தை விரயம் செய்வது என்பது பிராணனை விரயம் செய்வதற்குச் சமம். உங்கள் நேரத்தைத் தூய்மையாக மாற்றுவதே உண்மையான சாதனை.**

# வலி வடக்கும் உள்ளூராட்சி வரலாறும்

வலி வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்

பண்டைய அரசர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ளூராட்சி மட்டங்களில் "கம்சபா" என்கின்ற கிராமிய அமைப்பு முன்னர் இருந்தன. இத்தகைய "கம்சபா" அமைப்புக்களுக்குப் பின்னர் மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப் பட்டனர். முதன் முதலாக "பண்டுகாபயன்" என்கின்ற அரசன் காலத்தில் இம்முறை அறிமுகப்படத்தப்பட்டது. உள்ளூராட்சி நிர்வாகம் "கம்சபாக்கள்", "சட்ட சபாக்கள்" என்ற அமைப்புக்கள் ஊடாக நடைபெற்றன. பொதுச் சுகாதாரத்தை உறுதிப்படுத்தல் சபாக்களின் முக்கிய கடமைகளாக இருந்தன. 1912ல் ஆளுநரால் நியமிக்கப்பட்ட தெரிவுகுழு பொதுச் சுகாதாரத் திணைக்களம் உருவாக்கப்பட வேண்டும் என்றதான விதப்புரையைச் செய்தது. அத்துடன் உள்ளூராட்சி மட்டத்தில் பொருத்தமான பொதுச் சுகாதாரத்துறை சார்ந்த அலுவலரின் ஆலோசனை பெறப்படவேண்டும் என்றும் விதந்துரைத்தது. உள்ளூராட்சி மன்றங்கள் முன்னர்

(01) மாநகரசபை
(02) நகரசபை
(03) பட்டினசபை
(04) கிராமசபை என்ற அமைப்பிலிருந்தது

1981ம் ஆண்டிலிருந்து
(01) மாநகரசபை
(02) நகர சபை
(03) மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்ற அமைப்பாக மாறியது

பின்னர்1988ல்
(01) மாநகரசபை
(02) நகரசபை
(03) பிரதேசசபை என மாற்றப்பட்டது. தற்போது இலங்கையில்

மாநகர சபைகள் - 12
நகர சபைகள் - 41
பிரதேச சபைகள் - 257 என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் இயங்குகின்றன.

## வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் செயற்பாடுகள்

மத்திய அரசு தனது அரசியல் நிர்வாகத்தைத் திறமையாக ஜனநாயக ரீதியில் மேற்கொள்ளும் பொருட்டு, தனது அதிகாரத் தினைப் பரவலாக்கி உள்ளூராட்சி மன்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பின் நிர்வாகத்திற்கு உட்பட்டவையாக மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபை என்பன செயற்பட்டு வருகின்றன. பிரதேச சபையின் உருவாக்கதிற்கு முன்னர் காணப்பட்ட பட்டினசபை, கிராமசபை ஆகிய இரு அமைப்புக்களும் தமது நோக்கத்தினை அடைவதில் கொண்டிருந்த குறைபாடுகள் காரணமாக ஒன்றிணைக்கப்பட்டு 1987ம் ஆண்டு "15ம் இலக்க பிரதேசபை கட்டளை சட்டம்" என்பதன் கீழ் பிரதேச ரீதியாக அங்கு வாழும் மக்களின் பல்வேறுபட்ட பொதுப் பயன்பாட்டு சேவைகளையும் பூர்த்திசெய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், சமுதாய நலன்களைப் பேணுதல் மற்றும் அபிவிருத்தி நிலைமையை எய்துதல் போன்றவற்றை பிரதான குறிக்கோளாகக் கொண்டு செய்றபடும் ஒரு அமைப்பாக "பிரதேச சபை" உருவாக்கப்பட்டது.

இவ்வடிப்படையில் 58.05 சதுர கி.மீற் பரப்பளவு கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையானது காங்கேசன்துறை பட்டினத்தையும், மயிலிட்டி, தெல்லிப்பளை, மல்லாகம் ஆகிய கிராமசபைகளையும் உள்ளடக்கிய இயங்குகின்றது. இச்சபை இப்பிரதேசத்தில் வாழ்கினற 89,000 மக்களின் நன்மை கருதி அவர்களுக்கு பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கில் 01.01.1988 இலிருந்து சேவையாற்றத் தொடங்கியது. சபையின் தலைமை அலுவலகம் காங்கேசன்துறைப் பட்டினத்திலும் உப அலுவலகங்கள் முறையே காங்கேசன்துறை, மயிலிட்டி, தெல்லிப்பளை, மல்லாகம் ஆகிய இடங்களிலும் செயற்பட்டு

வந்தன. 1990 களிலும் அதன் பின்னரும் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் அனைத்து அலுவலகங்களும் செயலிழந்து தற்போது மல்லாகம், தெல்லிப்பளை ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே இயங்குகின்றன. காங்கேசன்துறைப் பட்டினமும் மயிலிட்டிக் கிராமமும் தற்போது உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளன.

மக்களுக்குச் சேவையாற்றுவதையே தனது பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளதால் சபையின் ஒவ்வொரு செயற்பாடும் மக்களின் நன்மை, வசதி, மேம்பாடு குறித்தே திட்டமிடப் பட்டுள்ளது. இந்தவகையில் இச் சபையானது தனது செயற்பாடுகள் யாவற்றையும் 7 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றையும் இலகுவாகவும், திறமை யாகவும் செயற்படுத்தி வருகிறது. சபையின் பணிகள் யாவற்றையும் உள்ளடக்கியிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களாக.

01) பொது நிர்வாகம்
02) சுகாதார சேவைகள்
03) பௌதீக திட்டமிடல், காணிகள், கட்டடங்கள்
04) நீர்வழங்கல் சேவை
05) பொதுப்பயன்பாட்டுச் சேவைகள்
06) நலன்புரிச் சேவைகளும், வசதிகளும்
07) மின்சார சேவை என்பன அமைந்துள்ளன.

முதலாவதாக இடம்பெறும் பொது நிர்வாகம் என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சபையானது தனது அனைத்துச் செயற்பாடு களையும், கடமைகளையும் திருப்திகரமான முறையில் மெற்கொள்வதற்கான ஒரு சிறப்பான நிர்வாகத்தை ஏற்படுத்துதல் என்பது முக்கியம் பெறுகின்றது. அதாவது சபை தனது நிகழ்ச்சித்திட்டக் கருமங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான மனித வளம், பௌதீக வளத்தை உரிய முறையிற் பெற்றுக் கொடுத்தல், நிர்வகித்தல், அங்கீகரிக்கப் பட்டவாறு செலவீனங்களை மேற்கொள்ளுதல், சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்றவை இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

இரண்டாவதாக, சுகாதார சேவைகள் என்பதன்கீழ் இப்பிரதேச எல்லைக்குள் வாழும் மக்களின் சுகாதார தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகின்றன. அதாவது ஒவ்வொரு மனிதனும் ஆற்றலும் அறிவும் நிறைந்தவனாக வாழவேண்டுமானால், அவன் சிறந்த உடல், உள நலம் பெற்றவனாக இருத்தல் வேண்டும். எனவே, இப்பிரதேச மக்கள் அனைவரும் சுகதேகிகளாக, ஆரோக்கியம் மிக்கவர்களாக விளங்க வேண்டும். என்பதற்காக சபையால் ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் தாய்சேய் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன. போசாக்கு, உணவு வழங்கல், சுகாதார கருத்தரங்குகளை நடாத்துதல், நோய் தடுப்பு ஆலோசனைகளை வழங்குதல் போன்றவற்றின் நடவடிக்கைகளை சபை மேற்கொள்கின்றது. மேலும் இப்பிரதேச மக்களிற்கு சுத்தமான, தரமான உணவுப் பொருட்களைக் கிடைக்கச்செய்யும் வகையில் கடைகள், வியாபார அமைப்புக்களில் தீடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளல் மற்றும் இடுகாடுகள், சுடுகாடுகளை அமைத்தல் பராமரித்தல் போன்ற செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இச்சபையின் கீழ் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலை - 01 (கிளைகள் .02)

மூன்றாவதாக, பௌதீகத் திட்டமிடல் பொது வழிகள், காணிகட்டடங்கள் என்பதன் கீழ் இப்பிரதேசத்தின் போக்குவரத்துப் பாதைகள் யாவும் மக்களின் பாவனைக்கேற்றவகையில் காணப்படுதல் மற்றும் காணி, கட்டடங்கள் யாவும் சிறந்த நிலையில் பராமரிக்கப்படுதல் என்பன முக்கிய குறிக்கோள்களாக விளங்குகின்றன. எனவே சபையின் புதிய தெருக்கள், வீதிகளை யமைத்தல், பராமரித்தல், சபைக்குரித்தான காணி, கட்டடங்களைப் புனரமைத்தல், பாலங்கள் அணைச்சுவர்கள் கட்டுதல் வீதிகளுக்குப் பெயர்ப்பலகையிடல் போன்ற செயற்பாடுகள் யாவும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

நான்காவதாக, நீர்ச்சேவை என்ற திட்டத்தின் கீழ் உவர்ப்பு நீருள்ள இடங்களில் நன்னீர் மற்றும் நீர்த்தட்டுப்பாடுள்ள இடங்களில் குழாய்கள் மூலமும் தண்ணீர் பவுசர் மூலமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சபையைப் பொறுத்த வரையில் காங்கேசன்துறைப் பட்டினப் பகுதியில் நீர் விநியோகத்திட்டம் செயற்பட இருந்தது. ஆனால், தற்போதைய நிலைமை பற்றி அறியமுடியாதுள்ளது. தற்போது அளவெட்டி தெற்கு, இக்கிரானை ஆகிய பகுதி மக்கள் குடிநீருக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவைகளை முன்னிட்டு இவர்களுக்கு ஒரு நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிப்பதற்குத் தேசிய நீர் வழங்கல்

வடிகாலமைப்புச் சபைக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. தற்போது மீளக்குடியேறிய பகுதிகளில் 15 பொதுக்கிணறுகளும், 12 குழாய்க் கிணறுகளும் சபையாற் பேணப்பட்டு மக்களுக்கான குடிநீர் விநியோகம் சீராக நடைபெறுகின்றது.

ஐந்தாவதாக, பொதுப்பயன்பாட்டுச் சேவைகள் எனும் திட்டத்தின்கீழ் பூர்த்தி செய்யும் செயற்பாடுகள் மனிதனின் அடிப்படைத்தேவைகளில் ஒன்றான "நுகர்வு" என்னும் விடயம் அமைவதனால் அதனை இலகுபடுத்தும் பொருட்டு பொதுச்சந்தைகள் அமைத்தல், மக்களின் தேவைப்பொருட்களைப் பெறும் வசதியாக காலத்திற்குக் காலம் இவைகளைப் புனரமைத்தல், விரிவுபடுத்தல், நவீனமயப்படுத்தல் போன்ற கருமங்களும், தெரு வெளிச்சத்தைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தல் என்பனவும் இதன்கீழ் சபையால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஆகும். தற்போது மல்லாகத்தில் ஒரு பொதுச்சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்குள் மேலும் இரு சந்தைகள் (அளவெட்டி,

மலைவேம்படி, கூத்தன்சீமா) அமைக்கப்பட இருக்கின்றன. தெருவெளிச்சத்தைப் பொறுத்தவரை தற்போது காங்கேசன்துறையில் இயங்கும் "கூல் எயர்" நிறுவனத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்படுவதால் போதிய தெரு வெளிச்சம் பெறுவதற்கு மின்சாரம் போதாமையால் மட்டுப்படுத்தப்பட்டளவில் முக்கியமான சந்திகளில் மாத்திரம் தெரு வெளிச்சம் உள்ளன.

ஆறாவதாக, நலன்புரிச்சேவைகளும், வசதிகளும் எனும் திட்டத்தின்கீழ் சமுதாய மேம்பாட்டிற்கான ஊக்குவிப்புக்களை வழங்கும் பல்வேறு நலன்புரிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.அதாவது இங்கு வாழ்கின்ற மக்கள் தமது ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக்கும் வகையில் வாசிப்புப்திறனை மேம்படுத்தல், உலக விவகாரங்களை அறிந்து கொள்ளல் போன்ற காரணங்களுக்காகவும் நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டு, பராமரிக்கப் படுகின்றன. முன்பள்ளிச் சிறார்களின் கல்வி அறிவுக்கு வித்தூட்டும் வகையில் பாலர் பாடசாலைகள் நடாத்தப்படுகின்றன. மேலும் சனசமூக நிலையங்களும் இச்சபையின் கீழ் இயங்கிவருகின்றன. இவற்றோடு ஒரு மனிதனின் மகிழ்வான வாழ்விற்கு உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி உளநலமும் முக்கியமானது, என்பதையுணர்ந்து பல விளையாட்டரங்குகள், கலையரங்குகளை அமைத்து கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப்போட்டிகள் போன்றவை காலத்திற்குக்காலம் நடாத்தப்படுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் என்பவை இதன் கீழான செயற்பாடுகளாகும். இச்சபையின் கீழ் இயங்கும்.

1 முன்பள்ளிகள்- 02 (செயற்படாதவை -01)
2 சனசமூக நிலையங்கள் நடாத்தும் முன்பள்ளிகள் - 14
3 பொதுநூலகங்கள் - 04
4 சனசமூக நிலையங்கள் - 86 (செயற்படாதவை - 36 )
5 சிறுவர் பூங்கா - 02 (செயற்படாதவை -01)

ஏழாவதாக, மின்சார சேவை என்னும் திட்டத்தின் கீழ் இப்பகுதி மக்களுக்கான மின்சார சேவையினை வழங்குவதான செயற்பாட்டினைக் கொண்டிருக்கும். அதாவது மின்பாவனையாளருக்குச் சீரான மின்சாரம் வழங்கி வருதல் மின்னூழியர்களை நிர்வாகித்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கூறப்பட்ட ஏழு நிகழ்ச்சித் திட்டங்களில் நான்காவது நிகழ்ச்சித்திட்டமான நீர் வழங்கும் சேவை சபையினால் இதுவரை

மேற்கொள்ளப்பட்டவில்லை. அதேபோன்று மின்சாரம் வழங்கும் செயற்பாட்டைத் தற்போது மின்சார சபை பொறுப்பேற்றுள்ளதால் இனி வரும் காலங்களில் இச்சேவை சபையினால் மேற்கொள்ளப்படமாட்டாது.

பிரதேச சபையானது ஒரு இலாப நோக்கம் கொண்ட அமைப்பல்ல. மாறாக அது பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதற்கென உருவாக்கப்பட்ட அமைப்பாகும். எனவே இதன் அனைத்துச் செலவீனங்களுக்கும் ஒரு நிதியீட்டம் அத்தியாவசியமாக அமைகின்றது. எனவே தான் சபை தனது நிதியத்தினைப் பின்வருவன வற்றிலிருந்து பெற்றுக்கொள்கிறது.

1. வீதவரிகளும் வரிகளும்
2. வாடகைகள்
3. உரிமக்கட்டணங்கள்
4. சேவைகளுக்கான கட்டணங்கள்
5. பற்றாணைச்செலவுகளும், தண்டப்பணங்களும்.
6. ஏனைய அரசிறை வருமானங்கள்
7. அரசிறை மானியங்கள்
8. மூலதன மானியங்கள்

இவ்வருமானங்களைச் சபை மேற்கூறி யுள்ள 7 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பெற்றுக்கொள்கின்றது. சபை தனது எல்லைக்குள் வாழ்கின்ற மக்களின் ஆதனங்களக் காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்து அதில் குறிப்பிட்ட வீதத்தினை வீத வரியாகவும் அறவிடுகின்றது. தனக்குச் சொந்தமான கட்டடங்களை வாடகைக்கு விடுவதன்மூலம் வாடகை வருமானத்தையும் கடைகள் மற்றும் வியாபார நிலையங்கள் இயங்குவதற்கான அனுமதியை வழங்குவதன் மூலம் உரிமக்கட்டணங்களையும், பல்வேறு சேவையினை வழங்குவதன் மூலம் சேவைக்கட்டணத்தினையும், இச்செலுத்துகை களை உரிய காலப் பகுதியில் செலுத்தத்தவறும் சந்தர்ப்பத்தில் அதற்கான தண்டப்பணங்களையும் அறவிட்டுக்கொள்ளும். அரசிறை மானியங்கள், சம்பள மீளளிப்பு போன்ற காரணங்களுக்காக அரசினால் சபைக்கு வழங்கப்படுகின்றது. மூலதன மானியங்கள் என்பது சபையின் பல்வேறு மூலதனச் செயற்பாடுகளுக்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் தொகையாகும். இவ்வாறு வருமானங்களைப் பெற்று வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கமை வாகத் தனது செயற்திட்டங்கள் அனைத்தினதும் செலவீனங்களை மேற்கொண்டு வருகின்றது. சபையின் மூலதன மற்றும் ஏனைய செயற் திட்டங்கள் குறித்து கடந்த 10 வருட காலப் பகுதியை நோக்குவோமானால் அவை பல்வேறு நிலையில் மேற்கொள்ளப்பட்டு இருப்பதை அவதானிக்கலாம்.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் கடந்த சில வருடங்களாகத் தொடரும் யுத்தநிலை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இங்குள்ள பல அமைப்புக்களும் தமது தொழிற் பாட்டில் பல்வேறு பிரச்சனைகள், இடையூறு களிற்கு முகங்கொடுக்கவேண்டி இருந்தமை யினால் தமது நோக்கத்தை அடைவதில் பின்தள்ளப்பட்டுள்ளன. யுத்த நிலையினால் அதிகம் பாதிப்பிற்குள்ளான பிரதேசங்களில் ஒன்றாக இவ்வலிகாமம் வடக்கு பிரதேசமும் அமைவதால் இப்பிரதேச சபையும் தனது செயற்பாடுகள் குறித்து பல பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்தது. அதாவது இப்பிரதேச மக்களின் பாரிய இடம்பெயர்வுகள், ஆதனங்கள் உடமைகளின் அழிவுகள் காரணமாக சபையின் செயற்பாடுகள் அனைத்தும் கேள்விக்குறியாயின். இந்நிலையிற் சபையும் அடிக்கடி இடம்பெயர வேண்டியதாகவும், காங்கேசன்துறை, மயிலிட்டி போன்ற உபஅலுவலகங்கள் இயங்கமுடியாத நிலையும் ஏற்பட்டது. இதனால் சபையின் செயற்பாடுகளில் பெரிதும் மந்தநிலையே காணப்பட்டது. 1995ம் ஆண்டில் இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வின் பின்னர் மல்லாகம் உப அலுவலகக் கட்டிடத்தில் மீளக்குடியேறி செயற்படத் தொடங்கிய பின்னரும்.

1 மக்கள் அதிகளவில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறாமை
2 உப அலுவலகங்கள் தத்தமது சொந்த இடங்களில் தொழிற்பட்ட முடியாமை
3 மக்களின் சொத்துக்கள் ஆதனங்களின் அழிவுகள் காரணமாக அவற்றின் பெறுமதி மதிப்பிடமுடியாமை.
4 சபையின் சொத்துக்கள், ஆவணங்கள், பதிவேடுகள் அழிவடைந்தமை.

போன்ற பல காரணங்களால் சபையின் செயற்பாடுகளில் அதிக மாற்றமேதும் நிகழவில்லை. அதாவது வருமானங்களின் அறவீடுகள் தடைப்பட்டமையாலும், மக்கள் போதியளவில் மீள்க்குடியேறாமையாலும், சபை தனது செயற்பாடுகளை உடனடியாக விரிவாக்க முடியவில்லை. இந்நிலையில் நாட்டு நிலைமைகள் படிப்படியாக சீரடையத் தொடங்கி யாழ்குடாநாடு ஓரளவு வழமைக்குத் திரும்பியது. 1998ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் நடாத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட இருபத்தியொரு பிரதிநிதிகளைக் கொண்ட உறுப்பினர் சபையின் கீழ், சபையின் நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. தமிழர் விடுதலைக்கூட்டணி யின் நிர்வாகத்தின் கீழ் தலைவர், இதன் நிர்வாகத்தினைப் பொறுப்பேற்றார். இவ்வாறு அனுகூலமான நிலைமை தோன்றத் தொடங்கியதை அடுத்து சபையின் செயற்பாடுகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. இச்சபையின் ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சி யினரும் இணைந்து செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியதொன்றாகும். வலிகாமம் வடக்குப் பிரதேச மக்கள் திரும்பி வந்து இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்வதறகான பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு மக்கள் வாழ்வதற்கேற்ற பிரதேசமாக மாற்றியமைக்கப்பட்டன. பலகாலமாக இடம்பெறாதிருந்த மூலதனச்செயற் பாடுகள்

யாவும் மீள ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாக, சபை அலுவலகக் கட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. நூலகங்கள் பழுதுபார்க்கப்பட்டன. மக்களின் போக்கு வரத்தை இலகுவாக்க பல பெருந்தெருக்கள், வீதிகள் புனரமைக்கப்பட்டன. ஒழுங்கைகள் செப்பனிடப்பட்டன. மக்களின் பொதுப் பயன்பாட்டுத் தேவையினைக் கருத்திற் கொண்டு மல்லாகத்தில் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உதவியுடன் சந்தைக்கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது. மேலும் சில சந்தைகள் அமைக்கும் நோக்கில் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டன. பொதுக் கிணறுகள், பொதுக் குளியற் றலங் கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. சனசமூக நிலையங் கள் பல புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மூலதனச் செயற்த்திட்டங் கள் அனைத்தும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து கிடைக்கும்.

1. விசேட மூலதன நிதி
2. பிரமாணஅடிப்படையிலான வேலைத்திட்ட நிதி
3. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டு நிதி
4. வடபகுதி மீளக்குடியமர்வு, அபிவிருத்தி அதிகார சபை நிதி

மற்றும் சபை நிதி என்பவற்றைக் கொண்டு கடந்த இரு வருட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டவையாகும். இதற்கான 1999ம் ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 16,700,000/- வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நடப்பு வருட (2000) மூலதனச் செயற்பாடு களுக்கென அண்ணளவாக 17,700,000/- வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. எனவே இவ்வலிகாமம் வடக்குப் பிரதேச சபையானது தனது செயற்பாடுகள் குறித்து இன்று ஒரு குறிப்பிடக்கூடிய நிலையிலுள்ளது. ஆகவே.

1 தற்போதைய அரசியல் சூழ்நிலையின் சாதகத் தன்மை தொடர்ந்திருத்தல்.
2 இடம்பெயர்ந்து சென்று மக்கள் முழுமையாக மீளக்குடியமர்தல்
3 சபையின் உபஅலுவலகங்கள் யாவும் தத்தம் சொந்த இடங்களுக்குச் சென்று இயங்குதல்
4 மூலதன மானியங்கள் தொடர்ச்சியாகக் கிடைத்தல்
5 சபையின் அரசிறை வருமானங்கள் அதிகரித்தல்

குறிப்பாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மற்றும் தனியார் உற்பத்தி நிலையங்கள் போன்றவை மீள இயங்கும் பட்சத்தில் அவற்றின் மீதான பல்வேறு அறிவீடுகளின் மூலமும் சபையின் அரசிறை வருமானம் கணிசமான அளவால் அதிகரிக்கும்.

ஆகிய சாதகமான சூழ்நிலைகள் நிலவும் சந்தர்ப்பத்தில், சபை தனது முழுமை யான செயற்பாட்டினை வழங்கி, இப்பிரதேசத்தி னதும், மக்களினதும் அபிவிருத்திக்கும், மேம்பாட்டிற்கும் வழிசமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## காத்திருக்கின்றேன்

முப்பொருள் முதல்வ, முருக, என்னிதயச்
சிற்றிலில் நித்தம், களிநடம் புரியும்
வித்தகச் செல்வ, விரும்பி நின்னாணையைச்
சிந்தையிற் கொண்டு சிரமிகப் பணிந்து
ஏழையென்னிதயக் கோயிலில் இனிதே
அன்பு மலர்களை அழகாய்ப் பரப்பி
என்பும் உருக ஏங்கி நிற்கின்றேன்
ஆனால், அந்தோ ஏனோ அறியேன்
அன்பு மலருளும் அலராதவையுள.

இன்பங்காணா ஏழைகள் போலே
இதயங்கனன்று சருகானவை சில
அன்பும் பண்பும் அறியா மாந்தரின்
அணியாய் நின்று அலராதவை சில
பேதம் பேசும் மாக்களைப் போலே
பிரிந்து நின்றே பழுதானவை சில
வேத மறிந்தும் வேதனையுணரார்
இதயம் போலே நெகிழாதவை சில
மலர்கள் தம்முள் மலரா நின்றே

மாநில மாந்தரின் மடமையுணர்த்தின
உயிர்கள் தம்முட் பேதமு முண்டோ
உடலாலன்றோ வேற்றுமை ஈண்டு
உயர்ந்தவ ரென்றுந் தாழ்ந்தவ ரென்றும்
உரைப்பது செய்யுந் தொழிலாலன்றோ
உள்ளவரென்றும் இல்லவரென்றும்
உணர்வதுஞ் சேரும் பணத்தாலன்றோ,
உண்மையிதனை உணர்ந்தவரிலரோ?
உணர்ந்து முரையா திருப்பவருளரோ?

கள்ளமில்லிதயங் கசிந்து நெக்குருக
உள்ளம் நொந்து உணர்வுகலங்கிக்
காணாவுன்னைக் கருத்திற் கொண்டு
வீணாயலையுமென் விதியினை நொந்து
பேணாயுண்மைகள் பேதையென்னில்லில்
வாணாளொழிந்துயிர் வருந்துமிவ்வேளை
வருவாயென்றே காத்திருக்கின்றேன்.

**பிரக்ஞா**

# வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகள், சுடுகாடுகள், மைதானங்கள் தபாலகங்கள் பற்றிய விபரங்கள்

ஐ. சிவலோகநாதன்
வலி வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை

**1.சந்தைகள் : சபையால் பரிபாலிக்கப்படுபவை**

(1) வயாவிளான் சந்தை
(2) பலாலிச் சந்தை
(3) குரும்பசிட்டிச் சந்தை
(4) வீமன்காமம் சந்தை
(5) மல்லாகம் சந்தை
(6) அளவெட்டி மலைவேம்படிச்சந்தை
(7) இளவாலை இறால்மடம் சந்தை
(8) பன்னாலை கூத்தன்சீமா சந்தை

**2)சுடுகாடுகள்:- சபையால் பரிபாலிக்கப்படுகின்றன.**

(1) கட்டுப்பிட்டிச் சுடலை
(2) கொப்புலாவோடைச் சுடலை
(3) தில்லையன் கட்டுச் சுடலை
(4) பாகுதேவன் சுடலை
(5) செம்மண் வாய்க்கால் சுடலை
(6) தச்சன் காட்டுக் சுடலை
(7) ஐயனார் காடு சுடலை
(8) கொத்தியால் சுடுகாடு
(9) இனவொல்லை சுடுகாடு
(10) முருக்கடிச் சுடுகாடு
(11) இத்தி நின்ற காடு சுடுகாடு
(12) குப்பைக்காடு சுடுகாடு
(13) கல்லித்தியடி சுடுகாடு
(14) பிராயடிச் சுடுகாடு
(15) செம்பன் காடு சுடுகாடு
(16) மல்லாகம் சுடலை
(17) கேணிப்பிட்டிச் சுடலை
(18) சாமித்தியன் கூடல்சுடலை
(தம்மளை சுடலை)
(19) காங்கேசன்துறை சுடலை
(20) தையிட்டிச் சுடலை
(21) மயிலிட்டி சுடலை

**3) விளையாட்டு மைதானங்கள்**

(1) காங்கேசன்துறை விளையாட்டு மைதானம்
(2) மயிலிட்டி தெற்கு விளையாட்டு மைதானம்
(3) மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானம்

**4) தபாலகங்கள்**

(I) பிரதம தபாலகங்கள்

1) காங்கேசன்துறை பிரதம தபாலகம்
2) தெல்லிப்பளை பிரதம தபாலகம்
3) அளவெட்டி பிரதம தபாலகம்
4) வயாவிளான் பிரதம தபாலகம்

(II) உபதபாலகங்கள்

1) கீரிமலை உபதபாலகம்
2) மயிலிட்டி உபதபாலகம்
3) பலாலி உபதபாலகம்
4) தையிட்டி உபதபாலகம்
5) ஊறணிகிழக்கு உபதபாலகம்
6) கட்டுவன் உபதபாலகம்
7) குரும்பசிட்டி உபதபாலகம்
8) மாவிட்டபுரம் உபதபாலகம்
9) தெல்லிப்பளை மேற்குஉபதபாலகம்
10) அளவெட்டி வடக்கு உபதபாலகம்
11) கணேஸ்வரம் உபதபாலகம்
12) மல்லாகம் உபதபாலகம்

நன்மை –

வெறுப்பு, பொறாமை, பகட்டு, ஆகியவை மிகவும் இந்நாளில் பரவிட்டன. இவற்றை விலக்கிவிட்டு. அன்புத் தத்துவத்தில் நீங்கள் இணைய வேண்டும். உங்கள் ஆசைகள் நிறை வெய்தினவோ. இல்லையோ, எது நடந்தாலும் அது உங்கள் நன்மைக்கே எனக்கருதுங்கள் கஷ்டமானவற்றைச் சந்திக்கும் போது, நன்மை தரக்கூடிய நாட்கள் வரவிருக்கின்றன. என எண்ணங்கள். நல்லதும் தீயதும் எப்போதும் கலந்தேதான் இருக்கும். ஆகவே இரண்டையும் ஒன்றாக ஏற்கும் மனோபாவத்தை. வளர்த்துக் கொள்ளுங்கள்.

# வலி வடக்கில் வீதிகளும் குளங்களும்

பயணம் செய்வதற்கு உகந்த ஊடகம் பாதை எனப்படும் மனிதனையும் பொணரட்களையும் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு உதவும் ஊடகமாகும். இதனை மார்க்கம், வழி, தெரு, நெடுஞ்சாலை எனவும் அழைக்கலாம்.

## பாதைகள் உருவாக்கம்:

ஆதிகால மனிதன் காட்டிலே தனது உணவுத்தேவை கருதியும் விவசாய வேலை கருதியும் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டியிருந்ததால் ஒற்றையடிப் பாதைகளை உருவாக்கினான். மிருகங்களால் இழுக்கப்படும் வண்டில்களைப் பயன்படுத்த தொடங்கியதும் ஒற்றையடிப்பாதைகள் அகலமாக்கப்பட்டு ஒழுங்கைகள் ஆயின. இன்றும் ஒழுங்கைகள் (மாட்டுவண்டிப் பாதை) பாவனையில் உண்டு.

மோட்டார் வண்டி முதலியன கண்டுபிடிக் கப்பட்டு பாவனைக்கு வந்ததும் ஒழுங்கைகள் கற்கள் பதிக்கப்பட்ட தெருக்கள் ஆயின. அவை மேலும்ள சீரமைக்கப்பட்டு விசாலமாக்கப்பட்டு நெடுஞ்சாலைகள் ஆகவும் மாறின. இவற்றை பெருந்தெருக்கள் என்று அழைப்பதும் உண்டு. இவை இரண்டு நகரங்களையோ மாவட்டங் களையோ இணைப்பவையாக அமையலாம்.

பெருந்தெருக்கள் A,B,C,D,E, என ஐந்து வகுப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் A,B ஆகிய இரு வகுப்பு வீதிகளும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (R.D.A) சொந்தமானவையாகும். இவ்விரு வீதிகளையும் இந்த அதிகார சபையே பராமரித்தும் வருகிறது. A,B வகையைச் சார்ந்த வீதிகள் இருவழிப்பாதைகள் கொண்டதாகவும் நடைபாதை, மழைநீர் வழிந்தோடும் பாதை போன்ற அமைப்புக்களையும் கொண்டாதகவும் காணப்படுகின்றன.

C,D,E வகுப்பு வீதிகள் நகரங்களின் உப வீதிகளாகவோ அல்லது கிராமங்களை இணைக்கும் பாதைகளாகவோ காணப்படுகின்றன. மேற்சொன்ன A,B வகுப்பு வீதிகளில் ஆரம்பித்து அவற்றில் இணையும் வீதிகளாகவும் உள்ளன.

C, D வகுப்பு வீதிகளின் பராமரிப்பும் சொந்தமும் வீதிகள் அபிவிருத்தி திணைக்களத் திற்கு (R.D.D) உட்பட்டதாக காணப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்ற வீதிகளில் E வகை யான எல்லா வீதிகளும் C; D வகையான சில வீதிகளும்தாரிடப்படாத சில வீதிகளும் மேற்சொன்னவீதிகளில் ஆரம்பித்து கிராமங்களினூடாக செல்லும் போக்குவரத்துப்பாதைகளும் இதனுள் அடங்கும். பொதுவாக இவை அகலம் குறைந்ததும் குறுகிய தூரம் உடையதுமாகும். இவற்றில் பெரும்பாலான பாதைகள் மழைவெள்ளம் பாயும் (வெள்ள வாய்க்கால்) ஒழுங்கைகள் ஆகும்.

எமது பிரதேசத்திற்குட்பட்ட வீதிகளின் விபரங்கள்

| N.B அட்டவணை | | | | | |
|---|---|---|---|---|---|
| வீதிகளின் வகை | வீதிகளின் எண்ணிக்கை | வீதிகளின் மொத்தநீளம் | பராமரிப்பு | தன்மை | வீதிக்கான ஒதுக்கீடு |
| A - வகுப்பு | 03 | 28.48 km | R.D.A | தாள் | 35m |
| B - வகுப்பு | 05 | 2348km | R.D.A | " | 25m |
| தேசியதெரு | 02 | 5.7km | R.D.A | " | 15m |
| C | 04 | 76 km | R.D.A | " | 15m |
| D | 18 | 40 km | R.D.A | " | 15m |
| பிரதேசசபை | 175 | 155.15km | R.D.A | தாள், | 15m |
| வீதிகள் | | | | கிறவல், | |

***பிரதான வீதிகள்***

மக்கள் போக்குவரத்துச் செய்யும் பேருந்துகள் செல்லும் வீதிகள்

***விவசாய வீதிகள்:***

விவசாய தேவைக்கு பயன்படுத்தும் நோக்கோடு அமைக்கப்பட்டுள்ளன.

***மீன்பிடி வீதிகள்:***

மீன்பிடித் தேவைக்குப் பயன்படுத்தும் நோக்கோடு அமைக்கப்பட்டுள்ளன.

**நீர்பாய்ச்சு வீதிகள்:**

நீர்ப்பாசன குளங்களைத்தொடர்பு படுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் நிர்மாணம், செப்பனிடுதல் போன்றன எமது பிரதேசத்தை பொறுத்தவரை அபிவிருத்தி அடையவில்லை, என்றே கூறவேண்டும். நவீன வீதி அமைப்பு இயந்திரங்களை பயன்படுத்தியோ அல்லது பாதை சம்பந்தமான நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியோ அமைக்கப் படவில்லை. அத்தோடு தற்போதைய வீதி வாகனப்போக்கு வரத்திற்கு ஏற்ப விசாலமாக்கப் படவும் இல்லை. காரணம் நாட்டில் ஏற்பட்ட யுத்த அழிவுகளும் அவற்றை மீளமைப்பதற்கு போதிய நிதிவளம் இன்மையும், மூலப்பொருட்களை கொண்டு வரக்கூடிய போக்குவரத்து முறைகள் இல்லாமையும் ஆகும்.

இருந்தும் எமது பிரதேசத்தில் A,B,C,D வகுப்பு வீதிகள் தற்போது ஓரளவு சீரமைக்கப்பட்டுள்ளது. வீதி வகுப்புப் பிரிவானது நகரங்கள், வீதியின் நீள அகலங்கள் என்பவற்றை கொண்டே வகைப்படுத்தப்படும்.

உ-ம் யாழ் - கண்டி வீதி A(9)
யாழ் கே.கே.எஸ் வீதி A(16)

உள்ளூராட்சி மன்ற வீதிகள் ஒருமுறை செப்பனிடப்பட்டால் காலத்திற்கு காலம் பராமரிப்பு செய்யப்படுவதில்லை. அதற்கேற்ப நிதி ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. குறிப்பிடத்தக்கது. பெருமளவு பாதைகள் (ஒழுங்கைகள்) வெள்ளம் பாயும் பாதைகளாகவே உள்ளன. எனவே இவ் வீதிகள் செப்பனிடலில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. வெள்ள நீரை வெளியேற்ற ஏற்கனவே திட்டமிடப்படாது ஒழுங்கையில் எல்லை மதில் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் தடையாக உள்ளன. இதனால் பல லட்சம் ரூபா செலவிட்டு ஒரு புதிய செப்பனிட்டும் அதைக் காலத்திற்குக் காலம் பராமரிக்க ஏற்பாடுகள் செய்யப்படாமையால் இவ்வீதிகளின் பயன்பாட்டு காலமானது 2 அல்லது 3 வருடங்களேயாகும்.

அத்தோடு கிராம வீதிகளில் பாரிய வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வகையான விளம்பரங்களை நகர்ப்புற ஒழுங்கைகளில் பார்த்திருப்பீர்கள் யுத்த சூழ்நிலை காரணமாக பாதை மாற்றம் செய்யப்படும் போது கிராம வீதிகளே பயன்படுகின்றன. இதனால் மேலும் பாரிய சேதத்திற்குள்ளாகின்றன. மேலும் கிராமங் களில் ஓலைகளினால் அமைக்கப்பட்டவேலிகள் சீமெந்தினால் மதிலாக உருமாற்றம் பெறும் போது போதிய இடம் பின்தள்ளிப் கட்டப்படுவதில்லை. இதனால் பிற்காலங்களில் வீதிகள் அகலமாக் கலில் பெரும் சிக்கல்கள் உருவாக்கின்றன. கிராமப்புறங்களில் மாட்டுவண்டிகளில் பாவிக்கப் படும் இரும்பு வளையமிடப்பட்ட சில்லின் அமைப்பு வீதிகளில் உடைவை ஏற்படுத்தும் ஒரு முக்கிய காரணியாகும்.

பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் தொகை அதிகரித்தமை பாடசாலைகள், தொழிற் சாலைகள் ஒரே நேரத்தில் ஆரம்பமாகி ஒரே நேரத்தில் முடிவடைவது போன்றன போக்குவரத்து பிரச்சனைகள் அதிகரிப்பதற்குக் காரணமாகும். போக்குவரத்து அதிகரிப்பதற்கு ஏற்ப வீதிகளை அகலமாக்குதல், புதிய வீதிகளை அமைத்தல் என்பன செய்யப்படுதல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கு இடப்பற்றாக்குறையும், பராமரிப்புச் செலவுகள் அதிகமானதும் பிரச்சினையாகவுள்ளன.

வீதிகளை விசாலமாக்குவதற்கு பின்வரும் உபவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. நிரந்தர கட்டிடங்களை அமைத்தலானது வீதியின் மையத்திலிருந்து பின்வரும் தூரங்களில் அமைத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| A வகை வீதிக்கு - | 17.5m |
| B வகை வீதிக்கு - | 12.5m |
| C வகை வீதிக்கு - | 7.5m |
| D வகை வீதிக்கு - | 7.5m |












உள்ளூராட்சி மன்ற வீதிகள் வீதியின் மையத்திலிருந்து 25 அடி தூரத்தில் அமைத்தல் வேண்டும். என்ற பொது விதியானது பிரதேச சபை கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதியானது உள்ளூராட்சி மன்றங்களின் எல்லா வீதிகட்கும் பொருந்தாது எனலாம். இத்தூரமானது ஒழுங்கையின் வருங்காலத்தேவை போன்றவற்றை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தினால் நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானியில் பிரசுரம் செய்யப்படுதல் வேண்டும். பிரதேச சபையினால் இது வரை கூறப்பட்ட நடைமுறை


பின்பற்றப்படவில்லை. ஆனால் வருங்காலத்தில் இது போன்ற நடைமுறை பின்பற்றப்பட்டு இதன் பின்பே புதிய கட்டிடங்களை அமைப்போர் தமது கட்டிட எல்லையை நிர்ணயம் செய்ய அனுமதிக்கப்படும்.


வீதி அமைப்பில் நவீன உத்திகள் கையாளப்படாமை மற்றொரு பிரச்சனையாகும். நவீன உத்திகள் கையாளப்படும் போது வீதி அமைப்பிற்குரிய செலவுகள் குறையும். இங்கு கடைப்பிடிக்கப்படும் முறை ஏறத்தாழ நூறுவருடங்களுக்கு முந்திய முறையாகும். ஆனால் வேறு மாவட்டங்களில் நவீன முறைமைகள் கையாளத் தொடங்கப்பட்டுவிட்டன. அத்துடன் வீதிகள் போக்குவரத்துக்கு அத்தியாவசியமான அறிவுறுத்தல் குறியீடுகள் அமைக்கப்படுவதில்லை. குறிப பிட்ட இடங்களுக்கு போக்குரவத்து பயணி களின் எண்ணிக்கை நகரும் வாகனங்களின் எண்ணிக்கை பாடசாலைகள் அமைந்துள்ள இடங்கள் என்பவைக்கேற்ற அவ்விடங்களில் உள்ள வாகன வேகங்கங்கள் மட்டுப்படுத்துவதை காட்டும் குறியீடுகள் இடப்படுவதில்லை. மற்றும் வாகனப் போக்குவரத்து அத்தியாவசியமான குறியீடுகளும் இடப்படுவதில்லை. இதனால் விபத்துக்கள அதிகரிக்கிறது.


வீதிகளின் நீண்டகால பாவனைக்காவும் போக்குவரத்து பிரச்சனையை தீர்ப்பதற்காவும் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்


1. பெருந்தெருக்களை அகலமாக்கல்
2. பாதசாரிகளுக்கான நடைபாதைஒதுக்கீடு
3. வெள்ளநீர் பாய்ந்து ஓடக் கூடிய பக்ககான்கள் அமைத்தல்
4. வீதிகளுக்கான ஒழுங்குக் குறியீடுகள், அறிவுறுத்தல்களை அமைத்தல்
5. நகரமயமாக்கல் தொடங்கும் போது வீதிகளின் பரிமாணங்களைக் கருத்திற் கொள்ளல்
























தடைப்பாதை

நீ. 900 அல்லது 1800 மி.மீ வரை
அ. 300 அல்லது 400 மி.மீ வரை
த. 50 அல்லது 200 மி.மீ வரை

1997 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வீதி வேலைகள்

| | | |
|---|---|---|
| 1) | அளவெட்டி மாரி அம்மன் வீதி | 1500 |
| 2) | பங்களா வீதி | 2000 |
| 3) | மில் வீதி | 1500 |
| | | 5000 |

1998 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வீதி வேலைகள்

| | | |
|---|---|---|
| 1) | குட்டிப்புலம் கோணாவளை வீதி | 1500 |
| 2) | இளவாலை பத்தாவத்தை வீதி | 2400 |
| 3) | அலுக்கை வீதி | 1600 |
| 4) | வறுத்தலைப்பிள்ளையார் வீதி | 1700 |
| 5) | கத்தன்சீமா வீதி | 2500 |
| 6) | போயிட்டி மாரீசன்கூடல் வீதி | 3000 |
| 7) | கூட்டுவன்புலம் பாடசாலை வீதி | 1500 |
| 8) | கோணப்புலம் வீதி | 1000 |
| | | 15200 |

1999ஆம் ஆண்டு செய்யப்பட்ட வீதி வேலைகள்

| | | |
|---|---|---|
| 1) | மகாத்மா வீதி | 2700 |
| 2) | பங்களா வீதி | 2000 |
| 3) | கொட்டோலை வீதி | 1500 |
| 4) | கலைச்செல்வி வீதி | 1000 |
| 5) | இராவத்தை வீதி | 500 |
| 6) | பழைய சோடாக்கம்பனி வீதி | 650 |
| 7) | குளமங்கால் வீதி | 500 |
| 8) | காட்டுப்புலம் வீதி | 300 |
| 9) | குட்டியப்புலம் கோணாவளைவீதி | 2200 |
| 10) | கும்பலைக்குள வீதி | 400 |
| 11) | காளிகோயிலடி ஆராய்ச்சீமாவீதி | 450 |
| 12) | பெரியமதவடி வீதி | 2000 |
| 13) | சதானந்தா பாடசாலை வீதி | 1000 |
| | | 15200 |

# குளங்கள்

யாழ்ப்பாணம் பாலைவனமாகக் கூடிய சாத்தியக் கூறு பற்றி அண்மைக்காலமாகக்(கூடிய) ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறியுள்ளதை பத்திரிகை வாயிலாகவோ வேறு தொடர்பு சாதனங்கள் வாயிலாகவோ அறிந்துள்ளோம். இந்நிலப்பரப்பில் இயற்கையாகவே நிலத்தினடியிற் கடல்நீர் செறிந்துள்ளது. இவ்வாறு ஆழத்தில் உள்ள உவர்நீர் அடிமட்டத்திலேயோ அல்லது அதற்கு கீழேயோ இருக்க மழைநீரானது ஊடுவிச்சென்று உவர் நீரிலேயே நிற்பதால் கிணறுகள் மூலம் நன்னீரைப் பெறமுடியும்.

குடாநாட்டில் மழைநீரில் 99% கடலுக்குச் செல்வதைத் தவிர்த்து நிலத்தின் கீழ் தேக்கி வைக்க ஆவன செய்வதன் மூலம் இக்குடாநாட்டு நீர் உவராவதைத் தவிர்க்க முடியும் என நீர்வல்லுநர்கள் கூறுகின்றனர். இப்பணியில் நாம் எல்லோரும் இணைவது அவசியமாகும். இதற்கு செய்யவேண்டி யவையாவன

1 எமது பிரதேசத்தில் உள்ள சிறுகுளங்களைப் பராமரித்து மழைநீரைச் சேகரிப்பதன் மூலம் நிலக்கீழ் நீரைப்பேண முடியும்.

2 அமைப்பிலுள்ள குளங்ளை வாய்க்கால் மூலம் ஒன்றிணைத்து மிதமிஞ்சிய நீரை கடலுக்கு அனுப்பாமல் எமது பிரதேசத்தின் நீர் வளத்தைப் பேணமுடியும்.

   இக்குளங்கள், வாய்க்கால்கள் வலைபோல் இணைக்கப்பட்டிருப்பதால் பெருமளவு மழை பெய்யும் காலங்களில் மிதமிஞ்சிய நீரை, கடல் நீரேரிக்குள் செலுத்தி வெள்ள அழிவு ஏற்பவதைத் தடுக்க முடியும். மேற்படி அமைப்பு மல்லாகம் அளவெட்டி பகுதிக்குளங்களில் காணப்பட்டு தற் போது அழிவுகளுக்குட்பட்டுள்ளதாக மூதாதையர் கூறக் கேள்விப்பட்டிருகிறோம். இவற்றைக் கண்டுபிடித்துச் சீரமைக்கவேண்டியது எமது கடமையாகும்.

எமது பிரதேசத்தில் நன்னீரானது உவர் நீராக மாறுவதில் முக்கிய பங்கு வகிப்பது காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்கான மூலப் பொருள் சுண்ணாம்புக்கல் தோண்டும்போது உருவாகும் ஆழமான நிலப்பகுதிகளில் கடல்நீர் நிலப்பகுதியுள் உட்புகுதலாகும் ஆனால் அண்மைய 10 வருடங்களாக மேற்படி சீமெந்து ஆலை இயங்காததால் இப்பிரச்சினை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாவனை முன்னைய காலங்களில் குறைவாக காணப்பட்டது. நீரைத் துலாவின் உதவியால் இறைத்தனர். இதனால் வெளியேற்றப் படும் நீரின அளவு மிகவும் குறைவாகவே இருந்தது. தற்போது மின்சாரம், நீர் இறைக்கும் இயந்தரம் பயன்படுத்தப்படுவதால் நீர்பாவனை விகிதம் கூடுவதோடு நீர்வீணாதலும் கூடுதலாகக் காணப்படுகிறது.

புத்தூரில் உள்ள நிலாவரைக்கிணறு மிக ஆழானதும் அகலமானதும் ஆகும். இக்கிணற்றை ஆராய்ந்த வல்லுநர்கள் மேற்பகுதியில் நல்ல நீரும் அதன் கீழ் உவர்நீரும் அதன் ஆழத்தில் ஐதரசன் சல்படைட் கலந்த நீரும் இருப்பதாக அறிந்தனர். மேற்பகுதி நீர் புத்தூர், சிறுப்பிட்டி விவசாயிகளால் வாழைச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது காலச் சூழ்நிலைகள் காரணமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது.

குரும்பசிட்டியில் அமைந்துள்ள பேய்க் கிணறு என அழைக்கப்படும் கிணற்று நீரானது எவ்வளவு நேரம் இறைத்தாலும் நீர் குறைவு படாது என்பர் இதேபோன்ற கிணறுகள் வேறு சிலவும் எமது பிரதேசத்திலும் உண்டு.

தெல்லிப்பளைப் பிரதேசசெயலர் பிரிவில் வழுக்கையாறு வடிகால் திட்டமானது தெல்லிப்பளையில் தொடங்கி பினாக்கைக்குளம். கந்தரோடைக்குளம், கட்டுடைக் குளம், ஆனைக்கோட்டை வழியாகச் சென்று அராலிக் கடல் நீரேரியை அடைகின்றது 75% மேற்பட்ட நீர் கடல் நீரேரியை அடைகிறது. இவ்வாறு கடல்நீரேரியை சென்றடையும் விகிதத்தை தடுக்க உரிய ஏற்பாடு செய்வதன் மூலம் இங்குள்ள விவசாய நிலங்கட்கு நீரைப்பயன்படுத்துவதுடன் நிலக்கீழ் நீரின் அளவையும் கூட்டலாம்.

மக்களிற்கு குளத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு, குளங்கள் தூர்ந்து போவது தடுப்பதன் மூலமும், நிலநீரைப் பேணமுடியும்.

மழைநீரானது நிலத்தின் கீழ் சேமிக்கப்படும்போது நன்னீரின் அளவு கூடி உவர்நீர் கீழே அமுக்கப் பட்டு குடாநாட்டின் நிலத்தின் கீழான நன்னீரின் அளவை அதிகரிக்கச் செய்ய முடியும். இயந்திரம், மின்மோட்டார் பம்பிகளின் பாவனை குறைந்தால் விரைவாக நிலநீர் வெளியே உறிஞ்சப்படுவதை தடுத்து, அவ்வெளியில் உவர்நீர், நிரம்புவதைத் தடுக்கமுடியும்.

"ஆறில்லா ஊரிற்கு அழகுபாழ்" என்பார் இதற்கு இணங்க சகல வளமும் உள்ள வலிகாமம் வடக்கின் எழிலிற்கு வழுக்கையாறு அக்குறையை நிவர்த்தி செய்கிறது. இவ்வழுக்கையாறு நீர்ப்பாசனத் திட்டத்தை ஜெர்மனி தொழிநுட்பநிறுவனம் (G.T.Z) இப்பகுதி மக்களின் பங்களிப்புடன் நிறைவுசெய்து தரவுள்ளதாக அறியக்கிடக் கின்றது. இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் பெருநன்மையடைவர். வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலுள்ள குளங்களின் விபரம் : 34 குளங்கள் உண்டு {தகவல் :- வலிகாமம் வடக்கு உதவி அரச அதிபர் பிரிவு குளங்கள் சுவடுகாணல் அளவைப்படம்} இதில் 1996, 1997, 1998, 1999 காலப்பகுதிகளில் UNHCR நுண்கருத்திட்டம், உலக உணவுதிட்டம், பிரமாண அடிப்படை போன்ற நிதிவளங்களினால் 15 ற்கு மேற்பட்ட குளங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. ஏனைய குளங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளதால் நீண்ட காலம் பராமரிப்பின்றிக் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன.

உங்கள் வார்த்தையைக் காப்பாற்றுங்கள் சத்தியத்தை கடைப்பிடியுங்கள் எங்கே நன்றி காட்டவேண்டுமோ அங்கேநன்றி செலுத்துங்கள். உங்கள் தன்னம்பிக்கையில் உறுதியாக இருங்கள். இந்த விதிமுறைகளைப் பின்பற்றினால்,உங்கள் வழியில் வரும் எவ்வித இடையூறுகளையும் சுலபமாகக் கடக்கமுடியும்.

உங்கள் தன்னம்பிக்கையைக் கைவிடாதீர்கள் சுயகௌரவத்தையும் விட்டுக்கொடுகாதீர்கள் சுயநலத்தியாகம் செய்யத் தயாராய் இருங்கள். பகவான் பல முறை கூறியபடி, ஒவ்வொருவரிடமும் இருக்கும் ஆத்மா ஒன்றேதான். ஆகையால், சிலர், உயர்ந்தவர் சிலர் தாழ்ந்தவர் என்ற எண்ணங்களால் நீங்கள் அலைக்கழிந்து போகாதீர்கள்.

**இன்பம் என்பது இரண்டு துன்பங்களின் இடைவெளியே.**

**உங்கள் ஆசைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்**

**உங்களது தெய்வீக அன்பை வளர்த்துக்கொண்டு அதன்மூலம் ஆனந்தத்தை அதிகமாக அனுபவியுங்கள்.**

**தூய்மை**

தெய்வீகத்தை அடையவேண்டுமானால் முதலில் தூய்மையை வளர்த்துக்கொள்ளவேண்டும் அத்தகைய தூய்மை வளர அனைவருடனும் ஒத்திசைவாக பழகவேண்டும் அப்போதுதான் உங்கள் இலக்கை அடையமுடியும்

# வலி வடக்கு பிரதேச மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு

**ஏ சின்னத்தம்பி** B.A(Ceylon)
தலைமைக் காரியாலயக்
கூட்டுறவுப் பரிசோதகர்

வலிவடக்குப் பகுதியில் அமைந்துள்ள அருணோதயாக்கல்லூரியில் இயங்கிய பாட சாலைக் கூட்டுறவுச் சங்கமே யாழ் மாவட்டத் திற் பதிவுசெய்யப்பட்ட முதலாவது கூட்டுறவுச் சங்கமாகும். யாழ் மாவட்டத்தில் முதன் முதலில் கூட்டுறவுச் சங்கம் வலிவடக்கு பிரதேசத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்ற வரலாற்று பெருமையுடன் இப்பிரதேசத்தின்கூட்டுறவு வளர்ச்சி ஆரம்பித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் பல்வேறு வகைப்பட்ட 101 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. காலச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் பல சங்கங்கள் செயற்பாடற்று விட்டன. தற்போது 47 கூட்டுறவுச் சங்கங்களே இயங்கி வருகின்றன.

இலங்கையின் கிராமியப் பொருளாதார வளர்ச்சியில் 1911ல் இருந்து கூட்டுறவு அமைப்புக்கள் முக்கிய இடம் வகித்து வருவதை அவதானிக்கலாம். அதன் அடிப்படையில் இப்பிரதேசத்தில் 80%மான மக்கள் சிறு நில விவசாயத்தில் ஈடுபட்டு ஏதோ ஒருவிதத்தில் கூட்டுறவு அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டு வந்துள்ளனர். இதனை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டடங்களே சான்றுபகர்கின்றன. இப்பகுதி விவசாயிகளினால் ஏற்படுத்தப்பட்ட விவசாய உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் தாம் ஈட்டிய இலாபத்திலிருந்து பல்வேறு கிராமங்கள்தோறும் பல கூட்டுறவுக் கட்டடங்களை அமைத்தன. இதனைத் தொடர்ந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் 1971ல் புனரமைக்கப்பட்டு பாரிய பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களாக மாற்றப்பட்டன. தற்போது இவை இப்பிரதேச மக்களின் சமூக பொருளாதார விடிவிற்காக உழைத்து வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் அவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மக்களிற்கு என்ன தேவைகள் இருந்ததோ அவற்றை பூரணமாக வழங்கி வந்ததனை வரலாறு கூறுகிறது. காலப்போக்கில் அரசியல், பொருளாதார மாற்றங்களினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஒரு சில கூட்டுறவு அமைப்புக்கள் இக்காலச் சூழ்நிலையில்தேவையற்ற தொன்றாகவும் இயங்க முடியாத தொன்றாகவும் இருந்த காரணத்தினால் அவை செயலிழந்துள்ளன. குறிப்பாக சிகரட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், வைத்திய சாலைக் கூட்டுறவுச் சங்கம், தச்சுதொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றைக் கூறலாம்.

பின்வரும் முக்கிய சேவைகளை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன.

1. அத்தியாவசிய உணவுப்பொருட்களை நியாய விலையில் வழங்கி, சந்தை விலையைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றன. அத்துடன் இடம்பெயர்வின்போது மக்கள் எங்கு இடம் பெயர்ந்து இருந்தாலும் அந்த இடத்துக்குச் சென்று பொருட்களை விநியோகித்து வருகின்றன.

விவசாயிகளுக்கு கடன் வழங்கல்,விதை, கிருமிநாசினி, பசளை போன்ற உள்ளீடுகளை வழங்கி உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு சந்தை விலையைத் தீர்மானிக் கின்றன. (இன்றைய சூழலில் சந்தைப்படுத் தல் நடவடிக்கை சாத்திய மற்றதொன்றாகக் காணப்படுகிறது).

1. கால்நடை வளர்ப்புக்கான சகல வசதி களையும் வழங்கல்.
2. பனை, தென்னை ஆகியவற்றிலிருந்த சகல மூலப்பொருட்களையும் பயன்படுத்தி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல்.
3. வேலைவாய்ப்பு வழங்கல்.
4. அரசால்வழங்கப்படும் நிவாரணத்தை உரியவர் களுக்கு சரியான முறையில் வழங்கல்,

அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கடன்களை உரியவர்களுக்கு வழங்கி உரிய நேரத்தில் அறவிட்டு, புதியவர்களுக்கு கடன் வழங்கல் ஆகிய செயற்பாடுகளால் நம்பிக்கை முகவராக இயங்குதல்.

5. கல்விகலாச்சார வளர்ச்சியை மேம்படுத்தல்.

தற்போதய சூழ்நிலையில் இப்பகுதி மக்களின் பொருளாதார விடிவிற்காகப் ப.நோ.கூ சங்கங்கள் ப. தெ. வ.அ. கூ. சங்கங்கள், கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன உழைத்து வருகின்றன. இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்களின பயன்பாட்டைத் தனித்தனியாக ஆராய்வதே பொருத்தமானதாகும்.

வலி வடக்கு பிரதேசத்தில் தற்போதய நிலையில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் விபரம்

| சங்கங்களின் வகை | எண்ணிகை | உறுப்பினர் தொகை | பணியாளர் | நுகர்ச்சி கிளைகள் | வேறு முயற்சிகள் |
|---|---|---|---|---|---|
| பல நோக்குக் கூ. சங்கங்கள் | 2 | 17757 | 253 | 37 | 10 |
| பனை தெ.வ.அ.கூ.சங்கம் | 1 | 1619 | 18 | 5 | 3 |
| கடற்றொழிலாளர் கூ. சங்கங்கள் | 7 | 1047 | — | — | 2 |
| கால்நடைவளர்ப்போர் கூ. சங்கம் | 1 | 475 | 05 | — | 5 |
| சிக்கன கடனுதவு கூ. சங்கங்கள் | 35 | 3600 | — | — | 2 |
| தொழிலாளர் கூ.சங்கம் | 1 | 15 | — | — | 2 |

**1.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்**

இவ்வகைச் சங்கங்கள் எந்த நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களுடன், மேலதிகமாக அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரண விநியோக வேலை களையும் செய்துவருகின்றன. அத்துடன் அரசசார்பற்ற நிறவனங்களின் கடன் உதவிகளையும் பெற்று உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதோருக்கும் வழங்கும் முகவராகவும் கடமையாற்றி வருகின்றன. தற்போதைய நிலையில் இச்சங்கங்களின் முக்கிய செயற்பாடாக இவ்விரு செயற் பாடுகளுமே அமைந்துள்ளதுடன், இவை மக்களின் பிரதான தேவையைப் பூர்த்தி செய்வனவாகவும் உள்ளன. இவற்றின் முக்கியத்துவத்தை ஒருவருடத்துக்கான தரவுகளின் அடிப்படையில் நோக்கலாம்.

| சங்கத்தின் பெயர் | காசு விற்பனை மில்லியனில | நிவாரண விநியோகம் மில்லியனில | நிகர லாபம் ரூபாவில் |
|---|---|---|---|
| தெல்லிப்பளை ப.நோ.கூ.ச | 78 | 63 | 600000 |
| அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.ச | 37.3 | 27.4 | 360000 |
| | 115.3 | 90.4 | |

**தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தால் வழங்கப்பட்ட கடன் விபரம்.**

| கடன் வகை | எண்ணிக்கை | பெறுமதி (ருபாவில்) |
|---|---|---|
| விவசாயமும் விரிவாக்கமும் | 13 | 119550 |
| பணியாளர் சகாயக் கடன் | 42 | 243600 |
| தடைக் கடன் | 6 | 103000 |
| சுயதொழில்முயற்சிக்கடன் யு.என்.டி. பீ | 81 | 1438500 |
| | 142 | 1904650 |

**அளவெட்டி – மல்லாகம் ப. நோ.கூ. சங்கத்தால் வழங்கப்பட்ட கடன் விபரம்**

| கடன் வகை | எண்ணிக்கை | பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|
| விவசாயமும் விரிவாக்கமும் | 81 | 292000 |
| பணியாளர் கடன் | 35 | 135600 |
| தடைக் கடன் | 11 | 151600 |
| சுயதொழில்முயற்சிக்கடன் | 175 | 1753740 |
| | 302 | 2332940 |

**அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோரின் திரட்டிய சேமம் :**

| சங்கத்தின் பெயர் | |
|---|---|
| தெல்லிப்பழை ப.நோ. கூ. ச | 18 மில்லியன் |
| அளவெட்டி மல்லாகம் ப.நோ. கூ. ச | 13 மில்லியன் |
| | 31 |

**ஓய்வூதியம் பெறுவோர்**

| | |
|---|---|
| தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் | 206 பேர் |
| அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம் | 86 பேர் |
| | 292 |

யு.என்.எச்.சி.ஆர் (U.N.H.C.R) நிறுவனத்திடம் ப.நோ.கூ.சங்கங்கள் பெற்ற கட்டடத் திருத்த நிதி

| | |
|---|---|
| தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம் | ரூ 499900 |
| அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் | 701675 |
| | 1201575 |

இப்பிரதேசத்தில் இரு ப.நோ. கூ.சங்கங்கள் சேவையாற்றி வருகின்றன. தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் இடம்பெயர்வுக்கு முன் 2 மொத்த விற்பனை நிலையங்களையும், 44 நுகர்ச்சிக் கிளைகளையும், மின்தறி நிலையம், கோழித்தீன் தொழிற்சாலை உட்பட 15 ஏனைய செயற்பாடுகளையும் அத்துடன் 13,521 அங்கத்தவர்களையும், 253 பணியாளர்களையும் கொண்டிருந்தது. மீளக்குடியமர்வின் பின் தனது எல்லைப்பரப்பில் 80% மான பிரதேசங் களை இழந்து 1/5 பகுதி பிரதேசத்தில் மட்டும் செயற்படுகின்றது. அத்துடன் வலி வடக்கு பகுதி மக்கள் வசிக்கும். ஏனைய பிரதேச செயலர் பகுதிகளிலும் கிளைகளை அமைத்துச் செயலாற்றி வருகின்றது. இந்நிலையிலும் 2 மொத்த விற்பனை நிலையங்களையும், 24 நுகர்ச்சிக் கிளைகளையும், புடவை நிலையம், இரும்பு நிலையம், சிற்றுண்டிச்சாலை, மருந்தகம், தொலைத்தொடர்புசேவை, நிழற்பிரதி சேவை, கிராமியவங்கி, விவசாயப் பண்ணை, பொதி செய்தல், வாகனச் சேவை உட்பட 10 ஏனைய சேவைகளையும் செய்துவருகிறது. அங்கத்துவம் 13849 ஆக அதிகரித்ததுடன் பணியாளர் தொகை 178 ஆகக் குறைந்துள்ளது. எனினும் வருடத்தில் 6 லட்சம் ரூபா நிகரலாபமீட்டப் படுகிறது.

அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் இடம்பெயர்வுக்கு முன் 1 மொத்த விற்பனை நிலையத்தையும், 11 நுகர்ச்சிக் கிளைகளையும், 7 ஏனைய செயற்பாடுகளையும் அத்துடன் 3600 அங்கத்தவர்களையும் கொண்டிருந்தது. மீளக் குடியமர்தவின் பின் தனது எல்லைப் பரப்பிற்குள் முழுமையாக வந்துள்ளமையினாலும், தனது எல்லைப்பரப்பிற்கு வெளியில் கிளைகளை

அமைத்ததினாலும் ஒரு மொத்த விற்பனை நிலையத்தையும், 13 நுகர்ச்சி கிளைகளையும் விவாசாய உள்ளீடு தவிர்த்து எரிபொருள் நிலையம், புடவை, கிராமிய வங்கி, பொதி செய்தல், தொலைத்தொடர்பு சேவை, வாகனச் சேவை உட்பட 6 ஏனைய சேவைகளையும் செய்து வருகின்றது. அங்கத்துவம் 3908 ஆக அதிகரித்ததுடன் 75 பணியாளர்களும் கடமை யாற்றுகின்றனர். அத்துடன் வருடாந்தம் 360000/- நிகரலாபம் ஈட்டப்படுகிறது.

இரு ப.நோ.கூ. சங்கங்களினாலும் வலி வடக்கு பிரதேசத்தில் மொத்தம் 444 பேருக்கு பல்வகைக் கடன்களாக ரூபா 4237590/- வழங்கப்பட்டுள்ளது. இதனால் மீளக் குடியமர்ந்த மக்கள் வீடு திருத்தம், சுயதொழில், விவசாயம் ஆகிய முயற்சிகளில் ஈடுபட்டுத் தமது தேவைகளை நிறைவேற்றியுள்ளனர். இப்பிரதேச மக்கள் ப.நோ.கூ. சங்கங்களின் ஒரு பிரிவான கிராமிய வங்கிகளில் ஏறக்குறைய 31 மில்லியன் ரூபாவை சேமித்துள்ளனர். அத்துடன் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற 292 உத்தியோகத்தர்கள் மாதாந்தம் தமது ஓய்வூதி யத்தை கிராமிய வங்கிகளுடாகப் பெற்று வருகின்றனர். மீளக்குடியமர்தலுக்காக அரசினால் வழங்கப்பட்ட 5000/-ஐ இப்பகுதி மக்களுக்கு ப. நோ. கூ சங்கங்களே தங்களது கிராமிய வங்கிகளுடாக ஒழுங்கான முறையில் வழங்கியுள்ளன. இப்பிரதேசத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கங்கள் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத் திடமிருந்து ரூபா 1201575/- நிதி உதவியைப் பெற்று கட்டடத் திருத்த வேலைகளைச் செய்துள்ளன. இதில் தெல்லிப்பழை ப. நோ.கூ. சங்கம், துர்க்காபுரம், மின்தறி நிலையம், கோணாவளை குட்டியப்புலம், பன்னாலை, இளவாலை ஆகிய 5 கிளைகளையும் புனரமைக்க 499900/-ஐ செலவிட்டுள்ளது. அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் தலைமை அலுவலகக் கட்டடத்தைப் புனரமைக்க 701675/- ஐ செலவு செய்துள்ளது. இரு ப.நோ.கூ. சங்கங்களும் பல ஒப்பந்த வேலைகளைச் சிறந்த முறையில் செய்து முடித்துள்ளன. அத்துடன் மொத்தம் 276 பணிப்பாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி மாதாந்த வேதனத்தையும் செலுத்தி வருகிறது.

## 2 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் :

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க எல்லைப்பரப்பில் தொழில் செய்வோர் தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ. சங்கத்திலும், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்க எல்லை பரப்பில் தொழில் செய்வோர் சுன்னாகம் ப.தெ.வ அ.கூ சங்கத்திலும் அங்கத்துவம் பெற்று செயற்பட்டு வருகின்றனர். தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ சங்கமே இப்பிரதேசத்தில் செயற்படு கின்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமாகும்.

இச்சங்கத்தில் தொழிலாளர்களே அங்கத்தவர் களாக இருந்து வருகின்றனர். இவர்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களைச் சங்கம் கொள்வனவு செய்து. விற்பனவு செய்து அதற்கான பணத்தை அங்கத்தவர்களுக்கு வழங்கி வருகின்றது. இதனால் இத்தொழிலைச் செய்கின்ற சமூகத்தினரின் சமூக, பொருளாதாரகல்வி, கலாச்சார வளர்ச்சியில் கூட்டுறவு அமைப்பு பெரும்பங்கை வகிக்கின்றதெனலாம். இவ்வகைச் சங்கங்களே உண்மையான அடிமட்ட மக்களின் சமூக பொருளாதாரத்தை விருத்தி செய்யும் கூட்டுறவு அமைப்பு என்ற ஸ்தானத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றன. இந்த வகையில் இப்பகுதியில் இயங்கும் தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ.சங்கம் இடம்பெயர்வுக்கு முன் 1619 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. 17கள்ளு கொள்வனவு விற்பனை நிலையங்கள், பனை வெல்ல உற்பத்தி நிலையம், போத்தலில் கள்ளு அடைத்து விற்றல், செறிவு குறைந்த மதுசார உற்பத்தி, பனம் கைப்பணிப்பொருள் உற்பத்தி, பனாட்டு உற்பத்தி விற்பனை, மென்பான உற்பத்தி, பாலர் பாடசாலை ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டு 53 பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கியிருந்தது. மீளக்குடியமர்பின் முழுமையாகத் தொழிற்பட முடியாத நிலையில் 69 மகளிர் உட்பட 249 அங்கத்தவர் களையும், 18 பணியாளர்களையும் கொண்டு 5 கள்ளு கொள்வனவு, விற்பனை நிலையங்கள், வடிசாலைக்கும் கள்ளு அனுப்புதல், போத்தல் கள் அடைத்தல், விற்பனை, கற்பக பல்பொருள் விற்பனை, 5 பாலர் பாடசாலை ஆகிய செயற்பாடு களைச் செய்து வருகின்றது வருடத்தில் 576000

போத்தல் கள்ளு கொள்வனவு செய்து விற்பனவு செய்கின்றது. வருட முடிவில் ரூபா 2 (இரண்டு) லட்சம் நிகரலாபம் ஈட்டப்படுகின்றது. அங்கத்தவர்கள் கட்டாய சேமமாக ரூபா 1274000/- சேமித்துள்ளனர். இச் செயற்பாடு தமது அங்கத்தவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு சங்கம் செய்த சேவையாகும். இது மட்டுமல்ல திருமணப்பதிவு இடம்பெறாத அங்கத்தவர்களுக்கும், அப்பகுதி மக்களுக்கும் திருமணப் பதிவுகளை இலவசமாகச் செய்து வருகின்றது.

### 3. கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

கால்நடை வளர்க்கும் மக்களை உறுப்பினர்களாகத் கொண்ட இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அப்பகுதி மக்களிற்கு நல்லினக் கால்நடைகளைப் பெற்றுக் கொடுத்தல், அவற்றுக்கான தீவனங்களை கொள்வனவு செய்து விநியோகித்தல், உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தல், கால் நடைகளைச் சினைப்படுத்தல், கால்நடைகளுக் கான தடுப்பூசி போடுதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. இந்தவகையில் வலி வடக்குப் பிரதேசத்தில் இருக்கும் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்வுக்கு முன் 417 அங்கத்தவர்களைக் கொண்டு இயங்கி தடுப்பூசி போடுதல், சினைப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது. மீளக்குடியமர் தலின் பின் 475 மக்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கிவருகிறது. அத்துடன் கால் நடைகளுக்கு தடுப்பூசி போடுதல், சினைப் படுத்தல், கோழிக்குஞ்சு உற்பத்தி விற்பனை, மருந்து விற்பனை, முட்டை விற்பனை, இறைச்சிக் கோழிவிற்பனை, பால்விற்பனை, புல் வளர்த்தல் ஆகிய தொழிற்பாடுகளைச் செய்து வருகின்றது.

மீளக்குடியமர்தலின் பின் இச்சங்கத்திற்கு யு.என்.டி.பி நிறுவனத்தினால் 167500 ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சு பொரிக்கும் கருவிகளும் உபகரணங்களும் நன்கொடையாகக் கிடைத்துள்ளன. ஒரு தடவையில் 60 கோழிக் குஞ்சு பொரிக்கும் 40 பொரி கருவிகளும், 40 வெப்பமானிகளும், 20 ஈரமானிகளும் அங்கத்தவர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வலி வடக்கு பிரதேசசெயலரின் நிதியில் இருந்து 10,000ரூபா பெறுமதியான "மாஸ்'' தயாரிக்கும் உபகரணங்களும், 70,000/= பெறுமதியான பால் சேகரிக்கும் குளிரூட்டியும், 100000/= பெறுமதியான சினைப்படுத்தலுக்கான ஆட்டுக் கடாக்களும், 50, 000/- பெறுமதியான பாலில் இருந்து நெய்யை வேறாக்கும் கருவியும் மொத்தம் 230,000/- பெறுமதியான நன்கொடைக் கிடைக்கப்பெற்றுள்ளது. வலி தெற்கு பிரதேச செயலர் பிரிவினால் 48200/- பெறுமதியான சினைப்படுத்தல் கடாக்கள் நன்கொடையாகக் வழங்கப்பட்டுள்ளது. எனவே அரசசார்பற்ற நிறுவனங்களதும், பிரதேச செயலரினதும் நிதி உதவிகள் அதிகளவு கிடைத்துள்ளமை இச் சங்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

எதிர்காலத்தில் இச்சங்கம் தற்போது செய்யும் சேவைகளுடன் இப்பகுதி மக்களுக்கு நல்லின மாடுகளைப் பெற்றுக் கொடுத்து, அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்து பால், நெய், யோக்கட், ஐஸ்கிறீம் ஆகிய பொருட்களை விற்பனைக்கு விட்டு தனது அங்கத்தவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

### 4. சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள்

இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்களை 2 பிரிவுகளாக வகுக்கலாம்.

1. நிறுவனரீதியான சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள்.
2. ஏனைய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள்

நிறுவனரீதியில் அமைந்த சிக்கன கடனுதவு கூ.. சங்கள் பாடசாலைகளில் ஆசிரியர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்கள் ஆகியோரை அங்கத்தவர்களாகக் கொண்ட சங்கங்களாகும். அங்கத்தவர்களிடையே சேமிப்பு, கடன் வழங்கல் ஆகிய நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வகையில் மகாஜனாக் கல்லூரி ஆசிரியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை ப.நோ.கூ சங்க பணியாளர் சி.க.கூசங்கம், அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், சி.க.கூ சங்கம், தெல்லிப்பளை ப.தெ.வ.அ.கூ. சங்க பணியாளர் சி.க.கூ. சங்கம் ஆகியவை சிறந்த முறையிற் செயற்பட்டுவரும் நிறுவனரீதியான சங்கங்களாகும்.

## ஏனைய வகைச் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள்.

இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்களே கிராமிய மட்டத்தில் மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கங் களாகும். அங்கத்தவர்களிடையே கட்டாய சேமிப்பு பழக்கத்தை உக்குவித்தல், கடன் வழங்கல், ஏனைய சிரமதான சேவைகள் ஆகியவற்றை வளர்த்தெடுக்க ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களாகும். அத்துடன் ஜனநாயகரீதியான தலைமைத்துவ ஆற்றல், நிர்வாக ஆற்றல் என்பவற்றை அங்கத்தவர்களிடையே வளர்த்தெடுத் துள்ளன. இடம்பெயர்வின் போது மக்கள் திக்குதிசை அறியாது வெவ்வேறு ஊர்களுக்கு சென்றிருந்தாலும் நிர்வாக உறுப்பினர்கள் தமது அங்கத்தர்களுக்கு தேவையான நிதி உதவிகளை அவர்கள் இருந்த இடங்களுக்கே சென்று வழங்கிவந்தமை கூட்டுறவின் மகத்துவத்தை உணர்த்தக் கூடியதாகவுள்ளது. வலிவடக்கில் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் 60 பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தாலும் தற்போது 30 சங்கங்களே இயக்கும் நிலையில் உள்ளன. இவற்றில் பின்வரும் சங்கங்கள் உரியகாலத்தில் கணக்காய்வுகளை முடித்துச் சிறந்தமுறையில் இயங்கி வருகின்றன. மாவைக் கந்தன் சி.க.கூ.சங்கம், அளவை ஐங்கரன் சி.க.கூ.சங்கம், துர்க்காபுரம் மத்தி சி.க.கூ.சங்கம், மல்லாகம் சி.க.கூ.சங்கம், அளவை அம்பாள் சி.க.கூ.சங்கம், கும்பலை பாரதி சி.க.கூ.சங்கம், பன்னாலை மகளிர் சி.க.கூ.சங்கம், தெல்லிப்பழை மேற்கு சி.க.கூ சங்கம், விழிசிட்டி நடராச விலாஸ் சி.க.கூ. சங்கம்.

மாவைக் கந்தன் சி.க.கூ. சங்கத்துக்கு வலி வடக்கு பிரதேசசெயலரினால்யு.என்.எச்.சி.ஆர் நிதி உதவித் திட்டத்தின் கீழ் 3 லட்சம் ரூபா வருமானத்தை அதிகரிக்கும் சுயமுயற்சி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் 30 அங்கத்தவர்கள் 10,000/- வீதம் சுயமுயற்சிக் கடனைப் பெற்றுள்ளார்கள். இக்கடன் மாதாந்தம் மேலும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. ஒழுங்கான முறையில் கடன் அறவீடும் நடைபெறுகின்றது.

### 5. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

இப்பிரதேசத்தில் 7 கடற்றொழிளார் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இப்பிரதேசத்தில் தொழில் செய்ய முடியாததால் சில சங்கங்கள் வடமராட்சியில் இயங்கி வந்தன. காலச் சூழ்நிலை காரணமாக இவற்றின் செயற்பாடுகள் குறைந்துள்ளன. நிலைமை சீராகும்போது இவ் வகைச் சங்கங்களின் செயற்பாடு முக்கியத்துவம் பெறும்.

### 6. தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

இரு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்த போதிலும் காங்கேசன்துறை வழங்கல் நிலைய தொழிலாளர் கூட்றவுச் சங்கம் மட்டுமே தற்போது இயங்கி வருகின்றது. தொழிலாளர்களே இதில் அங்கத்தவர்களாகின்றனர். கப்பலில் இருந்து பொருட்களை இறக்கிக் களஞ்சியப்படுத்தல் களஞ்சியத்திலிருந்து பொருட்களை விநியோகித்தல் ஆகிய வேலைகளைச் செய்கின்றனர். இச்சங்கம் இலாபகரமாகச் செயற்படுகின்றது.

எனவே காலத்தின் தேவைக்கு ஏற்ப அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப அழிந்து இன்றைய சூழ் நிலைக்கு தேவையான சங்கங்கள் மட்டும் செய்ற்படுவதனை அவதானிக்க முடிகிறது. நாட்டில் யுத்த அனர்த்தங்கள் ஏற்படும் போது, கூட்டுறவு இயக்கத்தின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்து கொள்கின்றனர். வலி வடக்கு பிரதேசம் பல தடவைகள் அனர்த்தங்களுக் குட்பட்டதால் கூட்டுறவின் முக்கியத்துவம் மக்களால் நன்கு உணரப்பட்டுள்ளது.

மூலம் 1. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்
2. தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கம் (வ.து)
3. அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் (வ.து)
4. வலி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூ. சங்கம் (வ.து)
5. தெல்லிப்பழை ப. தெ.வ. அ. கூ. சங்கம் (வ.து)
6. பிரதேச செயலகம் வலி வடக்கு தெல்லிப்பளை.


# வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட விழாக்கள்





அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிவாரண உதவி வழங்கப்பட்ட போது





கலைவிழாக்குழுவினரும் பார்வையாளர்களில் ஒரு பகுதியினரும்





கலைவிழாவில் பிரதம விருந்தினர் அரச அதிபர் K. சண்முகநாதன், சட்டத்தரணி மு. சபாநாதன்,
பிரதேச செயலாளர் திருமதி ப. திலகநாயகம் போல் அவர்களுடன் பாடுபவர் திரு ட. திலகநாயகம் போல்






1999ம் ஆண்டு வலிகாம் வடக்கில் கலாபூஷணம் விருது பெற்ற நால்வருக்குப் பாராட்டு விழா நடைபெற்ற போது

# வலிகாமம் வடக்கு கலைப்பூமி

**கலாபூசணம் ஏ.ரி.பொன்னுத்துரை**

பூகோளரீதியாக தென்னகத்திற்கு அண்மித்திருக்கும் நிலப்பரப்பு யாழ்ப்பாணக் குடாநாடு ஆகும். இலங்கையின் வடபால் அமைந்துள்ள இக்குடாநாட்டை பாக்கு நீரிணை என்று அழைக்கப்படும் 36 மைலுக்குஉட்பட்ட சிறு கடற்பரப்புப் பிரிக்கிறது. ஆனால், யாழ்ப்பாணம்தான் தென்னிந்தியாவிற்கு மிக அண்மித்த நிலப்பிரதேசம் என்பது உண்மை. யாழ்ப்பாணத்தின் வடமேற்குப் பகுதியே *வலிகாமம்* என்ற நாமத்துடன் தென்னிந்தியாவிற்கு மிகமிக அண்மித்த இடமாய் அமைகிறது. ஆக, தென்னகத்து மக்கள் வலிகாமம் வருவதும், வலிகாம மக்கள் கடல்மூலம் தென்னகம் செல்வதும் சர்வசாதாரணமாய் பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்திருக்கிறது. இந்நிலை கலாச்சார, ஆத்மீக, பொருளாதார, சமூகத்தொடர்பினை வலுப்படுத்தியது. சிறிய தமிழகமோ? என எண்ணுமளவிற்கு யாழ்ப்பாணம் அமைந்தது. வடக்கே அமைந்த வலிகாமமே தொடர்புச் சங்கிலியின் முதற்பகுதி போல் இலங்கியது. வலிகாமத்தைச் சேர்ந்த காங்கேசன்துறைமுகம் நுழைவாயில் போலவும் அமைந்தது.

இதேவேளை வலிகாமத்தில் இரு ஆதீனங்கள் முக்கிய இடம் வகித்தன. கீரிமலையிலுள்ள சிவனாலயம், மாவிட்டபுரத்திலுள்ள கந்தசாமி கோயில் என்பன முறையே சிதம்பரம், திருச்செந்தூர் போல சாதாரண ஆலயங்களைவிட ஒருபடி மேல்நிலையில் நடாத்தப்பட்டன.ஆலயஅமைப்பு, பூசைமுறைகள், ஆலய இசையாளர்கள், பண்ணிசை பாடுபவர்கள் மற்றும் பல்வேறு கலையம்சங்களுடன் தொடர்புடையவர்களின் தொழிற்பாடுகள் தனித்துவத்துடன் இலங்கின. "கோயிற் கலைகள்" என்று பேசப்படுமளவிற்கு பல கலைகள் உயர் ந்தன. கூத்துக்கள், மேளம், நாதஸ்வரம், பஜனை, பண்ணிசை, கதாப்பிரசங்கம், சதுர், காவடி, கரகம், வசந்தனாட்டம், கோலாட்டம், என கலைகள் வளர்ந்தன. தென்னகத்தொடர்பு இந்தநிலையை மேம்படுத்த உதவிற்று. வலி காமம் மிகஅண்மித்து அமைந்ததால் கலைப்பூமியாக மிளிர வாய்ப்பு ஏற்பட்டது. இங்கு வதிந்தோரின் கலையுள்ளமும் இரசிகத் தன்மையும் சமய வழிபாட்டுப்போக்கும் இவ்வளர்ச்சியை உயர்த்தியது. "கலைப்பூமி" எனக்கருதப்பட்ட வலிகாமத்திலுள்ள கிராமங்கள் கலைத்துறையில் "நான் முந்தி நீ முந்தி" என ஆர்வத்துடிப்புடன் கலையை வளர்த்திடக் கங்கணம் கட்டின. கூடிய ஆர்வம் காட்டிய கிராமங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. கீரிமலை
2. மாவிட்டபுரம்
3. காங்கேசன்துறை
4. தையிட்டி
5. மயிலிட்டி
6. குரும்பசிட்டி
7. கட்டுவன்
8. தெல்லிப்பழை
9. அளவெட்டி
10. மல்லாகம்
11. இளவாலை
12. பன்னாலை
13. கொல்லங்கலட்டி
14. கருகம்பனை
15. வயாவிளான்

இவை மேம்படுத்திய பாரம்பரிய கலைகளாக நாட்டுக் கூத்துக்கள், (ஆட்டநாடகங்கள்) இசை நாடகங்கள், (கொட்டகைக்கூத்துகள்) வசன நாடகங்கள், ஆகியவற்றுடன் காவடி,கரகம், வசந்தன், கோலாட்டம், கும்மி, போன்றனவும் வளர்க்கப்பட்டன.

நாடகங்கள் பற்றிச்சிந்திக்கும் பொழுது பரவலாக இருபதுகளில் நாட்டுக்கூத்துக்களும், நாடகங்களும், முப்பதுகளில் இசை நாடகங்களும், பின்னர் இடையிடையே இசை அமைந்த வசன நாடகங்களும் இதர பிராந்தியங்களைப் போல வலிகாமத்திலும் வளர்க்கப்பட்டன.

கீரிமலையிலே குறவஞ்சி ஆட்ட நாடகங்கள், பள்ளுக்கள் இருபதுகளிற் சிறப்பாக ஆடப்பட்டன என அறிகிறோம். சிவராத்திரி, ஆடிஅமாவாசை காலங்கள் இதற்கு நல்ல வாய்ப்பளித்தன. பக்தர்களைப் பரவசப்படுத்த

இவை உதவின. கீரிமலையில் *வீரசைவ பரம்பரை* இருந்தது. *தேசிகர்கள்* என கௌரவத்துடன் முடிவடையும் பெயர்களை யுடைய இவர்களிற் பலர் கூத்துக்கலையில் வல்லுனர்களாகத் திகழ்ந்தனர். வீரசைவ பரம்பரையைச் சேர்ந்த கீரிமலை *எஸ்.செல்லையா* என்பவர் கீரிமலையிலும் அயற்பகுதிகளிலும் பண்ணிசை பழக்கியதுடன் ஆட்டக் கூத்துக்களையும் பழக்கினார், ஆடினார் என அறிகிறோம். கீரிமலை *பொன்னுச்சாமி தேசிகர்* இவரது புதல்வரே. இவர் இசை நாடகக் காலத்தில் பின்னணி பாடுபவராக, வாத்தியங்களைக் கையாள்பவராகப் பெரும் பணியாற்றிப் புகழீட்டினார். விளம்பரம் செய்யும் போது *பிற்பாட்டுக் கீரிமலை பொன்னுச்சாமி தேசிகர்* எனப்பகிரங்கப்படுத்துவார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கலைஞரும் எழுத்தாளருமான திரு.த.சண்முகசுந்தரம் (B.A) அவர்கள் இலங்கை கலைக்கழக முக்கிய உறுப்பினராக விளங்கியவேளை அந்நிறுவனம் கொழும்பில் நடாத்திய நாடகக் கருத்தரங்கில் "வாழைக்குத்திக் கூத்து" என்றபொருளில் ஒரு ஆய்வுக்கட்டுரை படித்தார். அதிற் கந்தசாமி கோயிலின் முன்புறமாக வட்டக்களரியிலே நாட்டுக் கூத்துக்கள் நடந்ததாகவும் இரசிகர்கள் சுற்றி இருந்து பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆட்டம் முக்கிய ஊடகம் என்றும் ஒளிக்காக தேங்காய்ச்சிரட்டைகளில் துணிச்சுருள் வைத்து எண்ணெயிட்டு எரிப்பது வழக்கம் என்றும், (கட்டைப்பந்தங்கள்போல) குறிப் பிட்டிருந்தார். இதனால் "வாழைக்குத்திக் கூத்து' 'என்ற பெயர் வந்ததென விளக்கினார். காங்கேசன்துறை, தையிட்டி பிரதேசங்களில் ஆர்வத்துடிப்புடன் ஆடப்பட்டதாக முன்னோடிகள் பலர் கூறக்கேட்டிருக்கின்றேன். பாரதக் கதைகளின் கூறுகள் (போர்கள் நிறைந்தவை) தையிட்டி, (மயிலிட்டியின் ஒரு பகுதி), வீமன்காமம் போன்ற இடங்களில் முக்கியத்துவம் பெற்றன.

குரும்ப சிட்டியில் "பொற்கொடியாள்" என்ற ஆட்டக்கூத்து முப்பதுகளின் முற்பகுதியில் அம்பாளாலயத்துக்கு முன்னே ஆடப்பட்ட வரலாற்றினைப் பிரபல எழுத்தாளரும் விமர்சகருமாகிய இரசிகமணி கனக செந்தில்நாதன் வெளியிட்ட என்கதை (பாகம்I) இல் விவரித்துள்ளார். பிரபல அண்ணாவியார் ஆவரங்கால் கந்தப்பிள்ளையிடம் இந்தக் கூத்தினைப் பழகி ஆடிய இளங்கமக்காரர்கள் காணிவிற்று அதன் மூலம் பெற்ற பணத்தின் உதவியுடன் பழகினார்கள் எனவும், அவர்களின் ஆர்வத்துடிப்பு மெச்சத்தக்கது எனவும் மயிலிட்டிக்கோவில் பற்று (வலிகாமம்) சார்ந்த பெருந்தொகை மக்கள் விடிய விடிய *இரசித்தனர்* என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து (1900 இல் மகாதேவ வித்தியசாலை அமைத்து அதன் தலைமை யாசிரியராக விளங்கிய) பொன். பரமானந்தர் பாடசாலை மட்டத்தில் மாணவர்களை ஆட்டக்கூத்து ஆடப்பழக்கினார். உதவி அதிபர் கதாப்பிரசங்க ஆசிரியர் கணபதிப்பிள்ளையும் துணை நின்றார்.

அளவெட்டியிலும் பல ஆட்டக்கூத்து அண்ணாவிமாரும் ஆடவல்லாரும், வீர சைவர் களுள் இருந்து பணிபுரிந்தனர். இவர்களுள் சிலரது திறமறிந்து அழைத்து இராமநாதன் நிறுவிய பரமேஸ்வராக்கல்லூரியிற் "பூதத்தம்பி" ஆட்டக்கூத்தை ஐம்பதுகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் பழகி ஆடினர். இதனைப்பழக்கிய அண்ணாவிமார்கள் வல்லிபுரத்தார், செல்லப்பா என்பவர்களாவர். இந்த ஆட்டக்கூத்து இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது. இவர்களை விட நன்னியர் என்பவர் 19ம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் இருந்த மிகப்பிரபலமான அண்ணாவியார் ஆவார். இதேபோல பலர் இலைமறைகாயாக அளவெட்டி மற்றும் அயல்கிராமங்களில் ஆடினர்.

நாற்பதகளில்,இசைநாடக வளர்ச்சயில் வலிகாமம் அதிஉச்ச நிலையை ஜஎய்தியதெனலாம். காங்கேசன்துறைக்கு அடிக்கடி வந்த தென்னகக் கலைஞர்கள் செல்வாக்காலோ அல்லது இங்கேயே வதிந்த சில வல்லார்கள் ஆற்றலாலோ கொட்டகைக் கூத்தென்றும், "ஸ்பெஷல்" நாடகம் என்றும் அழைக்கப்பட்ட இசை நாடக வளர்ச்சி துரிதவேகம் கண்டிருக்க வேண்டும்.

நடிகமணி V.V வைரமுத்துவின் தந்தையார், முந்தையோர் பல இசை நாடகங்களைமேடையிட்டு இத்துறையில் எழுச்சியை உருவாக்கினார். இதன் வளர்ச்சியே பிற்காலத்தில் "வசந்தகான சபை" என்ற நாடகமன்றமாக மலர்ந்தது. இதில் நடிகமணியும், அவரது உறவினர் நாகமுத்து, செல்வராசா என்போரும், வைரமுத்துவின் சகபாடிகளும், மகளிரும் நடித்தனர். ஈழநாடே அரவணைக்கும் அளவுக்கு நடிகமணி புகழ் உச்சியைத்தொட்டது. இலங்கை வானொலி கலைவிழாவுக்கு இவரது "மயானகாண்டம்" ''நந்தனார்'' நாடகங்கள் வரவழைக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகம் இவரை அழைத்துக் கௌரவித்தது. 1000 தடவை மேடை ஏறியபோது அதிர்ந்தோம். அது 2000க்கும் மேற்பட்ட மேடைகளைக் கண்டது. சிங்களக் கலைஞர்களே வியந்தனர். வலிகாமம் ஈந்தவல்லியாக, இசைநாடக அனுபூதிமானாக *வைரமுத்துவும், வசந்தகானசபாவும்* விளங்கியமை எமக்குப் பெருமையே. *இதரபிராந்தியங்களை விஞ்சும் வகையில் வலிகாமம் பெருமைகொள்ள காங்கேசன்துறை வசந்தகானசபா* அமைந்திருந்தது.

"நடிகன் பிறக்கிறான். அவன் ஆக்கப் படுவதில்லை. வைரமுத்து ஒரு பிறவி நடிகன். இப்படிப்பட்ட ஒரு நடிகன் அபூர்வமாகத் தோன்றுவான்" என வேணன் அபயசேகர (நாடகம் வல்லோன், முன்னாள் யாழ் அரசாங்க அதிபர்) புகழ்ந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆர். அரிச்சந்திரா மெச்சினார். பிரபல சிங்கள நாடகக் கலைஞரான ஹென்றிஜயசேனா பின் வருமாறு புகழாரம் சூட்டினார். "சில நடிகர்களுக்கு நடிக்கத் தெரியும் பாடத் தெரியாது; சிலருக்குப் பாடத்தெரியும் நடிக்கத் தெரியாது; சிலருக்கு இரண்டும் இருக்கும் தோற்றப்பொலிவு இருக்காது; இவை யனைத்தும் ஒருங்கே கைவரப்பெற்ற நல்ல நடிகன் வைரமுத்து". பேராசியர் கைலாசபதி, "வைரமுத்து முழுநிறைவான நாடக கலைஞர்"ஐ என்றார். பேரறிஞன் ம.போ.சிவஞானகிராமணி, நடிகர் டி.கே. பகவதி உட்பட பல தென்னகக் கலைஞர்களும் வைரமுத்துவைத் தலைமேல் வைத்துப் புகழ்ந்தனர்.்தனர். பேராசிரியர் சு.வித்தியானந்தன் "கலைக்கோமான்"என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தார். கொழும்பு மேயரும், முன்னாள் அமைச்சருமான வின்சன் பெரேரா நடிகமணிக்கு தங்கப்பதக்கம் சூட்டினார். இப்பாராட்டுகள், பரிசுகள் வலிகாமத்துக்குச் சூட்டப்பட்டதாகவே கருத இடமுண்டு. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், நடிகமணியின் நாடகங்களிற் 'தொகையறா' பயன்படத்தியமுறை, உணர்ச்சி வேகத்துக்கமைய சுருதியை அமைத்த தன்மை, எடுத்துரைப்புக்குப் பாடல்களைக் கையாண்ட நிலை, பாடலும் நடிப்பும் இணைந்தும் இடையிட்டும் அமைந்த விவேகமும், பாடலைச் சொல்லாடலாக கையாண்ட பாங்கும் ஆகியவற்றை உன்னிப்பாக அவதானித்து நயந்து நடிகமணி V.V வைரமுத்துவின் "வாழ்வும் அரங்கும்" என்ற நூல் முன்னுரையில் தமது நற்கணிப்பை அப்பட்டமாக எழுதியுள்ளார். கலாநிதி காரைசுந்தரம்பிள்ளை தமது ஆய்வுப் பொருளாக நடிகமணியைத் தேர்ந்து ஆய்வுக் கட்டுரையை எழுதுமளவுக்கு காங்கேசன்துறைக் கலைஞன் தேர்ந்தெடுக்கப்பட்டமையும், இசை நாடகத்துறையில் வலிகாமம் உயர் ஊஞ்சலாடிய தன்மையை வலியுறுத்தி நிற்கிறது. இவர்போற் பலர் இசைநாடகத் துறைக்கு பணிசெய்து மேம்படுத்திய துண்மையே.

இசை நாடகத்துறை வளர நாடக உலகுமேம்பட பங்களிப்புச் செய்த இன்னொரு வலிகாமத்தான் குரும்பசிட்டியூர் கே.கே. வி. செல்லையா ஆவர். "பல்கலைவல்லுனர்" என்று பாராட்டப்பட்ட இவரைப்பற்றி சிரித்திரன் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் (A.T.P யின் அரங்கக்கலைஞர் ஐவர் என்ற நூலில் பக்கம் -18). சென்னை சென்று சித்திரம் முறையாகப் படித்த இவர் உதிரத்தில் நாடகவுணர்வும், துடிப்பும் விஞ்சிநின்றதால் அங்கே வல்லுனரின் நாடகங்களைப் பார்த்தும் பழகியும் தன்னை மேம்படுத்திக்கொண்டார்.

கட்டுவன் (மயிலிட்டிதெற்கு) பாலர் ஞானோதய சபை நாற்பதுகளில் மேடை யேற்றிய "லவகுச" என்ற இசை நாடகத்தை நெறியாள்கை செய்தார். இந்நாடகத்தில் கட்டுவன், வறுத்தலை விளான், குரும்பசிட்டி கிராமங்களைச் சேர்ந்த பாடவல்ல உயர்தர வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் நடித்தனர். பிரபல நாடகவல்லுனர் க. பொன்னம்பலம் ஆசாரியாரை (குரும்பசிட்டி) இசைப்பயிற்சிக்கு அமர்த்திக் கொண்டார். வரன்முறையான விருத்தம், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையில் பாடல்களை முறையாகப் பாடியும் பொருத்தமான இராகங்களை இசைத்தும் நடிக்க வேண்டும். பேராசிரியர் கா. சிவத்தம்பி இசைநாடகத்தில் 'தொகையறா மிகமுக்கியமானது' என்பார். இரசிகர்களை ஈர்ப்பது இதுவென பல கருத்தரங்குகளிற் குறிப்பிடுவார். கே.கே.வி செல்லையா ஸ்பெஷல் நாடகம் போலன்றி அளவாகவே பாடல்களைப் புகுத்தினார். துரிதநாடக நகர்த்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். முன்னர் இசை நாடகங்கள் நீட்டியிழுக்கப்பட்டன. சென்னையில் கற்ற ஒப்பனைக்கலை, பழைய முறைகள் சிலவற்றைத்தவிர்க்க பொருத்தமானவற்றைப் புகுத்தத் துணைநின்றது. இவர் நெறியாள்கை செய்த "லவகுச" என்ற இசை நாடகத்தை சிங்கப்பூர் பென்சனர் கலைஞர், கட்டுவனூர் சி. கந்தையா உந்தி நின்றார். அச்சுவேலி பிரபல பாடகர் தம்பிமுத்து பாகவதரிடம் இசைபயின்ற கந்தையாவின் மகன் கே. மகேசன் (இன்று வைத்தியக்கலாநிதி) லவனாகவும், தவராசா என்ற மாணவன் (இன்று பொறியியலாளர்) குசனாகவும் நடித்தனர். பழைய இசை நாடகப்பண்புகள் பல தவிர்க்கப்பட்டும் கிராமப்புறங்களில் நாடகத்தரத்தை உயர்த்த நடிகராக, இயக்குனராக, ஒப்பனையாளராகப் பணிபுரிந்து வந்த கே. கே.விக்கு வலிகாமப் பிரதேசத்தில் தனி வரவேற்பிருந்தது, பிரபல்யம் மிக்க ஐ.பி. துரைரட்ணம், ஜெயரட்ணம் போன்ற கல்லூரி அதிபர்கள் இவரது சேவைக்கு மதிப்புக் கொடுத்து வரவேற்றனர். நாடக அனுபூதிமான் சரவணமுத்துவும் கே. கே. வியை ஊக்கியிருக்கிறார்.

குரும்பசிட்டியில் கதாப்பிரசங்கி சி. கணபதிப்பிள்ளையின் அரவணைப்பில் மாணவர்களுக்கு "*அல்லி அர்ச்சுனா*" என்ற இசை

நாடகத்தை புதுமெருகூட்டிப் பயிற்றினார். அதன் மூலம் அங்கு கல்விகற்ற வறுத்தலைவிளான், வயாவிளான், மயிலிட்டியைச் சேர்ந்த (வலிகாமம்) மாணவர்களுக்கும் இசை நாடகப் பண்புகளை ஊட்டினார். இப்படிப் பலர் வலிகாமத்தில் நாடகத்துறை வளரப்பாடு- பட்டனர்.

வலிகாமம் தலைசிறந்த கல்விக் கூடங்களைத் தன்னகத்தே அடக்கியிருந்தது. யூனியன் கல்லூரியில் அண்ணாவி கந்தப்பிள்ளை யின் வழிகாட்டலில் இராம நாடகத்தில் தான் இலட்சுமணனாக முதல் முதல் நடித்ததாகவும், இலங்கை வானொலியில் 25 வருடங்களுக்கு மேல் தமிழ் நாடகப்பொறுப்பாளருமாக இருந்த தெல்லியூர் எஸ். சண்முகநாதன்(சானா) அடிக்கடி குறிப்பிடுவார். மகாஜனக் கல்லூரியின் பழைய அதிபர் கவிஞர் சின்னப்பா *"பிரகலாதன்"* உட்பட பல இசை நாடகங்களை மேடை யேற்றினார். வீமன்காமம் துவிபாஷா வித்தியாலயத்தின் (கந்தசாமி கோவிலுக்கு அருகில்) அதிபராய் இருந்த (நாடகம் வல்லார்)இரத்தினவரதர் இசைநாடகங்களுட்பட பல நாடகங்களை மேடையேற்றி மாணவர்களையும் அயலவர்களையும் இத்துறையில் உயர்ச்சிபெற வழிகாட்டினார். காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மனேஜர் தம்பிப்பிள்ளை அவர்களும், மகன் திரு. சிவஞானம் அவர்களும், அவ்வேளை அற்புதக் கலைஞராகத் திகழ்ந்த பிரம்மஸ்ரீ மணிஐயர் (நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகரும் முதலாவது குருமணியுமாக மிளிர்ந்தவர்) துணை கொண்டு வருடாவருடம் நவராத்திரி காலத்தில் "மார்க்கண்டேயர், சாவித்திரி" போன்ற இசை நாடகங்களைப் பிரமாண்டமான முறையில் அரங்கேற்றினார். ஒட்டு மொத்தமாக வலிகாமம் இசைநாடகத் துறையில் தனித்துவத்துடன் உயர்நிலை எய்தியமை வியப்புக்குரியதன்று. மக்களின் கலையுள்ளம், இரசிகத்தன்மை இந்நிலைக்கு அடிப்படைக் காரணிகள் எனலாம். அதிஸ்டவசமாக மிகத்தரமுயர்ந்த கலை வல்லுனர்கள் வாழ்ந்தமையும் குறிப்பிடக் கூடியது.

பாரம்பரியக்கலைகளுள் அடங்கும் நாட்டார்கலைகள், கிராமியக்கலைகள், கோயிற் கலைகள் ஆகிய காவடி, கரகம், வசந்தன், கோலாட்டம், கும்மி என்பவற்றில் வலிகாமம் துடிப்பாக இயங்கியது. நல்ல அறுவடை கண்டது. மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் ஆடிமாதத்தில் 25 நாட்கள் இரவுபகல் திருவிழாக்கள் நடந்தன. கீரிமலைக் கோயிலில் 10 க்கு மேற்பட்ட உற்சவங்கள் இரவு, பகல் இடம் பெற்றன. கோயிற்கலைகள் உன்னதம்பெற உதவின. கோயிற்கலைகள் பல வழிபாட்டுடன் இணைக் ப்பட்டதால் மக்கள் பக்தியை வளர்க்க பரவசமடைய கோயிற்கலைகளில் , பெரும் ஈடுபாடுகாட்டினர். மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் கொடியேற்றத்தை தொடர்ந்து 10ஆம் நாள் நடனத்திருவிழா நடந்தது. ஆடலுடன் பஜனை உச்சநிலையடைந்தது. அத்திருவிழாவில் கூட்டாகவாத்தியங்கள் வாசித்தும், பாடியும் ஆடியும் கோறஸ்சாக இணைந்தும் பஜனை என்ற தெய்வீகக்கலையை வளர்த்தனர். 21ஆம் நாள் நடைபெற்ற கார்த்திகைத் திருவிழாவில் காவடியாடுதல் பெருமளவில் நிகழ்ந்தது. வலிகாமத்துக் கிராமங்களிலிருந்து கூட்டங் கூட்டமாக மேளதாளத்துடன் காவடிகள் ஆலயத்தை நோக்கி எடுக்கப்பட்டன. பொதுவாக நினைத்த நினைத்த வண்ணம் லயப்பிடிப்புடன் ஆடப்பட்டன. விசேடமாகஜ ஐஅன்றைய அண்ணாவிமாரிடம் பல மாதங்கள் பயின்று கலைப்பிடிப்புமிக்கதாகவும் ஆடப் பட்டன. தாளக்காவடி என்றும், ஆட்டக்காவடி என்றும், கூத்துக்காவடி என்றும் அழைக்கப் பட்ட தரமுயர்ந்த கலைநிகழ்வுகள் நிகழ்ந்தன.

அளவெட்டி, குரும்பசிட்டி உட்பட பல கிராமங்களிற் தரமான அண்ணாவிமார் தோன்றினர். நுட்பமான தாளக்கட்டுக்கள், நகர்வுகள் கொண்ட ஆட்டங்கள் பயிற்றப்பட்டன. "கிங்கிணியாட்டம், சதுர்தழுவிய ஆட்டம், கப்பலாட்டம்" எனப்பலவகை ஆட்டங்கள் இடம் பெற்றன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தனித்துவம் இளையோடிக்காணப்பட்டது.

அண்ணாவி கந்தப்பிள்ளையின் சீடரான கலைஞர் அ. சின்னத்துரை (வயாவிளான் மத்திய மகாவித்தியாலய இன்றைய அதிபர் சி. நடராஜாவின் தந்தையார்) இத்துறையை மேம்படுத்த ஆர்வத்துடன் தொழிற்பட்டார். (பணத்துக்காகவல்ல), கலைநோக்கில் அவரிடம் தாளக்காவடிக்கலையை பழகியவர். இன்று வலிகாமத்தில் 15 பேர் வரை தாளக் காவடியாட அண்ணாவி ஆ. சின்னத்துரையர் களது பணி அடிநாதமாக அமைந்ததெனலாம்.

*குரும்பசிட்டியைச்சேர்ந்த அடிமட்ட மக்களாகிய தம்பன் (வயாவிளான் தொடர்புண்டு) முருகன், கிட்டினன்* ஆகியோரும் வருடாவருடம் செல்வச்சந்நிதிக்கு தாளக்காவடிகள் பழக்கி இத்துறையை வளர்த்தனர்.

கரகாட்டத்தில் *அளவெட்டியூர்* சிகரமாய் அமைந்தது. கலைஞர் ஐயாத்துரை (வீரசைவ பரம்பரை) மிக உச்சஸ்த்தாயில் கரகாட்டத்தை உயர்த்தினார். அவருக்குத்துணையாக உடுக்கு வாத்தியம் வாசித்த கலைஞர் சிதம்பரப்பிள்ளை (வீரசைவ பரம்பரை) அவர்களும் தனிநாதம் எழுப்பித் தனித்துவம் கூட்டினார். ஐயாத்துரையின் சீடனாக குரும்பசிட்டியூர் வையாபுரி விளங்கினார். இருப்பினும்

அளவெட்டியூர் ஐயாத்துரையின் ஆட்டம் மிகப் பிரபல்யமானது. அவர் தென்பகுதிகளுக்கும், மலையகத்திற்கும் சென்று ஆட்டநுட்பத்தால் பெருந்தொகை இரசிகர்களைக் கவர்ந்தவர். சிலவேளை கரகத்தைமட்டும் தலையில் வைத்தும், தொடர்ந்து ஒவ்வொரு அடி உயரமான அழகு தடிகளில் வைத்தும் ஆடுவார். தலைக்குமேல் ஒரு அழகுதடி அதற்குமேல் இன்னொருதடி அதற்குமேல் மூன்றாவது ஆக கரகம் (செம்பு, தேங்காய், வேப்பமிலைகள்) சகிதம் வைத்து தளம்பாது சமனிலைபேணி (BALANCING) அற்புதமாக ஆடினார். தாளக்கட்டுடன் கூடிய கலையழகும் சுடர்விட்டது. ஆட்டத்தினிடையில் சற்று நீளமான இருகத்திகளை இரசிகர்கள் பிடிக்க அதன் மேல் ஏறி நின்றும் ஆடினார். அதிசயிக்க வைக்கக்கூடிய சேக்கஸ்ஸின் நிழல் இந்தக்கலையொழுக்கு கரகாட்டத்தில் மின்னலி ட்டது. இசைநாடகத்தில் வி.வி. வைரமுத்து எப்படி வலிகாமத்திற்கு புகழ் சேர்த்தாரோ அதேபோன்று கரகாட்டத்தில் அளவையூர் ஐயாத்துரை தன்னிகரற்ற பெருங் கலை ஞனாகப் பவனிவந்தார்.

கட்டுவனூர் வீரபத்திரர் ஆலயத்தில் வருடாவருடம் வசந்தனாட்டம், ஒயிலாட்டம் என்பன வெகுசிறப்பாக ஆடப்பட்டன. 12 பேர் வரை அழகாக உடுத்து கோயில் முன்றலில் பெரிய மத்தளம், சல்லாரி சகிதமாடினர். இதில் ஒரு தனித்துவம் இருந்தது. தாளக்காவடி, கரகம் போலல்லாத ஒரு வகை ஆட்டமிது. நீளவடிவில் இரண்டு வரிசையாக நின்று கையிலே கோல் கொண்டு, ஓசை எழுப்பி ஆடப்பட்ட இந்த ஆட்டத்திலும் பல நுட்பங்கள் பளிச்சிட்டன. ஒயிலாட்டம் இது போன்றதெனினும் கையிலே லேஞ்சிகள் பிடித்து ஆடப்பட்டன. பலவேறு தொழில்களை அடியொற்றிய பாடலடிப்படையில் ஆட்டங்களாடப்பட்டன. இலங்கை பூராகவும் அழைக்கப்பட்டு இது ஆடப்பட்டது ஒரு தனிச்சிறப்பாகும். வெள்ளையர்களுட்பட பலர் கொழும்பு மாநகரில் (அரசின் அழைப்பில் சென்றனர்) கண்டு களித்தனர். இதற்கு ஒரு தனி மவுசு ஏற்பட்டது. இன்று இதனை வழிநடத்துபவரும் ஆட்டவல்லுனருமாக மிளிரும் கலைஞர் அண்ணாவியார் குருசாமி பாராட்டுக்குரியவர். அவர் இன்று நம்மிடையே இந்தக்கலையை வளர்க்கிறார். இவருடைய ஆட்டநயம் வேறு எவரிடத்துமில்லை. வலிகாமத்திற்குப் பெரும் புகழீட்டிக் கொண்டிருப்பதும், வளர்க்கப்பட்டால் வருங்காலத்தில் அழியாத புகழ் அளிக்கவல்லதுமான கிராமிய தெய்வீகக்கலை *வசந்தனாட்டம்* எனலாம்.

கோலாட்டம், கும்மி வலிகாமத்தில் முக்கியமாக குரும்பசிட்டியிலும் வறுத்தலைவிளானிலும் பெரிதும் முன்னேற்றம் கண்டது. காரணம், மகாதேவ வித்தியாசாலை அதிபர் பொன். பரமானந்தர் அவர்களும், வறுத்தலைவிளான் அமெரிக்கமிசன் பாடசாலை அதிபர் கலைஞர் இராசநாயகமுமாகும். பொன் பரமானந்தர் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 3 வருடங்கள் பயின்று மீண்டவேளை கோலாட்டக்கலையிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார். பாடசாலை மாணவர்களுக்கு வருடாவருடம் 12 பேர் வீதம் பலவர்ணக் கொடிகள் கட்டியாடுகின்ற கோலாட்டக்கலையைப் பயிற்றினார். இதற்கு யாழ்ப்பாணம் பூராவும் பெருமவுசு ஏற்பட்டது. கல்வி இலாகா நடாத்திய கலைவிழாக்களிலும் இடம்பெற்றது. வல்வை சிவன்கோவில் நிர்வாகத்தார்கள் வருடாவருடம் இவரது கோலாட்டத்தை பல இரசிகர்கள் மத்தியில் நடாத்தினர். தமது ஊர் சித்தி விநாயகர் ஆலய உற்சவகாலத்திலும் வருடாவருடம் இந்நிகழ்வு இடம்பெற்றது. பின்னணி நிர்வாகத்தை கதாப்பிரசங்கி (குரும்பசிட்டி) சி. கணபதிப்பிள்ளை ஆசிரியர் கவனித்தார். 12 நிறக்கொடிகளை அரைப்பனை உயரத்தில் கட்டித்தொங்கவிட்டு அதன் அந்தத்தில் கட்டப்பட்ட கோலாட்டத் தடிகளைக் கையிலேந்தி தாளம், மத்தளம், சகிதம் ஆட்டம் நடைபெறுவதுண்டு. நிலத்திலே அழகான ஆட்டம் ஒழுங்கு முறைப்படியும் பலவேறமைப்பிலும் (DESIGEN) நிகழ, மேலே (ஆகாயத்தில்) துலாக்கொடி, சங்கிலி, உறி போன்றன நிறக்கயிறுகளின் மூலமமைவதாகவும் இடம்பெறும் ஆட்டம் ஆடுபவர்கள் கலைத்து வத்தோடு ஒருவகைக் கணக்கு நெறியையும் கையாண்டனர். இரசிகர்கள் இக்கோலாட்டக் கலையை வியப்புடனும் அதேவேளை மகிழ்வுடனும் நயந்தனர். இவருக்குப்பின் இக்கலை யாழ்ப்பாணத்தில் அருகிவிட்டது. கட்டுவனூர் வசந்தனாட்டம்போல குரும்பசிட்டியூர் கோலாட்டமும் கிராமியக்கலைகளில் உச்ச மெனக்கணிப்பீடு செய்யப்பட்டது.

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட கலைவிழாக்களில் வறுத்தலைவிளான் அமெரிக்கமிசன் பாடசாலை ஆசிரியர், கலைஞர் இராசநாயகத்தின் நெறியாள்கையில் நிகழ்த்திய கும்மியும் உச்சமான கிராமியக் கலையாகும். இதுவும் காலவோட்டத்திற் கரைந்துவிட்டது. ஆக, வலிகாமம் காவடி, கரகம், வசந்தன், ஒயிலாட்டம், பஜனை, கோலாட்டம், கும்மி என்பவற்றில் மிளர்ந்த பிரதேசமாக அமைந்தது.

அடிமட்ட மக்கள் மத்தியில் காத்தவராயனாட்டமும் உடுக்கு, சல்லாரி சகிதம் வளர்ந்தோங்கியது. மயிலிட்டியின் சிலபகுதிகளிலும் குறிப்பாக முலவையிலும், வலித்தூண்டலிலும் இது வளர்ந்தது.

வசனநாடக வளர்ச்சியில் வலிகாமம் துரிதவேகம்கண்டது. கலைஞர்களாக மிளிர்ந்த அதிபர்களால் நிர்வகிக்கப்பட்ட கல்லூரிகள் இருந்தமையும், கிராமங்கள் தோறும் போட்டியாகப் பல நாடகமன்றங்கள் வளர்ந்தமையும், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் எடுத்த அதீத ஈடுபாடும் தரமான ஆசிரியர்கள் (நாடகம்) நடிகர்கள், இயக்குனர்கள் தாராளமாக வாழ்ந்தமையும் வசன நாடகவளர்ச்சிக்குத் துணைநின்றன.

வசன நாடகங்கள் இரு நிலையில் வளர்ச்சிகண்டன. ஐம்பதுகளில் நடைபெற்ற நாடகங்களில் பாடல்கள் இடைக்கிடை அமைய வசனம் முக்கிய ஊடகமாக இருந்தது. பின்னர் பாடல்கள் குறைக்கப்பட்டு வசனங்களில் அமைந்த கலைத்துவமிக்க நாடகங்கள் நடந்தன.

கலையரசு சொர்ணலிங்கம், இராபகதூர் சம்பந்த முதலியார் பாணியில் வசன நாடகங்களை யாழ்ப்பாணம் பூராவும் நடாத்தி வந்ததிற்கு முன்னர், இடையிடையே பாடல்கள் அமைந்த வசனநாடகம் முக்கியம் பெற்றது. கலையரசு சொர்ணலிங்கம், நாடகம்வல்லார் சரவணமுத்து போன்றவர்களுடன் நடித்துயர்நிலை எய்திய தெல்லியூர் எஸ் . சண்முகநாதன் (சானா), கே.கே. வி.செல்லையா மற்றும் இவர்களது சீடவர்க்கம் வசனநாடகங்களைச் செப்பனிட்டுத் தரமுயர நடாத்தினர்.

வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, தெல்லியூர் யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, வீமன்காமம் துவிபாஷா வித்தியாசாலை, இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலை இவ்வகை நாடக வளர்ச்சியில் முன்னணியில் நின்றன. யூனியன் கல்லூரி அதிபர் ஐ.பி. துரைரட்ணம். உபஅதிபர் கு. கதிரையாண்டி முதலியோரின் தூண்டுதலால் அங்கே கல்விகற்பித்த கே. கே.சோமசுந்தரம் என்ற நாடகவல்லுனன் அற்புதமான நாடகங்களை மேடையேற்றினார். வீரபாண்டிய கட்டப்பொம்மன், மகுட பங்கம், சகதர்மினி, மக்பெஸ், ஒதலோ, யூலியசீஸர் என்பவை குறிப்பிடத்தக்கவை.

மகாஜனக் கல்லூரியில் வல்லுனராக மிளிர்ந்த திரு த. சண்முகசுந்தரத்தின் நாடகங்கள் பல மேடையேறின.

இலங்கைக்கலைக்கழகம் வருடாவருடம் நடாத்திய அகில இலங்கை நாடகப் போட்டிகளில் தொடர்ந்து 5 வருடங்கள் முதற் பரிசினைப் பெற்ற பெருமை வலிகாமத்தைச் சேர்ந்த மகாஜனக் கல்லூரிக்கேயுண்டு. இதை எழுதி நெறியாள்கை செய்தவர் கவிஞர் செ. கதிரேசம்பிள்ளை அவர்கள். இவருக்குதவியாக கலாகேசரி தம்பித்துரை (குரும்பசிட்டி)யின் காட்சியமைப்புகளும் சித்திர அமைப்புக்களும் மெருகூட்டின. இசைப்பகுதியை கீரிமலை சங்கீத பூஷணம் நாகம்மா (கல்லூரி ஆசிரியை) மிகத்திறம்பட நிர்வகித்தார். கல்லூரி சித்திர ஆசிரியரும் நாடகமேதையுமான அளவையூர் சுந்தரமூர்த்தி (கிளொவ்ண்சுந்தரம்) ஆசிரியர் அவர்கள் ஒப்பனை அலங்காரம் என்பவற்றை கவனித்திருந்தார். விழிசிட்டியைச் சேர்ந்த கோகிலா மகேந்திரன் (மாணவி) சாகியத்திய மண்டலப்பரிசுகள் பலபெற்ற எழுத்தாளராக இன்று மிளிர்பவர், வலிகாமம் கல்வித்திணைக் கள உதவிக்கல்விப் பணிப்பாளராக இன்று பணிபுரிபவர், அன்று பெண்பாத்திரங்கள் பலதாங்கி உச்சமாக நடித்தவர். குரும்பசிட்டி யைச் சேர்ந்த க. கந்தசாமி என்ற மாணவன் அன்று எல்லா நாடகங்களிலும் கதாநாயகன் பாத்திரங்களைத் தாங்கி அற்புதமாக வசனங்களைப் பேசியும் நடித்தும் மக்களை ஈர்த்தமையும் குறிப்பிடத்தக்கது. வலிகாமத்து நாடகமரபோட்டம் மகாஜனக்கல்லூரி பாடசாலை நாடகங்களில் பரிணமித்தது. அகில இலங்கையில் புகழீட்டியது. இது வலிகாமம் பிராந்தியத்துக்கு பெருமைஈந்தது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி 1956 முதல் கலைப்பேரரசு கலாபூஷணம் ஏ.ரி. பொன்னுத்துரையின் நெறியாள்கையில் 'பிற்பகலிலே', 'இருமனம்', 'நாமொன்று நினைக்க', 'பானையும்சட்டியும்', 'மூன்றுபேய்கள்', 'இறுதிப்பரிசு' போன்ற பத்துக்குமேற்பட்ட நாடகங்கள் மேடையேறின. சில கொழும்பு பம்பலப்பிட்டியிலும், யாழ்நகரிலும் நடிக்கப்பட்டன. இதேபோல வீமன்காமம் துவிபாஷா வித்தியாசாலை அரிய நாடகங்கள் பலவற்றை மேடையேற்றியது. இளவாலை மெய்கண்டான் வித்தியசாலை அதிபராய் மிளிர்ந்த சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் காலத்தில் அவரது நெறியாள்கையில் பல ஆக்கங்கள் புகழீட்டின. *'பாதுகைபெற்ற பரிசு', 'கர்வபங்கம்', 'பஞ்சவடி', 'பாசுபதம்', 'கண்ணகி வழக்குரைத்தமை', 'மாயவன் செய்தமாயம்', 'மண்ணாசை', 'இராவணன்' என்பன இவரது* ஆக்கங்களில் குறிப்பிடத்தக் கவை. மெய்ப் பொருள்நாயனார், நாவலரானார், தருமத்தின் வழி என்பனவும் இவரது நாடகங்களாகும். இவரது சேவை மெய்கண்டான் வித்தியாலத்திற்கும், வலிகாமத்திற்கும் புகழ் சேர்த்தன. அழகுமலர், சொர்க்கம், வலைப் பந்தாட்டம் போன்ற பரீட்சார்த்த நாடகங்களை எழுதி வலிகாமம் மாணவர்களுக்கு வழிகாட்டினார். பஜனை, கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு என்பவற்றில் வலிகாமம் மாணவர்களுக்குத் துணை நின்றார்.

'வலிகாமத்துக் கல்லூரிகளும், பாடசாலைகளும், ஆற்றல்மிகு ஆசிரியர்களும், கலைஞர்களும் வசனநாடக வளர்ச்சிக்கு ஐம்பதுகளிலிருந்து அரிய நற்பணி புரிந்தனர்' என்பது மறுக்க முடியாது உண்மை.

இத்துறை வளர்ச்சிக்கு வலிகாமத்து மன்றங்கள், அமைப்புக்கள் பல கிராமங்களில் தக்கவை செய்தன. இம்மன்றங்களின் பட்டியலில் பின்வருபவை முக்கியம் எனலாம்.

I. மாவிட்டபுரம் முத்தமிழ்க்கலை மன்றம்
II. காங்கேசன்துறை இளம்தமிழர் மன்றம்
III. இளவாலை இளங்குமரன் கலாமன்றம்
IV. குரும்பசிட்டி சன்மார்க்க நாடகம் மன்றம்
V. மாவை மறுமலர்ச்சி மன்றம்

மேற்படி மன்றங்களுள் ஒரு ஆதீனம் சார்ந்த மன்றமாக மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றம் திகழ்ந்தது. இதன் தலைவராக ஆதீனகர்த்தரும், கலைவளர்க்கும் பெருவுள்ளம் கொண்டவரும், பண்பாளருமாகிய மகாராஜ ஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்களவர்கள் நீண்ட காலம் பெரும் பணியாற்றினார். தொடர்ந்தும் பணி செய்கிறார். நிதி வளம் அதியுன்னத மென்று குறிப்பிடமுடியாத நிலையிலும் அவரது ஆளுமைச் சிறப்பும் ஆளணிப் பெருக்கும் நிதியுதவும் தனிப்பண்பும், மிகவும் மிளிர்ந்தமையால் இந்த மன்றம் ஒரு மாதிரி (எடுத்துக்காட்டான) மன்றம் என பலர்புகழாரம் சூட்டினர். தனது கிராமத்து இளைஞர்களையும் அயல்கிராமத்து மக்களையும் பிணைத்து பயன்தரவல்ல ஒரு நிறுவனமாக இதனை மேம்படுத்தினார். வலிகாமத்தின் கலைவளர்ச்சியில், விசேடமாக நாடகத் துறையில் இம் மன்றத்திற்கு ஒரு தனியிடமுண்டு. இயல், இசை, நாடகமென மூன்று பகுதிகளாக வகுத்து ஒவ்வொன்றுக்கும் தக்கோரை நெறியாளர்களாக அமர்த்தி இசை, நடன, நாடக வளர்ச்சியை பெருநோக்காக் கொண்டு பல காலம் தொடர்ந்து இம்மன்றம் பணிபுரிந்தது. நான் நாடகப் பொறுப்பாளராக கருமமாற்றத் தொடங்குவதற்கு முன்னர் (1958இல்) இவர்தலைவர், கட்டப்பொம்மன் போன்ற நாடகங்களை பெரும் செலவிட்டு தயாரித்தளித்தார். எனது காலத்தில் ஆரம்பத்தில் 'பண்பின் சிகரம்' என்ற சமூகநாடகம் மகாஜனக்கல்லூரி மண்டபத்தில் பல கலைவிற்பன்னர்கள் முன்னிலையில் மேடையேற்றப்பட்டது. அவர்களுள் குறிப்பாக கலையரசு சொர்ணலிங்கம், எஸ் சண்முகநாதன் (சானா), த. சண்முகசுந்தரம், நடிகமணி வி.வி.வைரமுத்து, நெல்லியடி நற்குணம், நவாலியூர் நடிகர் இரகுநாதன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதை ஒரு நல்ல சபை நயந்தது. தலைவர் மகாராஜ ஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் பார்த்துப்பாராமல் கலையை முன்வைத்து பெருந்தொகைப் பணத்தைவாரி யிறைத்தார். நாடகவளர்ச்சி நிதியுதவுவோர் கைகளில் பெரிதும் தங்கியுள்ளது. சமூகங்களுக்கு இடையே வேற்றுமை, குரோதம் வளர்வதை விட மன்னிப்புமனப்பான்மை மூலம் நற்சூழ்நிலையை உருவாக்குவது அவசியம் என்ற கருத்து நாடகத்தில் முன்வைக்கப்பட்டது. தொடர்ந்து இம் மன்றம் மேடையிட்ட நாடகங்களில் பின்வரும் நாடகங்கள் நல்வரவேற்பைப்பெற்றன.

I. செங்கோல் சரிந்தது
II. அண்டல் ஆறுமுகம்
III. பாசக்குரல்
IV. பரதன்
V. தாளக்காவடி

இந்த நாடகங்கள் மூலம் வலிகாமத்தைச் சேர்ந்த முப்பதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் நடித்து நடித்து நாடகம்பற்றிய அறிவை, நடைமுறையை விளங்கிக் கொண்டனர்.

இம் மன்றம் நாடக வல்லுனர்களின் கருத்துக்களைக் காலத்துக்குகாலம் கலந்துரையாடல் மூலம் இளைஞர்கள் நன்கறிய வழி வகுத்தது. இவ்வகையில் முன்னாள் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன், பரமேஸ்வராக்கல்லூரி அதிபர் எஸ்.சிவபாதசுந்தரம் எம்.ஏ (CANTAB) மகாஜனக்கல்லூரி அதிபர் ஜெயரட்ணம், த.சண்முகசுந்தரம், கே.கே. சோமசுந்தரம், ஏ.ரி. பொன்னுத்துரை, மானிப்பாய் மறுமலர்ச்சிமன்றத் தலைவர் பி.செல்வரட்ணம், ஆசிரியர் அன்னப்பா, ஆசிரியர்சாரி (பி.எஸ்.சி) நாடகம் வல்லார் திரு . அ. தாசீசியஸ், குழந்தை ம. சண்முகலிங்கம், பண்டிதர் க.சச்சிதானந்தம், சன்மார்க்கசபைப் பொதுச் செயலாளர் த.இராசரத்தினம் என்போரை அழைத்து காத்திரமான கருத்தரங்கங்களை மன்றம் நடத்தியமை வலிகாமத்தின் கலைவளத்தை வளம்படுத்த உதவியது. இம்மன்றத் தலைவர் கலைஞர்களைப் புரக்க, கௌரவிக்க, வசதியற்றமன்ற மாணவர்களுக்கு பணஉதவி புரிய பின்னிற்கவில்லை. வல்ல ஒரு நிர்வாகியாக, நல்ல ஒரு மனிதனாக இவர் வாழ்ந்ததால் இம்மன்றம் நாடகவளாச்சிக்கு அரும் பணியாற்றியது. இதனால் வலிகாமம் நற்பெயர் பெற்றது.

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் தமிழர் ஈழத்தில் தலைநிமிர்ந்து பல்துறை வல்லுனராக மிளிரவேண்டுமென்ற நோக்குடன் சமூகப்பணியில் ஈடுபட்டது. மக்கள் மன்றிற் தலையாய இலட்சியங்களை போதிக்க நாடகமே சிறந்தவூடக மென்று நம்பியது. காங்கேசன்துறை

கணேசமூர்த்தி, கருணானந்தசிவம் போன்ற வாலிபர்கள் நாடகப்பிரதிகளை எழுதியும் மேடையிட்டும் அப் பிரதேசத்தில் கலைப்பணி புரிந்தனர். காலத்துக்குக்காலம் நாடகப்போட்டிகள் வைத்து, பரிசில்கள் வழங்கியதோடு ஊக்குவிப்பு விடயத்திலும் முன்னின்றுழைத்தனர்.

குரும்பசிட்டியின் சன்மார்க்க சபைக் கட்டிட அமைப்பே நாடக அரங்கு (THEATRE) போல ஊர்நடுவே மிளிர்ந்தது. ஆக, வருடாவருடம் 1951 முதல் இடம்பெயர்ந்து பணிபுரிந்தது. நாடகப் போட்டிகள் வைத்தவேளை வலிகாமத்தைச் சேர்ந்த நாடகமன்றங்கள் பங்குபற்றின. கனதியான பொன், வெள்ளிப் பதக்கங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன. வசதியற்ற அடிமட்ட மக்களின் தயாரிப்புக்கள் ஒலி, ஒளி, காட்சியமைப்புக்கள் கொண்ட மேடையில் தக்கவை முன்னே மேடையேற வசதியளித்தது. இதனைப் பெரும் வரப்பிரசாதமாக மதித்துப் பங்குகொண்ட மன்றங்கள் புளகித்தன. இதனாலும் வலிகாம நாடக இயக்கம் கச்சிதமாக வளர்ந்தது. முன்னோடி நாடகவல்லுனரைத் தூற்றாது போற்றியும் இளங் கலைஞர்களைப் பரிசளித்து முன்னுரிமைப்படுத்தியும், நாடக நூல்களை வெளியிட்டும், வருடாவருடம் ஒழுங்காக நாடகப்பணி செய்ததால் வலிகாமம் தனிப் பெயர்பெற வாய்ப்பேற்பட்டது.

வலிகாமத்தின் நாடக வளர்ச்சியில், இளவாலை இளங்குமரன் கலாமன்றம் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது. 1968 முதல் 1980 வரை பன்னிரண்டாண்டுகள் இது வேகத் துடிப்புடன் இயங்கியது. தம்பு என்றழைக்கப்படும் இளவாலைக் கிராமத்துக் கலைஞன் தீவிரமாக உழைக்க முன்வந்தார். நாடகத்துக்கு வேண்டிய சீன், திரை, ஒப்பனைப்பொருட்கள் என்பவற்றை தமது செலவிலேயே மன்றத்திற்களித்தார். கற்றறிந்த பெரியோர்கள் பின்னின்றவேளையிலே "கருகவிடமாட்டேன் கைகொடுத்துதவுவேன்" என்று சு. செல்லத்துரை முன்வந்தார். 25 நாடகங்களை மேற்படிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்தார். தம்புலஸ்கர் என்ற இளைஞர்கள் ஒப்பனையில் மேம்பட்டிருந்தனர். அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். வருடம் இரண்டு நாடகங்கள் என்றரீதியில் மேற்படி மன்றம் 25 நாடகங்களை தமது பிராந்தியத்தில் நடாத்தியதனால் நாடகநடிப்பு, நாடக இரசனை மேம்படத் துணைநின்றது. ஒரு நோக்கில் இவ்விளவாலைக் கிராமம் வலிகாம நாடக வளர்ச்சிக்கு மறைமுகமாகப் பங்களிப்புச் செய்துள்ளது. கிறிஸ்த்தவர்களும் நாடகத்துறை வளர்ச்சிக்குதவினர். புனித ஹென்றிஸ் ஆசிரியர் சி. எஸ்.ஆனந்தராசா பல நாடகங்களை எழுதியும், நடிகர்களை உருவாக்கியும் பணிபுரிந்தார். பூந்தான் ஜோசப் அவர்களது தாக்கமும் வலிகாமத்தின் சில பகுதிகளில் தென்படுகின்றன.

மாவிட்டபுரம், தெல்லிப்பழை, வீமன்காமம் பகுதிகளைச் சேர்ந்த பெரியவர்களும் இளைஞர்களும் இணைந்து மாவிட்டபுரம் மறுமலர்ச்சி மன்றம் பல புதிய வளர்ப்புகளை ஒரு களநாடக கோலத்தில் மேடையிட்டது. ஆங்கிலம், செந்தமிழ், சமஸ்கிருதம் என்ற பாசைகளை நன்குகற்றவரும், பலாலி ஆசிரியர் கலாசாலையில் பல ஆண்டுகள் விரிவுரை யாளராயிருந்து 'சேகஷ்பியர்' நாடகங்களை முறையாக மேடையிட்டவருமாகிய (நாடகம் வல்லோன்) கே. கே. சோமசுந்தரம் அவர்களின் வழிநடத்தலில் முறையான பயிற்சிகளை வலிகாமத்தார் பெறவாய்ப்பிருந்தது. தெல்லிப்பழை பல நோக்குச் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் செயலகம் காலத்துக்குகாலம் தரமான நாடகங்களை மேடையேற்றியது. கலைக் கழக நாடக எழுத்துப் போட்டியில் பரிசுபெற்ற பொ. கணேசமூர்த்தியவர்களது பிரதிகளை அவரது நெறியாள்கையில் மேடை யேற்றுவித்தது. இதனாற் பல வாலிபர்கள் நாடகக் கலையறிவினை வளர்த்துக்கொண்டனர். மேற்படி நிறுவனத் தலைவராக விளங்குகின்ற சி. சிவமகாராசா அவர்கள் கலைவளர்ச்சி யைக்கருத்திற் கொண்டவர் என்ற நிலையில் காலத்துக்குக்காலம். ஊக்கி, உந்தி உதவிகள் புரிந்தமை குறிப்பிடத்தக்க அம்சம் எனலாம்.

பொதுவாகவே ஆசிரியர்கள் அதிகமாக வாழ்ந்த வலிகாமத்தில் கலைவளர்ச்சி, விசேடமாக நாடகவளர்ச்சிக்கு வாய்ப்புக்கள் அதிகம் இருந்தன. ஐம்பது, அறுபது, எழுபது களில் வலிகாமம் ஆசிரியர்கள் கல்வியையே பெரிதெனக் கொண்டதனால் இரண்டாம்பட்சத் தொழில்களில் நாட்டம் குறைந்ததால் ஓய்வு வேளைகளில் இயலிசை நாடகப்பயிற்றலில் அபரிமிதவூக்கம் கொண்டனர். இந்நிலையும் மனப்பாங்கும் வலிகாமம் நாடகவளர்ச்சிக்கு கைகொடுத்துதவியது.

பொதுக்கருமங்களுக்கு நிதியுதவும் பண்பாடும் வலிகாமத்தில் நீண்டகாலமாக வளர்க்கப்பட்ட பண்பாகும். கலை வளர்ச்சியில் விசேடமாக நாடகவளர்ச்சிக்குப் பணப்பலம் ஓங்கியிருத்தல் வேண்டும். கிராமம் தோறும் பலர் வல்லவர்கள் நல்லவர்களாக வாழ்ந்து காட்டினர். கல்வி, கலாச்சாரம் இப்பிரதேசத்து உயிர் மூச்சாக வளர்ந்தது. ஆக ஆலயங்கள் அமைத்தல், கல்விக்கூடங்கள் நிறுவுதல். சங்கங்கள் நடாத்துதல், பிற்காலத்தில் (நாடக) இயலிசை நாடக வகுப்புக்கள் நடாத்துதல் போன்றவற்றிக்குத் தாராளமாக நிதியுதவி புரிய முன்வந்தார்கள். "வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா" என்பதற்கிணங்க பழக்கத்தால் வரும் பண்பு இது.

நிதியிருக்கலாம்,கொடுத்தல் என்ற கைங்கரியம் நாளாந்த பயிற்சியாற்றான் வளரமுடியும். வழக்கப்படுத்தாதவர் எவரும் உலோபித்தனத்திற்குள் சிக்குவர். இப்படி வழக்கப்படுத்திக் கொண்ட கொடுத்தற் பண்பும் வலிகாமம் கலைப் பூமியாக மிளிர உச்சமாக உதவியது. வேறு பிராந்தியங்களில் பல்வேறு நிலையிலேயே இப்பண்புகள் மிளர்ந் திருக்கலாம்.

எழுபதுகளில் நாடகத்துறையில் ஒரு திருப்புமுனை ஆரம்பமாகியது. அகில உலகரீதியில் புதிய பணியாக்கங்கள் (NEW TREND PLAYS) வளர்ந்தவேளை வலிகாமம் கைகொடுத்துதவியது. புதியன புகுதலை வரவேற்றமை அதன்வளர்ச்சி நிலையை உறுதிப் படுத்துகிறது. தெல்லிப்பழைக் கிராமசபை, மயிலிட்டி கிராமசேவைப் பகுதிகளைச் சேர்ந்த கலைஞர் குழுவொன்று 'கலை இலக்கியக் களம்' என்றமைப்பை அமைத்துக் கருத்தரங்குகள், கலைநிகழ்வுகளை நடாத்தி புதுமைப் புரட்சிசெய்ய முனைந்தது. பேராசிரியர் எஸ். சுப்பிரமணிய ஐயர் (தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம், தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்) தலைமையில் பிரபல எழுத்தாளர் கோகிலா மகேந்திரன், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை செயலாளர்களாகப் பணிபுரிந்தனர். இயற்பகுதி, இசைப்பகுதி, நாடகப்பகுதி, சித்திரப்பகுதி எனப்பலபிரிவுகளைக் கொண்டு இயங்கியது. இந்த இயக்கத்தின் போஷகராக முன்னாள் யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்கள் விளங்கினார். பல்கலைக்கழகத்துப் பல்வேறுதுறைத் தலைவர்கள் மாதாந்தக் கருத்தரங்குகளில் உயர்தர விரிவுரை நிகழ்த்தினர். துர்க்கா துரந்திரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் போஷகராயமைந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். இதனாற் காத்திரமான சேவை தொடர்ந்தது. பத்திற்குமேற்பட்ட நூல்களைப் பிரசுரித்தது.' கோலங்கள் ஐந்து' என்ற நாடக நூலும், 'அரங்கக் கலைஞர் ஐவர்' என்ற கலைவல்லுனர்கள் பற்றிய வரலாற்று நூலும் வலிகாமத்துக் கலைப்போக்கைப் படம்பிடித்துக் காட்டின. வட இலங்கை சங்கீதசபை நடாத்திய பரீட்சைகளுக்கு பரீட்சார்த்திகளை வருடாவருடம் பயிற்றி நாடகத்துறையை ஊக்கியது. நாடகப் பட்டறைகளையும் வாராவாரம் நடாத்தி செயல்முறைப் பயிற்சிகளையும் அளித்தது. ஆரம்பத்தில் ஏ.ரி. பொன்னுத்துரையும் தொடர்ந்த எழுச்சியுடன் கோகிலா மகேந்திரனும் பட்டறைகளை நடாத்தினர். இதனறுவடையாக பல மாணவர் யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகம் படிக்கும் தகுதியைப் பெற்றனர். சிலர் தற்காலிக விரிவுரையாளர்களாகவும் இன்று பணிபுரிகின்றனர். புதிய நாடக வளர்ச்சியை ஊக்கியும் நீண்டகாலப் பணிபுரிந்தும் 'வலிகாமம் கலையில் பின்னிற்கவில்லை' என்ற தனிச் சிறப்பை இம்மன்றம் ஈந்தது. வலிகாமம் தொடர்ந்தும் பீடுநடையிட இந்நிறுவனம் துடிப்பாக இயங்குகிறது.

அறுபதுகளில் இலங்கைக் கலைக்கழகத் தலைவராக அமர்த்தப்பட்ட பேராசிரியர் சு.வித்தியானந்தன் (அவ்வேளை தமிழ்த் துறைத்தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம் - துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) வலிகாமத்தவரே (தெல்லியூர்). சீரியகல்வியும் உயர்பதவியும் கலையார்வத்துடிப்பும்கொண்ட இவரது தொழிற்பாடுகள் மறைமுகமாக வலிகாமத்தின் கலைத்துறைக்கும் பெரும் புகழீட்டித்தந்தது. வானொலி நாடகத்துறையில் ஒரு சாம்றாட்டாக மிளிர்ந்த எஸ். சண்முகநாதன் (சானா) கால்நூற்றாண்டுக்கு மேல் இலங்கை வானொலியில் நாடகத்துறைத் தலைவராக பணிபுரிந்தவர். (மேடைவல்லுனருங் கூட) இவருடைய சேவையால் (வலிகாமம்) இலங்கை பூராவுமுள்ள பல இளைஞர்கள் வானொலி எழுத்தாளர்களாக, நடிகர்களாக பிரகாசித்தனர். வானொலி நாடகத் துறையிலும் வலிகாமத்தான் உச்சியில் மிளிர்ந்திருக்கிறான் என்பது இதனால் விளங்குகிறது.

நீண்டகாலம் மயிலிட்டி கிராமச்சங்கத் தலைவராக விளங்கிய திரு. எஸ்.சுவாமிநாதன் (B.A) அவர்கள் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அதிபராக மிளிர்ந்தமையால் கலை, கல்வி, இலக்கியங்களின் தூண்களாக விளங்கிய ஆசிரியர் கூட்டத்திற்கு வழிகாட்டியாக அமைந்திருந்தார். கலைகள் மூலம் கல்வியூட்டும் பயிற்சியை அளித்திருக்கிறார். இவ்விதம் வலிகாமத்துக்கு அப்பாலும் கலைப்பணி தொடர வலிகாமத்தான் காத்திரமான பங்களிப்பு செய்திருக்கிறான். கலையிலக்கிய விமர்சனங்கள் பத்திரிகைகளிற் குறைவாக வந்துகொண்டிருந்த காலகட்டத்தில் 'ஈழகேசரி' வார ஏட்டின் மூலம் கலைஞர் அறிமுகங்களையும், நாடகப்பிரதிச் சுருக்கங்களையும், தமிழ்ப் பாடசாலைகளின் கலைப் போட்டிகள் பற்றிய குறிப்புக்களையும் காலத்துக்குக் காலம் பிரசுரித்து பிரமாண்டமான ஊக்குவிப்பை 'ஈழகேசரி' பொன்னையா (குரும்பசிட்டி, மயிலிட்டி கிராமச்சங்கத் தலைவர்) வலிகாமத்தில் செய்துள்ளார். இதுபோல பல பெருமக்களின் சேவை கலைவளர்ச்சிக்கு உதவியமையை விரித்துரைக்கலாம். ஒட்டுமொத்தமாக, பாரம்பரியக் கலைகளான ஆட்டக்கூத்து, இசைநாடகம், வசன நாடகம், புதியபாணி நாடகம், பாடசாலை நாடகம் என்பவற்றில் முன்னேற்றம் கண்டும் காவடி, கரகம், வசந்தன், ஒயிலாட்டம், கும்மி போன்ற கிராமிய கலைகளிற் காத்திரமான எழுச்சி கண்டும், உக்குவிப்பில் உன்னத நிலைநின்றும் கலைப்பணியில் வலிகாமம் நீண்டபிரயாணத்தை வலுவுடனும் வளமார்ந்த நிலையுடனும் செய்துள்ளது என்பது மறுக்க முடியாதஉண்மை.

# வலிவடக்குப் பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்கள்

வை. சுரேஸ்
கிராம உத்தியோகத்தர்.

பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களினது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த அவர்களது பழக்கவழக்கங்கள், நடைமுறைகள்,விழுமியங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், கலை, கலாச்சாரம் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இது நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம், ஊருக்கு ஊர், சமூகத்திற்குச் சமூகம், மனிதனுக்கு மனிதன் வேறுபட்டுக் காணப்படும்.

இருப்பினும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு, அவர்கள் வாழும் இடத்தின் தன்மையைப் பொறுத்து ஒரு பொதுவான பண்பாடு காணப்படும். இந்த வகையிலே, இலங்கையின் மிக வடபாகத்தில் அமைந்த வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் பண்பாட்டைச் சற்று எடுத்துநோக்குவோம்.

இப்பிரதேசம் யாழ்ப்பாணத்தின் ஒருபகுதியாக அமைந்து காணப்படுவதால், யாழ்ப்பாணத்திற்குரிய பண்பாட்டு அம்சங்களே இப்பிரதேசத்தின் பொதுவான பண்பாட்டு அம்சங்களாகக் காணப்படுகிறன. ஆயினும் இப்பிரதேசத்திற்கே யுரித்தான தனித்துவமான சில அம்சங்களும் காணப்படவே செய்கின்றன.

இருபதாம் நூற்றாண்டைத்தாண்டி இருபத்தோராம் நூற்றாண்டிலே, அதுவும் புதிய ஆயிரமாவது ஆண்டிலே அடியெடுத்து வைத்துள்ள இந்த வேளையில், இப்பிரதேசத்தின் பெருமளவு நிலப்பரப்பு தற்போது மக்கள் சென்று குடியிருப்பதற்குத் தடைசெய்யப்பட்ட பிரதேசமாகவே காணப்படுகிறது. இப்பிரதேசத்தில் தவழ்ந்து விளையாடவேண்டிய மழலைகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களிலே சென்று வாழ்கின்றனர். இவர்களுக்கு இப்போது வயது பத்தைத் தாண்டிவிட்டது, அவர்களுக்குத் தமது சொந்த இடமோ அம்மண்ணின் வாசனையோ எதுவுமே தெரியாது. ஆகவே அவர்களுக்காக-வேனும் அம்மண்ணின் மணத்தையும், அங்கு செல்வத்தோடும், செழிப்போடும் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளையும் வெளிக்கொணர வேண்டியது இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

சில விடயங்கள் தற்காலச் சூழ் நிலைகளுக்கு ஒத்துவராத அம்சங்களாக இருந்தாலும், அவற்றை எடுத்துக் கூறவேண்டிய தேவையும் முக்கியமாகின்றது.

## மொழி

மனித சமுதாயத்தில் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளக்கூடிய ஊடகமான மொழி, பேச்சு வழக்கிலே இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுகிறது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்களும் தமிழ் மொழியைப் பேசினாலும், சிற்சில வேறுபாடுகளை அவதானிக்கலாம். வலி வடக்குப் பிரதேசத்தைப் பொறுத்தவரை கரையோரப் பகுதிகளில் வாழுகின்ற மக்கள் பேசுகின்ற பேச்சுவழக்கு சற்று மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. அதே போல கட்டுவன், ஏழாலை போன்ற இடங்களில் வசிக்கின்ற மக்களின் பேச்சுவழக்கும் சற்று வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. இதைவிடச் சில சமூகங்களிலே காணப்படுகின்ற பேச்சு வழக்குகள், உறவினர்களை அழைக்கும்முறை, சில சொற்கள் என்பன வித்தியாசமான முறைகளிலே பேசப்படுகின்றன. நகரை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் பெருமளவில் ஆங்கிலச் சொற்களையும் வேற்று மொழிச் சொற்களையும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அனேகமான கிராமப்புறங்களில் இத்தகைய சொற்களின் தாக்கம் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

## உடையும் அணிகலன்களும்

பொதுவான தமிழ் மக்களின் உடையான ஆண்கள் வேட்டியும், பெண்கள் சேலையும் அணியும் வழக்கமே இப்பிரதேசத்தின் பாரம்பரிய உடையாகும். 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரையும் ஆண்கள் வேட்டியும் தோளிலே சால்வையும் அணிந்தனர்.பெண்கள் சட்டைபோடாமல் வெறும் தாறுபோட்டுச் சேலையும், குறுக்குக் கட்டுவதும் வழக்கமாகக் காணப்பட்டது.

அணிகலன்களைப் பொறுத்தவரை ஆண்கள் கடுக்கன், தோடு போன்றவற்றை அணிந்தனர். பெண்கள் பல வகையான தோடுகள் (ஒரு காதிலேயே பலவகையான தோடுகள்) மூக்கு மின்னி, வளையல்கள், சறடு, தாலிச்சறடு போன்ற அணிகலன்களை அணிந்து காணப்பட்டனர். ஆண்கள் பொதுவாக குடுமி வைத்துக் காணப்பட்டனர்.

உடை அணிவதிலும் ஆபரணங்கள் அணிவதிலும் சாதிரீதியாக சில கட்டுப்பாடுகள் காணப்பட்டன. அவைகாலப்போக்கில் மறைந்து விட்டன. தற்காலத்தில் பொதுவாக மேல்நாட்டு ஆடை வகைகளையே அனைத்து மக்களும் அணிந்து வருகின்றனர். எனவே இப்பிரதேசத் திற்கென தனித்துக் கூறக்கூடிய ஆடைவகைகள் தற்காலத்திற் காணப்படவில்லை.

## வழிபாட்டு முறைகள்

வழிபாட்டுமுறைகளை எடுத்துக் கொண்டால் ஆரம்பகாலத்தில் ஒவ்வொரு சமூகத்தவரும் தங்களுக்கெனத் தனிப்பட்ட முறையில் ஆலயங் களை அமைத்து, தங்களைச் சார்ந்தவர்களுடைய வழிபாட்டுக்காக பூசைகளையும் விழாக்களையும் நடாத்தி வந்தனர். இவை பெரும்பாலும் சிறு தெய்வ வழிபாடுகளாகக் காணப்பட்டன. சமூகத்தில் உயர்ந்த சாதியினர் எனக் கூறிக் கொள்வோர் தங்களுக்கென்று விநாயகர், முருகன் சிவன், அம்மன் கோயில்களை அமைத்திருந்தனர்.

சிறு தெய்வங்களாக அண்ணமார், கூட்டத்தார், காளி, ஐயனார், வைரவர் என்று பலவகைப்பட்ட தெய்வங்களுக்குக் கோவில்கள் அமைத்துக் காணப்பட்டன. பெரும்பாலான சிறு தெய்வக் கோயில்கள் சிறிய கோயில்களாகவும், அவற்றிற் பொங்கல், வேள்வி, மடை போன்ற உற்சவங்கள் நடைபெறும் கோயில்களாகவும் காணப்பட்டன. இத்தகைய கோயில்களில் பெரும்பாலும் பிராமணர் அல்லாதோரே பூசைகளை மேற்கொண்டு வந்தனர். வலிகாமம் வடக்குப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால், இங்குள்ள வைரவர் ஆலயங்கள் கணக்கிலடங்காதவை. அண்மைக்காலத்தில் தலையிட்டி வைரவர் ஆலயம், காங்கேசன் துறை கலியமடம் ஞானவைரவர் ஆலயம் போன்றவை பெரிய அளவிற் கட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

இந்த நூற்றண்டின் முற்பகுதி வரை *"வேள்வி"* எனப்படும், மிருகங்களைப் பலியிடும் வழக்கம் அநேகமான சிறுதெய்வக் கோயில்களில் இடம்பெற்று வந்தது. அநேகமாக தற்போது இவ்வழக்கம் வழக்கொழிந்து போனாலும் கவுணாவத்தை வைரவர் கோயில் போன்ற சில கோயில்களில் இன்றும் இத்தகைய வழக்கம் நடைமுறையிலிருந்து வருகிறது. இத்தகைய கோயில்களின் அயற்கிராமங்களில் இருப்பவர்கள் தங்களுடைய நேர்த்திக் கடனாகவும், புனிதக் கடனாகவும் இத்தகைய பலியிடுதலை மிகவும் பயபக்தியுடன் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் சிலர் பலியிடாவிட்டாலும் பொங்கலிட்டு, மடைபோட்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

இப்பகுதியின் பெரிய ஆலயங்களாகத் திகழ்பவை மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலும், கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலும் ஆகும். 1960களின் பிற்பகுதி தொடக்கம் தெல்லிப்பழை துர்க்கைஅம்மன் ஆலயமும் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டு ஆலயம் மட்டுமல்லாமல் மிகப்பெரியதொரு சமய நிறுவனமாகவும், தொண்டு நிறுவனமாகவும் செயற்பட்டுவருகிறது. இவை தவிர, ஒவ்வொரு ஊரிலும் நடுத்தர அளவிலான பல ஆலயங்கள் காணப்படுகின்றன இவற்றிலும் மகோற்சவங்களும் ஏனைய விழாக்களும் நடைபெற்று வருகின்றன. *மாருதப்புரவீக7வல்லியினால்*அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏழு விநாயகர் ஆலயங்கள் இப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளன.

மகோற்சவம் நடாத்தப்பெறும் ஆலயங்களில் உற்சவம் நடைபெறும் காலங்களில், அக்கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் மிகவும் புனிதமாகவும் ஆசார சீலர்களாகவும் இருந்து, விரதம் அனுஷ்டித்து, ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது வழக்கம். ஆலயங்களிலே ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கெனவும் கடமைகள் ஒதுக்கப்பட்டிருக்கும். அவர்கள் அந்தக் கடமைகளை மிகுந்த பயபக்தியுடனும் தமது அர்ப்பணிப்பாகவும் செய்வது வழக்கம் அவற்றுக்காகச் சிறுஊதியமும் பெற்றுக் கொள்வர்.

மகோற்சவம் நடைபெறும்காலத்திற் திருமணம் செய்வது, வெளியூருக்குப் பிரயாணம் செய்வது போன்றவற்றை அக்கிராமத்தில் வசிப்பவர்கள் தவிர்த்துவிடுவார்கள். தலையில் எண்ணெய் தேய்த்து முழுகுவதும் தவிர்க்கப்படும். தேர், தீர்த்தத்திருவிழாக்கள், காவடிநேர்த்திகள் போன்றவற்றின்போது சிவனடியார்களுக்கும், உறவினர்களுக்கும் *பூசை* என்று சொல்லப் படுகின்ற ***திருவமுது*** கொடுத்து உணவு உட்கொள்வர்.

இப்பிரதேசத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் குருபூசை செய்வதும், அறுபத்துமூன்று சிவனடியாருக்குத் திருவமுது அளித்து வழிபடுவதும் சிறப்பம் சமாகும்.

கீரிமலை ஆடிமாத அமாவாசை தினத்திற்குப் பிரசித்தி பெற்ற இடமாகும். எனவே, போக்குவரத்து *வசதிகளற்ற முற்காலத்தில் தூர இடங்களிலிருந்து* வண்டில்கள் மூலம் வரும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இப்பிரதேச மக்கள் தங்குமிடமும், உணவும் அளித்துவந்தனர். கால மாற்றத்தால், இந்த நடைமுறைகள் அனைத்தும் தற்போது வழக்கொழிந்து வருகின்றன.

இந்துசமய வழிபாட்டு முறைகளைத் தவிர கிறிஸ்தவ சமயத்தவரும் தமது சமய நெறிகளுக்கு ஏற்ப இப்பிரதேசத்திற்கென தனித் துவமான அம்சங்கள் அதிகளவிற் காணப் படவில்லை.

## சடங்குகளும் நம்பிக்கைகளும்

ஒரு இனத்தினதோ அல்லது ஒரு சமுதாயத்தினதோ பண்பாட்டைப் பிரதிபலிக்கும் முக்கிய அம்சமாகத்திகழ்வது சடங்குகளும் நம்பிக்கைகளும் ஆகும். இந்த வகையிலே சில சடங்குகள் சமயம் சார்ந்தவையாகவும், சில சடங்குகள் சமூகம் சார்ந்தவையாகவும், சில அனைத்து மக்களுக்கும் பொதுவானவையாகவும் காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தின் பெரும்பான்மையான மக்கள் இந்துக்கள். எனவே இவர்களது சடங்குகள் இந்து சமயம் சார்ந்ததாகவே காணப்படுகின்றன.

மனிதவாழ்வின் ஆரம்பமான பிறப்புமுதல் எடுத்துக் கொண்டால் ஒரு தாய் கர்ப்பமுற்றுத் தனது பிரசவத்தை தனது தாய்வீட்டிலேயே வைத்துக்கொள்வது வழக்கம். தாய் பிரசவத்தை மிகவும் பக்குவமாகவும், கவனமாகவும் பார்ப்பார். குழந்தை பிறந்து 31வது நாள் *துடக்குக்கழிவு* என்னும் சடங்கு நிகழ்த்தப்படும். இச்சடங்கின்போது தமது உறவினர்களை அழைத்து, அவர்களுக்கு விருந்து பரிமாறுவது வழக்கம். அத்துடன் குழந்தையின் மாமன், சிறிய தகப்பன், சிறிய தாய், பேரன், பேர்த்தி போன்றவர்கள் குழந்தைக்குத் தங்கத்தினாலான ஆபரணங்களை அணிவித்து மகிழ்வார்கள். ஏனைய உறவினர்களும் அன்பளிப்புக்களை வழங்குவது வழக்கம்.

அடுத்து 41வது நாள் தொட்டிலிலிடுவதும் ஆலயத்திற்குச் செல்வதும் வழக்கமாகும். இத்தகைய சடங்குகளில் *தாய்மாமனுக்கு* முக்கிய இடம் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து பல் முளைத்ததும் பல்லுக்கொழுக் கட்டை, காது குத்தல், பால்பருக்குதல் போன்ற சடங்குகள் நடாத்தப்படும். தற்காலத்தில், பிறந்த நாட்கொண்டாட்டங்கள் மிகப்பெரிய அளவில் நடாத்தப்பட்டுவருகின்றன.

### *பூப்புனித நீராட்டு விழா*

பெண்பிள்ளைகள் பருவமடைந்ததும் நடாத்தப்படுகின்ற ஒரு விழா இதுவாகும். முற் காலத்திற் பெண்பிள்ளைகள் பருவமடைந்ததும், அவர்கள் அதன்பின்னர் வீட்டைவிட்டு வெளியே செல்வதோ, பொது வைபவங்களுக்குச் செல்வதோ,அரைப்பாவாடை சட்டை போடுவதோ தடைசெய்யப்பட்டிருந்தது. பொதுவாக ஒரு பெண் பருவமடைந்துவிட்டால் அவர் திருமணத்திற்குத் தயாராகிவிட்டதாகவே கருதப்பட்டது. இதில் *பூப்புனித நீராட்டு விழா* எனப்படும் *சாமத்தியச் சடங்கு* மிகப்பெரிய அளவில் நடாத்தப்படுவதும். பருவமடைந்த காலத்தில் அப்பெண்பிள்ளையினால் உண்ணப்பட்ட உணவுகளை வைத்து ஆராத்தி எடுப்பதும் பால் வைத்து தோயவார்ப்பதும் முக்கிய நிகழ்ச்சிகளாக் காணப்பட்டன.

இந் நிகழ்ச்சிகளிற் *தாய்மாமனுக்கு* முக்கிய இடம் வழங்கப்படும். ஆராத்தி எடுக்கப்படும் உணவுப் பண்டங்கள் அவ் வீட்டிற்குச் சலவைசெய்யும் சலவைத் தொழிலாளிக்கு வழங்கப்படும்.

தற்காலத்தில் இத்தகைய பூப்புனித நீராட்டுவிழாக்கள் வீடியோமயப்படுத்தப்பட்ட ஒன்றாகமாறிவிட்டது. இருப்பினும், பழைய சம்பிரதாயங்கள் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டே வருகின்றன.

### திருமணம்

இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை திருமணத் தில் ஒவ்வொரு சமூகத்தினரும் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தமது சமூகத்தைச் சார்ந்தவர்களையே திருமணம் செய்வது வழக்கம். அத்துடன்மட்டுமல்லாது குறிப்பிட்ட ஒரு சமூகத்திலேயும் குலம், கோத்திரம், ஊர் போன்றவை மிக இறுக்கமாக காணப்பட்டு வந்தன. இத்தகைய கட்டுப்பாட்டை மீறுபவர்களும், அவர்களைச் சார்ந்தோரும் அக்குறிப்பிட்ட சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். பொதுவாக தாய்மாமன் பிள்ளையை அல்லது மைத்துனன் அல்லது மைத்துனியைத்தான் திருமணம் செய்வது வழக்கம். ஆனால், தற்காலத்திற் காதல் திருமணங்கள் போன்றவற்றால் இத்தகைய கட்டுப்பாடுகள் வலுவிழந்து வருகின்றன

## திருமணச்சடங்கு

திருமணச்சடங்குகள் மிகவும் புனிதமாகவும், சகுனங்கள் பார்க்கும் ஒரு நிகழ்வாகவும் காணப்படுகின்றன. முற்காலத்திற் தற்போது உள்ளதுபோற் சட்டரீதியான திருமணப் பதிவுமுறை காணப்படவில்லை. ஆகையால், திருமணத்திற்கு முன்னர் இரு வீட்டாரும், ஒருவர் வீட்டிற்கு மற்றவர் சென்று விருந்து உட்கொள்கின்ற *சம்பந்தக்கலப்பு* என்ற ஒரு நிகழ்வு இடம்பெற்றது. அதன்பின், திருமணத்திற்குச் சில நாட்களுக்கு முன்னர் *பொன்னுருக்குதல்* என்னும் சடங்கு *மணமகன் வீட்டில்* இடம் பெறும். இது *தாலி செய்வதற்கான பொன்னை* உருக்கியெடுக்கும் நிகழ்வாகும். இதன்போது பொன் உருகுகின்ற விதத்தைக்கொண்டே 'அந்தக் குடும்பம் வாழுமா வாழாதா?' என்று கூறிவிடலாம் என்பது நம்பிக்கை. அதற்கு "பொன்னுருக்கும் தட்டான் தான் பொருத்தமில்லைஎன்றானோ, தாலி செய்யும் தட்டான்தான் தாரமில்லை என்றானோ"எ இத்தகைய பொன்னுருக்கலின்போது மாப்பிள்ளைவீட்டார் பெண்வீட்டிலும் பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டிலும் கன்னிக்கால் என்று ஒரு நேரான முள்முருக்கம் தடியைநட்டு அதற்கு பொன், ஆபரணம் போடுவதும் வழக்கம். பொன்னுருக்கலின் பின்னர் மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும் அரப்பு எண்ணெய் வைத்து முழுகுவதோ சட்டியில் வறுப்பதோ, மணமகள், மணமகன் வீட்டை விட்டு வெளியே செல்வதோ தவிர்க்கப்படும்.

திருமணங்கள் பொதுவாக மணமகள் வீட்டிலேயே நடக்கும். பெண்ணின் சகோதரன் மணமகளையும், மணமகளின் சகோதரி மணமகளையும் அவர்களது வீட்டிக்குச் சென்று மணமேடைக்கு அழைத்து வருவது வழக்கம். திருமணத்திற்கு உறவினர்களுக்கு ஆணும் பெண்ணுமாகச் சென்று அழைப்பு விடுப்பது வழக்கம். உறவினர்கள் திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன்னரே சென்று திருமணவீட்டிற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை செய்து கொடுப்பார்கள். திருமணத்திற்கு அழைப்பு விடுக்காவிட்டாலும் ஊரவர்கள், அயலவர்கள் உறவினர்கள் திருமணத்தின் மற்றநாள் மணமகன் வீட்டிற்கும் அதற்கு அடுத்தநாள் மணமகள் வீட்டிற்கும் சென்று மணமக்களைப் பார்வையிடுவார்கள். இதன்போது அன்பளிப்புக் களும் வழங்கப்படும்.இத்தகைய அன்பளிப்புக்கள் கடன் என்ற அடிப்படையில் கொடுத்தவர்களின் வீடுகளில் ஏதாவது கொண்டாட்டம் நடக்கும் போது திருப்பிக் கொடுக்கப்படும்.

திருமணவீட்டிற்கு வாசலிலே வாழைப்பழக் குலையுடன் வாழை கட்டுவது, பந்தலுக்கு வெள்ளை கட்டுவது, மணவறைகட்டுவது, போன்றவை முக்கிய அம்சங்களாகும். தற்காலத்தில் திருமணங்கள் பெரும்பாலும் ஆலயங்களிலும் திருமணமண்டபங்களிலும் நடைபெறுவதால் கொண்டாட்டங்கள் பெரும்பாலும் ஒரு நாளுடனேயே முடிவடைந்து விடுகின்றன. அத்துடன் முற்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகள் கைவிடப்பட்டு வருகின்றன. அத்துடன் தற்காலத்தில் சட்டப்படியான திருமண எழுத்து நடை பெறுவதால் அதுவும் ஒரு கொண்டாட்டமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அத்துடன் மேல்நாட்டுப் பாணியில் மோதிரம் மாற்றுதல், கேக் வெட்டுதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் திருமணத்தின்போது பாரம்பரியமாக அணியப்படும் வேட்டி இத்தகைய திருமண எழுத்தின் போது அணியப்படுவதில்லை. மாறாக காற்சட்டை சேட், கோட் போன்ற ஆடைகள் அணியப்படுகின்றன. இவையனைத்தும் காலத்தின் வேகத்தோடு மிக வேகமாக மாற்றம் கண்டுவருகின்றன.

## மரணச்சடங்கு

மண்ணுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதனின் வாழ்வு மரணத்தில் முடிந்துவிடு கின்றது, அவன்பேணிப்பாதுகாத்து வந்த பண் பாடுகளும் நம்பிக்கைகளும் மரணத்தோடு முடிந்து விடுகின்றன. ஆயினும் அந்த பண்பாட்டு அம்சங்கள் அவனது சந்ததி யூடாகவும் சமூகத்தினூடாகவும் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே மரணத்தின் போதும் சில சடங்குகளும் சம்பிரதாயங்களும் பேணப்பட்டு வருகின்றன. மரணத்தின் பின் ஆற்றப்படுகின்ற கருமங்களை *"மரணச்சடங்கு"* என்றே அழைக்கப்படும். இதன் போது பல சடங்குகள் இடம்பெறும். ஒருவர் இறந்துவிட்டால் அயலவர் உறவினர் குறிப்பாகப் பெண்கள் கூடியழுவது ஒரு வழக்கமாகும் மரணவீட்டிற்குச் செல்லும் பெண்களை இறந்த வருக்கு மிகநெருங்கிய உறவினர் கட்டியழுவதும் வந்தவரும் வீட்டுக்காரரும் மாறி மாறி ஒப்புச் சொல்லி அழுவதும், ஒப்பாரிவைத்தல், மாரடிப்பதும் ஒரு வழக்கமாகும். மரணவீட்டிற்கு ஊரிலே இழவு சொல்வதில்லை. குறிப்பாக மரண வீட்டிலே அடிக்கப்படும் பறை எவ்வளவு தூரத்திற்கு கேட்குமோ அந்த எல்லை வரை இழவு சொல்வது வழக்கமில்லை. மரண வீட்டிற்குச் செல்பவர்களுக்கு வெற்றிலை பாக்கு, சுருட்டு போன்றவை கொடுத்து உபசரிப்பது வழக்கம். மரண வீட்டின் வாசலிலே "மொந்தன் வாழைக்குலை" கட்டப்படும். மரணத்தின் போது தந்தைக்கு மூத்த ஆண் மகனும் தாய்க்கு இளைய ஆண் மகனும் கொள்ளி வைத்து தகனம்

செய்வது அனைத்துச் சமூகத்த வரிடையேயும் காணப்படும் பொதுவான அம்சமாகும். வீரசைவர்களும் கிறிஸ்தவர்களும் சடலத்தை அடக்கம் செய்வார்கள். மரண வீடு நடைபெற்று முன்றாவது ஐந்தாவது, ஏழாவது நாள் செலவு என்று சொல்லப்படுகின்ற சடங்கும், முப்பத்தியோராம் நாளில் அந்தியேட்டியும் செய்யப்படும். இந்நிகழ்ச்சிகளின் போது உறவினர்கள் நண்பர்கள், அயலவர்களை அழைத்து அவர்களுக்கு விருந்தளிக்கப்படும்.

முற்காலங்களில் மரணச்சடங்கின் போது நடைபெறும் பலவித நிகழ்வுகளும் ஒவ்வொரு குறிப்பிட்ட சாதியினருக்கு ஒதுக்கப்பட்டுக் காணப்பட்டது. ஆனால் இந்தநிலை தற்காலத்தில் மாற்றமடைந்துவிட்டது. இருப்பினும் சாதிக் கட்டுப்பாடுகள் மிக இறுக்கமாக உள்ள இடங்களில் தற்காலத்திலும் இந்நடைமுறைகள் இன்னும் பின்பற்றப்பட்டுவருகின்றன.

## முடிவுரை

பண்பாடு மிகப்பரந்து விரிந்த ஒரு அம்சமாகும் இதனைச் இச் சிறிய கட்டுரையில் உள்ளடக்குவதென்பது இயலாத காரியம். இங்கே கூறப்பட்ட பண்பாட்டு அம்சங்கள் பொதுவாக யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு ஓரளவு பொதுவானவை. சில விடயங்கள் எமது வலி வடக்கு பிரசேத்திற்குச் சிறப்பானதாக அமைகின்றன.

பண்பாட்டு அம்சங்களை ஆராயும் போது மிக அண்மைக்காலம் வரையில் இப்பிரதேசத்தில் பின்பற்றப்பட்டு வந்த இறுக்கமான சாதி அமைப்புக்களை வெளிக்கொணர வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் அது தற்காலத்திற்கு ஒவ்வாததும் அணைந்துவிட்ட நெருப்பை மீண்டு கிளறுவதாகவும் அமையும், எனவே அத்தகைய அம்சங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளன.

மேலும் சடங்குகள் நம்பிக்கைகள் போன்றவற்றில் பொதுவாக இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் இப்பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழ்வதால் அவர்களது சடங்குகள் சம்பிரதாயங் களைப் பற்றிச் சற்று விரிவாகக்கூறப் பட்டுள்ளன. இருப்பினும் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுபவர்களும் குறிப்பிட்ட தொகையினர் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் சமய நடவடிக்கைளில் வேறுபட்டுக் காணப்படுகின்றனரேயொழிய பொதுவாக இப் பிரதேசத்தின் பாண்பாட்டு அம்சங்களுக்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர் அவர்களது மதச்சடங்குகள் பொதுவாக உலகம் முழுவதற்கும் பொதுவான ஒன்றாகக் காணப்படுவ தால் அவற்றைப்பற்றிச் சிறப்பித்துக் கூறவில்லை.

பண்பாட்டு அம்சங்களும் பழக்கவழக் கங்களும் காலத்தின் தாக்கத்தாலும் புறச் சூழலின் தாக்கத்தாலும் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்தே செல்லும். ஆயினும் அதன் அடிப்படை அம்சங்களை மறந்துவிடக்கூடாது இடம்பெயர்வும், புலம்பெயர்வும் இத்தகைய பண்பாட்டு அம்சங்களைச் சிதைக்காமல் பாதுகாக்க வேண்டியது இப்பிரதேசத்தைச் சார்ந்த ஒவ்வொரு வரினதும் தலையாய கடமையாகும்.

## சிரிப்பின் ரகங்கள்

1) ஓயாமல் சிரிப்பவன் - பைத்தியக்காரன்
2) இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் - கோமாளி
3) காணாமல் சிரிப்பவன - கஞ்சன்
4) கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்
5) நிலைமறந்து சிரிப்பவன் - காதலன்
6) கொடுக்கும் போது சிரிப்பவன் - சூழ்ச்சிக் காரன்
7) மகிமையில் சிரிப்பவன் - மன்னன்
8) அருளிற்கு சிரிப்பவன் - ஆண்டி
9) நினைவோடு சிரிப்பவன் - அறிஞன்
10) துன்பத்தில் சிரிப்பவன் - மனிதன்



6.4.2000 அன்று மேலதிக அரச அதிபரும் பிரதேசச் செயலருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வலிகாமம் வடக்கு புதிய பிரதேசச் செயலகம்.




வலிகாமம் வடக்கு பிரதேசக் கொடி.



நீலியம்பனைப் பிள்ளையார் கோவில், மல்லாகம் தெற்கு.



கும்பிழாவளைப் பிள்ளையார், அளவெட்டி.



பழம்பிள்ளையார் கோவில், மல்லாகம்.



காத்தவராயர் கோவில், அளவெட்டி.



வலிகாமம் வடக்கு புதிய பிரதேசச் செயலகப் புகுமுக வைபவத்தில் கட்டிடத் திணைக்கள எந்திரி திரு. இருதயநாதன் விளக்கேற்றுகிறார். அருகே செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்



மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் 6.4.2000 ல் திகதியன்று வலிகாமம் வடக்கு புதிய பிரதேசச் செயலகத்தைத் திறந்து வைக்கிறார்.



மாவிளாகன் சுந்தரபுரம் குடியேற்றத்தில் UNHCR - குடிநீர்த் திட்டம் 1998.



நாடறிந்த நாடகக் கலைஞர் கலாபூஷணம் ஏ. ரி. பொன்னுத்துரை

# வலிகாமம் வடக்கும் சைவத்திருக்கோயில்களும்

**திருமதி ப. திலகநாயகம்**
பிரதேச செயலர்
வலிகாமம் வடக்கு.

"கோயில்இல்லா ஊரிற்குடியிருக்கவேண்டாம்"
"ஆலயந் தொழுவது சாலவும் நன்று"
என்பவை ஆன்றோர் வாக்குகளாகும்.

"திருக்கோவில் இல்லாத திருவில் ஊர்"..........
.............. ஊரல்ல அடவிகாடே" என்று திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரப்பதிகம் கூறுகிறது.

கோயில் இல்லாத ஊர் ஊரல்ல. உண்மையில் பற்றைகள் அடங்கிய காடே என்பது இதன் பொருளாகும். அப்படிப்பட்ட ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று தான் ஆன்றோர் கூறியிருக்கின்றார்கள்.

"ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்று திருமுருகாற்றுப் படையும் விதந்தோதியமையிலிருந்து பண்டுதொட்டு ஊர்கள் தோறும் கோயில்கள் இருந்தமையும், விழாக்கள் நடைபெற்றமையும் அறியக் கூடியதாய் இருக்கின்றது. சங்க நூல்களிலே பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய பதிணென்கீழ்க்கணக்கு நூல்களிலே பத்துப் பாட்டில் முதலில் நிற்பது நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையாகும். அதிலே கோயில்களைப் பற்றியும், விழாக்களைப் பற்றியும் முருகன் அருளைப்பற்றியும், பெருமையோடு எடுத்துரைக்கப்பட்டடுள்ளது. எட்டுத்தொகையில் ஒன்றான பரிபாடலில் முருகன் கோயில் கொண்டருளிய திருப்பரங்குன்றம் என்னும் கோயில் பற்றிய சிறப்பான பாடல்கள் உள.

கவியரசர் கம்பரும்

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

எனப்பாடிச்சென்றுள்ளார். அதாவது படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்கின்ற ஆண்டவனை .......... திருக்கோயிலில் சரணடைவதே பேரின்பம் என்கிறார்.

இந்த விஞ்ஞான யுகம் அல்லது கொம்பியூட்டர் யுகத்திலும் கடவுள், சமயம், பக்தி இறையுணர்வு தேவையா? என வினா எழுப்பு பவரும் உளர். மனித ஆற்றலுக்கும் ஒரு எல்லையுண்டு. என்னதான் அரிய பெரிய மருந்து களைவிஞ்ஞானத்தின் மூலம் கண்டு பிடித்தாலும் கூட மரணத்தை யாராலும் வெல்ல முடிவதில்லை

நம் மனித இரத்தத்தைக்கூட யாராலும் உருவாக்க முடிவதில்லை. நாம் நினைத்த படி வாழ்க்கையை மாற்றியமைத்து வாழவும் முடிவதில்லை. எங்களது பிறவிபற்றி அல்லது இறப்புப் பற்றி முன்னரே அறியும் அறிவும் இல்லை. இவ்வாறு இருக்கும் பொழுது இறைவனை - இறை உறையும கோயில்களை எவ்வாறு நாம் துச்சமாகக் கருத முடியும்? வல்லான் வகுத்தபடியே எல்லாம் நடக்கும். இதைத்தான் பாரதியார். பின்வருமாறு பாடியுள்ளார்.

"முன்னர் நமதிச்சையினால் பிறந்தோமில்லை,
முதல் இறுதி இடை நமது வசத்திலில்லை,
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்தில் பொருளெல்லாம் சரித்தல் கண்டாய்"

யாவற்றிற்கும் மேலாக. முக்கியமாக மனித உணர்விற்கு மேலாக. மேற்பட்ட உயர்ந்த சக்தியே இறைவன். எவ்வாறு அறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞானம் தேவைப்படுகின்றதோ அதே போல மனவளர்ச்சிக்கும் சமயம் தேவை. சமயம் வளர கோயில் வேண்டும். பக்திவேண்டும். கோயில் பூசைகள் சிறப்புற நடைபெற வேண்டும். அப்போது தான் நாடு சிறக்கும் மக்களும் சிறப்படைவர்.

இதனைத்தான் திருமந்திரம்

"ஆற்றருநோய் மிக்க அவனிமழையின்றி
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதற்தான் திருக்கோவில்கள் எல்லாம்
சாற்றிய பூஜை தப்பிடில் தானே" என்றும்

"முன்னவனார் கோயில் பூஜைகள் முற்றிடின்
மன்னர்க்குத் தீங்குள மாரி வளங்குன்றும்
கன்னங்களவு மிகுந்திடும் காசினி
என்னருநம்பி எடுத்துரைத்தானே" என்றும்
விளக்கிச் செல்கின்றது.

கோயில்கள் நம்பண்பாட்டின் தனிப்பெரும் சிறப்பம்சமாக விளங்குவதோடு, மேல் நாட்டவரும் வியந்து போற்றும் வண்ணம், நமது கலைத் திறனையும் சாற்றி நிற்கின்றன. இதனையே சிற்பக்கலை வல்லுனரான "பெர்க்குசன்துரை" அவர்கள் "கிறீசும்" றோமும் மறைந்து விட்டன. இன்றைய நாகரிகத்தில் நாம் அவைகளின் பெருமைகளைச் சிறிதளவு கூடச் சிந்திக்க முடியவில்லை. ஆனால் இந்தியாவோ அங்குள்ள கோயில்களில் தனக்குள் ஒரு உலகத்தையே அடக்கிக் கொண்டிருக்கின்றது. அங்குள்ள ஒவ்வொரு சிற்பமும் பண்டைக்கால நாகரிகத்தை மட்டுமன்றி பக்தியையும், நம்பிக்கையையும் இன்றளவும் அப்படியே பிரதிபலிக்கின்றது" என்று வியந்து போற்றியுள்ளார்.

"கோபுர தரிசனம் பாவ விமோசனம்" என்பதும் நமது ஆன்றோர் பொன்மொழியாகும். நடமாடும் தெய்வமாக விளங்கிய நம்முன்னோராகிய அருளாளர் பலர் நடந்தும், உருண்டும், தவழ்ந்தும் திரிந்த நம்பெருமை மிக்க ஆலயங்களைத் தொழுதலே நாம் வாழ்நாளில் அடையக்கூடிய தலையாய சிறப்பாகும். இவ்வுண்மையைத்தான் பட்டினத்தடிகள் பின்வருமாறு பாடிச்சென்றுள்ளார்.

"நல்லாய் எனக்குமறுவொன்று தந்தருள் ஞானமிலா
பொல்லா எனைக்கொன்று போடும் பொழுதியல் பூஜை செபம்,
சொல்லார் நற்கோவில் நியமம் பலவகைத் தோத்திரமும்,
எல்லாம் முடிந்தபின் சொல்லு கண்டாய் கச்சி ஏகம்பனே"

சிவபூமி என்று அழைக்கப்படுகின்ற வலிகாமம் வடக்கும் மேலேகூறப்பட்ட பண்பாட்டுச் சிறப்புக்களில் எவ்விதத்திலும் குறைந்ததல்ல. அங்கே கோயில்கள் இல்லாத இடமேஇல்லை. காணுமிடமெங்கும் கண்ணையும் கருத்தையும், மனத்தையும் கவரவல்ல அருள் மணக்கும், கலைமணக்கும் அருள் பொழியும் - அருளாட்சி செய்யும் ஆலயங்கள் சூழ இருப்பது மனத்திற்கு ரம்மியத்தையும், பெருமிதத்தையும் சாந்தியையும் அளிப்பதாகும். இக்கோயில்களின் வரலாறுகளை கேட்கக்கேட்க, காணக்காண உணர்வு இனிக்கும், ஊன் இனிக்கும், உயிரும் இனிக்கும். சிறப்பாக திருப்பரங்குன்றிற்கு நிகரான முருகன் எழுந்தருளிய மாவிட்டபுரமும், ஈஸ்வரங்களுள் முதன்மை பெற்ற நகுலேஸ்வரமும் புண்ணிய பூமியான வலி வடக்கில் அமைந்திருப்பது அதியற்புதம். இப்பிரதேசத்தின் முழுமையாக எல்லாக் கோயில்களின் வரலாறுகளையும் தரமுடியா விட்டாலும் கூட, பெறப்பட்ட கோயில்களின் விபரங்களையும் வரலாறுகளையும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக இங்கே தருவது மனதிற்கு உவகையூட்டுகின்றது.

நமக்குக் கிடைத்த விபரங்களின்படி வலி வடக்குப் பிரதேசத்தினில் 247 கோயில்கள் உள்ளன. அவற்றில் வைரவர், வீரபத்திரர் கோயில்கள் 92. இவையே கூடுதலாக உள்ளன. அடுத்தபடி கூடுதலாக அம்மன் கோயில்கள் உள்ளன. அவை 67 கோயில்கள் ஆகும். விநாயகர் கோயில்கள் 42 ஆகும். முருகன் கோயில்கள் 13. சிவன் கோயில்கள் 08. அண்ணமார் கோயில்கள் 07. கிருஸ்ணர், நாகதம்பிரான் கோயில்கள் 07. முனியப்பர் கோயில் 02. பூதவராயர் கோயில் 01, இவற்றினை விட யோகர் சுவாமிகோயில் கணேசையர் நினைவாலயம், முடிமன்னர் இராஜ ஆலயம் ஆகியவையும் உண்டு. இனிக்கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியிலான கோயில் விபரங்களைப் பார்ப்போம

## ஜே/ 212 மல்லாகம் தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு

### ஞானவைரவர் ஆலயம்

கோயில் வீதி மல்லாகத்தைச் சேர்ந்ததும் நூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றை உடையதும், அதாவது 1850 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதும் ஆகும். 10 நாட்கள் அலங்காரத் திருவிழாவுடன் வைகாசிப் பொங்கல், திருவெம்பாவை ஆகிய விசேட விழாக்களும் நடாத்தப்பட்டு வருகின்றன.

### பெரிய தம்பிரான் தேவஸ்தானம்

நரியிட்டான், மல்லாகம் என்ற முகவரியில் சுமார் 200 வருடங்களாக தம்பிரான் ஆதரித்து 1888ம் ஆண்டு மடாலயமாகக் கட்டப்பட்டது. அலங்காரத் திருவிழா உட்பட தைப்பொங்கல், சிவராத்திரி, வைகாசிப் பொங்கல், ஆனி உத்தரம், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விசேட திருவிழாக்களை நடத்தி வரும் இவ் ஆலயத்திற்கு ஊஞ்சற் பாடலும் உண்டு.

### நீலியம்பனை பிள்ளையார் கோயில் 6/3/J/51/P3/

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் "நீலி" என்னும் வயோதிப அம்மையார் இப் பகுதியில் ஓர் பனைமர அடியில் விநாயக விக்கரகம் ஒன்றை வைத்துப் பூசித்து வருகையில் அவரின் பக்தி மேலீட்டினால் விநாயகப்பெருமான் அவ்விடத்தில் ஓர் நீர் ஊற்றினை வழங்கி அருளினார். இவ்வற் புதம் கண்ட விவசாயிகள் அவ்விடத்திலேயே விநாயகப் பெருமானுக்கு ஓர் ஆலயம் எழுப்பினார்கள். "நீலீ" என்னும் அம்மைக்கு அருள்பாலித்த *நீலி அன்பன்* குடியமர்ந்த இடம் 'நீலியம்பனை' எனப் பெயர் பெறலாயிற்று. ஆண்டு தோறும் ஆவணிச் சதுர்த்தியில் கொடியேறி 12 நாட்கள் மகோற்சவம

நடைபெறும் விசேட தினங்களாக விநாயகர்சதுர்த்தி, விநாயக ஷஸ்டி விரதம், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய தினங்களும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அபிஷேக ஆராதனைகளும் பொங்கலும் நடைபெறுவது வழக்கம்.

### வீரபத்திரர் ஆலயம்

மல்லாகம் வங்களா ஒழுங்கை பகுதியில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. ஏறத்தாழ 200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அலங்காரத் திருவிழா, மணவாளக்கோல விழா ஆகியவற்றோடு

### ஸ்ரீ மகாதேவ வைரவர் ஆலயம்

தீர்த்தாவளவு மல்லாகம் என்னும் பகுதியில் அமைந்துள்ளது. 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்ஆலயம் பாற்கிழுவை மரத்தின் கீழ் ஓர் சூலம் வைத்து வழிபடப்பட்டு வந்தது. மூலஸ்தானத்தில் பஞ்சலோகத்தினால் ஆன சூலமும் பிள்ளையார், முருகன் விக்கிரகங்களும் வைக்கப்பட்டு பூசை செய்யப்பட்டுவருகின்றது. வருடம் தோறும் வைகாசித் திங்களில் சங்காபிஷேகமும் அன்ன தானமும், தைப்பூசம், நவராத்திரி விழா, திருவெம்பாவை ஆகிய விழாக்களும் கொண்டாடப்படுவது வழக்கம்.

### ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம்

வில்லவராஜன் சீமா மல்லாகம் என்ற முகவரியில் 1940 களில் இவ் ஆலயம் அமைக்கப் பட்டது. தினமும் ஒருவேளை பூஜையுடன் வருடாந்தப் பொங்கல், வைகாசி விசாகம், பங்குனித் திங்கள், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விஷேட தினங்கள் கொண்டாடப்படுகின்றன.

அம்பாள் ஆலயம், கல்லாரை மல்லாகம்
கைலாயவளவு சிவஞான வைரவர் கோயில் மல்லாகம். ஆகிய ஆலயங்களும் இக்கிராம சேவையாளர் பிரிவில் உண்டு. அவைபற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை.

### ஜே / 213 மல்லாகம் மத்தி காளிகாதேவி ஆலயம்

மல்லாகம் மத்தியில் அமைந்துள்ள இவ் ஆலயம் இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு மேல் தொன்மை வாய்ந்தது ஆகும். மூலமூர்த்தி ஐம்பொன்னால் ஆன விக்கிரகம்ஆகும். வைரவர், பிள்ளையார், முருகன், சந்தான நந்தி, பரிவார மூர்த்திகள். தற்போது இரண்டு கால நித்திய பூஜையும் 12 நாட்கள் அலங்கார உற்சவமும் பங்குனிஉத்தரத்தில் சங்கா அபிஷேகமும், வருடப் பிறப்பு, சித்திரை பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப் பூரம், வைரவர் பொங்கல், நவராத்திரி, தீபாவளி, திருக்கார்த்திகை, திருவெம் பாவை ஆகியவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

### தொந்தனை ஞானவைரவர் ஆலயம்

நூறு வருடங்கள் பழமை வாய்ந்தது. இவ் ஆலயம் அலங்காரத் திருவிழாவுடன் திருவெமபாவை, நவராத்திரி ஆகிய விழாக்களை நடத்திவருகின்றது.

### சிவகாமி அம்பாள் ஆலயம்

மாணிமனை மல்லாகம் என்னும் முகவரியில் 50 ஆண்டு கால வரலாற்றினை உடையாதாக இவ் ஆலயம் விளங்குகின்றது. அலங்காரத் திருவிழாவுடன் நவராத்திரி, திருவெம்பாவை நடைபெறுவது உண்டு

### *பழம்பதி தேவஸ்தானம் மல்லாகம் பிள்ளையார்*
HA/5/JA/721

சுமார் 500 ஆண்டுகளுக்கு முந்திய வரலாற்றினை உடையது இவ் ஆலயம். மேல் நாட்டு அந்நியர் ஆட்சியில் அழிக்கப்பட்டு மீளவும் புத்துயிர் பெற்ற ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். வருடாந்த மகோற்சவம் ஆவணித் திங்களில் அமாவாசை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுகாணும் வகையில் 10 நாள் நடைபெறும் மற்றும் மாதாந்த சதுர்த்தி, விநாயகசஷ்டி, கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, தைப் பொங்கல், சித்திரைசங்கிராந்தி, திருவெம்பாவை போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றது.

மல்லாகம் பழம்பதி தேவஸ்தான முருகன் ஆலயமும் மேற்படி ஆலயத்துடன் இணைந்து இருக்கின்றது.

### கட்டுப்பிட்டி நாகதம்பிரான்

1965 ஆம் ஆண்டு கந்தையா இராசதுரை என்பவரால் கட்டுப்பிட்டி என்ற நிலத்தினில் உள்ள வேப்பமரத்தினை அடியாகக்கொண்டு அமைக்கப் பட்ட ஆலயம் என்பர். வேப்பமரத்தில் ஏறிய இராசதுரை அம்மரத்திலிருந்து இறங்கும் சமயத்தில் மரத்தின் கீழ் பாம்பு ஒன்று படமெடுத் தாடியது. இதனால் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் நாகதம்பிரானை நினைந்து வழிபடபாம்பு மறைந்து விட்டது. இந்த நிகழ்ச்சியின் நினைவாக எழுந்த ஆலயமே இதுவாகும். தினமும் ஒருவேளைப் பூசையும் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் இருவேளைப்பூசையும் நடைபெறுகிறது

### ஜே /214 மல்லாகம் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்

சுமார் 50 வருடங்களை வரலாறாகக் கொண்ட இவ்வாலயம் தைப்பொங்கல, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விழாக்களை நடாத்தி வருவதுண்டு

**கோணப்புலம் வைரவர்**
**ஜே/215 அளவெட்டி வடக்கு**

## தாமர்வளவு வைரவர் ஆலயம்

1925 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தினில் நித்திய பூஜை தை மாதத்தில் 10 நாட்கள் அலங்காரத் திருவிழாவுடன், இந்துக்களின் விஷேட திருவிழாக்களையும் நடாத்தி வருவது வழக்கம்

## முதலியார் கோயில்

1910 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. நித்திய பூசையும், இந்துக்களின் விசேட தினங்களும் நடைபெறுவதுண்டு

தம்பயப்புலம் அரசடி ஞான வைரவர் ஆலயம்.

நித்திய பூசை வழமைபோல நடைபெறு கின்றன.

## ஜே /216 அளவெட்டி மத்தி
## கும்பளாவளைப் பிள்ளையார் கோவில்

மாருதப்புரவீகவல்லியால் கட்டப்பட்டது என்று வரலாறு கூறுகின்றது. போத்துக்கேயரால் இடிக்கப்பட்ட இவ் ஆலயம் ஆங்கிலேயர் காலத்தில் பழைய ஆதிமூல சிலாவிக்கிர கத்துடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. மூன்று கோபுரங்களை உடையது. மூல மூர்த்தி - மாருதப் புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் ஆகும். பரிவாரமூர்த்திகள் பார்வதி, பரமேஸ்வரர், சுப்பிரமணியர், சோமஸ்கந்தர், நால்வர் தினமும் நான்கு காலபூசை நடைபெறுவதுடன், வைகாசியிற் கொடியேறி பதினொரு தினங்களுக்கு உற்சவம் நடைபெற்று பூரணைக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெறும். விசேட தினங்களாக வருடப்பிறப்பு, சங்கிராந்தி தீர்த்தம், பூர்பக்க, அபரபக்க சதுர்த்தி அபிஷேகம், சிவராத்திரி, தைப்பூசம், பூரணை, நடேசர் அபிஷேகம், கந்தபுராணப் படிப்பு, நவராத்தரி, கந்தசஷ்டி, சூரன்போர், திருவெம்பாவை ஆகியவற்றின்போது சுவாமி திருவீதியுலா வருவதுண்டு.

## அழகொல்லை ஸ்ரீவிநாயகர் கோவில்

கி.பி8ம் நூற்றாண்டில் மாருதப்புரவீகவல்லி யால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் 1845 ஆம் ஆண்டில் இது பெருங் கோவிலாகியது. மாருதப்புரவீக வல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களுள் அழகொல்லை விநாயகர் ஆலயமும் ஒன்று என வரலாறு கூறுகின்றது. மூலமூர்த்தி விநாயகர், பரிவார மூர்த்தி வைரவர், தினமும் மூன்று காலப்பூஜை சித்திரை வருடப் பிறப்பு தினத்தன்று தேர்த்திருவிழா, வரும் வகையில் 10 நாட்களுக்கு வருடாந்த மகோற்சவம் நடைபெறுவது வழக்கம். மாதசங்கிராந்தி, பூர்பக்க, அபரபக்க சதுர்த்தி, நடேஷர் அபிஷேகம், கந்தபுராணப்படிப்பு, தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, சித்திரைச் சதயம், ஆடிப்பூரம், நவராத்திரி, கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி, பிள்ளையார்கதை, கயமுகாசுரன் சூரன்போர், திருவெம்பாவை போன்ற தினங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம்.

**ஐயனார் கோவில் சாத்தா கலட்டி அளவெட்டி**

அனாதியான இக்கோயில் அளவெட்டி வடக்கு சாத்தா கலட்டி எனும் பகுதியில் அமைந் திருக்கின்றது. சாத்தா என்பது ஐயனாரைக் குறிக்கும். இதன் காரணமாகவே இவ் இடத்திற்கு சாத்தா கலட்டி ஐயனார் எனப் பெயர் வந்தது. நித்திய பூசையுடன் சனிக்கிழமை சதுர்த்தி விசேடவிழாக்களாக நடைபெறவது வழக்கம்**அரிகர புத்திர ஐயனர் கோயில்**

அளவெட்டி வடக்கில் அமைந்துள்ள இவ்வாலயம் அனாதியானது. நித்திய பூசையுடன் இந்துக்களின் சகல விழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

## கேணிக்கரை ஞான வைரவர் ஆலயம்

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கொன்றை மரநிழலில் உயரிய கல்லுப் பீடம் ஒன்றில் சூலம் ஒன்று வைக்கப்பட்டு வழிபாடு ஆற்றப்பட்டு வந்தது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆலயம் வளர்ச்சி அடையத்தொடங்கியது. ஸ்துபி அர்த்தமண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், ஆகியவற்றோடு வைரவர் மூலமூர்த்தி யாகவும் பிள்ளையார் நாகதம்பிரான் மூல விக்கிரகங்களாகவும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இவ்வாலயத்தில் சிவராத்திரி, ஆனி மாதம் மணவாளக்கோல அபிஷேகம், திருவாதவூரடிகள் புராணபடனம், ஆனிப்பொங்கல், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விழாக்கள் நடைபெறுவ துண்டு.

மகா மாரி அம்மன் (சின்னம்பாள்) ஆலயம், இராவத்தை வைரவர் ஆலயம், கும்பளாவளை காளிகோயில் ஆகிய கோயில்களும் இக் கிராம சேவையாளர் பிரிவினில் உண்டு. அவை பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளமுடிய வில்லை.

## ஜே / 217 அளவெட்டி கிழக்கு
## வெள்ளியம்பதி காளி அம்பாள் கோயில்

மேல் நாட்டார் ஆட்சியில் இலங்கை உட்பட்டிருந்த காலத்தில் இவ்வாலயம் ஆரம்பிக்கப் பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. வெள்ளியம்பதி அளவெட்டி கிழக்கு எனும் முகவரியில் உள்ள

இவ் ஆலயத்தில் ஆடிமாதத்தில் 10 நாள் மகோற்சவம் பொங்கலை இறுதியாகக் கொண்டு நடைபெறுவதும் தைப்பொங்கல், சிவராத்திரி, வருடப்பிறப்பு, கார்த்திகை விளக்கீடு, நவராத்திரி, திருவெம்பா ஆகிய விஷேட விழாக்களும் நடை பெறுவது வழக்கம்.

### அலுக்கை நாவலடி ஞானவைரவர்.

இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்வாலயம் தைப்பொங்கல், தைப்பூசம், பங்குனித் திங்கள், குளிர்த்தி, வருடப்பிறப்பு, கும்பாபிஷேக தினம், ஆனிப்பொங்கல், நவராத்திரி, திருவெண்பாவை, ஆகிய விழாக்கள் விசேடமாக நடைபெறுவது வழக்கம்.

### நரசிங்க வைரவர் ஆலயம்

கும்பலை அளவெட்டி கிழக்கில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக வழிபாடு நடைபெற்று வரும் இவ்வாலயத்தில் ஆனிப்பொங்கல், தைப் பொங்கல், சிவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விழாக்களுடன் நித்திய பூசையும் நடைபெறுவது வழக்கம்.

### ஜே /218 கணேஸ்வரம் அளவெட்டி

#### வீரபத்திரர் ஆலயம்

கணேஸ்வரம் அளவெட்டியில் எண்ப த்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாகமுத்து பொன்னையா என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்தில் மகோற்சவம் தவிர்ந்த இந்துக்களின் சகல விழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

### சாளம்பை அம்பாள் ஆலயம்

கணேஸ்வரம் அளவெட்டியில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக இவ் ஆலயத்தில் மகோற்சவம் தவிர்ந்த இந்துக்களின் சகல விழாக்களும் நடைபெறுவது வழக்கம்

### அணிஞ்சிலடி விநாயகர் ஆலயம்

அணிஞ்சிலடி, கணேஸ்வரம், அளவெட்டி மக்களுக்கு அருள்பாலித்து வரும் இவ் ஆலயத்தில் மகோற்சவம் தவிர்ந்த இந்துக்களின் சகல விழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

### குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம் 6/2/J/11/6

தெல்லிப்பளை, மல்லாகம், அளவெட்டி ஆகிய மூன்று ஊர்களும் சங்கமமாகும். பகுதியில் துர்க்காபுரம் கிராமசேவகர் பிரவில் இந்த ஆலயம் அமைந்திருக்கின்றது. சைவக் குருக்கள் ஒருவர் தமது குடியிருப்பு தேவைக்கென கிணறு ஒன்றை தோண்டுவித்தார். அந்தவேளை அரிதாகவும் பெரிதாகவும் அழகாகவும் ஓர் விநாயகர் சிலை கண்டெடுக்கப்பட்டது. அக்கிணற்றுக்கு அருகே ஆலயம் அமைத்து குறித்த அந்த விநாயர் விக்கிரகத்தை வைத்து வழிபடத் தொடங் கினர். இதன் காரணமாகவே இவ் ஆலயத்தை குருக்கள் கிணற்றடி விநாயகர் என அழைக்கலாயினர். 1845 ஆம் ஆண்டு யாழ் கச்சேரியில் இருந்த ஆலயங்களின் பதிவேட்டில் இவ் ஆலயத்தின் பெயரும் இருந்திருக்கின்றது.

பழைய கோயிற் கட்டடத்தினை புனரமைப்பதில் பரிகாரி காசிப்பிள்ளை அவர்களின் ஊக்கத்தால் துரிதமாக்கப்பட்ட வேளையில், அவர் இறந்து விடவே, அவரது மைத்துனர் கந்தப்பர் சுப்பிரமணியம் மிகுதி வேலைகளை நிறைவு செய்தார். 1910 ஆண்டு முதலாவது கும்பாபிசேகம் நடைபெற்றது. 1920ல் தேர்த்திருப்பணி நடைபெற்றது. மூலமூர்த்தி கருங்கல்லாலான வெள்ளி அங்கி உடைய விநாயகர், கயலட்சுமி, சுப்பிரமணியர், நடராசர், வைரவர் ஆகிய மூர்த்தங் களும் உண்டு. உள்வீதி, வெளிவீதியென இரண்டு வீதிகளையுடைய இவ் ஆலயத்தில் தினமும் மூன்று காலப் பூசையும் வருடாந்த மகோற்சவம் ஆனி உத்தர நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர், தீர்த் தோற்சவம் உட்பட 10 நாட்கள் திருவிழாவும் நடைபெறும். இவற்றினை விட விநாயகர் சஷ்டி, விநாயகர் சதுர்த்தி, விஜயதசமி, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி ஆகிய காலங்களில் விசேட திருவிழா நடை பெறும்.

### கொல்லன் சீமா வைரவர்

கணேஸ்வரம் அளவெட்டியில் கொல்லன்சீமா எனும் இடத்தில் அமைந்துள்ள இவ் வைரவ ஆலயத்தில் மகோற்சவம் தவிர்ந்த இந்துக்களின் சகல விழாக்களும் நடைபெறுவது வழக்கம்

### கொல்லன் சீமா காளியம்பாள் அலயம்

இவ் ஆலயம் மாருதப்புரவீகவல்லி காலத்தில் தோன்றி இருக்கலாம் என்ற கருத்து நிலவிவரு கின்றது. தவண்டைக் குருக்கள் ஆசாரி என்பவரே இவ் ஆலயத்தினைக் கட்டுவித்தவர். வைகாசி விசாகப் பொங்கல் நடைபெறுவது வழக்கம்.

## ஜே /219 அளவெட்டி தெற்கு

## குருவளை சோதி வைரவர் பெருமான் கோயில்

அளவையூர் தென்பகுதியில் வயல் நிலங்களில் காவற் தெய்வமாகவும் அடியவர்கட்கு திருவருள் பொலியும் அன்புத்தெய்வமாகவும் காட்சி தரும் குருவளை வைரவர் ஆலயம் முன்னூறு ஆண்டுகள் பெருமையும் பழமையும் வாய்ந்தது. இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகளும், ஆடிப்பொங்கல், நவராத்திரி, திருவெம்பா, தைப்பூசம், சித்திரா பௌர்ணமி ஆகிய விசேட திருவிழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் (அளவெட்டி)

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட இவ்வாலயம் நித்திய பூசைகளுடன் வருடாந்த உற்சவங்கள் இந்துக்களின் விசேட தினங்கள் ஆகியன விசேட திருவிழாக்களாக நடைபெறுவது வழக்கம்.

## பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலயம் HA/ 5/JA/ 624

சோழ அரசகுமாரி மாருதப்புரவீகவல்லி தனது சாபம் நீங்கத்தரிசித்த ஏழு விநாயகர் கோவில்களுள் இவ்வாலயமும் ஒன்று 1842 ம் ஆண்டு கட்டப்பட்டது. இங்கு மூலவர் ஸ்ரீசித்தி விநாயகர். பரிவாரத்தில் தேவியருடன் ஸ்ரீசண்முகர், சந்தான கோபாலர், வைரவர், சண்டேஸ்வரர் உளர். நித்திய பூசை மூன்று காலம் வரை நடைபெறுகின்றது. ஆனிமாதத்தில் மகோற்சவம் தேர்த்திருவிழாவுடன் நிறைவேறுகின்றது மாதாந்த சதுர்த்தி, ஸ்கந்தசஷ்டி இங்கு விசேடதினங்கள் ஆகும்.

## அருவம்பற்று சித்தி விநாயகர் ஆலயம்

500 வருடங்களுக்குமுற்பட்ட இந்த ஆலயத்தினில் நித்திய பூசையுடன், அலங்காரத் திருவிழா, சதுர்த்தி, திருவெம்பாவை மற்றும் விசேட தினங்களும் நடைபெறுவது வழக்கம்.

## ஜே - 220 அளவெட்டி மேற்கு

## ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயம்

200 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றினை உடையது இந்த ஆலயம், ஆரம்ப காலத்தில் வெறும்பற்றைக் காடாக இருந்த நிலத்தடியில் காணப்பட்ட கேணியின் அருகாற் சாதாரண வழிப்போக்கன் ஒருவன் செல்லும் போது அங்கு இருந்த மரங்களின் அருகில் பல புற்றுக்களின் மத்தியில் இரண்டு நாகபாம்புகள் படமெடுத்து ஆடிக் கொண்டுநின்றன. இதன் காரணமாக தெய்வீக உணர்வுடைய அன்பர்கள் சிலர் அப்புற்றடியில் ஒரு கல்வைத்து நாகதம்பிரான் எனப் போற்றி வந்தனர். பெருமானின திருவருள் வாக்குப்படி ஆவணி ரோகிணி நட்சத்திரத்தில் (கிருஸ்ண ஜயந்தி) வருடாந்தப் பொங்கல் நடாத்தப்பட்டு வந்தது.

09.04.1953 இல் அருட்கவி சி. விநாசித் தம்பி, திருமதி அன்னம் விநாசித்தம்பி தம்பதியினர் எம்பெருமானுக்கு சிறு கொட்டில் அமைத்துப் பூசித்துவந்தனர். அது படிப்படியாக வளர்ந்து 03.09.1979 இல் கும்பாபிஷேகத்துடனாகிய பெருங் கோயிலாகியது. இக்காலம் தொட்டு ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயம் என்ற பெயருடன் விளங்கத் தொடங்கியது.

ஒவ்வொரு வருடமும் மகோற்சவம் ஆவனி மாதம் ரோகினி நட்சத்திரத்தில் தேர் உற்சவம் நடைபெறக் கூடியதாக 10 நாள்களுக்கு வருடாந்த மகோற்சவம் நடைபெறும். நித்திய நைமித்திய பூசைகளுடன் மாதோற்சவம்,வாரோற்சவம் உட்பட இந்துக்களின் சகல திருவிழாக்களும் இங்கு சிறப்பாக நடைபெறுவது உண்டு. குறிப்பாக கிருஸ்ண ஜயந்தியை முன்னிட்டு உறியடி உற்சவம், ஒவ்வொரு மாதமும் ஏகாதசி உற்சவம், விஸ்ணு, ஸ்ரீராம நவமி, அபிராமி, கேதார கௌரி விரதம், சுவர்க்கவாயில் ஏகாதசி போன்றன மிகவும் சிறப்புடைய விழாக்களாகும்.

## ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் முருகபுரம்

மாரிகாலக் குளமாக விளங்கிய ஒரு பள்ளநிலத்தருகினில் நின்ற ஆலமரத் தினடியில் வீரகோத்திரப் பரம்பரையினரின் மூதாதையரால் இவ்வாலயம் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது இக்கோயில் இருக்குமிடம் ஆலங்கட்டை என வழங்கப்பட்டு வருகின்றது. 29.04.1988 இல் கும்பாபிஷேகம் நிறைவாகியது. நித்தியபூசை களுடன் இந்துக்களின் திருவிழாக்கள் இடம்பெறுவது வழக்கம்.

நுங்கையப்புலம் என்ற இடம் முருங்கையப் புலம் எனவும் வழங்கப்பட்டு வருவது வழக்கம். இவ்விடம் தற்போது முருகபுரம் என அழைக்கப்ப பட்டு வருகின்றது.

இவ்ஆலயங்கள் தவிர..

- ஆதி விநாயகர் கோயில்
- இலந்தை கட்டி வைரவர் கோயில்
- தான் தோன்றி ஈஸ்வரி அம்மன் கோயில்
- நர்த்தன வைரவர் கோயில்

சாமுண்டி ஈஸ்வரி அம்மன் கோயில்
சிவஞான வைரவர் கோயில்
பிலாவடிப் பிள்ளையார் கோயில்
பிலாவடி அம்மன் கோயில்
காளி அம்மன் கோயில்
கொல்லோலைப் பிள்ளையார் கோயில்
நரசிங்க வைரவர் கோயில் ஆகிய ஆலயங்களும் இக்கிராம சேவையாளர் பிரிவினில உண்டு. ஆனால் அவ் ஆலயங்கள் பற்றிய விபரங் களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக் கின்றது.

## ஜே/ 221 இளவாலை வடக்கு ஆனைவிழுந்தான் விக்னேஸ்வரர் ஆலயம் HA/5/JA/175

மாருதப்புரவீகவல்லி அமைத்த விநாயகர் ஆலயங்களைத் தரிசிக்கச் செல்லும்போது அவருடைய யானை இந்த ஆலயத்தில் விழுந்து வணங்கிய தலமாகையால் இந்தப் பெயர் பெற்றது என்பர். தலவிருட்சங்கள்- அரசமரம், ஆலமரம். மூல மூர்த்தி சுயம்புலிங்க வடிவுடன் கூடிய விநாயகர். பரிவார மூர்த்திகள் சண்டேஸ்வரர், நாகதம்பிரான் கோபாலர், வீரபத்திரர் உண்டு. ஆவணி உத்தரட்டா தியில் பன்னிரண்டு நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறுவது வழக்கம். 1976ல் ஆனி உத்திரட்டா தியில் கும்பாபிஷேகம் நிறைவேறியது.

## ஒல்லுடை ஞான வைரவர் ஆலயம். காடிவளை இளவாலை HA/5/JA/178

இற்றைக்கு ஐந்து தலைமுறைக்கு முன்வாழ்ந்த வயிரவி என்னும் அருளாளரால் ஒரு பூவரசமரத்தடியில் சூலம் வைத்து பூசை செய்து வழிபாடு தொடங்கப்பட்டது. இவ்வாலய மூலமூர்த்தி வைரவர். பரிவார மூர்த்திகள் விநாயகர், நாகதம்பிரான், தினசரி ஒரு காலப்பூசை. வைகாசி விசாகத்திலிருந்து 12 நாட் களுக்கு அலங்கார உற்சவத்துடன், சித்திரைக் கதை திருவெம்பாவை, தைப்பொங்கல், தைச் செவ்வாய், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைப்பரணி, ஆனி உத்தரம், ஆனி அவிட்டம், நவராத்திரி ஐப்பசிப்பரணி, கந்தசஷ்டி, கார்த்திகை விளக்கீடு விநாயக ஷஷ்டி ஆகிய தினங்களில் விசேட பூசை நடைபெறுவது வழக்கம்.

## நாவலடி வைரவர்

நாவல் மரத்தடியில் தோன்றிகோயில் கொண்டார். மூலமூர்த்தி - திரிசூலம். பரிவார மூர்த்திகள் சந்தான கோபாலர், நாகதம்பிரான், நித்திய பூசை நடைபெறுகின்றது. வருடாந்தப் பொங்கலும் இங்கு நடைபெறுவது வழக்கம்

மணலடைப்பு அண்ணமார் ஆலயம்
இலுப்பையடி ஞானவைரவர் ஆலயம்
சிறுவிளான் கிராயிட்டி வைரவர் ஆலயம்
புன்னையடி விநாயகர் ஆலயம் (சோடக்கன்)
ஆகிய ஆலயங்களும் இக்கிராம அலுவலர் பிரிவினில் உண்டு. இவ்வாலய விபரங்களை அறிந்து கொள்ளமுடியாதிருக்கின்றது.

## ஜே/222 இளவாலை வடமேற்கு கவுணாவத்தை நரசிங்க வைரவர் கோயில் ~ கருகம்பானை

மூலமூர்த்தி - வைரவர் பரிவார மூர்த்திகள் காளி, நாகதம்பிரான், வைரவர். தினமும் உச்சிக்காலப் பூசைகள் தைமாதத்தில் அலங்கார உற்சவம் வைகாசி விசாகத்தன்று பொங்கல் நடைபெறுவது வழக்கம்.

ராஜராஜேஸ்வரி அம்பாள் கருகம்பானை
நாதோலை முத்துமாரி அம்பாள் ஆலயம்
அண்ணமார் கோயில் கூவில்
வசந்த முருகன் ஆலயம்
ஆகிய ஆலயங்களும் மேற்படி கிராமசேவையாளர் பிரிவினில் உண்டு. ஆனால் அவைபற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக் கின்றது.

## ஜே /223 வித்தகபுரம்

### ஞானவைரவர் சுவாமி கோயில் பொற்கலம்தம்பை

1740 ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு போர்த்துக்கேயர் காலத்துக்கு முந்தியது எனக் கருதப்படுகின்றது. இதற்கு சுன்னாகம் குமாரசுவாமி புலவர் பாடிய ஞானவைரவர் ஊஞ்சற்பாட்டு உண்டு. மூலமூர்த்தி - வைரவர் பரிவார மூர்த்திகள் பிள்ளையார், முருகன். விசேட தினங்களில் திருவிழா 1886ம் ஆண்டு கோவிற் பதிவேட்டில் பொற்கலம் ஞான வைரவர் என பதியப்பட்டுள்ளது.

## சடச்சப்பை ஞானவைரவர் கோயில்

ஆதி காலத்திலிருந்து வழிபடப்பட்டு வந்த இவ்வாலயத்தினில் ஆவணி மாதத்தினில் 10 நாள்கள் அலங்காரத் திருவிழாவும், நவராத்திரி, திருவெம்பா போன்ற விசேட விழாக்களும் நடைபெறுவது வழக்கம்

## ஞானவைரவர் ஆலயம் விழிசிட்டி

கட்புலனற்ற பெண்மணி ஒருவர் புளியின் கீழ் ஒரு சூலத்தை வைத்து வழிபட்டதனால் அவருக்குக் கண்பார்வை ஏற்பட்டதன் காரணமாக விழிதீட்டி வைரவர் என்ற பெயரைப் பெற்றார்.இப்போதும்

அதேகருத்துடையதாக விழிசிட்டி என அழைக்கப்படுகின்றது. 1875ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் 12 நாட்களுக்கான அலங்கார உற்சவத்துடன் வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, சித்திரைப் பரணி, ஐப்பசிப்பரணி, திருவாதிரை, நவராத்திரி, திருவெம்பா ஆகிய விசேட திருவிழாக்களும் நடைபெறுவது வழக்கம்

### ஜே / 224 பன்னாலை
### தவளகிரிமுத்துமாரி அம்மன் கோயில்

இவ் ஆலயம் அளவெட்டி வடக்கின் தெல்லிப்பளை - பண்டத்தரிப்பு வீதியில் அமைந் துள்ளது. வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள் கடலிலிருந்து எடுத்த அன்னையின் திருவுருவச் சிலையினை வீடொன்றினில் வைத்து ஆராதித்து வந்திருக்கின்றார்கள். இரவு நேரங்களில் அன்னையை வைத்திருந்த இடத்தினில் முணுமுணுக்கும் சத்தம் வந்து கொண்டிருந்தது. இதனால் அச்சம் கொண்ட அவ் ஊர்மக்கள் பொங்கலும், பூசையும் நடாத்தினார்கள். ஆனால் முணுமுணுப்பு நிற்கவில்லை. இதன் காரணமாக முணுமுணுத்த அம்மன் என அழைக்கத்தொடங் கினார்கள். அளவெட்டியைச் சேர்ந்த ஆசாரசீலர்கள் சிலர் சுழிபுரம் சென்று வருவதுண்டு. இவ் ஆசாரசீலர்களால் பொறுப் பேற்று மடத்தின்முன் உள்ள கூடத்தில் வைத்து வணங்கப்பட்டுவந்தது.இதனாற் கூடத்து அம்மன் என வழங்கப்படலாயிற்று. பின்னர் காத்தவராயர் கோயில் எனவும் தற்போது முத்துமாரி அம்மன் கோயில் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றது. காத்தவராயருக்கு இவ் ஆலயத் தினில் தனிச்சந்நிதியும் கழுமரமும் உண்டு.

இவ் ஆலயத்தில் வருடமும் முழுவதும் விசேட உற்சவங்கள் நடைபெற்று வருகின்ற போதிலும், பங்குனி இராண்டாம் திங்களில் நடைபெறும் குளிர்த்தியும், ஆனி உத்தரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு பதினொருதினங்கள் நடைபெறும் மகோற்சவமும், நவராத்திரி, திருவெம்பாவை என்பன விசேட திருவிழாவாகவும் நடைபெறுவது உண்டு. நடேசருக்கு தனிச் சந்நிதி உள்ளதால் ஆருத்திரா தரிசனம் விசேடமாக நடைபெறுவதும் வழக்கம்மாகும்.

நீண்ட காலமாக இக்கோயிலில் வேள்விக் கொடியேற்றி பலியிடும் வழக்கம் இருந்து வந்திருக்கின்றது. 1918 ஆம் ஆண்டளவில் ஒரு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும். 1924, 25 ஆம் ஆண்டளவில் பலயிடுதல் நிறுத்தப்பட்டு மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. இடைக்காலத்தில் மீளவும் பலியிடும் வழக்கத்தினைக் கொண்டு வர வேண்டுமென ஏற்பட்ட பிரச்சனையினால் மகோற்சவம் தடைப்பட்டு 1935 ஆம் ஆண்டளவில் தூபியில் திருத்தவேலைகள் செய்யப்பெற்று இரண்டாவது மகாகும்பாபிசேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மகோற்சவமும் இடம்பெறலாயிற்று.

### கற்பக விநாயகர் கோயில் ~ வரத்தலம் பன்னாலை

மூலமூர்த்தி - பிள்ளையார். பரிவார மூர்த்திகள் நவக்கிரகம், விஷ்ணு, வைரவர், தினமும் இருவேளைப் பூசையும் ஆவணி அமாவாசையை அந்தமாகக்கொண்டு 12 நாட்கள் வருடாந்த மகோற்சவமும் நடைபெறுவது வழக்கம்

### "ரிஷி ஈஸ்வரம்" பாலசுப்பிரமணியர் கோயில் பன்னாலை

"முத்துரிஷி" யால் 1916ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து அவரது குருவின் அஸ்திகொண்டு வரப்பட்டு அவரது ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி - வள்ளி தேவசேனாசமேத பாலசுப்பிர மணியர். தினமும் 3 காலப் பூசையுடன் கந்தசஷ்டி ஆரம்பதினத்தை முதல் தினமாகக் கொண்டு கொடியேறி ஆறாம் நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறுவது வழக்கம்

முருக மூர்த்தி கோயில்
பிள்ளையார் கோயில்
வீரபத்திரர் கோயில் அளவெட்டி
வீரபத்திரர் கோயில் விழிசிட்டி
வல்லுவத்தை வைரவர் கோயில்
ஞானவைரவர் கோயில்
அட்டமட்டை அம்மன் கோயில்
பன்னாலை பூதவராயர் கோயில்
ஆகிய ஆலயங்களும் மேற்படி கிராமசேவையாளர் பிரிவினில் உண்டு. ஆனால் அவ் ஆலயங்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியாதிருக் கின்றது.

### ஜே /225 கொல்லங்கலட்டி

கிளானை வைரவர் கோயில்
மாவை கலட்டி நாகதம்பிரான் கோயில்
மாவை கலட்டி அம்மன் கோயில்
ஆகிய ஆலயங்கள் இக்கிராம சேவையாளர் பிரிவில் உண்டு ஆனால் அவை பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளமுடியாதுள்ளது.

### ஜே /226 நகுலேஸ்வரம் / கீரிமலை
### தீர்த்தக் கரைப்பிள்ளையார் கோயில் கீரிமலை

மூலமூர்த்தி - சித்தி விநாயகர், பரிவார மூர்த்திகள் - பால முருகன், நாகதம்பிரான், வைரவர், தினமும் மூன்றுகாலப் பூசையுடன், ஆவணிச்சதுர்த்திக்கு முன்னைய பத்து நாட்கள் அலங்காரத் திருவிழாவும் நடைபெறுவது வழக்கம்.

## நகுலேஸ்வரம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூவகைச் சிறப்பும் பெற்ற திருத்தலங்களில் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயமும் ஒன்றாகும். கீரிமலை யின் புராதன பெயர் திருத்தம்பமலை. இத்திருத்தம் பமலையில் திருத்தம்பலேசுவரர் என்ற பெயரில் இறைவன் கோயில் கொண்டிருந்தார். கீரிமுகமுடைய முனிவர் ஒருவர் திருத்தம்பலைத் தீர்த்தத்தில் நிராடி திருத்தம்பலேசுவரரை வழிபட்டு கீரிமுகம் நீங்கப்பெற்றார். இதன் காரணமாகத் திருத்தம்பலை ''கீரிமலை'' எனப்பெயர் பெறலாயிற்று. கீரிமலையினை வடமொழியில் "நகுலகிரி" என்பர். இதனாலேயே கீரிமலையில் உள்ள சிவன் ஆலயம் நகுலேஸ்வரம் எனப்பெயர் பெற்று விளங்கத் தொடங்கியது. ஆதிச்சோழ மன்னனாகிய முசுகுந்தன், நளன், அருச்சுனன் முதலியோரால் வழிபடப்பெற்றதென்றும், தீர்த்த தலயாத்திரை களுக்குரிய புராதன புண்ணிய இடங்களில் ஒன்றாகவும் வரலாற்றிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகுலேஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சவம் தைப்பூசத்தின் அடுத்த நாளாகிய அபரபக்ஷ் பிரதமைத்திதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மகா சிவராத்திரி அன்று தீர்த்தோற் சவம் வரை 15 நாட்களுக்கு நடைபெறும், நகுலாம் பிகையின் வருடாந்த மகோற்சவம் பங்குனி மாத பூரணைக்கு முதல் நாள் பங்குனி உத்தரமும் பூர்வபக்ஷ சதுர்த்தசி திதியிற் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரை வருடப்பிறப்பன்று தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்த உற்சவமும் உட்பட 10 நாட்கள் நடைபெறும். அநுபூதிமான் களது சமாதிகள் பலவற்றையும் யாத்திரிகர்களது வசதிக்கும் ஏற்ப அமைக்கப்பட்ட திருமடங்களையும் கொண்டு விளங்கும் இவ் ஆலயம் மேல்நாட்டு அன்னியரது ஆட்சிக காலத்தில் அழிக்கப்பட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பெரும் முயற்சியால் புத்துயிர் பெற்றெழுந்தமை குறிப்பிடத்தக்கது. 1990ல் அழிவுற்று இப்போது மீண்டும் நகுலேஸ்வரக் குருக்களால் புனருத் தாரணம் செய்யப்படுகிறது.

## ஸ்ரீமந் நாராயண சுவாமி கோவில்

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும்அமை ந்துள்ள இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயம் கீரிமலையில் அமைந்திருக்கிறது. அலங்கார உற்சவம் ஆவணி மாதத்தில் 12 நாட்களுக்கு நடைபெறுவது வழக்கம. ஆலயத்தில் உள்ள விக்கிரகம் அசரீரிபெற்றுத் தோண்டியெடுக்கப்பட்ட மிகப்பழைய விக்கிரகம். ஆலயத்திற்கு அண்மையில் மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடி குதிரைமுகம் மாறிய தீர்த்தக் குன்று, குகை, பன்னீர் மரம் முதலியனவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.

செய்து வந்தார். அந்த இடத்தினில் மரமொன்று வளர்ந்து பாரித்து நிழல் பரப்பி நின்றது. இந்த மரத்தின் கீழ் இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் இவ் ஆலயம் ஆரம்பமாகியது என்பர். இவ் ஆலய மூர்த்தி காசியிலிருந்து கொண்டுவரப் பட்டதனால் "காசிவிநாயகர்" ஆலயம் என வழங் கப்படலாயிற்று. 1973 -04 - 19 இல் கொடித்தம்பம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து மகோற்சவம் நடைபெறலாயிற்று. 10 நாட்கள் மகோற்சவம் நடைபெறுவடன், விஜயதசமி, மார்கழித் திருவாதிரை, விநாயகர்சஷ்டி, விநாயகர் சதுர்த்தி, தைப்பொங்கல், தைப்பூசம், ஆகிய தினங்களில் சுவாமி திருவீதியுலா வருவதுண்டு. மகா விஷ்ணு, நாகதம்பிரான், வைரவர், சண்டேஸ்வரர், ஸ்தம்பப் பிள்ளையார் முதலிய மூர்த்தங்களுடன் எழுந்தருளியுள்ளார். மூஷிகம், பலிபீடம் என்பனவும் உண்டு.

## தரைமன் கலட்டி விநாயகர் ஆலயம்

இவ் ஆலயத்தினை தலைமன்கலட்டி விநாயகர் ஆலயம் என்றும், தலவன்கலட்டி விநாயகர் என்றும் அழைக்கப்படுவதுண்டு. தெல்லி யூர் பரராசசிங்கம் வன்னித்தம்பி சட்டம்பியார். என்பவருக்குச் சொந்தமான நிலத்தினில் இவ்ஆலயம் அமைந்திருக்கின்றது. சட்டம்பியாரின் ஆலோசகர்களான சுவாமிநாதர் செல்லப்பா, விஸ்வநாதர் சின்னப்பா ஆகிய இருவருடைய பொருளுதவியுடன் ஆலயக்கட்டடம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவாகியது. இது நடந்தேறிய காலம் அறியமுடியாதுள்ளது. இதன் பின்னர் கட்டடங்கள் பிரித்துக்கட்டப்பட்டு 1953 இல் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. கருங்கல் விநாயகர் விக்கிரகம் மூலமூர்த்தியாகும். நாகதம்பிரான், வைரவர், பரிவாரமூர்த்தங்களாகும். தினமும் ஒரு காலப்பூசை மட்டும் நடைபெறுவது வழக்கம். ஆவணிச்சதுர்த்தி, மார்கழித்திருவாதிரை ஆகிய தினங்களில் சுவாமி வீதியுலா வருவதுண்டு.

## சித்தியம் புளியடி ஞான (சுடலை) வைரவர் ஆலயம்

100 ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டு ஆலயமாகும். இவ் ஆலயத்தினில் இருந்து வந்த பலிகொடுக்கும் முறைமை 1983இல் இருந்து நிறுத்தப்பட்டது. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசையும் ஆனி உத்தரத்தினை இறுதி நாளாகக் கொண்டு 10 நாட்கள் அலங்காரத்திரு விழாவும், ஆடி அமாவாசைத் தினத்தோடு நடைபெறும் பெரும்பொங்கல், சித்திரைப் பௌர்ணமி, நவராத்திரி போன்ற விசேட திருவிழாக் களும் நடைபெற்று வருவது வழக்கம்.

### அண்ணமார் ஆலயம் - சித்தயம்புளியடி

120 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்த இடத்தின் வழிபாடு இன்னொரு இடத்திலிருந்து பிரிந்து வந்ததாகக் கூறுவர். அண்ணமாரைக் குறிப்பதாக மூலஸ்தானத்தில் ஒருகல் உண்டு

### ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்

மூலமூர்த்தி - முத்துமாரி அம்மன். பரிவார மூர்த்திகள் - விநாயகர், காத்தவராயர், முருகன், வைரவர். நித்திய பூசையுடன் வருடந்தோறும் மாசி மகத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியதாக 12 நாட்களுக்கு மகோற்சவமும் நடைபெறுவது வழக்கம்.

### ஸ்ரீ இரேணுகேஸ்வரர் கோயில்

1887ல் ஸ்ரீபரமகுரு சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு. 1890 இல் பஞ்சகர்த்தாக்களினால் எழுதப்பட்ட செப்பேடும் உண்டு. மூலமூர்த்தி - லிங்கோற்பவர் அகஸ்தியர், மாணிக்கவாசகர், சாந்தலிங்க ஸ்வாமிகள் ஆகியோரின் திருவுருவங்களும் உண்டு. நித்தியபூசையுடன் மாசிமக நட்சத்திரத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறக் கூடியதாக மகோற்சவமும் நடைபெறுவது வழக்கம்.

இவைதவிர
காசி விசுவநாதர் கோயில்
கொண்டலடி வைரவர் கோயில்
லிங்கேஸ்வரர் கோயில் (சடையம்மா சமாதி)

ஆகிய ஆலயங்களும் இக்கிராமசேவகர் பிரிவினில் உள்ளன. இவ் ஆலயங்கள் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

## ஜே/ 227 தெல்லிப்பளை கிழக்கு கி.சே.பிரிவு

### சிவன் ஆலயம் (சந்திரமௌலீஸ்வரர் - அண்ணமார் ஆலயம்) HA/5/JA/697

ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முற்பட்ட வரலாற்றினை உடைய இந்த ஆலயம் ஆரம்பத்தில் ஆலமரமொன்றின்கீழ் சூலம்வைத்து வழிபடப்பட்டது. கர்ப்பக்கிரகத்தில் சிவன் விக்கிரகம் உண்டு. பரிவார மூர்த்தங்களாக நாகதம்பிரான், வைரவர், காளி, வீரப்பத்திரர், ஆகியனவும் உண்டு. எழுந்தருளியும் உண்டு. வைகாசி மாதத்து விசாகத்திற்கு முதல் வெள்ளி யிரவு சனிவிடிய பொங்கல் விழா நடைபெறுவதும், பொங்கல் தினத்தன்று 14 தினங்கள் முன்பாகவரும் வெள்ளியிரவு அலங்காரத்திருவிழா நடை பெறுவதும்., தைப்பூசம், சித்திரை சதயம், சுவாமி வீதியுலா வருவதும், விஜயதசமியன்று அண்ணமார் சிவன் புறப்பட்டு சித்தியம்புளியடி ஞான (சுடலை) வைரவர் ஆலயத்தினில் கன்னி வாழை வெட்டுதலும் இவ் ஆலய வழக்கமாகும்.

### காசி விநாயகர் தேவஸ்தானம் ர் A/JA/5/163

தலயாத்திரை சென்ற பெண்மணி ஒருவர் திரும்பிவரும் பொழுது காசியிலிருந்து விநாயகப் பெருமானின் விக்கிரகம் ஒன்றினைத்தம்முடன் கொண்டு வந்து வீணாக்கடவை என அழைக்கப் பட்ட இப்பகுதியில் வைத்து முப்போதும் பூசனை வேல், சூலம், நாகதம்பிரான் என்பனவும் உண்டு. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசையும், வைகாசிப்பொங்கல், மார்கழித்திருவாதிரை ஆகிய காலங்களில் சுவாமி திருவீதியுலா வருவது வழக்கம்.

### பேய்ச்சி அம்பாள் ஆலயம் கோயிற்புலம்

120 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றை உடைய இவ் ஆலயத்தினில் பலி கொடுக்கும் நிகழ்வு 1983 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. அணிஞ்சில் மரத்தின் அடியில் கல் ஒன்றை வைத்து வழிபட்டுள்ளனர். திங்கள், வெள்ளி, ஆகிய தினங்களில் பூசை நடைபெறுவது வழக்கம்.

### முத்துமாரி அம்பாள் ஆலயம் - தம்பயப்புலம்

சுமார் 90 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்த ஆலயம் பேய்ச்சி அம்பாள் ஆலயமாக இருந்து 1983 இல் முத்துமாரி அம்பாள் எனப்பெயர் மாற்றி அழைக்கலாயினர். திங்கள், வெள்ளி, ஆகிய தினங்களில் பூசை நடைபெறுவது வழக்கம்.

### பேய்ச்சி அம்பாள் ஆலயம் - சித்தியம்புளியடி

சுமார் 100 வருடங்களுக்கு முற்பட்ட வழிபாட்டை உடையது. செவ்வாய் வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறுவது வழக்கம்.

## ஜே / 228 தெல்லிப்பளை கோவங்கட்டுவளை அண்ணமார் ஆலயம்

100 வருடங்களுக்கு முன்னர் பிராய் மரத்தினடியில் ஒரு கல் வைத்து வழிபடப்பட்டது. 1955 புதிய கட்டடம் அமைத்து வழிபட ஆரம்பித்தனர். சூடு விழுந்தான் அண்ணமார் ஆலயம் என்றும் இதனை அழைப்பர். திங்கள், வெள்ளி, ஆகிய தினங்களில் பூசையும், தை ரேவதி நட்சத்திரத்தில் திருவிழாவும், தைப்பூசம், திருவாதிரை, விஜயதசமி, விசாகம், ஐப்பசிகடைசி

வெள்ளி ஆகிய தினங்களில் விசேட வழிபாடுகளும் நடைபெறுவது வழக்கம். மூலமூலர்த்தி அண்ணமார் முருகனைக் குறிப்பதற்கு வேல், காளியை குறிப்பதற்கு சூலம், வைரவர் சூலம் என்னும் மூர்த்தங்களும் உண்டு.

**முருகன் ஆலயம்**

தெல்லிப்பளை அரசினர் மாவட்ட வைத்தியசாலை வளவினுள் வைத்திய கலாநிதி அ.பேரின்பநாயகம் தலைமையில் சபை ஒன்று அமைக்கப்பட்டு. நோயாளர்கள் வழிபடுவதற்கென முருகன் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது. 1976.06.13ம் நாளில் வைகாசி பூசநட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நிறைவாகியது. ஐம்பொன்னால் ஆன வேல் - மூலமூர்த்தி, ஐம்பொன்னால்ஆன விநாயகர் - பரிவார மூர்த்தி. 1977.02.10ம் திகதி மணிக்கோபுர கும்பாபிசெகம் நடைபெற்றது. 1977-1978 வரை 11 தினங்கள் திருவிழா நடைபெற்றது. சுவாமி கும்பத்திலே திருதியுலா வருவது வழக்கம். தினமும் ஒருநேரப்பூசையுடன் வெள்ளிக்கிழமை களில் மாலைநேர பூசையும் நடைபெறுவது உண்டு.

**வீரபத்திரர் கோயில் ~ முல்லாத்தனை**

தினமும் ஒரு வேளைப் பூசை நடைபெற்று வந்த இந்த ஆலயம் 120 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றினையுடைய தென்று சொல்லப்படு கின்றது. ஆதியில் கல் ஒன்றை வைத்து வழிபட்டார்கள் என்றும் பின்னர் சூலம் வைத்து வழிபடப்பட்டதென்றும், 1923 இல் கருங்கல்லினால் வீரபத்திரர் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்ட தென்றும் அறியப்படுகின்றது.

**சித்தி விநாயகர் ஆலயம் ~ முல்லாத்தனை**

சிதம்பரநாதன் கனகசுந்தரம் என்பவரால் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கல் விநாயகர் விக்கிரகத்தினை வைத்து வழிபாடாற்றிய ஆலயமாகும். தினமும் ஒருவேளைப் பூசையுடன் பொங்கல், ஆவணிச்சதுர்த்தி, சித்திரைப்பூரணை, ஆகிய விசேட திருவிழாக்களும் நடைபெறுவது வழக்கம். இவ் ஆலய கும்பாபிஷேகம் 1956ம் ஆண்டு நடந்தாக அறிய முடிகின்றது.

**விநாயகர் ஆலயம் ~ தில்லையிட்டி**

தில்லையிட்டி ஆலய வளவினில் உள்ள கிணறொன்றினை மக்கள் வற்ற இறைத்து தூய்மை செய்தபோது அக்கிணற்றினுள் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் விக்கிரகமே இவ் ஆலயத்தின் தோற்றத்திற்குக் காலாக அமைந்துள்ளது. இச்செய்தி கர்ணபரம்பரைக் கதையாக இருப்பதனால் இவ் ஆலயத்தின் காலம் குறிப்பிடப்படுவதில் சிரமம் உண்டு. ஆயினும் ஸ்ரீமகாமாரி அம்பாள் காலத்துடன் இவ் ஆலயமும் ஒன்றியது என்பர். தினமும் ஒரு வேளைப் பூசையுடன், ஆவணிச் சதுர்த்தி, மார்கழித்திரு வாதிரை, பிள்ளையார் கதை என்பன சிறப்பாக நடைபெறுவதும் வழக்கம்.

**ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் ~ வீமன்காமம்**

150 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றினை உடைய இந்த ஆலயத்தின் சரியான வரலாற்றை தெரிந்து கொள்ளமுடியவில்லை ஆவணி ரேவதிநட்சத்திரத்தை தொடக்கமாகக் கொண்டு 10 தினங்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெறுவதும் உண்டு. மேலும் ஆவணிச் சதுர்த்தி மார்கழித்திருவாதிரை, பிள்ளையார் கதை என்பன பிரதான விழாக்களாகும்.

**நரசிங்க வைரவர் ஆலயம் ~ நல்லை நயினார் கிணற்றடி**

75 ஆண்டுகால வழிபாட்டு வரலாற்றினை உடைய இவ் ஆலயம் ஒருவெளியில் சூலம் வைத்து வழிபடப்பட்டு வந்தமை குறிப்பிடக்குரியது. தினமும் ஒருவேளைப் பூசை மட்டும் நடைபெறுவது வழக்கம்.

**நாச்சிமார் ஆலயம்**

ஆதியில் ஒரு தேக்கு மரத்தின் கீழ் சின்னக்குட்டி என்பவரின் வழிபாட்டிலிருந்து உருவாகியது இவ்வாலயம். 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டை உடையது. இந்த ஆலயம் 1945ம் ஆண்டு ஆகம முறைப்படி அமைக்கப்பட்டு ஆவணி சுவாதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நிறைவாகியது. தினமும் ஒருகாலப் பூசை நடைபெற்ற இவ்வாலயம் மூன்று மண்டபங்களைக் கொண்டு நந்தி, பலிபீடம், மணிக்கூட்டுக்கோபுரம், காப்பக்கிரகம் ஆகியவற்றுடன் விநாயகரைப் பரிவார மூர்த்தியாகவும் கொண்டுள்ளது. கும்பாபிஷேக தினம், வைகாசி விசாகம், மார்கழித்திருவாதிரை ஆகியன சிறப்பு விழாக்களாக நடைபெறுவது வழக்கம்.

**ஞான வைரவர் ஆலயம் தம்போதனை**

பிரம்மஸ்ரீ கிருஷ்ண ஐயர் இராமசாமி ஐயர் காலத்திலே சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாலயம் ஆரம்பமானது. 1860 ஐ அண்டிய காலப்பகுதியில் கட்டப்பட்டது. தினமும் இருவேளைப் பூசையுடன் மாசி மகத்தினன்று தீர்த்தோற்சவம் நிகழக்கூடியவகையில் 10 நாட்களுக்கு அலங்காரத் திருவிழாவும் நடைபெறுவதுண்டு. இவ்வாலய வழிபாடு இடைக்காலத்தில் விநாயகர் வழிபாடாக மாறிய தாகவும், மீண்டும் வைரவர் வழிபாடாக மாறிய தாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

### கண்ணகை அம்பாள் ஆலயம் ~ கிளானை

1943 ஆம் ஆண்டு திருமதி கதிரன் சீதேவி என்பவரால இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது. சூடுவிழுந்தான் அண்ணமார் ஆலய வழிபாட்டில் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக அம்பாள் குறிப்பிட்ட அம்மையிடத்துத் தோன்றி வேப்ப மரத்தினடியில் தன்னை தரிசிக்கலாம் என்று உணரச்செய்தார். அன்று தொடக்கம் ஆரம்பமாகியது இவ்வாலய மாகும்.

### ஞானவைரவர் ஆலயம் ~ கிளானை

வண்ணமாதரை முள்ளாக்குளம் ஆலடி ஞானவவைரவர் ஆலயத்தில் வழிபட்டோரிடையே ஏற்பட்டதொரு மனகசப்பின் காரணமாக இப்புதிய ஆலயம் எழுந்தது. செவ்வாய் வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறுவது வழக்கம்.

### கொத்தியாலடி சுடலை வைரவர்

1930 ஆம் அண்டளவில் அப்பாக்குட்டி மயில்வாகனம் என்பவரால் ஒரு மரநிழலில் இவ்வாலய வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறுவது வழக்கம்.

### ஞானவைரவர் ஆலயம் ~ வண்ணமாதரை

150 வருடங்களுக்கு முற்பட்ட இவ்வால யத்தினை கொடிக்கம்ப வைரவர் என்றும் மூள்ளாக்குளம் ஆலடி ஞான வைரவர் என்றும் வேறு பெயர்களால் அழைக்கப்படுவதுண்டு வெள்ளிக்கிமைகளிலும் விசேட தினங்களிலும் பூசை நடைபெறுவது வழக்கம்

### ஸ்ரீமகாமாரி அம்பாள் ஆலயம்

சுமார் 200 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றினை உடைய இந்த ஆலயம் மேற்குப் புறமாக நின்ற வில்வ மரத்தடியில் ஒரு சூலமும் இலந்தை மரத்தடியில் கல்லும் வைத்து வழிபடப்பட்டதென்றும் ஆதியில் வடபத்திரகாளி அம்பாள் எனப் பெயர் வழங்கப்பட்டதென்றும் முத்துமாரி அம்பாள் என்றும் வழங்கப்பட்டடு வந்த இந்த ஆலயம் ஸ்ரீமகாமாரி அம்பாள் என்று இப்பொழுது அழைக்கப்பட்டு வருகின்றது. தினமும் மூன்று காலப் பூசையுடன் வருடாந்த மகோற்சவம் பங்குனி உத்தரத்தினை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம்.

## ஜே / 229 துர்க்காபுரம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் HA/5/JA 193

250 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த ஆலயம், உழுகுடைப்பகுதி வவுணாவத்தையை சேர்ந்த கதிர்காமர் என்பவரால் 1760 ஆம் ஆண்டளவில் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் நிலப்பகுதியில் இருந்த இலுப்பைத் தோப்பில் மரத்தடியில் காசி செப்பனேஸ்வரி பீடத்தில் இருந்து பெறப்பட்டதாக கருதப்படும் யந்திரத்தில் வைத்தே (துர்க்காசக்கரம்) வழிபாடு ஆரம்பமானது. நாகநாத உடையார் எனபவர் முதலில் ஒரு சிறிய ஆலயத்தை அமைத்து காஞ்சிபுரத்திலிருந்து வந்த அந்தணப் பெருமகனாரை அர்ச்சகராக நியமித்து நித்திய நைமித்தியங்களை நடைமுறைப் படுத்தினார். பின்னா 1820இல் கோயில் புனரமைப்பு செய்யப்பட்டு கும்பாபிசேகம் நிறைவாகியது. தனி முகாமையில் இருந்த இந்த ஆலயம் 1948இல் 11 பேரை கொண்ட தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1965 இல் மேலும் 18பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றை தெரிந்து பரிபாலனத்தை அதனிடம் ஒப்படைத்தனர்.1977 ஜனவரி 27இல் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பரிபாலனசபை தலைவர் பதவியை ஏற்றபின் 1978இல் சித்திரத் தேரினையும், பொது அலுவலகத்தினையும், 1980இல் ஞானசுரபி மண்டபத்தினையும், 1981இல் இராஜகோபுரம், அலங்கார நுழைவாயில் என்பவற்றையும், 1982இல் துர்க்காபுஷ்கரணி தீர்த்தத்தடாகம், அந்தணர் இருப்பிடம் என்பவற்றை யும், 1984இல் அன்னபூரணி கல்யாண மண்டபத் தினையும், 1985 இல் சப்பறம், பக்தர்கள் விடுதி, மகளிர் இல்லம் என்பவற்றையும், 1986இல் கோசாலை, இசைக்கலை மண்டபம் என்பவற் றையும் 1987இல் அகதிகள் சாலையும், 1988இல் அன்னதான மண்டபம், அலுவலர் இருப்பிடம் என்பவற்றையும் செயற்குழு நிறைவாக்கியது.

65 அடி உயரமான 5 அடுக்கு கோபுரம் நிமிர்ந்து நிற்கின்றது. தினமும் 5 வேளை பூசை நடைபெறும். இவ் ஆலயத்தினில் வருடாந்த மகோற்சவம் ஆவணி ஓணத்தினத்தன்று தீர்த்தம் நடைபெறக்கூடியதாக 12 நாள்களுக்கு திருவிழா நடைபெறும். விசேட திருவிழாக்களாக பூரணைத் திங்கள், செவ்வாய்க்கிழமைகள், ஆடிப்பூரம் மார்கழி சதுர்த்தி ஆகிய வேளைகளில் சுவாமி உள் வீதிகளிலும், மகோற்சவ வேளை வருடப்பிறப்பு, ஆடிக்கடைசி செவ்வாய், விஜயதசமி, மார்கழி திருவாதிரை, சிவராத்திரி, பங்குனி கடைசி செவ்வாய் ஆகிய வேளைகளில்

வெளி வீதியிலும் சுவாமி திருவீதியுலா வந்து அடியவர்களுக்கு அருள் புரிகின்றது. 1829 இல் இருந்து கன்னி வாழை வெட்டும் உற்சவத்துக்காக மாவை முருகன் இவ் ஆலயத்துக்கு வருவதுண்டு. 82பரப்பு நிலத்தினை உடைய இந்த ஆலயம் ஏழு மண்ட பங்களை கொண்டு சிறப்பொடு விளங்கி வருகிறது.

## தோதரவை அம்மன் ஆலயம் – துர்க்காபுரம்

மிகப்பழமை வாய்ந்த ஆலயம் 250 ஆண்டுகட்கு முற்பட்டதென்று கருதப்படுகின்றது. சங்காணி என்னும் பெயருடைய ஒரு மரம் கர்ப்பக் கிருகத்தின் பின்னே நின்றதென்றும், அம்மரத்தினில் ஒரு சோடிசிலம்பு இருந்ததென்றும், கர்ணபரம் பரைக் கதை ஒன்றுண்டு இம்மரம் வருடத்திற்கொரு தடவை ஒரேயொரு பூவைமட்டும் பங்குனிக் கடைசி வெள்ளிக்கு அண்மையாகப் பூக்குமென்றும், பூவைக்கண்டதும் ஆலயத்தில் பொங்கல் நடைபெறும் என்றும் அறியமுடிகின்றது. கட்டடப் புனர்நிர்மாண வேலைகளின் பின்னர் 1944ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுத் தொடர்ந்து 12 நாட்கள் அலங்காரத் திருவிழாவும் நடைபெற்று வந்துள்ளது. தைப்பூசம், பங்குனி உத்தரம், சித்திராபூரணை, ஆடிக்கடைசிச் செவ்வாய் ஆகிய தினங்களில் விசேட திருவிழாக் கள் நடைபெறுவதுண்டு. பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான் ஆகிய பரிவார மூர்த்தங்களுடன் மூல மூர்த்தியாக இராஜராஜேஸ்வரி அம்பாள் கர்ப்பக்கிருகத்தினை அலங்கரித்துள்ளார்.

## கேணியடி ஞான வைரவர் ஆலயம்

இவ் ஆலயம் இருந்த வளவினுள் ஒருபால் கேணியொன்று இருந்ததனால் கேணியடி வைரவர் என அழைக்கலாயினர். மேலும் பனையடி வைரவர் எனவும் அழைக்கப்படுவதுண்டு. தினமும் ஒருவேளைப் பூசை நடைபெற்ற இந்த ஆலயத்தின் மூலமூர்த்தி கருங்கல்லாலான வைரவர் விக்கிரக மாகும். தலவிருட்சமாக ஆலும், பனையும் இணைந்து வளர்ந்துள்ள மரத்தினைக் குறிப்பிடு கின்றனர்.

## தூுவில் பெரியதம்பிரான் ஆலயம். அம்பனை

100 வருடங்களுக்கு மேற்பட்ட இவ் ஆலயத்தில் தைப்பொங்கல், பங்குனிப்பொங்கல், சித்திரைப்பௌர்ணமி, ஆடிப்பூரம், புரட்டாதிக் குளிர்த்தி, பெரும்பொங்கல், போன்ற விசேட திருவிழாக்களுடன், நித்திய பூசையும் நடை பெறுவது வழக்கம். கர்ப்பக் கிருக மண்டபத்தில் வடக்குத்தெற்காக உள்ள பலிபீடத்தில் ஐந்து கற்களைவைத்து முறையே தெற்கிலிருந்து வடக்காக விநாயகர், அம்மை, பெரியதம்பிரான் (சிவன்), சுப்பிரமணியர், நாச்சிமார் ஆகிய கடவுளர் களாக வழிபட்டு வந்துள்ளனர். இவ் ஆலயத்தில் சூரியமூர்த்தம் என அழைக்கப்பட்ட வேப்பமரத் தடியில் வைரவர் வழிபாடும் நடைபெற்றிருக் கின்றது.

## ஸ்ரீ வைரவ சுவாமி தேவஸ்தானம் கல்வளவு

1900 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்தினில் நித்திய பூசையுடன், வருடப் பொங்கல், தைப்பொங்கல், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விசேட திருவிழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

## காளி அம்பாள் ஆலயம்

தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியா சாலைக்கு வடக்கெல்லையில் இவ்வாலயம் அமைந்திருக்கின்றது. 190 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்த ஆலயம் 1957 இல் கட்டடம் அமைக்கப்பட்டு 1963இல் கும்பாபிசேகம் நிறைவாகியது. தினமும் ஒரு வேளைப்பூசை நடைபெறுவதுடன் 12 நாள் அலங்காரத் திருவிழா வும் நடைபெறுவதுண்டு. மூலமூர்த்தி 21 அங்குல உயரமான காளி அம்பாளின் விக்கிரகமும், பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான் போன்றபரிவார மூர்த்தங்களும் உண்டு.

## நரசிங்க வைரவர் ஆலயம் – மகாதனை

ஒரு நூற்றாண்டுக்கு முந்திய வழிபாட்டை யுடைய இந்த ஆலய மூர்த்தியை நரசிங்கர் என்னும் பெயருடைய ஒருவர் தனது கோணா சீமா என்ற பெயருடைய நிலத்தினில் அமைத்து வழிபட்டதனால் இப்பெயர் பெறலாயிற்று. எழுந்தருளியுடன், விநாயகர், முருகன், நாகதம்பிரான் முதலிய பரிவார மூர்த்தங்களுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. தினமும் ஒருவேளைப் பூசைநடைபெறுவதுடன் ஐப்பசி மாதத்தில் 12 நாள் திருவிழாவுடன், தைப்பொங்கல், விசாகப்பொங்கல், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விசேட திருவிழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

## தேரம்பல வைரவர் ஆலயம்

100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வழிபாட்டுக் காலத்தினையுடையது. இதனைப் பேரம்பல வைரவர் என்றும் அழைப்பதுண்டு. பிராய் மரத்தடியில் ஆரம்பவழிபாடு நடைபெற்றுள்ளது. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் ஒரு நேரப்பூசை நடைபெறுவதுண்டு.

### முருகாவத்தை வைரவர் ஆலயம்

தேரம்பல வைரவர் ஆலயத்தினில் வழிபாடாற்றியவர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாக இப்புதிய ஆலயம் தோன்றியது. 1937 ஆம் ஆண்டு வரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் ஒரு காலப்பூசையுடன் விசேட விழாக்களும், சுவாமி திருவீதியுலா வருதலும் நடைபெறுவதுண்டு.

### பற்றை அம்மன் ஆலயம்

நாலாதிசையும் காலூன்றி நிற்கும் நறுவிலி மரம். கிழக்குப்பக்கமாக வாசலை யுடையது. அதன் உள்ளே இந்த அம்மன் ஆலயம் உண்டு. நாலுபுறமும் வயல் சூழ்ந்த இந்த இடத்தில் பற்றை நடுவே இவ் ஆலயம் இருப்பதனால் பற்றை அம்மன் என வணங் கினார்கள் போலும் தினப் பூசை நடைபெறுவது வழக்கம்.

### ஜே / 230 தந்தைசெல்வாபுரம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் ~ வயலிருப்பைப்பதி

இந்த நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியை ஆதியாகக் கொண்ட இந்த ஆலயம் வயலிருப் பைப்பதி என்ற நிலத்தினில் நின்ற ஒரு ஆலமரத்தின் அடியில் சூலம்வைத்து வழிபடப்பட்டு வந்துள்ளது. இதன் காரணமாக ஆலடி வைரவர் ஆலயம் என அழைக்கப்படுவதும் வழக்கம்.

### குருநாத சுவாமி கோயில்

150 ஆண்டுகளுக்கு முன்பு நல்லான் சீமா என்னும் நிலத்தினில் வீரசைவ குலத்தினைச் சேர்ந்த குருநாதர் என்ற பெயருடைய ஒருவர் ஒரு புளியமரத்தின் அடியில் வேல் ஒன்றை வைத்து வழிபடத் தொடங்கினார். 1921 ஆம் ஆண்டினில் தண்டாயுதபாணி விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டது. 1924 - 04 - 24 புதன் கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் பாலசுப்பிரமணியர் எழுந்தருளிக்கு கும்பாபிசேகம் நடைபெற்றது. பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான், சந்தானகோபாலர், சிங்காரவேலர், காளி என்போர் உண்டு. இருகாலப்பூசையுடன் சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைச் சதயம், விசாகம், ஆவணிச்சதுர்த்தி, விஜயதசமி, கந்தசஷ்டி, கார்த்திகைத் தீபம், திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்தரம் ஆகிய காலங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம்.

### சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராசர் ஆலயம்

தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியில் பாவலர் துரையப்பா பிள்ளை அவர்களால் 1910 ஆம் ஆண்டு மகாஜனாக்கல்லூரியை ஆரம்பித்த வேளை உருவாகிய ஆலயமே இவ் ஆலயமாகும். தினமும் ஒரு வேளைப்பூசையுடன், நடராசப்பெரு மானுக்குரிய ஆறு அபிசேகங்களும், ஆனி உத்தரம், மார்கழித்திருவாதிரை ஆகிய தினங்களில் சுவாமிவலம் வருதலும் சிவராத்திரி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு ஆகிய தினங்களில் விசேட வழிபாடுகளும் நடைபெறுவது வழக்கம்.

### ஸ்ரீ புவனேஜ்வரி அம்பாள் ஆலயம்

சிவலிங்கப்பூமரத்தினைத் தலவிருட்ச மாகக் கொண்ட இந்த ஆலயம் யூனியன் கல்லூரி அன்றைய அதிபர் திரு. க. பாலசுந்தரம் அவர்களைத் தலைவராகக் கொண்ட அபிவிருத்திச் சபையின் ஊக்குவிப்புடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். 1986 - 09 - 10 புதன்கிழமை அனுஷ நட்சத்திரத் தில் கும்பாபிசேகம் நிறைவாகியது. இத்தினத் தினை முதலாகக் கொண்டு 12 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறுவதுண்டு. விஜயதசமி தினத்தில் சுவாமி வலம்வருவதுண்டு. பௌர்ணமி தினங்கள், சித்திரைச் சித்திரை, ஆடிப்பூரம், மார்கழித் திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி ஆகிய தினங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுவதுடன் தினமும் ஒருவேளைப் பூசையும் நடைபெறுவது வழக்கம்.

### அரசனாலடி விநாயகர் ஆலயம்.

100 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த ஆலயத்தின் முதற் கட்டட வேலையை இராமர் பொன்னர் என்பவர் கட்டுவித்தார் என அறியமுடி கின்றது. 1962 ஆம் ஆண்டு கோயிலின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி 1963 ஆம் ஆண்டு தை சதயத்தினத்தில் கும்பாபிசேகம் நிறைவாகியது. மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகளாக வைரவர், நாகதம்பிரான் உண்டு. ஒருவேளைப்பூசை மட்டும் நடைபெறுவது வழக்கம். சதுர்த்தித் திதிகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் விசேட மாலை வழிபாடுகளும், தைச்சதயம், ஆவணிச் சதுர்த்தி ஆகிய தினங்களில் திருவிழாவும் நடைபெறுவது உண்டு.

### பெரிய கலட்டி ஞான வைரவர் ஆலயம்

இவ் ஆலயம் முதலிக்குட்டி ஞானவைரவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. மூலமூர்த்திவைரவர் சூலம் நாகதம்பிரானும் உண்டு. தினமும் ஒரு நேரப்பூசையுடன், தைப்பூசம், திருவாதிரை, விஜயதசமி ஆகிய தினங்களில் சுவாமி வீதியுலா வருவதுண்டு.

### கவணாவத்தை ஞானவைரவர் ஆலயம்

150 வருடங்களுக்கு முற்பட்ட வழிபாட்டு வரலாற்றை உடைய இந்த ஆலயத்தின் வரலாற்றைக் கண்டறிய முடிந்துள்ளது. தேற்றா மரத்தின்கீழ் வழிபாடு நடைபெற்றுப்பின்னர் ஓலைக் கொட்டிலமைத்து வழிபட்டனர். தைப்பூசம் தொடக்கம் 15 நாட்கள் அலங்கார உற்சவமும், தைப்பொங்கல், சிவராத்திரி, பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், கதிர்காமத் தீர்த்தம், விநாயகர் சதுர்த்தி, விஜயதசமி, திருவாதிரை, திருக்கார்த்திகை, கந்தசஷ்டி, தெய்வயானை அம்மன் திருக்கல்யாணம், வள்ளியம்மன் திருக்கல்யாணம் போன்ற விழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

### குடவத்தை அம்பனை ஞானவைரவர் ஆலயம்

12 தினங்கள் அலங்கார உற்சவம் நடை பெற்ற இவ் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் 1925 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு 1927 ஆம் ஆண்டில் கும்பாபிசேகம் நிறைவாகியது.

### செஞ்சலன ஞான வைரவர் ஆலயம்

150 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றினை உடைய இந்த ஆலயம். பூவரசமர மொன்றின் அடியில் வழிபாடாற்றப்பட்டு வந்தது. பின்னர் 1969 ஆம் ஆண்டில் திருப்பணி வேலைகள் நடைபெற்று அதே ஆண்டு ஐப்பசி மாதத்தில் கும்பாபிசேகம் நடைபெற்றது. தினமும் ஒருவேளைப் பூசை நடைபெறுவதுண்டு.

### புதுத்தோட்ட ஆதிவைரவர்

100 ஆண்டுகளுக்கு முன் பூவரசமரத்தின் கீழ் வழிபாடு ஆரம்பமாகியது. பின்னர் சூலம் வைக்கப்பட்டு 1958 வரையிலே கோயில் கட்டப் பட்டது. ,விசேட தினங்களில் பொங்கலும், தினமும் விளக்கேற்றப்பட்டு வழிபடப்பட்டுவருவது வழக்கம்.

### புளியடி வைரவர்

ஒரு நூற்றாண்டுக்கு முன் புளிய மரத்தின் கீழ் சூலம் வைத்து வழிபட்டனர். இவ்ஆலயத்தில் பலிகொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. 1947 இல் அவ் ஊர்பிரமுகர்கள் சிலரின் முயற்சியால் பலிகொடுக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டு வைகாசி விசாகத்தினை அடுத்து வரும் வெள்ளியன்று பொங்கல் விழா நடைபெறுவது வழக்கமாயிற்று.

### வேள்வை சூலாம்பத்தை வைரவர் ஆலயம்

மூலமூர்த்தி வைரவர் சூலம். செவ்வாய், வெள்ளி ஆகியதினங்களில் பூசை நடைபெறுவது வழக்கம். 15 வருடங்களுக்கு மேற்பட்ட வரலா ற்றினை உடையது.

### பளையில் வைரவர் ஆலயம்

90 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றினை உடைய இவ் ஆலயம் பேரம்பலம் பொன்னையா என்ற நெல்வியாபாரி பளையில் தான் தரிசித்த வைரவப்பெருமானை இங்கு கொண்டு வந்து வழிபட்டதனால் உருவாகிய ஆலயமே இதுவாகும். பங்குனி மாதத்தில், பொங்கலும், பூசைகளும் நடைபெறுவது வழக்கம்.

### முடி மன்னர் இராய ஆலயம்

100 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றினை உடையது இவ் ஆலயம். இரண்டு மரங்கள் ஒன்றுனுள் ஒன்றாக இணைந்து வளர்ந்துள்ள மரத்தினை அத்தி, இத்தி எனக் குறிப்பிட்டு சிவபெருமானாக நினைத்து வழிபட்டு வந்துள்ளனர். இராயா போன்ற தோற்றத்தில் இறைவன் இவ் இடத்தினில் பலருக்கு காட்சி கொடுத்த வகையினால் இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

## ஜே / 231 மாவிட்டபுரம்

### மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் (HA/2/JA/194)

சிவாகம சிற்ப முறைப்படி அமைக்கப்பட்ட ஈழத்து ஆலயங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முதன்மை பெற்ற திருத்தலமாகும். கீரிமலைத் தீர்த்த மகிமையினை ஒட்டி முகிழ்ந்த திருத்தலமே மேற்படி ஆலயம். மாவிட்டபுரம் என்ற பெயர் ஏற்பட்டமைக்கு மூன்று ஐதீகக் கதைகள் கூறப்படுகின்றன. அதன் அடிப்படையில் காரணப் பெயராக அமைந்ததே மாவிட்டபுரம் கி.பி 7ஆம்(789) நூற்றாண்டில் வாழ்ந்த திசை உக்கிரசோழன் என்ற சோழ மன்னனின் மகளாகிய மாருதப்புரவீகவல்லி குதிரை முகமும் மானுட உடலும் கொண்டவளாக இருந்தாள். அவள் சாந்த லிங்கமுனிவரின் கூற்றுப்படி கீரிமலையில் தவசிரேஷ்டராக விளங்கிய நகுல முனிவரிடம் உபதேசம் பெற்று, கீரிமலைக் குன்றருகே விளங்கிய உவர் நீர் மத்தியில் நன்னீரும் அருவிநீரும் கலந்த இடமொன்றில் ஒவ்வொரு நாளும் சிவ சிந்தையுடன் நீராடி வந்தாள். நாளடைவில் அவளது குதிரை முகம் நீங்கி அழகிய முகத்தினைப் பெற்றாள். அவள் நீராடி வழிபட்ட இடம் குதிரை முகம் நீங்க அருள்பாலித்த இறைவன் பதியாக விளங்கியதனால் மாவிட்ட புரம் என அழைக்கப்படலாயிற்று.அனால் மாருதப்புரவீகவல்லி தன் தோழிகளுடன் நீராடி வழிபட்ட இடம் குமாரத்தி பள்ளம் என்றழைக்கப்பட்ட இடமாகும். நீராடிய பின்னர் வழிபாடாற்றிய கோயில் கதிரையாண்டவர் கோயில் என்பதாகும். அக்கோயில் இப்போது வளவுடை என வழங்கப்படும். கோயிற்கடவை என்ற

இடத்தினில் இருந்ததென்பர். கோயிற் கடவையே பின்னாளில் மாவிட்டபுரம் என அழைக்கப்படலா யிற்று. மாவிட்டபுரம் என்ற பெயர் குதிரைமுகம் நீங்கியதனால் (மா - குதிரை) விட்ட - நீங்கிய புரம் - இடம்) உண்டாகியது என்றும், மாருதபுரவீகவல்லியுடன் வந்த தளபதி பெயர் மகாவிட்டன் என்றும், அவன் தங்கி இருந்து கோயிலின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று கோயிலை நிர்வகித்து வந்ததனால் மகாவிட்டம் வசித்த இடம் மருவி (மாவிட்டபுரம் ஆயிற்று என்றும், சூரசங்காரத்தின் பின் முருகன் கதிரமலைக்கு எழுந்தருளிச் செல்லும் போது இங்கு தங்கிச் சென்றார் என்ற ஐதீகத்திற்கமைய - மா என்றால் மாமர வடிவான சூரன் என்றும், விட்ட என்றால் அவ்வடிவினை விட்ட என்றும், புரம் என்றால் இடம் என்றும் கூறி மாமர வடிவாகிய சூரன் அவ்வடிவினை விட்டேகிய இடமே மாவிட்டபுரம் என்றும் கூறுவார்.

இந்த ஆலயம் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம், நிருத்தமண்டபம், வசந்தமண்டபம், தட்டிமண்டபம், வில்லுமண்டபம், வேட்டைமண்டபம், யாகசாலை, பாகசாலை, களஞ்சியம் ஆகியவை முறையாகக் கட்டப்பட்ட ஒரு பெருங் கோயிலாகும். முருகன், விநாயகர், நடேசர், சந்திரசேகரர், ஆறுமுக சுவாமி, முத்துக்கு மாரசுவாமி, சுப்பிரமணியர், சந்தான கோபாலர், மகாலட்சுமி, வைரவர், தண்டாயுதபாணி, நவக்கிர கங்கள், சண்டேசுவரர் ஆகியன பிரதிஸ்டை செய்யப்பட்ட மூர்த்திகளாவர். வருடாந்த மகோற்சவம் பூர்வபக்க சஷ்டித்திதியோடு கூடிய ஆனி உத்தர நாளன்று கொடியேற்றம் நடைபெறும். ஆடி அமாவாசைத் தீர்த்தம், தேர்த்திருவிழா உட்பட 25 நாட்கள் திருவிழா நடைபெறுவது வழக்கம். இக்காலத்தில் ஆறுமுகசுவாமி, திருநடனத்திருவிழா, கார்த்திகை திருவிழா, வேட்டைத்திருவிழா, பட்டுக்குடைத் திருவிழா, சப்பறத்திருவிழா போன்றவை மிகவும் சிறப்பான திருவிழாக்களாகும். இவை தவிர தைப்பூச நாளன்று ஆறுமுகசுவாமி தேரில் திருவீதியுலா வருதல், ஆருத்திரா தரிசனம், கந்த புராணப்படிப்பு, சூரன்போர், விஜயதசமி நாளன்று தெல்லியூர் துர்க்காதேவி ஆலயத்தை நோக்கி இறைவன் எழுந்தருளுவதும் குறிப்பிற்குரிய திருவிழாக்களாகும்.

ஈழத்தில் ஐந்து தேர்திருவீதியுலா வரும் சிறப்பினையும், தனக்கென்ற ஒரு சுவடிச்சாலையினையும் கொண்டமைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக இவ்வாலயம் விளங்கியமை நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

### ஸ்ரீ காளியம்மன் கோயில் ~ ஊரியவத்தை மடத்தடி

மூலமூர்த்தி ஸ்ரீ காளி அம்பாள், பரிவார மூர்த்திகள் - பிள்ளையார், வைரவர், வீரபத்திரர், பத்திரகாளி. தினசரி இரண்டு காலப்பூசையுடன் வைகாசி மாதத்தினில் 15 நாட்கள் அலங்காரத் திருவிழாவும் நடைபெறுவது வழக்கம். மாரிஅம்மன் ஆலயம் - பெரிய மதவடி மாவிட்டபுரம், சுடலை வைரவர்கோயில- கீரிமலை றோட், மாவிட்டபுரம் தாவடைப்பிள்ளையார் கோயில்- சாயுடை மாவிட்டபுரம் பெரிய தம்பிரான் கோயில் - மாவிட்டபுரம் கருப்பணிக்கொத்தை வைரவர் கோயில் - மாவிட்டபுரம் வைரவர் கோயில் போத்தளை மாவிட்டபுரம் தாவரை வைரவர் கோயில் சாயுடை மாவிட்டபுரம்யோகர் சுவாமி கோயில் மாவிட்டபுரம் முத்து வைரவர் கோயில் மாவிட்டபுரம்போன்ற ஆலயங்களும் இக்கிராமசேவை யாளர் பிரிவினில் உண்டு. மேற்படி ஆலயங்கள் தொடர்பான விபரங்களை அறிய முடியாதிருக்கின்றது.

### ஜே. 232 கொல்லங்கலட்டி
## வீரகத்திப் பிள்ளையார் கோயில்

சோழ அரச குமாரியாகிய மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகம் பிறர் பார்வைக்கு மாறியும், சொந்தப் பார்வைக்கு மாறாமலும் இருந்தமையை சிந்தித்து உணர்ந்து ஏழு இடங்களில் விநாயகர் கோவில்களை ஸ்தாபிப்ப தாக நேர்த்திக்கடன் செய்து முதலாவதாக இந்த ஆலயத்தினை நிர்மாணித்தாளென்று வரலாறு கூறுகின்றது. வைகாசிப் பௌர்ணமியைத் தீர்த்தமாகக் கொண்டு முந்திய 15 நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறுவதும், விநாயகர் கதை, கயமுக சங்காரம், பெருங்கதைப் படிப்பு, நித்திய பூசைகள ஆகியனவும் நடைபெறுவது வழக்கம்.

### ஜே 233 காங்கேசன்துறை மேற்கு

மாம்பிராய் வைரவர் கோயில், மாங்கொல்லை வைரவர் கோயில் சிமெந்துக் கூட்டுத்தாபன வைரவர் கோயில், ஆகிய ஆலயங்கள் இக் கிராம அலுவலர் பிரிவினில் உண்டு. ஆனால் அவை பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

### ஜே 234 காங்கேசன் துறை மத்தி
### ஆனந்தப் பிள்ளையார் கோயில் காயத்துறை

இவ் ஆலய மூர்த்தி - சுயம்பு லிங்கமாகத் தோன்றிய பிள்ளையார் சிலை ஆகும். திரிபுர சுந்தரி, ஸ்ரீகதிரவேற் குமரன் ஆகிய மூர்த்தங்களும

உண்டு. தினமும் இருகாலப்பூசையுடன் வைகாசி மாதத்தினில் பூர்வ பக்க மிருகசீரிட நட்சத்திரத்தில் திருவிழாவும், வருடப்பிறப்பு, விநாயகர் சதுர்த்தி, தைப்பூசம், மகா சிவராத்திரி முதலியவிழாக்களும் சிறப்பாக நடைபெறவது. வழக்கம்.

இவ் ஆலயம் தவிர்ந்த

நரசிங்க வைரவர் கோயில்
முத்துமாரி அம்மன் கோயில்
வீரபத்திரர் கோயில்
வைரவர் கோயில்
குட்செற் பிள்ளையார் கோயில்

முதலி வளவு முத்துமாரி அம்மன் கோயில் ஆகிய கோயில்களும் இக் கிராம அலுவலர் பிரிவினில் உண்டு. மேற்படி ஆலங்களின பூரண விபரங்களை அறிய முடியாதிருக்கின்றது.

## ஜே 235 காங்கேசன்துறை தெற்கு

### இராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோயில் – கூடலூர்

தான் தோன்றி ஈஸ்வரியாக உள்ள மூர்த்தி என்பது வரலாறு. மூல மூர்த்தி - ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், வைரவர், வீரபத்திரர், அனுமா தினமும் சாயரட்சைப் பூசை நடைபெறுவது வழக்கம்.

இவ் ஆலயம் தவிர்ந்த

குமார கோயில்,
குருநாதசுவாமி கோயில்,
காளி கோயில்

முத்துமாரி அம்மன் கோயில் ஆகிய ஆலயங்களும் இக் கிராம அலுவலர் பிரிவினில் உண்டு. இவ் ஆலயங்களின் பூரண விபரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை.

## ஜே 236 பளை வீமன் காமம் வடக்கு

### வீனியவரை இராஜராஜேஸ்வரி அம்பாள் – குருந்தடி

மூலமூர்த்தி இராஜேஸ்வரி அம்பாள் பரிவார மூர்த்திகள் - பிள்ளையார், வைரவர். தினமும் இருகாலப்பூசையும், சித்திரை மாதப் புனர்பூச நட்சத்திரத்தில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறுவது வழக்கம். திருவெம்பாவை, நவராத்திரி, சிவராத்திரி ஆகிய விசேட தினங்களில் விசேட வழிபாடுகளும், திருவிழாக்களும் நடைபெறுவது வழக்கம்.

இவ் ஆலயம் தவிர்ந்த

தளையசிட்டி வைரவர் ஆலயமும் இக்கிராம அலுவலரின் பிரிவில் உண்டு. இவ் ஆலயம் பற்றிய பூரணவிபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது.

## ஜே 237 பளைவீமன்காமம்தெற்கு

### சூழாம் பத்தை வைரவர் கோயில்

நூற்றாண்டு வயதை அண்மிய இந்த ஆலய வழிபாட்டாளர்கள், வேள்வை வைரவர் ஆலய வழிபாட்டாளர்களுடன் ஏற்பட்ட தகாரறு காரணமாகப் பிரிந்து வந்து பலியிடுதலை எதிர்ப்பவர்கள் சார்பாக இவ் ஆலயத்தினை அமைத்தனர். மூலமூர்த்தியாக வைரவசூலம் உண்டு. வைகாசி விசாகத்தில் ஒருதிரு விழா நடைபெறுவது வழக்கம்.

இந்த ஆலயம் தவிர்ந்த

டச்சுவீதி கேணியடி ஞான வைரவர்

முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களும் இக்கிராம அலுவலரின் பிரிவினில் உண்டு. அவை பற்றிய பூரண விபரங்களைத் தெரிந்து கொள்ள முடியாதிருக்கின்றது.

## ஜே 238 கட்டுவன்

ஐயனர் ஆலயம்
கற்தோட்டப் பிள்ளையார் ஆலயம்
கற்தோட்ட வைரவர் ஆலயம்
வளமாரி வைரவர் ஆலயம்
தண்ணீர்த்தாழ் ஞான வைரவர் ஆலயம்
ஊரங்குணை வைரவர் ஆலயம்
ஊரங்குணை காளிகோயில்
பேய்ச்சி அம்மன் கோயில்

ஆகிய ஆலயங்கள் கட்டுவன் (ஜே 238) கிராமசேவையாளர் பிரிவினில் உண்டு. அவ் ஆலயங்கள் தொடர்பான பூரண விபரங்களை அறியமுடியாதிருக்கின்றது.

## ஜே 239 கட்டுவன்-மேற்கு

பிள்ளையார் கோயில்
நாச்சிமார் கோயில்
முனியப்பர் கோயில்

ஆகிய ஆலயங்கள் இக்கிராமசேவையாளர் பிரிவினில் உண்டு. ஆனால் அவை பற்றிய பூரண விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக் கின்றது.

## ஜே 240 மயிலிட்டி தெற்கு

### ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம்

150 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக் கப்பட்ட இந்த ஆலயத்தினில் மகோற்சவம் உட்பட வருடாந்த மகோற்சமும் நடைபெறுவது வழக்கம். இவை பற்றிய விபரங்கள் பெறமுடியவில்லை.

### துருட்டைப்பிட்டி ஞானவைரவர் ஆலயம்

200 வருட வரலாற்றினையுடைய இவ் ஆலயத்தினில் நித்திய பூசையுடன் மகோற்சவம் என்பன நடைபெறுவது வழக்கம் இவற்றின் விபரம் பெறமுடியவில்லை.

### தூலவத்தை வீரபத்திரர்கோயில்

200 வருடங்களுக்கு முற்பட்ட இந்த ஆலயம் நித்திய பூசையுடன் இந்துக்களின் சகல விழாக்களையும் வருடாந்த மகோற்சவமும் நடைபெறுவது வழக்கம்
ஞான வைரவர் கோயில்
மாவடி வைரவர் கோயில்
நரசிங்க வைரவர் கோயில்
போன்ற ஆலயங்கள் கிராமசேவையாளர் பிரிவினுள் உண்டு. அவ் ஆலயங்கள் பற்றிய பூரணமான விபரங்களை அறிந்து கொள்ளமுடிய வில்லை.

## ஜே 241 வறுத்தலைவிளான்

### மருதடி விநாயகர் ஆலயம்

200 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்ட ஆலயத்தில் நித்திய பூசைகளுடன் தைப் பூசம், பிள்ளையார்கதை, திருவெம்பாவை, வருடாந்த மகோற்சவம் ஆகியன நடைபெறுவது வழக்கம்.

### கண்ணகை அம்பாள் பீடாரத்தனை.

20 வருடங்களக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தில் பங்குனித்திங்கள், பொங்கல், நவராத்திரி, அலங்கார உற்சவம் ஆகியன நடை பெறவது வழக்கம்.

### வித்துவான் கணேசஐயரின் நினைவு ஆலயம்

இந்த நினைவாலயம் 1960ம் ஆண்டு இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயதேசிகர் தலைமையில் நடாத்தப்பட்டது.

இதுபொதுவான ஆலயம்.இந்த ஆலயம் யாழ்ப்பாணத்தின் முதன் முதலாவது தமிழ் அரசாங்க அதிபர் அழவையூர் மாண்புமிகு சிறிகாந்தா அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

### அண்ணமார் ஆலயம்

மேற்படி ஆலயத்தின் விபரங்கள் பெற முடியவில்லை.

## ஜே 242 குரும்பசிட்டி

### முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

200 வருடங்களுக்கு முன் குரும்பசிட்டி அயற்கிராம மக்களினால் இவ் ஆலயம் அமைக்கப்பட்டது. இங்கு மார்கழி மாதத்தில் வருடாந்த மகோற்சவம் 10 நாட்கள் நடைபெறுவது டன் தைப்பொங்கல், தைப்பூசம் மற்றும் மகோற்சவம், இரதோற்சவம் ஆகிய திருவிழாக் களும் நடைபெறுவது வழக்கம்.

### சித்தி விநாயகர் ஆலயம்

150 வருடங்களுக்கு முன்னர் சட்டம்பியன் சின்னார் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. நித்திய பூசையுடன் வரதோற்சபம் மகோற்சபம் மற்றும் வைகாசி மாதத்தில் வருடாந்த மகோற்சவம் நடைபெறுவது வழக்கம். முதலியார் வைரவர் கோயில் இவ் ஆலயம் பற்றிய பூரண விபரங்களை அறிந்து கொள்ளமுடியவில்லை.

## ஜே 243 குரும்பசிட்டி தெல்லிப்பளை கிழக்கு

பிள்ளையார் கோயில்
முத்துமாரி அம்பாள் கோயில்
காளி கோயில்
முருகன் கோயில்
அண்ணமார் கோயில்
போரியென்வைரவர் கோயில்
ஆறார்த்த வைரவர் கோயில்

ஆகிய ஆலயங்கள் குரும்பசிட்டி கிழக்கு தெல்லிப்ளைப் (ஜே 243) கிராமசேவையாளர் பிரிவினுள் உண்டு. மேற்படி ஆலயங்கள் தொடர் பான பூரண விபரங்கள் ஏதும் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

## ஜே 244 குட்டியப்புலம்

குட்டியப்புலம் அம்மன் கோயில் மேற்படி ஆலயம் விபரம் பற்றி பெறமுடியாது இருக்கின்றது.

## ஜே 245 வயாவிளான் மேற்கு

### ஸ்ரீ பிள்ளையார் கோயில் மானம்பிராய்

175 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப் பட்ட ஆலயம் இது. ஆரம்பத்தில் பிராய் மரத்தின் கீழ் வைத்து வணங்கப்பட்ட பிள்ளையாரை பின்னர் கொடித்தம்பப் பிள்ளையாராக பிரதிஷ்டை செய்தனர். பல வருடங்களாக நடைபெற்ற வேலைகளின் பின்னர் 1971 இல் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. 1977ஆம் ஆண்டிலிருந்து சித்திரை மாதத்தில் கொடியேற்றத் திருவிழா ஆரம்பிக்கப்பட்டு தேர், தீர்த்த உற்சவங்களுடன் முற்றுப்பெறுவதுடன் ஆனி உத்தரம், சிவராத்திரி, தைப்பூசம், விநாயகர் பெருங்கதை, ஆவணிச் சதுர்த்தி, சூரசங்காரம் போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

**மானம்பிராய் கண்ணகி அம்மன் கோயில்**

மானம்பிராய் 1ம் வட்டாரத்தில் அமைந் துள்ளது. பரிபாலன சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த இவ் ஆலயத்தில் ஆடித்திருவிழா உட்பட இந்துக்களின் சகல திருவிழாக்களும் நடைபெற்று வருவது வழக்கம்.

**ஞான வைரவர்** ஆலயம்மேற்படி ஆலய விபரங்களை அறியமுடியாது இருக்கின்றது.

## ஸ்ரீ முருகன் கோயில் ~ மார்பு நோய் வைத்தியசாலை மயிலிட்டி

1952 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்தில் மூலமூர்த்தி, வேல் பரிவார மூர்த்திகள் பிள்ளையார், வைரவர். தினசரி சாயரட்சைப் பூசை நடைபெறுவதுடன் வெள்ளிக்கிழமைகளில் காலைப் பூசையும், தைப்பொங்கல், வருடப்பிறப்பு, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுவது வழக்கம்.

## விநாயகர் ஆலயம் கொழுவியன் கலட்டி (HA/JA/5/184)

புராதனமும் பழமைச்சிறப்பும் வாய்ந்த இவ் ஆலயத்தினில் நித்திய, நைமித்திய பூசைகளுடன் வருடாந்த மகோற்சவம், இந்துக் களின் விசேட தினங்கள் ஆகியன சிறப்பாக நடைபெற்று வருவது வழக்கம்

## ஜே 246 மயிலிட்டி வடக்கு

கண்ணகி அம்மன் கோயில்
ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோயில்
பராசக்தி அம்மன் கோயில்
கட்டைக்காடு வைரவர் கோயில்
தேவியா கொல்லை அம்மன் கோயில்
பூதவராயர் கோயில்
வடபெரும்பரப்புப் பிள்ளையார் கோயில்
முத்துமாரியம்மன் கோயில்
புவனேஸ்வரி அம்மன் கோயில்
மருதடிப் பிள்ளையார் கோயில்
கண்ணகை அம்மன் கோயில்
சங்குவத்தை மாணிக்கப் பிள்ளையார் கோயில்
புதுக்கிணற்று வைரவர் கோயில்
மயிலுவக் கட்டைப் பிள்ளையாா கோயில்
தோப்புப் பிள்ளையார் கோயில்
கொண்டலடி வைரவர் கோயில்
கொத்தாவத்தை வைரவர் கோயில்
முனியப்பர் கோயில்
மயிலியோடை வைரவர் கோயில்
நாவலடி வைரவர் கோயில்
திருப்பூர்பேய்ச்சி அம்மன் கோயில்
ஸ்ரீமுருகன் கோயில் - முனையன் வளவு ஆகிய ஆலயங்களும் மயிலிட்டி வடக்கு (ஜே 246) கிராம சேவையாளர் பிரிவினில் உண்டு. ஆனால் இப்பகுதியில் மக்கள் எவரும் மீளக்குடியமராத பகுதியாகக் காணப்படுவதனால் மேற்படி ஆலயங்களின் பூரண விபரங்களை அறிந்து கொள்ள முடியாதிருக்கின்றது.

## ஜே 247 தையிட்டி கிழக்கு

சித்தி விநாயகர் கோயில்

என்பது வரலாறு. மூலமூர்த்தி லிங்கம் பரிவார மூர்ததி வைரவர் தினமும் காலைப் பூசை நடைபெறுவதுடன், ஆவணிச் சதுர்த்தி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற விசேட தினங்களில் திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

கணையாவில் பிள்ளையார் கோயில் இந்த ஆலயம் தொடர்பான பூரண விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது.

## ஜே 248 மயிலிட்டித்துறை தெற்கு

பிள்ளையார் கோயில் மயிலிட்டித்தறை தெற்கில் அமைந்திருக்கும் இவ் ஆலயம் தொடர்பான பூரண விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது.

## ஜே 249 தையிட்டி வடக்கு

துர்க்கை அம்மன் ஆலயம், இவ் ஆலயம் தொடர்பாக விபரங்கள் எதுவும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

## ஜே 250 தையிட்டி தெற்கு

### கண்ணகை அம்மன் கோயில் குருந்து வீதி தையிட்டி

இவ் ஆலயம் போத்துக்கேயர் ஆக்கிரமிப் பின்போது இடிக்கப்பட்டது. இதன் பின்னர் கண் டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை வைத்து ஊர்மக்கள் கண்ணகை ஆலயம் என்று பெயர் சூட்டி வழிபாடு செய்தனர். தினமும் ஒரு காலப் பூசையுடன், திருவெம்பாவை, நவராத்திரி, சிவராத்திரி போன்ற விசேட காலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுவதுண்டு.

### தூதுலிடைக் கண்ணகி அம்மன் கோயில் தையிட்டி

1825 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு மூலமூர்த்தி- கண்ணகை அம்மன். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், நாகதம்பிரான், வைரவர். நித்திய பூசையுடன் விசேட தினங்களில் விசேட உற்சவங்களும் நடைபெறுவது வழக்கம்.

### ஜே 251 மயிலிட்டிக்கரை
### ஸ்ரீ முருகன் கோயில் மயிலிட்டிக்கரை

சுமார் 180 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. முருகையன் கோயில் என்றும் வழங்கப்படுகின்றது. மூல மூர்த்தி - வள்ளி தெய்வ யானை சமேத முருகப் பெருமான். பரிவார மூர்த்திகள் விக்னேஸ்வரர், வைரவர். காலை, மாலைப் பூசைகளுடன் 11நாள்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தத்துடன் முடிவடைவது வழக்கம்

### கண்ணகி அம்மன் கோயில் வீரமாணிக்க தேவன்துறை

மூலமூர்த்தி பல்லவர் காலத்துச் சிலாவிக் கிரகமான - கண்ணகி. பரிவார மூர்த்திகள்- சிவன், அம்மன், வைரவர். தினமும் மூன்று காலப்பூசை யுடன் 15 நாள்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெறுவது வழக்கம்.

## ஜே 252 பலாலி தெற்கு

நடராசர் ஆலயம்
ஞான வைரவர் ஆலயம்
காளி கோயில்

போன்ற ஆலயங்கள் இக்கிராம சேவையாளர் பிரிவினில் உண்டு. இவ்ஆலயங்கள் பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ள முடியா துள்ளது.

## ஜே 253 பலாலி கிழக்கு

வைரவர் கோயில்
கண்ணகி அம்மன் கோயில்
முதலியார் வைரவர் கோயில்
கேணியடி முருகன் கோயில்
பத்திரகாளி கோயில்
பெரிய தம்பிரான் கோயில்

போன்ற ஆலயங்கள் இக்கிராம சேவையாளர் பிரிவினில் உண்டு. அவை பற்றிய பூரண விபரங்களைத் தெரிந்து கொள்ளமுடியாதுள்ளது.

## ஜே 254 பலாலி வடக்கு

ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில் மூலமூர்த்திம் அம்மன் இடப்பெயர்வினால் ஏனைய விபரங்கள் பெறமுடியவில்லை.

### பலாலி அம்மன் கோயில்

நித்திய பூசையுடன், வருடாந்த உற்சவம் மற்றும் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறுவது

### வைரவர் கோயில்

மேற்படி ஆலயத்தின் பூரண விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

## ஜே 255 பலாலி வடமேற்கு

இப்பிரிவினில் சைவ ஆலயங்கள் பற்றிய விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை.

## ஜே 256 பலாலி மேற்கு

தகனாரோடைப் பிள்ளையார் கோயில்
கொத்தியால் அம்மன் கோயில்
அண்ணமார் கோயில்

ஆகிய ஆலயங்கள் இக்கிராம சேவையாளர் பிரிவினில் உண்டு. ஆனால் அவைபற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியாமல் இரக்கின்றது.

வலிகாமம் வடக்கின் மேற்படி சைவத் திருக் கோயில்களின் விபரங்களைப் பெற்றுக் கொள்வ தற்குத்துணை புரிந்த கிராம உத்தியோகத்தர் களுக்கும், கோயில் நிர்வாகிகளுக்கும், முதியவர்களுக்கும் "தெல்லிப்பளைச் சைவ ஆலயங்கள்" நூலிற்கும் ஏனைய "கும்பாபிசேக மலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

இன்று வலிகாமம் வடக்கிலுள்ள 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 15 பிரிவுகள் மல்லாகம் அளவெட்டி, தெல்லிப்பளை, பன்னாலை, இளவாலை, கட்டுவனின் ஒரு பகுதிமட்டும் குடியமர அனுமதிக்கப்பட்டு ஏனைய 30 பிரிவுகளும் மீளக்குடியமர அனுமதிக்காத நிலையில், கிடைத்த தரவுகளைக் கொண்டு இக்கட்டுரை வரையப்பட்டது. சகல கோயில்களின் முழுமையான விபரங்களைக் கூறமுடியாவிடினும் வலிகாமம் வடக்கின் வரலாற்று முக்கியம் வாய்ந்த கோயில்கள், மகோற்சவங்கள் நடைபெறும் கோவில்கள், அலங்கார உற்சவம் நடைபெறும் கோயில்கள், நித்தியபூசை நடைபெறும் கோயில்கள், முக்கிய தினங்களில் பூசை நடைபெறும் கோயில்கள், வழிபடும் இடங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கு இக்கட்டுரை பெரிதும் துணைபுரியும் என நம்புகின்றேன்.

# நகுலேஸ்வரம்

**ஸ்ரீலஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்**
நகுலேஸ்வர ஆதீனகர்த்தா

தேவர்தொழுங் கீரிமலைச் சிவன்கோயிற்
றிருப்பணியைச் செய்விப்போரும்
ஆவலொடும் பலபொருள்க ளளித்ததன்சீர்
வளர்த்திடற்கே யகங்கொண்டோரும்
பூவனிதை பாவனிதை போற்றுநகுலாம்பிகையைப்
புணரு மெங்கோன்
சேவடியாம் பெருவாழ்விற் றிளைத்து மகிழ்ந்
திடுவரிது திண்ணந்தானே.

திருமூலர் திருமந்திரத்தில் ஈழ நாட்டை சிவபூமி என்று கூறுகின்றார். இன்று இந்நாட்டில் நிலவுஞ் சமயங்கள் இங்கு வருவதற்கு முன், இந்நாட்டில் வாழ்ந்து வந்த மக்களது சமயம் சைவமாகவே இருந்தது. சிவனே அவர்களது கடவுளாக இருந்தார். இந்நாட்டு ஆதி அரசனாகிய இராவணனும் அவனுக்கு முன் வாழ்ந்தோரும் சைவ சமயத்தவர்களாகவே இருந்தார்கள். இவர்களின் வழிபாட்டிற்காக நாட்டின் நாலாபுறமும் உள்ள கடற் பிரதேசங்களில் பல பெரிய புராதன சிவத்தலங்கள் இருந்திருக்கின்றன. விசயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரும் பின்னரும் இங்கு சைவம் நன்கு செழித்தோங்கியது என வண. வல்பொல இராகுல எழுதிய **"இலங்கைப் பௌத்த வரலாறு"** என்னும் நூலின் 44 ஆம் பக்கத்தில் கூறியுள்ளார். அவை பிறநாட்டவர் வருகையாலும், பிறசமய வருகையாலும் அழிந்திருக்கின்றன. சில காடு மண்டி விட்டன. இன்னுஞ் சில பேச்சில் இருக்கின்றன. இதற்கு நல்ல உதாரணம் வடக்கே திருவடி நிலையில் இருந்ததாகப் பேசப்படும் ஜம்புகேச்சரமும், தெற்கே தெய்வேந்திரமுனையில் - மாத்தறை யில் இருந்ததாகக் கூறப்படும் சந்திர மௌலீச்சரமும் ஆகும். இன்னும் சற்று மேலே சென்று நோக்கில், எங்கள் பிரதேசக் கடற்பரப்பை அண்டியுள்ள கிறித்தவ தேவால யங்கள் இன்று இருக்கும் இடமெல்லாம் சிவாலயங்கள் இருந்த இடங்களேயாகும் என்பது தெளிவு. இவ்வித அழிபாடுகளிற் சிக்கி இன்றும் உயிரோடு இருக்கும் புராதன சிவத்தலங்களாவன திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், நகுலேச்சரம், முன்னேச்சரம் ஆகியனவாம். காலச் சுழற்சிக் கோளாறுகளுக்கு இவையும் காலத்துக்குக் காலம் சிக்கி அழிபடுவதும் புனர்நிர்மாணம் பெறுவதுமாகவே இருந்து வந்திருக்கின்றன.

ஆயின், அடியார்களது சழைக்காத – அயரா நினைவினால் - அருட் பெருக்கினால் காலத்துக்குக் காலம் புதுப்பொலிவுகள் பெற்று வந்திருக்கின்றன. அப்படியான அருளாட் சித்தலமான கீரிமலை நகுலேச்சரத்தின் இன்றைய அழிபாடு நிலைபற்றிச் சிறிது சுருக்கமாகக் கூறவிரும்புகின்றோம்.

கீரிமலை நகுலேச்சர ஆலய மூர்த்தி, தல, தீர்த்த விசேடம் பற்றியோ, இவற்றின் சிறப்புபற்றிக் கூறும் நூல்கள் பற்றியோ இங்கு நடைபெற்ற அற்புதங்கள் பற்றியோ, தென்னாட்டு வடநாட்டுத் தீர்த்த யாத்திரைச் சிறப்போடு ஒத்த இத்தலத் தீர்த்த மகிமை பற்றியோ, பக்திசிரத்தையோடு தம் பாவவிமோசனத் திற்காக இங்கு வந்து தங்கி, மாதக்கணக்கில் - மண்டலக் கணக்கில் - வருடக்கணக்கில் தம் தொல்வினை தீரத் தீர்த்தமாடி, ஆலயப் பிரதட்சணம் செய்து வழிபாடாற்றி இகபர நற்பயன்களைப் பெற்றோர் பற்றியோ, இன்னும் பிற இன்னோரன்ன சிறப்புக்கள் பற்றியோ இங்கு கூற விரும்பவில்லை. இப்பெருமைகள் யாவும் நீங்கள் அறிந்தவையும் - உலகப் பிரசித்தி பெற்றவையுமாகும். ஆயின் பெரும்பாலானோர் அறியாத அண்மைக்கால அனர்த்த நிகழ்வு பற்றித் தெரியத்தர விரும்புகின்றறோம்..

பெருநிலைப் புண்ணியபதியாகிய நகுலேச்சரத்தில் நடந்த பேரதிர்ச்சியான சோதனையே அதுவாகும். சோதனை நடந்த திகதிகள் 16.10.90, 18.10.90 ஆகும். இச்சோதனை நாள்கள் கேதாரகௌரி நோன்புப் பூசை நாள்களாகும். ஆண், பெண், சிறுவர் என ஆயிரக் கணக்கானோர் கூடியிருந்த நேரம் அதுவாகும். அடியார்கள் சங்கற்பம் பண்ணிப் பூசை நடைபெற இருந்த நேரம் இவ்வநாகரிக மிலேச்சத்தனமான அநர்த்தம் நடந்தது.

அடியர்களானோர்."காயமே கோயிலாகக் கடிமனம்
அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலாய் நிறையநீர் அமையஆட்டி
பூசனை ஈசனார்க்கு போற்ற விக்காட்டினோமே"

என அப்பர் பெருமான் கூறினாரே, அந்நிலையில் சிந்தனை அவன் கழற்கே ஆக்கி

மானசீகமாகப பூசையில் ஈடுபட்டிருந்த வேளை அச்சிவாசாரியர்களும் முற்றா வெண் திங்கள் முதல்வன் பாதத்தைப் பற்றாகப் பிடித்து, உலகில் கலி – கேடு ஒன்றும வாராதிருக்க, கற்றாங்கு பூசனையில் மெய்யன்போடு ஆவி உடலானவற்றை எம்பெருமானிடம் ஒப்படைத்திருந்த சமயம் பாரிய விமானக் குண்டுகள் ஆலயத்தின் மீது வீசப்பட்டன.

**"ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை"** என்ற அசரீரி ஒவ்வொருவருக்கும் கேட்டதோ என்னவோ தெரியாது, எல்லோரும் ஏகோபித்த குரலில் **"சிவனே அபயம் - சிவனே அபயம்"** என்று இட்ட ஓலக்குரல் வான் முட்டக் கேட்டது. அன்றொருநாள் கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை உண்டு, தேவர் துயர் துடைத்த நஞ்சுண்ட கண்டனல்லவா? கருணாமூர்த்தியான எம் சிவபெருமான். அப்படியான கருணாமூர்த்தி அடியார்கள் படும் துயரைப் பொறுப்பானா? அதுவும் கண் வெட்டும் நேரத்தில் நடந்த இப்பயங்கர குண்டுவீச்சின் பேரனர்த்தத்தி லிருந்து அடியவர்களைத் தன்பாலணைத்துக் காப்பாற்றிக் கொண்டான். இதனை இன்று நினைக்கும் போதெல்லாம் ஏக்கம் ஒரு புறமும், இத்தனை அவல நேரங்களில் மெய்யடியார்களை இறைவன் எவ்வளவு இலாவகமாக காப்பாற்றுகின்றான் என்ற சிவானந்தப் பரவசம் மறுபுறமும் உண்டாகின்றன. இவ் அநர்த்த நேரத்தின் நிகழ்வினை அங்கு நின்றோர், கண்டோர், கேட்டோர் எவரும் அடியார் அவலம் காத்த நகுலேச்சரப் பெருமானின் தயாளத்தை கருணையை, பேரருளை மறக்கவே மாட்டார்கள். மேலும் மேலும் அன்பை அவன்பால் பெருக்குவர் என்பது திண்ணம். இத்திகிலூட்டும் சம்பவம் **"அந்தணாளனுன் அடைக்கலம் புகுத அவனைக் காப்பது காரணமாக வந்த காலன்றனாருயிரதனை வம்வினாய்க்"**......... என்ற **சுந்தரர்** பாடலை நாளும் பொழுதும் நினைக்க வைக்கிறது.

இவ் அனர்த்தம் நடந்த நாளன்றே நாம் அவ்விடத்தை விட்டு மன வேதனையோடு கண்ணீர் ததும்ப உடைமைகளை விட்டு வெளியேறினோம். இட மகன்றோமே ஒழிய நகுலாம்பிகையையும் நகுலேச்சரப் பெருமானையும் ஒரு பொழுதும் மறக்கவே இல்லை. அதனாற்றான் என்னவோ தெரியாது ஒரு சிறு வெளிச்சம் தோன்றியது. அதுதான் 05–02–97 இல் யாழ் உதவி அரசாங்க அதிபருடன் யானும் சில பெரியோரும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆலயம் சென்று வர அனுமதி கிடைத்தமை ஆகும். அங்கு யாம் சென்ற போது பாதைகளிலும், ஆலயத்துள்ளும், ஆலயச் சுற்றுச் சூழலிலும் கண்ட காட்சிகளை விவரிக்கச் சித்தம் தவித்துக் கலங்குகின்றது. பல்லாண்டு பல்லாண்டாக – ஆண்டுக்கு ஆண்டு புதுப்பொலிவோடு எழுச்சி பெற்று வந்த திருத்தலமும் சுற்றுச் சூழலும் பொலிவோடு – மண்ணோடு மண்ணாகக் காடு மண்டிக் கிடக்கக் கண்டோம். தலையில் வைவைத்துக் கதறியழ வைத்தன காட்சிகள்! யாரை யார் தேற்றுவது? என்று தெரியாமல் அலமந்து நின்றோம். ஆலயத்தின் சேதத்தை எங்கு தொடங்கி எதில் முடிப்பது என்று அறியாது திகைத்து நின்றோம்.

தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்த ஆலயத்தின் தோற்றத்தையும், நித்திய நைமித்திய பூசை வழிபாடுகளால் உருவேற்றி அருட்பொலிவோடு விளங்கிய சில விக்கிரகங்களின் அழிபாட்டுச் சிதைவுகளை எயும், ஐம்பொன்னாலான உற்சவ மூர்த்திகள் சில காணாமல் இருந்ததையும் பார்த்துப் பதை பதைத்தோம். மேலும் பெறுமதிமிக்க கோயில் உடைமைகள், தளபாடங்கள், நூல்நிலைய அருச்சுவடிகள், வாகனங்கள், மின்சாரயந்திரம் போன்ற இன்னும் பலவற்றின் அழிவுகளையும் கண்டு வேதனைப்பட்டோம். அத்துடன் வீடும் தரைமட்டமாக்கப்பட்டுள்ள தையும காணக்கூடியதாக இருந்தது.

ஏன் இப்படியான நிலை சைவத்திற்கும்! தமிழ் மக்களிற்கும் நேர்ந்தது? என்று எங்களைப் பலமாகச் சிந்திக்கவும வைத்தது. நாம் அறிந்தோ அறியாமலோ செய்த தப்புத் தவறுகளும் ஓரளவு காரணமாயிருக்கலாம். என்பதையுந் தெளிந் தோம். இப்படியான உருத்திர காரியங்கள் வருங்காலங்களில் நேராதிருக்கவும், நாமும் ஷஷெய்வன திருந்தச் செய்'' என்ற படி நடக்கவும் அருள் பாலிக்க வேண்டுமெனப் பெருமானை நாளாந்தம் இப்போ வேண்டுதல் செய்து வருகின்றோம். ஆலயத்தைப் பழைய நிலைக்குப் புனர்நிர்மாணம் பெறச் செய்வதற்கான திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை நிறைவாக்கக் கைகொடுத்து உதவ வேண்டிய பொறுப்பும் கடமையும் சைவ உலகினதேயாகும்.

ஒவ்வொருவருடைய மனச்சாட்சியுமே அவனுக்கு சாட்சி. உங்களது சக்தியை எல்லாம் எதிர்மறையான விமரிசனங்களுக்குப் பலியாகி வீணாக்காதீர்கள்.

# வலி வடக்கும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலும்

**வ. கந்தசாமி**

ஈழத் திருநாட்டில் நாற்றிசையும் பழைமையும் மகிமையும் வாய்ந்த பாவம் வினை அறுக்கவல்ல திருப்பதிகள் சூழ் நீராடுதுறைகள், தீர்த்தங்கள் பல உள.

வடக்கே கீரிமலையும் - நகுலேசர் ஆலயமும், கிழக்கே கன்னியா நீருற்றும் - கோணேசர் ஆலயமும், தென்கரையில் மாணிக்க கங்கையும் - கதிரை வெற்பும், மேற்பரப்பில் பாலாவியும் - திருக்கேதீச்சரநாதர் கோவிலும், மாயவனாறும், முன்னைநாதர் கோவிலும் இயற்கையாகவே ஈழத்தை அரண் செய்கின்றன. இவை ஐந்தும் காலத்தால் முற்பட்டவையாகவும், ஈழத்தின் வரலாற்றுக்கு முன்பே இடங்கொண்டனவாகவும் இருக்கின்றமையினால், இவை இலங்கையைக் காவல்செய்யும் ஐம்படை வீடுகளென நாம் கூறிக்கொள்ளலாம்.

தமிழ் கூறும் தொல்லுலகமாகிய குமரிக்கண்டத்தை, கால வெள்ளமாகிய கடல் கொண்டதென்பது கீழைத்தேச மேலைத்தேச அறிஞர் பலரின் தேற்றமாகும். அக்குமரிக்கண்டத் தின் கூறே ஈழமுமாகும். அந்நேரம் இப்பிரதே சத்தைக் கடலால் விழுங்கப்படவிடாது ஒரு சிறுதீவாக இறைவன் விளங்க வைத்ததும் இங்கு முன்னர் கூறப்பட்ட ஐம்பெரும் தலங்களதும் தீர்த்தங்களதும் மகிமையையும், பெருமையையும் அழியவிடாது பாதுகாத்தற் பொருட்டே என நாம் ஊகிக்க இடமுண்டு. இத்திற மாண்பு பெற்ற நீராடு துறைகளில் ஒன்றாகிய கீரிமலைத் தீர்த்த மகிமையினை ஒட்டி எழுந்த திருத்தலமே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் யாழ்ப்பாணப் பட்டணத்தில் இருந்து காங்கேசன் துறை செல்லும் நெடுஞ்சாலையில் 10 ஆவது கல் தொலைவில் அமைந்திருக்கிறது. காங்கேசன் துறைப்பட்டினசபை, தெல்லிப்பளை, மயிலிட்டி ஊராட்சிமன்றங்கள் ஆகியவற்றை எல்லைக ளாகக் கொண்டிருப்பது. இதற்கு இரும்புப் பாதைத் தொடர் வண்டி மூலமும், தெருவண்டிகள் மூலமும் செல்லலாம். தெல்லிப்பளையை அடுத்த மாவிட்டபுரம் இதன் தொடர்வண்டி நிலையம் கிழக்கே இரண்டு கல் தொலைவில் பலாலி விமானத்திடல் அமைந்திருக்கின்றது. காங்கேசன் துறை வடக்கே ஒரு கல்தொலைலும் கீரிமலை நன்னீரூற்று மேற்கே ஒன்றரைக் கல்தொலைலும் அமைந்திருக்கின்றன.

எங்கள் நாட்டில் இருவகையில் அமைந்த கீர்த்தி வாய்ந்த முருகன் திருக்கோயில்கள் உள. சிவாகம சிற்பநூல் அமைவு பெற்றவை ஒரு வகை. அவ்வமைவு பெறாதவை இன்னொருவகை. இவை மடாலயங்களெனப்படுபவை.

மாவிட்டபுரம், கந்தவனக்கடவை, இணுவில், நீர்வேலி, அநுராதபுரம் போன்ற இடங்களில் உள்ள கோவில்கள் சிவாக சிற்பமுறையில் அமைந்தனவாகும்.

கதிர்காமம், மண்டூர், வெருகல், செல்வச்சந்நிதி, நல்லூர் போன்ற ஆலயங்கள் மடாலய வகுப்பினவாகும். இவற்றுள் சிவாகம் சிற்ப நூல் அமைவுபெற்ற வரிசையில் சரித்திரப் பிரசித்திமிக்க பெருங் கோயில் மாவிட்டபுரமாகும்.

பல ஊர் மக்களுக்கு வழிபடு கோயிலாகவும், குல தெய்வமாகவும் விளங்குவது மாவிட்டபுரம். வரலாற்றின்படிக்கு கி.பி 9ஆம் நூற்றாண்டில் திசைஉக்கிரசோழன் என்னும் வளவன் ஒருவன் சோழநாட்டில் இருந்தான். அவனுக்கு ஒரு மகள், பெயர் மாருதப்புரவிகவல்லி. இவள் குதிரைமுகமும் மானுட உடலும் கொண்டிருந்தாள்.

சாந்தலிங்கன் என்னும் சந்நியாசி ஒருவரின் கூற்றுப்படி இப் பெண் கீரிமலைக்கு வந்தனள். அங்கு தவ சிரேட்டராக விளங்கிய நகுல முனிவரிடம் உபதேசம் பெற்று, கீரிமலைக் குன்றருகே உவர்நீர் மத்தியில் நன்னீரும், அருவி நீரும் கலந்த இடமொன்றில் நாள் தோறும் சிவ சிந்தையுடன் நீராடிவந்தாள். நாளடைவில் இந்நீரா டலால் அவளது குதிரை முகம் மாறி குமரிமுகம் ஆகியது. அந்நாளில் அவள் தன் சேடியருடன் தங்கியிருந்து தீர்த்தமாடிய இடம் "குமாரத்தி பள்ளம்" என்றழைக்கப்பட்டது. (இன்றைய காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை வாயிலுக்கு நேரே கிழக்கு முகமாக இருக்கும் குமார கோயிலடிதான் குமாரத்தி பள்ளம் என்று கூறப்படுகின்றது).

நீராடிய பின்னர் வழிபாடாற்றிய கோயில் கதிரையாண்டவர் கோயில், அக்கோயில் இருந்த இடம் கோயிற் கடவை (இன்று இவ்விடம் வளவுடை என வழங்கப்படுகிறது) இதன் அருகில் இன்று அழிந்த நிலைக்கேணி ஒன்று இருக்கக் காணலாம். இன்றைய கோயிலில் இருந்து மேற்கே 200 யார் தொலைவிற் காணப்படுவது கதிரையாண்டவர் கோயில்.

குதிரை முகம் நீங்க் அருள்பாலித்த இறைவன் பதியாக அது இருந்ததினால், கோவிற் கடவை, பின்னர் "மாவிட்டபுரம்" என மறுபெயர் கொண்டதாகக் கூறப்படும். மா - குதிரை, விட்ட - நீங்கிய, புரம் - இடம், குதிரைமுகம் நீங்கிய இடம் மாவிட்டபுரம். இக்காரணப் பெயரேபெருவழக் கில் இன்று பேசப்படுகின்றது. ஆயின், மாருதப் புரவிகவல்லியோடு வந்த தளபதி பெயர்.

``மகவிட்டன்'' என்றும், பின்னாளில் கோயில் ஆட்சிப்பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து அவனை இருக்க வைத்த இடம் இன்றைய மாவிட்டபுரம் என்றும், மகாவிட்டன் வசித்த இடமாதலின் அப்பெயர் மருவியே மாவிட்டபுரம் ஆயிற்று எனவும் யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர் "நாவலர் கோட்டம்" **ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை** அவர்கள் கூறுவர்.

மேலும் சூரசங்காரத்தின் பின் முருகப் பெருமான் கதிரைமலைக்கு எழுந்தருளிச் செல்லுங்காலை, இங்கு தங்கிச் சென்றாரென்ற ஐதீகம் இருப்பதால், இவ்விடம் முருகன் அருள் பெற்ற இடமாகவும் கூறப்படுகின்றது. இக்கருத்தை ஏற்போர் ``மா'' என்றால் மாமர வடிவாகிய சூரன் என்றும், ``விட்ட'' என்றால் அவ்வடிவினைவிட்ட என்றும், ``புரம்'' என்றால் இடம் என்றும் கூறி மாமர வடிவாக நின்ற சூரன் அவ்வடிவினை விட்டேகிய இடமாதலின், இவ்விடம் ``மாவிட்டபுரம்'' எனக் கூறப்படுவதாகக் கூறுவர். இவர்கள் கூற்றை ஏற்போர் இவ்வாலயத் தலவிருச்சமாக மாமரமும் அண்மையில் கடலும் இருப்பதைச் சான்று காட்டி உறுதி செய்கின்றனர்.

தனக்கு வாழ்வளித்த கதிரை ஆண்டவன் கோயிலை மாருதப்புரவிகவல்வி கட்டுவித்தாள் எனவும், அதற்கு வேண்டிய பொருளையும், திருவடிவங்களையும், பெரியமனத்துளார் எனும் தில்லைத்தீட்சிதர் மரபு அர்ச்சகரையும், ஏனைய ஏவல்களையும் சோழ வளவன் அனுப்பிவைத்தான் எனவும், வரலாறு கூறும். காங்கேசப் பெருமானாகிய கந்தப் பெருமானின் கோயிற் திருப்பணிகளுக்கு வேண்டிய திருவடிவங்களும், ஏனைய பிறவும் வந்திறங்கிய துறை அன்றுதொட்டு காங்கேசன் துறை என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

கோயிற்றிருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலை உக்கிரசிங்கன் என்ற இளவரசன் மாருதப்புரவிகவல்லியை மணந்து கொண்டதாயும், அவனது அரசிருக்கை கதிரைமலையாக இருந்ததெனவும், மாருதப்புரவிகவல்லியை மணந்த பின்னர் தன் அரசிருக்கையோடு இருந்த இடத்தை நெல்வயல்களாக்கி, அவற்றை அவளால் கட்டுவிக் கப்பட்ட கந்தசுவாமிகோவில் நித்திய நைமித்திய பூசைகளின் பொருட்டும், ஆலய அர்ச்சகர்களுக் காகவும் பிரமதாயமாக வழங்கி விட்டுத் தன் அரசிருக்கையை யாழ்ப்பாணத்தின் வடகீழ்பகுதியில் உள்ள சிங்கை நகருக்கு - வல்லிபுரக் குறிச்சிக்கு மாற்றினான் எனவும் கூறப்படுகின்றது. கந்தசுவாமிகோவில் வழிபாட்டிற்காக விடப்பட்ட இடமான படியினாலும், பண்டைய இராசதானியாக இருந்த "கதிரைமலை" கந்தரோடை எனப் பெயர் மாற்றம் பெற்றதாகவும் வரலாறு கூறும். (கந்தர் - கந்தசுவாமியர், ஓடை - குளவெளி). இன்றைய கந்தரோடையை உள்ளடக்கி இருக்கும் சுன்னாகத்தில் எழுந்தருளியுள்ள கதிரைமலைச் சிவன்கோவிலுக்கும், பண்டைநாட்கதிரை மலைக்கும் ஏதாவது தொடர்புண்டா என்பது ஈண்டு கவனத்திற் கொண்டு ஆராயற்பாலதாகும்.

இன்னும் மாருதப்புரவிகவல்லி தன் குன்மநோய் நீங்கி, இளமையும் அழகும் உடையவளாய் விளங்கிய காலத்தில் தங்கிய குறிச்சியை உள்ளடக்கிய ஊர் "தல்லிப்பள்ளி" எனப்பட்டதாகவும், தல்லிப்பள்ளி மருவியே, "தெல்லிப்பளை" ஆயதாகவும் கூறப்படும் கருத்தும் இவ்விடத்தில் உற்றுநோக்கற்பால தாகும். (தல்லி - **இளமைஉடையவள், பள்ளி - சிற்றூர்**)

இன்று கடலருகில் காணப்படும் சடையம்மா மடத்திற்கு அருகில் உள்ள தீர்த்தமே நகுலமுனி மாருதப்புரவிகவல்லி போன்றோர். நீராடி நன்மை பெற்ற "அந்தர்வாவி" எனும் கண்டகி தீர்த்தமாகும்.

ஆன்மாக்களை ஆட்கொள்ளும்பொருட்டு இறைவன் கொள்ளும் வடிவங்களுள் கருணை வடிவான தீர்த்தமும் ஒன்றாகும். இதனால் அன்றோ "தீர்த்தன்" என்று சிவபெருமான் பேசப்படுகின்றான். இறைவனின் தீர்த்தவடிவு அவனது அனுக்கிர கத்தைக் குறிப்பதாகும். மெய்யன்புடன் கீரிமலையில் நீராடுவோருக்கு அநுக்கிரகம் சித்திக்கும் என்பதனை நிலைநாட்டி வற்புறுத்திக் காட்டுவதே, ஆர்த்த பிறவித் துயர்கெட மாருதப்புரவிகவல்லி ஆர்த்தாடி வழிபாடாற்றி வந்தபேறாகிய முகமாற்றமாகும்.

இவ்வாறு மாருதப்புரவிகவல்லியினால் எடுக்கப்பட்ட திருக்கோயில் காலத்துக்குக் காலம் வளர்ச்சிபெற்றுப் பிரசித்தமான பெருங் கோயிலாக இருக்கும் நாளில், போர்த்துக்கேயர் இந்நாட்டைக் கைப்பற்றினர். அவர்களது ஆட்சிக்காலத்தில் தகர்க்கப்பட்ட சைவ ஆலயங்களின் எண்ணிக்கை களில் மாவிட்டபுரமும் ஒன்றாகும். அந்நேரம் கோயிற் பொருட்களையும் திரு உருவங்களையும் கிணற்றுள் போட்டு வைத்துக் காப்பாற்றியவர், அக்காலத்தில் கீரிமலையைச் சார்ந்த ஆலயங்களில் ஆட்சிப்பொறுப்பாளராக இருந்த சிவஸ்ரீ பாலசுப் பிரமணியக் குருக்களாவர். போத்துக்கேய ஆட்சி ஒழிந்து ஒல்லாந்தர் ஆட்சியின் கடைக்கூறாகிய **1782** இல் சிவஸ்ரீ சபாபதி ஐயர் என்பவரினால் மாவிட்டபுரம் புனர்நிர்மாணம் செய்யப்பெற்றுப் பண்டுபோல் விழாக்கள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டன. புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இவ்வாலயம் காலத்துக்குக் காலம் ஆட்சிப பொறுப்பேற்ற மரபுவழிப் பரிபாலக அறங்காவலர் களாலும், அடியவர்களாலும் மேலும் மேலும்

விரிவுபடுத்தியும் செப்பனிட்டும் பெருங்கோவிலாக் கப்பட்டதாகும்.

இன்று இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம், நிருத்தமண்டபம், வசந்தமண்டபம், தட்டி மண்டபம், வில்லுமண்டபம், வேட்டைமண்டபம், யாகசாலை பாகசாலை, களஞ்சியம் ஆகியவை முறையாகக் கட்டப்பட்டுள்ள ஒரு பெருங்கோவில் முறையில் அமைந்துள்ளது. கருவறை தொடங்கி அர்த்த மண்டபம் வரையான கோவில் கருங்கற்றழிக் கோயிலாக 1927இல் கட்டி முடிக்கப்பட்டு, அவ்வாண்டு ஆனி சுவாதியில் திருக்குடத் திருமஞ்சனம் நடைபெற்றது. கருவறையில் கோலமாமஞ்ஞை தன்னில் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை உடன் கூறுமடியார்கள் வினைதீர்க்கும் முகபாவனையில், கருணை நெறிபுரியுமன்பர்க்கெளியோனாக அருளொடு விளங்குகின்றார். இங்கு பிரதிட்டை செய்யப் பட்டனவும், எழுந்தருளச் செய்யப்பட்டனவுமான ஏனைய மூர்த்திகள் விவரம் விநாயகர், நடேசர், சந்திரசேகரர், ஆறுமுகசுவாமி, முத்துக்குமரா சுவாமி, சுப்பிரமணியர், சந்தானகோபாலர், மகாலட்சுமி, வைரவர், தண்டாயுதபாணி, நவக்கிரகங்கள், சண்டேசுவரர் என்பனவாகும். இங்குள்ள சிவகாமி பங்கராகிய நடேசர் திருவுருவம் சிதம்பரத்திலிருந்து தருவிக்கப்பட்ட தாகும்.

இவ்வாலயத்தின் மேற்குப் புறத்தே காட்சிகொடுக்கும் இராசகோபுரத்தின் திரு உருவங்கள் கோயிலின் வரலாற்றைத் தெளிவுபடுத்துவதுடன், இக்கோவிலுக்கு மட்டுமன்றி ஈழநாட்டுக்கே பெருமை கொடுக்கும் பெருங்கோபுர மொன்றாகவும் மிளிர்கின்றது. இதனைக் கட்டிமுடிப்பதற்கு வேண்டும் பொருளுதவி புரிந்தவர் இரங்கூன் பண்டாரம் எனக் கூறப்படும் அருட்திரு நாகலிங்கதேசிகராவர். இதனைப் பரிபாலிப்பதற் கென அப்பெரியாரால் ஏற்பாடு செய்யபட்ட அறக்கட்டளை ஒன்றுண்டு. காங்கேசன் துறையிலுள்ள நாகலிங்கேசுவர மடாலய பரிபாலன அறக்கட்டளையே அதுவாகும்.

இன்று நாளாந்தம் இங்கு ஆறுகாலப் பூசைகள் நன்றாக நடைபெற்று வருகின்றன. கிழமைதோறும் வெள்ளிக்கிழமைகளில் காலை, மாலையிலும், மாதந்தோறும் கார்த்திகை தீர்த்தமும், அதற்கு முதல்நாள் தேருமாக இருப்பத்தைந்து நாட்களுக்குத் திருவிழாக்கள் நட்சத்திரத்திலும், சித்திரை, தை மாதப்பிறப்பு நாட்களாகிய சங்கிராந்திகளிலும் முத்துக்குமார சுவாமிக்குச் சிறப்பான மஞ்சன நீராட்டும் பூசைகளும் நடைபெறுகின்றன. இப்பெரு நாட்களில் உற்சவ மூர்த்தியாகிய முத்துக்குமார சுவாமி உள்வீதி எழுந்தருளுவார்.

***விசேட உற்சவங்கள்***

இவ்வாலய மகோற்சவம் பூர்வபக்க சஷ்டித் திதியோடு கூடிய ஆனி உத்தர நாளன்று கொடியேற்றமும், ஆடி அமாவாசையன்று தொடர்ந்து நடைபெறும், இந்நாட்களில் நடைபெறும் ஆறுமுகசுவாமி திருநடனத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, வேட்டைத் திருவிழா, பட்டுக்குடைத் திருவிழா, சப்பரத் திருவிழாப் போன்றவை சிறப்பான திருவிழா நாட்களாகும். உற்சவகால ஆறுமுகசுவாமி திருநடனத் திருவிழாவைத் தொடக்கிவைத்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தவர்களாவர். உற்சவகால ஐந்தாம் திருவிழா நாள் இதுவாகும். இவ்வுபயத்திற்கென காங்கேசன்துறையில் ஒரு கிட்டங்கியை அவர்கள் எழுதிவைத்துள்ளனர். நாட்டுக்கோட்டைச் செட்டிகளினால் வழங்கப்பட்ட தேர் வடிவான விளக்கு ஆலயத்திற்கு இன்றும் ஒளியூட்டிக் கொண்டிருப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.

தேருக்கு வரும் பஞ்சமூர்த்திகள் விநாயகர், சுப்பிரமணியர், சந்திரசேகரர், ஆறுமுகர், சண்டேசுரர் ஆகியோராவர். தேர்த் திருவிழா அன்று மாலை தேர்முட்டியடியில் நடைபெறும் சண்முகார்ச்சனையின் பின்னர் பஞ்சமூர்த்திகள் இருக்கைக்கு எழுந்தருளும் போது மலர் மாரியுடன் வேத ஒலியும், திருமுறை ஓசையும், நாதகானமும் முழங்க, ''பத்தித் திருமுகமாறுடன்'' பன்னிரு கைகளுமாய்த் தித்தித் திருக்கும் திருஅமுது கண்டேன் என அருணகிரி கூறும் ஆறுமுகப் பெருமானுக்கு நடைபெறும் பன்னீராட்டு, இந்நாட்டில் வேறெங்கும் காணாக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

"கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'' என அப்பர் பெருமான் கூறும் திருக்கையிலைக் காட்சியை, கைலாசபதியாகிய எம்பெருமான் அப்பர் பெருமானுக்கு திருவையாற்றில் காட்டிய நாள் ஆடி அமாவாசை நாளாகும். கூறுமடியார்கள் வினை தீர்த்தருள மாவைக்கந்தன் தீர்த்தம் கொள்ள எழுந்தருளும் பெருநாளும் அப்புண்ணிய நன்னாளேயாம்.

இவை தவிர, தைப்பூச நாளன்று ஆறுமுகசுவாமி தேரில் திருவீதி உலா வரு தலுமும், மார்கழி ஆருத்ராதரிசனத்துக்கு முதல் நாள் நடேசர் தேரில் திருவீதி உலாவருதலுமும் இவ்வாலய வழக்கமாகும்.

ஆண்டுதோறும் கந்தபுராணப் படிப்பு வைகாசி மாதத்தில் ஆரம்பித்து, மகோற்சவ இரண்டாம் நாள் முடிவடையும். ஐப்பசி மாதக் கந்தசட்டி காலத்தில் திருச்செந்தூர்ப் புராணம் படித்துப் பயன் சொல்லப்படும். சூரன்போர் இங்கு வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

இவ்வாலயத்திற்குச் சொந்தமான சுவடிச் சாலை ஒன்று உண்டு. அதில் பன்னூற்றுக்கணக் கான சமயச்சார்புள்ள கிரந்த நூல்களும், தமிழ் நூல்களும் இருககக் காணலாம்.

# வலி வடக்கில் கத்தோலிக்க தேவாலயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

**ஜயந்தி யேசுதாசன்**
சமுர்த்தி முகாமையாளர்

## இலங்கையில் திருச்சபையின் பரம்பலும் வலிவடக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட தேவாலயங்களும் அதன் தோற்றமும் வளர்ச்சியும்

போத்துக்கேயப் போதகர்கள் தாம் பெற்ற இறை அனுபவத்தை அனைத்து மக்களும் பெற்றுகொள்ள வேண்டும் என்பதற்காக, திருச்சபையை இலங்கையில் பரப்ப முற்பட்டனர். இதற்கு அரசியல் பொருளா தாரக் காரணிகளும் கைகொடுத்தது. ஆரம்பகாலங்களில் கரையோரப் பிரதேசங் களிலேயே தேவாலயங்கள் தோற்றம் பெற்றன. பின்னர் இதன் படிமுறை வளர்ச்சியாக ஏனைய பிரதேசங்களுக்கும் பரவியது. இந்த வகையில் திருச்சபை எவ்வாறு பரவியது என்பதையும் எமது வலிவடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தேவாலயங்கள் எந்தெந்தப் பகுதியில் அமைந்துள்ளன என்றும் அவை எவ்வாறு தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டது என்பதையும் எடுத்து நோக்குவோம்.

இலங்கைக்கு முதன் முதலில் போத்துக்கேய வேத போதகரே கிறிஸ்து வேதத்தைக் கொண்டு வந்தனர். கத்தோலிக்க நாடான போத்துக்கல் அவ் வேளையில் செழித்து விளங்கியது. தனது பிறநாட்டு வியாபாரத்தையும் கடல்கடந்த நாடுகளின் மேல் ஆதிக்கத்தையும் காத்து வளர்க்க, வெளியே அனுப்பிய வீரசேனை களின் சுவட்டிலேதான் போதகர்கள் இங்கு வந்தார்கள். கடலோடி எனப் பெயர் பெற்ற கென்றி கோமகன் தொடங்கிய துணிச்சலான, முயற்சியாலேதான் அறியாத நாடுகளைத் தேடிச் சேனைகள் புறப்பட்டு அமெரிக் காவைக் கண்டு பிடிக்கவும் இந்தியாவுக்குக் கடல் வழி காணவும் நேரிட்டது.

1498ல் போத்துக்கேயர் இந்திய மண்ணில் கோழிக் கூட்டில் [Calicut] காலடி வைத்தனர். இலங்கையை அவர்கள் தற்செயலாகவே கண்டுபிடித்தனர். 1505ல் காலித் துறையை வந்தடைந்த லோறன்சோ தேஅல்மேதா வியாபாரத்தை வளர்ப்பதற்காக கொழும்புக்கு வந்து கோட்டையில் சிங்கள மன்னனுடன் ஒரு உடன்படிக்கை செய்து பண்டகசாலை ஒன்றை நிறுவினர். 1518ம் ஆண்டில் கிறிஸ்து வேதம் பரவத் தொடங்கியது எனலாம். 1543 இன் முடிவி லேதான் கோட்டை அரசனின் அழைப்பின் பேரில் ஏழு குழுக்கள் கொண்ட குழு ஒன்று வேதபோதகப் பணிக்கு என்று இத்தீவில் வந்து இறங்கினர். அவர்கள் விரைவிலே வடக்கிலும் தெற்கிலும் பரந்து கிறிஸ்தவ மையங்களைத் தாபித்தனர் இதற்கு முன் 6ம் நூற்றாண்டிலேயே இலங்கையில் கிறிஸ்த வர்கள் வாழ்ந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

யாழ்ப்பாண அரசன் 7ம் செகராசசேகரன் தனது பிரசைகள் போத்துக்கல் மன்னன் முடிக்கு மாறுவதை எதிர்த்தான். குடிகள் வேதமாற்றத்தை அரசு மாற்றமாகவே அந்நாட்களில் சுதேச பிரபுக்கள் தவறாகக் கருதினர். அவன் 5000 ஆட்களுடன் மன்னாருக்குப் போய் புதுக் கிறிஸ்தவர் களை சங்கரித்தான். இவ் அரசனின் மூத்தமகன் இச்சம்பவங்களால் மனம்மாறி விசுவாசத்தை ஏற்கத் துணிந்தான். வேத போதகரான புனித சவேரியார் செகராசசேகரினின் தலைநகரான நல்லூரில் அவனோடு வாதாடி இனிமேல் கிறிஸ்தவப் பிரசைகளைத் துன்புறுத்த வேண்டாம். என்று எடுத்துக் கூறினார். யாழ்ப்பாணத்தில் பருதித்தித்துறையில் ஒரு மரத்தின் கீழ் மக்களுக்குப் பிரசங்கித்தார்.

அரசியல் குழப்பங்களினால் இராட்சியம் பிளவுபட்டது. அதனால் சுதேச கிறிஸ்தவர் களுக்கு ஓரளவு அமைதி கிடைத்தது. 1591க்கு முன் சிற்றாலயம் கட்டப்பட்டதாகச் சொல்லப்படு கின்றது. இது கடற்கரையிலே ஆள்நடமாட்டமற்ற பகுதியிலே இருந்தது. இது வேதசாட்சியான யாழ்ப்பாண அரசகுமாரனைப் புதைத்த இடமாக இருக்கலாம் எனச் சொல்லப்படுகின்றது. குருசுக் கோயில் எனும் ஆலயத்தின் பெயரும் மகிமையான சான்றின் பின் தொடர்ந்த அதிசயங்களையே குறிப்பதாக நாம்

நம்பலாம். இந்த ஆலயத்திற்கு அருகிலேதான் அன்டிறே பூர்த்தாடோ தே மென்டோசா எதிரியான யாழ்ப்பாண அரசன் புவிராசபண்டாரத்தை தண்டிக்கப் படையுடன் வந்தவேளை 1591 ஒக்டோபர் 27ம் திகதி பாளையம் அமைத்தனர். அகந்தை கொண்ட ஒற்றைக் கண் அரசன் அடுத்தநாள் கொலையாகி அவன் மருமகன் எதிர்மன்சிங்க குமாரனுக்கு செங்கோல் அழிக்கப்பட்டது இப்புதிய அரசன் 8ம் பரராசசிங்கன் எனும் சிம்மாசனப் பெயருடன் போர்த்துக்காலுக்கு பிரமானிக்கம் உள்ள திறையாக நடந்ததால் கிறிஸ்தவர்கள் நூற்றுக் கணக்காக பெருகி இராட்சியத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆலயங்கள் நிறுவப்பட்டன. பிரான்சிஸ்கு சபைக்குரு கிறிஸ்துவின் பேதுரு சிலுவைக் கோவிலிலே தங்கி விசுவாசிகளுக்கு பணிபுரிந்தார். விரைவில் பரராசசேகரன் அவரைத் தனது இராசதானியான நல்லூருக்கு அழைத்து ஒரு வீடும் கோவி லுக்கும் மடத்துக்கும் காணியும் கொடுத் தான். இங்கு கட்டப்பட்ட பெரிய கோவில். அண்மையில் எதிர்த்த அரசன்மேல் பூர்த்தாடோ பெற்ற வெற்றியின் ஞாபகமாக வெற்றிமாதா கோவில் என அழைக்கப் பட்டது. இந்த ஆலயமும் மடமும் 1614ல் இப்போது யாழ்ப்பாணக் கோட்டை இருக்கும் இடத்துக்கு மாற்றப்பட்டன. ஊர்காவற் தீவிலே ஒரு கோவில் 1600ல் கட்டத் தொடங்கினர். இதற்கு முன்பே மாதோட்டத்தில் முதல் கோயில் இருந்த தாகக் கூறுவர்.இந்த வகையில் எமது வலி வடக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட கத்தோலிக்க தேவாலயங்களாக பின்வருவற்றை குறிப்பிட லாம்.

1. புதுமை மாதா தேவாலயம்
   மல்லாகம் மத்தி

2. புனித சவேரியார் தேவாலயம்
   குளமங்கால், மல்லாகம்

3. சதாசகாயமாதா
   சகாசயா மாதா தேவாலயம்
   மல்லாகம்

4. புனித சூசையப்பர் தேவாலயம்
   அளவெட்டி தெற்கு,
   அளவெட்டி

5. அன்னை வேளாங்கன்னி தேவாலயம்
   இளவாலை வடக்கு,
   இளவாலை

6. புனித பிலிப்நேரியார் தேவலாயம்
   பத்தாவத்தை
   இளவாலை வடக்கு,
   இளவாலை

7. சென்றீற்றா தேவாலயம்
   இளவாலை வடக்கு,
   இளவாலை

8. கைத்தார் தேவாலயம்
   மாரிசன்கூடல்,
   இளவாலை வடமேற்கு,
   இளவாலை.

9. ஆரோக்கியநாதர் தேவாலயம்,
   சேந்தாங்குளம்,
   இளவாலை வடமேற்கு,
   இளவாலை.

10. அந்தோனியார் தேவாலயம்
    சேந்தாங்குளம்,
    இளவாலை வடமேற்கு,
    இளவாலை

11. புனித அன்னம்மாள் தேவாலயம்
    வலித்தூண்டல்,
    இளவாலை வடமேற்கு,
    இளவாலை

12. புனித லூர்து மாதா தேவாலயம்,
    சீந்திப்பந்தல்,
    இளவாலை.

13. பத்திமாதா தேவாலயம்
    சேந்தாங்குளம்
    இளவாலை.

14. காணிக்கை மாதா கோயில்
    மயிலிட்டி

15. செபமாலை மாதா தேவாலயம்
    முலவை,
    மயிலிட்டி.

16. அந்தோனியார் தேவாலயம்
    ஊறணி,
    மயிலிட்டி

17. மாதா கோயில்
    வள்ளுவபுரம்
    தையிட்டி

18. செவேத்தியார் தேவாலயம்
    பலாலி

19. அன்னை வேளாங்கன்னி தேவாலயம்
    தெல்லிப்பளை கிழக்கு,
    தெல்லிப்பலை

20. பத்தாம் பத்திநாதர் தேவாலயம்
தெல்லிப்பளை

21. புனித மரியாள் தேவாலயம்
ஒட்டகப்புலம்
வயாவிளான்

22. உத்தரிய மாதா தேவாலயம்
வடமூலை,
வயாவிளான்

இந்தவகையில் சில தேவாலயங்களின் வரலாறு பின்வருமாறு

## 1.புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயம்

மல்லாகத்தைச் சேர்ந்த குளமங்கால் என்னும் பதியில் புனித பிரான்சிஸ் சவேரியார் பெயர் கொண்ட ஆலயம் 1886 ஆம் ஆண்டு ஒரு ஓலைக் குடிசையாக ஆரம்பிக்கபட்டு வழிபாடுகள் நடைபெற்று வந்தன. ஆலயத்திற்கு என ஒரு புதிய கட்டிடம் நிறுவும் நோக்குடன் அதற்கான அடிக்கல் 1914 ஆம் ஆண்டு நாட்டப்பட்டது. ஆலயக் கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1942ம் ஆம் ஆண்டு மார்கழி மாதம் 3ம் திகதியன்று ஆலய பீட அபிஷேகம் விமரிசையாக நிறைவேற்றப் பட்டது. மறைமாவட்டத்தில் உள்ள பீட அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு சில ஆலயங்களில் இவ்வாலயமும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் திருவிழா வருடாந்தம் மார்கழி மாதம் 3ம் திகதியில் மிகவும் சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகிறது. இச்சுற்றுவட்டாரத்திலுள்ள றோமன் கத்தோலிக்க தேவாலயங்களில் இத் தேவாலயம் மிகவும் கம்பீரமான தோற்றத் தைக் கொண்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் இவ்வாலய பங்கு மக்களின் சொந்தப் பிரயாசையே ஆகும்.

இவ்வாலய வழிபாடுகள் ஆரம்பிக் கப்பட்ட காலம் தொடக்கம் 1963ம் ஆண்டு வரையும் ஆலயத் தொண்டா ற்றிய குரவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு.

- அருள் திரு. கிற்றோ (அ.ம.தி)
- அருள் திரு. பி.பீற்றர் (அ.ம.தி)
- அருள்திரு. எஸ்.ஏ.பெஞ்சமின்
- அருள்திரு. பி. பிலிப்
- அருள்திரு.ஜி.ரி.பாலசுந்தரம் (அ.ம.தி)
- அருள்திரு.எஸ்.வில்வராசசிங்கம் (அ.ம.தி)
- அருள்திரு.பி.ஆபிரகாம்
- தோமஸ் சவுந்தரநாயகம் தற்போதைய யாழ் ஆயர்
- அருள்திரு. நீ. மரியசேவியர்
- அருள்திரு.இரத்தனையா
- அருள்திரு. இராயப்பு யோசேப்
- அருள்திரு. அன்ரன் இராசகாரியர்
- அருள்திரு. பி.சூசைப்பிள்ளை
- அருள்திரு. எட்மன்மைக்கல் (அ.ம.தி)
- அருள்திரு. அ.யோகராசா
- அருள்திரு. லூ. மொன்போட்

1997ல் இருந்து இற்றைவரை அருள்திரு. அன்ரன் ஞானப்பிரகாசம். இவரது சேவையானது குளமங்கால் பங்கு மக்களால் போற்றுதற்குரியது தேவாலயத் திருத்த வேலைகள், சிறார்களின் கல்வி வளர்ச்சி, அவர்களது ஆளுமைத்திறன் விருத்தி, விளையாட்டு போன்றவற்றில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். அதுமட்டுமல்ல இளைஞர் யுவதிகளையும் அவர்களது ஆளுமைவிருத்திக்குப் பெரிதும் உழைப்பவராக இருக்கின்றார்.

## 2. புதுமை மாதா தேவாலயம்

தேவாலயங்கள் வரலாறு படைக்கின்றன என்றால் அருட்தந்தையர்களும் சிறந்த பொது நிலையினரும் இணைய வேண்டும். மல்லாகம் புதுமை மாதா தேவாலய வரலாற்றியே மெய்மறைவல்லோன் சுவாமி ஞானப்பிரகாசருடன் ஒரு பொது நிலையினர் பின்னிப் பிணைந்திருக்கிறார். அந்த வரலாற்று மனிதர் தான் திரு. யோன் தானியேல் அவர்கள்.

1914ம் ஆண்டு ஆன்ம வாஞ்சை கொண்ட சுவாமி ஞானப்பிரகாசர் மல்லாகம் என்னும் கிராமத்தின் ஒரு பகுதிக்குத் தொண்டு செய்ய வழி மீசாம் (Misson Station) அமைப்பதற்கு சென்றார் திரு. தானியேல் அவர்களுக்கு மனைவியும் யோ. செப்யோஞானம்மா என்னும் இரு பிள்ளைகளும் இருந்தனர் இந்த ஒரு குடும்பம் மட்டுமே இருந்தது. பயபக்தியுள்ள சிறந்த குடும்பமாக குருவுக்கு அமைந்த குடும்பமாக வாழ்ந்தது. திரு.தானியேல் வழிபாட்டிற்காக குடிசை ஒன்று அமைந்திருத்தார் கிறிஸ்தவம் பரவவேண்டும். என்ற நோக்குடன் தேவாலயம் கட்டுவதற்கு சுவாமி ஞானப் பிரகாசர் தீர்மானித்தபொழுது தானியேல் அவர்கள் அதை அரைவிலைக்கு கொடுத்து தவினார் சுவாமி ஞானப்பிரகாசர் தேவாலயத் தின் கட்ட வேலையை ஆரம்பித்தார். திரு தானியேல் நாளிலும் பொழுதிலும் தனது மனைவியின் உறவினர்களுக்கு வேதத்தை எடுத்துரைத்தார். சுவாமி ஞானப்பிரகாசரிடம் அழைத்துச் செல்வார். 1918 ஆம் ஆண்டு

அவர்களுக்கு ஞானஸ்ஞானம் கொடுக்கப் பட்டது. இந்த நேரத்தில் மல்லாகம் திருச்சபை வரலாற்றில் பெரிய சோதனை ஏற்பட்டது. கத்தோலிக்க மதம் பரவி வருவதைக் கண்ட கத்தோலிக்க மதத்தின் எதிரிகள் பற்பல இடையூறுகளைச் செய்தனர் மெய்மறையைத் தழுவியவர்கள் தொழில் செய்யும் மரங்கள் பலவற்றை வெட்டி வீழ்த்தினர். அவர்கள் தொழில் செய்ய வகையறியாது தவித்து நின்றனர். திரு. தானியேல் அவர்கள் விசுவாசத்தில் சிறிதும் தளராதபடி ஆறுதலும் தேறுதலும் கூறி தன்னால் இயன்ற பண உதவியும் செய்தார். இதேவேளையில் தேவாலயத்துக்கு அருகில் இருந்த கோயில் கொட்டிலை சுவாமி பிடுங்கி எறிந்து விட்டாரென்று நீதிமன்றில் குற்றஞ் சாட்டினர் நீதவான் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று அக்கோயிலுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் சுவாமி ஞானப்பிரகாசர் சுற்றவாளி என்று அறிவித்தார்.

சுவாமி ஞானப்பிரகாசருக்கு உதவியாக பிலிப் அடிகளார் நியமிக்கப்பட்டார். அவர் தங்கியிருக்க குருமனை கட்டுவதற்கு தளபாடங்களையும் கொடுத்து தனது பணத்தையும் செலவழித்த தானியேல் அதை கட்டி முடித்தபின் மகிழ்ந்தார். ஒரு நாள் பெய்த கடும் மழையினால் தேவாலயத்தில் ஒழுகி வெள்ளம் நிறைந்தது. திரு. தானியேல் நாள் முழுவதும் ஒரு குவளையால் அள்ளி நீரை வெளியேற்றினார். இந்த தேவாலயம் ஆரம்பத்தில் தானியேல் ஆலயம் என்று அழைக்கப்பட்டது. இவர் தான் செல்லும் இடங்களிலும் வியாபாரத் தளங்களிலும் உண்மையான மதத்தைத் தழுவும்படி புத்திமதி கூறுவார். திருதானி யேலுக்கு 9 பிள்ளைகள் ஒரு பிள்ளை கன்னியாஸ் திரிபோல வாழ்ந்து இறந்தார். ஆறு ஆண்களையும் நன்றாகக் கற்பித்தார். அவருடைய குடும்பத்தில் குருவாகப் பணிசெய்ய இறைவன் தெரிந்து கொண்ட மகன் அருட்திரு புறூனோ அடிகளார். மேல் மாகாணம், மத்திய மாகாணத்தில் இன்றும் அவருடைய அளப்பரிய சேவை நீடித்து வருகின்றது. இவருடைய மத்தாயஸ் என்னும் மகனின் மகன் (பேரனார்) அருட்திரு மத்தாயஸ் அடிகள் மாட்டீனார் குருமட அதிபராகவும் பாதுகாவலன் ஆசிரியராகவும் அளப்பரிய சேவையாற்றி யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க சமயபாட விரிவுரையாளராகவும், தலைவராகவும் பணியாற்றுகின்றார். 1939ம் ஆண்டு 10ம் மாதம் 14ம் திகதி திரு. டானியேல் அவர்கள் இறந்தபோது பல சமயத் தவர்களும் அஞ்சலி செலுத்தினர். சுவாமி ஞானப்பிரகாசர் ஆற்றிய உரையிலிருந்து என்னவென்றால், ஒரு சில டானியேல்கள் யாழ்ப்பணத்தில் எங்களுக்கு கிடைத்திருந் தால் வட இலங்கை முழுவதையுமே சொற்ப காலத்தில் கிறிஸ்தவ மயமாக்கி விடக்கூடியதாக இருந்திருக்கும் என்று கூறியிருக்கின்றார்.

சுவாமி ஞானப்பிரகாசர் 30 வருடங்களாக சீரிய சிறப்புமிகு பணியாற்றி கிறிஸ்தவ மறையைப் பரப்பினார். அருட்சாதனங் களையும் வழங்கினார். புதுமைமாதா தேவாலயமானது பல அருட்தந்தையர் களைச் சந்தித்திருக்கின்றது.

- அருட்திரு. அந்தோனிப்பிள்ளை
- அருட்திரு. சற்றன் குறூஸ்
- அருட்திரு. என். எம். சவிரிமுத்து
- அருட்திரு. இரட்னையா
- அருட்திரு. பாலசுந்தரம்
- அருட்திரு. குவாஸ்
- அருட்திரு. பொன்னையா
- அருட்திரு. அருள்நாதன்
- அருட்திரு யோசேப்
- அருட்திரு. அன்ரன் ராஜகாரியர்
- அருட்திரு. பெனெற்
- அருட்திரு. ஆசைப்பிள்ளை
- அருட்திரு. எட்மன் மைக்கல் அடிகள்
- அருட்திரு. யோகராஜா அடிகள்
- அருட்திரு. மொன் பேட் அடிகள்

தற்பொழுது அருட்திரு. அன்ரன் ஞானப்பிரகாசம் 1997ல் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றார். இவர் பல்வேறுபட்ட சேவைகளைச் செய்து வருகின்றார்.

சுவாமி ஞானப்பிரகாசர் கட்டி எழுப்பிய தேவாலயம் பெனடிற் அடிகளாரின் காலத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. தேவாலய முகப்பு மாற்றியமைக்கப்பட்டு தேவாலயம் கம்பீரமாக காட்சியளித்தது. அருட்திரு எட்மன் மைக்கல் அடிகளார். காலத்தில் போட்டிக்கோ படிகள் கட்டப் பட்டன. ஆலயவளவில் இருந்த பாரிய வேப்பமரம் தறிக்கப்பட்டு மாங்கன்றுகள் தென்னங் கன்றுகள், நடப்பட்டன. அவை இன்றும் பலன் கொடுக்கின்றன. அருட்திரு.யோகராஜா அடிகளாரின் காலத்தில் போட்டிக்கோ முகப்பில் தேவமாத இரு கரங்களையும் உயர்த்தியபடியுள்ள குழந்தை யேசுவுடன் உள்ள திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டது.

தேவாலயம் கட்டியெழுப்புவதில் திரு. தானியேல் குடும்பத்தினர் ஏராளமான பண உதவிசெய்து ஆலயத்தைக் கட்டிமுடிக்க உதவினார்கள். மறையறிவு புகட்ட மல்லாகம் பகுதியில் முதன்முதலாக தானியேல் குடும்பத்தில் அவர் மகளுடைய மகனின் பிள்ளை மறைஆசிரியையாயகக் கடமையாற்றி சிலரை மனம் திருப்பினார். இன்றும் திரு. தானியேல் குடும்பத்தில் உள்ளவர்கள் அவர்களுடைய பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் இன்றும் பலரை மனந்திருப்பிக் கொண்டிருக்கின்றனர். புதுமை மாதா தேவாலய வரலாற்றிலே பல மக்களை அரவணைத்து

ஆதரித்துக் காப்பற்றி, வரங்களை அள்ளிப்பொழிந்து கொண்டிருக் கின்றனர். இது 1983ம் ஆண்டு சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் திரு. தானியேல் மறைவு குறித்து ஆற்றிய அஞ்சலி உரையிலிருந்து தொகுக்கப்பட்டது.

## 1. 3. அன்னை வேளாங்கன்னி மாதா இளவாலை

1952ம் ஆண்டு இளவாலை பங்குக்குருவாக இருந்த அதி வண. S.G இல்லறி O.M.I அவர்களினதும் இளைப்பாறிய ஆசிரியை திருமதி இராசநாயகம் சிசிலியா அவர்களினதும் இடைவிடாத முயற்சியால் மேற்படி மயிலங்கூடல் மாதாவின் ஆலயம் ஸ்தாபிக்க, பத்தாவத்தை புனித பிலிப்நேரியார் பங்கைச்சேர்ந்த சில பரோபகாரிகள் 70 பரப்புக் காணியை யாழ் மேற்றிராசனத்துக்கு அப்பொழுது இருந்த நல்லூர் பங்குக்குரவர் இராசநாயகம் மூலமாக நன்கொடையாகக் கொடுத்தார்கள்.

அதி வந்தனைக்குரிய யாழ் மறை மாவட்ட ஆயர் B. தியாகுப்பிள்ளையின் முயற்சியால் புனித சூசையப்பர் துறவியான S. டேவிட் அவர்களின் மாபெரும் பரித்தியாகத்தினாலும் பற்பல பங்குகளின் பரோபகாரிகளின் உதவியோடும் இன்று காட்சியாளிக்கும் ஆலயம் கட்டப்பட்டது. 08.12.1980 இல் இளவாலை மறை மாவட்ட குருமுதல்வர் அதி வண. அன்ரன் இராசநாயகம் ஆலயத்தை அபிஷேகம் செய்து, முதற் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அதன் பின் மாதாவின் மகோற்சவமும் புனித சூசையப்பரின் பெருவிழாவும் வருடாவருடம் நடைபெறுகின்றன.

## 1. 4.புனித பிலிப்பிநேரியார் தேவாலயம்
பத்தாவத்தை இளவாலை

புனித பிலிப்பிநேரியார் சபையைச் சேர்ந்த ஆசாரத்துக்கு உரிய யோசவ்வாஸ் முனிவர் காலத்தில் இற்றைக்கு 260 வருடங்களுக்கு முன்பு திரேசியாப் பிள்ளையின் உதவியுடனும் மக்களின் உதவியுடனும் புனித பிலிப்நேரியார் ஆலயம் பத்தாவத்தையில் ஆரம்பிக்கப்பட்டது. இவருடைய வருடாந்த மகோற்சவம் முன் கூட்டியே 9 நாள் ஆராதனையுடன் ஆரம்பித்து வைகாசி மாதம் 26ம் திகதி திருச்சுரூப சுற்றும்பிரகாரத்துடன் முடிவுறும். இப் புனிதரின் அழியாத திருச்சரீரத்தின் திருப்பண்டம் உரோமாபுரியில் இருந்து. மறைந்த வணக்கத்துக்கு உரிய G.A குருசாமி அவர்களால் மேற்படி ஆலயத்தில் வணக்க வழிபாட்டுக்கு வைக்கபட்டுள்ளது. புனித பிலிப்நேரியார் ஏழு வருடங்களின் பின் இவரின் கல்லறை திறக்கப்பட்ட போது இப் புனிதரின் சடலம் அழியாமல் இருந்தது என்பதை பல சான்றுகள் கூறுகின்றன.

## 1 5. புனித நீற்றன்னை ஆலயம்

சில ஐரோப்பிய குருக்களின் தலையீட்டால் குடிமகன் ஒருவனுக்கு திருமுழுக்கு அளிக்கப்பட்டு ''இன்னாசி'' என்ற கிறிஸ்தவப் பெயரால் அழைக்கபட்டான் இவன் மூலமாக நாளடைவில் குடிகள் பெருகின அக்குடிகள் ஒரு தனி ஆலயத்தை புனித சந்தியோகுமையோர் ஆலயம் எனப் பெயரிட்டு தற்போது ''புனித நீற்றம்மாள் ஆலயம்'' அமைந்திருக்கும் இடத்தில் அமைந்தார்கள் ஆனால் அக்கோயில் கிராமத்திற்கு வெளியே புறம் போக்கான இடத்தில் அமைத்தமையால் சில தீய சக்திகளால் எரியூட்டப்பட்டது. இவ் இடத்தில் 1941ல் புனித நீற்றன்னை ஆலயம் அமைக்கபட்டது. இவ் ஆலயம் பாதையற்ற புறம் போக்கான இடமாகக் கணிக்கப்பட்டது. 1980ல் பிரதான வீதியில் இருந்து கோயிலுக்கு ஒழுங்கையும், காணியும் வாங்கப்பட்டது.

இவ்வாறாக போர்த்துக் கேயரால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட திருச்சபையானது, பல்வேறு பிரதேசங் களுக்கும் பரவி அதன் வளர்ச்சியாக தேவாலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆதாரம் 1. யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபைச் சரித்திரச் சுருக்கம்
2. தேவாலய பங்கு மக்களின் குறிப்பு

---


## சங்கீதம்



சங்கீதமே என் சரணாகதி
சுரலயஞான – சங்கீதமே
அது தரும்
சந்தோஷமே என் மனநிம்மதி (சங்கீ)

சம்ஸார சாகரத்தில் வரும் சந்ததி
சுரசஞ்சார சாதகத்தில் எத்தனை சங்கதி (சங்கீ)

சர்வேஸ்வரன் உறையும் இடம்சந்நிதி
சன்மார்க்கம் அனைத்திலும் ஒன்றேவழி
சமயங்கள் தத்துவங்கள் எனக்கேன்இனி
சங்கீதம் ஒன்றேதான் இறைவன் மொழி(சங்கீ)



*– பத்தினியம்மா திலகநாயகம்*

# வலி வடக்கில் அமெரிக்க மிஷனரிமாரின் சமய - மருத்துவ - கல்விப்பணி

தொகுப்பு
அருட்தந்தை D.R. அம்பலவாணர்

அமெரிக்க மிசனரிமார் நாம் வாழும் யாழ்குடா நாட்டில் திருப்பணியாற்றத் தொடங்கி 194 ஆண்டுகள் நிறைவுற்றன. 17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நிலவிய சமயஞ்சார்ந்த அறநெறி வாழ்வு அரசியல் ஆழுகைமுறை ஆகியன மிகக் கட்டுப்பாடு நிறைந்ததாயிருந்தது.

இக்கட்டுப்பாடுகளை விரும்பாத ஒரு சாரார் ஒரு புதிய சூழலில் மன நிறைவுடன் சமய சுயாதீனத்தை அனுபவிக்க விரும்பினர், இவர்கள் 1620 இல் கிறிஸ்தவ அறநெறி வாழ்வை முறைப்படி வாழ இங்கிலாந்தை விட்டு அமெரிக்காவிற்குப் புறப்பட்டு அந் நாட்டின் வட கிழக்கு கரையோரத்தில் குடியேறினர்.

இவர்கள் தாம் குடியேறிய பகுதிக்கு "நியூ இங்கிலண்ட்" எனப் பெயரிட்டனர். இவர்கள் இங்கு செய்த நற்பணிகளைக் கண்டு இவர்களில் கிறிஸ்துவின் அன்பு மிளிர்வதைக் கண்டு அப் பகுதி மக்கள் இவர்களைப் "புனிதப் பிதாக்கள்" என அன்புடன் அழைத்தனர்.

இங்கு குடியேறிய இம்மக்கள் கிறிஸ்துவின் அன்பினால் தூண்டப்பட்டு, ஆர்வத்துடன் மக்களின் நலனுக்காக சமூக அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டனர். இவர்களின் அன்புப் பணிகள் மக்களின் மனதில் ஆழமாக பதிந்தது. இங்கு நிலவிய கல்வி நிறுவனங்களில் சிறப்புற்று விளங்கிய "உவில்லியம்ஸ் கல்லூரி"யில் சிறந்து விளங்கிய மாணவன் "சாமுவேல் மில்ஸ்" என்ற வாலிபன் கிறிஸ்தவ நற்செய்தியை கிறிஸ்துவை அறியாத நாடுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமென உந்தப் பட்டான், அங்கு ஏற்கனவே இயங்கிவந்த நற்செய்திப் பணியகத்தை ஆற்றல் வாய்ந்த இயக்கமாக மாற்றியமைத்தான்.

இவர் கடல் கடந்து தூர நாடுகளுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து அனேகரைக் கிறிஸ்துவின் அடியாராக ஆக்க வேண்டுமென்ற தனியாத தாகம் கொண்டிருப் பதைக் கண்டு இவனுடன் வேறு சில மாணவர்களும் சேர்ந்தனர்.

இவர்கள் தமது நோக்கம் நிறைவேற வேண்டும் என ஊக்கமாக செபித்தனர். இயேசு பெருமான் இவ்வாலிபரின் வேண்டு தலுக்குச்ஜ செவிமடுத்தார். இப்பிரார்த்தனைக் குழுவில் சேர்ந்த மாணவர்கள் தான் அமெரிக்க மிஷன் முன்னோடிகள் திருப் பணிக்கென கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்ற அடியவர்கள். சாமுவேல் மில்சுடன் வேறு பல அடியார்களும் சேர்ந்தனர் இப் பக்தி நிறைந்த மாணவர்கள் மில்ஸின் தலைமையில் 1810 இல் "அமெரிக்க கொங்கிறிகேசன் மிஷன் சங்கம்" என நிறுவப்பட்டது. இம் மிஷன் சங்கம் 1811இல் கூடியது மிஷன் ஊழியத்திற்காக, விண்ணப்பித்த வாலிபர்கள் நால்வரையும் தேர்ந்து எடுத்து சாமுவேல் மில்ஸ் அமெரிக்காவில் தங்கி மிஷன் ஒழுங்குகளை நிர்வகித்து வந்தார்.

1812 இல் ஐந்து வாலிபர்கள் ஆசிய நாடுகளில் நற்செய்தியை அறிவிக்க இந்தியாவை வந்தடைந்தனர். அன்றிருந்த அரசு அவர்களை பணி செய்ய அனுமதிக் காத படியினால் சாமுவேல் நியுவெல் என்பவர் தனது கடற்பயணத்தில் தம் மனைவியையும் குழந்தையையும் இழந்தும் மனந்தளராது இலங்கைக்கு வந்து சேர்ந்தார்.

இவர் யாழ்ப்பாணம் வந்து மிஷன் பணி செய்ய ஏற்ற இடம் என அறிந்து மிஷன் சங்கத்திடம், சில மிஷனரி மாரை அனுப்பும் படி எழுதினார். 1816 இல் மிஷன் சங்கம் தனது இரண்டாவது மிஷன் அணியை இலங்கைக்கு அனுப்பியது. 1816 மார்ச் மாதம் இவர்கள் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

1816 அக்ரோபர் 15ம் திகதி டானியில் பூவர் அவரது பாரியார் கனம் வாரனும் தெல்லிப்பளையில் பணியாற்றத் தொடங்கினர். இக்குழுவினருள் சிலர் வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, உடுவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் பணிக்களங்களை நிறுவி திருப்பணியாற்றினார்கள்.

இவர்கள் சாலத்தில் மிஷன் பல துறைகளில் ஈடுபட்டு வந்தது. மிஷனரிமார் தமது முழு ஆற்றலையும் பாவித்து அருட்பணி செய்தனர்.

தெல்லிப்பளையில் முதன் முதலாக அருட்பணி தொடங்கப்பட்ட போதிலும் வடுக்கோட்டையே, வேறு பல காரணங்களுக்காக முதற் சபையாக கணிக் கப்படுகிறது.

**கல்விப்பணி :-**

மிஷனிமார் ஆற்றிய பணிகளில், கல்விப்பணி சிறந்து விளங்குகின்றது திருச்சபை சீர்திருத்த வாதிகளில் ஒருவரான "ஜோன் கல்வின்" "மக்களை சிந்திக்கச் செய்து கிறிஸ்தவர்களாகக் வேண்டுமே ஒழிய வலுகட்டாயத்தினால் அல்ல" என்று கூறினார். இக் கூற்றுப்படி அமெரிக்க மிஷனரிமார் தம் கல்விப் பணியை மேற்கொண்டனர்.

**தெல்லிப்பளையில்**

1916 இல் அமெரிக்க மிஷனரிமார் இங்கிருந்த ஒல்லாந்த தேவாலயத்தையும் குருமடத்தையும் தமது இருப்பிடமாகத் தேர்ந்தனர். பின் இவ்விடங்களில் பாடசாலை களை அமைத்தனர். முதன் முதலாக தெல்லிப்பயிலும் மல்லாகத்திலும். இரண்டு பாடசாலைகள் 30 மாணவர்களுடன் தொடங்கப்பட்டன.1833 இல் இங்கு பணி புரிந்த வண் மைக்ஸ் இன் குறிப்புப் படி தெல்லிப்பளை வேலைத் தளத்தை சேர்ந்த சுதேச இலவசப் பாடசாலைகளின் தொகை 20 ஆகும்.

1819ம் ஆண்டு தொடக்கம் சில ஆண்டுகள் வரை தமிழ்ப் பாடசாலை களின் தொகை வளர்ந்தது. இவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு பெரிது. இக்காலகட்டத்தில் தான் யூனியன் கல்லூரி தொடங்கியது முதன் முதல் ஆங்கிலம் , தமிழ்,ஆகிய இரு பாடங்கள் இங்கு கற்பிக்கப்பட்டன. ஆசிரியர் பயிற்சியும் இங்கு நடைபெற்றது. பின் திருI.P துரைரத்தினம் காலத்தில்தான் "Union Collage" ஆக தரமுயர்த்தப்பட்டது.

தெல்லிப்பளை வட்டாரத்தில் 7 பாடசாலைகள் தொடங்கப்பட்டன மிஷனரி மார் கிராமங்களிலேயே தமிழ்ப் பாடசாலை களை நிறுவி அப்பகுதிகளில் ஒரு புதிய திருப்பத்தினை ஏற்படுத்தினார்கள் மாணவர்களின் சிந்தனையை தூண்டும் விதத்தில் இப்படசாலைகளில் போதனைகள் நடைபெற்றன.

1816 இல் டானியல் பூவர் தெல்லிப் பளையில் ஒரு ஆங்கில இலவச பாட சாலையைத் தொடங்கினார். பல பெண் பிள்ளைகள் தெல்லிப்பளையிலுள்ள பாடசாலையில் வந்து கல்வி கற்றனர். 9 பெண் பிள்ளைகள் மிஷன் வளவில் தங்கி கல்வி கற்றனர் இவர்களுக்கு உணவு வசதிகள் செய்யப்பட்டன.

**மருத்துவப்பணி :**

19ம் நூற்றாண்டின் முதற் பகுதியில், யாழ்ப்பாணத்தில் மருத்துவ வசதிகள் அதிகம் இல்லை "டாக்டர் ஜோன்ஸ்கடர்" 1820 இல் யாழ்ப்பாணம் வந்தார். உலகின் முதலாவது வைத்திய மிஷனரி இதுவாகும். தெல்லிப் பளையில் சிறிய வளவில் மருத்துவப் பணியை தொடங்கி நடாத்திவந்தார் பின் சில காலம் பண்டத்தரிப்பு போய் அங்குள்ள ஆலய வளவில் மருத்துவப் பணி செய்தார்.

அளவெட்டியில் 3 மிஷன் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. இவை நல்ல முறையில் நடைபெற்றன. அளவெட்டியில் வடக்கு, தெற்கு ஆகிய இடங்களிலும் கேல்வத்தை யிலும் நடைபெற்றன. இங்கு ஒரு ஆலயமும் கட்டப்பட்டது.

காங்கேசன்துறையில் 11.06.1928 இல் உவில்லியம் மேதர் நினைவாக அவர் மகன் அல்பிறட் மேதர் ஒரு ஆலயத்தைக் கட்டினார். இதன்பின் முறைப்படி பிரதிஸ்டை செய்யப்பட்டது. மயிலிட்டியிலும் 2 பாடசாலைகள் நடை பெற்றன. காங்கேசன் துறை வட்டாரத்திலே இந்திய வம்சாவளி யினரின் தேவையை நிவர்த்தி செய்ய ஒரு சிறிய செப ஆலயம் கட்டப்பட்டது.

,வ்வாறாக இவ்வட்டாரத்தில் அமெரிக்க மி'ன், மி'னரிமார், சமய கல்விப்பணியை திறமையாகச் செய்து தமிழ் மக்களுக்கு நற்பணியாற்றினார்கள்

குறிப்பு: மெக்ஸ் ஐயருடைய கூற்றுப்படி "தாம் முதன் முதல் எழுதவாசிக்கத் தெரிந்த பெண்களில் ஒருவரை அளவெட்டியிலும் மற்றவரை உடுப்பிட்டியிலும் கண்டதாகக் கூறியுள்ளார்"

அமெரிக்கன் இலங்கை மிசன் 1947ம் வருடம் தென்னிந்திய திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்து "தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம்" என்று அழைக்கப்படுகின்றது.

இதன் முதல் பேராயர் பேரருள்மிகு சபாபதி குலேந்திரன். 2ம் பேராயர் பேரருள் மிகு கலாநிதி டி .ஜே . அம்பலவாணர். 3ம் பேராயர் பேரருள்மிகு கலாநிதி எஸ். ஜெபநேசன் (தற்போதைய பேராயர்)

அரசாங்கம் பாடசாலைகளை சுவீகரித்த பொழுது வலி வடக்கில் அனைத்து மிசன் பாடசாலைகளும் சுவீகரிக்கப்பட்டன. அதனால் கல்விப்பணியில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஆதீனத்தால் நடத்தப்படும் 78 பகல் வேலைப் பாலர் பராமரிப்பு நிலையங்களில் 3 நிலையங்கள் வலி வடக்கு பாலர்களுக்காக நடைபெறுகின்றன.

மலருக்கு உதவியவர் *செ. றோ. யேசுபாலன்*
கிராம உத்தியோகத்தர்

## வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட விழாக்கள்




தையல் பயிற்சியில் பங்குபற்றிய மாணவர்கள்



தையல் கண்காட்சியில் ஒரு பகுதி




விளையாட்டுப் போட்டியில் அணிநடையின் பின் கொடியேற்றம்



விளையாட்டுப் போட்டியில் விளையாட்டுத்துறை அதிகாரி உரையாற்றுகிறார்



மகளிர் தின விழா பிரதம விருந்தினர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு பிரதேச செயலாளர் மாலை அணிவிக்கிறார்



மகளிர் தினத்தில் கோலப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள்



படப்பிடிப்பின் போது தலைரிய பிரதேச செயலக அலுவலர்கள்

# கடந்த இரு தசாப்தங்களில் வலிகாமம் வடக்கு எதிர்நோக்கிய கல்விச் சவால்களும் ஈட்டிய சாதனைகளும்

**திரு. வி. இராசையா**

வலயக் கல்விப்பணிப்பாளர்.

வலிகாமம்.

### ஆதி வரலாறு:

மிக ஆதி நாளில் உலகத்தின் மனித வர்க்கங்களுக்கிடையே கல்விக்கென்று தனிப்பட்ட நிறுவனங்கள் எவையும் இருக்க வில்லை. பாடசாலை என்ற அமைப்பும், ஆசிரியர் என்ற பதவியும் மிகப் பிற்காலத்தில் தோன்றிய விடயங்களேயாகும். ஆயினும் ஆதிச் சமூகங்களில் வளர்ந்து வரும் ஒரு பிள்ளை தனது இயல்பான வளர்ச்சியின் ஒரு கூறாக, வாழ்வுக்குத் தேவையான விடயங்களைப் படித்துக்கொள்ள வாய்ப்பு இருந்தது. வேட்டையாடுவதும் சமைப்பதும் வாழ்வுக்கு மிக அவசியமாக இருந்த காலத்தில், அவைமட்டுமே வாழ்வுக்குப் போதியதாகவும் இருந்த காரணத்தினால் அவற்றைச் செய்யும் திறமை பெற்றிருந்த மனிதர்கள், தமது குழந்தைகளுக் கும் அவற்றைச் சொல்லிக் கொடுத்தனர். அப்போது கல்வி என்பது ஒரு சமூகத்தின் கலாசாரம், பண்பாடு, விழுமியம் போன்ற விடயங்களை அடுத்த சந்ததிக்குக் ஜகையளிக்கும் விடயமாகவே இருந்தது. இன்றுங்கூட எழுத வாசிக்க அறியாது வாழும் சமூகங்களில் இத்தகைய நிலையே காணப்படுகின்றது.

அராபியா, சீனா, வடக்கு ஆபிரிக்கா, கிரேக்கம் போன்ற இடங்களில் தான் ஆசிரியர் என்ற வர்க்கம் முதலில் காணப்பட்டது. என்று ஒரு கருத்து உள்ளது. அச்சமூகங்களில் செல்வந்தர்களாய் இருந்தவர்களின் பிள்ளைகள் தமது ஓய்வுநேரத்தில் மாணவர்களாகி இவ்வாசிரியர்களிடம் கல்வி பயின்றனர். ஆதிச் சீனாவில் கொன்பியூசியஸ் ஒரு சில மாணவர் களுக்குக் கற்பித்ததும் கிரேக்கத்தில் அரிஸ்டோட்டல் பிளேட்டோ, சோத்திரடீஸ் போன்றவர்கள் மேற் தட்டுவர்க்க ஆண்களுக்குக் கற்பித்ததும் கல்வியின் மிக ஆரம்பகால நிகழ்வுகளாகும்.

அறிவு, விழுமியங்கள், திறன்கள் ஆகியவற்றை ஒழுங்கான முறையிற் பெறுதல் என்ற அர்த்தத்தில் தொடங்கிய கல்வியின் வரலாறு ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளைக் கொண்டது.

#### வலிகாமம் வடக்கில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலக் கல்வி

வலிகாமம் வடக்கில் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் கோயில்களே பிரதான கல்வியூட்டும் நிலையங்களாக இருந்தன. கோயில்களில் புராணபடனம், கதை கூறல், பிரசங்கம் முதலிய பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மக்கள் கோயிலுக்குக் செல்லும் போதெல்லாம் கேள்வி மூலம் தமது அறிவை வளம்படுத்திக் கொண்டனர். புராண இதிகாசக் கதைகளின் மூலம் சமயமும், ஒழுக்கவியலும் போதிக்கப்பட்டன. மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலும், கீரிமலை நகுலேச்சரமும் இப் பிரதேசத்தின் முக்கிய கல்வி வழங்கும் ஆலயங்களாக அமைந்தன. இக் கோயில்களிலும் ஏனைய கோயில்களிலும் நிலைத்திருந்த புராணபடன மரபு, மனன வழிக்கல்வியிற் பெருந்தாக்கம் செலுத்தியது.

போர்த்துக்கேயர், தென்னிலங்கையில் 1505ம் ஆண்டில் காலடி வைத்தார்கள். எனினும் 1621ம் ஆண்டின் பின்னரே அவர்களின் அதிகாரம் யாழ்ப்பாணத்தைக் கட்டுப்படுத்தியது. பாடசாலை அமைப்புடன் ஒழுங்குபடுத்தப்பட்ட கல்விமுறைமை முதன்முதலாகப் போர்த்துக் கேயர் காலத்திலேயே நம் நாட்டில் புகுத்தப் பட்டது. அரசின் அனுசரணையுடன் பிரான்சிசுக் கன், இயேசு, தொமினிக்கன், அகுஸ்தீன் சபையினர் பாடசாலைகளை அமைத்துக்கல்வி புகட்டினர். இக்கத்தோலிக்கச் சமயக்குழுக்களின் முதன்மை நோக்கம் வேறாகஇருந்தபோதிலும் கல்வி வளர்ச்சியில் அவர்களின் பங்கு முக்கியமானது என்பதை மறுக்கமுடியாது. வலிகாமம் வடக்கிலும் இக் காலத்தில் கோயிற் பற்றுப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன.

மரபுவழிப்பண்பாட்டு வளர்ச்சியை முடங்கச் செய்தமை, தேசிய உணர்வை மழுங்கச் செய்தமை, அடிமைச் சிந்தனையை வளர்த்தமை ஆகியவற்றுக்கு கல்வி உடன்பாடாக அமைந்தமையால் இக் காலப்பகுதி வலிகாமம் வடக்கின் கல்வி வரலாற்றில் இருண்ட காலப்பகுதியாகும் .

ஆயினும் இக்காலப் பகுதியிலும் தொடர்ந்து குரு குலங்கள் இருந்தமை பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன.

ஒல்லாந்தர் காலத்தில் வலிகாமம் வடக்கில் கல்விமேலும் முன்னேறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆரம்பக் கல்வி அளித்த கோயிற்பற்றுப் பாடசாலைகளின் தொகை அதிகரிக்கப்பட்டு, அரசு முதன் முறையாக ஆரம்பக்கல்வி அளிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது. ஆறுவயது நிரம்பிய சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வி கட்டாயப்படுத்தப்பட்டது மாத்திரமல்லாமல் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பத்தவறும் பெற்றோருக்கு அபராதம் விதிக்கும்முறையும் கொண்டுவரப்பட்டது. தெல்லிப்பழையில். 1658 ஆம் ஆண்டு தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டு வண. பிலிப் பால்டேயுஸ் என்பவரால் சீர்திருத்திய கிறிஸ்தவ மதம் அறிமுகம் செய்து வைக்கப் பட்டமை குறித்த குறிப்புகள் உள்ளன. அப்போது அங்கு ஒரு பாடசாலையும் தொடங்கப்பட்டது.

எழுத்து, வாசிப்பு, கணிதம், சமயம், என்பன ஆரம்பக்கல்விப் பாடவிதானத்தில் இடம் பெற்றிருந்தன. இக்காலத்தில் பாடநூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டதனால், கல்வியில் விருத்தியும் அநேகமானோருக்குக் கல்விகிடைக் கும் வாய்ப்பும் ஏற்பட்டன.

திறமைமிக்க உயர் வகுப்பு மாணவர்களைக் கொண்டு ஆரம்ப வகுப்புகளுக்குக் கற்பிக்கும் ''சட்டாம்பிள்ளை'' முறையும் இக்காலத்தில் கையாளப்பட்டது.

ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். ஆயினும், அப்பயிற்சி கல்வி தொடர்பான பயிற்சி என்பதைவிட, கிறிஸ்தவ சமயப் போதனை தொடர்பான பயிற்சி என்றே கொள்ள வேண்டும். ஆசிரிய வேதனம் அரசினால் வழங்கப்பட்டது. கல்வி நிர்வாகமுறை மேற்பார்வை முறை என்பன தோன்றியதோடு, மாணவர் வரவு, கல்வித்தரம் என்பனவும் கவனிக் கப்பட்டன.

திண்ணைகளிலும், மரநிழல்களிலும் நடை பெற்றுவந்த ஆரம்பப்பாடசாலைகள், உறுதியான கட்டிடங்களில் நடைபெறத் தொடங்கின. மயிலிட்டிக் கலைமகள் மகாவித்தியாலயத்தைச் சார்ந்து மிக அண்மைக் காலம் வரை காணப்பட்ட (முன்னர் மயிலிட்டி அ. மி. த. க. பாடசாலை என அழைக்கப்பட்ட) இடிந்த கட்டிடங்கள் சில கதைகளைக் கூறும் இக்கட்டிடங்களில் யன்னல்கள், மேற்கு நோக்கிய வாயில் என்பன போர்த்துக்கேயக் கட்டடக் கலையையும், வடக்கு நோக்கிய வாயில், அதன் அமைப்புமுறை என்பன ஒல்லாந்தரின் கட்டடக்கலையையும் ஐஉணர்த்துகின்றன. இந்த நிலைகொண்டு போர்த்துக்கேயரின் கட்டிட மொன்றினை ஒல்லாந்தர் மாற்றியமைத் துள்ளனர். என எண்ணத்தோன்றுவதாக காங்கேயன் கல்வி மலரில் காணப்படும் மேற்படி பாடசாலையின் வரலாறு பேசுகின்றது. 1641 இல் இப்பாடசாலையில் 154 மாணவர்களும், 1644 இல் 190 மாணவர்களும் கல்வி பயின்றனர். என்று போல் டேயசின் குறிப்புகள் கூறுகின்றன.

ஒல்லாந்தர் காலக்கல்வியின் பிரதான நோக்கங்களாக, நாட்டுமக்களைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுதல், தமது ஆட்சியையும் செல்வாக்கையும் நிலைபெறச் செய்தல் என்பன அமைந்திருந்தாவும் இக் காலப்பகுதியில் ஆரம்பக் கல்வி நிலையில் ஒரு அபிவிருத்தி ஏற்பட்டது என்பதை மறுக்க இயலாது.

வலிகாமம் வடக்கில் இப்போது காணப்படு கின்ற அனைத்துப் பாடசாலைகளும் ஆங்கிலே யர் காலத்திலேயே தோற்றம் பெற்றன என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம். இணைக்கப் பட்டுள்ள அட்டவணை அப்பாடசாலைகள் நிறுவப்பட்ட ஆண்டுகளைக் காட்டிநிற்கிறது.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய வுடன் தற்காலிகமாக ஆரம்பக்கல்வி வளர்ச்சி நலிவுற்றது உண்மையே. ஆள்பதியாகப் பிரடரிக் நோத் இருந்த காலத்தில் (1798 – 1805) ஆரம்பக்கல்விப் பாடசாலைகளைச் சீரமைக்கும் முயற்சிகள் ஓரளவு எடுக்கப்பட்டன. ஆள்பதி பிறவுண்றிக் (1812 – 1820) கிறீஸ்தவ சமய வளர்ச்சிக்குச் சாதகமான கல்வி முயற்சிகளை மேற்கொண்டார். கைத்தொழிற் புரட்சி, பிரான்சியப் புரட்சி ஆகியவற்றின் விளைவாக இங்கிலாந்தில் ஒரு "கருத்துப் புரட்சி" ஏற்பட்டது. பொதுமக்கள் கல்வி, கல்விக்கு அரச உதவி, அறப்பள்ளிகளின் தோற்றம் என்பன பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கையிலும் பிரதிபலித்தன. கிறிஸ்தவ சமயக்குழுக்கள் பல இலங்கைக்குவர ஆள்பதி பிறவுண்றிக் சாதகமான சூழ் நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தமையால், முன்னோடிகளின் முயற்சிகளை அறிந்திருந்த அமெரிக்க மிசன் சங்கத்தைச் சேர்ந்த வண. டானியல் பூவர், வண் எட்வேட் வாறன் ஆகியோர் 1816. 10. 15 இல் தமது மதப் பணிகளுக்குரிய நடுநிலையமாகத் தெல்லிப்பளையைத் தேர்ந்தெடுத்து வந்தடைந் தனர். இந்த நாள் தெல்லிப்பழையின் கல்வி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்த நாளே

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் நிறுவியவர் நினைவு நாளாகவும் கொள்ளப்படுகிறது. 1816 முதல் யூனியன் வளாகத்தில் அமெரிக்க மிசனரிகளின் ஆதரவில் பல்வேறு கல்வி நிலையங்கள் இயங்கியுள்ளன என்பதற்கான சான்றுகள் உள்ளன. எனவே வலிகாமம் வடக்கின் மிகப் பழைய கல்வி நிறுவனம் யூனியன் கல்லூரியே ஆகும்.

முன்னர் குறிப்பிட்டவாறு 1816 இல் தெல்லிப்பழைக்கு வந்த வண கலாநிதி டானியல் பூவர் தெல்லிப்பழையில் பொது இலவசப் பாடசாலையை நிறுவினார். இத் தமிழ்மொழி மூலப் பாடசாலையில் தமிழ் மொழி, தமிழ் இல்க்கியம், கணிதம், புவியியல், திருமறை ஆகியன கற்பிக்கப்பட்டன. சிறிது காலத்தின் பின் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. இதன் மூலம் இதுவே அமெரிக்க மிசனரிகளின் முதல் ஆங்கிலப் பாடசாலையுமானது.

இக்காலப் பகுதியில் ஆங்கிலக் கல்வி பெற்றோர் அரச உத்தியோகங்கள் பெற்றுச் சமூக நிலையிலும் செல்வாக்கிலும் உயர்வு கொண்டனர்.

**சுதந்திரத்தின் பின் யுத்தம் தொடங்கும் வரையான காலம்:~**

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், திரு.சீ. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா அவர்களின் கல்விச் சீரமைப்புக் கொள்கை ஓரளவிற்கேனும் நடைமுறைப் படுத்தப்பட்டது. கல்வி கற்க முன் வருவோர் தொகையில் அதிகரிப்பு, கல்வி வசதிகள் விரிவடைந்தமை ஆகிய நிலைமைகளினால் வலிகாமம் வடக்கிலும் கல்வித்தரம் வேகமாக வளர்ந்து வந்தது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய இரு நிறுவனங்களையும் தேடி நாட்டின் பல பாகங்களிலுமிருந்து மாணவர்கள் படை யெடுக்கத் தொடங்கினர். 1960 – 1961 இல் நாடு முழுவதிலும் ஒரே சீரான கல்வியை அளிக்கும் நோக்கத் தோடும் கல்வி வாய்ப்புக்களைச் சனநாயக ரீதியில் சமனாக்கும் இலக்கோடும் உதவி நன்கொடை பெற்று வந்த பாடசாலைகள் அரசினால் கையேற்கப்பட்டன. இக்காலத்தில், வருடந்தோறும் பல்கலைக்கழகத்திற்கு 30 – 40 மாணவர்களை அனுப்பும் உன்னத கல்லூரியாக மகாஜனக் கல்லூரி சிறப்பெய்தி இருந்தது. அக் கல்லூரியின் அதிபர் திரு தெ.து. ஜெயரத்தினம் அவர்களும் கல்லூரியின் நிறுவுநர் தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்களும் தெல்லிப்பழையின் கல்வி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் முக்கிய நபர்கள் ஆயினர். அக்காலத்தில் யூனியன் கல்லூரி அதிபராய் இருந்த திரு I.P துரைரத்தினம் அவர்களும் மிகக் கணிப்புப் பெற்ற அதிபராய் இருந்தார். 1963 இல் மகாஜனக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் சென்ற முப்பத்தெட்டு மாணவர்களில் பத்து மாணவர்கள் மருத்துவத் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததும், 1970 இல் அகில இலங்கை உதைபந்தாட்டப் போட்டியில் சேர். யோன் ராபாற் விருதைக் கல்லூரி பெற்றதும், 1970களின் ஆரம்பத்தில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் இக்கல்லூரியின் நாடகங்கள் தேசிய நிலையில் முதலிடங்களைத் தட்டிக் கொண்டதும் அப்போது வலிகாமம் வடக்குப் பிரதேசம் எட்டியிருந்த உச்ச நிலையின் சான்றுகளாகும்.

1970ம் ஆண்டில் கல்வியில் குறைபாடு காரணமாக சமூக, அரசியல், பொருளாதாரம் பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. இளைஞர்கள் மத்தியில் வேலையின்மையும், அதிருப்தியும் மனஉடைவுகளும் தோன்றின. இதனால் 1972 இல் கல்வி மாற்றங்கள் முதன் முறையாக முழுமையான அளவில் கொண்டு வரப்பட்டன.

1985 இல் வெளிவந்த காங்கேசன் கல்வி மலர் வலிகாமம் வடக்குப் பாடசாலைகளின் அப்போதைய நிலையை மிகத் தெளிவாகக் எடுத்துக் காட்டும்

## யுத்தமும் இடம் பெயர்வுகளும்

1983 இல் இடம் பெற்ற பெரும் இனக்கலவரத்தின் பின் யுத்தச் சூழல் ஒன்று யாழ்ப்பாணத்தில் தோற்றங்கொள்ளத் தொடங்கியது. 1986 முதல் யுத்தம் பெரிய அளவில் வெடித்த பல வேறு சந்தர்ப் பங்களிலும், வலிகாமம் வடக்கு அதன் தாக்கத் திற்கு ஈடுகொடுக்கமுடியாது திணறியது. வலிகாமம் வடக்குப் பாடசாலைகள் அடிக்கடி இடம்பெயர்வைச் சந்தித்தன. இந்த இடப் பெயர்வுகள் சீரான கல்வி வழங்கலுக்கு எதிரான மிகப் பெரும் சவால்களாக அமைந்தன.

1989 ஏப்ரல் வரை யாழ் மாவட்டத்தின் சகல சல்விச் யெற்பாடுகளும் ஒரு பிராந்தியக் கல்வித் திணைக்களத்தின் கீழ் நடைபெற்றன. அதன்பின் 01.05.1989 – 14.10.1993 வரை யாழ்ப்பாணப் பிராந்தியம் ஆறு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுக் (யாழ்ப்பாணம்,மருதனார் மடம் பண்டத்தரிப்பு, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம்) கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டன. இக் கோட்டங்களுக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் பொறுப்பாக இருந்தார். கோட்டங்களில் கொத்தணி அமைப்பு முறைகள் செயற்பட்டன. 15.10.1993 – 30.09.1998 வரை யாழ்ப்பாணக் கல்விப் பிராந்தியம் யாழ் வலயம் I, யாழ் வலயம் II,

எனப் பிரிகப்பட்டு இயங்கிவந்தது. யாழ் வலயம் I ஆறு கோட்டங்களையும், யாழ் வலயம் II எட்டுக்கோட்டங்களையும் உள்ளடக்கி யிருந்தன.ஐ இவ் விருவலயங்களுக்கும் தனித் தனியான வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பொறுப்பாக இருந்தார்கள். பண்டத்தரிப்புக் கோட்டத்தின் கீழ் இயங்கி வந்த வலிகாமம் வடக்குப் பாடசாலைகள், பின்னர் யாழ் வலயம் 02 இன் கீழ் தெல்லிப்பழைக் கோட்டத்தில் இணைக்கப் பட்டன.

01.10.1998 இல் இருந்து புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக யாழ் மாவட்டம் 05 வலயக் கல்வி அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டு (யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம்) 05 வலயங்களுக்கும் தனித்தனியான வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுக் கற்றல் கறிப்பித்தல் செயற் பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அமைப்பு ரீதியான இந்த மாற்றங்களுக்கேற்ப வலி வடக்கிலுள்ள தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 45 பாடசாலைகளும் வலிகாம வலயத்தினுள் அடங்கும் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளாகச் செயற்பட்டு வருகின்றன.

முதலிற் பாராளுமன்றத் தொகுதிகளே கல்வி வட்டாரங்கள் ஆகவும், தொடர்ந்து கல்விக் கோட்டங்களாகவும் விளங்கின. 15.10.1993 லிருந்து பிரதேச செயலர் பிரிவுகளே கல்விக் கோட்டங்கள் ஆயின அதன்படி காங்கேசன்துறைத் தொகுதியிலிருந்து இளவாலை, மாதகல் பாடசாலைகளான,

இளவாலை சென் ெஹன்றீஸ் கல்லூரி
இளவாலை கன்னியார் மடம் ம.வி
இளவாலை றோ.க. ஆண்கள் பாடசாலை
மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம்
மாரீசன் கூடல் றோ.க.பாடசாலை
சிறுவிளான் கனகசபை வித்தியாலாயம்
பெரியவிளான் றோ.க. பாடசாலை
மாதகல் சென் ஜோசப் ம.வி
மாதகல் விக்னேஸ்வர வித்தியலாயம்
மாதகல் சென் தோமஸ் றோ.க.வித்தியாலயம்

என்பன சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டன.

அதேவேளை கோப்பாய் கோட்டத்திலிருந்த வயாவிளான் பாடசாலைகளான,

வயாவிளான் ம.ம.வித்தியாலயம்
வயாவிளான் சிறீவேலுப்பிள்ளை வித்தியாலயம்
வயாவிளான் றோ. க.த.க.பாடசாலை
ஒட்டகப்புலம் றோ.க.த. பாடசாலை
குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை

என்பன இருந்த பிரதேசம் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குள் வந்ததால், இப்பாடசாலைகள் தெல்லிப்பழைக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டன.

ஏனைய யாழ் மாவட்டப் பாடசாலைகளைப் போலே, வலிகாமம் வடக்குப் பாடசாலைகள் அனைத்தும் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியங் களைக் கொண்டவை. ஒவ்வொரு பாடசாலையும் தனித்துவமான சிறப்பம்சங்களுடன் நல்ல முறையில் இயங்கிவந்தபோதுதான் இடப்பெயர்வுகள் என்ற பேரிடியைச் சந்தித்தன. யாழ் மாவட்டத்தில் நடந்த பலவேறு இராணுவ நடவடிக்கைகளாலும் பாரிய இழப்புக்களை இப்பிரதேசப் பாடசாலைகள் பெற்றன.இன்றுங் கூட இப்பிரதேசம் ஸ்திரமற்ற நிலையில் இருப்பதும், பல பாடசாலைகள் சொந்த இடத்திற்கு ஜமீள முடியாதிருப்பதும் குறிப்பிடத் தக்கன.

இப்பாடசாலைகள் இப்போது இயங்கும் இடங்கள் அட்டவனை I இல் காட்டப்பட்டுள்ளன.

## இடம்பெயர்வு 1

1986இல் முதன் முதலாக ஏற்பட்ட ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் நடவடிக்கை காரணமாகப் பல பாடசாலைகள் இடப் பெயர்வுக்கு உள்ளாகின. இவற்றுள் யா/ஜவலித்தூண்டல் றோ.க. பா. , யா/ஒட்டகப்புலம் அ.த.க.பா, யா/காங்கேயன் துறை சிங்கள கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவை இடம்பெயர்ந்த பின் மாணவர் இன்மையால் அதே ஆண்டு தற்காலிகமாக மூடப்பட்டு, இன்று வரை மூடப்பட்ட பாடசாலைகளாகவே கணிக்கப்பட்டு வருகின்றன.

## இடப்பெயர்வு 2

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படையின் நடவடிக்கைகளின் போது சில பாடசாலைகள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வேறு இடங்களில் இயங்கினவாயினும் விரைவிலேயே அவை தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டன.

1986, 1987 ஆண்டுகளில் இடம்பெயர்வுக்குள்ளாகி இன்றுவரை இயங்கும் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளின் சுருக்க இடப்பெயர்வு வரலாறு பின்வருமாறு,

**யா / வசாவிளான் ம.ம.வித்தியாலயம்**

15.06.1986 இல் இடப்பெயர்வுக்கு உள்ளாகியது

| | |
|---|---|
| 15.06.1986 – 21.04.1990 | வரை யா/ புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை |
| 22.04.1990 - 12.06. 1990 | வரை மீண்டும் சொந்த இடத்தில் |
| 13.06.1990 – 01. 09.1993 | வரை யா / உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| 02.09.1993 – 15.10.1995 | வரை உரும்பிராய் தனியார் காணியில் தற்காலிக கொட்டகை அமைத்து |
| 16.10.1995 – 19 .04.1996 | வரை யா/ அல்லாரை அ.த.க.பாடசாலை |
| 30.04.1996 | இன்று வரை மீண்டும் உரும்பிராய் தனியார் காணியில் |

**யா / குரும்பசிட்டி பொன்பரமானந்தா ம. வித்தியாலயம்**

1987 இல் இடப் பெயர்வுக்கு உள்ளாகியது

| | |
|---|---|
| 1987 இல் | யா/ ஏழாலை ம. வித்தியாலயம் |
| 1988 இல் | யா / குப்பிளான் விக்னேஸ்வரா ம. வித்தியாலயம் |
| 1989 இல் | மீண்டும் சொந்தக் கட்டடத்தில் |
| 16. 06. 1990 – 19. 04 .1991 வரை | யா / மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் |
| 20.05.1991 – 06.09.1992 வரை | யா/ மல்லாகம் விசாலட்சி ( 1- 5)<br>யா / மயிலணி சைவ ம.வித்தியாலயம் (6 – 11) |
| 07.09.1992 – 30.10.1995 வரை | யா / யூனியன் கல்லூரியில் இணைந்து<br>(யா / இராமநாதன் கல்லூரி வளவில்) |
| 31.10.1995 – 05.05.1996 வரை | யா./ மீசாலை வீரசிங்கம் ம. வித்தியாலயம் |
| 06.-05.1996 இன்றுவரை | யா / யூனியன் கல்லூரியில் இணைந்து<br>(யா/ இராமநாதன் கல்லூரி வளவில்) |

**யா / மயிலிட்டி வடக்கு கலைமகள் ம. வித்தியாலயம் (அன்று 1016 மாணவர்கள்)**

| | |
|---|---|
| 25.05.1987 – 25. 08. 1988 | வரை யா / சீனன்கலட்டி ஞானோதயவித்தியாலயம் |
| 26.08.1988 - 17.06.1990 | வரை மீண்டும் சொந்த இடத்தில். |
| 18.06.1990 – 10.09.1990 | வரை யா / யூனியன் கல்லூரி (தெல்லிப்பழை) |
| 11.09.1990 – 02.12.1990 | வரை யா/ மல்லாகம் ம. வித்தியாலயம் |
| 03.12.1990 – 27.01.1994 | வரை யா / சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயம் |
| 28.01.1994 – 19.06.1994 | வரை யா/ மல்லாகம்கனிஷ்ட வித்தியாலயம் |
| 30.06.1994 – 23.07.1995 | வரை தனியார் வீடு (மல்லாகம்) |
| 24.07.1995 – 30.08.1995 | வரை யா/ யூனியன் கல்லூரி (யா/ இராமநாதன் கல்லூரி வளாகம்) |
| 31.08.1995 – 29.10.1995 | வரை காந்தரூபன் சனசமூக நிலையம் |
| 30.10.1995 – 28.02.1996 | வரை யா / மீசாலை விக்னேஸ்வா வித்தியாலயம் |
| 01.03.1996 – 05.05.1996 | வரை யா/ கொடிகாமம் அ.த.க. பாடசாலை |
| 06.05.1996 – 04.06.1996 | வரை யா/ யூனியன் கல்லூரி (யா/ இராமநாதன் கல்லூரி வளவு) |

05.06.1996 - இன்றுவரை தனியார் வீடு (சபாபதிப்பிள்ளை வீதி

**யா / வர்த்தலைவிளான் அ.மி.த.க (அன்று 115 மாணவர்)**

| | |
|---|---|
| 01.08.1987 – 14.06.1990 | வரை யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி |
| 05.06.1990 – 30.08.1992 | வரை யா/ அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலை |
| 31.08.1992 – 22.01.1995 | வரை யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் |
| 23.01.1995 – 05.09.1995 | வரை நீதிமன்ற கட்டிடம் (மல்லாகம்)<br>யா/ தெல். சைவப்பிரகாச வித்தியாலயம்) |
| 06.05.1995 – 30.10.1995 | வரை யா/ உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம் |
| 31.10.1995 – 05.05.1996 | வரை யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலம் |
| 06.09.1996 – 27.05.1997 | வரை யா/ யூனியன் கல்லூரி (யா / இராமநாதன் கல்லூரி வளவு) |
| 28.05.1996 – 06.07.1997 | வரை யா/தந்தை செல்வா தொ.நி.ப. (யா/இராமநாதன் கல்லூரி வளவு) |
| 07.07.1997 – 31.12.1999 | வரை யா / இராமநாதன் கல்லூரி (அதிபர் விடுதி) |

01.01.2000 இன்று வரை யா/ தந்தை செல்வா தொ.நி.ப (யா/ இராமநாதன் கல்லூரி வளவு)

**இடம் பெயர்வு –3**

1990 இல் மீண்டும் ஏற்பட்ட மிகப் பெரிய ஸ்ரீ லங்கா இராணுவ நடவடிக்கை காரணமாகத் திரும்பவும் இப்பிரதேசப் பாடசாலைகள் பல இடப்பெயரவேண்டி ஏற்பட்டது. இடம்பெயர்வுக்கு உட்பட்டும் படிப்படியாக மாணவர் தொகை குறைந்தமையால், அப்போதிருந்த யாழ் II வலயக் கல்விப்பணிப்பாளரின் 20.12.93ம் திகதி வகப 2/5 இலக்கக் கடிதத்துக்கமைய 1.1.94 முதல் சில பாடசாலைகள் மூடப்பட்டு அவற்றின் ஆவணங்களும் ஏனைய சொத்துக்களும் தெல்லிப்பழைக் கோட்டக் கல்வி அலுவலகத் தில் ஒப்படைக்கப்பட்டன. அப் பாடசாலைகள் பின்வருமாறு.

1. யா/மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க பாடசாலை
2. யா/மாவிட்டபுரம் தெற்கு அ.மி.த.க பாடசாலை
3. யா/கொல்லங்கலட்டி சைவ.த.க. பாடசாலை
4. யா/ காங்கேயன்துறை றோ.க.த.பாடசாலை
5. யா/தையிட்டி கணேச வித்தியாலயம்
6. யா/பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம்
7. யா/மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தி யாலயம்
8. தையிட்டி சிவகுருநாத வித்தியாலயம்
9. யா/பலாலி வடக்கு அ.த.கபாடசாலை
10. யா/ஊறணி கனிஷ்ட வித்தியாலயம்
11. யா/பலாலி அ.த.க.பாடசாலை

18.06.1990இல் இடம்பெயரத் தொடங்கிய யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை சிறிது காலம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. மீண்டும் 01.01.1992 இலிருந்து யா/வயாவிளான் ம.ம வித்தியாலயத் துடன் இணைந்து இயங்கியது. திருப்பவும் 01.01.1994 இல் இருந்து உரும்பிராயில் உள்ள தனியார் கட்டிட மொன்றில் இயங்கத் தொடங்கியது. 16.10.1995 முதல் 19.04.1996 வரை தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து யா/ அல்லாரை அ. த. க. பாடசாலையில் இயங்கியது. 20.04.1996 – 31.12.1999 வரை மீண்டும் உரும்பிராயில் அதே தனியார் கட்டிடத்தில் இயங்கியது எனினும் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரின் 8/6/1 இலக்க முடைய 12.11.1999ம் திகதியின் கடிதப்படி 01.01.2000 இல் இருந்து இப் பாடசாலை யா/ வயாவிளான் ம.ம.வித்தியாலயத்துடன் இணைக்கப் பட்டது. 1986இல் இடம்பெயரத் தொடங்கிய யா/ வயாவிளான் றோ.க.த.க. பாடசாலை மாணவர்இன்மையால் 15.06.1980 – 24.08.1987 வரை மூடப்பட்டிருந்தது. மீண்டும் இப்பாடசாலை அதே இடத்திற் செயற்படத் தொடங்கி 18.06.1990 இல் இடம் பெயர்வுக்கு உள்ளாகிப் புத்தூர்ச் சந்தியிலுள்ள யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலையுடன் இணைந்து இயங்கியது. 30.10.1995 இல் தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்து யா/ சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் 18.04.1996 வரை இயங்கியது. மறுபடி 19.04.1996 இல் வலிகாமத்தை வந்தடைந்த போதிலும் சொந்த இடத்திற்குச் செல்ல முடியவில்லை. சிறிது காலம் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியுடன் சேர்ந்து இயங்கியது. எனினும் மாணவர் தொகை கணிசமாகக் குறைந்தகாரணத்தால் 01.10.1997ம் திகதி இப்பாடசாலை மூடப்பட்டு ஆவணங்கள் அனைத்தும்யா/ குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை அதிபரிடம் உரிய முறைப்படி ஒப்படைக்கப்பட்டன.

1990 இல் இடம்பெயர்வுக்கு உள்ளாகி இன்றுவரை இயங்கும் பாடசாலைகளின் சுருக்க வரலாறு பின்வருமாறு.

**யா/ மகாஜனாக்கல்லூரி (அன்று 1850 மாணவர்):-**

| | |
|---|---|
| 01.09.1990 – 05.05.1991 | வரை யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி |
| 06.05.1991 – 20.08.1992 | வரை யா/ சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயம் (1-5) |
| | யா/ அருணோதயா கல்லூரி (1-11) சொந்த இடத்தில் (12 – 13) |
| 21.08.1992 – 01.01.1994 | வரை யா/ இணுவில் மத்திய கல்லூரி (1-11) |
| | நிரு கல்வி நிலையம் (கோண்டாவில்) (12 – 13) |
| 02.01.1994 – 30.10.1995 | வரை தனியார் காணியில் தற்காலிகக் கொட்டகை (மருதனார்மடம்) |
| 31.10.1995 – 19.04.1996 | வரை யா/ மட்டுவில் சந்திரோதயா ம.வி |
| 06.05.1996 – 15.09.1999 | வரை தனியார் காணியில் தற்காலிகக் கொட்டகை (மருதனார் மடம்) |

16.09.1999 இன்று வரை சொந்த இடம்

**யா / யூனியன் கல்லூரி (அன்று 1750 மாணவர்)**

| | |
|---|---|
| 01.12.1990 – 30.10.1995 | வரை யா/ இராமநாதன் கல்லூரி கட்டடம் தற்காலிகக் கொட்டகை |
| 31.10.1995 – 05.05.1996 | வரை யா/ மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம் |

*06.05.1996* இன்று வரை யா/இராமநாதன் கல்லூரி வளவு

யா / நடேஸ்வராக் கல்லூரி (அன்று 1000 மாணவர்)

15.06.1990 – 14.12.1990 வரை பாடசாலை இயங்கவில்லை
15.12.1990 – 30.10.1995 வரை யா/ ஸ்கந்தவரோதயாகல்லூரி (தனிக் கட்டடத்தில்
31.10.1995 – 05.05. 1996 வரை யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்தியாலயம்
06.05.1996 இன்றுவரை யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (தனிக்கட்டிடத்தில்)

யா/ வீமன்காமம் ம.வித்தி (அன்று 729 மாணவர்)

22.10.1990 – 30.08.1992 வரை யா / அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்
31.08.1992 – 29.10.1995 வரை யா / இராமநாதன் கல்லூரி வளாகம்
30.10.1995 – 31.12.1995 வரை யா / கரவெட்டி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்
01.01.1996 – 05.05.1996 வரை யா / சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்
06.05.1996 - இன்றுவரை யா/ இராமநாதன் கல்லூரி வளவு

யா/ குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை

01.10.1990 – 30.10.1995 வரை யா / புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி
31.10.1995 – 21.07.1996 வரை யா / மந்துவில் றோ.க. பாடசாலை
22.07.1996 – 31.12.1996 வரை யா / நவக்கிரி அ.த.க. பாடசாலை
01.01.1997 - இன்றுவரை சொந்த இடம்

**யா / கட்டுவன்புலம் ம. வி**

13.06.1990 – 09.06.1993 வரை
10.06.1993 – 30.10.1995 வரை யா / மல்லாகம் ம. வித்தியாலயம்
31.10.1995 – 05.05 1996 வரை யா / திரு இருதயக் கல்லூரி கரவெட்டி
06.05.1996 – 11.06.1996 வரை யா / யூனியன் கல்லூரி (யா/ இராமநாதன் கல்லூரி)
12.06.1996 – 11.09.1997 வரை யா / மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்
12.09.1997 – 15.09.1998 வரை தனியார் வீடு (மல்லாகம்)
16.09.1998 - இன்று வரை சொந்த இடம்

## யா / கீரிமலை நகுலேஸ்வரா ம.வித்தியாலயம்

25.06.1990 – 14.07.1991 வரை யா/ இளவாலை மெய்கண்டான் ம.வித்தியாலயம்
15.07.1991 – 23.06.1992 வரை யா/ சிறுவிளான் கனகசபை வித்தியாலயம்
24.06.1992 – 06.09.1992 வரை யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
07.09.1992 – 27.03.1994 வரை யா / உடுவில் மான்ஸ் ம. வித்தியாலயம்
28.03.1994 – 30.10.1995 வரை தனியார்வீடு (சீரணி சந்தி) தற்காலிக கொட்டகை
31.10.1995 – 05.05.1996 வரை யா/ வரணி ம.வித்தியாலயம்
06.05.1996 - இன்று வரை தனியார் வீடு (சீரணிச்சந்தி) தற்காலிகக் கொட்டகை

**யா / மயிலிட்டி றோ.க. பாடசாலை**

18.06.1990 – 04. 08.1992 வரை யா / பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. த. க. பாடசாலை.
05.08.1992 – 30.10.1995 வரை யா / மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க. பாடசாலை
யா / உரும்பிராய் றோ. க. வுடன்
31.10.1995 – 05.05.1996 வரை யா / உசன் இராமநாதன் கல்லூரி
06.05.1996 – 02.01.1997 வரை யா / மானிப்பாய் சென் அன்ஸ் றோ. க பாடசாலை
03.01.1997 – 07.03.2000 வரை யா/மானிப்பாய் அந்தோனியார் கோயில் வளவு
08.03.2000 - இன்று வரை தனியார் இல்லம் (மானிப்பாய் மகளிர் கல்லூரி ஒழுங்கை)

**யா / காங்கேசன்துறை ம.வி.**

20.06.1990 – 13.12.1990 வரை யா / சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயம்
14.12.1990 – 06.09.1991 வரை யா / உடுவில் மான்ஸ் ம.வி
07.09.1991 – 29.10.1995 வரை யா / இணுவில் இந்துக் கல்லூரி

30.101995 – 05.05.1996 வரை யா / மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
06.05.1996 – 22.07.1996 வரை யா / இணுவில் இந்துக் கல்லூரி
23.07.1996 – 11.09.1997 வரை சிவகாமி அம்மன் கோவில் மடம், இணுவில்
யா / தெல்லப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையுடன்
12.09.1997 இன்று வரை யா / இராமநாதன் கல்லூரி வளவு

யா / தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி
02.12.1990 – 06.02.1991 வரை யா / தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்
07.02.1991 – 10.03.1993 வரை யா / மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
11.03.1993 – 31.08.1995 வரை யா / மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்
01.09.1995 – 30.10.1995 வரை யா / இராமநாதன் கல்லூரி
31.12.1995 – 05.05.1996 வரை யா/சாவகச்சேரி நுணாவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
06.05.1996 - இன்றுவரை யா/ இராமநாதன் கல்லூரி

யா / நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்
15.06.1990 – 05.12.1990 வரை யா/ மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்
06.12.1990 – 24.05.1992 வரை யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி
யா/ நடேஸ்வராக்கல்லூரியுடன் இணைந்து)
25.05.1992 - 19.03.1995 வரை யா/ சுன்னாகம் றோ.க.பாடசாலை
20.03.1995 – 10.09.1995 வரை தனியார் கட்டடம், கந்தரோடை.
11.09.1995 - 17.09.1995 வரை யா/ இராமநாதன் கல்லூரி
18.09.1995 – 30.10.1995 வரை இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மடம்
31.10.1995 - 06.05.1996 வரை யா / கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்
07.05.1996 – 19.06.1996 வரை இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மடம்
20.06.1996 - இன்றுவரை யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் உடன் இணைந்து.

**இடம்பெயர்வு 04**

1992ல் மீண்டும் ஏற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்வுக்கு உள்ளாகி இன்றுவரை இயங்கி வரும் பாடசாலைகளின் சுருக்க வரலாறு பின்வருமாறு.

யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
11.06.1992 - 20.8.1992 வரை யா / பண்டத்ததரிப்பு மகளிர் கல்லூரி
21.08.1992 - 09.10.1995 வரை யா/ மானிப்பாய் மெமோறியல் ஆ.பாடசாலை
(தற்காலிக கொட்டகை)
30.10.1995 - 05.05.1996 வரை யா / உசன் இராமநாதன் கல்லூரி
06.05.1996 - 11.02.1997 வரை யா / மானி. மெமோறியல் ஆ.பாடசாலை
(தற்காலிக கொட்டகை)
12.02.1997 - இன்றுவரை சொந்த இடம்

யா/ தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்
03.06.1992 - 26.09.1994 வரை மல்லாகம் விசாலாட்சி வித்தியாலம்
27.09.1994 - 09.07.1995 வரை நீதிமன்றக்கட்டிடம், மல்லாகம்
10.07.1995 - 27.07.1995 வரை செயலிழப்பு
28.07.1995 - 03.09.1995 வரை யா / இராமநாதன் கல்லூரி
04.09.1995 - 29.10.1995 வரை தாசன் கல்வி நிலையம், மருதனார் மடம்
30.10.1995 - 28.02.1996 வரை யா / கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி
01.03.1996 - 05.05.1996 வரை யா / வடமராட்சி மகளிர் கல்லூரி
06.05.1996 - 26.05.1996 வரை யா/ யூனியன்கல்லூரி (யா/ இராமநாதன் கல்லூரி வளவு)
27.05.1996 - 22.07.1996 வரை யா / இணுவில் மத்திய கல்லூரி
23.07.1996 - 11.09.1997 வரை சிவகாமி அம்மன் கோவில் மடம், இணுவில்
12.09.1997 - இன்றுவரை சொந்த இடம்

யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை

22.06.1992 - 01.09.1992 வரை யா/ அளவெட்டி சதானந்தா வித்தியலாயம்
02.09.1992 – 25.01.1994 வரை யா/ உடுவில்மான்ஸ் அ.த.க.பாடசாலை
26.01.1994 - 17.10.1995 வரை ரொட்டியாலடி, சுன்னாகம்
18.10.1995 - 29.10.1995 வரை காரைக்கால் கோவிலடி, இணுவில் (தற்காலிக கொட்டகை)
30.10.1996 - 05.05.1996 வரை யா/ புலோலி றோ.க.பாடசாலை
06.05.1995 - 07.01.1996 வரை காரைக்கால் கோவிலடி,இணுவில் (தற்காலிக கொட்டகை)
08.01.1999 - 19.01.2000 வரை தனியார் வீடு. பன்னாலை
20.01.2000 - இன்று வரை சொந்த இடம்

**யா / அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்**

20.08.1992 - 14.03.1995 வரை யா/ இராமநாதன் கல்லூரி
(யா / அருணோதயாக் கல்லூரி)
15.03.1995 - 30.04.1995 வரை சொந்தஇடம்
01.05.1995 - 30.06.1995 வரை யா/ அருணோதயாக் கல்லூரி
01.07.1995 - 29.10.1995 வரை யா / இராமநாதன் கல்லூரி
30.10.1995 - 05.05.1996 வரை யா / கரவெட்டி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்
06.05.1996 - 18.09.1997 வரை யா / இராமநாதன் கல்லூரி
19.09.1997 - இன்றுவரை சொந்த இடம்

**யா / சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயம்**

20.08.1992 - 09.03.1993 வரை யா / உடுவில் மான்ஸ் ம.வி
10.03.1993 - 29.10.1995 வரை யா / உடுவில் அ.மி.த.க
30.10.1995 - 05.05.1996 வரை யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்
06.05.1996 - 09.06.1996 வரை யா / உடுவில் அ.மி.த.க.பா
10.06.1996 - 06.09.1998 வரை யா / மகாஜனாக் கல்லூரி (மருதனார்மடம்)
07.09.1998 - 26.01.2000 வரை யா / அளவெட்டி சதானந்த வித்தியாலயம்
27.01.2000 - இன்றுவரை சொந்த இடம்

**யா / அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை**

20.08.1992 - 29.10.1995 வரை யா / இராமநாதன் கல்லூரி
30.10.1995 - 05.05.1996 வரை யா/ உசன் இராமநாதன் கல்லூரி
06.05.1996 - 02.09.1997 வரை யா/ இராமநாதன் கல்லூரி
03.09.1997 - இன்று வரை சொந்த இடம்

**யா / குளமங்கால் றோ. க. (அன்று 700 மாணவர்)**

1992 - 1994 வரை யா/ மல்லாகம் ம.வி
1994 - 10.07.1995 வரை சொந்தஇடம்
11.07.1995 - 11.09.1995 வரை யா/ வயாவிளான் ம.ம.வி
12.09.1995 - 17.09.1995 வரை யா/ உரும்பிராய் றோ.க.பாடசாலை
18.09.1995 - 25.10.1995 வரை யா / உரும்பிராய் றோ.க.பாடசாலை
(யோகா கல்வி நிலையம், உரும்பிராய்)
26.10.1995 - 30.10.1995 வரை நிரு கல்வி நிலையம், கோண்டாவில்
31.10.1995 - 05.05.1996 வரை யா/ டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி
06.05.1996 - 27.08.1997 வரை யா/ இராமநாதன் கல்லூரி
28.08.1997 - இன்றுவரை சொந்த இடம்

**யா / அளவெட்டி அருணோதயா கல்லூரி :- (அன்று 1680 மாணவர்)**

31.07.1992 இல் இடம்பெயர்வு
31.07.1992 - 30.10.1995 வரை யா/ இராமநாதன் கல்லூரி வளவு

31.07.1995 - 05.05.1996 வரை யா / டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி
06.05.1996 - 19.10.1997 வரை யா / இராமநாதன் கல்லூரி
20.10.1997 இன்றுவரை சொந்த இடம்

இடம் பெயர்வு 05.

1995 இல் இடம்பெயர்வுக்குள்ளாகி இன்றுவரை இயங்கும் பாடசாலைகளின் சுருக்க வரலாறு பின்வருமாறு

**யா / மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் :- (அன்று 497 மாணவர்)**

10.07.1995 - இல் இடம்பெயர்வு
11.07.1995 - 30.10.1995 வரை யா/ உரும்பிராய் இந்து கல்லூரி
31.10.1995 - 05.05..1996 வரை யா/ நுணாவில் சரஸ்வதி வித்தியாலயம்
06.05.1996 - 31.12.1996 வரை யா / இராமநாதன் கல்லூரி
01.01.1997 - இன்றுவரை சொந்த இடம்

**யா / மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்**

04.09.1995 - 30.10.1995 வரை யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
31.10.1995 - 12.05.1996 வரை யா/ வீரசிங்கம் ம.வி.மீசாலை
13.05.1996 - இன்றுவரை சொந்த இடம்

1995 இல் வடமராட்சி, தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்து மீண்டுவந்து இன்றுவரை இயங்கும் பாடசாலைகளின் சுருக்க வரலாறு பின்வருமாறு

**யா / மல்லாகம் மகா வித்தியாலயம் :**

30.10.1995 - 05.05.1996 வரை யா/ புற்றளை ம.வித்தியாலயம்
06.05.1996 - இன்று வரை சொந்தஇடம்

**யா / அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம்**

30.10.1995 - 05.05.1996 வரை யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
06.05.1996 - இன்று வரை சொந்த இடம்

**யா / அளவெட்டி தெற்கு றோ.க.வித்தியாலயம்**

30.10.1995 - 05.05.1996 வரை யா/மிருசுவில் றோ.க.வித்தியாலயம்
06.05.1996 - இன்றுவரை சொந்த இடம்

**யா/ அளவெட்டி தெற்கு அ.மி.த.க**

30.10.1995 - 05.05.1996 வரை யா/ மிருசுவில் றோ.க
06.05.1996 - இன்றுவரை சொந்த இடம்

30.10.1995 இல் இராணுவ நடவடிக்கை காரணமாக வரலாறு காணாத இடம்பெயர்வு நிகழ்ந்தது. வலிகாமத்தில் ஒரு குறித்த தொகுதியினரை விட மிகுதியாக உள்ள அனைத்து மக்களும் தென்மராட்சி, வடமராட்சி நோக்கி இடம்பெயர்ந்தனர். அனைத்துப் பாடசாலைகளும் இவ் இடம்பெயர்வுக்குள்ளாகின. மேலே குறிப்பிட்ட தெல்லிப்பளைக் கோட்டத்தைச் சேர்ந்த 4 பாடசாலைகளும் இவ் இடம்பெயர்வுக்குள்ளாகின. ஆனால் வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்த 4 பாடசாலைகளும் இடம்பெயர்வுக்கு உள்ளாகவில்லை என்பது குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

இன்று தெல்லிப்பளைக் கல்விக் கோட்டத்திலுள்ள 45 பாடசாலைகளில் (பட்டியலில் உள்ளபடி) 29 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றுள் 17 பாடசாலைகள் சொந்த கட்டிடங்களில் இயங்க, ஏனைய 12 பாடசாலைகள் அட்டவணையில் குறிப்பிட்டபடி தற்காலிக ஏற்பாடுகளுடன் பல்வேறு இடங்களில் இயங்குகின்றன. இப்பன்னிரண்டு பாடசாலைகளினதும் சொந்த கட்டிடங்களும், மூடப்பட்ட 16 பாடசாலைகளினதும் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட மக்கள் மீளக்குடியமராத பகுதிகளுக்கு உட்பட்டவையாக உள்ளன.

தெல்லிப்பளைக் கோட்டத்தின் தற்போதைய நிலை இவ் அட்டவணையில் காட்டப்படுகிறது.

# தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளின்

விபரம் (01 – 06 – 2000 இல் உள்ளபடி)

| இல | விபரம் | 1AB | 1C | II | III | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மொத்தப் பாடசாலைகள் | 04 | 04 | 12 | 25 | 45 |
| 02 | நிரந்தரக் கட்டடத்தில் இயங்கும் பாடசாலை | 01 | 03 | 05 | 08 | 17 |
| 03 | இன்னொரு பாடசாலைக் கட்டடத்தில் அல்லது வளவில் இயங்கும் பாடசாலைகள் | 02 | 01 | 02 | 02 | 07 |
| 04 | தனியார்காணியில் இயங்கும் பாடசாலைகள் | 01 | - | 03 | 01 | 05 |
| 05 | மூடிய பாடசாலைகள் | - | - | 02 | 14 | 16 |
| | மொத்தம் | 04 | 04 | 12 | 25 | 45 |

106

இவ்வாறு 1986 ஆம் ஆண்டிலிருந்து இப் பாடசாலைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிப் பாதிப்புக்குள்ளான போதிலும் கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகளில் கணிசமான அளவு பங்களிப்பினைச் செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

ஆ) தரம் 05 புலமைப் பரிசில் பெறுபேறு

| ஆண்டு | தோற்றியோர் தொகை | சித்தியடைந்தோர் தொகை | சித்திவீதம் |
|---|---|---|---|
| 1996 | 320 | 29 | 9.06 |
| 1997 | 307 | 28 | 9.11 |
| 1998 | 315 | 43 | 13.65 |
| 1999 | 323 | 25 | 7.74 |

ஆ) க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறு

| ஆண்டு | தமிழ் | | கணிதம் | | விஞ்ஞானம் | | ஆங்கிலம் | | சமூகக்கல்வி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் |
| 1995 | 579 | 82.7 | 591 | 41.9 | 581 | 41.3 | 579 | 11.4 | 577 | 73.8 |
| 1996 | 632 | 75.2 | 670 | 44.8 | 648 | 39.9 | 705 | 21.4 | 628 | 65.6 |
| 1997 | 593 | 85.8 | 629 | 49.9 | 620 | 39.8 | 594 | 5.4 | 594 | 71.2 |
| 1998 | 615 | 88.3 | 660 | 58.8 | 614 | 56.8 | 748 | 10.8 | 611 | 71.5 |
| 1999 | 649 | 80.7 | 689 | 46.3 | 667 | 39.9 | 812 | 19.8 | 649 | 71.5 |

இ) I) க.பொ.த (உ/ த) விஞ்ஞான பெறுபேறு

| ஆண்டு | பௌதீக விஞ்ஞானம் | | இரசாயன விஞ்ஞானம் | | தாவரவியல் | | விலங்கியல் | | பிரயோக கணிதம் | | தூய கணிதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் |
| 1996 | 109 | 59.6 | 110 | 64.6 | 43 | 90.7 | 43 | 65.0 | 67 | 47.8 | 66 | 72.7 |
| 1997 | 84 | 79.8 | 84 | 79.8 | 31 | 96.8 | 31 | 90.3 | 53 | 67.9 | 53 | 75.5 |
| 1998 | 79 | 88.6 | 79 | 92.4 | 24 | 100.0 | 24 | 91.7 | 53 | 83.0 | 53 | 90.6 |
| 1999 | 93 | 79.6 | 93 | 71.0 | 33 | 90.9 | 32 | 81.3 | 60 | 73.3 | 60 | 75.0 |

இ) II) க.பொ.த (உ/த) வர்த்தகபாட பெறுபேறு

| ஆண்டு | பொருளியல் | | வர்த்தகம் | | கணக்கியல் | | புள்ளிவிபரவியல் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றி யோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி வீதம் |
| 1996 | 171 | 81.3 | 141 | 90.8 | 128 | 78.9 | - | - |
| 1997 | 108 | 90.7 | 88 | 95.5 | 88 | 90.9 | 38 | 81.6 |
| 1998 | 105 | 79.1 | 94 | 84.0 | 99 | 83.8 | 70 | 95.7 |
| 1999 | 146 | 88.4 | 133 | 86.5 | 134 | 88.1 | 63 | 96.5 |

இ) III) க.பொ.த (உ/த) கலைப்பாட பெறுபேறு

| ஆண்டு | தமிழ் | | இந்துசமயம் | | இந்து நாகரிகம் | | அளவையியல் | | புவியியல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றி யோர் | சிததி வீதம் | தோற்றி யோர் | சிததி வீதம் | தோற்றி யோர் | சிததி வீதம் | தோற்றி யோர் | சிததி வீதம | தோற்றி யோர் | சிததி வீதம |
| 1996 | 152 | 93.4 | 18 | 100.0 | - | - | - | - | 18 | 100.0 |
| 1997 | 124 | 95.2 | 11 | 100.0 | - | - | - | - | 11 | 100.0 |
| 1998 | 151 | 98.7 | 20 | 100.0 | 140 | 85.3 | 03 | 100.0 | 220 | 100.0 |
| 1999 | 168 | 96.4 | 20 | 100.0 | 177 | 87.6 | 04 | 100.0 | 89 | 89.9 |

ஈ) க.பொ.த (உ/த) புள்ளி அடிப்படையில் தெல்லிப்பளைக் கோட்ட நிலை

| புள்ளி வீச்சு | 1996 | | | 1997 | | | 1998 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விஞ்ஞா | வர்த்த | கலை | விஞ்ஞா | வர்த்த | கலை | விஞ்ஞா | வர்த்த | கலை |
| 180 – 200 | 14 | 13 | 23 | 09 | 05 | 06 | 10 | 12 | 08 |
| 201 - 220 | 15 | 22 | 20 | 06 | 12 | 23 | 14 | 13 | 15 |
| 221 – 240 | 08 | 17 | 31 | 13 | 09 | 30 | 05 | 11 | 32 |
| 241 – 260 | 09 | 13 | 29 | 07 | 13 | 38 | 09 | 07 | 35 |
| 261 – 280 | 03 | 13 | 21 | 07 | 18 | 20 | 06 | 04 | 39 |
| 281 – 300 | 02 | 12 | 08 | 05 | 13 | 08 | 06 | - | 15 |
| 301 – மேல் | - | 02 | 02 | - | 02 | 02 | 02 | - | 04 |
| மொத்தம் | 51 | 92 | 134 | 47 | 72 | 107 | 52 | 47 | 148 |
| தோற்றியோர் | 78 | 116 | 153 | 88 | 95 | 140 | 75 | 90 | 154 |

இடம்பெயர்வும் யுத்தமும் எதிர் கொள்ள முடியாத பெரும்சவாலாக வலிகாமம் வடக்குப் பாடசாலைகளைத் திணறடித்தன. அதைவிட மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களைப் போலவே வளப்பற்றாக்குறை போன்ற விடயங்களும் இப்பிரதேசத்தைத் தொடர்ந்து பாதித்து வந்தன. இருந்த போதிலும் இப்பிரதேசம் தனது கல்விமேன்மையை முற்றாக இழந்துவிடவில்லை. இணைக்கப் பட்டுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள், க.பொ. சா/த,உ/த பெறுபேறுகள் இதனைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன.

சா/த பரீட்சையில் 8Dயும், உ/த பரீட்சையில் 4Aயும் எடுப்பது இப்பிரதேச

கல்லூரி, யா/யூனியன் கல்லூரி, யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிற் சேர்ந்த பல மாணவர்கள் இத்தகைய உயர் பெறுபேறுகளைப் பெற்றனர். 1988,1990ம் ஆண்டுகளில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட முதலிடங்கள் தெல்லிப்பழைக் கோட்ட மாணவர்களையே வந்தடைந்தன. அதே மாணவர்கள் 1994, 1996 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த சா/தரப் பரீட்சையில் யா/ யூனியன் கல்லூரியிலிருந்து தோற்றி மாவட்டமட்ட முதலிடங்களைப் பெற்று மக்கள்வங்கி கொடுத்த புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டனர்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 1987 இல் செல்வன் சி. சுகந்தன் என்ற மாணவன் மிக உயர்ந்த புள்ளிகளைக் கணிதத்துறையில் பெற்று கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திற்கு புலமைப்பரிசில் பெற்றுச் சென்றதும் , அதே போல 1999 இல் ம. பிரவீணன் அதே துறையில் 357 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா வின் அடிலேயிட்ஸ் பல்கலைக் கழகத்திற்குப் புலமைப்பரிசில் பெற்றவதும் யூனியன் கல்லூரிக்கு மட்டுமல்ல தெல்லிப்பழைப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்க்கும் விடயங்கள். இப்பெருமையை மகாஜனாக் கல்லூரி ஊடாகச் சேர்த்த மற்றொரு மாணவி வா. தமிழினி இவர் 1992 இல் அவுஸ்தி ரேலியாவின் மேல்போர்ன் பல்கலைக் கழகத்திற்குப் புலமைப் பரிசில் பெற்று சென்றார்.

## கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் மாகாண, தேசிய நிலைகளில் வெற்றி பெற்றோர்

அ) மாகாண நிலை:

| ஆண்டு | பாடசாலை | பங்குபற்றிய மாணவர் | நிகழ்ச்சி | பெற்றுக்கொண்ட இடம் |
|---|---|---|---|---|
| 1997 | யா/ மகாஜனாக் கல்லூரி | எம். லோகபரணி | வாசிப்பு | 1ம் இடம் |
| | யா / யூனியன் கல்லூரி | எம். பிரவீணன் | நாடகப்பிரதியாக்கம் | 1ம் இடம் |
| | யா / வயாவிளான் ம.ம.வி | ஜே. இராஜமல்லிகை | பேச்சு | 3ம் இடம் |
| | யா/ மகாஜனாக்கல்லூரி | எஸ். லக்மன் | இசை(தனி) | 1ம் இடம் |
| | யா/ மகாஜனாக்கல்லூரி | வி. தர்சினி | இசை (தனி) | 2ம் இடம் |
| 1998 | யா/ யூனியன் கல்லூரி | ஆர். கஜேந்திரன் | கட்டுரை | 3ம் இடம் |
| | யா/ யூனியன் கல்லூரி | எம். பிரவீணன் | நாடகப்பிரதியாக்கம் | 1ம் இடம் |
| | யா/ யூனியன் கல்லூரி | கே. தர்மசேகரன் | சிறுகதை | 1ம் இடம் |
| | யா/ யூனியன் கல்லூரி | குழு | விவாதம் | 2ம் இடம் |
| 1999 | யா/ வயாவிளான் ம.ம.வி | ரி. பிரகாஷ் | கட்டுரை | 1ம் இடம் |
| | யா/ யூனியன் கல்லூரி | எஸ் ஐங்கரன் | பேச்சு | 2ம் இடம் |

ஆ) தேசிய நிலை

| | | | | |
|---|---|---|---|---|
| 1997 | யா/ யூனியன் கல்லூரி | எம். பிரவீணன் | நாடகப்பிரதியாக்கம் | 1ம் இடம் |
| | யா மகாஜனாக்கல்லூரி | எம். லோகபரணி | வாசிப்பு | 2ம் இடம் |
| 1998 | யா/ யூனியன் கல்லூரி | எம் பீரவீணன் | நாடகப்பிரதியாக்கம் | 1ம் இடம் |
| | யா/ யூனியன் கல்லூரி | கே. தர்மசேகரன் | சிறுகதை | 2ம் இடம் |
| 1999 | யா/ வயாவிளான் ம.ம.வி | ரி. பிரகாஷ் | கட்டுரை | 1ம் இடம் |

## கடந்த மூன்று ஆண்டுகளில் விளையாட்டுத்துறையில் மாகாண மட்டத்தில் பெறப்பட்ட வெற்றிகள்

| ஆண்டு | பாடசாலை | பங்குபற்றிய மாணவர் | நிகழ்ச்சி | பெற்றுக் கொண்ட இடம் |
|---|---|---|---|---|
| 1997 | யா/ மகாஜனாக் கல்லூரி | பா. வாகுலேயன் | தட்டெறிதல் | 1ம் இடம் |
| 1998 | யா/ மகாஜனாக்கல்லூரி | க. ராஜ்குமார் | 400மீற்றர் | 1ம் இடம் |
| | யா/ மகாஜனாக்கல்லூரி | க. ராஜ்குமார் | 200மீற்றர் | 2ம் இடம் |
| | யா/ மகாஜனாக்கல்லூரி | சி. ரஞ்சி | முப்பாய்தல் | 2ம் இடம் |
| | யா/ மகாஜனாக்கல்லூரி | ச. ஜெய | நீளம்பாய்தல் | 3ம் இடம் |
| | யா/ மகாஜனாக்கல்லூரி | எஸ். சுகிர்தன் | 100 மீற்றர் | 3ம் இடம் |
| 1999 | யா/இளவாலைமெய்கண்டான்ம.வி | வி. சேந்தினி | 400மீற்றர் | 3ம் இடம் |
| | யா/இளவாலைமெய்கண்டான்ம.வி | வி. சேந்தினி | 200 மீற்றர் | 3ம் இடம் |
| | யா/இளவாலை மெய்கண்டான் ம.வி | வி. சேந்தினி | தடைதாண்டல் 400மீ | 1ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | சி.ரஞ்சித்குமார் | முப்பாய்ச்சல் | 1ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | சி.ரஞ்சித்குமார் | கோல் ஊன்றிப்பாய்தல் | 1ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | சி.ரஞ்சித்குமார் | முப்பாய்தல் | 1ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | சி.ரஞ்சித்குமார் | கோல்ஊன்றிப்பாய்தல் | 1ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | சி.ரஞ்சித்குமார் | நீளம் பாய்தல் | 2ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | க.ராஜ்குமார் | 400மீற்றார் | 1ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | க.ராஜ்குமார் | 200மீற்றார் | 2ம் இடம் |
| | யா/மகாஜனாக்கல்லூரி | எஸ். கமலமோகன் | உயரம்பாய்தல் | 3ம் இடம் |
| 1998 | யா/யூனியன் கல்லூரி | வலைப்பந்தாட்டக் குழு15வயதின் கீழ் பெண்கள் | | 3ம் இடம் |
| 1999 | யா/ யூனியன் கல்லூரி | வலைப்பந்தாட்டக்குழு 17 வயதின் கீழ் பெண்கள் | | 1ம் இடம் |

இணைபாடவிதானத் துறையில் தெல்லிப்பழை எப்போதுமே முன்னணியில் நிற்பது. 1996 வரை எமது மாணவர்கள் எந்த ஒரு போட்டிக்கும் தென்னிலங்கைக்குப் போக முடியாத சூழல் இருந்ததால் அவர்களது திறமைகளைச் சரியாக மட்டிட முடியவில்லை. 1996 முதல் அவர்கள் கலைத்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளைப் புரிந்தனர். அவை அட்டவணை A,B ஆகியவற்றில் காட்டப் பட்டுள்ளன. இவ்வெற்றிகளுக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் ஆர்வமும் விடா முயற்சியும் கொண்ட இப்பிரதேச அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆவர்.

பல பாடசாலைகள் பல போட்டிகளில் மாவட்ட நிலையில் தெரிவு செய்யப் பட்டபோதிலும், பொருளாதார வசதியீனம், போக்குவரத்துச் சீரின்மை ஆகிய காரணங் களால் மாகாண நிலைப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலையை அநுபவித்தன என்பதையும் குறிப்பிடவே வேண்டும்.

**வலிகாமம் வடக்கில் ஆசிரியர் கல்வி:**

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இலங்கையில் தேசியவாதம் வலுவடைய வலுவடைய ஆசிரியர் கல்வியின் தேவையும் அதிகரித்து வந்தது. 1916ம் ஆண்டில் கோப்பாய் தேவாலய வளவில் கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்கும் இடமளிக்கும் வகையில் ஐக்கிய பயிற்சிக்கல்லூரி நிறுவப்பட்டது. அதிக சைவ ஆசிரியர்களை உருவாக்குவதற்காக ஒரு புதிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைய, சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அன்பளிப்புச் செய்த 5 ஏக்கர் காணியில் 2.10.1923 இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

கலாநிதி சி. டபிள்யு டபிள்யு கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்களின் பெறுபேறாகக் கற்போர் தொகை அதிகரிக்க பெண்களின் ஆசிரியப்பணி வேண்டப்பட்டது. ஆகவே 1946இல் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைக்குப் பக்கத்தில் பெண் ஆசிரிய கலாசாலை தொடங்கப்பட்டது. பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் பெண் களுக்கு உரியதாகத் தீர்மானிக்கப்படவே 16.05.1947 இல் பலாலி இராணுவ முகாமாய் இருந்து கைவிடப்பட்ட இடத்தில் ஆண் ஆசிரிய பயிலுநருடன் பலாலி ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் வலிகாமம் வடக்கின் முதலாவது ஆசிரியர் பயிற்சி நிலையமாக இது சிறந்து விளங்கியது. 1957 இல் இக்கலாசாலை விசேட ஆசிரிய கலாசாலை ஆக்கப்பட்டு, மகரகம ஆசிரிய கலாசாலையின் தரத்துக்கு உயர்த்தப்பட்டது. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பல துறைகளிலும் விசேடபயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

1964 இல் வர்த்தகம் , கைப்பணி ஆகிய துறைகளும், 1967 இல் மனையியல் துறையும் இங்கு ஆரம்பிக்கப்பட்டன.

1969 இல் இங்கு இராமநாதன் கனிஷ்ட பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டது. ஆயினும் இது 01.06.1971 இல் மூடப்பட்டு விரிவுரையாளரும், உடைமைகளும் மீண்டும் ஆசிரியர் கலாசாலைக்கு வழங்கப்பட்டது. 1972க்குப் பின்னர் இசை, நடனம், சித்திரம், உடற்கல்வி ஆகிய விசேட துறைகளும் இங்கு தொடங்கப்பட்டன. 1974,1975 காலப்பகுதியில் 800க்கும் மேற்பட்ட ஆசிரிய பயிலுநர்களைக் கொண்ட வளம் மிக்க கலாசாலையாக பலாலி ஆசிரியா கலாசாலை விளங்கியது நினைவு கூரத்தக்கது.

பலாலி இராணுவ முகாம் விரிவு படுத்தப்பட்டது. யுத்தம் மெதுவாகத்தன் முகத்தைக் காட்டத்தொடங்கியது. கலாசாலைச் சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டநிலையில் 03.03.1986 இல் இக்கலாசாலையும் இடம்பெயர்ந்து கோப்பாயிற்கு வந்தது. பின்னர் அது திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலத்திற்கு இடம்பெயர்ந்து இன்றுவரை அங்கேயே இயங்கி வருகின்றதுசோதனைகளுக்கு மத்தியில் சாதனை களைக் காட்டுவதில் பலாலி ஆசிரியர் கலாசாலையும் பின்னிற்கவில்லை.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்ற போது, பல்வேறு வேதனைகளையும், சோத்னைகளையும் சந்தித்த வலிகாமம் வடக்குப் பிரதேசம் கட்டுக் கோப்புக் குலையாமல் இன்றும் இயங்குவதற்கு இப்பிரதேசத்தின் பாடசாலைச் சமூகங்களோடு அப்பிரதேசக் கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம்,மாவட்ட மாகாண அதிகாரிகள் ஆகியோரின் கடும் உழைப்பும், விசுவாசமும், தனிப்பட்ட மனிதர்களின் விடாமுயற்சியுமே காரணங்கள் என்பதில் எவ்வித சந்தேகங் களும் இல்லை.

,க்கட்டுரை எழுதப்படும் சமயத்தில் (20.05.2000) மீண்டும் யுத்தம் தன் கோரப் பசியைக் காட்டத் தொடங்கிவிட்டது. அதன் விளைவுகள் எதிர்காலத்தில் தெரியும். (தகவல்களை நம்பகத் தன்மையுடன் சேகரித்து ஒழுங்குபடுத்தி ஆக்கம் செய்யப்பட்டன. திருமதி றெ. இருதயநாதன்(பி.க.ப), திருமதி கோகிலா மகேந்திரன்(உ.க.ப), திரு. வை சச்சிதானந்தம் (உ. க. ப.), திரு. அ. பேரம்பலம் (அதிபர்) திரு. சு. செல்லத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்) திரு. க. தர்மேசன் (தி.உ) இவர்களுக்கு எனது நன்றிகள்

## நேரத்தின் மகிமை

உழைக்க நேரத்தை எடுத்துக்கொள்
அது வெற்றியின் சின்னம்

சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள்
அது சக்தியின் ஊற்று

விளையாட நேரத்தை எடுத்துக் கொள்
அது இளமையின் இரகசியம்

படிக்க நேரத்தை எடுத்துக்கொள்
அது அறிவின் வாயில்

அன்புகாட்ட நேரத்தை எடுத்துக்கொள்
அது இறைவனின் கொடை

சேவைபுரிய நேரத்தை எடுத்துக்கொள்
அது வாழ்வின் குறிக்கோள்

சிரித்துமகிழ நேரத்தை எடுத்துக்கொள்
அது இதயத்தின் இன்னிசை

# வலிகாமம் வடக்கு பிரிவின் நீதி பரிபாலனம்

**சி. செ. நடராஜா**
திருவரங்கம்
சுன்னாகம் கிழக்கு

இற்றைக்கு பல நூற்றாண்டுகளாக போர்த்துகேயர்,ஒல்லாந்தர், பிரித்தானியர், ஆகியோரின் ஆட்சிக்காலங்களிலும் நாடு சுதந்திரம்பெற்ற பின்னரும் தேசவழமைச் சட்டம், றோமன் டச் சட்டம் என்ற அடிப்படையிலேயே நீதி நிர்வாகம் நடைபெற்றுவருகின்றது. இந்த நிர்வாக அமைப்பில் கிராம நீதிமன்றம் நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் உயர் நீதிமன்றம் எனப்பல மன்றங்கள் இயங்கிவந்தன. எமது வலிவடக்குப் பிரிவிலும் மல்லாகத்தில் நீதவான் நீதிமன்றமும் தெல்லிப்பழை தென்மேற்கில் கிராம நீதி மன்றமும் அமையப் பெற்றது இப்பிரிவு மக்களின் நற்பயனும் நற்பலனுமாகும். மக்கள் கிராமத் தலைமைக்காரர் மூலம் தீர்க்கமுடியாத சிறுபிணக்குகளை, தகராறுகளை எதுவித செலவுமின்றி கிராம நீதிமன்றத்தில் முறைப்பாடுசெய்து தீர்வுகண்டனர். இங்கு தீர்க்கமுடியாத சிவில் கிறிமினல் முறைப்பாடுகளை நீதவான் நீதிமன்றில் முறைப்பாடு செய்து தீர்வுகண்டனர். இந்த நீதி மன்றத்தலும் தீர்க்கமுடியாத சிவில் கிறிமினல் வழக்குகள் யாழ் மாவட்ட நீதிமன்றததிற்கும், உயர் நீதிமன்றத்துக்கும் மேல் விசாரணைகளுக்காக அனுப்பப்பட்டு வந்தன 1980ம் ஆண்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றமாக தரம் உயர்த்தப்பட்டது. கிராம நீதிமன்றங்கள் அமைப்பில் மாற்றம் செய்து ஆரம்ப நீதிமன்றம் என்ற பெயரில் மல்லாகத்திலேயே இதுவும் அமைந்து இயங்கிவந்தது இந்த ஆரம்ப நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் அப்புக் காத்துமார் கட்சிக்காரர்களுக்கு ஆஜராகு வதற்கு வசதியளிக் கப்பட்டது. இதன் காரணமாக இரண்டு நீதிமன்றங்களிலும் அதிகமான சட்டத்தரணி களுக்கும் அப்புக்காத்துமார்களுக்கும் தொழில் வாய்ப்புக்கிடைத்தது.

1983ம் ஜுலை நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தை தொடர்ந்து ஆட்சியாளார்கள் மீது மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தி காரணமாக யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரங்களால் நீதிமன்றங்கள் சேதமாக்கப்பட்டு அழிக்கப் பட்டன மல்லாகம் நீதிமன்றங்களும் தீயில் அழி நீதி நிர்வாகமும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சென்ற ஆண்டு மீண்டும் மல்லாகத்தில், பங்களா வீதியில் தனியார் வீடொன்றில் மாவட்ட நீதிமன்றம் அமையப்பெற்று இயங்கிவருவதன் மூலம் மக்களுக்கு நீதி பரிபாலனம் கிடைத்துள்ளது.

## (பொலிஸ்) காவல்துறை நிர்வாகம்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி யிலிருந்தே யாழ் மாவட்டத்தில் காவல் நிலையங்கள் அமைந்து மக்களுக்கு நீதி நிர்வாகம் கிடைக்கப் பெற்று வந்துள்ளது. வலி வடக்குப் பிரிவிலுள்ள பல கிராமப் பிரிவுகளின் காவல்துறை நிர்வாகம் காங்கேசன்துறையில் அமைந்ததுறை காவல்துறை நிலைய மூலமும் மல்லாகம், அளவெட்டி. தெல்லிப்பழை கட்டுவன், குரும்பசிட்டி ஆகிய கிராமப் பிரிவுகள் சுன்னாகம் காவல் துறை நிலையத்தினாலும் நிர்வகிக்கப்பட்டுவந்தன. இப்பிரிவில் பொலிஸ் நிர்வாகம் நன்கு நடைபெற்று வந்தமையால் மக்கள் ஒற்றுமையாகவும் ஒழுக்கமாகவும் சமதானமாகவும் வாழ்ந்து வந்தனர். 1983ம் ஆண்டிற்குப் பின்னர் நீதிமன்றங்கள் போன்று காவல் நிலையங்களும் அழிக்கப்பட்டன. காவல் துறையினரின் நிர்வாகம் குறைந்து குறைந்துவந்து முற்றாகச் செயலிழந்தது. மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர். அராஜகம் மெல்லத் மெல்ல தலைதூக்கியது இதன் காரணமாக விடுதலைப்புலிகள் தமது காவல்துறை அமைப்பை ஏற்படுத்தி மக்களுக்கு உதவி வந்தனர். 1985ம் ஆண்டு யாழ் மாவட்ட மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்து 1996ம் ஆண்டு மீண்டும் திரும்பியபின்னர் சுன்னாகத்திலும் காங்கேசன்துறையிலும் இப்பொழுது தெல்லிப்பழையிலும் காவல் நிலையங்கள் அமைந்து இப்பிரிவு மக்களுக்கு சேவை புரிந்துவருகின்றன.

## திடீர் மரண விசாரணை அதிகாரிகள்

ஆரம்ப காலத்தில் திடீர் மரண விசாரணைகள் யாவும் நீதிபதிகளாலேயே மேற்கொள்ளப்பட்டன. 1963ம் ஆண்டு விசேடமாகத் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். வலி வடக்கில்

மல்லா கத்தைச் சேர்ந்த திரு. சி தாமோதரம் பிள்ளையும், தெல்லிப்பழையைச் சேர்ந்த ந. சுந்தரமூர்த்தியும் மரண விசாரணை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.ஐ இவர்களுக்கு பின்பு மாவிட்டபுரம் திரு. தம்பிராசாவும், அளவெட்டி திரு. புண்ணியமூர்த்தியும் நியமிக்கப்பட்டு சேவையாற்றி வந்தனர். 1987ம் ஆண்டு இடம்பெற்ற IPKF இராணுவ நடவடிக்கையின் போதும், பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போதும் நிகழ்ந்த பல திடீர் மரணங்கள் விசாரணைகள் எதுவும் மின்றியே புதைக்கப்பட்டன. தகனம் செய்யப்பட்டன. இதனால் மக்கள் மரணச் சான்றிதழ் பெறுவதில் பெரிதும் இன்னல்படுகின்றனர் இப்பொழுது காவல் துறை இயங்கு வதனால் புதிய நீதவான் இத்தகைய மரணங்களை விசாரித்து தீர்ப்பு வழங்கி வருகின்றார் நிரந்தரமான விசாரணை அதிகாரிகள் இதுவரை நியமிக்கப்படாதது ஒரு குறையாகும்.

## சமாதான சபைகள் இணக்க சபைகள்

சரித்திர காலம் தொடக்கம் பஞ்சாயத்து நிர்வாகமுறை கிராமங்கள்தோறும் இயங்கி வந்துள்ளன. முழுக்க முழுக்க இந்த அடிப்படையில் அமைக்கப்பட்டவைதான் சமாதான சபைகள். கிராமத் தலைமைக்காரர்களும் பின்னர் கிராம உத்தியோகத்தர்களும் தம்மிடம் வரும் முறைப்பாடுகளைக் கிராமத்தில் வசிக்கும் சில பெரியோர்களின் ஆலோசனைகளைப் பெற்றுத் தீர்ப்பளித்து வந்தனர். கிராமத்திலுள்ள மதிப்புக்குரிய, நீதியான சிலரை ஒன்று சேர்த்து இயங்கியசபைகளே, சமாதான சபைகளாக உருப்பெற்று சில கிராமங்களில் அவை மிகவும் திறம்பட இயங்கி வந்தன. அளவெட்டி, தெல்லிப்பழை வடமேற்கிலும் இயங்கி வந்த சபைகள் உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற்றன. திரு. க.க வேலாயுதபிள்ளையின் நெறிப் படுத்தலில் இயங்கிச் சேவையாற்றிய சமதானநீதி சபையை, இப்பொழுது உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், அப்பொழுது மல்லாகம் நீதிபதியாகவும் இருந்த உயர் திரு C.V விக்னேஸ்வரன் பாராட்டிப் பேசியது குறிப்பிடத்தக்கது, நீதிமன்றங்களும் காவல்துறைகளும் இயங்காது ஸ்தம்பிதம் மடைந்திருந்த நாட்களில் சமாதான சபைகளே மக்களுக்கு பெரிதும் கைகொடுத்தன. அரசாங்கத்தினால் இக்கால கட்டத்தில் ஏற்படுத்திய இணக்கசபைகள் (Conciation Board) சரியாக அமையப் பெறவில்லை சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் தனித்தனிஇணக்க சபைகள் அமைய வேண்டுமென்றும், அதன் அமைப்பு முறையும் அதிகாரங்களும் வரையறுக்கப் பட்டன. இந்த அமைப்பு எல்லாப் பிரிவுகளிலும் ஏற்படுத்தும் தருணத்தில் இடப்பெயர்வுகள் ஏற்பட்டு சிவில் நிர்வாகம் இல்லாதகாரணத்தால் நடை முறைப்படுத்தப்படவில்லை.

## சட்டத்துறை

சட்டத்துறையில் பிரபல்யம்வாய்ந்த பலர் எமது பிரிவில் வாழ்ந்துள்ளனர் திரு சிவா பசுபதி, உயர் நீதிமன்ற நீதிபதி திரு. வைத்திலிங்கம், திரு.S.J.V செல்வநாயகம் ஆகியோர் குறிப்பிடத்தக்க சிலராகும்.மாவட்ட நீதிபதியாக ஓய்வுபெற்ற திரு. மு. திருநாவுக்கரசுவும் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஆனந்தக்குமாரசாமியும் அளவெட்டியைச் சேர்ந்தவர்களாகும். நீதி மன்றங்கள் இயங்காமல் போனதாலும் சிவில் நிர்வாகம் சீர்குலைந்தமையாலும் சட்டத் துறையில் ஈடுபட்டவர்கள் தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டனர். சிலர் வெளி நாடுகளுக்கும் சென்றுவிட்டனர்.

## சமாதான நீதிபதிகள்

எமது நாடு சுதந்திரம் பெற்றபின்னர் சமூக சேவைகளில் ஈடுபட்ட சில பெரியார்களை நீதி அமைச்சு சமாதான நீதிபதிகளாக நியமித்தனர். இது ஒரு கௌரவ பதவியாகும் திரு. மயில்வாகனம் J.P (அளவெட்டி) திரு. யொபல்போய் J.P (தெல்லிப்பழை) திரு. சரவணமுத்து J.P, (கொல்லங்கலட்டி) போன்ற குறிப்பிடத்தக்க சிலரே சமாதான நீதிபதிகளாக இருந்தனர். பின்னர் கிராமங்கள் தோறும் நியமிக்கப்பட்டனர். இப்பொழுது சில கிராமங்களில் கூடுதலான ஆட்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்று மக்களுக்கு எல்லாத் தேவைகளுக்கும் இவர்களது கையொப்பம் அவசியம் தேவைப்படுகின்றது.

யாழ் மாவட்டத்திலேயே முழுமையாக பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசம் வலி வடக்குப் பிரிவாகும். யுத்த நடவடிக்கைகளால் முழுமையாக இடம்பெயர்ந்த பிரிவும் இதுவே சொத்துக் கள் இழப்பு, உயிர் இழப்பு, காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்ததென அறியமுடியாத வேதனை, பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இன்னும் மீளக் குடியேற அனுமதிமறுப்பு, மீள குடியேறியவர்கள் மத்தியிலும் காணப் படும் அமைதியின்மை ஆகிய அவலங் களுக்கு மத்தியில் மக்கள் நாட்களை எண்ணிக் கொண்டு வேதனையுடன் வாழ்கின்றனர். இவர்கள் வாழ்வில் அமைதி ஏற்பட எல்லாம் வல்ல ஆண்டவன் தான் காப்பற்ற வேண்டும்

# அரசியற் துறையில் வலிகாமம் வடக்கு

**பண்டிதர் நாகலிங்கம்**
அளவெட்டி

வலிகாமம் வடக்குப் பகுதி சமயத்துறை, சமூகத்துறை, வைத்தியத்துறை, கல்விகலாச் சாரத்துறை என்பவற்றில் முன்னேற்றமடைந் திருந்தது போல அரசியலிலும் முக்கிய இடம் பெற்றிருந்ததை எவரும் உடன்படுவரென்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாண அரசுகள் செயலிழந்து, பின்னர் மூன்று நூற்றாண்டு காலம் தமிழர் ஆட்சி இடம்பெறவில்லை. வேற்றுநாட்டார் தமது ஆயுத பலத்தால் இலங்கையை ஆட்சி செய்ததன் பேறாக சுதந்திர தாகம் அடக்கியொடுக்கப்பட்டிருந்தாலும் அது இடையிடையே கொழுந்துவிட் டெரியத்தவற வில்லை. அந்நியராட்சியின் இறுதிக்காலத்தில் ஆட்சியிற் பங்கேற்பதற்குச் சுதேசிகளுக்கும் இடங்கிடைத்தபோது கற்றவர்பிரதிநிதியாகச் சட்ட சபையில் இடம்பெற்றவர் சேர்.பொன். இராமநாதன் அவர்களாவர். மருதனார் மடத்தில் வாழ்ந்த அவரும் வலிகாமம் வடக்குவாசியே. அன்று வலிகாமம்வடக்கு காங்கேசன்துறையி லிருந்து இணுவில் வரை வியாபித்திருந்த தென்பதை நாம் உளங்கொளல் வேண்டும்.

இராமநாதன் அவர்களைத் தொடர்ந்து அவருடைய மருமகனும் கல்வி கேள்விகளிற் சிறந்தவருமாகிய திரு. சு. நடேசன் அவர்களும் அரசியலில் பிரவேசித்து, அப்போதைய அரசாங்க சபையில் இடம்பெற்றிருந்தாரென்பது குறிப்பிடத் தக்கது. இலங்கை சுதந்திரமடையவேண்டு மென்பதில் முன்னின்று உழைத்தவர்கள் தமிழ ரேயாயினும், சுதந்திரமடைய முன்னரே ஆட்சியமைப்பில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டன ரென்பது அரசியலில் ஈடுபாடுடைய தமிழர்களின் ஆதங்கமாக இருந்தது.

தமிழர் தமது அரசியல் உரிமைகளை இழந்து விடக்கூடாதென்பதற்காகத் திருஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைத் தாபித்து முனைப்பாகச் செயற்பட்டார். அவரது கட்சியில் உபதலைவராக விருந்து தமிழினத்துக்காகப் பாடுபட்டவர் திரு S.J.V செல்வநாயகம் அவர்களாவர். நாடு சுதந்திர மடைந்த பிறகு, திரு பொன்னம்பலம் அவர்கள் மந்திரிப் பதவியை ஏற்றுத் தமிழர் உரிமைகளைக் கைவிட்டுவிட்டதாகக் கூறித் திரு செல்வநாயகம் அவர்கள் தமிழரசக் கட்சியை தாபித்தார். அக்கட்சிக்குத் தலைமைப் பொறுப்பேற்றவர் செல்வநாயகம் என்பதால் வலிகாமம் வடக்கு மீண்டும் அரசியலில் வழிகாட்டியாக அமைந்தது.

திரு.செல்வநாயகம் அவர்களின் பெரு முயற்சியால் தமிழரசுக்கட்சி நாளொரு வண்ணமாக வளர்ந்து வந்தது. கட்சியில் இளைஞர்களுக்கும் உரிய இடமளிக்கப்பட்டது. திரு அ. அமிர்தலிங்கம், திரு வ. நவரத்தினம் திரு க. துரைரத்தினம் என்போர் உற்சாகமும் சுறுசுறுப்பும் வாய்ந்த இளைஞர்களாகத் தமிழரசுக் கட்சியில் இணைந்துகொண்டனர் திரு வ. பொன்னம்பலம் அவர்களும் பின்னர். பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்து கொண்டாலும் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக விருந்தரென்பது குறிப்பிடத்தக்கது. தமிழரசுக் கட்சி அதன் ஆரம்ப காலத்தில் இலங்கையில் சமஷ்டி முறையிலான ஆட்சியமைக்கப்பட வேண்டு மென்பதை வற்புறுத்தியது. ஆனால் மாறிமாறி ஆட்சியதி காரத்தைக் கைப்பற்றிய சிங்களக் கட்சிகள் ஒற்றையாட்சியிலிருந்து இறங்கிவரச் சிறிதும் இணங்கவில்லை.

சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த பிக்குகளும், இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடென்பதை உறுதிப்படுத்தவே விரும்பினர். அதனால் தமிழ் மக்கள் நடாத்திய சாத்வீகப் போராட்டங்களும் பிறமுயற்சிகளும் விழலுக் கிறைத்த நீராயின. செல்வநாயகம், பண்டாரநாய காவுடன் செய்துகொண்ட பண்டா செல்வா ஒப்பந்தம் ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் பாதயாத்திரையாலும் பிக்குகளின் எதிர்ப்புப் போராட்டத்தாலும் கிழித் தெறியப்பட்டது. அதேபோல பின்னொருமுறை டட்லிசேனநாயக்காவுடன் செல்வநாயகம் செய்து கொண்ட ஒப்பந்தமும் குப்பைக் கூடைக்கே உரியதாயிற்று..

திரு வ. பொன்னம்பலம் அவர்கள் தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்து பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார். திரு பொன்னம்பலம் அவர்கள் துடிப்புமிக்க இளைஞராக இருந்து இளைஞர்களைத் தம்பக்கம் இழுக்கும் முயற்சியில் வெற்றியுங்கண்டார். எனினும் அவர் ஆறுதரம் பாராளுமன்றத் தேர்தலிற் போட்டியிட்டாரேனும் ஒரு முறையாவது வெற்றபெற முடியவில்லை. பொதுவுடைமைக்கட்சி சார்ந்த சிங்களத் தலைவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து தமிழினத்துக்குத் துரோகமிழைக்கக் கண்ட திரு வ. பொன்னம்பலம் அவர்கள் மீண்டு தமிழரசுக்கட்சியிற் சேர்ந்து கொண்டாரென்பதுங் குறிப்பிடத்தக்கது. பொன்னம்பலம் அவர்கள் வலிகாமம் வடக்கைச் சேர்ந்தவர் என்பதும் பொதுவுடைமைக்கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளராக இருந்தவர் என்பதும் பெருமைக்குரியனவே.

சமசமாசக் கட்சியைச் சேர்ந்தவரும் செனற் சபை உறுப்பினராக இருந்தவருமாகிய திரு. பொ.நாகலிங்கம் அவர்களும் வலிகாமம் வடக்கைச் சேர்ந்தவரே. அவரும் அக்காலத்தில் சமசமாசக் கட்சியின் தலைவர்களாக இருந்த N.M.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா என் போருடன் ஒத்துழைத்துச் சமசமாசக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவரப்பாடுபட்டார். ஆனால் அவருடைய முயற்சி இந்த நாட்டில் எடுபடவில்லை.

வலிகாமம் வடக்கு அரசியல்வாதிகள் பலர் இன்றுள்ள நெருக்கடி நிலையில் நீறுபூத்த நெருப்புப்போல் தம்மைக் காட்டிக் கொள்ளாது இருக்கின்றார்கள் காலங்கனியும் போது அவர்கள் முன்னரங்கத்துக்கு வந்து நாட்டிற்காகப் பாடுபடுவர் என்பதில் ஐயமில்லை. கோப்பாய்க் கோமான் என்றழைக்கப்பட்ட அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களும் வலிகாமம் வடக்கையே தமது வாழிடமாகக் கொண்டவர். அவர் சாத்வீக போராட்டங்களில் ஈடுபட்டபோது குண்டர்களாலும் படையினராலும் தாக்கப்பட்டதன் காரணமாக அமரத்துவம் எய்தியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. திரு. செல்வநாயகம் அவர்களின் மறைவுக்குப்பின் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் வலிகாமம் வடக்குப்பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் நிறைவு கூரத்தக்கது

## மாணவன்

கல்வியில் ஆர்வம் கடமையில் ஓர்மம்
கருத்தினில் சீலம் கனிந்திடும் பாவம்
குருவிடம் பணிவு குணத்தினில் உயர்வு
கொண்டவன் எவனோ அவனே மாணவன்

கற்ற கல்வியில் பற்றுதல் கொண்டு
முற்று முணர்பவன் முதன்மை மாணவன்
பெற்ற கல்வியால் தான் பெறும் இன்பம்
வையகம் பெறவே நினைப்பவன் மாணவன்

உற்ற நண்பனாய் உடன்துணை இருந்து
சுற்றம் காப்பவன் அரிய மாணவன்
நற்றிணை நூல்களும் நலன்தரு கலைகளும்
வற்றிடாப் பொய்கையாய் வளர்ப்பவன் மாணவன்

வறுமையில் செம்மை வாழ்வினில் உண்மை
உரிமையில் திண்மை உளத்தினில் மேன்மை
உயிரிடம் அன்பு உயரிய பண்பெனும்
நிறைவுடன் வாழ்பவன் நிகரில் மாணவன்.

*"சிதம்பர பத்தினி"*

# அரசியலும் சட்டமும்

**கு. விசுவலிங்கம்**
சட்டத்தரணி,
மல்லாகம்.

ஒரு நாட்டின் நீதியையும் நிர்வாகத் தையும் நிர்ணயித்து, நாட்டினை நிர்வகிக்க ஏதுவாக அமைவது சட்டமாகும். இச்சட்டம் எப்படி ஆக்கப்படுகின்றது என ஆராய முற்படின், பெரும்பாலும் சட்டவாக்கத்தை தன் பெரும் பணியாகக் கொண்டு இயங்குவது அந்த நாட்டின் அதி உயர்ந்த சட்டம் ஆக்கும் அதிகாரத்தைக் கொண்ட அந்த நாட்டு நாடாளுமன்றம் அல்லது பாராளுமன்றமேயாகும். இதனை சட்டமன்றம் என்றும் சொல்லுவர். நாட்டுக்கு நாடு சட்டமியற்றும் பாராளுமன்ற அமைப்பு வேறுபட்டு நிற்பதைக் காணலாம். சில நாடுகளில் மேற்சபை, கீழ்ச்சபை என இரு வேறு சபைகள் இயங்கு வதைக் காண முடிகின்றது. இதில் ஒன்றை "செனற்" சபை எனவும் அழைப்பதுண்டு. அண்டை நாடான இந்தியாவில், லோக்சபா என்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட மன்றமும் "ராஜ்சபா" என மறைமுக மக்களால், அதாவது மக்கள் மன்றங்கள் தெரிவு செய்யும் அங்கத்தவரைக் கொண்டு இயங்கும் ராஜ்சபாவும் அமைந்துள்ளது. ஆங்கிலேய ஆட்சிமுறையை நம்நாடு பின்பற்ற வேண்டிய சூழ்நிலை அமைந்தமைக்கு நாம் பிரித்தானியாவிடம் விடுதலை பெற்றமையும் ஒரு காரணமாகும். இதனால் நம் நாட்டிலும் அரசியல் யாப்பு முன்பு இருவேறு சபைகளை கொண்டதாக அமைய சோல்பரியின் அரசியல் யாப்பு வகை செய்துதந்தது.

விடுதலையின்முழுப் பாரிமாணத்தையும் நாம் முழுமையாக அனுபவிக்க வகைசெய்யும் எனக் கருதிய ஆட்சியாளர் அரசியல்யாப்பினை மாற்றி மேல்சபை என்ற செனற் சபையை முற்றாக நீக்கி, ஒரு சபையைக் கொண்டு ஒற்றை யாட்சி முறையை நம் நாட்டில் ஏற்படுத்தினர்.

காலக்கிரமத்தில், பெயரளவில் இருந்த ஜனாதிபதி பதவியை மாற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை உருவாக்கி, பாரளுமன்றத்தின் தனி ஆதிக்கத்தை மறைமுகமாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

இப்படியாக நம் நாட்டில் அரசியல் மாற்றங்கள் பற்பல வகையில் கடந்த அரை நூற்றாண்டில், அரங்கேறின.இது வரலாறு காட்டும் உண்மை

இனி ஜனநாயகம் என்றால் என்ன? என ஆராயின் அது மக்களால், மக்களுக்கு, மக்கள் காணும் மாபெரிய அரசியல் அமைப்பு என முழக்கம் இடப்படுகின்றது.

இது எவ்வகையில் எம்மவருக்கு பொருந்தும் என ஆராய்வது இக்கால கட்டத்தில் பொருத்தமாகும். நம் பாராளுமன்றத்தில், உள்ள அங்கத்தவர்களில் சிறுபான்மை சமூகமான இலங்கை மற்றும் இந்திய தமிழர்கட்கும், முஸ்லீம் கட்கும் கிடைத்துள்ள இடம், சுமார் (1/8) எட்டில் ஒரு பங்காகவே உள்ளது. இந்த எட்டில் ஒரு பங்கு அங்கத்தவர்கள் ஏகோபித்து ஒரே குரலில் ஒரே அணியில் செயற்பட்டாலும், இவர்களது அபிலாசைகள், உரிமைகள், அபிவிருத்திகள் என்பனவற்றை வென்றெடுக்க முடியாமையைச் சுட்டிக்காட்டி, எமது நாடு போன்ற ஒரு பல்வேறு மொழி, மத, இன, மக்கள், பெரும்பான்மை, சிறுபான்மை யென வகுக்கப்பட்டு வாழும் ஒரு நாட்டில், அந்த நாட்டு அரசும், ஆட்சியும், சட்ட ஆக்கமும், நீதி நிர்வாகமும், மக்களால், மக்களுக்கு, மக்களே ஆளும் ஜனநாயக ஆட்சி என நிருபிக்க முடியுமா? என்பது மிகப் பெரும் கேள்வி அரசியலும் சட்டமும் ஒரு சமயம் பெரும்பான்மை இனத்தின் அபிலாசைகளை பிரதி பலித்தாலும் கூட அது நாட்டின் நலன் பேணும் சிறுபான்மை இனத்தின் உரிமைகளைக் குறிப்பாக பிறப்புரிமைகளை பாதுகாத்து, அரசியலைத் தூய்மையாக்கி, நீதியைத் தக்கவாறு நிர்ணயித்து, மொழியால், மதத்தால், இனத்தால் பலம் குன்றிய மக்களின் பாதுகாவலனாக, காவல் கோபுரமாக, நாடாளுமன்றம் நயம்படச் செயலாற்றுமா என்ற வினாவிற்கு பதில் தேடினால் உலகளாவிய நாடுகளில், இன்று பல்வேறு கோணங்களில், இன மத சமூக பூசல்கள் தலையெடுத்து, தீராத போராக வெடித்து, பல்லாயிரம் உயிர்களை பல்வேறு நாடுகளில் பலியெடுக்கும் காரணிகளில் தலையாய மூலகாரணி எதுவெனில், அரசியல், அரசு ஆட்சி என்பன, பெரும்பான்மையினரின் கையில் ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாக இருப்பதே என்பது ஆய்வாளர்கள் கண்ட முடிவு.

இப்படியான நாடுகளின் அணியில் நம்மவர் நாடும் இடம் பிடித்து விட்டது. மிகப் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட, ஒரு மத ஒரு இனத்தைச் சேர்ந்த ஒரு வகுப்பினரும் ஓர் இனத்தவரும், ஆட்சியில் சட்ட ஆக்கம் என்னும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஆக்கும் வல்லமை பெறின் - நிச்சயம் அச்சட்டம் அந்த நாட்டில், ஒரு

தலைப்பட்சமான, ஓர் இனத்தின் பாதுகாவல னாக, மாறுவதை உலக நாடுகளில் மட்டுமன்றி நம் நாட்டிலும் கண்டு கொண்டோம். தனிச்சிங்களச் சட்டம், பௌத்த மதத்திற்கு தலையாய முதலிடம் போன்றவை இவ்வகையில் அடங்கும்.

இப்படியான ஓர் இனத்தினை முதன்மைப் படுத்தி நிறைவேறும் சட்டங்கள் பெரும்பாலும், மற்றைய பலம் குன்றிய இனத்தைப் பாதிப்பது வரலாறு காட்டும் உண்மையாகும்

இதனைப்போக்க வல்ல அரசியல் அமைப்புகளை, அரசியல் ஞானம் மிக்கவர்கள், அந்தந்த நாடுகளில், சட்டமாக்கி உலகில் பல்வேறு நாடுகளிலும், மக்களால், மக்களுக்கு,மக்கள் ஆளும் ஆட்சியே உண்மை ஜனநாயகமென ஊர்ஜிதம் செய்துள்ளனர்.நம் அண்டை நாடான பாரத நாட்டில், பல்வேறு மாநிலங்களாக வகுத்து அவற்றுக்கு ஏற்ற பெயர்களைச் சூட்டி, அந்தந்த மாநிலத்தை மொழிவழி மாநிலங்களாக மிளிரவைத்து, வரையறுக்கப்பட்ட சுயாட்சியை வழங்கி வேற்றுமையில் ஒரே பாரதம் என்ற ஒற்றுமையைக் கண்டுள்ளமை - நவயுகம் போற்றும் நல்ல ஆட்சி முறையாகும். அதிகாரப் பரவலாக்கல், அரசியல் யாப்பு மாற்றம், சுயநிர்ணய உரிமை என்று நம் நாட்டிலும் பேசப்பட்டு வரும் இக்காலகட்டத்தில், இவற்றை முழுமையாக உள்ளடக்கிய ஒரு சட்ட ஆக்கம் பரந்துபட்ட பெரும்பான்மையினரின் புரிந்துணர் வோடு நாடாளுமன்றத்தில் நிறைவேறும் நாளே அரசியலில், ஆக்க பூர்வமான சட்டம் நிறைவேறிய வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும்.

## வசந்தமும் வருமா?

இன்னுயிர்ந் தலைவ, இறைவ நின்நிழலில்
என்னுயிர் இளைத்து இருந்தேன் சில தினம்
நின்னுடையருளால் நிலத்திடை வாழும்
என்னுடைச் சகோதரர் உடனிருந்தார் பலர்
சகோதரர் தம்முட் பேதமு முண்டோ
ஆனால் அந்தோ, அவர்க்கேன் வஞ்சம்
சகோதர ரென்றே வாழ்ந்தே னவருடன்
ஏனோ அறியேன் என்மேற் கொஞ்சம்
நெஞ்சம் புகைந்து நெருப்பானார் சிலர்
தஞ்சம் அளித்தேன் தயவாய் அன்று
வஞ்சம் அளிக்க வருவாய் என்று
நெஞ்சம் நினைந்து நிலைத்தேன் இன்று
உள்ளக் கோயிலின் உள்ளொளி கொண்டே
உண்மை உரத்துடன் உலவினார் அந்தோ
உள்ளம் என்னும் உலர்ந்த வனத்திடை
உண்மைப் பயிரோ பதரோ அறியார்
உள்ளே ஒன்று உரைத்திடும் வஞ்சம்
மெள்ள நின்று குழைவார் கொஞ்சம்
கள்ளச் சிரிப்பிற் கலந்திடும் நஞ்சு
கானற் சிரிப்பிற் கனன்றிடும் நெருப்பு
ஊனை உயிரை உலர்த்திடும் உயிர்ப்பு
தேனைப் பாகைத் தெவிட்டிடும் நினைப்பு
மெள்ள வருவார் அள்ளி அணைப்பார்
கள்ள நினைவுகள் உள்ளத் திருக்கும்
தேனைப் பொழிவார் திகைக்க வைப்பார்
மானைப்போலே மருளவுஞ் செய்வார்
தேனில்கலந்தே வஞ்சம் விதைப்பார்
தேரில் இவருளம் பாலை வனமா?
பாரிற் பாலையில் வசந்தமும் வருமா?

*"பிரக்ஞா"*

# வலி வடக்கும் பத்திரிகைத்துறையும்

க.வே. இ. ஸ்ரீ நடராஜா
(சிரேஸ்ட பத்திரிகையாளர்)

வலிகாமம் வடக்கு எனும் பெயரானது ஈழமணித்திருநாடு என்றும் மரகதமணித்திரு நாடு என்றும் புவனமெங்கும் புகழ்பூத்த யாழ் மாவட்டத்தின் ஓர் பகுதியாகும்.

இந்த வலி வடக்குப் பிரதேசத்தில் வளமார் வயல் மற்றும் இன்னோர் அன்ன செல்வங்கொழிக்கும் பொருளுடை தனவந்தரும், உழைப்பையே தொழில்சார் உழைப்பையே நம்பி வாழ்ந்தோரும் வாழ்வோரும் உண்டு, "நீ உண்ணும் சோறு என் வயலிலே கால்வைத்து உழுதால் தான் உண்டு" என்று ஏற்றமுறு ஏறுநிலை கொண்டு வாழ்த்திட்டமை முனைகின்ற புண்ணிய பூமி இது. இதில், இந்த ஈடிலா, ஒப்பிலா இனையிலா, கீர்த்தியதனைச் செப்பு வதில், செம்மைதரு நிலைதனை உரைப்பதில் எம்மவர் (வலி வடக்குப் பிரதேசத்தினர்) உரமுடனே இருப்பர் செழுமைமிகு இப்புகழ் எஞ்ஞான்றும் அகிலமெங்கும் வியாபித்து விரிந்து பரந்து எறிதந்திடும் ஜெகஜோதியாக விளங்கும் இறைகிருபையுடன்

இங்கே ... இவ்வேளை நாம் நோக்குவோம். இப்பிரதேச மக்களில் குறிப்பிடத்தக்க சிலர் ஆற்றிட்ட அருஞ்சேவைதனை

இந்தவகையிலே எம் கண்முன்னே நிற்பவர், முதன்மையாக, முதல்வராக, நெற்றிக் கண் சிவனாக (அருள் பாலித்திட்ட, திருவிளையாடல், வரலாறு வேறு) இன்றும் இக்கணமும் எந்த நாழிகையும், விநாடியும் மணித்தியாலமுமாக காலம் காட்டாற்று வெள்ளம் போல் கரைபுரண்டோடுகின்ற ஷ பொழுதினிலும் ஓர் கவிஞன் அவன் பெயர்ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

இவன்.... வலி வடக்குப் பிரதேசத்திற்கு தன் இணையிலா பேராற்றலால் வலு சேர்த்தவன் வலுவூட்டியவன்.

ஆயிரத்தில் ஒருவரே புலவர் என்பவர் ஆன்றோர். ஆன்றோர் கூற்றுக்கொப்பன் கடந்த நூற்றாண்டில் ஈழத்திருநாட்டில் பிறந்த மகாபுலவரே ஆசுகவி கல்லடி வேலுப் பிள்ளை அவர்கள்

ஆசுகவி அவர்கள் வலி வடக்கிலே உள்ள வயாவிளான் என்ற சிற்றூரிலே , சைவவேளாண் மரபினர்களான கந்தப்பிள்ளை – வள்ளியம்மை தம்பதியின் மைந்தனாக 1860 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ம்திகதி பிறந்தார்.

வேலுப்பிள்ளை என்ற இயற்பெயர் கொண்ட புலவரின் இல்லத்தின் அண்மை யில் பெரிய கல்லொன்று காணப்பட்டதால் புலவரை எல்லாரும் கல்லடி வேலுப்பிள்ளை என்றழைத்தார்கள்.ஆசுகவி அவர்கள் கவி மட்டுமல்ல உன்னத உரைநடைகர்த்தா. சமக்காரரும், அஞ்சாமையும்மிக்க பத்திரிகை யாளர், ஈடில்லா கண்டனக்காரர் சிறந்த சரித்திர ஆய்வாளர், உயர்ந்த சைவத் தொண்டர். அதே ஞான்று பிறமதங்களையும் அகக்கண் கொண்டு பார்க்காத பண்பாளர். ஈழத்தில் மாத்திரமன்றி இந்தியா, மலாய போன்ற தேசத்தில் பெரியவர்களாலும் வித்தகர் என விதந்தோதப்பட்டவர்.

ஈழத்தில் தோன்றிய ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை போன்ற பெருமக்களோடு வைத்து மதிக்கத்தக்க ஒரு புருஷர் ஆசுகவி அவர்கள்.

இவரது கீர்த்திமிகு புகழ்தனை இவரது இளைய மைந்தர் அமரர் க.வே. இரத்தினசபாபதியின் மைந்தரும் கவிஞரும், எழுத்தாளரும் தென்னிந்தியா திரைப்பட நடிகருமான டாக்டர் சிலோன் விஜயேந்திரன் எம். ஏ. அவர்கள் ஆசுகவிகல்லடி வேலுப்பிள்ளை வாழ்வும் பணியும் "கல்லடி வேலன் நகைச்சுவைக் கதைகள்" "ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை" என்ற நூல்களிலே ஆதாரபூர்வமாக, ஆணித்தரமாக இதைப் புகழ்ந்துள்ளார். நிறுவியுள்ளார்

மிகவும் சிரமத்தின் மத்தியில் ஓர் அச்சுக் கூடம் நிறுவி "சுதேச நாட்டியம்" என்ற பத்திரிகையை 1902 ஆம் ஆண்டு முதல் 1944 ஆம் ஆண்டு வரை அஞ்சாமையோடு நடாத்தி தமது கனல்கக்கும் கண்டனங்களால் எதிரிகளைக் கதிகலங்கச் செய்தும், மணியான தமது வசனநடையால் தமிழ் வசனத்துறைக்கு சிறப்பான முறையில் தம்பங்கினைச் செலுத்தியும் இன்னமும் பல் ஆற்றலாலும் பாங்குமிகு பணிபுரிந்தார் ஆசுகவி தமது எண்பத்து நான்காவது வயதில் 1944இல் மரித்தார். மாவைக் கந்தன்மேற்காதல் கொண்டு கசிந்து கண்ணீர்மல்கிய ஆசுகவி எழுதிய பாட்டு

என்முகம் பாரா திருப்பதற் கேழைநான்
என்ன குறை செய்தே னந்தோ
யாதானு மொருகூறை இருப்பினும் மன்னிப்ப
தெந்தையுன் கடமை யல்லவோ
புன்புலால் மதுவுண்டு நிரயவழி மால்புகுது
புலையுருற வன்றி ஞானம்
போதிப்பவர்க்கு நீ நண்புடை யனல்லவோ
போந்தமுன் விதிவசத்தால்
என் வையெனி லச்சுமை சுமந்திநக்
கிக்கிடைத் தேறுநாளெந்த நாள் தான்
எவருக்குக் குரைத்தழுவ திக்கலி
யுகத்திநீ யெயுறைல எனைக் கிலையா
பொன்குலவு தெய்வானை குறவள்ளி
கவழுப் புரதகன சிவகுமரசீர்
பொலிகாவை யுறு மாவை நகர்வாச முருகேச
புகழா றுமுக தேவனே

ஆசுகவியின் நூல்களிலே சரித்திர ஆய்வு நூல் மரபில் கௌமுதியுடன் கதிரமலைப்பேரின்பக் காதல், மேலைத்தேய மதுபான வேடிக்கை கும்மி, உரும்பிராய் கருணாகர விநாயகர் தோத்திரப்பாமாலை, அழகம்மா கும்மி என்பன மிகப் பிரசித்தம் பெற்றவை. ஆசுகவி நடத்திய சுதேச நாட்டியம், பிற்காலத்தில் ,பல வருடங்களால் புலவருக்கு உதவியாளராக இருந்த சி.நல்லதம்பி என்பாரின் முழுப்பொறுப்பில் சீருடன் நடத்தப்பட்டது.

இதேவேளை ஈண்டு குறிப்பிடப்பட வேண்டிய அதிமுக்கிய விடயங்கள் சில யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் தோன்றிய புதினப் பத்திரிகை "உதயதாரகை" 70 வருடங்களுக்கு முன்தோன்றியது, இரண்டாவ தாகத் தோன்றியது கத்தோலிக்கப் "பாதுகாவலன்" 40 வருடங்களுக்கு முன் தோன்றியது. முதல் தொடங்கிய பத்திரிகை "இலங்கை நேசன்" என்ற கூற்று தவறானதென கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் புரியும். "விஞ்ஞான வர்த்தினி" என்ற இதழ் அரும்பிலேயே கருகிப் போயிற்று. "சைவ உதயபானு" என்ற இதழுக்கும் இக்கதியே நேர்ந்தது ஸ்ரீ .ச. தம்பிமுத்துப்பிள்ளையின் "சன்மார்க்க போதினி" நீடித்த காலம் நிலை பெற்றது.

வலி வடக்குப் பிரதேசத்தில் ஈழத் திருமண்ணுக்கு மாண்புடன் மகிமை சேர்த்தோர் வரிசையிலே சரித்திர பிரசித்தி பெற்ற மாவை கந்தன் அமர்ந்திட்ட மாவிட்டபுரமும் மகத்துவம் மிகப்பெறு கின்றது.

இவ்வூரிலே வரலாறு மிகப் படைத்திட்ட பாண்டித்தியம் மிகப் பெற்றிட்ட, பெட்டிமிகு பேரறிஞர்கள் பலர் தோன்றினர். கால வெள்ளத்தால் அழியாத காவியமாயினர்.

இந்நோக்கிலே மாவையம்பதியிலே வாழ்ந்து தன், தன் தமிழாற்றியிலாளன லினால் செம்மையுற மொழிந்திட்ட பேறுடை "நவநீதக் கிருஷ்ண பாரதியார்" எனும் பெரும்புலவர்வாழ்ந்தனன் வளமார் ஆற்றலால் அருந்தமிழக்கு பெருமை மிக சேர்த்திட்ட புகழுக்கு உரியவனாயினன்.

அடுத்து, குருகவி என போற்றி புகழப்படுகின்ற மாவை மகாலிங்கசிவம் ஐயா அவர்கள் மகான்மியம் மிக்க இவ் வுன்னத புருஷர் வலிவடக்குப் பிரதேசத்திற்கு மாத்திரமன்றி மாநிலமெங்கும் தமிழர் தம் புகழ்தனை விரவிடச் செய்தார், பரவிடச் செய்தார் (இவரது தவப்பேறான புதல்வன் புலவர் ம. பார்வதிநாதசிவம் எனும் பெயர் கொண்டோன் தமிழ்ச் சிறப்பினை விளக் கின்ற வித்தகனாய் இன்றும் எழுத்துலகில் வீறு நடைபோடுகின்றார் என்பதனையும் ஈண்டு குறிப்பிடுதல் நலனே)

தொடர்ந்து மாவைக்கு பெருமை தந்த ஒப்பிலாக் கவிஞன் பண்டிதர் க.சச்சிதானந்தம் ஐயா அவர்களையும் பற்றி சில சொற்கள் பகர்தல் இன்றியமையாததொன்றாகின்றன.

சான் தமிழ்படித்துசாக வேண்டும் என் சாம்பர் தமிழ் மணத்து வேக வேண்டும் என்ற தொடரிலான அருந்தமிழ்க் கவிதையை யாத்தவர் எம் ஐயா

அவர்களே. புரட்சிக் கவிஞர் பாரதியாக கவிதை இதுவென அறிவிலார் கூறியது வாய்மை முன் நிற்குமோ? (வயாவிளானில் தோன்றிய மிகச்சிறந்த சட்ட வல்லுநரும் தனித்துவக் கவிஞனுமான வ. இராஜநாயகம் அவர்கள் நாமும் வரலாற்றுச் சிறப்புக்குரியது குரும்ப சிட்டி எனும் அறிவில் கோயோச்சிய குக் கிராமத்தில் ஜனனம் பெற்றிட்ட இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களைப் பற்றியும் விளம்புதல் ஒவ்வுதலே அவர் நடமாடும் பல்கலைக்கழகம் எனப் போற்றப்பட்டவர்.

"ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்ற அவரது நூல் தமிழ் நெஞ்சங்களால் மிக மிகப் பாரட்டுப் பெற்றது. தெல்லியூர் பாவலர் தெ. துரையப்பாப்பிள்ளை மகாஜனாக் கல்லூரி நிறுவுனர் சேர் கனகசபை, சிவானந்த ஐயா, பல்துறைவிற்பன்னரும் முன்னாள் யாழ் பல்கலைகழக உப வேந்தருமான பேராசிரியர் சு. வித்தியானந்தன், மல்லாகத்தை சேர்ந்த நமசிவாயப் புலவர், அவரது ஆற்றல் சேர் புதல்வரும் மிகச் சிறந்த ஆன்மிக வாதியும் சட்டத்துறை வல்லுநர்களில் ஒருவரும் "இந்து சாதனம்" என்ற மான்புமிகு இதழின் ஆசிரியராக இருந்து போராற்றல்மிகு பணிபுரிந்தவருமான நம சிவப்பிரகாசம், முன்னாள் பாடசாலை அதிபர் செ. அம்பிகைபாகன், அளவெட்டியைச் சேர்ந்த உருத்திரமூர்த்தி எனும் இயற்பெயர் கொண்டு பின்னர் "மஹாகவி" என்னும் புனைபெயரில் ஆக்கமுறு அருங்கவிதைகள் பலயாத்திட்டவர். பண்டிதர் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை கட்டுவனைச் சேர்ந்த இலக்கண தேசிகர், பண்டிதர் நமசிவாயம் குரும்பசிட்டியைச் சேர்ந்த இரசிகமணி கனக செந்திநாதனுடன் பண்டிதர் வ. நடராஜா வினது நாமமும் வரலாறு படைத்தோர் தமிழ் நடைக்கு அவள் மாட்சிமைக்கு அணிசேர்ந் தோர் பட்டியலில் குறிப்பிடப்பட்டேயாக வேண்டும். தமிழன்னைக்கு இணையிலாப் பெருமை நல்கும் வண்டமிழாளர் ஈழகேசரியும் பொன்னையா அவர்கள் மதிக்காதோரை கனம் பண்ணும் அருங்குணவாளர். அவர் தமது "ஈழகேசரி" இதழில் நமது பிள்ளைய வர்கள் இயற்கைப்புலவர் வரிசையிலே வைத்து மதிக்கப்படுவதற்குரியவர். தமிழிலக் கிய மறுமலர்ச்சிக்கு அப்ங்குரார்ப்பணம் செய்தவர்களில் பிள்ளையவர்களும் ஒருவர் என ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் பற்றி உரைத்து உவகையுறுகிறார். இப் பார்வையிலே எம் மாட்சிமையாளர் என வாழ்த்திப் போற்றத்தக்க ஒருவராக அளவெட்டி அ. செ. மு. என்ற கேண்மை யாளர் முருகானந்தர் அவர்களையும் நினைவு கூரல் சாலச் சிறப்புடைத்தேயாகும் மாவிட்ட புரத்துக்கும் இவரால் கீர்த்திமிகுந்தது நாடகத் துறையில் அளவெட்டி அ.ந. கந்தசாமி அவர்கள் ஆற்றிட்ட பெரும் பணிதனையும் மறப்பதற்கில்லை மாவிட்புரம், பேராசான் கு. பாலசுந்தரம் குருக்கள் இத்திருமிகு ஆற்றல் பெற்றவரேயாவார். இக் கட்டுரையானது ஓர் ஆய்வல்லவலி வடக்கி லே வாழ்ந்த ஆற்றலாளரை அளவிடும் அளவுகோலினானது மல்ல. ஏதோ யாதோ என நம்மவரில் பலர் அறிந்திடா இயற்றமிழாளர் பலர் நம்மிடையே வாழ்ந்து வளமார்ந்த ஆற்றல் தமிழ் அன்னைக்கு, அவள்தம் பெருமைக்கு அணிசேர்த்துள்ளனர். என்பதனை ஓரளவேனும் வெளிக் கொணர்தலே நோக்காகும். இத்தகைய ஆன்றோர் சிறப்பு காலங்காலமாய் நிலைத்து நிலை பெற்றிட நலம் அவர்தம் வரலாற் றினை ஆற்றிட்ட ஒப்பில்லாப்பணினை ஆதாரபூர்வமாகச் செம்மையுற நூல் வடிவில் அச்சிட்டமுனைப்புடன் முனைதலோ அவர்க்கு செய்தற்குரிய பொருத்தமான நன்றிக்கடனாக அமையும் இறையருளால் யாவும் நலமே.

**வழி**

இந்த உடல் என்றோ ஒரு நாள் விழத்தான் போகிறது. இதனைக் காப்பாற்றுவதற்காக மனிதன் தவறான வழிகளில் செல்லக்கூடாது.

தேகம் அழியகூடியது. ஆனால் ஸத்தியம் நிரந்தரமானது. ஆகவே ஸத்யத்துக்காகப் பாடுபடுங்கள். ஸத்தியத்தை வீட உயர்ந்தது வேறெதுவும் இல்லை. படைப்பு. ஸத்தியத்திலிருந்தே உருவாகி. ஸத்யத்திலேயே ஐக்யமாகிறது. ஸ்த்தியம் இல்லாத இடம் இவ்வுலகில் எங்காவது உண்டா?

இது மட்டுமே முழுமையான ஸத்யம்

–(தெலுங்குக்கவிதை)

அனைவரையும் ஒன்றாக எண்ணி எல்லோரையும் நேசித்திரு. அதுவே உண்மையான சாதனை.

–ஏக் பிரபுகே அனேக் நாம்.

# வலிகாமம் வடக்கில் பெண்கள்

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**
ஓய்வுபெற்ற அதிபர்

பெருமையும், மதிப்பும் மிக்க பெண்களையுடைய குடும்பமே சிறப்பாகப் போற்றப்படும். அதேபோல பெருமைக்குரிய பெண்களைத் தன்னகத்தே கொண்ட சமுதாயமும் நாடுமே மேன்மையுடையனவாகும்.

"எந்த நாட்டில் பெண்கள் பூரண சுதந்திரம் உடையவர்களாக வாழ்கிறார்களோ அந்தநாடே பூரணமான சுதந்திரமுடைய நாடாகும்" என்பது மகாத்மா காந்தி அவர்களின் கூற்று.

வீடும் நாடும் பெண்களினாற் றான் பெருமை பெறும். குடும்பம் எனும் நிறுவனத்தில் பெண்ணின் பணியும், பொறுப்பும் முக்கியத்துவம் உடையவை.

பிள்ளைகளின் சத்தூட்டம், உடல் நலம், ஒழுக்கம், கல்விகற்றல் தொடர்பான ஊக்குவிப்பு „உதவிகளிலும் பெண்களின் பங்களிப்பு முதன்மையானது. 'தாய்' என்ற வகையில் அடுத்த தலைமுறையின் உடல் ஆரோக்கியம், உளவளர்ச்சி என்பவற்றை நிர்ணயிப்பதில் பெண்கள் இயற்கையாகவே பிரதானபங்கு கொண்டுள்ளனர். இவற்றோடு நன்னடத்தை, மனிதவிழுமியங்களை மதித்தல் போன்ற நற்பண்புகளை வடிவமைத்தல், மேம்படுத்தல் என்பவற்றிலும் பெண்களின் பொறுப்புணர்வு முக்கியமானது.

இதுபற்றியே "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்றும் "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்றும் உலகப் பொதுமறையில் வள்ளுவப்பெருமான் சொல்லியுள்ளார். "எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணிற் பிறக்கையிலே, அவர் நல்ல வராவதும் வல்லவராவதும் அன்னை வளர்ப் பினிலே" என்று பிற்காலப் புலவர்களும் பாடியுள்ளனர். "தாயைப் போலபிள்ளை " என்பதும் பொன்மொழி.

குடும்பப்பெண்கள் அர்ப்பணிப்புடன் ஒரு நாளில் நீண்டநேரம், பல்வேறுவகைப்பட்ட வேலைகளை, வெவ்வேறு வகையான சிரமங்களுடனும், பல்வேறு மனவெழுச்சிகளுடனும் நிறைவேற்றுகின்றனர். ஆனால் அதற்குரிய வெகுமதிகள் குடும்பமட்டத்தில் வழங்கப்படுவதில்லை.

உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு, வழமையான வீட்டுவேலைகளோடு மேலதிகச் சுமையாகவே உத்தியோகம் அமைகிறது. குடும்பத்தலைவன் அளவுக்கு அல்லது அதனிலும் கூடுதலான வருமானம் பெறும் நிலையிலும் அவர்களது வீட்டு வேலைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதில்லை. அதனால் எம்மத்தியிற் பெண்கள் பெரும் சுமையான வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருப்பது வெளிப்படை

ஆதலால், நாம் வாழும் சமுதாயத்தில் பெண்களின் நிலைபற்றி ஆழமாக ஆராய்ந்து அறியவேண்டியதும், அதன்மூலம் பெறப்படும் தகவல்களைக் கொண்டு பெண்கள் வாழ்வை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான செயற்பாடு-களை மேற்கொள்வதும் ஒவ்வொருவரதும் சமுதாயக் கடமையாகும்.

இந்நோக்கில் வலிகாமம் வடக்கின் பெண்கள்பற்றிக் கிடைத்த சில தகவல்களைக் கொண்டு இக்கட்டுரை தொடர்கிறது.

### மக்கட்பரம்பல்

போர் காரணமாக யாழ். மாவட்டத்தில் மிகக்கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் வலி வடக்கு. இடம்பெயர்வுக்கு முன் வலிவடக்கில் 23,351 குடும்பங்களைச் சார்ந்த 83,618பேர் வாழ்ந்தனர். இவர்களில் 42,646 பேர் பெண்கள். இப்பொழுது (2000 ஜூன்) 5,780 குடும்பங்களைச் சேர்ந்த 19,967 பேர் மட்டுமே வாழ்கிறார்கள். இவர்களில் 10,201 பேர் பெண்கள். இடப்பெயர்வுக்கு முன்பிருந்த மக்களில் 63,651 பேர், ஏறக்குறைய ¾ பங்கு மக்கள் இப்போது இங்கு இல்லை. பெண்களில் அரைப்பங்கினருக்கு மேல் இங்கு இல்லை.

பெரும்பாலும் வசதிபடைத்தவர்களே வெளியேறியவர்களாவர்.வசதிகுறைந்தவர்களும் உடல் உழைப்பை நம்பிவாழ்பவருமே பெரும்

பாலும் மீளக்குடியமர்ந்துள்ளனர். இவர்களது வாழ்க்கைத்தரம், சமுதாய விழுமியங்கள் கவலைக்குரியனவாகவே இருப்பதைக் காண முடிகிறது.

### ஓய்வூதியர்கள்

இப்பிரதேசத்திலுள்ள ஓய்வூதியர்கள் 706 பேரில் 242 பேர் ஏறக்குறைய 1/3 பங்கினர் பெண்கள். இப்பெண்களில் உத்தியோகத்தி லிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களிலும் பார்க்க கணவனைஇழந்த காரணத்தால் அவர்களது விதவை ஓய்வூதியம் பெறுபவர்களே அதிகமுளர்.

### மாணவர்கள்

இப்பிரதேசத்திற் கல்விபயிலும் (2000 – மே 1) 7,994 மாணவர்களில் 3,827 பேர், ஏறக்குறைய அரைப்பங்கினர் பெண்கள். ஆண்களைவிடப் பெண்களே கல்வியில் அதிக ஈடுபாடும், திறமையுமும் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக உயர்கல்வியில் பெண்களின் விகிதமே கூடக்காணப்படுகிறது.

கற்பிக்கும் ஆசிரியர்களிலும் ஏறக் குறைய 2/3 பங்கினர் பெண் ஆசிரியர்களே. அலுவலகங்களில்உத்தியோகத்தவராயுள்ளவர்களிலும் பெரும்பாலானவர்கள் பெண்களே. காரணங்கள் எவையாக இருப்பினும் பெண்கள் கல்வித்துறையில் முன்னணியிற் திகழ்வது சமுதாய விழிப்புணர்வுக்கு நல்ல அறிகுறி எனலாம்.

### பெண்களின் தலைமைத்துவம்

வலிவடக்கின் பிரதான நிர்வாக பீடங்களிலெல்லாம் பெண்களே தலைமைதாங் குவதை அவதானிக்க முடிகிறது. வலி வடக்கின் பிரதேசச் செயலராக, அரச நிர்வாகத்தை நடத்துபவர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் (மேலதிக அரசாங்க அதிபர்) அவர்கள்.

வலி வடக்குப் பிரதேசசபையின் தலைவராயிருப்பவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் அவர்கள். தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாக (D.M.O) இருந்து வைத்திய சேவையை நிர்வகிப்பவர் டாக்டர் சிவராணி சிவசோதி (M.B.B.S) அவர்கள். சமய, சமூக சேவையில் உலகிற்கே முன்மாதிரியாயிருந்து அரும்பணிபுரிபவர் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

கலை, இலக்கியம், நாடகம், உளவளம், கல்வி முதலான பன்முகப்பணி களில் முன்னணியில் விளங்குபவர் பிரபல எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், (உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்கள்.

இவ்வாறு நோக்குகையில், வலிவடக்கில் நீர்வாக, சமய, சமூக, இலக்கிய, வைத்தியத் துறைகளிளெல்லாம் பெண்களின் தலைமைத்துவமே பெருமைப் படத்தக்க வகையில் அமைந்திருப்ப தைக்காணமுடிகிறது. மிகச் சிக்கலான காலகட்டத்தில், பல்வேறு வகையான வசதியீனங்களின் மத்தியில் பாரியநிர்வாகப் பொறுப்புகளுக்குப் பெண்கள் பொறுப்பாயிருந்து, இப்பிரதேச மேம்பாட்டுக்கு இடையுறாது உழைத்துவருவது முன்மாதிரியான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

இங்கு தலைமைதாங்கும் ஒவ்வொரு மகளிரும் வலிகாமம் வடக்கில் மட்டுமல்ல இந்நாட்டுக்கு அப்பால் உலக அரங்கிலும் பெருமைக்குரிய சாதனையாளர்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா அவர்கள் அறிவுத்திறனும், ஆளுமையும் அனுப வமும் அஞ்சாமையும் கருணையும் நிறைந்த சிறந்த நிர்வாகியாகத் திகழ்கிறார். இவர் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் விளங்குகின்றார். அத்துடன் சிறந்த கவிஞராகவும், சிறுகதை, எழுத்தாளராகவும், கலைஞராகவும், பேச்சாளராகவும் விளங்குவதால் ஆழமான சமூகநோக்குடன் மக்கள் சேவையில் ஈடுபடும் பெருமைக்குரியவராகிறார். வலிவடக்கில் ஒரு சிறு பிரதேசமே பாதுகாப்புப் படையால் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதும், இவரது துணிகரமான, உறுதியான செயற்பாட்டினால்தான் இன்று மேலும் பலபகுதிகள் மக்கள் குடியமரவும், பாடசாலைகள் கோயில்கள் இயங்கவும், விவசாயம் செய்யவும், போக்குவரத்து வசதிகள் மேம்படவும் வாய்ப்பாயிற்று.

சமய, சமூகசேவையில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவரா யிருந்து உலகம் வியந்துபோற்றும் வண்ணம் பணிசெய்யும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், ஆலயப்பணியின் ஊடாகச் செய்துவரும்

மக்கள் பணியின் மகத்துவத்தைச் சொல்லில் அடக்கமுடியாது. துர்க்காபுரம் மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், சைவத்தமிழ் ஆய்வு நூலகம், பெண்கள் தொண்டர் சபை முதலான பல அமைப்புகளினூடாகவும் செய்துவரும் அறப்பணிகள் அளவிடற்கரியன. சிறந்த தூய்மையான அறிவும், பேச்சாற்றலும், அருள் உள்ளமும், தொண்டுணர்வும் கொண்டு விளங்கும் தலைவி அவர்கள் எல்லோருக்கும் அன்னையாகவே திகழ்கிறார்.

பிரதேச சபைத்தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் அறிவுத்திறம்மிக்க பட்டதாரி ஆசிரியையாக விளங்கியவர். கணவனின் அளப்பரும் சேவைகளுக்குத் தோன்றாத் துணையாக விளங்கியவர். கணவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மக்கள் பணிபுரிகின்றார்.

இலங்கையிலேயே முதலாவது தமிழ் நவீனம் வலி. வடக்கைச் சேர்ந்த திருமதி மங்களநாயகம் தம்பையா அவர்களால் எழுதப் பட்ட "நொறுங்குண்ட இதயம்" என்பது ஈழத்து இலக்கியவரலாறு கூறும் செய்தியாகும். அன்று முதல் இன்றுவரை பல பெண் எழுத்தாளர்கள் இங்கு உதயமாகியுள்ளனர். இன்று இங்கு வாழ்பவர்களில் முதன்மை பெறுபவர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் ஆவர். சிறுகதை, நவீனம், கவிதை, உளவளம், நாடகம், விஞ்ஞானம் முதலாம் பல்துறை எழுத்தாளராக விளங்கும் இவரது நூல்கள் பல ஈழத்திலும், உலக அரங்கிலும் பரிசு பெற்றுள்ளன. பெண்களின் சிந்தனைகள் செயற்பாடுகளைக் கலைகளினூடாக மேம்படுத்தும் இவரது தலைமைத்துவம் வியக்கத்தக்கது எனலாம்.

இவ்விதம் வலி. வடக்கில்மேலும் பலபெண்கள் எழுத்தாளர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், டாக்டர்கள், சமூகசேவை யாளர்கள், அதிபர்கள், கலைஞர்கள், நிர்வாக அதிகாரிகள் முதலான பதவிகளில், சமூகத்தின் மேல்மட்டத்தில் இப்பிரதேசத்திற்கு வெளியிலும் சேவை செய்கின்றனர்.

## பாதிக்கப்பட்ட பெண்கள்

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தும், பாரிய இழப்புகளுக்குள்ளா கியும், மீளக்குடியமர முடியாமலும், இயற்கை வளங்களை இழந்தும் மிகக்கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பகுதி வலி. வடக்கு. இங்கு ஏறக்குறைய ½ பங்கிற்கு மேற்பட்ட பிரதேசம் இன்னும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இவ்வித இழப்புகளால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. குடும்பத்தில் பெண்களுக்கே பொறுப்புணர்வு அதிகம் என்பது சொல்லாமலே தெரியும். உதாரணமாகத் தன் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும், பெற்றாருக்கும் அடுத்தநேரச் சாப்பாடு என்ன என்பதைச் சிந்திப்பவள் பெண்ணே. அதனால் குடும்பத்திற்கு ஏற்படும் ஒவ்வொரு இழப்பும் ஆண்களைவிடப் பெண்களையே பெரிதும் பாதிக்கின்றது.

## உளப்பாதிப்பு

இழப்புகளால் உளப்பாதிப்புக் குள்ளான பெண்களில், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் மட்டும் 1999 சித்திரை முதல்2000 பங்குனி வரை 3,744பேர் உளவளச் சிகிக்சை பெற்றுள்ளார்கள் (இவர்களில் ஒரு பகுதியினர் வலி வடக்கிற்கு வெளியிருந்தும் வந்திருக்காலம்). உளப் பாதிப்புக்கு உள்ளானோரில் வைத்தியசாலைக் குவராமல் வீட்டில்இருக்கும் பெண்களும் பலர் இருப்பது தவிர்க்க முடியாததாகும்.

வைத்திய அதிகாரிகள் இவர்களின் உளப்பாதிப்புக்குரிய காரணங்களை ஓரளவு இனங்கண்டுள்ளனர். 1. குடும்பப்பளுவைச் சுமத்தல் 2. தனிமைப்படுத்தப்பட்டு எந்நேரமும் வீட்டில் முடங்கியிருத்தல் 3. மற்றவர்களில் தங்கியிருத்தல் 4. பரீட்சை முடிவுகளில் ஏமாற்றம் 5. காதல் தோல்வி – திருமணப்பிரச்சனை முதலான பல காரணிகள் உள.

வைத்தியசாலைப் புள்ளிவிபரத்தின் படி 1999 சித்திரை முதல் 2000 பங்குனி வரை உளநோய்ச் சிகிச்சைபெற்றோர்- முதல் வருகை ஆண் 114, பெண் 120, தொடர்வருகை -ஆண் 2933 பெண் 3624 என அறியமுடிகிறது. இதன் மூலம் உளப்பாதிப்புக்குள்ளானவர்களில் பெண்களே அதிகமாயிருப்பதைக் காணமுடிகிறது.

## கணவனை இழந்த பெண்கள்

வன்செயல், காணாமற்போதல், தற் கொலை, விபத்து, நோய் முதலான காரணங் களால் கணவன்மாரை இழந்து குடும்பச்சுமை யைத் தாங்க முடியாமற் தவிக்கும் குடும்பத் தலைவிகள் 603 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். கணவனை இழந்தோரில்

20 வயதுக்குட்பட்டோர் 02 பேர்
21 – 30 வயதுக்குட்பட்டோர் 07 பேர்
31 - 40 வயதுக்குட்பட்டோர் 46 பேர்
41 - 50 வயதுக்குட்பட்டோர் 83 பேர்
51 – 60 வயதுக்குட்பட்டோர் 150 பேர்
60 வயதுக்குமேற்பட்டோர் 315
மொத்தம் 603 பேர். இவர்களில் வன்செயலால் இறந்தோர்- 55 பேர், காணமறபோனோர், தற்கொலை செய்தோர் -23 பேர் விபத்துக்களால் இறந்தோர் - 54 பேர்
நோய் ,இயற்கைமரணமடைந்தோர்- 471 பேர். கணவனை இழந்த இப்பெண்கள் வாழ்க்கையில் விரக்தியடையாவண்ணம் சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்கள் மூலம் பல்வேறுவகைப் பட்ட உதவிகளைப் பிரதேச செயலகம் செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

**பெண்கள் நலம் பேணும் அமைப்புக்கள்**

பிரதேசசெயலகம், துர்க்காபுரம் மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், பெண்கள் தொண்டர் சபை, உழைக்கும் மகளிர்அபிவிருத்தி நிறுவனம், மகளிர் ஆய்வு நிறுவனம், தேசிய கூட்டுறவுச்சபையின் மகளிர் பிரிவு, மகளிர் கிராமஅபிவிருத்திச் சங்கங்கள் முதலான பல அமைப்புக்கள் பெண்களின் நலம் பேணும் பணியில் (இடம்பெயர்வுக்குமுன்) செயலாற்றிவந்தன. இப்பொழுது அவற்றிற் சில மட்டுமே இயங்குகின்றன.

பிரதேசசெயலகம் – வாழ்க்கையிற் பாதிப்புக்குள்ளான பெண்களுக்குப் பல்வேறு உதவிகளையும், சுயதொழில் வாய்ப்புக்களையும், தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்குரிய ஊக்குவிப் புக்களையும், பிரதேச செயலகம் அரசின் உதவியுடனும், வெளிநாட்டு உதவிவழங்கும் நிறுவனங்கள், உள்ளூர் அமைப்புக்கள் மூலமும் செய்துவருவது யாவரும் அறிந்ததே. இச்செயல் பெண்களைப் போற்றிவாழும் நன்மனப்பாங்கை மக்கள் மத்தியில் வளர்ப்பதாயும் உளது எனலாம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லம் : அன்னை காலநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும், இந்நிலையம் 1982. 02.03 இல் தொடங்கி இன்றுவரை தொடர்ந்து பணியாற்றி வருகிறது. மகளிரின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதுடன் அறிவுப்பசியையும் ஆன்மீகப்பசியையும் தணித்து ஆன்மீக நெறியில் பெண் சமுதாயத்தை உருவாக்குதல். அதன் மூலம் ஒரு சிறந்த மனிதசமுதாயத்தை உருவாக்குதலை நோக்க மாகக் கொண்டுள்ளது. இதுவரை ஏறக்குறைய ஆயிரம் (1000) பெண்குழந்தைகளுக்கு நல்வாழ்வளித்த பெருமைக்குரியது. இவ்- வில்லம் தம்சொந்தக் காலில் நிற்கக்கூடிய தகைமைபெற்றுத் திருமணம் செய்தும், வெளிநாடு சென்றும், உத்தியோகத்தமர்ந்தும் நல்வாழ்வு வாழ்ந்துகாட்டும் சமுதாய முன்னோடிகளாக இவ்வில்லத்தால் உருவாக்கப் பட்ட மகளிர் விளங்குகின்றனர். இன்று 57 பெண்பிள்ளைகள் இங்கு வளர்கின்றனர்.

சிவத்தமிழ்ச் செல்வீ அன்னையர் இல்லம் : கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 75 வயது நிறைவு 'பவளவிழா' நினைவாக 07.01.2000 அன்று, வயதுவந்த தனிப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கான 'அன்னையர் இல்லம்' துர்க்காபுரத்தில் தொடங்கப்பட்டது. இங்கு பதின்னான்கு (14) அன்னையர்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இலவசமாகவே வழங்கப்படுகிறன. இவர்கள் பல்வேறு தெய்வீக, கல்வி, சமூகப்பணிகளில் ஈடுபட்டுப் பயன்பட வாழ்கிறார்கள்.

துர்க்காதேவி பெண்கள் தொண்டர்சபை : தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயத்தைக் களமாகக் கொண்டு 1979 ஆம் ஆண்டு தைத்திங்களில் இச்சபை உருவாக்கப்பட்டது. கல்வி, அறிவு, ஒழுக்க நெறிகளில் பண்பட்ட பெண்மணிகள் தங்கள் குடும்பப் பொறுப்புக் களையும் நிறைவேற்றிக் கொண்டு ஓய்வு நேரங்களில் ஆலயச் சரியைத் தொண்டுகள், கூட்டு வழிபாடு, வழிபடுவோருக்கு உதவுதல், மகளிர் இல்லப்பிள்ளைகளுக்கு உதவுதல் முதலான தொண்டுகளைச் செய்துவருகின்றனர். இச்சபையில் ஐம்பதுக்கு (50) மேற்பட்ட பெண்கள் சேவை செய்வது குறிப்பிடத்தக்கது.

பெண்களின் நலம்பேணும் ஏனைய அமைப்புக்கள் இன்னும் தம்பணியை மீளத் தொடங்குவதற்குரிய வாய்ப்பைப் பெறவில்லை யென்றே கருதப்படுகிறது.

மீளக்குடியமர்வுக்குப்பின் புதியதோர் சமுதாய உருவாக்கம் நாளொருவண்ணம் நடந்துகொண்டே இருக்கிறது. உருவாகும் புதிய சமுதாயம் நல்லதோர் சமுதாயமாக உருவாகுவதற்குப் பெண்களின் நலன்களைப் பேணி ஊக்குவிக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் கிராம அபிவிருத்திச்சங்கங்கள்

**திருமதி .க.சிவராசா**
**கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்**

இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம்பெற்ற 1948ம் ஆண்டில் கிராமங்களின் அபிவிருத்திக்கென கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இச்சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலுள்ள மக்களை நிர்வாகமயப்படுத்தியது மட்டுமன்றி தம்மைத்தாமே நிர்வகிக்கக் கூடிய வகையில் மக்களை அணிதிரட்டி தன்னம்பிக்கையையும் ஊட்டியது. இதன்பிரகாராம் கிராமங்களில் சிறந்த சமூக சேவையாளர்கள் தோன்றினர். சிறந்த நிர்வாகத்திறமை படைத்தோர் இனங் காணப்பட்டனர். இவர்கள் தத்தமது கிராமங்களை எவ்வாறு அபிவிருத்தி செய்ய வேண்டுமென கிராமத்தில் கூடி ஆராய்ந்தனர். போக்குவரத்து வசதிகள் அதாவது வீதிகள் அமைத்தல், சுயதொழில் முயற்சிகள், சுகாதாரம், கல்வி, விவசாய உற்பத்திகள் போன்ற விடயங்களில் அபிவிருத்தி அடைய வேண்டுமென இனங்கண்டனர். இதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதி உதவிகளை வழங்கி இன்னும் வழங்கி வருகின்றன. தற்போது வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் 14 கிராம அபிவிருத்தி சங்கங்கள் இயங்கிவருகின்றன அவையாவன

| | | | |
|---|---|---|---|
| அளவெட்டிமேற்கு | கிராம | அபிவிருத்தி | சங்கம் |
| அளவெட்டி தெற்கு | “‘ | “‘ | “’’ |
| அளவெட்டி வடக்கு | “‘ | “‘ | “’’ |
| அளவெட்டி கிழக்கு | “‘ | “‘ | “’’ |
| கணேஸ்வரம் | “‘ | “‘ | “’’ |
| அளவெட்டி மத்தி | “‘‘ | “‘ | “’’ |
| மல்லாகம் தெற்கு | “‘ | “‘ | “’’ |
| குரும்பசிட்டி | “‘ | “‘ | “’’ |
| கட்டுவன் மேற்கு | “‘ | “‘ | “’’ |
| கட்டுவன் | “‘ | “‘ | “’’ |
| மாவிட்டபுரம் | “‘ | “‘ | “’’ |
| கொல்லன்கலட்டி | “‘ | “‘ | “’’ |
| பன்னாலை | “‘ | “‘ | “’’ |
| இளவாலை வடக்கு | “‘ | “‘ | “’’ |

மேற்படி சங்கங்கள் தத்தம்பகுதிகளில் கிராம அபிவிருத்திப்பணிகளை சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றன

## மல்லாகம் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வளர்ச்சியும் தற்போதைய நடவடிக்கைகளும்

1953ம் ஆண்டு மல்லாகத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று உருவாகியது மறைந்த சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் அவர்களை தலைவராகக் கொண்டு அது ஆரம்பிக்கப்பட்டது. “மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கம்” என பெயரிடப்பட்ட இந்தநிறுவனம் பிறநாடுகளின் தூது வராலயங்களிடமிருந்தும், உலகின் பல்வேறு பாகங்களில் இருந்துவந்த உதவி வழங்கும் அமைப்புகளிடம் இருந்து தாராள மாக நிதிஉதவிகளைப் பெற்று சமூக அபிவிருத்தித் திட்டங்கள், சுகாதாரத் திட்டங்கள், வன்செயல்களால் பாதிக்கப் பட்டோருக்கு உதவிகள், வேலை வாய்ப்புத் திட்டங்கள், கடன் வசதித் திட்டங்கள், ஊக்குவிப்புத் திட்டங்கள், விளையாட்டுத் துறைச் செயற்பாடுகள், கல்வித்திட்டங்கள், போன்றவற்றைப் பெரிய, சிறிய அளவுகளில் நடைமுறைப்படுத்திவந்தது. இந்நிதிஉதவிகளைப் பெறுவதிலும், அதைச் சரிவரப் பயன்படுத்துவதிலும் அதற்கான திட்டங்களை வகுப்பதிலும் இச்சங்கத்தின் தலைவர் திரு சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் அவர்களே தன்நேரத்தைக் கூடுதலாகக் செலவுசெய்தார் என்பது இங்கே சிறப்பாக குறிப்பிட வேண்டிய விடயமாகும். அவர் நடைமுறைப்புடுத்திய திட்டங்களிற் சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றோம் 1982 களிலும் 1990 களிலும்325 மலகூடங்கள் மல்லாகத்திலுள்ள ஏழைக்குடும்பங்களுக்கும், அயற் கிராமத்தில் இருக்கக்கூடிய ஏழைக் குடும்பங்களுக்கும் அமைத்துக் கொடுத்தது ஓர் பெரிய திட்டமாகும். மல்லாகம் பகுதியிலுள்ள 97 கிணறுகளிற்கு வெளி வெள்ளம் புகாத வண்ணம் சுற்றுமதிலும் முற்றமும் அமைத்துத் தரப்பட்டது. 34 வீடுகளுக்கு அத்திபாரமும், மூலைக் கட்டுகளும், சுவர்களும் அமைத்துக் கொடுக் கபட்டன. வீதி மின்கம்பங்களுக்கு ரீயூப்லைற் அமைத்தல்,

விவசாயிகளுக்கு குரக்கன் மரக்கறிச் செய்கை போன்றவற்றுக்கு நிதி உதவிவழங்கல் போன்ற நடவடிக்கைகளை நிறைவேற்றியமை சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டன.

சுகாதாரத்திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள வைத்திய சாலைகளுக்கு 15 கதிரைகள், 15 யூனிற் 7 X – கதிர்இயக்கஇயந்திரங்கள், 10 கபினெற, 6 கொம்பிறெசர்கள், 8 ஸ்மெரிலைசர்கள், 20 சி.ரி. என் கள் ஆகியவற்றை அமெரிக்க பல் வைத்திய நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக் கொடுத்தது இங்கு சிறப்பாக குறிப்பிடத் தக்கதாகும்.

வன்செயலாற் பாதிக்கப்பட்டோருக்கு 1983ல் உடுபிடவைகள் வழங்கப்பட்டன. 1983இல் வலிவடக்கிலுள்ள 870 விவசாயக் குடும்பங்களுக்கு மண் வெட்டிகள், புல்லுச் சத்தகங்கள் வழங்கப்பட்டன. வலி வடக்கில் கரையோரக் கிராமங்களில் வாழும் 1786 மீனவர்களுக்கு 1988ம் ஆண்டில் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.அதே ஆண்டில் 29ஐபெண்களுக்கு தையல் இயந்திரங்களும் 18 பெண்களுக்கு கறவை மாடுகளும் வழங்கப்பட்டன. 1990 இல் இடம்பெயர்ந்த தமிழ் அகதிகளில் ஐவருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட 712 குடும்பங்களுக்கு உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

1981, 1983 களில் சுமார் ஆயிரம் வேலை வாய்ப்புகளைச் சீமெந்து கூட்டுத்தாபனத்திலும், 72 பேருக்கு 1983இல் மத்திய கிழக்கு நாடுகளிலும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. 1987 இல் மல்லாகத்தில் தும்புத்தொழிற்சாலை ஒன்றை நிறுவி 160 பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியது. 70 பெண்களுக்குத் தையற் பயிற்சியும் வழங்கப்பட்டது. தாழ்ந்த பிரதேசத்தில் உள்ள 22 பேருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. கடன் அடிப்படையில் 4மூ வட்டிக்கு கறவைப்பசு வளர்ப்புக்கென 3000.ஷ்ரீ வீதம் 75 பேருக்கும், 1000.ஷ்ரீ வீதம் நல்லின கடா வளர்ப்புக்கென 7 பேருக்கும், 450.ஷ்ரீ வீதம் பால் ஆடு வளர்ப்பிற்கு 101 பேருக்கும் கடன்கள் வழங்கப்பட்டன.. 1985 முதல் வடமாகாணத்திலுள்ள மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணத்தில் உள்ள திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள 178 நூல் நிலையங்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

உதைபந்தாட்டம், கிரிக்கற் ஆட்டம் போன்ற விளையாட்டுக்கள் உட்படசகல விளையாட்டுக்களையும் நடாத்தக்கூடிய அளவுக்கு விளையாட்டு மைதானம் ஒன்றை மல்லாகத்தில் அமைத்து விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் பணியை மேற்கொண்டதை வலி வடக்கிலுள்ள சகல மக்களும் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் பொதுச் சேவையின் அதியுயர் நிலை எனப் போற்றிவருகின்றனர். மறைந்த அந்த மகானின் சேவைகளை நாமும் போற்றுகின்றோம். இது போன்ற சேவைகளை அனைத்துக் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் மேற் கொள்ளுமாயின் வலிவடக்கின் அபிவிருத்தி உச்சநிலை அடையும் என்பதிற் சந்தேகம் இல்லை, தன்நலம் பாராது பிறர் நலமே நோக்காகக் கொண்ட மறைந்த அந்தத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனைப் பணிவோம்..

## அளவெட்டி ப்பகுதியில் கிராம அபிவிருத்திச்சங்கங்களின் வளர்ச்சியும் தற்போதைய நிலையும்

அளவெட்டிக் கிராமத்தில் 1965 களுக்கு முன்புரிந்துணர்வு அடிப்படையில் புத்திஜீ விகளை உள்ளடக் கிய ஓர் கிராமசங்கம் உருவாக்கப்பட்டது இச்சங்கம் அளவெட்டிப் பகுதி முழுவதினதும் அபிவிருத்திப்பணி களை தன்னாலான அளவுக்கு நிறைவேற்றி வந்தது 1965களின் பின் இரண்டாவதாக "அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம்" என்ற பெயரில் ஓர் சங்கம் உருவாக்கப் பட்டது. இச்சங்கம் தன்னை முறைப்படியாக பதிவு செய்து கொண்டது. இதன் தலைவராக திரு. ச. அப்பாத்துரை ஆசிரியர் அவர்கள் இருந்து வந்தார். தற்போதுள்ள பிரதேசசபைக்குப்பதிலாக கிராமசபை என்ற உள்ளூராட்சி அமைப்பும் இந்நாள் பிரதேச செயலகத் திற்குப் பதிலாக (DRO கந்தோர்) பிரதேச இறைவரிக் காரியாலயம் என்ற அரச நிர்வாக அமைப்புக்களும் இருந்து வந்தன. இந்த அமைப்புக்களிடம் இருந்து உதவி களைப் பெற்றே மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

வீதிகள் அமைத்தல், திருத்த வேலைகளை மேற்கொள்ளல், கட்டிடங்கள் அமைத்தல், சுகாதாரக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்தல் போன்ற

நடவடிக்கைகளை தன்னாலான அளவுக்கு செய்து வந்தது. கீரிமலை கமநலசேவைக் கட்டடத்தின் மதில் வேலையை பொறுப் பேற்று செய்தமை இவ்விடத்தில் விசேடமாகக் குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

*தற்போது* அளவெட்டியில் இயங்கிவரும் ஆறு கிராமசேவையாளர் பிரிவுகளாகிய அளவெட்டி மேற்கு, தெற்கு, வடக்கு, மத்தி, கிழக்கு, கணேஸ்வரம் ஆகிய பகுதிகளில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அளவெட்டி மேற்கு பகுதியில் கடந்தவருடம் பல சேவைகளை அப்பகுதிச் சங்கம் மேற்கொண்டு வந்தது. வீதிகளுக்கு குறுக்கே அமைந்திருந்த இராணு வேலிகளை அகற்றி போக்குவரத்திற்கு வழி கோலித் தந்தது. உரிய இராணுவ அதிகாரிகள் பிரதேசச் செயலர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு போக்குவரத்துப்பாதைகளில் உள்ள கண்ணி வெடிகளை அகற்றுவித்து மக்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்தியது. மேலும் முன்னைய முருங்கையப்புலமும் தற்போதைய முருக புரமும் ஆகிய விவசாயப் பிரதேசத்தில் ஓர் குளாய்க்கிணறு தோண்டும் வேலையை பொறுப்பேற்று செவ்வனே நிறைவேற்றியது. அத்தோடு காட்டுப்புலம் பகுதியிலும் குளாய்க்கிணறு அமைத்து அதற்கென ஓர் நீர்த் தாங்கியையும் அமைத்துக் கொடுத்தது. இந்த வகையிலே அளவெட்டி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கடந்த வருடம் தன்னாலான சேவையை மக்களுக்கு வழங்கி உள்ளது

## மாவிட்டபுரத்தில் கிராம அபிவிருத்திச்சங்கங்கம்

ஒரு தசாப்த்திற்கு உட்பட்ட காலத்தில் இடம்பெயர்ந்த நிலையில் 1992 இல் மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் எல்லைப் பகுதிக்குள் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்ட புரம் கந்தசாமி கோவில், அலுமினியம் தொழிற்சாலை, வாளித் தொழிற்சாலை போன்றவை அடங்கியுள்ளன. இச்சங்கம் சுயதொழிலை ஊக்குவித்தல், புணர்வாழ்வுத் திட்டங்களை உருவாக்குதல் போன்ற வேலைத் திடங்களை மையமாகக் கொண்டதாகும். இடம்பெயர்ந்து தற்காலிக இடத்தில் இயங்கிவரும் இச்சங்கம் கூட்டங்களை நடாத்துதல், பயிற்சி வகுப்புக்களை நடத்துதல், சிறுஒப்பந்த வேலை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் தமது சொந்த இடங்களில் குடியேறும் நன்நாளை எதிர்பார்த்தவண்ணம் மக்கள் இருக்கிறார்கள்.

## குரும்பசிட்டியில் கிராம அபிவிருத்திச் சங்கம்

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் 1948 இல் ஆரம்பித்து பல சமூக சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. குரும்பசிட்டியில் சமூக சேவைக்கென 1936 இல் உருவாக்கப்பட்டு சன்மார்க்க சபை என்னும் கட்டடத்தில் இயங்கி வந்தது. கிராமத்தின் சகல முற்போக்கு நடவடிக்கை களும் இச்சங்கத் தினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இச்சங்கத்தை சிறந்த முறையில் நடத்தி வந்த ஈழகேசரி திரு. நா. பொன்னையா 1952 இல் மறைந்தார். இவரின் மறைவு சங்கத்திற்கு பேரிழப்பை கொடுத்தது. இச்சங்கத்தின் நீண்டகாலத் தலைவராக திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் இருந்து வந்தார். 1990 களில் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வு காரணமாக சங்கம்மிகவும் பாதிப்படைந்தது. அவ்வாறு இடம் பெயர்ந்த போதும். உரும்பிராயில் இயங்கிவரும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த ஒன்பது வருடங்களாக இச்சங்க அங்கத் தவர்களை ஒருங்கிணைத்து பொதுக் கூட்டங்கள் செயற்குழுக் கூட்டங்கள் போன்ற வற்றை நடாத்தி வருகிறது. கல்வியை தொடரமுடியாத ஏதிலிமாணவர்களுக்கு உதவுதல், பொதுப்பரீட்சையில் சித்திஎய்தும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தல், கிராமப்பெரியார்களை நினைவு கூருதல், ஒப்பந்த அடிப்படையில் வேலைகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. பொதுநூலகம் ஒன்றை அமைக்க சங்கத்தின் நிதியிலிருந்து 82,400/= செலவு செய்துள்ளது. இவ்வருடத்திற்குள் சங்கத்தின் நிதி நிலையை ஒரு லட்சமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

## மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராமங்களில் வசிக்கும் பெண்களின் மேம் பாட்டுக்காகவும், அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் அவர்களை சமூக பொருளாதார ரீதியாக வலுமிக்க மாதர்க ளாக மாற்றுவதற் காகவும் ஆரம்பிக்கப் பட்ட ஓர் அமைப் பாகும். இவ் அமைப்பு எல்லாக் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இயங்கிவரக் கூடிய சட்டபூர்வமான அமைப் பாகும்.

குறிப்பாக வேலையற்ற பெண்களை இனங்கண்டு முறைப்படியான தொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களை சமூகத்தில் ஓர் வல்லமை மிக்கவர்களாகவும் தமது சொந்தக் காலிலேயே நின்று வாழ்க்கையை நடத்தக்கூடிய சக்தி மிக்கவர்களாகவும் மாற்றுதல், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கணவனை இழந்தவர்கள் போன்ற பெண்களின் மறு வாழ்வு தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற நன்மை தரும் பணிகளை மேற்கொள்வதற்கு பெண்களே நிர்வாகமயப்படக் கூடிய அளவுக்கு அவர்களை தயார்ப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் இச்சங்கம் ஈடுபட்டு வருவது கண்கூடு.

வலி வடக்கு பிரதேசத்தில் தற்போது 8 மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அவை வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| 1) அளவெட்டி கிழக்கு சங்கம் | மாதர் | கிராம | அபிவிருத்தி | |
| 2) அளவெட்டி மேற்கு | "" | "" | "" | "" |
| 3) அளவெட்டி தெற்கு | "" | "" | "" | "" |
| 4) மல்லாகம் வடக்கு | "" | "" | "" | "" |
| 5) கட்டுவன் | "" | "" | "" | "" |
| 6) குரும்பசிட்டி | "" | "" | "" | "" |
| 7) தெல்லிப்பளை | "" | "" | "" | "" |
| 8) பன்னாலை | "" | "" | "" | "" |

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொறுப்பதிகாரியாக (RDO) திருமதி கலைமகள் சிவராசா அவர்கள் கடமையாற்றி வருகின்றார். இவரது சீரான வழிகாட்டலின் அடிப்படையிலேயே இச்சங்கங்கள் இயங்கி வருகின்றன.

## அளவெட்டியில் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

அளவெட்டி மேற்கு, அளவெட்டி கிழக்கு, அளவெட்டி தெற்கு, ஆகிய கிராம சேவை யாளர்கள் பிரிவுகளில் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அளவெட்டி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கம் ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் இருந்து மகளிரின் அபிவிருத் திக்கு தன்னாலான சேவைகளை ஆற்றி வருகிறது. கடந்த 1999 இல் சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இச்சங்கம் (திருமதி செல்வராணி சிவபாதசுந்தரம், திருமதி குலச்சந்திரன் கருணாமலர்) ஆகிய இரு குடும்பப் பெண்களுக்கு அவர்கள் சுயமாக தொழில் புரிந்து சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்பதற்கு உறுது ணையாக தலா 10,000 ரூபாவை வங்கியில் இருந்து கடனாகப் பெற்றுக் கொடுத்துள்ளது இக்கடனை பெற்றுக் கொண்ட இருவரும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள். இவர்கள் தற்போது வங்கிக்கடனை ஒழுங்காக செலுத்தி வருவதோடு தங்கள்ஜஅன்றாட வாழ்க்கை யையும் சீராக நடாத்தி வருகின்றனர்.

21ம் நூற்றாண்டில் ஆரம்பமாகிய இந்த இரண்டாயிரமாவது ஆண்டில் அளவெட்டிமேற்கில் தையல் பயிற்சி நெறி ஒன்றை பிரதேசச் செயலர், கிராம சேவையாளர் ஆகியோரின் அனுசரணையுடன் 30 பெண்பிள்ளைகளுடன் ஆரம்பித்துள்ளது. இப்பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறந்த தையல் தொழில் தெரிந்தவர்களாக தையல் உலகிற்கு அறிமுகமாக உள்ளனர். இது போன்ற பல

சேவைகளை எதிர்காலத்தில் செய்வதற்கு இச்சங்கம் திட்டமிட்டுள்ளது.

1999 இல் அளவெட்டி கணேஸ்வரம் பகுதியில் ஓர் தையல் பயிற்சி நிலையத்தை கணேஸ்வரம் கிராம அபிவிருத்திச்சங்கம் நடாத்தி வந்தது. இதற்கு பிரதேச செயலர், கிராம சேவையாளர் ஆகிய அதிகாரிகளின் அனுசரணைகிடைத்தது. இதன் மூலம் 30 பெண்களை இந்த தையல் தொழிலாளராக உருவாக்கியது.

1999 இல் அளவெட்டி கிழக்கு கிராமம் சமூக ஆற்றுப்படுத்தல் முறைத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு UNDP நிறுவனம் முன்வந்தது இந்த வகையில் UNDP நிறுவனத்திற்கு நன்றிகள் பல சொல்கிறோம்

## மல்லாகத்தில் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்

மல்லாகத்தில் 1998 இல் ஓர் தையல் பயிற்சி நிலையத்தை மல்லாகம் வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கம் ஏற்படுத்தியிருந்தது. இதன் மூலம் இப்பகுதி வாழ் யுவதிகளுக்கு பயிற்சியை சிறந்த முறையில் வழங்கி வந்தது. இதன் பயனாக அப்பகுதியில் இருக்கும் பெண்கள் எதிர்காலத்தில சுயமாக தொழில் புரிந்து வருமானத்தை ஈட்டக்கூடிய அளவுக்கு தனது சேவையை இச்சங்கம் புரிந்துள்ளமை இங்கு குறிப்பிட முடியும்

மேலும் மல்லாகம் தெற்கு பகுதியில் சுயதொழில் நடவடிக்கைக்கு ஊக்கம் கொடுக்கும் முகமாக திருமதி ராகினி தங்கராசா அவர்களுக்கு தையல் தொழில் அபிவிருத்திக்கு என ரூபா 30,000/= ஐ கடனாக கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் பெற்றுக்கொடுத்தது. அடுத்த படியாக சோ. பாலகௌரி, பொ. சந்திரவதனா, ச.இன்பராணி ஆகிய மூவருக் கும் தையல் தொழில் அபிவிருத்திக்கென தலா 1500ரூபாவையும் வங்கிக்கடனாக பெற்றுக்கொடுத்து தனது சேவையை வெளிப் படுத்தி வருகிறது மல்லாகம் வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

### மாணவன்

கல்வியில் ஆர்வம் கடமையில் ஓர்மம்
கருத்தினில் சீலம் கனிந்திடும் பாவம்
குருவிடம் பணிவு குணத்தினில் உயர்வு
கொண்டவன் எவனோ அவனே மாணவன்

கற்ற கல்வியில் பற்றுதல் கொண்டு
முற்று முணர்பவன் முதன்மை மாணவன்
பெற்ற கல்வியால் தான் பெறும் இன்பம்
வையகம் பெறவே நினைப்பவன் மாணவன்

உற்ற நண்பனாய் உடன்துணை இருந்து
சுற்றம் காப்பவன் அரிய மாணவன்
நற்றிணை நூல்களும் நலன்தரு கலைகளும்
வற்றிடாப் பொய்கையாய் வளர்ப்பவன் மாணவன்

வறுமையிற் செம்மை வாழ்வினில் உண்மை
உரிமையில் திண்மை உளத்தினில் மேன்மை
உயிரிடம் அன்பு உயரிய பண்பெனும்
நிறைவுடன் வாழ்பவன் நிகரில் மாணவன்

– பத்தினியம்மா திலகநாயகம் –

# வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சனசமூக நிலையங்களின் ஆரம்பங்களும் செயற்பாடுகளும்

**திருமதி:- கலைமகள் சிவராசா**

கிராமங்கள்தோறும் மக்கள் தொடர்ச்சியாக குழுமங்கள் வடிவிலேயே வாழ்ந்து வருகின்றனர். இக்குழுமங்களை ''சமூகங்கள்'' எனவும் அழைக்கின்றனர். இவை சமூக பொருளாதார காரணங்களினாலும் கல்வி வளர்ச்சியின் அடிப்படையிலும் வேறுபட்டு இயங்கிவருகின்றன. இச்சமூகங்களிடையே காணப்படும் பின்னடைவுகளை நிவர்த்தி செய்யக்கூடிய ஓர் நிறுவனமாகவும் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் கல்வி அறிவை அபிவிருத்தி செய்யக் கூடிய ஓர் கருவியாகவும் சனசமூக நிலை யங்கள் இயங்கிவருகின்றன.

அந்தக் குழுமங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றுத் தலைமைதாங்கி நடாத்தப்படுகின்ற ஓர் நிறுவனமாக இருப்பதால் இது ஒரு சமூக அமைப்பென்று கூறுவது பொருத்தமானதாகும். சமூகத்திலுள்ள பலதரப்பட்ட மக்களும் ஒன்றுகூடக் கூடிய இடமாக இந்நிலையங்கள் அமைந்திருப்பதால் விவசாயிகள், தொழிலாளர்கள், கூலிவேலை செய்வோர், அரச ஊழியர்கள் ஆகியோர் மாலை வேளையில் பத்திரிகைபடிப்பதற்காக நிலையத் திற்கு வருகின்றனர். அவ்வேளையில் நாட்டு நடப்புகள் பற்றி கலந்துரையாடுகின்றனர். தங்கள் தொழில்களில் உள்ள கஸ்டநஷ்டங் கள், தத்தமது குடும்ப நிலை, பொருளாதார நெருக்கடிகள் போன்ற விடயங்கள் பற்றியும் தமது மனங்களிலுள்ள பாரங்களை தமக்கு நம்பிக்கையானவர்களிடம் கூறி ஆறுதலடையும் ஓர் இடமாகவும் சனசமூக நிலையங்கள் இன்றுவரை இயங்கி வருகின்றதால் இது ஒரு உளவளத் துணை நிலையம் போன்றும் இயங்கி வருகின்ற தென்று கூறினால் மிகையாகாது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மல்லாகம் உப 'அலவலகம், தெல்லிப்பழை உப அலுவலகம், மயிலிட்டி உப அலுவலகம் ஆகிய பிரிவுகளில் முன்பு தொண்நூறு (90) சனசமூக நிலையங்கள் இயங்கிவந்தன. யுத்தம், இடம்பெயர்வுகள் காரணமாக மீளக்குடியமர முடியாதநிலை ஏற்பட்டுள்ள இந்தக்காலகட்டத்தில் ஐம்பது (50) சனசமூக நிலையங்கள் மட்டுமே இயங்கிவருகின்றன. அவை பின்வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | முற்போக்கு வாலிபர் | சனசமூக | நிலையம் | அளவெட்டி மேற்கு. |
| 02 | சுவாமி ஞானப்பிரகாசர் | சனசமூக | நிலையம் | தேவாலய வீதி, மல்லாகம். |
| 03 | மகாஜனசபை | """" | """" | கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 04 | சன்மார்க்க | """" | """" | நீதிமன்ற வீதி, மல்லாகம். |
| 05 | கலைவாணி | """" | """" | அளவெட்டி, தெற்கு. |
| 06 | கலைமகள் | """" | """" | கட்டுவன் வீதி, மல்லாகம். |
| 07 | துர்க்கா | """" | """" | இக்கிரானை, கந்தரோடை. |
| 08 | மல்லாகம் தெற்கு | """" | """" | மல்லாகம். |
| 09 | பாரதி | """" | """" | கும்பலை, அளவெட்டி. |
| 10 | கும்பிளாவளை | """" | """" | அளவெட்டி, வடக்கு. |
| 11 | பாரதிதாசன் | """" | """" | பத்தானை, அளவெட்டி. |
| 12 | ஐக்கிய வாலிபர் | """" | """" | கணேஸ்வரம், அளவெட்டி. |
| 13 | அறிவொளி | """" | """" | துர்க்காபுரம், தெல்லிப்பழை. |
| 14 | நாமகள் | """" | """" | சூடுவிழுந்தான், தெல்லிப்பழை. |
| 15 | கணேசா | """" | """" | பன்னாலை, தெல்லிப்பழை. |
| 16 | சுவாமி ஆபிரகாம் | """" | """" | குளமங்கால், மல்லாகம். |
| 17 | பாரதி | """" | """" | கோவிற்புலம்,தெல்லிப்பழை கிழக்கு. |
| 18 | கலைச்செல்வி | """" | """" | சித்தியம்புளியடி தெல்லிப்பழை. |
| 19 | திருவள்ளுவர் | """" | """" | சாத்தனாவத்தை, தெல்லிப்பழை. |
| 20 | அண்ணா | """" | """" | மாத்தனை, தெல்லிப்பழை |
| 21 | குட்டியப்புலம் | """" | """" | குட்டியப்புலம வயாவிளான் |
| 22 | தேன்தமிழ் | """" | """" | அளவெட்டி மேற்கு. |
| 23 | இந்து இளைஞர் ச.ச.நி | "" | "" | காடிவளை, இளவாலை. |

மீளக்குடியமர அனுமதிக்கப்படாத இடங்களின் சனசமூக நிலையங்களில் இருபத்தெட்டு நிலையங்களும் அந்த அந்த மக்கள் சேர்ந்து வசிக்கும் இடங்களில் தற்காலிக இடங்களில் இயங்கி வருகின்றன.

மேற்படி நிலையங்களில் 13 நிலையங்களில் முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இம்முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியைகளிற்கு சில அரச சார்பற்ற நிறுவனங்கள், பனை-தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை 500ரூபாவுக்கு குறையாத உதவு தொகையை வழங்கி வருகின்றன. இத் தொகை மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இது மிகவும் குறைந்த வேதனமாகும். எனவே இவ் ஆசிரியர்களையும் அரச நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் அந்த நன்நாளை சனசமூக நிலையங்கள் எதிர்பார்த்த வண்ணம் உள்ளன.

## மல்லாகம் உபசபைப் பிரிவில் உள்ள சனசமூநிலையங்களும் அவற்றின் நடவடிக்கைகளும்

மல்லாகம் உபசபைப் பிரிவில் தற்போது பதினொரு சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை தத்தமது நிர்வாக எல்லைக்குள் சமூக அபிவிருத்தி நடவடிக் கைகளிலும், கல்வி வளர்ச்சிப் பணிகளிலும் வாசிக்கும் திறனை ஊக்குவிக்கும் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றன.

## முற்போக்கு வாலிபர் சன சமூக நிலையம்

இந்நிலையம் அளவெட்டிக் கிராமத்தில் தோன்றிய இரண்டாவது சனசமூக நிலையமாகும் 1953 – 12 –11 இல் நிறுவப்பட்டது. இது அளவெட்டி கிராமம் முழுவதும் ஒரு கிராம சேவையாளரால் நிர்வகிக்கப்பட்டுவந்த காலத்தில் அளவெட்டி தெற்கு ஜபகுதியில் "பொன்கந்தையா ஞாபகார்த்த சனசமூகநிலையம்" என்ற பெயரில் திரு. வ. பொன்னம்பலம் போன்ற பெரியார்களின் உந்துதலின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வேளையில் இருக்கக்கூடிய நிர்வாகத்திற்கு திரு. து. பசுபதி என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். பத்திரிகைகள் போடுவது இந்நிலையத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தது. வாசிக்கும் திறனை ஊக்குவிப்பதன்மூலம் மக்களை அபிவிருத்திப் பாதையில் வழி நடத்தமுடியும் என்று இப்பணியைச் செய்துவந்தனர். அக்காலத்தில் "உதய தாரகை" என்ற பத்திரிகை உட்பட "வீரகேசரி" மற்றும் இந்திய சஞ்சிகைகளான "ஆனந்த விகடன்" "குமுதம்" போன்றவையும் நிலையத்தில் காணப்பட்டன.

காலப்போக்கில் 1960ம் ஆண்டுகளில் நிலையத்தின் முன்னோடிகளான சிலர் ஒன்று சேர்ந்து புதிதாக ஒரு கட்டிடத்தை நிர்மாணித்தனர். இவ்வேளையில் நிலையத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. இதன் விளைவாக "முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையம்" என்ற பெயர் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அன்று முதல் இன்றுவரை தன் பெயருக் கேற்றாற்போல் முற்போக்கான சிந்தனைகளின் மூலம் சமூக நல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது "A" தர சனசமூக நிலையங்களில் ஒன்றாக விளங்கி வருகின்றது. இது 1960, 1965, 1970 களில் திரு. வ. பொன்னம்பலம் அவர்களின் அரசியல் பிரவேசத்தின் ஆரம்ப இடமாக இருந்து வந்தது

1967ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக தாழ்ந்தபகுதிகளில் வசித்த மக்கள் வீடு, வாசல்களைவிட்டு வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம்புகவேண்டிய ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டது. அந்த வேளையில் சுமார் 60 குடும்பங்ககளுக்குச் சமைத்த உணவு வழங்கியது. இதற்கான நிதி வளங்களை உள்ளூர்மக்களிடமே சேகரித்தது. இச்சேவையை காலஞ்சென்ற முன்னாள் தலைவர் திரு.மா. சின்னத்தம்பி அவர்கள் முன்நின்று செய்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நாடகக் கலையை ஊக்குவிக்கும் முகமாக 1965 களில் திரு K.V சின்னையா தலைமையில் உருவாக்கப்பட்ட நாடகக்குழு "அரிச்சந்திரா", "பூதத்தம்பி", "சங்கிலியன்", "பண்டார வன்னியன்" போன்ற சரித்திர நாடகங்களையும் "நீதிமன்றத்திலே" "கைதி" போன்ற சமூக சீர்திருத்த நாடகங்களையும் நடித்துக் காட்டியது. இக்குழுவை மறைந்த கலைமாமணி V.V வைரமுத்துஜஅவர்கள் நெறிப்படுத்தினார் என்பதும் இங்கே சிறப்பாகக் குறிப்பிடமுடியும்.

1967 களில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாக "டயானா" விளையாட்டுக்கழகத்தை உருவாக்கியது. இக்கழகத்தை உருவாக்கியவர்களில் திரு. பொ. பாலசிங்கம் அவர்கள் திரு. இ. சிவநாயகம் அவர்கள் ஆகிய இருவரும் மிகவும் முக்கியமானவர்கள்,

இக்கழகம் திரு. முருகையா அவர்கள் வலிவடக்கு பிரதேசத்தில் விளையாட்டு உத்தியோ கத்தராக இருந்த காலத்தில். பல போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றிகளை ஈட்டியது. காங்கேசன்துறை "யங்றோயல் விளையாட்டுக் கழகம்" வருடா வருடம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி களில் தவறாது கலந்து கொண்டு அரை இறுதிப் போட்டிவரை சென்றது.

1976 – 09 – 04 அன்று அளவெட்டி மண்ணிலே அருணோதயாக் கல்லூரியிலே "சனசமூக நிலையத்தின் மின் இணைப்பு நிதிக்காக" பிரமாண்டமான ஓர் வண்ணமிகு இரவு நிகழ்ச்சியை நடாத்தியது. இதற்கு "சிட்டு இரவு" என்று பெயரிடப்பட்டது. இவ் இரவின் மடியினிலே அளவெட்டிக் கிராமத்தில் முதன்முதலாக கொழும்பி லிருந்து வரவழைக்கப்பட்ட பிரபல பாடகர் களாகிய "Three Sisters" ஆகியோரை உள்ளடக்கிய "பொப் இசை"யை அறிமுகம் செய்தது இந்த இரவில் நிலையத்தின் நாடகக் குழுவாகிய "செங்கதிர்" நாடகம் வழங்கிய "சிட்டுக் குருவி" என்னும் சமூக மறுமலர்ச்சி நாடகம் மேடையேறியது இந்நாடகம் பெண்களின் மறுமணத்தை ஆதரித்த கருத்தை கொண்டிருந்ததால் பெருவர வேற்பை பெற்றிருந்தது.

| | |
|---|---|
| பெயர் ...................... | **"சிட்டு இரவு"** |
| | அளவெட்டி தெற்கு மு. வா. சனசமூகநிலைய |
| | மின்இணைப்பு நிதிக்காக |
| | **"பொப் இசை"** |
| விலாசம்...................... | நாடகங்கள் : 'வடக்கும் தெற்கும் ' |
| ...................... | 'சிட்டுக்குருவி' |
| | இடம் : அருணோதயாக் கல்லூரி மைதானம் |
| | காலம் : 4 – 9 – 76 சனி இரவு 7-30 மணி |
| | பிரவேசம் ரூபா 2/- |

இந்நிகழ்ச்சியின் மூலம் பெறப்பட்ட 800ரூபா நிதியை கொண்டு நிலையத்திற்கு மின்சாரம் இணைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி ஒழுங்குக ளுக்கான முற்பணத்தை திரு. இ. சிவநாயகம் அவர்கள் வழங்கி நிகழ்ச்சியின் நெறியாளராக கடமைபுரிந்தமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

19களில் திரு. செ. பிறேமன் அவர்களது தலைமையில் நிலையம் இயங்கியபோது திரு. நா. இராசதுரை அவர்களின் அயராத முயற்சியினாலும் நிலைய அங்கத்தவர்களிடம் சேகரித்த பணத்தைக் கொண்டும், நலன் விரும்பிகளின் ஆதரவுடனும் ஓர் மயான ஊர்தி உருவாக்கப்பட்டது. இவ் ஊர்தி சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு இன்று வரை இயங்கி வருகிறது. வசதி குறைந்த குடும்பங்களில் ஏற்படும் இறப்புகளுக்கு இலவசமாக மயான ஊர்திச் சேவை நடைபெற்று வருகிறது. தற்போது இது நிலையத்தின் பெறுமதி மிக்க சொத்தாக உள்ளது. 1998– 01-04 இல் 32 முன்பள்ளிசிறார்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியில் தலா 100 ரூபா வீதம் வைப்புச் செய்து புத்தகங்களை வழங்கியது. 1999 இல் திரு.இ.சிவநாயகம் அவர்களின் தலைமையில் பதவி ஏற்ற நிர்வாகம் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1)

- 1999 – 01 – 20 இல் 70 அடி நீளமுள்ள பந்திப்பாய் கொள்வனவு செய்து குறைந்தவாடகைக்கு அங்கத்தவர்களுக்கு வழங்கியமை.
- 1999 – 03 – 08 இல் அளவெட்டி மேற்கில் ப. நோ.கூ. சங்கத்தின் 3ம் கிளைக்கு எதிரே நிலையத்திற்கென சொந்தமாக ஓர் காணியை 40 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்து நிலையத்தின் சொத்தாக மாற்றியமை
- 1999 – 03 – 13 இல் 536 பொதுமக்களிடம் கையெழுத்துப் பெற்று அளவெட்டிக்கு மின்சாரம் வழங்கக் கோரி வேண்டுகோள்விடுத்தமை (இப்போது மின்மார்க்க வேலைகள் நடைபெறுகின்றன)
- 1999 – 03 – 16 இல் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த சனசமூகநிலையக் கொட்டகையை அங்கத்தவர்களின் மனிதவலுவை பாவித்து திருத்தி அமைத்தமை.

- 1999 – 04 – 14 இல் தினமும் ஆகக்குறைந்தது இரண்டு ரூபா சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு சீட்டு முறையிலான சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியமை, இதன் மூலம் 140 பேர் பயன் பெற்றுள்ளனர். இவர்களின் மொத்தச் சேமிப்பு 23 – 01 – 2000 வரை 126,000/= ஒரு லட்சத்து இருபத்தாறாயிரம் ரூபா வாகும் இதில் 78 சிறுவர்களுக்கு தலா 900 ரூபா வீதம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பு செய்து புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 1999 – 08 – 11 இல் 209, 496/= பெறுமதியான பெரியமதவடி வீதி வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை (30 – 12 – 99 வீதி அமைப்பு வேலை பூர்த்தி செய்யப்பட்டு விட்டது)

- 1999 – 08 – 20 இல் UNICEF நிறுவனத்தின் ஆதரவில் நிலைய வளாகத்தில் சிறுவர் பூங்கா ஒன்றை நிறுவியமை.

- 1999 – 11 – 15 இல் பெரியமதவடி வீதி மேலதிக வேலைக்கான 91,604.25 சதம் பெறுமதியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை (30.12.99 இல் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது).

- 1999 – 12 – 20 இல் 36 வளர்ப்பு நாய்களுக்கு ARV தடுப்பூசியை நிலையவளாகத்தில் வைத்து போடுவதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகரை அழைத்து தொண்டர் வசதி செய்து கொடுத்தமை

- 2000 – 01 – 07 இல் 43 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை கிராம சேவையாளர் முன்நிலையில் வழங்கியமை.

- 2000 – 01 – 15 இல் பிரிவுபசாரம், வரவேற்புபசாரம், புதியவீதி ஆரம்பித்தல் மறுசீரமைக்கப்பட்ட முன்பள்ளி ஆரம்பித்தல், சிறுவர் பூங்கா ஆரம்பித்தல், போன்ற ஐந்து நிகழ்வுகளையும் ஒரே நாளில் ஒரே விழாவின் கீழ் நடத்திமுடித்தமை 2000 – 01– 16 வரை 43 பேருக்கு சுழற்சிமுறை கடன் திட்டத்தின்கீழ் கடன் வழங்கியமை இதுவரை ரூபா 131,830/= மொத்தக் கடனாக வழங்கப்பட்டுள்ளது 2000 – 01 – 17 இல் வேறு இடத்தில் இயங்கிய முன்பள்ளியை நிலைய கொட்டகையின் ஒரு பகுதியில் ஆரம்பித்தமை

- 2000 – 01 – 19 இல் பல்கலைக்கழகம் செல்லும் நான்குமாணவர்களை பாராட்டி கௌரவித்து வாழ்த்து மடல் பரிசில்கள் வழங்கி அவர்களது பெற்றோரை உபசரித்து இராப்போசன விருந்தளித்தமை

மேற்படி சேவைகளை புரிந்த முற்போக்கு வாலிபர் சனசமூகநிலையம் எதிர்காலத்தில் நூல் நிலையம் ஒன்றை நிறுவி மக்களின் வாசிக்கும் திறனை அதிகரிக்கச் செய்யவுள்ளது. மேலும் இரண்டாயிரம் ஆண்டின் அடுத்து வரும் மாதங்களில் வறிய குடும்பத்தில் உள்ள 10 பிள்ளைகளை பொறுப்பேற்று அவர்கள் சிறந்த கல்வியை பெற்று உயர் நிலையை அடைய வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பது. அங்கத்தவர்களின் குடும்பம் ஒன்றுக்கு 5 கோழிகள் வழங்கி அதற்கான தடுப்பு மருந்துகளை காலத்திற்கு காலம் கொடுத்துவருதல், இதன் மூலம் ஒரு குடும்பம் ஒரு நாளைக்கு 10ரூபாவை ஆகக்குறைந்த சேமிப்பாக பெற்றுக் கொள்ள வழி செய்து கொடுத்தல் நிலையத்திற்கு ஓர் நிரந்தர கட்டிடத்தை அமைத்தல். இக்கட்டிடம் பல நோக்கங்களை கொண்டதாக அமைக்கப்படும். முன்பள்ளி வாசிகசாலை, நூல் நிலையம், பயிற்சி வகுப்புக்கள் நடாத்தும் நிலையம், கூட்டங்கள் நடாத்தும் வசதி போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக இக்கட்டிடம் அமையவுள்ளது.

***மகாஜன சபை சனசமூக நிலையம்***

இந்நிலையம் கூட்டுறவாளர் வீதி அளவெட்டி மத்தியில் உள்ளது. அளவெட்டி கிராமத்தில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட நிலையம் இதுவாகும். 1917ஆம் ஆண்டு செல்லப்பா நாகலிங்கம், வெண்டரேசர் செல்லப்பா ஆகியோர் நன்கொடையாக காணியை வழங்கினர். பொதுமக்களின் நன் கொடைகள் சேகரிப்பின் மூலமும் நலன் விரும்பிகளின் அயராத உழைப்புகாரண மாகவும் 1922இல் கட்டிடம் ஒன்று உருவாகியது. அதே வருடம் கோலாகலமாக நிலையத்தின் திறப்புவிழா நடைபெற்றது.

நிலையம் சீராக இயங்கிவந்தது. புதினப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்றவை வாசிகசாலையில் பொதுமக்கள் படித்துப்பயன் பெற அங்கே போடப்பட்டன. கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன "பனை அரசன்" என்னும் நாடகம் ஒன்றை நிலைய நிர்வாகிகள் நடித்துக் காட்டினர்.

இந்நாடகத்தில் அ. விசுவநாதன் அவர்கள் முக்கியபாத்திரத்தை ஏற்று நடித்தார். இந்நாடகத்தின் மூலம் வசூலிக்கப்பட்ட நிதி நிலையத்தின் வளர்ச்சிக்குப்பாவிக்கப்பட்டது. இந்நிலையத்தில் சுமார் 1000 புத்தகங் களைக் கொண்ட நூல் நிலையம் ஒன்று இயங்கிவந்தது. JR .ஜெயவர்த்தன போன்ற அரசியல் தலைவர்கள் இந்நிலையத்திற்கு 1961களில் விஜயம் செய்தனர்.

ஆன்மீகத் தலைவர்களாகிய சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகளார் போன்றவர்களும் சுவாமி விபுலாநந்த அடிகளாரும் விஜயம் செய்து சமயச் சொற் பொழிவுகளை நடாத்தினர். விவசாயத்தை இயற்கையான முறையில் ஊக்குவிக்கும் முகமாக "அசறப்பா" என்ற ஓர் விவசாய நிபுணர் இந்தியாவிலிருந்து மகாஜனசபை சனசமூகநிலையத்திற்கு விஜயம் செய்தார். அங்கே அவர் நடாத்திய கருத்தரங்கில் இயற்கைப் பசளைகளை பாவித்து பயிர்ச் செய்கையை மேற்கொள்வதுபற்றி விவசாயி களுக்கு விளக்கமாக கூறினார். இது பற்றி அவர் நேரடியாக பயிற்சியும் அளித்தார். மேலும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் காலங்களில் பாதிக்கப்படவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை செய்வதிலும் முன்னணியில் இந்நிலையம் நின்றது.

தற்போது இந்நிலையத்தின் தலைவர் திரு வேலாயுதம் அவர்கள் ஆவர் வீரகேசரி, உதயன், போன்ற பத்திரிகைகள் தற்போது நிலையத்தில் வாசகர்களுக்காக போடப்பட்டு வருகின்றன.

**கலைவாணி சனசமூகநிலையம்**

இந்நிலையம் அளவெட்டியின் தென் புறத்து எல்லையில் வயல்வெளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகாமை யிலும் வழுக்கியாற்றுப் படுகையின் மேற்குக் கரை ஊரான கலைநகரில் அமைந்துள்ளது. இந்நிலையத்தைச் சார்ந்த மக்கள் விவசாயிகளாகவும் அரச ஊழியர்களாகவும் பயிற்றப்பட்ட தொழிலாளர்களாகவும் காணப் படுகின்றனர். மேற்படி நிலையம் 1960ம் ஆண்டு நிறுவப்பட்டது. திரு. வ. பொன்னம் பலம் அவர்கள் இந்நிலையத்தின் வழி காட்டியாக இருந்தார். நிலையம் நிறுவப்பட்ட காலத்தில் தனியார் காணி ஒன்றினுள் ஓலைக் கொட்டகை ஒன்றில் இயங்கிவந்தது. இதன் முதலாவது தலைவராக திரு. மு. க. கந்தையா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரின் தலைமையின் கீழ் பத்திரிகை போடும் பணி சீராக நடைபெற்றுவந்தது. அங்கத்தவர்களிடமிருந்து சந்தாப்பணம் அறவிடப்பட்டது.

இக்கிராம மக்களின் வேண்டு கோளுக்கிணங்க அப்பகுதியிலேயே காணித் துண்டொன்றை கொழும்பில் வசித்துவரும் மகாதேவா வாசுகிதேவி தம்பதிகள் அன்பளிப்பாக வழங்கினர். இக்காணியை இவ்வாறுபெறுவதற்கு காரணகர்த்தாவாக மறைந்த வ. பொன்னம்பலம் அவர்கள் இருந்தார் என்பது இங்கே ஞாபகப்படுத்த வேண்டிய ஓர் விடயமாகும். பொதுமக் களிடமிருந்து திரட்டிய நிதி, அங்கத்தவர்கள் நன்கொடை, நலன் விரும்பிகளின் உடல் உழைப்பு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து 1979ம் வருடம் ஆடிமாதம் 19ம் திகதி ஓர் நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட்டு திறப்பு விழா மிகவும் விமரிசையாக நடாத்தப்பட்டது.

ஆலயத் திருப்பணிகளில் மிகவும் விருப்புடனே ஈடுபட்டு வரும் இந்நிலைய அங்கத்தவர்களும், முற்போக்கு வாலிபர் சனசமூக நிலைய அங்கத்தவர்களும் இணைந்து வயல்வெளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தேர்த்தரிப்பிட நிர்மாணப்பணியில் ஈடுபட்டன. இப்பணி செவ்வனே நிறைவேற மேற்படி இரு நிலைய அங்கத்தவர்களும் தமது உடல் உழைப் பையும் பணத்தையும் தயங்காது வழங்கினர் 1985ம் ஆண்டு ஆடி 27ம் திகதி இத்தேர் தரிப்பிடம் நிர்மாணிக்கப் பட்டு பாவனைக்கு விடப்பட்டது.

மேலும் ஆரம்பக் கல்வியை கிராமத்தில் ஊக்குவிக்கும் நல் எண்ணத்தை அடிப் படையாகக் கொண்டு சிறுவர் பாடசாலை ஒன்றைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டது. 1985ம் ஆண்டில் தனது சொந்தக்காணிக்குள் ஓர் பாடசாலைக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இப்பணி மிகவும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டது. நிலைய நிர்வாகிகளின் தீவிர முயற்சியின் பயனாக 1986ம் வருடம் தை மாதம் 31ம் நாள் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு திறப்புவிழா செய்யப்பட்டது. இப்பாடசாலை இன்று வரை மிகவும் சிறப்பாக இயங்கிவருவது கண்கூடு.

மாகியப்பிட்டி - கந்தரோடை வீதியில் பேருந்துத் தரிப்பிடம் ஏதும் இருந்ததில்லை. இவ்வீதி வயல் வெளிக்கூடாகச் செல்வதால் மழை வெய்யில் போன்றவற்றிலிருந்து ஒதுங்கி நின்று பேருந்துக்காக காத்திருக்க பொதுமக்களுக்கு ஓர் தரிப்பிடம், நிழல் குடை தேவை என நிலையம் சிந்தித்தது. எனவே நிழகுடை ஒன்றைக் கட்டும்பணியை ஆரம்பித்த நிலையம் 28–01–1984ல் நிழற்குடை நிர்மாணிக்கும் பணியைப் பூர்த்திசெய்து திறப்பு விழாவை சிறப்புற நடாத்தி மக்களின் பாவனைக்கு அந் நிழற் குடையை அர்ப்பணித்தது.

மேலும் சிறந்த தலைவர்களையும் நிர்வாகிகளையும் தமது அங்கத்தவர்களி டையே உருவாக்கும் நோக்கத்துடன் தனது நிர்வாக சபையின் ஆயுளை ஒருவருடத்துடன் முடித்து மீண்டும். புதியவர்களைக் கொண்ட ஒரு சபை உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் அங்கத்தவர்கள் அனைவருக்கும் தலைமை தாங்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இது ஓர் சிறந்த நடவடிக்கை ஆகும். இவ்வாறு ஒவ்வொரு தைப்பொங்கல் தினத்தன்றும் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் நிர்வாகம் ஜனவரி 31ம் திகதி தனது பதவியை ஏற்கும். இப்பதவி ஏற்புவைபவம் ஆண்டுவிழா வொன்றை கொண்டாடுவதன் மூலம் சிறப்பாக நடைபெறும். இவ்வாறு பதவிஏற்கும் நிர்வாகம் சித்திரை வருடப் பிறப்பு தினத்தன்று ஓர் விளையாட்டுப் போட்டியை நடாத்த வேண்டும். மேலும் சமயநிகழ்வுகளாகிய சரஸ்வதி பூசை, மாரியம்மன் உற்சவகால தண்ணீர்ப்பந்தல் அதையொட்டிய சமய நிகழ்ச்சிகள் யாவையும் நடாத்த வேண்டும். இது எல்லா கிராமமக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் நடைமுறைவிதியாகும்.

மேலும் இந்நிலையத்திற்கு 1997ம் ஆண்டுUNHCR நிறுவனத்தால் ஓர் முன்பள்ளிக் கட்டிடம் ஒன்று அமைப் பதற்கான நிதி உதவி வழங்கப்பட்டது. இந்நிதி கட்டிடம் அமைக்கவேண்டிய முழுச் செலவுக்கும் போதுமானதல்ல. இதற்கு வேண்டிய மிகுதி 38% செலவையும் அங்கத்த வர்களே பொறுப்பேற்று செய்து முன்பள்ளிக் கட்டிடத்தை பூரணப்படுத்தினர். இது கலைநகர் மக்களின் ஐக்கியத்திற்கு ஓர் சிறந்த உதாரணமாகும்.

தற்போது இந்நிலையத்தின் புதிய தலைவராக திரு. வை. சின்னப்பு அவர்கள் பதவி ஏற்றுள்ளார். புத்தாயிரம் ஆண்டில் இன்னும் பல அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்ற புதிய நிர்வாகம் திட்ட மிட்டுள்ளது. சிறுவர் பூங்கா ஒன்றை அமைத்தல், முதியோர் பொழுது போக்கு இடம் ஒன்றை தயார் செய்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தஉள்ளது.

**கணேஸ்வரம் ஐக்கிய வாலிபர் சனசமூகநிலையம்**

இந்நிலையம், இக்கிராமத்தில் வாழுகின்ற மக்களின் ஒன்றுபட்ட சிந்தனையாலும் ஐக்கியப்பட்ட உழைப்பினாலும் உருவாக்கப் பட்டது. இப்பகுதியில் பலதரப்பட்ட மக்கள் வசித்துவருகின்றனர். விவசாயிகள், தொழிலாளர்கள், அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் போன்றோரை உள்ளடக்கிய கிராமத்தில் 1970களில் இச்சனசமூக நிலையத்திற்கான கட்டிடம் அமைக்கப்பட்டு திறப்புவிழா செய்யப்பட்டது. இந்நிலையத்தின் முதலாவது தலைவராக திரு. வ. நாகமணி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இவரின் தலைமையில் பத்திரிகைகள் போடப்பட்டன. மக்கள் இதன் மூலம் வாசிக்கும் திறனை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பைப் பெற்றனர்.

இந்நிலையத்தின் ஒரு பகுதியில் உபதபாலகம் ஒன்று இயங்கிவருகிறது. இத்தபாலகம் இயங்கி வருவதன் மூலம் இப்பகுதி மக்களின் தபால் சேவை தொடர்பான நடவடிக்கை சுலபமாக்கப் பட்டுள்ளது. இச்சேவையை இந்நிலையம் செய்ததன் மூலம் மக்களின் ஏகோபித்த பாராட்டை பெற்றுவருகிறது.

நிலையத்தின் வளாகத்தில் ஓர் முன்பள்ளியை நடாத்தி வருகிறது. இப்பள்ளியில் ஒரு ஆசிரியை கல்வி கற்பித்துவருகிறார். இவருக்கு தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் உதவுதொகையாக 500/= ரூபாவை வழங்கி வருகிறது.

மேலும் இச்சனசமூகநிலையம் கலை கலாச்சார நிகழ்வுகளை நடாத்திவருகிறது. இதன் மூலம் மக்கள் எமது தமிழ் பண்பாடு கலை உணர்வுகளை கட்டி எழுப்ப கூடிய வகையில் தனது சேவையை செய்து வருகிறது.

**பாரதிதாசன் சனசமூக நிலையம்**

அளவெட்டியில் பத்தானை என்னும் இடத்தில் பாரதிதாசன் சனசமூக நிலையம் இயங்கிவருகிறது. இப்பகுதி மக்களின் பெரும்பாலானோர் தொழிலாளிகளாகவும் உடல் உழைப்பாளிகளாகவும் உள்ளனர். விவசாய நடவடிக்கைகளும் கணிசமான மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கிராமத்தில் GTZ நிறுவனத்தின் வீடமைப்புத் திட்டம் அமுல் நடாத்தப்பட்டு வருகிறது. கல்வியில் ஓரளவு அபிவிருத்தியைக் கண்டுள்ள இக்கிராமம் இளம் சிறார்களை கல்வித் துறையில் ஊக்குவிக்கும் முகமாக புதியபல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1999ம் ஆண்டில் சர்வோதயத்தின் அனுசரணையுடன் ஓர் சிறுவர் பாடசலைக் கான கட்டிடத்தை கட்டிமுடித்துள்ளது. பாடசாலை தவிர்ந்த நேரத்தில் வாசிக சாலை இயங்கி வருகிறது. இதன் மூலம் இப்பகுதிமக்கள் வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்க ஓர் வாய்ப்பை நிலையம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது தற்போது

திரு.ப.ஜெயராசா அவர்கள் நிலையத்தின் தலைவராக இருந்து வருகிறார்.

**தேன்தமிழ் சனசமூக நிலையம்**

இந்நிலையம் அளவெட்டி மேற்கு கிராமத்தில் அமைந்துள்ளது. 1977.08.24 ஆண்டில் தற்காலிக இடம் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் தனது அங்கத் தவர்களை ஒரு நிலைப்படுத்தி சமூக சேவைகளை தன்னால் இயன்ற அளவு ஆற்றிவந்தது. பத்திரிகைகளை நிலையத்தில் போடுவதன் வாயிலாக வாசிக்கும் அறிவை மக்கள் மத்தியில் பரப்பும் ஓர் நிறுவனமாக இருந்துவருகிறது.

1981ம் ஆண்டில் சொந்தமாக காணி ஒன்றை பெற்றுக் கொண்டு அதில் ஓர் நிரந்தரக் கட்டிடத்தை அமைத்து தனது சேவையை தொடர்ந்து வருகிறது. தற்போது இந்நிலையம் அளவெட்டி மேற்கு பத்துப்பனை வீதியில் அமைந்துள்ளது. இங்கே உதயன் பத்திரிகை கிரமமாக இருந்துவருகிறது. இதன் அயலில் உள்ள மக்கள் பத்திரிகையை படித்துப் பயன் பெற்று வருகின்றனர். இதன் தற்போதய தலைவராக திரு.கே.சிவயோகநாதன் (கிராமசேவையாளர்) அவர்கள் இருந்து வருகிறார்.

எதிர் காலத்தில் இச்சனசமூகநிலையம் பல மக்கள் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு இப்பகுதி வாழ் மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்க திட்டமிட்டுள்ளது.

**ஸ்ரீரங்கன் சன சமூக நிலையம்**

இச்சனசமூக நிலையம் முருங்கையப் புலம் என்னும் கிராமத்தில் அளவெட்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ளது. இப்பகுதி வாழ்மக்கள் பெரும் பாலும் விவசாயம் செய்கின்றனர். கணிச மானவர்கள் அரச, தனியார், கூட்டுத்தாபனங் கள் போன்ற நிறுவனங்களிலும் கடமைபுரிந்து வருகின்றனர். அத்தோடு சிறந்த உடல் உழைப்பாளிகளையும் உள்ளடக்கிய இக்கிராமம் தோட்டக் காணிகளாற் சூழப் பட்டுள்ளது.

சர்வதேச சிறுவர் நிதியத்தின் உதவியுடனும் வலி வடக்கு பிரதேச சபையின் நிதி உதவியுடனும் அப்பகுதி மக்களின் உடல் உழைப்பையும் ஒன்றுசேர்த்து ஓர் கட்டிடம் இங்கே கட்டப்பட்டது. இக்கட்டிடம் 20.01.2000 அன்று சம்பிரதாயபூர்வமாக வலிவடக்கு பிரதேசச் செயலர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.ஜதற்போது இந்நிலையத்தின் தலைவராக திரு. த.குணபாலசிங்கம் அவர்கள் இருந்து வருகிறார். எதிர்காலத்தில் அனேக சமூக நல நடவடிக்கைகளில் இந்நிறுவனம் ஈடுபடவுள்ளது.

**குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம்**

வலிவடக்குப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் குரும்பசிட்டிக் கிராமம் தனக்கென சில சிறப்புக்களை கொண்டுள்ளது. மண்வளத்தால், மனை வளத்தால் மனங்கவரும் கலை வளத்தால் மாண்பு பெற்ற இக்கிராமம் வடக்குப்புறம் பலாலி விமானத்தளத்தையும், கிழக்கே வயாவிளான் கிராமத்தையும், தெற்கே குப்பிளானையும் மேற்கே கட்டுவனையும் தனது எல்லைகளாகக் கொண்டுள்ளது.

இக்கிராம மண்ணுக்கு பெருமை சேர்த்தவர் களும் இம் மண்ணின் பெருமையால் வளம்பெற்றவர்களும் நாடகக் கலைஞர்களாக, ஒப்பனைக் கலைஞர்களாக, புகைப்பட வல்லுனர்களாக, சிறுகதை எழுத்தாளர்களாக,இலக்கிய விமர்சகர்களாக, மேடைப் பேச்சாளர்களாக மலர்ந்து மணம் பரப்பியமை இம்மண்ணின் வரலாற்றுடன் இனைந்த தனிச்சிறப்பாகும்.

இவற்றிற்கெல்லாம் உறுதுணையாக நின்றவற்றில் குரும்பசிட்டிக் கிராம பொது அமைப்புக்களின் பங்கு முக்கியமானதும் பெருமைப்படத்தக்கனவும் ஆகும். போட்டா போட்டிகளின் மத்தியில் வளர்ந்த இந்த அமைப்புக்களின் தொண்டுகளும் சேவைகளும் குரும்பசிட்டிக் கிராமத்திற்கு பெருமை சேர்த்த விதம் தனித்து வமானதாகும்.

இந்த வகையில் குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் 1967 – 10 – 12 லிருந்து தன் அளப்பரிய பணிகளால் கிராம மண்ணில் மணம்பரப்பிநின்றது. நாடகப் போட்டிகள், ஆண்டு விழாக்கள், சிரமதான சேவைகள், திருவெம்பாவை, உற்சவகால நிகழ்வுகள் கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள் என பல்வேறு வகையான நடவடிக்கைகள் மூலம் மக்களின் மனதைத்தொட்டு நின்றது.

சமயப் பணிகளை விஸ்தரிக்கும் நோக்கில் 10 – 07 – 90 அன்று இந்து கலாச்சார அமைச்சின் கீழ் “வளர்மதி சனசமூக நிலைய சைவ சமய அபிவிருத் திக்குழு” என்ற ஒரு பதிவு செய்த அமைப்பையும் ஏற்படுத்திக் கொண்டது. நிலை நிலையத்தின் செயற்பாடுகள் 1986, 1990 காலப்

பகுதிகளில் ஏற்பட்ட இடப் பெயர்வு நிகழ்வுகளால் சிறிது மந்தமான நிலையை எதிர்நோக்கினாலும் கூட 1992 காலப்பகுதியிலிருந்து இடம்பெயந்து வாழ்ந்த சூழ் நிலையிலும் உரும்பிராயை மத்திய இடமாகக் கொண்டு புதிய வேகத்துடன் நிர்வாகம் செயற்படத் தொடங்கியது.

இக்கால கட்டத்தில் வெளிநாடுகளில் வதியும் நிலையத்தின் முன்னைநாள் அங்கத்தவர்களாலும், அபிமானிகளாலும் மனமுவுந்தளிக்கப்பட்ட நிதியைக் கொண்டு நிலையத் திற்கென ஓர் கட்டிடத்தை நிர்மாணிக்கும் நோக்குடன் எமது பகுதியில் இரண்டரைப்பரப்பு விஸ்தரணமுள்ள காணி ஒன்றினைக் கொள்வனவுசெய்தபோதிலும் இடம் பெயர்வு, மீளக்குடியமர முடியாதநிலை காரணமாக நிர்மாணவேலை தடைப்பட்ட நிலையில் உள்ளமை கவலைக் குரிய ஓர் விடயமாகும்.

1995 இல் ஏற்பட்ட ஒட்டுமொத்த வலிகாமப்பிரதேச இடம்பெயர்வினால் தென்மராட்சியை மையமாகக் கொண்டு நிலையத்தின் செயற்பாடுகள் அமைந்தன. எமது கிராம வெளிநாட்டு அன்பர்களின் நிதி உதவியைக்கொண்டு ஒரு லட்சம் ரூபா தொகையை 750 குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்தோம் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேற்படி காலப்பகுதியில் சுகாதார கருத்தரங்குகள், போசாக்கு உணவுத்திட்டம், குரும்பசிட்டி கிராம ஆலயங்கள் சார்பான வழிபாடுகள் போன்ற நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் நடாத்திவரப்பட்டன.

பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் குரும்பசிட்டிக் கிராமத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரிகுரல் கொடுத்துவரும் இந்நிலையம், மீளக்குடியேறும் சந்தர்ப் பத்தில் அங்கே ஓர் கட்டிடத்தை அமைப்பதற்கு வேண்டிய நிதியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

1999ம் ஆண்டிலிருந்து நிலையத்திடம் உள்ள சிறிய தொகை நிதியை மையமாக வைத்து சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. சனசமூகநிலையங்களின் வளர்ச்சிக்காக எந்நாளும் குரல் எழுப்பிவரும் நிலைய ங்களில் "வளர்மதி சனசமூக நிலையமும்" ஒன்றாகும்.

### பாரதி சனசமூகநிலையம் கும்பலை அளவெட்டி

கிழக்கே மல்லாகத்தையும் தெற்கே வழுக்கியாற்றுப் படுகையாகிய பனாக்கை வயல் வெளியையும் கொண்டஓர் சிறிய கிராமத்தின் மத்தியிலே பாரதி அமைந் துள்ளார். கும்பலை என்னும் இக் கிராமம் பெரும்பாலும் பயிற்றப்பட்ட தொழிலாளர்களாலும், விவசாயிகள், சிறந்த நாடக நடிகர்கள், அரச, தனியர் நிறுவனங்களின் ஊழியர்களாலும் நிரப்பப்பட்டுள்ளது. "வடக்கும் தெற்கும்" என்னும் நாடகம் இக்கிராமத்து இளைஞர்களின் கலையரவத்தையும் நடிப்புத்திறனையும் வெளிப்படுத்தக்கூடிய வகையில் 2000 தடவைகளுக்கு மேல் மேடையேறிய ஓர் நாடகமாகும்.

இக்கிராம மக்களின் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் வகையில் 1972ம் ஆண்டு பாரதி சனசமூக நிலையம் நிறுவப்பட்டது. இந்நிலையம் ஆரம்பத்தில் ஓர் தற்காலிக இடத்தில் ஓலைக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது வீரகேசரி, தினகரன், மித்திரன் போன்ற பத்திரிகைகள் நிலையத்தில் வாசகர்களின், கிராம மக்களின் வாசிக்கும் பழக்கத்தை ஊக்கு வித்து வந்தன.

பின்பு 1984 களில் ஓர் காணியை பெற்றுக் கொண்டு அங்கே ஓர் கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலையில் கிராம மக்கள் அனைவரும் ஈடுபட்டுவந்தனர். இக்கிராம மக்கள் தங்களால் முடிந்த அளவுக்கு பணத்தை தம்மிடையே சேகரித்து தமது உடல் உழைப்பையும் அத்தோடு சேர்த்து அதே ஆண்டிலேயே ஓர் கட்டிடத்தை தமக்கென கட்டிமுடித்து திறப்புவிழா செய்தார்கள். யுத்தம் காரணமாக சேதமடைந் திருந்த கட்டிடத்தை 1998 இல் பிரதேச சபையின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்துள்ளனர். கலை, கலாச்சார விழாக்கள் சமய நிகழ்வுகள், நாடக விழாக்கள் போன்றவற்றைக் காலத்திற்குக் காலம் நடாத்திவரும் இந்நிலையம் சுகாதாரக் கருத்தரங்குகளை நடாத்திவருகிறது.

1999ம் ஆண்டு வலிவடக்கு பிரதேச சபையின் நிதி உதவியைப் பெற்று முன்பள்ளிச் சிறார்களுக்கு பால் வழங்கி அவர்களின் போசாக்குப் பராமரிப்பிற்கு உதவியது. இந்நிலையம் நடாத்திருவம் முன்பள்ளி 1984 இல் ஆரம்பிக்கப்பட்டு சீராக இயங்கிவருகிறது. இப்பள்ளியின் ஆசிரியை தொண்டு அடிப்படையில் பாடம் கற்பித்து வருகிறார்.

இப்பள்ளிக்கான தளபாடங்களை கியூடெக் நிறுவனம் வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நிலையத்தின் ஆரம்பகாலத் தலைவர் திரு. நா. ஐயாத்துரை ஆவர். தற்போது திரு. இ. ரவிச்சந்திரன் என்பவர் தலைவராக சேவை செய்து வருகிறார்.

# வலி வடக்கில் கூட்டுறவு வாணிபமும் வங்கியும்

ஆக்கம் : S. Varathabaskaran (B.com Hons)
Social Services Officer, Vali North, Tellipalai.
**சு. வரதபாஸ்கரன் (பி.கொம்)**
சமூகசேவை உத்தியோகத்தர், வலிவடக்கு

வலி – வடக்கு மக்களின் பொருளாதார வளர்ச்சியிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் கூட்டுறவுத்துறையும், வங்கியும் பெருமளவு பங்களித்தன, பங்களித்தும் வருகின்றன. எனவே இக் கூட்டுறவுத்துறை, வங்கித்துறைகள் என்பவற்றின் வரலாறும் பொருளாதார பங்களிப்பும் நோக்கத்தக்கனவாகும். இவற்றின் வளர்ச்சியே வலி – வடக்கின் பொருளாதார உறுதியை எடுத்து இயம்பும்.

அவ்வகையில் கூட்டுறவுத்துறை பற்றி எடுத்து நோக்குவோமாயின், கூட்டுறவுப் பண்டக சாலைகளின் வளர்ச்சி, காலம் என வரலாற்று ஆசிரியர்களால் கூறப்படும். 1942 – 1944ம் ஆண்டுகளில் வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவிலும் பல கூட்டுறவு பண்டகசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1957ம் ஆண்டு கூட்டுறவு வரலாற்றில் ஒரு வளர்ச்சிக் கட்டமாகும். இம்மாற்றங்கள் வலிவடக்கிலும் ஏற்பட்டது. பண்டகசாலை சங்கங்கள், வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்களின் சமாசம் எனப்பெயர் மாற்றம் பெற்றது. 1971 இச்சமாசம் பதிவளிக்கப்பட்டு மூன்று ஆரம்ப பேரளவு கூட்டுறவுச்சங்கங்கள் உருவாகின.

I. தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுசங்கம்
II. சுண்ணாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
III. அளவெட்டி-மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

இதில், இன்று தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமும், அளவெட்டி-மல்லாகம் கூட்டுறவுச் சங்கமும் வலி – வடக்கில் இயங்கி வருகின்றன. இதில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நிலையை நோக்கின் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவு சங்கம் தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை உள்ளூராட்சி மன்றங்களைத் தொழிற்பரப்பாகக் கொண்டு 12 . 03 . 1971ம் ஆண்டு J/1558ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

1973 லிருந்து – 1977 வரை பின்வரும் அபிவிருத்தி வேலை நிகழ்ந்துள்ளன.

1) 1973ம் ஆண்டு மார்ச் மாதம் கிராமிய வங்கி
2) இரும்பு வர்த்தக நிலையம்
3) எரிபொருள் நிரப்பு நிலையம்.
4) புத்தக உபகரண விற்பனை நிலையம்
5) 1975 இல் மின்தறி நிலையம்.
6) சிற்றுண்டிச்சாலை
7) புதிய விற்பனை நிலையங்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

1978 லிருந்து வலி – வடக்குமக்களுக்காக பின்வரும் தொழில் முயற்சிகளை வழங்கியும், உதவியும் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்திக்கு உதவிவருகின்றது.

I. நுகர்ச்சிப் பொருள் விநியோகம்

நுகர்ச்சிப் பொருட்களை விநியோகித்து வருகின்றது. ஆரம்பத்தில் 2 மொத்த விற்பனை நிலையங்களும், 41 சில்லறை விற்பனை நிலையங்களும், 2 புடைவை நிலையங்களுயும் ஒரு மாதிரிக் கடையும் இயங்கிவந்தன. தெல்லிப்பழையிலும் காங்கேசன் துறையிலும் இரு புடைவை நிலையங்களை இயக்கிவந்தது. இடப்பெயர்வின் பின் இப்புடைவை நிலைய முயற்சி பாதிக்கப்பட்டது. தெல்லிப்பழையில் புடைவை நிலையம் இப்பொழுதும் இயங்கிவருகின்றது.

II. கட்டிடப்பொருள் விநியோகம் :

கட்டிடப்பொருட்களை விநியோகம் செய்வதற்குத் தெல்லிப்பழையில் கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை நிறுவியுள்ளது. கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபன விற்பனைமுகவராகவும் நியமனம் பெற்றுள்ளது.

III. எரிபொருள் விற்பனை நிலையம்:

எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றை காங்கேசன் துறையில் நடாத்தி வந்தது. இது பின்னர் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ளது.

IV. விவாசாயிகளுக்கு தேவையான உரம், கிருமிநாசினி, விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றை சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் வழங்கி வருகின்றது.

V. கிராமிய வங்கி மூலம் வங்கி சேவைகளை வழங்கி வருகின்றது. தற்காலிகமாக அடைவுக்கு முற்பணம் வழங்கல் சேவையை வழங்கி வந்தது. தற்போது மக்கள் வங்கியின் உத்தரவுக்கு இணங்கி நிறுத்தி வைத்துள்ளது.இது பின்வரும் சேவைகளை ஆற்றிவருகின்றது.

i. விரிவாக்கடன் வழங்கல்
ii. விவசாயக்ககடன் வழங்கல்
iii. வைப்புகளை பெறல்

போன்ற சேவைகளை ஆற்றுகின்றது.

VI. சிற்றுண்டிசாலையை நடாத்தி வருகின்றது. இலாப நோக்கத்தை மையமாக கொள்ளாது சேவை நோக்குடன் நடாத்தி வருகின்றது. ஏனைய உணவு நிலையங்களின் விலைகளை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே பெருமளவு செயற்பட்டு வருகின்றது.

VII. ஆரம்பத்தில் புத்தக நிலையம் ஒன்று நடாத்தப்பட்டு வந்தது. பின்னர் அரசாங்கத்தின் இலவசபாட புத்தக விநியோகத்தால் மூடப்பட்டது.

இவ்வாறு பல்வேறு சேவைகளை வலி வடக்கு மக்களுக்கு தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவு சங்கம் வழங்கி வருகின்றது.

வலி வடக்கில் இயங்கும் அடுத்த கூட்டுறவு துறை அமைப்பு அளவெட்டி மல்லாகம் கூட்டுறவு சங்கமாகும். இச்சங்கம் 1971ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இச்சங்கம் வெங்காயம் கொள்வனவு செய்து கொழும்புக்கு அனுப்பி சந்தைப்படுத்தலில் ஈடுபட்டதால் பெரும் வளர்ச்சி கண்டது. வெங்காய கூடை பின்னுதல், வெங்காயம் நிரப்புதல் என்பவற்றில் பலருக்கு வேலைவாய்ப்பும் வழங்கியது. தற்பொழுது நாட்டின் நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி, மல்லாகம் பல நோக்கு கூட்டுறவு சங்கம் தற்பொழுது 12 கிளைகளுடன் இயங்கி வருகின்றது. இடம்பெயர்வு காரணமாக இணுவிலில் இயங்கி வந்த இச் சங்கம் தற்பொழுது அளவெட்டியிலேயே இயங்கி வருகிறது. நொந்து போய் மீள குடியமர்ந்துள்ள மக்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்கி வருகின்றது.

I. நுகர்ச்சி சேவைப்பகுதி : மக்களுக்கு நுகர்வு பொருட்களை வழங்கிவருகின்றது.
II. வாகன சேவை
III. தொலைத்தொடர்பு சேவை
IV. புடவை நிலையம்
V. எரிபொருள் விநியோக சேவை
VI. கட்டிட பொருள்கள் விநியோக சேவை

VII. கிராமிய வங்கிச் சேவை இவ் வங்கி அளவெட்டி மல்லாகம் மக்களுக்கு பெரிதும் உதவி செய்து வருகின்றது. இவ்வங்கியில் பதிவு செய்த அங்கத்தவர் மட்டுமே பின்வரும் கடன்களை பெற்றுக் கொள்ளலாம். இவ் வங்கியே யாழ்மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்ட முதல் கிராமிய வங்கி ஆகும்.

1. ஓய்வூதியக்கடன்
2. பணியாளர் கடன்
3. நிலையான வைப்புகடன்
4. சமாசநிதிக்கடன்
5. U.N.D.P நிதிக்கடன்
6. விவசாய கடன்

இக் கடன்களுக்கு பொறுப்புகள் பெற்று கடன் உதவி வழங்கி வருகின்றது. ஓய்வூதிய கடனுக்கு ஓய்வூதியம் பெறும் இருவர் கையொப்பம் இட வேண்டும். பணியாளர் கடனுக்கு இரண்டு பணியாளர்கள் கையொபபம் இட வேண்டும். நிலையான வைப்பு கடனுக்கு பொறுப்பு தேவை இல்லை சமாசநிதிக்கடனுக்கு காணி பொறுப்பு அளிக்க வேண்டும்.

U.N.D.P கடனுக்கு உறுதி பெறப்படுகின்றது. விவாசாய கடனுக்கு விவசாய சம்மேளன தலைவர் அல்லது செயலாளாரின் சிபார்சுடன் உறுப்பினர் இருவரின் பிணை கையொப்பம்.

சுயமுயற்சி கடன் மூலம் பின்வரும் சுய முயற்சிகளுக்கு கடன் வழங்கப் படுகின்றது.

I. தையல்
II. தச்சுவேலை
III. சிகையலங்கரிப்பு
IV. சலவைத்தொழில்
V. சைக்கிள் திருத்தல்
VI. ஒட்டுவேலை
VII. பொற்தொழில்
VIII. இரும்புஉருக்கு
IX. அரைக்கும் ஆலை
X. விவசாயம்
XI. கால்நடைவளர்ப்பு
XII. வியாபாரம்

போன்றவற்றுக்கு ஆகும்.

கடன் பெறுனர்களில் 90% மானோர் மீளளிப்பை ஒழுக்காக செய்கின்றனர். இவ் வங்கி பின்வரும் வைப்புகளை ஏற்கின்றது.

I. சாதாரண வைப்பு
II. நிலையான வைப்பு
III. சிறுவர் சேமிப்பு

மேற்குறிப்பட்ட சேவைகள் மூலம் அளவெட்டி, மல்லாகம் கூட்டுறவு சங்கம் மக்களுக்கு உதவி புரிந்து வருகின்றது.

வலி – வடக்கின் வங்கி அமைப்பை நோக்கு வோமாயின் வலி வடக்கில் இருவங்கிக் கிளைகள் இயங்கின.

I. இலங்கை வங்கி

II. மக்கள் வங்கி

இவை இரண்டும் காங்கேசன் துறையில் இயங்கிவந்தன. இதில் இலங்கை வங்கி தற்பொழுது மல்லாகத்தில் இயங்குகின்றது. மக்கள் வங்கி வலி – வடக்குக்கு வெளியே இயங்குகின்றது. யாழ் மாவட்டத்தில் காங்கேசன் துறை மக்கள் வங்கியே முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கி கிளையாகும். 1962 இல் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வங்கி பற்றி மேலதிக தகவல்கள் எதனையும் பெறமுடிய வில்லை.

காங்கேசன்துறை இலங்கை வங்கி 11-03–1981 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது முகாமையாளர் திருமதி நந்தினி ஸ்கந்தகுமார். இவ்வங்கி பொதுவாக வைப்பு களை ஏற்று கடன் வழங்குகின்றது. இவ் வங்கியின் முக்கிய தொழிற் பாடாக அமைந்திருந்தது சீமெந்துக் கூட்டுத் தாபனத்தின் கணக்கை வைத்திருந்ததும் அவர்களுக்கு நடைமுறைக்கணக்கில் மேலதிக பற்று வசதிசெய்து கொடுத்து நடத்தி யமையாகும். இதனால் வங்கி குறிப்பிடத்தக்க லாபம் ஈட்டியது.

வங்கி இராணுவ நடவடிக்கை காரணமாக தனது பல ஆவணங்களை இழந்து 1990 ஐப்பசியில் மானிப்பாய்க்கு தனது அலுவலகத்தை நகர்த்தியது. 1995 ஆடியில் இருந்து 95 ஐப்பசி வரை யாழ்ப்பாணத்தில் இயங்கியது. 1995ல் ஐப்பசியில் இருந்து 1996 சித்திரை வரை சாவகச்சேரியிலும், 1996 வைகாசியில் இருந்து 99 ஐப்பசி வரை யாழ்ப்பணத்திலும் 25.10.99ல் இருந்து மல்லாகத்திலும் இயங்குகின்றது.

வங்கி ஏற்றுக் கொள்ளும் வைப்புக்களும் வட்டி வீதங்களும்

I. சாதாரண வைப்பு 9%

II. சிறுவர் சேமிப்பு 11%

III. மகளிர் பொற்கணக்கு 10%

IV. தேசிய அறக்கொடை : இது தற்பொழுது நடைமுறையில் இல்லை.

V. தேசிய ஓய்வூதியக் கணக்கு : இதுவும் தற்பொழுது நடைமுறையில் இல்லை

VI. சேமிப்பு சான்றிதழ் 10%

VII. நிரந்தர வைப்பு 10%

இவ்வங்கியால் வழங்கப்படும் கடன் வகைகள்

I. மீன்பிடி விவசாயக் கடன்

II. சுயதொழில் முயற்சிக் கடன்

III. புனருத்தாரண கடன்

IV. வியாபாரக் கடன்

V. மேலதிகப் பற்று

VI. வீடமைப்புக்கடன்

இக்கடனை வழங்கும் பொழுது வங்கி வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையும் அவரது நேர்மையும், இக்கடன் கடனாளியின் வாழ்க்கைத் தரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் முன்னேற்றக் கூடியதா எனவும் கடன்பெறும் திட்டத்தினால் அவர் பெறும் வருமானம் கடனை வட்டியுடன் மீளச் செலுத்துவதற்குரிய நிதியை உருவாக்கக் கூடியதா எனவும், பிணைகளையும் கவனத்தில் கொள்கினறது. அத்துடன் பின்வரும் சேவைகளையும் வழங்குகின்றது.

1) நிலையான கட்டளைகளை ஏற்றல்
2) வெளிநாட்டு உண்டியலுக்கு உடனடியாக பணம் வழங்கல்
3) சிறுவர் சேமிப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு நடமாடும் வங்கிச் சேவையை பாடசாலையில் நடாத்தல்
4) அரசாங்கத்தால் வழங்கப்படும் கொடுப்பனவு களை வழங்கல்
   I. மீளக்குடியமர்ந்தவர்க்கான நிவாரணங் களை வழங்கல்
   II. சேதமடைந்த வீட்டுக்கான கொடுப்பனவு களை சேகரித்து வழங்கல்
   III. பல்வேறுபட்ட நிவாரணங்களை வாடிக்கை யாளர் என்ற ரீதியில் சேகரித்து வழங்கல்
   IV. மாணவர்களுக்கு வணிகக்கல்வியை அளிக்கும் பொருட்டு வங்கியில் சம்மந்தமான விளக்கங்களை அளித்தல்

போன்ற சேவைகளை வழங்குகின்றது

அத்துடன் விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு குறைந்த வட்டியுடனும் குறைந்த நிபந்தனையுடனும் குறுங்காலக் கடன்களையும் வழங்குகின்றது. மேலும் சுயதொழில் அபிவிருத் திக்கென அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்படும் இலகுக் கடன் வசதிகளை குறைந்த வட்டியுடன் வழங்குகின்றது. இவ் வங்கி இவ்வாறான பல்வேறு சேவைகளுடன் வலி வடக்கு மக்களின் எதிர்கால அபிவிருத்திக்காக பின்வரும் சேவைகளை வழங்கவுள்ளது.

1. மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் கடன் வசதிகளை விஸ்தரித்தல்
2. புனர்நிர்மாண வேலைக்காக அரசினால் வழங்கப்படும் நிதிகளை உரிய தாபனங்களுக் காக பேணி அவர்களது நிதி முகாமைத்து வத்திற்கு உதவுதல்.
3. எதிர்காலத்தில் புனர்வாழ்வுக்காக ஏற்படுத்தப்

படவுள்ள அரசின் திட்டங்களை வங்கிச் செயற்பாட்டின் மூலம் துரிதப்படுத்தல்

எனவே வலி – வடக்கின் வளர்ச்சியில் கூட்டுறவும் வங்கியும் பெரும் பங்களிப்பு செய்கின்றன.

இக்கட்டுரையை வரைவதற்கு தகவல் தந்தவர்களும் நூல்களும்

i. கூட்டுறவு :

I. சி. சிவமகராசா (தலைவர்) (தெல்லிப்பளை ப. நோ. கூ.சங்கம்)

II. பொது முகாமையாளர் (அளவெட்டி) ஜெயசீலன்

ii. கூட்டுறவுச் கோர் அறிமுகம்

iii. வங்கிபற்றிய தகவல்

I. மாவட்ட முகாமையாளர் யாழ்ப்பாணம்

II. முகாமையாளர் . இலங்கை வங்கி, காங்கேசன்துறை.

பொறுமை கொள் தம்பி நெஞ்சில்
பொறுமை கொள் தம்பி
பொறாமை என்னும் பொய்மை நீக்கி
பொறுமை கொள் தம்பி
நெறியில் நில்தம்பி – நன்
நெறியில் நில்தம்பி
வறுமை உன்னை வாட்டினாலும்
நெறியில் நில்தம்பி – நந்நெறியில் நில்தம்பி
அறிஞர் சொன்ன தத்துவங்கள்
அறிந்து கொள்தம்பி அவர்
கடந்து வந்த பாதைதன்னைத்
திரும்பிப் பார் தம்பி
வாழ்வுப் பாதை கல்லும் முள்ளும்
நிறைந்தது தம்பி – முன்
வைத்த காலைப் பின்வையாமல்
முன்னே போ தம்பி – முன்னே போ தம்பி

எத்தனைபேர் உன்னைநம்பி
இருக்கிறார் தம்பி அவர்
அத்தனைக்கும் பதில் கொடுக்க
வேண்டுமே தம்பி
மெத்தவுன்னைப் புகழ்பவரை
நம்பிடாய் தம்பி என்றும்
உத்தமனாய் வாழ்ந்திட நீ
உறுதி கொள் தம்பி – உறுதி கொள் தம்பி
சத்துணவு உடலுக்கல்ல
உளத்துக்கும் வேண்டும்
மற்றவரை மதித்து நட
மதிப்பு வரும் தம்பி
செத்த பின்பு புகழ் எதற்கு
ஜெகத்தில் வாழும் போதே
நல்லவனாய் வல்லவனாய்
வாழ்நது காட்டு தம்பி – வாழ்ந்து காட்டு தம்பி

(பொறுமை)

*"சித்தி"*

# தேசிய இளைஞர் சேவைகளும் வலிகாமம் வடக்குப் பிரதேசமும்

இலங்கையில் இளைஞர்களின் சமூக நல சேவைகளை நோக்காகக் கொண்ட ஒரேயொரு அரசாங்க நிறுவனமாக, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் விளங்கு கின்றது. இந் நிறுவனம் இலங்கையின் 1967ன் 11ம் இலக்க தொண்டர் தேசிய இளைஞர் சேவைச்சட்டம், 1979ன் 69ம் இலக்க திருத்தச் சட்டத்தின்படி உருவாக்கப் பட்டதாகும். 1978ல் இலங்கையில் இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சு உருவாக்கப்பட்டு, அவ் அமைச்சின்கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இயங்கி வருகின்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாகக் கட்டமைப்பு தலைவர் அல்லது இயக்குனர் நாயகம், இயக்குனர்கள், மாகாண இயக்குனர்கள், உதவி இயக்குனர்கள், மாவட்ட இளைஞர் சேவை அலுவலர், இளைஞர் சேவை அலுவலர் என்றவாறு படிமுறைப் படுத்தப்பட்டுள்ளது. வட மாகாணத்துக்கான மாகாணப் பணிப்பாளர் காரியாலம் வவுனியாவிலும் உதவி இயக்குனரின் மாவட்டக் காரியாலயம் யாழ்ப்பாணத்திலும் இயங்குகின்றன. நிதி நடவடிக்கைகளைக் கையாளும் காரியால யமாக மாகாணக் காரியாலயம் உள்ளது. இந்நிறுவனத்திற்கான நிதி மூன்று வகையான மூலகங்கள் மூலம் பெறப்படு கின்றது. அவையாவன

i. இளைஞர் விவகார அமைச்சின் நேரடியான நிதி ஒதுக்கீடு
ii. பன்முக நிதி.
iii. தொண்டர் நிறுவனங்களின் நிதி உதவி என்பனவாகும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சகல சேவைகளையும் வழங்குவதற்கு இளைஞர்களை ஒருங்கிணைக்கும் முக்கிய கிராமமட்ட அமைப்பாக இளைஞர் கழகங்கள் உள்ளன.இவ் இளைஞர் கழகங்களை ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு தோறும் அமைக்கமுடியும்15 வயது தொடக்கம் 29 வயது வரையான ஆண், பெண் இருபாலாரும் இதில் அங்கத்துவம் பெறத் தகுதி உடையவர்கள். ஒரு கிராம சேவையாளர் பிரிவில் ஆகக்குறைந்தது 30 இளைஞர்கள் சேர்ந்து இவ் இளைஞர் கழகத்தினை அமைக்க முடியும். இளைஞர் சேவை அலுவலர்களினால் முறைப்படி இக்கழகங்கள் ஆரம்பித்து வைக்கப்ப கின்றன. இவ் இளைஞர் கழகங்கள் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, அதன் நிர்வாக சபை அரச அங்கீகாரம் பெற்ற சபையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆயினும், இவ் இளைஞர் கழகங்கள் தமது செய்பாடுகளை ஒரு சுயேச்சை நிறுவனம் போன்று சமுதாய கட்டுக்கோப்புக்கு இணங்கச் செயற்பட முடியும்.

இலங்கையில் முதலாவது இளைஞர் கழகம் 1980 மே 23ம் திகதி ஆரம்பிக்கப் பட்டதாயினும், யாழ் மாவட்டத்தில் 1982ம் ஆண்டிலேயே இவ் இளைஞர் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் 1983ம் ஆண்டு காலப் பகுதிக்கு முன்னதாக கீழ்க் குறிப் பிடப்படும் இளைஞர் கழகங்கள் அமைக்கப் பட்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் பதிவு செய்யப்படிருந்தன. அவையாவன.

1) பலாலி இளைஞர் கழகம்
2) அளவெட்டி தெற்கு இளைஞர் கழகம்
3) வயாவிளான் இளைஞர் கழகம்
4) பன்னாலை ஆதவன் இளைஞர் கழகம்
5) மயிலிட்டி தெற்கு இளைஞர் கழகம்
6) கொல்லன்கலட்டி இளைஞர் கழகம்
7) மாவை ஐக்கிய இளைஞர் கழகம்

என்பனவாகும். இக்காலப் பகுதியில் இவ் இளைஞர் கழகங்கள் மூலம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் சேவைகள் செய்யப்பட்டதாயினும் அவைகள் பற்றிய விபரங்களை அறியமுடியவில்லை.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இருந்து 1990ம் ஆண்டில் இப்பிரதேச மக்கள் உள்நாட்டு யுத்த சூழ்நிலை காரணமாக தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் மேற்கூறப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களும் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்ததனால், இளைஞர் கழகங்களைத் தொடர்ந்து செயல்படுத்தமுடியாது போயிற்று. 1993ம் ஆண்டுவரை வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சேவைகள், இளைஞர் கழகங்களின் செயற்பாடுகள்

இன்மையால் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்திருக்கின்றது. 1993ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி இடம்பெயர்ந்து வாழ்ந்த இளைஞர் களில் சிலர் சேர்ந்து, வலிகாமம்வடக்கு ஐக்கிய இளைஞர் வள நிலையம் என்ற பெயரில் யா/மல்லாகம் மகா வித்தியாலத் தில் ஓர் அமைப்பினை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட அலவலகத் தின் அனுசரணையுடன் ஏற்படுத்தினர். இவ் அமைப்பை உருவாக்கிய பொழுது தேசிய இளைஞர் சேவைமன்றம் ரூபா 20,000/= வழங்கி இருந்தது. இப்பணம் வங்கியில் இவ் அமைப்பின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டது. இந் நிலையம் ஆரம்பிக்கப் பட்டபொழுதே பல இளைஞர்கள் ரூபா 20/- வருடச் சந்தா செலுத்தி இதில் இணைந்து கொண்டனர்.

இந் நிலையம் 1993ம் ஆண்டிலிருந்து பின்வரும் சேவைகளை இளைஞர்களுக்கு வழங்கியது

1) மன்றத்தின் நிதி மூலம் 32 மாணவிகட் கான மனைப்பொருளியல் வகுப்பு ஒன்றினை $4^1/_2$ மாதகாலம் யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடத்தி அதன் கண்காட்சியும் நடத்தப்பட்டது.
2) இரண்டாவது தொகுதியில் 52 மாணவிகட்கு மன்றத்தின் நிதி மூலம் அதே பாடசாலையில் நடாத்தி அதன் கண்காட்சி 16.12.1993ல் நடத்தப்பட்டது.
3) யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத் தில் 23.10.1993ல் பல கலை நிகழ்ச்சி களுடன் வாணிவிழா கொண்டாடப் பட்டது.
4) மாவட்ட மட்ட கலாச்சாரப் போட்டியில் பங்கு கொள்ளவிருந்த இளைஞர்களுக்கு பயிற்சியும் ஒத்திகையும் நடத்த ப்பட்டது.
5) இளைஞர்களிடையே சிறந்த சமூக சேவையாளர் போட்டி நடாத்தி சிறந்த சமூக சேவையாளரைத் தெரிவு செய்து விருது வழங்கிக் கௌரவித்தது. மிகச் சிறந்த சமூக சேவையாளராக தையிட்டியைச் சேர்ந்த திரு. குமாரசாமி பிரியதர்சன் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

1994ம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வலிகாமம் வடக்கு ஐக்கிய இளைஞர் வளநிலையம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்தின் ஆலோசனைப்படி "பிரதேச இளைஞர் வள நிலையம்" வலிகாமம் வடக்கு எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இக்காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிதிமூலம் பின்வரும் சேவைகளை இளைஞர்களுக்கு வழங்கியது. அத்துடன் நிலையத்திற்கான ஒரு காரியாலயத்தை நீதிமன்ற வீதி, மல்லாகம் என்ற முகவரியில் ஓரளவு வசதிகளுடன் பெற்றது.

1) நிலையக் கட்டிடத்தில் 25.02.1994ல் இளங்கலையர்களுக்கான அரங்கேற்ற விழா நடத்தி அவர்களை கௌரவித்தது.
2) 50 யுவதிகளுக்கான மனைப் பொருளியல் பயிற்சி வகுப்பினை 22. 03. 1994 – 17. 09. 1994 வரை நிலையக் கட்டிடத்தில் நடத்தியது.
3) பனைக் கைப்பணிப் பொருட்கள் உற்பத்திக்கான பயிற்சியும் மனைப் பொருளியல் பயிற்சியுமாக 36 யுவதிகளுக்கு தெங்குபனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவு சங்கத்தின் ஆசிரியர் உதவியுடன் (24.01.1994 – 17.09.1994) மாகியப்பிட்டி செட்டி சனசமூக நிலையக் கட்டிடத்தில் நடத்தப்பட்டது.
4) 2ம் 3ம் சேவைகளின் கண்காட்சி 17, 18, 19 செப்டெம்பர் 1994ல் யா/இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நடத்தப்பட்டது.
5) தலைமைத்துவ பயிற்சி (27.01.1994) 56 இளைஞர்களுக்கு யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடத்தப் பட்டது
6) பல கலை நிகழ்ச்சிகளுடன் பிரதேச இளைஞர் வள நிலையம் வலிகாமம் வடக்கின் முதலாவது ஆண்டு நிறைவு விழா (29.01.1994) யா/ சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நடத்தப்பட்டது.
7) மலேரியா தடுப்புக் கருத்தரங்கு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் (1924.03.1994) யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடத்தப் பட்டது
8) 125 பேரினை கொண்ட கல்விச் சுற்றுலா யாழ்மாவட்டதிற்குள் (28.05.1994) நடத்தப்பட்டது.

1995ம் ஆண்டின் முற்பகுதியில் பின்வரும் சேவை செய்யப்பட்டது. பிரதேசத்தில் மூன்று சிரமதானங்கள் ரூபா 15,000/- நிதி ஒதுக்கீட்டில் 50 பேர் கொண்ட இளைஞர் குழுவால் செய்யப்பட்டது. I) அளவெட்டி கிராமிய வைத்தியசாலை II) யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் III) மல்லாகம் பொதுச் சந்தை ஆகியன இச்சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்யப்பட்டது. 1995ம் ஆண்டின் நடுப்பகுதியில் வலிகாமம் வடக்கின் சில பகுதிகளிலிருந்த மக்களும் உள்நாட்டு யுத்தம் காரணமாக மேலும் இடம்பெயர்ந்து வாழவேண்டியநிலை ஏற்பட்டது. தொடர்ந்து 1995 இன் ஐப்பசி மாதத்திற் உள்நாட்டு யுத்தத்தின் தீவிரம் காரணமாக வலிகாமம், நல்லூர், யாழ்ப்பாண மக்கள் யாவருமே யாழ்குடாநாட்டின் ஏனைய பகுதிகளான வடமராட்சி, தென்மராட்சி பளை, வன்னி ஆகிய பிரதேசங்களிற் சென்று குடியேறினர். இதனால் இதுவரை பிரதேச இளைஞர் வளநிலையம் என்ற அமைப்பின் கீழ் ஒன்றுபட்டு இயங்கிய இளைஞர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளமுடியாத அளவு ஆங்காங்கே வாழ்ந்தனர். இதன் காரணமாகவும் தேசிய இளைஞர்

சேவை மன்ற யாழ்ப்பாண மாவட்ட அலுவலக கடமைகளும் இடம் பெயர்வுக்கு உட்பட்டதனாலும் இக்காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படவில்லை.

1996ம் ஆண்டு சித்திரை மாதத்தில் வடமராட்சி, தென்மராட்சி, பளை ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வரப்பட்ட வலிகாமம், யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளில் மீளக்குடியேற அனுமதிக்கப் பட்டனர். ஆயினும் வலிகாமம் வடக்கு, பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் மல்லாகம், அளவெட்டி கிராமங்களைத் தவிர்ந்த ஏனைய கிராம மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கப்படவில்லை. அத்தோடு மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட கிராமங் களிலும் பல வீடுகள் சேதம் அடைந்திருந்த தனால் முழுமையான மீளக்குடியமர்வு இடம்பெறவில்லை. இதனால் வலிகாமம் வடக்கிற்கு வெளியிலேயே இரவல் வீடுகளில் இப்பகுதி மக்கள் குடியமர்ந்து வாழும் அவலநிலை ஏற்பட்டது. இந் நிலையில் இப்பகுதியில் வாழும் இளைஞர்களின் தொகை குறைவாகவே காணப்பட்டது. இதனால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மீண்டும் இளைஞர்களைத் திரட்டி ஒழுங்கமைப்புச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கியது. ஆயினும் 1997ன் ஆரம்பத்தில் வலிகாமம் வடக்கிற்கான பிரதேச இளைஞர் வள நிலையத்தினை செயற்படுத்த, இளைஞர்களை ஒன்றுதிரட்டி ஓர்நிர்வாக சபையினை ஏற்படுத்தியது. அத்துடன் கிராமசேவையாளர் பிரிவுதோறும் மீண்டும் இளைஞர் கழகங்களை அமைக்க வேண்டும்.என்று மாவட்ட அலுவலகத்தின் பணிப்பின்படி இளைஞர் கழகங்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கட்டது இதன் படி 1997ம் ஆண்டில் மல்லாகம் மத்தி இளைஞர் கழகம் தெல்லிப்பளை திருவள்ளுவர் இளைஞர் கழகம், அளவெட்டி தெற்கில் அளவை இளைஞர் ஆகியன ஆரம்பிக் கப்பட்டன. 1997ல் தேசிய இளைஞர் சேவை மன்றம் வலி வடக்கில் உள்ள இளைஞர் கழகங்கட்கான சம்மேளனம் ஒன்றினை உருவாக்கியதுடன், வலிகாமம் வடக்கு இளைஞர் வளநிலையத்துக்கான வங்கி இருப்பினையும், பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தின் பெயரில் மாற்றம்செய்தது 1997ம் ஆண்டில் பின்வரும் சேவைகள் செய்யப்பட்டன.

1) 30 இளைஞர்கட்கான இலவச ஆறு மாதகால ஆங்கில மொழிப்பயிற்சி வகுப்பு ஒன்றினை யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலத்தில் நடத்தி சித்தியெய்தி யோருக்கு சான்றிதழ்களும் வழங்கியது.
2) யா/மயிலணி சைவ மகாவித்தியாலய த்தில் (16.06.1997 – 24.10.1997) நடத்தப்பட்ட மனைப் பொருளியல் பயிற்சி வகுப்பில் வலி – வடக்கினைச் சேர்ந்த 17 யுவதிகள் பயின்றுபயன் பெற்றனர்.

1998ம் ஆண்டில் ஏற்கனவே இருந்த இளைஞர் கழகங்கள் புனர் அமைப்புச் செய்யப்பட்டதுடன் அளவெட்டி மேற்கில் அளவை இளங்கதிர் இளைஞர் கழகமும் தையிட்டி இளைஞர்கள் தையிட்டிக்கான இளைஞர் கழகமும் அமைத்ததுடன் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் புனர் அமைப்புச் செய்யப்பட்டது. இவ் ஆண்டில் பின்வரும் சேவைகளை தேசிய இளைஞர் சேவை மன்றம் நடைமுறைப் படுத்தியது.

1) தலைமைத்துவ பயிற்சி கருத்தரங்கு (03.04.1998) யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. 56 பேர் பங்குபற்றிப் பயன் பெற்றனர்.
2) மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற பொது அறிவுப் போட்டியில் வலி வடக்கைச் சேர்ந்த 3பேர் கொண்ட குழுவை பங்கு கொள்ளச் செய்து மாவட்டமட்டத்தில் 2ம் இடம் பெற்றுக் கொண்டது. (19.08.1998)
3) பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டி 16,17.05.1998 மல்லாகம்கிராம அபிவிரு த்திச் சங்கமைதானத்தில் நடத்தப் பட்டது.
4) தேசிய மட்ட கலாச்சாரப் போட்டியில் அளவெட்டியை சேர்ந்த பி. உதயகுமார் சிறுகதை எழுதி 3ம் இடம் பெற்றுக் கொண்டார்
1) 5)யாழ் இந்து பெண்கள் கல்லூரியில் 2 நாட்கள் நடைபெற்ற கலாச்சார பட்டறை வகுப்பில் வலி வடக்கைச் சேர்ந்த 06 இளைஞர்கள் பங்கு கொண்டு பயன் பெற்றனர் (12,13.09.1998)

1999ம் ஆண்டில் முன்பு இருந்த இளைஞர் கழகங்கள் புனர் அமைப்புச் செய்யப்பட்டன. அத்துடன் பன்னாலை ஐக்கிய இளைஞர் கழகம், இளவாலை வெண்புறா இளைஞர் கழகம் ஆகியன புதிதாக அமைக்கப்பட்டதுடன் வலி வடக்கு இளைஞர் கழகங்களின் புனரமைப்புச் செய்யப்பட்டது. இவ் ஆண்டில் பின்வரும் பணிகளை தேசிய இளைஞர் சேவை மன்றம் செய்தது.

1) பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டி (3,4.04.1999) மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மைதானத்தில் நடத்தப்பட்டது.
2) யு.என்.டி.பி யின் உதவியுடன் 30 பேருக்கான ஆடைதயாரிப்பு பயிற்சி நெறி ஒன்று (29.01.1999 – 31.08.1999) வரை இலவசமாகதெல்லிப்பளையில்நடத்தியது. இதன்கண்காட்சி06.11.99ல் யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.
3) 25 பேர் பங்குகொண்ட யுவதிகளுக் கான மனைப் பொருளியல் பயிற்சி வகுப்பு ஒன்றினை 14.05.1999 – 06.11.1999) நடத்தி இதன்கண்காட்சி 06.11.1999ல் யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

4) அளவெட்டி தெற்கில் குருவளை விவசாய வீதி ரூபா 60,000/- இளைஞர் கொடுப்பனவாகவும் ரூபா 20,000/- சேவைக் கொடுப்பனவாகவும் வழங்கப் பட்டு கிராம சத்தி திட்டம் மூலம் புனர் அமைப்பு (24.10.1999 – 24.11.1999) செய்யப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்டு நீளம் பாய்தல், உயரம்பாய்தல், தத்திமி தித்துப் பாய்தல் ஆகியவற்றில் 1ம் இடம் பெற்றுக் கொண்ட திரு. செல்வராசா ரமணன் என்பவர் வலி வடக்குப்பிரதேசத்தில் இருந்து கலந்து கொண்டு நீளம் பாய்தலில் தேசியமட்டத்தில் 2ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். கலாச்சாரப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் பேச்சுப்போட்டி, தனி நடிப்புப்போட்டியில் பங்குகொண்டு முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட வலி- வடக்கினைச்சேர்ந்த செல்வி வினோதினி விஜயரட்ணம் என்பவர் தேசிய மட்டப் போட்டியில் தனி நடிப்பில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 2000ம் ஆண்டில் தனது சேவைகளைப் பெருக்க இளைஞர் கழகங்களின் தொகையினை மேலும் கூடுதலாக அமைத்துக் கொண்டு முன்னெடுத்துச் செல்ல முயல்கின்றது. இதற்கு உதவியாக வலி வடக்கிலும், வலி வடக்குக்கு வெளியே வாழும் வலி வடக்கினை சேர்ந்த இளைஞர் களும் இவ் இளைஞர் கழகங்களில் இணைந்து கொள்ளுதலும் கழகங்கள் இல்லாத கிராம சேவையாளர் பிரிவுகளில் புதிதாக இளைஞர் கழகங்களை அமைக்க முன்வருதலும் அவசியமாகின்றது. இது போன்று கடந்த காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சேவைகள் சிறப்புற வலிகாமம் வாழ் பெரியோர்களும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் சிறந்த பங்களிப்பினைச் செய்திருக்கின் றார்கள். இனி வரும் காலத்திலும் எல்லோருடைய பங்களிப்பினையும் ஒத்துழைப்பினையும் பெற்று தமது கிடைக்கும் வளத்தினைக் கொண்டு நிறைவான சேவையினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு இம்மன்றம் பணியாற்றுகின்றது. இப்பணி மூலம் எமது நாட்டில்பொருளாதார சக்தி, உடல் உள சக்தி, அரசியல் சக்தி, சமூக சக்தி, கலாச்சார சக்தி ஆகியவை களைக் கொண்ட, சர்வ சக்தி உள்ள ஓர் இளைஞர் பரம்பரையை உருவாக்குவதே தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலையாய இலக்காக விளங்குகின்றது. இவ் இலக்கினை நோக்கிச் செல்ல இளைஞர் பரம்பரையும் முனைப்புடன் செயல்படுதல் அவசியமாகின்றது.

**சு. கணபதிப்பிள்ளை**
இளைஞர் சேவை அலுவலர்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
மாவட்ட அலுவலகம்

## கவலை

**உங்களை யாராவது தூற்றினால், அதனைப்பற்றிக் கவலைப்படதீர்கள். ஏனெனில் தூற்றுபவர் உனது உடலைத்தான் தூற்றுறாரே தவிர, உங்களது ஆத்மாவையல்ல. உங்களை யாரவது கெட்டவன் எனக்கூறினால் நீங்கள் அப்படிக் கூப்பிடப்படு வதினாலேயே கெட்டவனாகி விடுவீர்களா? உண்மையில் உங்களிடம் எதாவது கெடுதல் இருந்தால் அதனை அழித்துவிடுங்கள். இந்தக் கலியுகத்தில் நிறைய பேர் தங்களது ஆசை நிறைவேறாததாலேயே கடவுளை நிந்திக்கின்றானர். இது உலகளாவிய உண்மை. அனைத்து உலக நாடுகளுக்கும் பொருந்தும் அத்தகைய கீழத்தரமான, புனிதமற்ற உயர்வுகளுக்கு நீங்கள் பலியாகக்கூடாது. உதாரணமாக, தியாகராஜர் கூறுகிறார். நீ எந்த அளவுக்கு, எப்படி கடவுளை விரும்புகிறோயோ, அந்த அளவுக்கு, அதே முறையில் தான் கடவுளும் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறார். எந்த வகையில் ஒருவன் கடவுளை உருவகப்படுத்திக் கொள்கிறானோ, கடவுளும், அதே வடிவத்தில்தான் அவனுக்கு முன் தோன்றுகிறார். உங்கள் உணர்வுகள். நேர்மையானவையாக இருக்குமானால் அதற்கான விளைவுகளும் அதற்கேற்பவே இருக்கும்.**

# வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சாரணியம்

**திரு. க. தர்மேசன்**
உமா. ஆ. காங்கேசன்துறை.

கல்வியானது மாணவர்களது அறிவு விருத்திக்கு உதவியாக இருப்பதோடு அவர்களது தனிஆற்றல்களை வளர்த்து திறன்களை விருத்திசெய்கின்றது. இக் கல்வியானது மூன்று திறன்களை விருத்திசெய்கின்றது. என்பது கல்வியியலாளிரின் கருத்தாகும்.

1) கல்வித் திட்டம்
2) இணை பாடவிதானம்
3) தாபன அபிவிருத்தித் திட்டம்

இவற்றிற் கல்வித் திட்டமானது பரீட்சையை மையமாகக்கொண்டு கற்பிக்கப்படுவதாகும். இதனால் மாணவரது உள வளர்ச்சி மட்டுமே விருத்திசெய்யப்படுகின்றது.

இணை பாடவிதானமானது மாணவரின் உடல், உள விருத்தியை வளர்த்து எதிர்கால சமூதாயத்துடன் இணைந்து, இசைந்து வாழவழி சமைக்கின்றது.

எம் இளைஞர், யுவதிகளிடம் இன்று வெறுப்புணர்ச்சி, விரக்தி, அமைதியின்மை மிகுந்து காணப்படுகின்றன. இதற்குக் காரணம் பல இளைஞர், யுவதிகள் தாம் கற்ற கல்விக்கேற்ற தொழில் கிடைக்காமை, தகுதி பெற்றிருந்தும் பல்கலைக்கழகம் புகமுடியாமை போன்றவற்றினாற் தமது வாழ்க்கை சூனியமாக இருப்பதாக உணர்கின்றனர். இதன்விளைவாக போதைப்பொருட் பாவனை, தீவிரவாத நடவடிக்கைகள், போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.இதனால், இவர்கள் வீட்டினதும், நாட்டினதும் அமைதிக்குப் பெரும் சவாலாக மாறுகின்றனர். இக்கட்டத்தில், சாரணியம் இணை பாடவிதானத்துடன் சேர்க்கப்பட்டமை மாணவர்களிடையே விரக்தி, வெறுப்புணர்ச்சி, அமைதியின்மை என்பவற்றைப் போக்குவதற்கு பெரும்பங்கினை ஆற்றுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் சகல பாடசாலைகளும் தமது மாணவர்களைப் பாடத் திட்டத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து, பொதுப் பரீட்சைக்குத் தயார்செய்வதிலேயே கவனம் செலுத்துகின்றனர். பாடசாலை ஆரம்பிக்க முன்னரும், பாடசாலை முடிந்தகை யோடும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனர். இதனால், மாணவர் ஒரு குறுகிய வட்டத்தினுள்ளேயே இருப்பதனால் கல்வி தவிர்ந்த புற முயற்சிகளை, அனுபவங்களை அனுபவிக்க முடியாதிருப்பதனால் நெறிப்பிறழ்வான எண்ணக்கருக்கள் தோன்றி சமூகத்திற்கே சவாலாக உருவாகுகின்றனர்.

ஒவ்வொரு பாடசாலையிலும் சாரணியத்தினை வளர்ப்பதன் மூலம் நற்பண்புகளை மாணவர்களுக்குப் புகட்டி சமய ஒழுக்க ஆசாரங்களைப் பேணிக் காப்பதற்கும், வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டியாக இருப்பதற்கும் உதவுவதுடன், ஒழுக்கம், பண்பாடு, அன்பு, சமாதானம், தன்னடக்கம் போன்றவற்றை வளர்த்தெடுக்க முடியும்.

சாரணர் இயக்கமானது *''பேடன் பவல் பிரபு'* என்பவரால் 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1912 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவதாக மாத்தளை கிறிஸ்தவக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 1916ஆம் ஆண்டு யா/ புனித பரியோவான் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. 1936 ஆம் ஆண்டு வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் யா/ மகாஜனக் கல்லூரியில் திரு. தெ து. ஜெயரத்தினம் அவர்களாலும், அதே காலப்பகுதியில் யா/யூனியன் கல்லூரியில் திரு.வோர்ட் அவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டது. காலம் செல்லச்செல்ல தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 28 பாடசாலைகளில் சாரணியம் வளர்ந்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

அக்காலத்திலிருந்து இந்தியா, சிங்கப்பூர், ஐரோப்பா, கிறீஸ், இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் நடைபெற்ற சாரணர் ஜம்போறிகளில் இப்பிரதேச சாரணர்கள், சாரணர் தலைவர்கள் பங்குபற்றிப் பல வெற்றிகளை ஈட்டித்தந்துள்ளனர். அத்துடன் சாரணர்களின் அதியுயர் விருதான "இராணிச் சாரணன்" (தற்போது ஜனாதிபதி விருது) பலர் பெற்றுள்ளனர். சாரணர்களாயிருந்த பலர் தற்போதும் பல உயர்பதவிகளில் சிறப்புறக் கடமையாற்றி, பலரது மதிப்பைப் பெற்றுவருவதனைக் காணமுடிகின்றது.

1980ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தின் வருடாந்த சாரணர் பாசறைவிழா தெல்லிப்பழை

யூனியன் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அப் பாசறை விழாவில் காங்கேசன்துறைக்கென தனியான சாரணர் மாவட்டம் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்து உதயமாகி, கொழும்பிலுள்ள சாரணர் தலைமைக் காரியாலயத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டது. அச்சமயம் இப் பிரதேச பாடசாலைகளின் செயற்பாடுகளும் வளர்ச்சியும் சிறப்பாக அமைந்திருந்தமையால் இக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1980 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி அப்போதைய இலங்கையின் பிரதம சாரணர் ஆணையாளர் திரு. கேமபால இரத்தினசூரியா அவர்களால் கொல்லன்கலட்டி, மாவை கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக காங்கேசன்துறை சாரணர் மாவட்டம் உதய மாகியது.

அதுவரைகாலமும் ஓரே யாழ் மாவட்டமாக இருந்த சாரணர் மாவட்டம் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, காங்கேசன்துறை என நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. நாளடைவிற் கோப்பாய் பிரதேசம் தாமாகவே, ஒரு பகுதி யாழ் மாவட்டத்துடனும், மறுபகுதி பருத்தித்துறை மாவட்டத்துடனும் இணைந்துவிட்டன. கடந்த 19 வருடங்களாக காங்கேசன்துறை மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய மாவட்டங்களைவிட சிறப்பாக வருடாந்த சாரணர் பாசறைவிழா, சாரணர் தலைவர், சாரணர்களுக்கான பயிற்சி, உலக சாரணர் தினம் போன்றனவற்றை வருடாவருடம் நடத்தி சாரணர்களது செயற்றிட்டத்தினை மேம்படுத்துகின்றது.

கடந்த இரு தசாப்தங்களாக வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் யுத்த அனர்த்தங்களினால் 16 பாடசாலைகள் மூடப்பட்டும், பல பாடசாலைகள் இடம்பெயர்ந்து, சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாது தனியார், பிற பாடசாலைக்கட்டடங்களில் இயங்கியபொழுதும் தொடர்ந்தும் சாரணியச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்துள்ளன. 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற வலிகாம இடப்பெயர்வு, இப் பிரதேசத்தில் இரண்டு வருடங்கள் எதுவித சாரணிய செயற்பாடுகளையும் செய்யவிடாது தடுத்துவிட்டது. 1998 ஆம் ஆண்டில் ஓரளவு வளர்ச்சி காணமுடிந்தது. இதற்குக்காரணம் 1996 ஆம் ஆண்டு இலங்கைச் சாரணர் சங்கத் தலைமைக் காரியாலயம் புதியசாரணர் செயற்றிட்டத்தினை அறிமுகப்படுத்தியபோது, காங்கேசன்துறை சாரணர் மாவட்டமே முதன் முதலாக புதிய சாரணர் செயற்றிட்டத்தினை மருதனார்மடத்திலியங்கிய மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் 1977 – 03 - 25 ஆந் திகதி நடாத்தியது. இக் கருத்தரங்கில் 45 சாரணர் தலைவர்கள் கலந்துகொண்டனர். ஆனால் யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய மாவட்டங்கள் அதன்பின்பே புதிய சாரணர் செயற்றிட்டம்பற்றி அறிந்தனர்.

சாரணர் இயக்கமானது பாடசாலைகளில் 7 ½ வயது முதல் 11 வயதுவரை 'குருளைச் சாரணர் பிரிவு' என்றும், 11 வயது முதல் 18 வயது வரை 'சாரணர் பிரிவு' எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று பெண்களுக்கும் சிறுதோழியர், வழிகாட்டிகள் என இருபிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கையின் குறிக்கோள் சந்தோசமாக வாழ்தல். மற்றவர்களும் சந்தோசப்படும்போதுதான் உண்மையான சந்தோசத்தைத் தானும் அனுபவிக்கமுடியும். சந்தோசமாக வாழும் பிள்ளைகள்தான் தமது பெற்றோரை விரும்புவர். ஒரு பிள்ளை தனது பெற்றோருடன் அன்பாக இருக்குமானால், அதைவிடப் பெரிய சந்தோசம் பெற்றோர்களுக்கு வேறு எதிலும் பெறமுடியாது. சிறந்த பிள்ளைகளே நாளைய நல்ல ஆளுமைத்திறன் பொருந்திய பிரசையாக, உலகைவிட்டு மறைந்த மனிதர்களுக்கு ஈடுகொடுக்கக்கூடியவர்கள் ஆவார்கள். இதற்காகவே பேடன்பவல் பிரபு ஆண், பெண் இருபாலாருக்கும் சாரணியப் பயிற்சி அவசியம் என்று கூறியுள்ளார்.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சாரணியம் இயங்கிய பாடசாலைகளில் இணைபாடவிதானத்தின் ஏனைய செயற்பாடு களான விளையாட்டு, கலை, கலாச்சார செயற்பாடுகளும் சிறந்து விளங்குவது நன்கு புலப்படுகின்றது. ஆனால், சாரணியம் இயங்காத பாடசாலைகளில் ஏனைய செயற்பாடுகளும் குறைவாகவே உள்ளன. அண்மைய அசாதாரண நிலைமை காரணமாக பல சிரமங்களின் மத்தியிலும்

1) யா / மகாஜனக் கல்லூரி
2) யா / யூனியன் கல்லூரி
3) யா / வயாவிளான் ம.ம.வி
4) யா / அருணோதயக் கல்லூரி
5) யா / மல்லாகம் ம.வி
6) யா / இளவாலை மெய்கண்டான் ம.வி
7) யா / வீமன்காமம் ம.வி
8) யா / கீரிமலை நகுலேஸ்வர ம.வி
9) யா / தந்தை செல்வா தொ. நி. ப
10) யா / அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பா

ஆகிய பத்துப் பாடசாலைகளும் தம்மால் இயன்றவரை தொடர்ந்து சாரணியத்தினை

வளர்த்துவருகின்றனர். இவற்றில் மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரிகள் தமது வைரவிழாவினை அண்மையில் விமரிசையாகக் கொண்டாடின.

சாரணர்கள் வருடாவருடம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானம், மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானம், கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம் ஆகியவற்றின் வருடாந்த மகோற்சவ காலங்களில் வீதிஒழுங்கு, சனநெரிசலைத் தவிர்த்தல், முதலுதவி போன்ற கடமைகளில் ஈடுபடுகின்றனர். வலிகாமம் இடப்பெயர்வின் பின்னர் 1997 , 1998,1999 ஆகிய மூன்று ஆண்டுகள் காங்கேசன்துறை மாவட்டத்தின் வருடாந்த சாரணர் பாசறை விழா மருதனார் மடத்தில் யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரிகளில் நடைபெற்றன. இப் போட்டிகளின்போது ஏனைய பிரதேச சாரணர்கள் பங்குகொள்வது வழமை. இருப்பினும், எமது பிரதேசப் பாடசாலைகளான மகாஜனக் கல்லூரியும், யூனியன் கல்லூரியுமே அதிக பரிசில்களைப் பெற்று அதிசிறந்த துருப்பிற்கான கேடயத்தினைத் தட்டிக்கொள்வர்.

புதிய சாரணர் செயற்றிட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்திலேயே வலிகாமம் வடக்குப் பிரதேச சாரணர்களே முதல் ஜனாதிபதி விருதுபெற்ற சாரணர்களாவர். அருணோதயாக் கல்லூரியச் சேர்ந்த த.நகுலன், மகாஜனக் கல்லூரியை சேர்ந்த செ. செந்தில்ராஜ், காங்கேயன் சாரணர் துருப்பினைச் சேர்ந்த போ. உல்லாசன், (கொல்லன்கலட்டி) அ.நித்தியநர்மதன் (உதவி அரசாங்க அதிபர் ஒழுங்கை, தெல்லிப்பழை) ஆகியோர் அண்மையில் ஜனாதிபதிவிருதினைப் பெற்றவர்களாவர். அத்துடன் சாரணிய வளர்ச்சிக்குப் பணியாற்றியமைக்காகவும், நீண்டகால சாரணர் சேவைக்காகவும் மாவட்ட ஆணையாளர் திரு. ந. சௌந்தரராஜன், உதவி மாவட்ட ஆணையாளர் திரு. க.தர்மேசன் ஆகியோருக்கு 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதுகள் வழங்கப்பட்டன.

தற்போதைய சூழ்நிலையில் சாரணர்களுக்குப் போதிய பயிற்சி வழங்கப்படாது, அவர்களது திறன் விருத்தியும் குறைந்துள்ளமையால் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சாரணியச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்குத் தயங்குகின்றனர். மாணவரின் வளர்ச்சியில் ஆசிரியருக்கு எவ்வளவு பங்கு உண்டோ அதேயளவு பங்கு பெற்றோருக்கும் உண்டு என்பதனைப் பெற்றோர்கள் உணராமையே இதற்குக் காரணம். தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பியதும் பிள்ளைகள் ஆசிரியரதுபொறுப்பிலேயே விடப்பட்டதாகக் கருதுகின்றனர். பிள்ளைகள் பரீட்சையிற் சிறந்த பெறுபேறுகளைப் பெறும்போது ஆசிரியர்களைப் பாராட்டமாட்டார்கள். ஆனால் பரீட்சைப் பெறுபேறு திருப்திகரமாக அமையாது விட்டால், அதே ஆசிரியரைத் தூற்றுவார்கள். இந்நிலை மாறவேண்டுமாயின் சாரணியம் பற்றிய அறிவு பெற்றோருக்கும் அவசியமாகின்றது. சாரணியம் பற்றிய அறிவு பெற்றோருக்குமிருந்து, பிள்ளைகளும் சாரணியத்திற் பயிற்சிபெற்றிருப்பின் தமது பிள்ளைகளின் நிலையினைப் பெற்றோர் நன்கறிவர். இதன் மூலம் எவரையும் புண்படுத்தாது, தமது பிள்ளைகளின் எதிர்காலத்தினைத் தாமும் பிள்ளைகளுமாகத் தீர்மானித்து, சிறந்த பிரசையாகவாழ வழிசமைக்க எமது பிரதேசத்தில் சாரணியம் மீள உயிரூட்டப்படுவது அவசியமாகும்.

## அன்பு

அன்பு செய்ய வேண்டுமென்பதுண்மை – அதை
என்று செய்ய வெண்டுமென்பதில்லை.
இன்றே செய்ய வேண்டுமென்ற தன்மை – வளர
உன்தன்மனம் உறுதி பெறின் நன்மை

கற்றுத் தந்த குருவினிலும் அன்பு கொள்ள வேண்டும்
உற்ற மதகுருவினிலும் அன்புகொள்ள வேண்டும்
நற்றமிழின் மீதினிலும் அன்புகொள்ள வேண்டும்
பெற்ற எம்நாட்டினிலும் அன்புகொள்ள வேண்டும்

தந்தை தாயின்மீதும் அன்பு கொள்ள வேண்டும் தம்பி
மந்தைகளின் மீதும் அன்பு காட்டவேண்டும் தம்பி
சிந்தனையில் என்றும் அன்பு சுரக்க வேண்டும் தம்பி
சொந்த பந்தம் யாவும் கடந்து நிலைக்க வேண்டும் தம்பி

அயலானை நேசி என்று சொன்னார் யேசுகிறீஸ்து
அன்பை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றார் மகான்காந்தி
அன்புதானே இன்ப ஊற்று என்றார் சாது புத்தர்
அன்பைப் பேணிக் கொள்ள வேண்டுமென்றார் நபிநாதர்

எல். திலகநாயகம் போல்

# சிறுவர் நலன் பேணல் அன்றும் இன்றும்

**சி.சிவகரன்** B.A. Hons

**சிறுவர் நன்னடத்தை அதிகாரி**

**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே**

என்று எடுத்தோதப்பட்ட இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்னரே கல்வியின் முக்கியத்துவம் இந்தளவிற்கு முதன்மைப் படுத்தப்பட்டாலும் கூட இன்று அந்தளவு தூரத்திற்கு கல்வியின் முக்கியத்துவம் உணரப்படாத தன்மை மிகவும் வேதனைக்குரியது ஓயாத போர்ச் சூழலும் அதன் வழியாக ஏற்பட்ட வறுமை நிலையும் எமது சமூகத்தினரையும் சின்னஞ் சிறார்களையும் கூட தவறான வழிக்கு அழைத்துச் சென்றிருக்கின்றது. இதற்கு நாட்டின் சகல மட்டத்தில் உள்ளவர்களும் நேரடியாகவேனும் மறைமுகமாகவேனும் சம்பந்தப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்நிலையை மாற்றி சிறுவர்கள் நலனை முக்கியமாகக்கொண்டு ஒவ்வொரு மட்டத்தில் உள்ளவர்களும் சிந்திப்பார் களானால் நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் எதிர்காலத்தை திடகாத்திரமாக அத்திவாரம் இடலாம் என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும்.

சிறுவர்கள் அல்லது சிறார்கள் என்று நாம் சொல்கின்றபோது உடலாலும் உள்ளத் தாலும் வளர்ச்சியடையாத பதினெட்டு வயதிற்கு குறைந்தவர்களையே நாம் சிறுவர்கள் என்கிறோம். இந்த வயதிற்கு உட்பட்டவர்கள் தான் எது சரி, எது பிழையென பகுத்தாராய ஆற்றல் அற்றவர்கள். ஆகவே இந்த வயதிலேயே இவர்கள் சரியாக வளர்க்கப்படல் வேண்டும் வழிகாட்டப்பட்ட வேண்டும். நெறிப்படுத்தப்பட வேண்டும் இதற்கு ஒவ்வொரு பெற்றோரும். சமூகமும் மிகுந்த பொறுப்புக்களைத் தாங்கி பொறுப்புடன் செயற்பட்டால், சிறுவர் எதிர்காலம் பொற்காலமாக மிளிரும் என்பது திண்ணியமுடிபாகும். இதனை ஒவ்வொரு பிரதேசமும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த வகையிலே வலி வடக்கின் சிறுவர் நிலமைகளை எடுத்தாராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைவதால் அவைபற்றிச் சிறிது ஆராய்வோம்.

வலி வடக்குப் பிரதேசம் இயற்கை வளம் கொழிக்கும் எழில் நிறைந்த ஒரு பூமியாகும். எதிர்பாராத இடப்பெயர்வாலும், இன்னல் களாலும் இயற்கைப்பொலிவிழந்து ஈடேறிக் கொண்டிருக்கும் ஒரு பூமியாகும். இத்தகைய பூமியிலே அவதரித்தசிறார்களில் அனேகமானோர் கல்வி கற்று வருகின்றர்கள். சிலர் சிறந்த வழிநடத்தல் இல்லாமற் சீரழிந்து கொண்டிருக்கின்றார்கள். வேறுசிலர் குடும்ப வருமானத்திற்காக பெற்றோர்களாலே "உழைப்பு" என்று போர்வையிலே சுரண்டப்பட்டு கொண்டிருக் கின்றார்கள். இன்னொருவகையினர் அரசியற் காரணங்களால் அங்கவீனமாக்கப் பட்டும் பெற்றோர்களை இழந்தும் அல்லல் உற்றுக்கொண்டிருக்கிறார்கள். இத்தகை யோர்க்கு அபயமளித்து, இவர்களை நற்பிரசைகளாக, பிரதேசத்தின் முதல்வர்களாக வளர்த்தெடுப்பது வலி வடக்குப் பிரதேசத்தின் ஒவ்வொரு மக்களதும் மிகவும் இன்றியமையாத பொறுப்பு என்பதை ஒவ்வொரு நெஞ்சமும் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

1990ம் ஆண்டும், அதற்கு முன்னரும் இடப்பெயர்வுகளைச் சந்தித்த வலி வடக்குப் பிரதேசத்தின் ஆரம்ப சிறுவர் நலன்பேனல் நடவடிக்கைகளை அறிந்துகொள்வதற்குரிய தகவல் சாதனங்கள் பெரிதாக கிடைக்கப் பெறாவிடினும், கிடைக்கின்ற சில தரவுகளில் இருந்து 1990 இற்கு முன்னரும் சிறுவர்கள் நன்கு மதிக்கப்பட்டும். அவர்களுடைய நலன்கள் பேணப்பட்டும், அவர்களுக்கு சமூகத்தில் உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டுப் பேணப்பட்டிருக்கிறார்கள் என்பதை அத்தரவுகள் எமக்குப் பறைசாற்றுகின்றன. பசித்தோர் இல்லை யென்றால் அன்ன சத்திரங்கள் தேவையில்லை என்பது நடைமுறை வாழ்க்கையிலே நாம் காணக் கூடிய தொன்று. இதற்கிணங்க வலி வடக்கிலும் அன்று அதிகளவு சிறுவர் நலன் பேணும் நிலையங்கள் காணப்படாததன்மை அக்காலத்திற் சிறுவர்களுக்கும் உயர்ந்த இடம்கொடுத்துப் பேணப்பட்டதன்மையை எடுத்துக்காட்டுகின்றது. இருந்தாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் இயற்கை ஊனங்களினாலும் போர்ச்சூழலினாலும் வளம்கொழிக்கும் சமுதாயத்திலும்கூடஒரு சிலராவது பாதிக்கப்படுகின்ற தன்மை எந்த சமூகத்திலும் காணக்கூடியதொன்று. தான் இதற்கமைய வலி வடக்குப் பிரதேசமும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. ஆனால் இவர்கள் கூடச் சமுதாயத்திலிருந்து விலக்கப்படவில்லை புறக்கணிக்கப்படவும் இல்லை இவர்களை இவர்களுக்காக் தொடங்கப்பட்ட தெல்லிப்பளை துர்க்கா மகளிர் இல்லம், வாழ்வகம் போன்ற சில தொண்டர் நிறுவனங் கள் உள்வாங்கின் அவர்களை நன்முறையில் நெறிப்படுத்தி வலிவடக்கு மண்ணிற்கு அன்றே பெருமைசேர்க்கத் தொடங்கிவிட்டது என்றுகூறின் அதுமிகையாகாது. இன்றும் அதன் சேவை தொடர்ந்த வண்ணமேயிருக் கின்றது.

தெல்லிப்பளை துர்க்கா மகளிர் இல்லம் 1982ம் ஆண்டு துர்க்கா தேவஸ்தானத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொண்டர் நிறுவனம் அன்றிலிருந்து இற்றைவரை கதியற்ற சிறு

பெண்பிள்ளைகளைக் கல்வியிற் சிறந்தவர்களாகவும், ஒழுக்கத்தில் உயர்ந்தவர் களாகவும் பக்தியில் மேம்பட்டவர்களாகவும் நெறிப்படுத்துவதற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இடப்பெயர்வுகளைச் சந்திக்கின்ற போதுகூட அதன் பணி இடம்மாறினாலும் ஓயவில்லை என்று கூறுவதிற் பெருமைப்பட வேண்டியுள்ளது. இன்று இச் சிறுவர் இல்லத்தில் 61 பெண் பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றார்கள் இவர்களில் ஆரம்பவகுப்பிற் கல்விபயிலும் மகளிரிலிருந்து பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் மாணவிகள் வரை பலர் இருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதைவிடக் கண்கள் ஊனமுள்ள பிள்ளைகளுக்கு கல்வியும் நற்பழக்கமும் ஊட்டி அவர்களின் வாழ்க்கையை மேன்நிலைப்படுத்து வதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு வரும் ஒரு நிறுவனம் "வாழ்வகம்" ஆகும். இதுவும் தெல்லிப்பளையிலேயே அதன் சேவையை அன்று ஆரம்பித்ததெனின் அது வலி வடக்குப் பிரதேசத்திற்குப் பெருமையான ஒரு விடயம்தான். தெல்லிப்பளையில் ஒரு தனியார் வீட்டிலேயே 1988.06.01ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ்வாழ்வகம் 1990 இல் ஏற்பட்ட இடப்பெயர்வினைத் தொடர்ந்து உடுவிலுக்கு மாற்றப்பட்டு, பின் 1995 இலும் திரும்ப ஏற்பட்ட இடப்பெயர்வினால் இடம்பெயர்ந்து 1998.இல் திருப்பவும் மானிப்பாயில் அதன் சேவையை ஆரம்பித்துள்ளது. தற்பொழுது இதற்கென்றே மருதனாமடத்தில் நிரந்தரமான ஒரு கட்டடம் அமைக்கபட்டுவருவது இதன் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. தெல்லிப்பளையில் இயங்கும்போது ஆண்களும் பெண்களுமாக 17 பிள்ளைகளைத் தாங்கி வளர்ந்த இவ்வாழ்வகம். இன்று அதன் வளர்ச்சியின் படியிலேயே காலெடுத்து நிற்கின்றது. இந்தப் பிள்ளைகளிற் பலர் பல்கலைக் கழகம்கூட சென்றிருக்கிறார்கள். என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தங்கள் பிள்ளைகளையே பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பின் நிற்கும் எமது சமுதாய சூழலில் இவ்வாறான பிள்ளைகளை மேல் நிலைப்படுத்துவதற்கு பாடுபட்டுவரும் இந்நிறு வனத்தின் பணியை விதந்து பாராட்டுவதுடன் அதற்காகிய வித்து வலி வடக்கிலேயே இடப்பட்டது. என்று கூறினாலும் அது மிகையாகாது. எனலாம்.

''உழைக்கத்தெரியாதவர்கள், வாழ வழிதெரியாதவர்கள்'' என்றுதான் சொல்ல வேண்டும் வலி வடக்கு மண்ணிலே பல தொழில்களையும் செய்பவர்கள் இருந்தாலும் வலி வடக்குப் பிரதேசமும் அத்தொழில்களுக்கெல்லாம் களமமைக்கும் இடமாக, இயற்கை வளம் பொருந்தி மக்களை ஈடேற்றிக் கொண்டிருக்கின்றது. ஒருசிலர் தமது பொறுப்புகளை மறந்து தடுமாறிக் கொண் டிருந்தாலும் பலரும் பலவாறான தொழில்களைச் செய்துதமது குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பயனுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அரச தொழில் பார்ப்பவர்களில் இருந்து அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள் எனப் பலரும் இம்மண்ணிற் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள் இத்தகை யோருக்குத் தமது வேலை நேரங்களில் தங்கள் பிள்ளைகளை பாதுகாப்பது பராமரிப்பது மிகவும் சிரமமான ஒன்றாகவே காணப்படுகின்றது. இந்த இன்னல்களிலிருந்து பெற்றோர்களைப் பாதுகாப்பதற்காகவே அளவெட்டி மேற்கில் தென்னிந்திய திருச்சபையால் "பாலர்பகல் பராமரிப்பு நிலையம்'' ஒன்று அன்றே ஆரம்பித்து இன்றும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இன்று இப் பகல் பராமரிப்பு நிலையத்தில் கிட்டத்தட்ட 40 பிள்ளைகள் வரையில் வைத்துப் பராமரிக்கப்பட்டும் கல்வியளிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களிற்கு. இந்தப் பராமரிப்பு நேரத்தில் பால், பிஸ்கட், கடலை, மதிய உணவு எனப்பலவும் வழங்கி, அவர்களின் போசாக்குப் பேணப்படுவதுடன், அவர்களிற்குச் சிறந்த பழக்க வழக்கங்களும் பயிற்றுவிக்கப்படு கின்றன. இதன் மூலம் சிறார்களின் எதிர்காலம் சீரமைக்கப்படுவதுடன், பெற்றோர்களின் வருமானமும், தொழில்களும் மேன்நிலை யடைவதற்கு, இந்தப் பாலர்பகல் பராமரிப்பு நிலையம் மறைமுகமாகப்பங்காற்றிக் கொண்டிருக்கின்றது. என்றுதான் சொல்ல வேண்டும். இத்தகைய ஒரு முயற்சி வலிவடக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்படடிருப்பது மிகவும் பாராட்டக் கூடியதொன்றாகவே காணப்படுகின்றது.

சிறுவர்களின் எதிர்காலம் சிறந்து விளங்குவதற்குச் சீரிய கல்வி வழங்கப்படுவதுடன் சிறந்த பழக்கவழக்கங்களும் ஊட்டப்பட வேண்டும். அத்துடன் அவர்களின் போசாக்கும் கவனிக்கப்பட்டாற்தான் அவர்கள் நாட்டிற் திடகாத்திரமானவர்களாக இருந்து சிறந்த சேவையாற்ற முடியும். இத்தகைய முயற்சிகளுக்கு அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுவரும் பல திட்டங்கள் சிறுவர் நலன்களை மேம்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. மாறிவரும் அரசியலாலும் மாறிவரும் தலைவர்களாலும் சிறுவர்களுக் கென்றே பல போசாக்குத் திட்டங்கள் அறிமுமாக்கப்பட்டுள்ளன. இதன் பிரதிபலிப்பாகவே திரிபோஷா, பிஸ்கற், பால், இலைக்கஞ்சி, மதிய உணவு எனப் பல திட்டங்கள் கல்விகற்கும் பிள்ளைகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன இத்தகைய திட்டங்களால் வலிவடக்கில் உள்ள, கல்வி கற்று வரும் பிள்ளைகளும் பயன்பாடு அடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதைவிடச் சிறியவர்களுக்கென்றே இலவச உடை, இலவச நூல் எனப்பல திட்டங்களும் இன்று நடைமுறையில் உள்ளன. இத்தகைய வசதிகள் வலி வடக்கில் உள்ள சிறுவர்களுக்கு மிகவும் வரப்பிரசாதமான ஒன்றாகவே காணப்படுகின்றது. இத்தகைய வசதிகள் இருந்தும் கல்வி கற்பதற்கு பின் நிற்கும் பிள்ளைகளையும், இதனைக் கண்டும் காணாமல் மௌனித்து நிற்கும் பெற்றோர்களையும் நினைத்துக்கண்ணீர்தான் வடிக்க வேண்டியுள்ளது.

வலிவடக்குப் பிரதேசம் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அவர்களின் பழக்க வழக்கங்களின் விருத்திக்கும் பாடுபட்டுவரும் ஒரு பிரதேசமாகும். எந்தச் சமுதாய சூழலிலும் மிகவும் வசதியானவர் களும் மிகவும் கீழ்ப்பட்ட நிலையில் உள்ளவர்களு மெனபலரும் இருக்கத்தான் செய்கின்றார்கள் ஆனால் இந்தத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை மேன்நிலைக்குக் கொண்டு வருவதற்கு, ஒவ்வொரு

சமூகமும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். இத்தகை யோர்தான் பாராமுகமாக விடப்படுகின்றார்கள். ஆனால், வலி வடக்கில் இவ்வாறான நிலமை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக வலி வடக்குப் பிரதேச செயலகத்தாலே 1998 இல் "கல்வி கலை கலாச்சார சமூக மேம்பாட்டு கழகம்" என்றொரு அமைப்பே தொடங் கப்பட்டு இத்தகையவர்களின் பிள்ளைகளுக்குக் கல்விகற்பதற்காக பல உதவிகள் செய்யப்பட்டு வருகின்றமையை இங்கு குறிப்பிடலாம். இதனைவிட அனாதைகைவிடப்பட்ட பிள்ளைகளையும் இனங்கண்டு அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அவர்களைச் சிறுவர் இல்லங்களிற்கு அனுப்பி சிறந்தவர்களாக்குவதற்கு வலி வடக்குப் பிரதேச செயலகம் முனைந்த வண்ணம் இருக்கிறது. இத்தகைய முயற்சியிலே 1998 இல் 10 பிள்ளைகளும் 1999 இல் 14 பிள்ளைகளும் 2000இல் 05 பிள்ளைகளும் சிறுவர் இல்லங்களிற்கு அனுப்பட்டு கல்வியளிக்கப்பட்டுக் கொண்டி ருக்கிறார்கள். இவற்றைவிட "கிராம மட்டத்திலும் கிராம சிறுவர் கண்காணிப்பு குழுக்கள்" ஏற்படுத்தப்பட்டு சிறுவர் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. கிராமமட்ட குழுக்களினாலே தீர்க்கப்பட முடியாத பிரச்சனைகள் பிரதேச மட்ட கண்காணிப்புகுழுவிற்கு அனுப்பப் பட்டும் அவற்றுக்குரிய பரிகாரம் காணப்படு கின்றது. இந்த வகையிலே வலி வடக்குப்பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுவும் இத்தகைய பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து அவற்றிற்கு தீர்வுகண்டு வருவதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

வலி வடக்குப் பிரதேசம் இடப்பெயர் விற்கு முன் அதிக சிறுவர்களைத் தாங்கி அவர்களாலே பெருமைப்பட்ட ஒரு பிரதேசமாகும். அந்தளவிற்கு அவர்கள் தமக்கும் சமூகத்திற்கும் பயனுடையவர் களாக வாழ்ந்து காட்டி இம்மண்ணிற்கே பெருமை தேடிக்கொண்டார்கள். இன்று முற்று முழுதாக மீளக்குடியமர அனுமதிக்கப்படாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கும் வலி வடக்குப் பிரதேசத்தில் மிகவும் எண்ணிக்கையிற் குறைந்த சிறுவர்களே இம்மண்ணிலிருந்து தமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள் அந்த வகையிலே தற்பொழுது 18 வயதிற்குட்பட்ட 2856 ஆண் பிள்ளைகளும் 2916 பெண்பிள்ளைகளுமே இப்பிரதேசத்திலிருந்து முன்னேற முயன்று கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் 1986 ஆண் பிள்ளைகளும் 2231 பெண் பிள்ளைகளுமே பாடசாலைக்குச் செல்பவர்களாகக் காணப்படு கின்றார்கள். மிகுதிப்பேர் பெற்றோர்களாலும் , சிறுபங்கினர். தங்களாலும் தங்கள் எதிர் காலத்தைக் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட அங்கவீனமாகிய 20 ஆண் பிள்ளைகளும் 13 பெண் பிள்ளைகளும் இம்மண்ணில் இருந்தாலும் இவர்கள் ஏதோ ஒருவகையிற் தங்கள் கல்வியை தொடர்ந்த வண்ணம் இருப்பது பாராட்டக் கூடியதொன்றாகவே காணப்படு கின்றது. அத்தோடு தாய் தந்தை இருவரையும் இழந்தவர்கள் 12 ஆண்பிள்ளை களும் 11 பெண்பிள்ளைகளும் இப்பிரதேசத்தில் இருந்து கல்விகற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களைவிட தாய் அல்லது தகப்பனை இழந்த 344 பிள்ளைகளும் எமது பிரதேசத்திலேயிருந்து கல்விகற்றுத் தமது எதிர்காலத்திற்காக முயன்று வருவது வலி வடக்கு மண்ணில் ஊறிப்போன ஒரு உயர்ந்த பழக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது.

பாடசாலை வசதிகளை எடுத்து நோக்குகின்றபோது, ஆரம்பத்தில் 38 பாடசாலைகளைக் கொண்டியங்கிய வலி வடக்குப் பிரதேசத்தில் தற்பொழுது 17 பாடசாலைகள் மட்டுமே இவ்விடத்தில் நிலையாக இயங்குகின்றன. வலி வடக்குப் பிரதேசத்திலே மீளக்குடியமர அனுமதிக்கப் படாமல் அதிக நிலப்பரப்புக்காணப் படுவதால் பல பாடசாலைகள் திரும்ப அவ்விடங்களில் இயங்க முடியாத ஒரு நிலை காணப்படுகின்றது. இவ்வாறன தன்மை காரணமாகவே, வலி வடக்கில் இயங்க வேண்டிய 14 பாடசாலைகள் வேறு இடங்களில் தனியார் கொட்டகைகளிலும் வேறு பாடசாலைகளுடன் இணைந்தும் தம்பணியை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றைவிட 07 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டும் உள்ளன. வலி வடக்குப் பிரதேசம் முழுவதும் மீளக்குடியமர அனுமதிக்கப்படும் பட்சத்தில் எல்லாப் பாடசாலைகளும் இப்பிரதேசத்தில் தனது சேவைகளை அளிக்கும்போது வலி வடக்குச் சிறார்கள் அதனால் மிகுந்த பயனடைவார்கள் என்பது அசைக்க முடியாத ஒரு உண்மையாகும்.

பாலர் பாடசாலைகளைப் பொறுத்த வரையில், தற்பொழுது இப்பிரதேசத்தில் 23 பாலர்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு சிறுவர்களின் ஆரம்பகல்விக்கு அத்திபாரம் இடப்பட்டுள்ளது. இவற்றிற் கிட்டத்தட்ட 567 பிள்ளைகள் வரையில் கல்விபயின்று வருகின்றார்கள். இங்கு குறிப்பிடக்கூடிய முக்கிய விடயம் என்னவென்றால். பிள்ளைகளின் கல்விக்கு மேலாக சிறுவர் களின் உளவிருத்திக்காகவும் பொழுது போக்கிற்காகவும் சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அவர்களின் உளநலமும் பொழுதுபோக்கும் இனிதே நிறைவேற்றப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய முயற்சியிலே மல்லாகம் மத்தி, அளவெட்டி கிழக்கு, அளவெட்டி தெற்கு, இளவாலை வடக்கு, வயாவிளான் கிழக்கு ஆகிய இடங்களில் "யூனிசேப்" அனுசரனையுடன் அமைக்கப்பட்ட பூங்காக்களை இங்கு குறிப்பிடலாம். இத்தகைய முயற்சிகள் வலி வடக்குப் பிரதேசம் அச்சிறார்களுக்காக ஏற்படுத்திக்கொண்ட அரும்பணியென்றே குறிப்பிடலாம்.

இந்த வகையிலே சிறுவர் நலன் பேணல் நடவடிக்கைகளை அன்றும் இன்றும் அவதானித்த நாம், இந்தப் பேணல் நடவடிக் கைகளுக்கு சமுதாயத்தின் பங்கு எந்தளவு தூரத்திற்கு கடமைப்பாடு கொண்டுள்ளது. என்பதனை சற்று நோக்குவோம். இன்றைய சிறுவர்கள்தான் நாளைய இளைஞர்கள் அதன்பின்னர் நாட்டின் பிரசைகள், நாளைய பெரியோர்கள் இவர்களே. இவர்களை நமக்கும் நாட்டுக்கும் பயனுள்ள பிரசைகளாக வளர்த்தெடுப்பது, வழிகாட்டுவது ஒவ்வொரு

பெற்றாருடையதும் சமூகத்தினுடையதும் ஆசிரியர்களுடையதும் மிகவும் இன்றியமையாத பொறுப்பாகக் காணப்படுகின்றது.

போர்மேகம் சூழ்ந்திருக்கின்ற எமது சமுதாய சூழலில் மக்களின் எண்ணங்கள் அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. அதைவிட தீராத வறுமை நிலையும் திடகாத்திரமில்லாத அமைதிநிலையும் மக்களைத் தங்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கத் தடைபோடுகின்றன. ஆனால் இதன் எதிரொலியாக பாதிக்கப்படுவது இன்றைய இளம் பிஞ்சுகள் என்பது இன்று உணராப்படாவிட்டாலும் என்றோ ஒருநாள் உணரத் தூண்டும். அந்தவகையிலே மானுடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் செய்யவேண்டிய தம்கடமைகளிலே முக்கியமாக நிறைவேற்ற வேண்டியது தம்பிள்ளைகளைக் கல்விக் கேள்விகளில் சிறந்தவர்களாக வழிநடத்துவதாகும். திருவள்ளுவர் "தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்திஇருப்பச் செயல்"

-என்று தந்தையின் கடனை எடுத்தாள்கின்றார் புறநானூற்றுப் பாடல் ஒன்றிலே-

உற்றுழியுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போரன்ன வுடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா லரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன் கட்படுமே
(புறநா. க. அங)

என்று சிறுவர்களுக்குக் கல்வியாற் கிடைக்கும் பயன் அழகாக எடுத்துக் கூறப்படுகின்றது. அதாவது தாய்க்குக்கூட கல்வி விசேடத்தால் தம்பிள்ளைகளில் கல்விகற்றவர் களிடத்தில் அன்பு அதிகரிக்கும் என்றும், கீழ்க்குலத்திற் பிறந்த ஒருவனும் கல்வியால் மேற்குலத்தானாலேயே மதிக்கப் படுவான் என்றும் கல்வியின் மகிமை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றை உணர்ந்து ஒவ்வொருபெற்றோரும் சிறுவர் களும் தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றவேண்டும். பெற்றோரும் தம் கடமைகளைச் நிறைவேற்றுகின்றவிடத்து பிள்ளைகளும் தாம் சாதிக்க வேண்டிய வற்றை உணர்கின்றவிடத்து. பெற்றோரும் பிள்ளைகளும் ஒரு ஒளிமயமான காலத்தின் மடியில் ஒளிமயமாக வாழலாம் என்பது திண்ணிய முடிவாகும்.

சிறுவர்களின் கருத்துக்கள் கேட்கப் படாத குடும்பத்திலும் கூட அச்சிறுவர்களின் உழைப்பு, வருமானம் அக்குடும்ப பெற்றாராலேயே எதிர்பார்க்கப் படுகிறது. கருத்து சொல்வதற்கு உரிமையை இழந்துநிற்கும் சிறுவன் குடும்பத்தைக் காக்கவேண்டிய உரிமையைப் பெற்றிருக்கின்றான். இது ஒரு பிழையான வழிநடத்தல் முறையாகும். எந்த ஒரு சிறுவரையும் அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக சிறுவயதில் வேலையில் ஈடுபடுத்துவதோ வேலையில் அமர்த்துவதோ பெற்றார்களாலேயே அப்பிள்ளைக்கு இளைக்கப்படுகின்ற ஒரு பெரும் துரோகமாகும். அதைவிடப் பெண்பிள்ளைகளெனின் ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பின்னர், அவர்களைக் கல்வியில் ஈடுபடுத்துவதைத் தடைசெய்கின்ற மனப்பாங்கு அனேக பெற்றார்களிடம் இருந்து வருகின்றது. ஆணுக்கு நிகர் பெண் என்று காட்டிவரும் இன்றைய சூழலிலும் இவ்வாறான தன்மை இருந்துதான் வருகின்றது. இவற்றைவிடத் திட்டமிடப்படாத குழந்தைப்பேற்று நடவடிக்கைகளும் பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றது. அதன் விளைவாகப் பிள்ளைகளின் போசாக்கு, சுகாதாரமும் என்பன சிறந்த முறையில் கவனிக்கப்படாததுடன் பிள்ளைகள்மேல் பொருளாதாரச் சுரண்டலும் நேரடியாகத் திணிக்கப்படுகின்றது. இதன் விளைவாக பிள்ளைகள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் பிச்சை எடுக்கும் நிலமைக்குக் கூடத்தள்ளப்படுகின்றார்கள். இவ்வாறான நிலமைகளுக்கு ஒன்றுமறியாத சிறுவர்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவது பெற்றோர்களாலேயே அச்சிறுவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாகும். இவற்றைவிட ஆயுதப் பிணக்குகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துவது, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற தன்மைகளாலும் சிறுவர்களின் முன்னேற்றம் பாதிக்கப்படுவதுடன் அவர்களுடைய பாதுகாப்பும் பறிக்கப் படுகின்றது. இவ்வாறான இன்னல் களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கக் வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும் சமுதாயத்திற்குமே இருக்கின்றது. இவற்றைப் பெற்றாரும் சமுதாயம் வழங்குகின்றபோது ஒரு சீரிய தலைமுறையை உருவாக்கலாம் என்பது மறுக்க முடியாதது. எனவே ஒவ்வொரு பெற்றாரும் சமுதாயமும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு ஜீவகாருண்யம் கொண்ட வலி வடக்குப் பிரதேசத்திலே அன்று தொடங்கிய சிறுவர் நலன்பேணும் நடவடிக்கைகள் எதிர்பாராத கால அனர்த்தங்களால் ஏற்பட்ட இடம்பெயர்வுகளையும் அனர்த்தங்களையும் தொடர்ந்து, மேலும் விரிவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது. அத்துடன் சிறுவர் நலன்பேணல் நடவடிக்கைகள் அன்றும் இன்றும் விளக்குவதோடு இக்கட்டுரை நின்றுவிடாது, அதனூடே சமுதாயத்திற்கும் இந்த நலன் பேணல் நடவடிக்கைகளுக்குரிய பொறுப்பு எந்தளவு தூரத்திற்கு இருக்கின்றது என்பதையும் இளையோட விட்டிருப்பது அனைவரின் சிந்தனைக்கும் ஒரு தூண்டுகோலாக இருக்கும் என்பது என்கருத்தாகும். இந்த வகையிலே வலி வடக்குப் பிரதேசத்திலே சிறுவர்கள் மதிக்கப்பட்டும், அவர்களுக்குரிய இடம் வழங்கப்பட்டும் பேணப்பட்டும் வருகின்றார்கள் என்பதை நடைமுறை வாழ்க்கையிலே காணக் கூடியதாகலிருப்பதில் இருந்து வலி வடக்கு மண்ணின் பெருமையை அறிந்து கொள்ளலாம் என்பது வெள்ளிடை மலை

# சமூக சேவை உதவிகளும் வலி வடக்கும்

**சு. வரதபாஸ்கரன்** B.Com (HONS)
சமூகசேவை அலுவலர்,
வலி வடக்கு
தெல்லிப்பழை

இலங்கையிற் சமூக சேவைகளை நிறுவுவதற்கென 1948ம் ஆண்டு "சமூக சேவைத் திணைக்களம்" உருவாக்கப்பட்டது. இச் சமூக சேவைகள் திணைக்களம். சமூக சேவை உதவிகள், என பின்வருவனவற்றை வழங்கு கின்றது.

I. பொதுசன மாதாந்தப் படிகள்
II. புற்று நோய் உதவிப் படிகள்
III. கயரோக உதவிப் படிகள்
IV. தொழுநோய் உதவிப் படிகள்
V. தலசீமியா நோய் உதவிப்படிகள்
VI. பொது சன உதவிபெறுவோருக்கான புனர்வாழ்வுப்படிகள்
VII. வலது குறைந்தோர் இல்லங்களில் பிள்ளைகளை அனுமதித்தல்
VIII, வலதுகுறைந்தோர் சேவைகளை அளிக்கும் இல்லங்களுக்கு உதவிகளை வழங்குதல்.
IX. வலது குறைந்தோருக்கு உபகரணங்களை வழங்குதல்
X. இயற்கை இடர்களில் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணமும் புனர்வாழ்வும்
XI முதியோர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல்
XII சுயதொழில் பாதுகாப்பு ஓய்வூதியம்

இவ்வுதவிகள் வலி வடக்கு மக்களுக்கு எவ்வகையிற் பயனளிக்கின்றது என நோக்கினால்,

வலி வடக்கில் (45) நாற்பத்தைந்து கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. இப்பிரில் 1990 ற்கு முன் 23,351 குடும்பங்கள் வசித்தனர். ஆனால் தற்பொழுது 17 கிராம அலுவலர் பிரிவுகளே இயங்குகின்றன. இதில் 4773 குடும்பங்களே வசிக்கின்றன. வலி வடக்கில் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கையில் 2000க்கு மேற்பட்ட குடும்பங்கள் பொதுசன மாதாந்த உதவிப் பணத்தைப் பெறுகின்றன. இதனைப் பெறுபவர்கள் பெரும் பாலும் விதவைகள், ஊனமுற்றோர்கள், நோயாளர்கள், பலவீனர்கள் எனும் பகுதியினர் அடங்குபவர்.

வலி வடக்குப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிபெறுவோர் அதிகமாக காணப்படுவதற்கு யுத்த இடப்பெயர்வே மிகப் பெரும் காரணமாகும். ஏனெனில் சுயமாகத் தொழில்செய்து வளமுடன் தலை நிமிர்ந்து வாழ்ந்த மக்கள் தொழில்களை இழந்து அகதிகளாக்கப்பட்டனர். இந்த யுத்த இடப் பெயர்வால் வலி வடக்கு மக்கள் பெருமளவு நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டனர். அண்மைக்கால கணக்கெடுப்பின்படி இயங்குகின்ற 17 கிராம அலுவலர் பிரிவுகளில் 605 விதவைகள் குடும்பங்கள் காணப்படுகின்றன. இதில் வன் செயலால் விதவைகளானோர் 55 விதவைகள் குடும்பம். விபத்தால் விதவைகளானோர் 54 குடும்பம், நோய், இயற்கை மரணம் 473 குடும்பம் காணாமல்போனோர் 09 குடும்பம், வேறு காரணங் களால் விதவைகளானோர், 14 குடும்பம் இதில் 40 வயதிற்குட்பட்டவிதவைகள் 56. 40 வயதிற்குமேற்பட்டோரும் 60 வயதிற்குட்பட்ட விதவைகள் 243 குடும்பங்கள், 60 வயதிற்கு மேற்பட்ட விதவைகள் குடும்பங்கள் 316 ஆகும். வலி வடக்கில்1999 காலப்பகுதி வரை இயங்குகின்ற 17 கிராம அலுவலர் பிரிவுகளில் 125 ஊனமுற்றோர் காணப்படுகின்றனர். ஊனமுற் றோரில் 28 பேர் 18 வயதிற்குட்பட்டவர்களாவர். வன்செயலால் அங்கவீனமானோர் 45 பேர் ஆகும். மேலும் யுத்தத்தால் பலர் நோயாளிகளாவும், பலவீனர்களாகியுமுள்ளனர். இவர்களுக்குச் சிறுபக்க பலமாக இருப்பது. சமூக சேவைத் திணைக்களமாகும். இவர்களுக்கு 100/= இருந்து 300/= வரையான பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

அடுத்து, நோய்களுக்கான கொடுப்பனவு என்னும் போது புற்றுநோய், சயரோகம், தொழுநோய், தலசீமியா இவற்றினார்களுக்கு பாதிக்கப் பட்டவருக்கு சமூகசேவைத் திணைக்களம் 250/= இருந்து 500/= யான கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது. தற்பொழுது புற்றுநோய்க்கான கொடுப் பனவை 35 பேரும், தொழுநோய்க்கான கொடுப்பனவை 05 பேரும், சயரோகக் கொடுப்பனவை 05 பேரும் பெறுகின்றனர்.

பொதுசன உதவி பெறுபவர்கள் அக் கொடுப்பனவிற்குப் பதிலாக சுயதொழில் மேற்கொண்டு தமது வருமானத்தைஅதிகரித்துக் கொள்வதற்காக திறமையுள்ளவர்களுக்கும் முயற்சியுடையவர்களுக்கும் சுயதொழிலை மேற்கொள்ள 10,000/= வை மீளப் பெறாத தொகையாக வழங்குகிறது. இவ்வாறு 10,000/= சுயதொழில் ஊக்குவிப்பு பணம் பெற்றவர்களின் எண்ணிக்கை 1997லிருந்து 2000ம் ஆண்டு பங்குனி வரை 19 பேர் ஆகும்.

வலி வடக்கில் ஊனமுற்றவர்களுக்கு அவர்கள் சமூகத்தில் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உபகரணங்களை வழங்கி வருகின்றது. இதில் விண்ணப்பித்த 08 பேருக்கு முச்சக்கர வண்டிகளையும், 14 பேருக்குமூக்குக் கண்ணாடிகளையும், 2 பேருக்கு காதுகேட்கும் கருவிகளையம் வழங்கியுள்ளது. இத்தரவும் 1997ம் ஆண்டிலிருந்து 2000 பங்குனி வரை உள்ள காலப்பகுதிகுரியது. அத்துடன் வலது குறைந்தோர் தனிமைப்படுத்தப்படாமலும் மனச்சோர்வடையாமல் இருப்பதற்குக் உற்சாகமுட்டும் வகையில் சமூகம் சேவைத் திணைக்களம் ஆண்டுதோறும் ஊனமுற்றோர் தின விழாவை நடாத்தி அவர்களுக்கு உற்சாகம் ஊட்டிவருகிறது.

வயோதிபர்கள் தனிமைப்படுத்தப்படாமல் இருப்பதற்காக அவர்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்கில் வருடா வருடம் முதியோர் தின விழா மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி

வருகின்றது அத்துடன் அவர்களின் நலனைப் பேணுவதற்காக முதியோர் அடையாள அட்டைகளை வழங்கி வருகின்றது. இம் முதியோர் அட்டையை பயன்படுத்தி முதியோர்கள் மருத்துவம் வங்கி, போக்குவரத்து, தபால் சேவைகளில் முன்னுரிமை பெற்றுக் கொள்ளலாம்.

சுயதொழில் செய்பவர்கள் தமது வயோதிப சேவையைத் திணைக்களத்தில் தமது நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்காக சமூக சேவைத் திணைக்களம் சுயதொழில் பாதுகாப்பு ஓய்வூதியத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
வலிவடக்கில் 25 பேர் சுயதொழில் பாதுகாப்பு ஓய்வூதியத்தில் இணைந்துள்ளனர், மேலும் பலர் இணைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து இயற்கை இடர்களால் பாதிக்கப்பட் டோருக்கு அதாவது மழை, புயலால் வீடு பயிர்கள் பாதிக்கப்பட்டோருக்கும் தீயினால் வீடு எரிந்து பாதிக்கப்பட்ட வறியவர்களுக்கும் இடர் நிவராணமும் வழங்கி வருகின்றது.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட பல்வேறு சேவைகளை "வலிவடக்கு சமூகசேவைப் பிரிவு" மேற்கொண்டு வருகின்றது. தொடர்ந்தும் ஊனமுற்று அகதிகளாக்கப்பட்டு, நொந்து போயுள்ள வலிவடக்கு மக்களுக்கு வலி வடக்கு சமூக சேவைப் பிரிவு உதவிகளை வழங்கும்

மக்கள் நலன் பேணலே சமூகசேவைப் பிரிவின் தலையாய கடமை

## வைராக்கியம்

1. கலங்காதே எந்தன் மனமே
கனகோடி துன்பம் வரினும்
கடல்போலச் சோதனைகள் - எரியும்
கனல்போல நெஞ்சிற் சுடினும்
(கலங்காதே)

2. கனவாகி வாழ்வு
கனியாது நெஞ்சில்
காட்டாறு போலக்
கனதோல்வி வரினும்
கனிவான அன்னை
கைவிட்ட போதும்
கணமேனும் சாந்தி
கிட்டாத போதும்
(கலங்காதே)

3. அலை மோதினாலும்
கடல்தானே தஞ்சம்
மலை மாறினாலும்
சிலைதானே மிஞ்சும்
நிலை மாறினாலும்
நிழல் தானே சொந்தம்
நிலையாத வாழ்வில்
நமக்கேனோ பந்தம்
(கலங்காதே)

*பத்தினியம்மா திலகநாயகம்*

# வலி வடக்கில் சித்த மருத்துவமும் அதன் பாரம்பரியமும்

***சித்த வைத்திய கலாநிதி கோ. சின்னத்தம்பி***
பதிவு எண் 2502
தெல்லிப்பளை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பர். மருதமும் நெய்தலும் மருவிய நிலப்பரப்பு வலி வடக்கு, ஆரோக்கியத்திற்குரிய பூமி. உழுதுண்டு வாழும் உத்தமர்கள் வாழ்விடம் அது பழுதிலா புராதான கோயில்களில் தந்தையும் தானயனும் வீற்றிருக்கும் மேன்மை பொருந்திய நிலம் நகுலேஸ்வரத்தில் ஆடற் திருமகனும், மாவையம்பதியில் வள்ளிமணாளனும் குடி கொண்டிருப்பது மக்கள் அறிந்ததே. மாருதப் புரவீகவல்லி தன் வினைப்பயனால் வந்த நோயை நீக்கிய மண் வலி வடக்கு. தீராத நோய்தீர்க்கும் புனித தீர்த்தம் நகுலேஸ்வரத்தில் உண்டு. இக்கங்கை பிறவிப் பிணிக்குப் பெருமருந்து.

மேலே கண்டவாறு புகழ்பூத்த மண்ணில் பாரம்பரியமாக வைத்தியத்தொழில் கண்ட வல்லாளர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். (வைத்தியனை) அகத்தியர் பண்டிதன் என்கிறார். புராதன ஏட்டுச் சுவடிகளில் தீராதநோய் தீர்க்கும் ஒளடதபாகங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இங்கு ஒரு உதாரணம் வைத்தியன் ஏன் பண்டிதன் எனப்பட்டான் என்பதற்குப் போதுமானதாக அமையுமென எண்ணுகின்றேன். நல்லெண்ணெய் என்று வாகடங்கள் கூறுவது வேப்பம் எண்ணெயே. வேப்பம் எண்ணெய் பச்சிளங் குழந்தைகளுக்கு சிறு துளி உட்கொள்ளக் கொடுப்பதும். பார்வைத்துலக்கத்திற்கு கண்ணில் விடுவதும், தொப்பூழ் ரணத்திற்கு போடுவதும் மரபு வழி உண்மை இந்தச்சங்கதிகள் வேலமரத்து எண்ணெய் நல்லெண்ணெய் அல்லாது தீயதா என்று வினா வெழுப்பலாமல்லவா?. ஆகவே தமிழும் தந்து - மருந்து வழி விருந்தும் செய்த அகத்தியன் கூற்று சாலப் பொருத்தமே.

வலிவடக்கிலே சித்த வைத்தியர்கள் பலர் பணியாற்றியிருக்கின்றனர். வைத்தியத் துறையில் சிறு பிள்ளை வைத்தியர் - மகப்பேற்று வைத்தியர், இரணவைத்தியர் எனப் பல்துறைவிற்பன்னர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அன்றியும் ரோகங்கள் ஒவ்வொன்றிலும் மேன்மை பொருந்தியவர்களும் இருந்திருக்கிறார்கள். வாதரோகம், பிள்ளைத்தாய் வைத்தியம், கட்டுவைத்தியம், விஷகடி வைத்தியம், செங்கமாரி வைத்தியம், எனப் பல்கி வளர்ந்தது எனது ஞாபகத்தில் பசுமையாகவிருக்கின்றது.

"பலாலி ஐயர்" என்பவர் வாத ரோகத்திற்கு பெயர் போனவர். இவர் ஒரு வீர சைவர், தருமசிந் தனையாளர் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் வந்தாலும் நோய் தீர்ப்பர். "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்ற அசையாத நம்பிக்கையுடையவர். ஆலயம் கட்டிப் பரிபாலித்தவர். ஆயிரம் பேரைக் கண்டவன் அரைப்பரியாரி" என்பது பழமொழி. இவரிடம் எண்ணெய் காய்ச்சுவதற்கென்றே ஒரு தொகைத் தொழிலாளர்கள் இருப்பர். மருந்துக் குளிசைகள், சூரணங்கள் தயாரிப்பது சுலபமான காரியமன்று. எண்ணெய் வடித்தெடுக்க நாட்கள் பல செல்லும். உரிய சாறுகள் அளவு குறையாது சேர்க்கப்படவேண்டும். பெரிய அண்டா போன்ற மட் பாத்திரத்தே அவைகாய்ச்சப்பட வேண்டும். பின்பு எண்ணெய் (நல்லெண்ணெய்) விட்டு காய்ச்சி பதத்திற்கு வடித்து எடுப்பர். இதமாகவும் பதமா கவும் எரித்து இறக்கவேண்டும். மனநோய் வந்தவர்க்கும் வாதரோகிகட்கும் எண்ணெய் வழங்குவதில் ஐயர் புகழ் வாய்ந்தவர். இவரது புங்கம் எண்ணெய் பிரபலமானது.

வீமன்காமம் சிறியவித்தை என்னுமிடத்தில் அருளப்பு என்னும் பரிகாரி இருந்தார். இவர் எனக்குப் போட்டியாக தொழில் புரிந்தவர். அந்த நாட்களில் மோட்டார் வண்டியில் பல்வேறு இடங்களுக்குச் சென்று தொழில்புரிந்தவர் "கெட்டிக்காரன்" என்று கூறினால் மிகையாகாது. அதேகால் பகுதியில் கருகம்பனை, கீரிமலை, இளவாலை,மாவைக்கலட்டி, மயிலிட்டி, போயிட்டி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை, தையிட்டி, மல்லாகம், சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், நவாலி, போன்ற இடங்களில் உள்ள நோயாளிகள் என்னிடம் வருவதுண்டு. நான் முன்னே கூறியதுபோல பரம்பரை பரம்பரையாகத் தொழில் கற்றுதொழில் புரிந்தவர்கள் தான் நிரம்ப இருந்தனர். எனினும் பரிகாரி தமிழ்ப்புலமை மிக்கவனாகவும் இருக்க வேண்டிய அவசியம் ஒன்று இருந்தது. அன்று அத்துடன் உடல், உள நோய்நீக்கும் தயவு பரிகாரிக்கு அமையவேண்டிய அவசியமும் இருந்தது. எனவே தான் பலாலி ஐயர் உள்ளிட்ட பலர் மாந்திரீகம் தெரிந்தவர்களாகவும், வேளை பிணி நூல் கட்டுபவர்களாகவும் இருந்திருக் கின்றார்கள். யானும் சிறுபிள்ளைகளுக்கான பிணிப்பார்வைக்கும், மாந்தப் பார்வைக்கும், அத்துடன் சோதிடம் பார்ப்பதற்கும்,

கற்றிருந்தேன். என்னிடம் அனேகமானவர்கள் வருவார்கள். அத்தோடு வைத்தியசாலையில் மாற்ற முடியாத பல விதமான நோயாளர்கள் என்னிடம் வருவார்கள். அவர்களுக்கு நாடிபார்த்து நோயறிந்து அதற்கான மருந்துகள் கொடுத்து, குணமடைந்து சென்றவர்கள் பலர் இருக்கிறார்கள்.

நவீன விஞ்ஞான வளர்ச்சி இல்லாத காலத்தில் குழந்தை பிறந்த நேரம் கணிக்க நிலவின் அடி அளந்தகாலம் அது. அந்த வேளையில் வைத்தியசாலைகளுக்கு வசதி படைத்தவர்கள் போக வாய்ப்பற்ற வறியவர்கள் சித்தவைத்தியர்களிடமே நாடி வருவர். சித்த வைத்தியர்கள் பரோபகாரியாக இருக்க வேண்டியகடப்பாடும் இருந்தது. வலிவடக்கில் இல்லாவிடினும் பரோபகாரத்திற்குப் பெயர் போன சுதுமலை அண்ணாமலைப் பரியாரியை மறக்கமுடியாது.

சித்தவைத்தியத்தின் உயிர் நாடி சாத்திரமே. இச்சாத்திரத்தில் மதிநுட்பமாக, துல்லியமாக உணரும் திறமை இருக்கவேண்டும். இந்த வேளையில் என்வைத்தியவாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்வினைக் குறிப்பிட்டாக வேண்டும். எனது வாடிக்கைக் கிராமங்களில் இருந்து ஒரு கர்ப்பிணித்தாய் இனுவில் வைத்தியசாலைக்கு மகப் பேற்றிற்கு சென்றிருந்த சம்பவம் அது. புகழ்வாய்ந்த இந்திய மகப்பேற்று மருத்துவர் கெங்கம்மா அங்கு பணியாற்றினார். குறைமாத பிரசவமாகையால் குழந்தை அழிந்த நிலையில் வைத்தியம் பார்த்து வீடுதிரும்பினர். தொடர்ந்தும் வயிற்றுவலி கண்டபோது என்னிடம் காண்பித்தனர். நாடிசாத்திரநுட்பத்தால் நஞ்சு கொடி இருப்பதாகக் கூறினேன். நஞ்சுகொடி எல்லாம் வைத்திய சாலையில் அகற்றிவிட்டார்கள் என என் கூற்றை நம்பமறுத்தனர். மீண்டும் இனுவில் ஆஸ்பத் திரிக்குச் சென்று சித்தவைத்தியராகிய எனது கூற்றை கெங்கம்மாவுக்கு கூறினர். அப்போது மீண்டும் பரிசோதனை செய்து நஞ்சுகொடி அகற்றப் பட்டது. குறைப்பிரசவமாதலால் குழந்தைகள் இருவர் என்பது புலனாகவில்லை. கெங்கம்மா அதிர்ந்தார் ஆச்சரியப்பட்டார். அரைநிர்வாணியாகிய என்னைப்பார்க்க ஆசைப்பட்டார். அழைத்துப் பாராட்டினார். நாடி சாத்திரத்தின் நுட்பை உணர்ந்து உவகை கொண்டார். இது எனது வைத்திய சேவையில் துளி சம்பவமே.

கண் வைத்தியம் மாவிட்டபுரத்தில் ஒரு பெண்ணாற் செய்யப்பட்டது. விஷகடிவைத்தியம் காங்கேசன்துறையில் வீசன் என்பவராலும், முறிவுதறிவு வைத்தியம் வயாவிளான் சமத்தர் செல்லத்துரை என்பவராலும், செங்கமாரிநோய்க்கு காங்கேசன்துறையைச் சேர்ந்த பெண் பொன்னான். என்பவராலும் திறம்படச் செய்யப்பட்டது. வேறு அரச பணிபுரிந்து கொண்டு நாகமுத்து என்பவர் காங்கேசன்துறையில் வைத்திய சேவை புரிந்துள்ளார். வலி வடக்கில் சர்வரோகங்களுக்கும் எண்பதுகளுக்கு முன் சித்தவைத்தியம் கொடிகட்டிப் பறந்ததெனலாம்

நாற்பதுகளில் எங்கள் வைத்தியப் பணி ஆரம்பித்த போது எனது மனைவியின் தந்தை வைத்தியர் கந்தர் எனது கிராமத்தில் வைத்தியப் பணிபுரிந்து வந்தார். அவரது மகன் தாமோதரம்பிள்ளை ஓர் அளவில் அப்பணியை மேற்கொண்டார்.

நான் முன்னே சொன்ன சித்தவைத்தியன், பண்டிதன் என அகத்தியன் கூற்றிற்கு முத்தாய்ப்பு வைப்பதாக முடிவுரையில் ஒரு கருத்தினைக் கூறி அமையலாமென எண்ணுகிறேன். "பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு," வாக்குண்டாம், நல்லமணம் உண்டாம்,
மாமலராள் நோக்குண்டாம், என்பது ஔவையின் வாக்குண்டாம் காப்புப் பாடல். பிரிந்தநிலையில் பொருள்விரிந்து நிற்க முனைகிறது. துப்பு - நெய் - திருமேனிகுப்பை மேனி தும்பி - துளசி, கையான் - கையாந்தகரை மேலே கூறிய செடிகளை பூவுடன் வேர்வரை புடம் செய்து நெய்யில் உண்பார்க்கு வாக்கு உண்டு, நல்ல மனம் சேரும் சரஸ்வதி கடாட்சம் பெருகும், அதாவது நல்ல உடலில் நல்ல உள்ளம் அமையும் தானே.

குப்பை மேனிச் செடியைத்வைத்து அழுக்கேறிய பணநோட்டைப் போட்டால் அழுக்ககற்றும் பான்மை வினோதமானது. இதனைப் பூனைக் கழற்சி என்றும் கூறுவர். பூனை புலவியின் பின் வேதனைபோக்கும் செடி.

வேரும் நாரும் இலையும், பூவும் சித்த வைத்திய முத்துக்கள். இறைவன் படைத்தவை அனைத்தும் பயனுள்ளவை. ஔவையும் ஒரு சித்த வைத்தியரே.

**மனச்சாட்சி**

ஒவ்வொருவருடைய மனச்சாட்சியுமே அவனுக்குச் சாட்சி. உங்களது சக்தியை எல்லாம் எதிர்மறையான விமரிசனங்களுக்குப் பலியாக்கி வீணாக்காதீர்கள்.

# வலிவடக்குப் பிரதேச சபையும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையும்

A. *சற்குணசரோஜினி அருமைநாயகம்* A.M.O

ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர் வலிவடக்கு பிரதேச சபை

காங்கேசன்துறை

வலி வடக்குப் பிரதேச சபை, காங்கேசன் துறைத் அலுவலகத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவருகின்றது. இதன் உப அலுவலகங் களாககாங்கேசன்துறை, மயிலிட்டி, தெல்லிப்பளை, மல்லாகம் ஆகியன அமைந்துள்ளன. இவ் உப அலுவலகங்களில் மயிலிட்டி உப அலுவலகத் தினால் மட்டும் ஓர் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டு, வயாவிளானில் பிரதம வைத்தியசாலையும், பலாலியில் கிளை வைத்தியசாலையும் வைத்து இயங்கி வந்தது. நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக இவ்வைத்தியசாலை 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்து தெல்லிப்பளையில் சிறிது காலம் இயங்கிய பின் மல்லாகத்தில் இயங்கி வருகின்றது. இவ் வைத்திய சாலை தொடங்கிய காலத்திலிருந்து பல வைத்திய அதிகாரிகள் கடமையாற்றியுள்ளார்கள் 1990ம் ஆண்டு தொடக்கம் 2000 ஆண்டு மாசிமாதம் வரையும் வைத்திய அதிகாரியாக திருமதி நாகேஸ்வரி புருஷோத்தமன் அவர்கள் கடமையாற்றினார்கள். தற்பொழுது இவ் வைத்தியசாலையின் பிரதம வைத்தியராக வைத்திய கலாநிதி திருமதி அருமைநாயகம் சற்குணசரோஜினி அவர்கள் கடமையாற்றுகின்றார் இவ் வைத்தியசாலையில் நாளொன்றிற்கு எழுபத்திதைந்திற்கு மேற்பட்ட நோயாளர்கள் வந்து வாதம், முட்டு, சரும வியாதி வயிற்றுப்புண், கிரந்தி, சுரம், மூலம், உடற்சூடு முதலிய ரோகங்களுக்கு சிகிச்சை பெற்றுச் செல்லுகின்றார்கள். இவ்வைத்தியசாலையின் கிளை வைத்திய சாலையாக அளவெட்டியில் ஓர் வைத்தியசாலை 1995ம் ஆண்டு திறக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட யுத்தநிலை காரணமாக இவ் வைத்தியசாலை செயலிழந்தது. வலிவடக்கு பிரதேசசபைத்தலைவர் அமரர். R. P பாஸ்கரன் அவர்களின் முயற்சியினால் 1998ம் ஆண்டு ஆவணி மாதம் முதல் மீண்டும் அளவெட்டியில் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இங்கும் நாளொன்றிற்கு அறுபதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் மேற்குறிப்பிட்ட நோய்களுக்கு வந்து சிகிச்சைபெற்று செல்லுகின்றார்கள். வலிவடக்கு பிரதேசசபைத் தலைவரின் முயற்சியினால் மீண்டும் இளவாலையில் ஒரு கிளை வைத்தியசாலை 1999ம் ஆண்டு புரட்டாதி மாதம் திறக்கப்பட்டு இயங்குகின்றது. இவ்விரு கிளை வைத்திய சாலையிலும் வைத்தியராக வைத்திய கலாநிதி கந்தையா உருத்திரசேனன் கடமையாற்றுகின்றார். இங்கும் நாளொன்றிற்கு ஐம்பதிற்கும் மேற்பட்டநோயாளர்கள் வந்து தமது நோய்களுக்குச் சிகிச்சை பெற்றுச் செல்கின்றார்கள். மேலைத்தேய வைத்தியர்களால் மாற்றமுடியாத ரோகங்களுக்கும், நோயாளர்கள் இங்கு வந்து சிகிச்சை பெற்று நிவாரணம் பெறுவதால், நோயாளர்களின் தொகை அதிகரிப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

## பெண்

பெண்ணாகப் பிறந்தவரைக்
கண்ணாகக் கவிபுனைந்தார்
பண்பான புலவரன்றோ - அது
பாவலர் பாடலன்றோ

புண்ணாகி அவள்நெஞ்சம்
கண்ணீரிற் கரைவதுதான்
ஞாலத்தின் நிலைமையன்றோ - சமு
தாயத்தின் கொடுமையன்றோ

மின்னோடு மலரனையாள்
தன்னோடு வாடிநிதம்
தனிமையிற் துடித்தல்நன்றோ - இது
தாய்மையின் தனிமையன்றோ

பெண்ணோடு மண்ணாகும்
பொன்னான கற்பனைகள்
எழுதாத காவியமன்றோ - இது
அழுதாலும் மாறுவதொன்றோ

*சித்தி*

# வலி வடக்கு பிரதேச சித்த வைத்தியர்கள்

அ. சற்குணசரோஜினி (A.M.O)

வலிவடக்குப் பிரதேசம் பல பிரபலமான பாரம்பரிய சுதேச வைத்தியர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் வாழ்ந்த வைத்தியர்கள் தங்கள் வைத்தியத் திறமையினால் யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலும் தங்கள் பெயரையும், புகழையும் பரப்பியிருந்தார்கள். நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்த இப்பிரதேச வைத்தியர்கள் முன்பு தங்கள் சொந்த இடங்களில் ஆற்றிய சேவையைப்போல் செய்ய முடியாவிட்டாலும், தாம் தற்பொழுது வாழும் பிரதேசங்களில் ஓரளவு தங்கள் வைத்திய சேவையைச் செய்த வண்ணம் இருக்கின்றார்கள். இவ் வைத்தியர்களில் ஒரு சிலர் வெளிநாட்டிற்கும், வெளிமாவட்டத்திற்கும் சென்றும், பலர் இறந்தும் இருக்கின்றார்கள்.

செங்கண்மாரி, மஞ்சட்காமாலை நோய் என்றதும் யாவரும் அறிவது தெல்லிப்பளை என்ற கிராமத்தையே. அந்த அளவுக்கு வடமாகாணத்தில் செங்கண்மாரி நோயைக் குணப்படுத்துவதில் பெயர் போன பரம்பரை வைத்தியராக விளங்குபவர் திருமதி தங்கமுத்தம்மா நாகலிங்கம் ஆவார். இவர் வைத்திய பரம்பரையில் எட்டாவது தலைமுறை யைச் சேர்ந்தவர். இவர் தற்பொழுது உடுவில் பிரதேசத்தில் தனது வைத்திய சேவையைச் செய்கின்றார்.

இவரின் மகன் நாகலிங்கம் சத்திவேல் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரியில் கல்வி கற்று D.A.M பட்டம் பெற்றுப் பொது வைத்தியராகப் பதிவு செய்யப்பட்டிருந்தும், விஷேட வைத்தியமாக செங்கண்மாரி நோய்க்கு சிகிச்சை அளித்து வருகின்றார். இவர் வைத்தியத் துறையில் ஒன்பதாவது தலைமுறையாகும்.

இவரின் மனைவி திருமதி சரஸ்வதி சக்திவேல் பதிவு பெற்ற வைத்தியராகச் சர்மரோகத்தில் விஷேட சிகிச்சை செய்து பல நோயாளிகளைக் குணமடைய செய்திருக்கின்றார். இவர்கள் தங்கள் வைத்திய சேவையைக் கோண்டாவிலிலும், உடுவில் பிரதேசத்திலும் செய்து வருகின்றார்கள்.

திருமதி சம்பூரணராணி கிருஷ்ணராசா மாவிலங்கை அளவெட்டியை நிரந்தரமான வதிவிடத்தைக் கொண்டவர். யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியில் கல்வி கற்று D.A. M பட்டம் பெற்றவர். இவர் பொது வைத்தியராகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றார். இவர் பாலர் ரோகம் பெண் நோயியல், முட்டு ஆகிய துறைகளில் சிகிச்சையளிப்பதிற் சிறந்து விளங்குகின்றார்.

வைத்திய கலாநிதி இராமலிங்கம் கனகலிங்கம் வயாவிளானை வதிவிடமாகக் கொண்டவர். இவர் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரியில் கல்வி கற்று D.A.M பட்டம் பெற்றுப் பொது வைத்தியராகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றார். இவர் வாதம், சர்மரோகம், முட்டு, பாலர்ரோகம் ஆகிய நோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் சிறந்து விளங்குகின்றார். இவர் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் பிரதம வைத்தியராகச் சேவையாற்றுகின்றார்.

இவரின் மனைவி வேதசிரோன்மணி கனகலிங்கம் பதிவு பெற்ற விஷ வைத்தியர். இவர் விஷ வைத்தியத்தில் புகழ்பெற்று இப்பிரதேச மக்களின் விஷ சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துகின்றார்.

சின்னையா சுந்தரலிங்கம் காங்கேசன்துறை தையிட்டியை வதிவிடமாகக் கொண்டவர். இவர் யாழ்ப்பாணம் லங்கா ஆயுள் வேத வைத்தியக் கல்லூரியில் கல்விகற்று D.A.M பட்டம் பெற்று பொது வைத்தியராகப் பதிவு செய்யப்பட்டவர். இவர் முட்டு, வாதம், மூலம் ஆகிய நோய்களுக்குச் சிகிச்சையளித்து இப்பிரதேச மக்களின் நோய்களைக் குணப்படுத்துகின்றார். இவர் சண்டிலிப்பாயிற் தனது வைத்தியத் தொழிலைச் செய்கின்றார்.

ஈ. சுந்தரேஸ்வரன் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியில் வைத்தியக் கல்வியைக் கற்று D.A.M பட்டம் பெற்றவர். இவர் பொது வைத்தியராகப் பதிவு செய்யப்பட்டவர். இவர் சகல ரோகங்களுக்கும் சிகிச்சையளித்தாலும் முக்கிய மாக வாதம், முட்டு, பாலர்ரோகம் முதலிய நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் சிறந்து விளங்குகின்றார். இவர் தனது வைத்திய சேவையை நீதிமன்ற வீதி, மல்லாகத்தில் நடத்துகின்றார்.

நா. மகேஸ்வரன் லங்கா ஆயுர்வேத வைத்தியக்கல்லூரியில் கல்வி கற்று D.A.M பட்டம் பெற்று பொது வைத்தியராகப் பதிவு செய்யப்பட்டவர். இவர் பீனிசம், மூலம், முட்டு, வாதம் ஆகிய நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் சிறந்து விளங்குகின்றார். இவர் தனது வைத்திய சேவையை அளவெட்டியில் செய்துவருகின்றார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த நீலதயாட்சி ஒரு பரம்பரை வைத்தியராவார். இவர் குழந்தை ரோகங்கள், கண்ரோகம், முதலியவற்றிற்குச் சிகிச்சையளிப்பதில் திறமை பெற்று விளங்கினார் இவர் அமரத்துவம் அடைந்து விட்டார். இவரின் மகள் ந.இராசேஸ்வரி தனதுபரம்பரை வைத்திய மான கண்ரோகம், பாலரோகம், முதலிய நோய்களுக்குச்

சிறந்த முறையில்சிகிச்சையளித்து வருகின்றார், இவர் ஓர் பரம்பரை வைத்தியராவர். காங்கேசன்துறையில் "காந்தன் வைத்திய சாலை" என்றால் அறியாதவர்கள் ஒருவரும் இல்லை. இவர்கள் ஓர் பரம்பரை வைத்தியர்களாவர் .சீனிவாசகம், சீனிவாசகம் ஸ்ரீகாந்தன் இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் லங்கா ஆயுள்வேதக் கல்லூரியில் கல்விகற்று D.A.M பட்டம் பெற்றவர்கள். இவர்கள்வாதரோகம், கிரந்தி, முட்டு, வயிற்றுப் புண் ஆகிய நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் இருவரும் அமரத்துவம் அடைந்து விட்டார்கள்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பலாலி என்றதும் யாரும் கூறுவது பஞ்சாட்சரம் ஐயர் அவர்களையே. அந்த அளவுக்கு வைத்தியம் செய்வதில் பெயர் பெற்ற வைத்தியராக விளங்கியவர் இவர். இவர்நாடி பிடித்துப்பார்த்து நோய்களின் குணம், குறிகள் கூறுவதில் வல்லவர். இவர் ஓர் பரம்பரை வைத்தியராவர். இவர் குழந்தை ரோகம், வாதம், முட்டு, பீநிச ரோகம், விரணம் ஆகிய நோய்களுக்குச் சிகிச்சையளிப் 'பதில் புகழ் பெற்று விளங்கினார். இவர் அமரத்துவம் அடைந்துவிட்டார். இவரின் பேரன் பாலகுமார் தமது பரம்பரை வைத்தியத்தைச் செய்து வந்தார். இவர் தற்பொழுது வெளிநாடு சென்றுவிட்டார்.

காங்கேசன்துறையில் பிள்ளையார் வளவைச் சேர்ந்த ஏரம்பமூர்த்தி முன்னைநாத வரப்பிரசாதம் இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் கல்விகற்று D.A.M பட்டம் பெற்ற ஒரு பதிவு செய்யப்பட்ட பொது வைத்தியராவர், இவர் வாத ரோகம், முட்டு, உடற்சூடு, மூலம், பீநிசம் ஆகிய நோய்களுக்குச் சிகிச்சையளிப் 'பதில் சிறந்து விளங்குகின்றர்ர்.. இவர் தற்பொழுது கனடா நாட்டில் வசிக்கின்றார்.

பாரியாரியார் நாகமுத்து என்றால் வலிவடக்குப் பிரதேசத்தில் அறியாதவர் ஒருவரும் இருக்க முடியாது. இவர்காங்கேசன்துறை பிரதான வீதியில் வசித்துவந்தார். இவர் ஓர் பரம்பரை வைத்தியர். இவர் வாதரோகத்திற்கு சிகிச்சையளிப்பதில் சிறந்து விளங்கினார். இவரிடம் பலர் வாதரோகத்திற்கு சிகிச்சை பெற்று சுகமடைந் துள்ளனர். இவரும் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

திருமதி சந்திராவதி முன்னைநாத கணேசவரப்பிரசாதம் இவர் இலங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் கல்விகற்று D.A.M பட்டம் பெற்று பொது வைத்தியராகப் பதிவுசெய்து பலாலியில் வைத்திய சேவை செய்து வந்தார். இவர் குழந்தை வைத்தியம், சருமரோகம், தனது மக்களுக்கு பல காலம் சேவையாற்ற முடியாத போதிலும், தற்பொழுது வசிக்கும் கோண்டாவிலில் அங்குள்ள மக்களுக்கும், வலிவடக்குப் பிரதேச சபையின் கிளை இலவச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் மக்களுக்கும் தனது சேவையைப் பூரணமாக ஆற்றுகிறார். ஆங்கில வைத்தியசாலைகளில் குணமாக்க முடியாத பல நோய்களைத் தனது திறமையினால் குணமடையச் செய்துள்ளார். சர்ம ரோகம், வாதம், சளி, கிரந்தி, உஷ்ண சம்பந்தமான ரோகங்களில் சிறப்பாகவும், நுணுக்கமாகவும் சேவையாற்றுகின்றார்.

தெல்லிப்பழையில் செல்லத்துரை வைத்தியரையும், அவர் மகன் ஞானகணேசன் என்பவரையும், தெல்லிப்பளையில் வசித்தவர்கள் நன்கு அறிவார்கள், மாறாதபல நோய்களைத் தங்கள் வைத்தியத்தினால் மாற்றி தன்மக்களுக்கு சேவை புரிந்ததுமட்டுமன்றி ஞானகணேசன் அரச சேவையில் ஏழாலையில் கடமைபுரிந்த காலங்களில் அங்குள்ள மக்களுக்கும் தனது கடமையை ஒழுங்காகச் செய்து தற்பொழுது ஓய்வூதியம் பெற்று வெளிமாவட்டத்தில் இருக்கின்றார்.

மல்லாகம் வல்லிபுரம் பேரின்பம் தெல்லிப்பளை உமாபதி ஸ்ரீசங்கர் கட்டுவன் சிவநாதப்பிள்ளை பிரேமவதா ஆகியவர்கள் வைத்தியப் பட்டம் பெற்று தங்கள் இடங்களில் சில காலம் சேவையாற்றி, அவ்விடங்களில் வசிக்க முடியாத காரணங்களால் வெளிநாடு சென்று விட்டார்கள்.

இவர்களில் உமாபதி ஸ்ரீ சங்கர், சிவநாதபிள்ளை பிரேமலதா ஆகியோர் வலிதென் மேற்கு பிரதேச இலவச சித்தவைத்திய சாலையில் பதில் கடமை உத்தியோகத்தர்களாக கடமை யாற்றியது குறிப்பிடக்கூடியதாக இருக்கின்றது.

அளவெட்டியைச் சேர்ந்த இரத்தின சபாபதி வைத்தியரை அளவெட்டி மக்களால் மறக்க முடியாது. செந்தூரவகை, பஸ்பங்கள் நீற்றுவதிலும், தர்சனம், ஸ்பரிசனம், பிரச்சனம் என்னும் வைத்திய பரீட்சைகளிலும், நாடிபார்த்து நோய் நிதானித்தனாலும் நோயைக் கண்டுபிடிப் பதில் சிறந்த ஆசானாகத் திகழ்ந்து தனது மக்களுக்கு பல அரிய சேவைகள் ஆற்றியவர். 1960,61ம் ஆண்டுகளில் இலங்கா ஆயுர்வேதக் கல்லூரியில்போதனாசிரியராக சேவையாற்றி பல வைத்தியர்களை உருவாக்கியவர். தற்பொழுது அமரத்துவம் அடைந்துவிட்டார். இன்னும் வலி வடக்கில் பல வைத்தியர்கள் இருந்தார்கள் இடம்பெயர்வினால் அவர்களின் விபரங்களைச் சேகரிக்க முடியாத நிலையாக இருக்கின்றது.

## வலி வடக்குப் பிரதேசத்திலுள்ள சித்த ஆயுர்வேத வைத்தியர்களின் விபரங்கள்

| பெயர் | விலாசம் | வைத்தியம் | பதிவு.இல | பதிவுசெய்த ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. திரு நாகலிங்கம் சக்திவேல் | தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை | செங்கண்மாரி (பரம்பரை 9வது) | 5973 (D.A.M) | |
| 2. திருமதி சரஸ்வதி சக்திவேல் | தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை | சர்மரோகம் | 4657 (D.A.M) | |
| 3. திருமதி தங்கமுத்தம்மா நாகலிங்கம் | தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை | செங்கண்மாரி (பரம்பரை8வது தலைமுறை) | பரம்பரை | |
| 4. இராமலிங்கம் கனகலிங்கம் | "முருகன்வாசா" வயாவிளான் | பொது வைத்தியம் (அரசசேவை உத்தியோகத்தர் | 4732 (D.A..M) | |
| 5. திருமதி கனகலிங்கம் வேதசிரோன்மணி | "முருகன்வாசா" வயாவிளான் | விஷவைத்தியம் | 4084 | |
| 6. திருE. சுந்தரரேஸ்வரன் | நீதிமன்றவீதி மல்லாகம் | பொது வைத்தியம் | 10266 (D.A.M) | |
| 7. திருமதி சம்பூர்வராணி கிருஷ்ணராஜா | மாவிலங்கை அளவெட்டி வடக்கு அளவெட்டி | பொது வைத்தியம் | 6713 (D.A.M) | |
| 8. திரு. மகேஸ்வரன் | அளவெட்டி | பொது வைத்தியம் | (D.A.M) | |
| 9. திரு கந்தையா உருத்திரசேனன் | சந்தைவீதி காங்கேசன்துறை | பொதுவைத்தியம் (வலி வட.பிர.சபை) பதில் வைத்தியர் | 7713 (D.A.M) | 31- 03 -1983 |
| 10 திரு. சி. சுந்தரலிங்கம் | பருத்தித்துறை வீதி, மயிலிட்டி | பொதுவைத்தியம் | 7183 (D.A.M) | |

## தற்போது வெளிமாவட்டங்களில் உள்ள வைத்தியர்களின் விபரம்

| பெயர் | விலாசம் | வைத்தியம் | பதிவு இல | பதிவுசெய்த ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. திரு உமாபதி | பன்னாலை தெல்லிப்பளை | பொதுவைத்தியம் | D.A.M | |
| 2. திருS. ஞானகணேசன் | தெல்லிப்பளை | பொதுவைத்தியம் | D.A.M | |
| 3. திருமதி.இராஸ்ஜேஸ்வரி | காங்கேசன்துறை | கண்வைத்தியம் | D.A.M | |
| 4. திருமதி சந்திரகாந்தி | காங்கேசன்துறை | பொதுவைத்தியம் | D.A.M | |
| **வெளிநாடு சென்றோர் விபரம்** | | | | |
| 1. திரு. வல்லிபுரம் பேரின்பம் | மல்லாகம் | பொதுவைத்தியம் | D.A.M | |
| 2. திருமதி பிரேமலதா | கட்டுவன் | பொதுவைத்தியம் | D.A.M | |
| **இறந்தவர்கள் விபரம்** | | | | |
| 1. சீனிவாசம் V | காங்கேசன்துறை | பொதுவைத்தியம் | D.A.M | |
| 2. S. ஸ்ரீகாந்தன் | காங்கேசன்துறை | பொதுவைத்தியம் | D.A.M | |
| 3. செல்லத்துரை | தெல்லிப்பளை | பொதுவைத்தியம் | D.A.M | |
| 4. இரத்தினசபாபதி | மாரிசன்கூடல் அளவெட்டி | பொதுவைத்தியம் | D.A.M | |

## மேலும் சில ஆயுள் வேத வைத்தியர்களின் விபரம்

1. காங்கேசன் துறை
   (1) க. நாகமுத்து - ஆயுள்வேதம்
   (2) சீனிவாசகம் சின்னத்தம்பி - வாதவைத்தியம்
   (3) கந்தையா - உருத்திர சேனன் - ஆயுள்வேதம்

2. மல்லாகம்
   (1) திரு. ஆ. சிவபாதம் - ஆயுள்வேதம்
   (2) திரு. சுந்தரவேல்

3. அளவெட்டி
   (1) நாகமுத்து சிவலிங்கம் - ஆயுள்வேதம்
   (2) பொ. அம்பலவாணர் - ஆயுள்வேதம்
   (3) க. வைத்திலிங்கம் - ஆயுள்வேதம் (இறந்துவிட்டார்)
   (4) க. கந்தையா - ஆயுள்வேதம்
   (5) நல்லதம்பி செல்வவிநாயகமூர்த்தி கண்வைத்தியம் (இறந்துவிட்டார்)
   (6) நாகலிங்கம் மகேஸ்வரன் (ஆயுள்வேத) (குழந்தைப்பிள்ளை)
   (7) விநாயகமூர்த்தி தனக்குமார் ஆயுள்வேதம்

4. இளவாலை வடக்கு
   (1) உலுக்கேசு அந்தோனிப்பிள்ளை - ஆயுள்வேதம் - (இறந்துவிட்டார்)
   (2) அந்தோனிப்பிள்ளை ஜோசெப் செல்வராசா - ஆயுள்வேதம் (மகன்)
   (3) சாணக்குட்டி ஆறுமுகம் - ஆயுள்வேதம் (இறந்துவிட்டார்)

5. பலாலி
   (1) பஞ்சாட்சரஐயர் - வாதவைத்தியம் ஆயுள்வேதம் (இறந்துவிட்டார்)

6. கொல்லன்கலட்டி
   (1) நாகலிங்கம் சக்திவேல் ஆயுள்வேதம்
   (2) தங்கமுத்தம்மா நாகலிங்கம் - செங்கண்மாரி வைத்தியம் (தாய்)

7. மாவீட்டபுரம்
   (1) தம்பையாசோமசுந்தரம் ஆயுள்வேதம்
   (2) சின்னப்பு கதிரிப்பிள்ளை ஆயுள்வேதம்

8. கீரிமலை
   (1) வைரவப்பிள்ளை திருநாவுக்கரசு ஆயுள்வேதம்
   (2) கந்தையா அருளம்பலம்

9. வசாவிளான்
   (1) ஒட்டகப்புலம் சமத்தர் செல்லத்துரை ஒட்டகப்புலம் முறிவுதெறிவு நோவு வைத்தியம் (இறந்துவிட்டார்)

10. வீமிசிட்டி
   (1) மயிலுசெல்லத்துரை - ஆயுள்வேதம் (இறந்துவிட்டார்)

11. பன்னாலை
   (1) விஸ்வநாதர் இலங்கநாயகம் - ஆயுள்வேதம் (இறந்துவிட்டார்)

J/213 மல்லாகம் மத்தி
(1) முத்துக்குமாரு கந்தையா : 'கந்தவில்லா' காங்கேசன்துறைவீதி மல்லாகம்.
இவர் பரம்பரை ஆயுள்வேத வைத்தியர் ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்துவந்தவர் 1882 பிறந்து 1962ல் இறந்தார் . இறக்கும்வரை வைத்தியம் செய்துவந்தார்
(2) இளையவி கதிரமலை நாதன் : தொந்தனை, மல்லாகம்.
இவர் ஆயுள்வேதக்கல்லூரியில் படித்து 25/01/1976 தொடக்கம் 02/11/1987ம் ஆண்டு இறக்கும் வரை வைத்தியசேவை செய்து வந்தார். பிறந்தது 02/07/1942

J/ 229 துர்க்காபுரம்

(1) ஆறுமுகம் குஞ்சிதபாதம் : கேணியடி, துர்க்காபுரம். சித்தமருத்துவம் (சகலவைத்தியம்)

(2) K. சின்னத்துரை : காளிகோவிலடி, துர்க்காபுரம். குழந்தைவைத்தியம் மற்றும் சகல வைத்தியம்

(3) பௌராணிகர் ல.குகசர்மா :கேணியடி துர்க்காபுரம் குழந்தைவைத்தியம்

மேற்குறிப்பிட்ட பெயர்கள் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள்.

J/212 மல்லாகம்

(1) தம்பாப்பிள்ளை ஆறுமுகம் (இறந்துவிட்டார்)

(2) ஆறுமுகம் சிவபாதம் சித்தவைத்தியம்

J/216 அளவெட்டி மத்தி

(1) செல்வவிநாயகமூர்த்தி - கண்பரியாரியார்- இறந்துவிட்டார்

(2) செல்வவிநாயகமூர்த்தி - தேவநாதன் - கண்பரியாரியா.

(3) விநாயகமூர்த்தி - தனக்குமார் - பொது

J/ 218

(1) கதிரித்தம்பி - கந்தையா - சிறுபிள்ளை வைத்தியம்

(2) தில்லையம்பலம் - வைத்திலிங்கம் - சிறுபிள்ளை வைத்தியம்

J/219 அளவெட்டி தெற்கு

(1) நாகலிங்கம் மகேஸ்வரன் : ஈஸ்வரன்கிளினிக் பிரதான வீதி, அளவெட்டி தெற்கு அளவெட்டி

J/222 இளவாலை வடமேற்கு

(1) உலுக்கேஸ் அந்தோணிப்பிள்ளை : மாரிசன்கூடல் இளவாலைஆயுள்வேததமிழ் வைத்தியம்

(2) வயிரவப்பிள்ளை திருநாவுக்கரசு : கருகம்பானை காங்கேசன்துறை ஆயுள்வேததமிழ் “”

(3) கந்தையா அருளம்பலம் : சேந்தாங்குளம், இளவாலை. ஆயுள்வேத தமிழ் வைத்தியம்

(4) கந்தையா வயிரவப்பிள்ளை: கருகம்பனை, காங்கேசன்துறை. ஆயுள்வேத தமிழ் வைத்தியம்

J/223 வித்தகபுரம்

(1) மயில்வாகனம் செல்லத்துரை : விழிசிட்டி, வித்தகபுரம் சகலவிதமான நோய்களுக்கும் வைத்தியம் செய்தார். இறந்துவிட்டார்.

J/230 தந்தைசெல்வாபுரம்

(1) திருமதி நாகலிங்கம் முத்தம்மா, வீராங்கொடை, தந்தை செல்வாபுரம்,

(2) திரு கந்தையா தவராசா, பிரதான வீதி, தந்தை செல்வாபுரம்.

(3) திரு திருச்சிற்றம்பலம் சுப்பிரமணியம், குருநாதசுவாமி, கோவிலடி தந்தை செல்வாபுரம்.

J/244

(1) திரு. ம. சந்தியாப்பிள்ளை சமுத்தார் செல்லத்துரை முறிவுநோவு வைத்தியர்

J/ 252 பலாலி

(1) சமத்தர் - செல்லத்துரை (முறிவு, நோவு, வைத்தியர்)

(2) இராமலிங்கம் - கனகலிங்கம் (சகலநோய்களுக்கான ஆயுள்வேத வைத்தியம்)

J/221 இளவாலை வடக்கு

(1) சாணைக்குட்டி ஆறுமுகம், மயிலங்கூடல், இளவாலை. தமிழ்வைத்தியம் (நோவு)

(2) வ. திருச்செல்வராசா, மயிலங்கூடல், இளவாலை. தமிழ்வைத்தியம் (நோவு)

(3) தி. இம்மனுவேல், தம்பிஜயா, மயிலங்கூடல், இளவாலை. தமிழ்வைத்தியம் (நோவு)

(4) நா. முத்துக்குமாரசாமி பத்தாவத்தை, இளவாலை. தமிழ்வைத்தியம் (நோவு)

(5) மு. கனகநாயகம், பத்தாவத்தை, இளவாலை. தமிழ் வைத்தியம் (நோவு)

(6) க. சின்னப்பு மயிலங்கூடல், இளவாலை. கால்நடை வைத்தியம்

(7) அந்தோனிப்பிள்ளை யோசப்பு செல்வராசா, நிரந்தரமுகவரி: மாரீசங்கூடல், இளவாலை. தற்காலிக முகவரி: பத்தாவத்தை, இளவாலை. ஆயுள்வேத வைத்தியம்

# மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை

**வைத்திய கலாநிதி எஸ். சிவராணி**
பதில்மாவட்ட வைத்திய அதிகாரி

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து 500மீற்றர் கிழக்கு நோக்கி கட்டுவனுக்கு செல்லும் பெருந் தெருவில் இவ் வைத்தியசாலை அமைந்துயுள்ளது. வலி வடக்கு செயலர் பிரிவில் இவ் வைத்தியசாலையே பிரதம வைத்தியசாலையாக விளங்குகின்றது. வலிவடக்கில் அமைந்துள்ள அளவெட்டி மத்திய மருந்தகம், மகப்பேற்று மனை, ஏழாலை மத்திய மருந்தகம், இளவாலை மத்திய மருந்தகம் என்பன நோயாளரை மேலதிக சிகிச்சைக்கு அனுப்பும் வைத்தியசாலைகளாவும் விளங்குகின்றது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்ட சிவில் வைத்தியசாலை, சீமெந்துத் தொழிற்சாலை ஏற்படுத்திய சுற்றுப்புறச்சூழல் பாதிப்புக்காரணமாக தெல்லிப்பழையில் இவ்வைத்தியசாலை "மாவட்ட வைத்தியசாலை" என்ற பெயருடன் 1971 செப்ரம்பர் மாதத்திலிருந்து இயங்க ஆரம்பித்தது. பிரசவ விடுதி ஆண், பெண் இருபாலாருக்குமான சத்திர சிகிச்சை விடுதி, மருத்துவவிடுதி, குழந்தைகள் விடுதி, மனநோயாளர் விடுதிஆகிய விடுதிகளில் 340 படுக்கை வசதிகளுடன், சகல வசதிகளுடனான சத்திர சிகிச்சைக் கூடம், பற்சிகிச்சை நிலையம் எக்ஸ்கதிர் பரிசோதனை ஆகிய மருத்துவ வசதிகளுடன் ஒரு ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகளைக் கொண்டதாக இவ் வைத்தியசாலை இயங்கி வந்தது. யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து விசேட வைத்திய நிபுணர்கள் இங்கு வருகைதந்து சிகிச்சை நிலையங்களை நடாத்தி வந்தனர். இவ்வைத்திய சாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜி.ஜி.பொன்னம்பலம் ஞாபகார்த்த புற்று நோய் சிகிச்சை மண்டபம் யாழ் குடாநாட்டு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. எனினும் துரதிஷ்டவசமாக போதிய மருத்துவ ஆளணிஇல்லாத காரணத்தால் இச்சிகிச்சை நிலையம் பூரணமாகச் செயற்படவில்லை.

1990 ஒக்டோபர் 18ம் திகதிவரை இவ் வைத்தியசாலை அதன் சொந்த பிரதேசத்தில் இயங்கி வந்தது. அன்றையதினம் வலி வடக்கில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இவ் வைத்தியசாலை இடம் பெயரநேரிட்டது. எனினும் வைத்தியசாலை, வைத்தியசேவையைத் தொடரும் நோக்கில் 1990 நவம்பரிலிருந்து 1998 ஜனவரி வரை மானிப்பாய் கிறீன் மெமோரியல் வைத்தியசாலையில் மனநோயளர் விடுதி, குழந்தைகள் விடுதி வெளிநோயாளர் பிரிவு என்பவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்ட வைத்திய சேவையை அளித்துவந்தது.

வலி வடக்கில் மீளக்குடியமர்தலைத் தொடர்ந்து அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் துாதரகத்தால் புனரமைப்புச்செய்யப்பட்ட தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டிடங்களில் 1998 பெப்ரவரி முதல் இயங்கி வருகின்றது. இங்கு தற்போது 102 படுக்கை வசதிகளுடனான பிரசவ விடுதி குழந்தைகள் விடுதி, ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, மனநோயாளர் பகுதியில் மருத்துவ தொடர் சிகிச்சை நிலையம், பற்சிகிச்சை நிலையம், நீரிழிவு சிகிச்சை நிலையம், மனநோயாளர் சிகிச்சை நிலையம் குழந்தைகள் சிகிச்சை நிலையம் என்பவற்றை நடாத்தியும் மருத்துவ மாணவர்களுக்கு போதனா பிரிவாகவும் பயிற்சித் தாதியர், குடும்பநல சேவையாளருக்கு பயிற்சிக் களமாகவும் இயங்குகின்றது. குறைந்த வசதிகளுடனும் ஆளணிப் பற்றாக்குறையுடனும் மக்களுக்கு வைத்திய வசதியை அளித்துவரும் இவ்வைத்தியசாலை மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்குவதே எமது பெருவிருப்பும் எதிர்பார்ப்பும் ஆகும். இவ்வைத்தியசாலையின் ஆரம்பகாலத்திலிருந்து இற்றைவரையிலான நிறுவனத் தலைவர்களின் பெயர்களும் இருந்த காலமும் வருமாறு. .

| | | | |
|---|---|---|---|
| வைத்தியகலாநிதி | அ.பேரின்பநாயகம் | புரட்டாதி 71 | மார்கழி 71 |
| வைத்தியகலாநிதி | ஏ.ரி.நல்லையா | தை 71 | சித்திரை 75 |
| வைத்தியகலாநிதி | என். முத்துராசா | வைகாசி 75 | தை 77 |
| வைத்தியகலாநிதி | பி. சுபானந்தன் ( பதில்) | மாசி 77 | ஆடி 77 |
| வைத்தியகலாநிதி | செல்வி என். கனகரத்தினம் | ஆவணி 77 | தை 81 |
| வைத்தியகலாநிதி | எஸ் பொன்னுத்துரை ( பதில்) | மாசி 81 | மார்கழி81 |
| வைத்தியகலாநிதி | எஸ் . பத்மநாதன் ( பதில்) | தை 81 | சித்திரை 83 |
| வைத்தியகலாநிதி | சி. கதிரவேற்பிள்ளை | வைகாசி83 | வைகாசி 83 |
| வைத்தியகலாநிதி | எஸ். பத்மநாதான் ( பதில்) | ஆவணி 87 | புரட்டாதி 89 |
| வைத்தியகலாநிதி | ஏ. யோகராசா ( பதில்) | ஐப்பசி 89 | புராட்டாதி 91 |
| வைத்தியகலாநிதி | செல்வி. சி. சிவராணி ( பதில்) | புரட்டாதி 91 | இற்றைவரை |



ன்

# அளவெட்டி மத்திய மருந்தகமும் மகப்பேற்று இல்லமும்

சுமார் 75 வருடங்களிற்குமுன் " அளவெட்டி அரசினர் வைத்தியசாலை" எனற பெயருடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து சுமார் 20 வருடங்களின் பின் தென்புறத்தில் பிரசவ விடுதியொன்று ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் மத்திய மருத்தகம் தனியார் வீடொன்றிலும், மகப்பேற்று நிலையம் சுகாதாரத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடத்திலும் இயங்கின.

1942ம் ஆண்டு யூலை மாதம் 29ம் நாள் மகப்பேற்று நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்கான காணி பொதுமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது. இது ஆரம்பகாலத்தில் முதியோரால "கீளிச்சந்தை ஆஸ்பத்திரி" என அழைக்கப்பட்டது 1990ல் மத்திய மருந்தகம் கட்டுவதற்கான முடிவு எடுக்கப்பட்டு அத்திபாரமும் கட்டப்பட்டது. 1995ல் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வினால் இவ் வைத்தியசாலை பெரும் அழிவைக் கண்டது. 1997ல் யூ.என் எச். சி. ஆர். ன். உதவியாக (ரூபா. மூன்று இலட்சம்) 300,000/= பெற்பட்டு பிரதேச செயலராற் கட்டடம் புனரமைக்கப்பட்டது அதன் பின் 1998ல் இம்மத்திய மருந்தகம் மீண்டும் இயங்கத் தொடங்கியது.(1998ன் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மூலம் ரூபா 300,000 (மூன்று லட்சங்கள்) பெறப்பட்டு ஆத்திவாரத்துடனிருந்த மருந்தக கட்டிடம் முழுமையாகக் கட்டியெழுப்பப்பட்டது. கனடா வாழ் அளவெட்டி மக்களின் நன்கொடை நிதிமூலம் இக்கட்டிடம் பூர்த்தியானது. 1999ல் வீதியோரக் காணியும் கனடா வாழ் அளவெட்டி மக்களின் நிதியுதவி மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. இன்று யூ.என் டி. பி. யின் உதவியுடன் பிரசவவிடுதியும் நிறைவுற்று அளவெட்டி மத்திய மருந்தகமும், மகப்பேற்று விடுதியுமாக அழகாகக் காட்சியளிக்கிறது. இவ்விடம் திரு.க.யோகேஸ்வரன் அவர்கள் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சிறந்த வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிவருகிறார். இங்கே தற்பொழுது சகல கிளினிக் வைத்திய பரீசோதனைகளும், இரத்தப்பரிசோதனையும் நடைபெறுவதால் அயற்கிராமங்களிலுள்ள மக்களும் பெருந்தொகையாக வைத்தியம் பெற வருகை தருகிறார்கள்.

## நற்பரிசு

எதிரிக்குக் கொடுக்கும் நற்பரிசு – மன்னிப்பு
பகைவனுககு கொடுக்கும் நற்பரிசு - விட்டுக்கொடுத்தல்
நண்பனுக்கு கொடுக்கும் நற்பரிசு – செவிமடுத்தல்
குழந்தைக்கு கொடுக்கும் நற்பரிசு – முன் மாதிரிகை
தந்தைக்கு கொடுக்கும் நற்பரிசு – நல்வணக்கம்
தாய்க்கு கொடுக்கும் நற்பரிசு – அருகிலிருத்தல்
எல்லாவற்றிற்கும் கொடுக்கும் நற்பரிசு – தியாகம்

## தேன்தமிழ் !

தித்திக்கும் தேன்துளியே
திகட்டாத தெள்ளமுதே
முத்திக்கும் வழிகாட்டும்
முத்தமிழே முழுநிலவே

எத்திக்கும் கலைபொழியும்
எல்லையிலா எழிலரசி
புத்திக்கும் எட்டாத
பொன்மகளே புகழுருவே

சங்கத்தில்நீ பிறந்தாய்
சரித்திரத்திலே தவழ்ந்தாய்
சிந்திக்கும் புலவர்களின்
சிந்தனையிலே வளர்ந்தாய்

என்றைக்கும் குமரியடி
எள்ளளவும் மாற்றமிலை
மன்றத்தில் மலர்பவளே.
மயங்குதடி என்மனது

காவியத்திலே நடந்தாய்
காதலின்பமே கொடுத்தாய்
ஓவியங்களில் உயர்ந்தாய்
உத்தமியே எனதுயிரே - ***சிதரம்பரபத்தினி***

# வலிகாமம் வடக்கு
# தமிழியல் அறிஞர்கள் - அறிமுகம்

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**
ஓய்வுபெற்ற அதிபர்

வலிகாமம் வடக்குப் பிரதேசம், யாழ்ப்பாண மாவட்டத்தில் வடக்குப் பகுதியை அண்டியுள்ள முக்கியத்துவம் மிக்க பகுதியாகும். இப்பிரதேசம் தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி, கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, வயாவிளான், குரும்பசிட்டி முதலான கிராமங்களையும் எண்ணில்லாத குக்கிராமங் களையும் கொண்டது.

இங்கு பல்துறைசார்ந்த அறிஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றும் வாழ்கிறார்கள். இசைநாடகக் கலைஞர்கள், சட்ட அரசியல் அறிஞர்கள், வைத்தியத்துறை அறிஞர்கள், தமிழியல் அறிஞர்கள் முதலான பலவகையாகப் பகுத்துப் பார்க்கலாம்.

இவர்களுள் தமிழியல் அறிஞர்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரையுள்ள தமிழியல் அறிஞர்களில் வலிவடக்குச் சார்ந் தோரைப்பற்றி, இதுவரை வெளிவந்த நூல்களில் எமக்குக்கிடைத்தவற்றைக் கொண்டும், தக்கோர் வாயிலாக அறிந்த செய்திகளைக் கொண்டும் தகவல்கள் திரட்டித் தரப்படுகின்றன.

இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழியல் அறிஞர்களிற்பலர் போர்காரணமாகவும், வேறும் பல காரணங்களாலும் புலம்பெயர்ந்து இந்நாட்டின் வேறுபல பகுதிகளிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்வதால் அவர்களைப் பற்றியும் அறிய முடிந்த தகவல்களே இங்கு தரப்படுகின்றன.

எனினும் "ஒன்றும் இல்லாமல் இருப்பதை விட ஓரளவேனும் இருப்பது நன்று"என்றபடி வலிவடக்கின் பாரம்பரியங்கள் முற்றாக அழிந்து போகாதபடி கிடைத்தவற்றையேனும் ஆவணப் படுத்திப் பதிவு செய்துவைத்தல் வரலாற்றுக் கடமை எனக் கொண்டு இம்முயற்சி முன்னெடுக் கப்படுகிறது.

இது மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய தாகும். இங்கு குறிப்பிடப்படாத தகவல்களைத் தெரிந்தோர் மேலும் இதற்கு உதவுதல் பயனுடைய தாகும்.

சங்ககாலம் முதல் ஈழம் தமிழறிஞர் களைக் கொண்டதாக விளங்கியது. ஈழத்துப் பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்று அழைக்கப் பெற்ற பூதந்தேவனாரின் பாடல்கள் சங்ககால நூல்களிற் காணப் படுகின்றன. அதன் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்து நூல்களே கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழில் இலக்கியம், இலக்கணம் என இரு கூறுகள் உள்ளன. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" என்பது மரபு. இலக்கியத்திலே வல்லவர்களனுதான் இலக்கணத்தில் வல்லுநராக முடியும். இவ்விருதுறையிலும் வல்லுநர்களே தமிழியல் அறிஞர்கள் ஆகக் கொள்ளப்படுவர்.

எமது வலிவடக்குப் பிரதேசத்தில் பண்டுதொட்டுத் தமிழ் அறிஞர்கள் வாழ்ந்தார்கள் என வித்துவசிரோமணி கணேசையர் "ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரத்தில்" கூறியுள்ளார். அவரது நூலிலிருந்து பலதகவல்களைப் பெறமுடிகின்றது.

**கொல்லங்கலட்டி வித்துவ சிரோமணி தா. மூ. பொன்னம்பலபிள்ளை** அவர்கள் (1845 – 1889) மாவையமகவந்தாதி (1887) மாவைச் சித்திரக்கவித் திருவிரட்டை மணிமாலை (1889) ஆறெழுத்துப் பத்து, இரட்டை நாகபந்தம், தேர்வெண்பா, மாலை மாற்றுமுதலிய நூல்களை யாத்தவர். தமிழகத்தில் பெரும்புகழோடு வாழ்ந்தவர். இதனாற் தமிழகத்துப் பேரறிஞர்களாலும் போற்றப்பட்டார். தமிழகத்துப் பேரறிஞரும் உரையாசிரியருமான ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை மாவையமாக வந்தாதிக்கு விரிவான உரை எழுதியுள்ளார். அவர் கூறும் பாராட்டுரை நினைவு கூரத்தக்கது.

"புலவர் திலகராகிய பொன்னம் பலபிள்ளையின் கலைநயமும், கவித்திறமும், புலமைமாண்பும், கவினுறக் காட்சிதரும் இந் நூலின் பாடல்களை யான் ஓதி மகிழ்ந்து உரைவரைந்தேன்.

எமகம்பாடும் தனித்திறனோடு சிவநெறிச் செம்பொருளையும் சேர்த்துச் செய்யுள் இயற்றும் மதுகை இவ்வாசிரியர்பாற் செறிந்து கிடப்பதை இந்நூல் நலம் நுகர்வார் நன்கறிவர்." (மாவையமகவந்தாதி மூலமும் உரையும் 1977 பக் XV) அளவெட்டியில் வாழ்ந்த வைத்தியநாதத்தம்பிரான் என்ற அறிஞர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் காலத்தவர். இவரை 'அளவெட்டி ஞானி' எனவும் அழைப்பர். தமிழ், சமஸ்கிருதம் என்பவற்றில் வல்லவராக விளங்கினார். இவர் கண்டியில் அரசுபுரிந்த முத்துச்சாமி அரசன்மேற் பிரபந்தம் பாடிப் பாராட்டும், பரிசும் பெற்றவர். சமஸ்கிருதத்தில் இருந்த வியாக்கிரபாத முனிவர் புராணத்தைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடியுள்ளார்.

**மாவைச்சின்னக்குட்டிப்புலவர்** ஒல்லாந்தர் காலத்தவர். தண்டிகைக் கனகராய முதலியார் என்னும் பிரபு மேல் "தண்டிகைக் கனகராயன்பள்ளு" (1792) என்னும் இலக்கியத் தைப்பாடினார். இந்நூலில் சைவமக்களின் மங்கல வாழ்வைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

**மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளை** (1855–1906) மல்லாகவிஸ்வநாதபிள்ளைபுத்திரர். சென்னை அஞ்சல் துறையில் பெரும் பதவி வகித்தவர். "ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்" – எனும் ஆங்கில நூலை எழுதி ஆங்கிலம் கற்ற தமிழரிடையே விழிப்புணர்வை உண்டாக்கியவர். இதன் தமிழாக்கம் 1904இல் வெளிவந்தது. (நாவலர் மாநாடுமலர் 1969)

**அளவெட்டி கனகசபைப்புலவர்.** (பிறப்பு 1929.2.12) வைத்திய நாதத்தம்பிரானுடைய வழித்தோன்றல். தந்தையிடம் சுதேசவைத்தியமும் டாக்டர் உவாட்டிடம் ஆங்கிலவைத்தியமும் கற்று ஆங்கில -சுதேச வைத்தியராயிருந்தவர். கிறீஸ்தவரானவர். 1751 விருத்தப்பாக்களைக் கொண்ட திருவாக்குப்புராணத்தைப் பாடியுள்ளார். ஒரு சொல் பலபொருள் தொகுதி என்னும் நிகண்டையும், பல தனிப்பாடல்களையும் யாத்துள்ளார்.

சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி முடியும் வரை ஈழத் தமிழகத்தில் சைவசமயச் சார்புடைய இலக்கியங்களே தோன்றின. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் சைவச் சார்புடைய இலக்கியங்கள் மட்டுமன்றிக் கிறீஸ்தவ, கத்தோலிக்க மத இலக்கியங்களும் தோன்றின. இக்கால இலக்கியங்கள் பற்றிப் பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வருமாறு கூறியுள்ளார். "1619 முதல் 1796 வரையுள்ள காலகட்டத்திலே கிறீஸ்தவம் தமிழரிடையே பரவுவதைக் காணலாம். இக்கால கட்டத்திலே போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தினையும், ஒல்லாந்தர் புரட்டஸ்தக் கிறீத்தவத்தினையும் பரப்பினர். இவ்வாறு பரப்பும்போது தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் சிற்றிலக்கிய வடிவங்களாகப் போற்றப்படும், அடிநிலை மக்கள் தொடர்புடைய இலக்கிய வடிவங்களைக் கையாண்டுள்ளனர்...." மதம் மாறிய தமிழர்கள் தம் புதியமதச் சிறப்புக்களை தமது பாரம்பரிய இலக்கியவடிவங்கள் கொண்டு ஆக்கினர்.

ஈழத்தில் தமிழ் இலக்கியம் - 1978

சைவர்களாக இருந்து மரபுவழித் தமிழ் பயின்ற சிலர் மரபுவழி இலக்கிய வடிவில் கிறீஸ்தவ இலக்கியங்களைப் படைத்தனர். வலிகாமம் வடக்கில் குறிப்பாகத் தெல்லிப்பழை யில் வாழ்ந்த சிலரை இவ்வகையில் காணமுடி கின்றது.

**பேதுருப்புலவர்** தெல்லிப்பழையைச் சேர்ந்த கத்தோலிக்கர். இவர் "யாகப்பர் அம்மானை" என்ற சிற்றிலக்கியத்தைப் பாடியுள்ளார். இது 'சந்தியோகுமையார் அம்மானை' எனவும் பெயர் பெறும். கத்தோலிக்க சமய உண்மைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் (1918 – பக் - 89) இவரைப்பற்றிக் கூறும் தகவல் இங்கு நோக்கத்தக்கது.

"பேதுருப்புலவர் என்பவர் 1647இல் இயற்றியது சந்தியோகுமையார் அம்மானை. இவர் தெல்லிப்பழைவாசன். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வலிகாமப்பற்றும், அதில் தெல்லிப்பழையுமே சிறந்த இடமாக விளங்கியது. இந்நூல் கிளாலியிலுள்ள கத்தோலிக்க ஆலயத்தைச் சிறப்பித்துப் பாடப்பட்டது. அக்காலத்தில் திருநாட்காலத்தில் சைவ ஆலயங்களைப்போல அங்கு தேரிழுத்தலும் வழக்கமாயிருந்தது."

**தெல்லிப்பளை தொம்பிலிப்பு** எனும் புலவர் "ஞானானந்தபுராணம்" என்ற காவியத்தைப் பாடியுள்ளார். இது சென்னையில் (1874) பதிப்பிக்கப் பெற்றது. மூன்றுகாண்டங்களையும் 1104 விருத்தப் பாக்களையும் கொண்டது.

**தெல்லிப்பழை பூலோகசிங்க முதலியா** ரெனும் அருளப்பநாவலர் காரைநகரிற் பிறந்து தெல்லிப்பழையில் வாழ்ந்தவர். (1680) இவர் 'திருச்செல்வர்காவியம்' எனும் பெருநூலையாத்தார். இந்நூல் 24 படலங்களையும் 1947 செய்யுட்களையும் கொண்டது. பலவகை விருத்தப்பாக்களால் அமைந்தது. இதே கதையைச் சாதாரணமக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் திருச்செல்வர் அம்மானை என்ற சிற்றிலக்கிய வடிவிலும் இவர்யாத்துள்ளார்.

**தெல்லிப்பழையைச் சேர்ந்த அறிஞர் நீக்கிலாப்பிள்ளை** அமெரிக்காவிலிருந்து தெல்லிப்பழைக்கு வந்து கல்விப்பணி ஆற்றிய டானியல் பூவருக்கு (யூனியன்கல்லூரி) தமிழ் கற்பித்தார். இவரது இருமொழிப்புலமைக்கு இது சான்றாகும்.

**தெல்லிப்பழை தம்பிமுத்துப் புலவர்** என்பவர் பிரபலமான தமிழறிஞர். பல நாடக நூல்களை எழுதியுள்ளார். அந்தோனியார் நாடகம், அரிச்சந்திரன் நாடகம், அனற்றோ நாடகம், கோவலன் நாடகம் என்பன அவற்றுட் சிலவாகும்.

**மல்லை நமசிவாயப் புலவர்:-** மல்லாகத் தில் வசித்தவர். இராமுப்பிள்ளை அவர்களின் மகன் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் இலக்கண இலக்கியங்கற்றவர். யாழ்ப்பாணத்து ஊர்ப்பெயர்களை வைத்து ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம் எனும் நயம்மிகுந்த செய்யுள் நூலையாத்துள்ளார். 1923 இல் அச்சில் வெளி வந்து 1983 மறுபதிப்புச் செய்யப்பட்டது. சிதோத்திரவயமக அந்தாதி ஆத்மட்சாமிர்தமருந்து, சிங்கைவேலன் கீர்த்தனைகள், கும்பழாவளைப் பிள்ளையார் கீர்த்தனைகள், ஊஞ்சற் பாக்கள் முதலான பல நூல்களை யாத்துள்ளார். (ஈழத்துத் தமிழ்க் கவிதைக்களஞ்சியம் 1966)

**மல்லாகம் நம – சிவப்பிரகாசம்** அவர்கள் மல்லை நமசிவாயப் புலவரின் மைந்தன். சட்டத்தரணியாகவும், நொத்தாரிசாகவும் தொழில் பார்த்தவர். யாழ். சைவபரிபாலன சபையின் 'இந்து சாதனம்' சஞ்சிகையின் ஆங்கில வெளியீட்டுக்கு நீண்டகாலம் ஆசிரியராக இருந்தவர். மாவைக்கந்தன் கீர்த்தனைகள் (1925) சைவச் சால்பு (1967) முதலான பல நூல்களை யாத்துள்ளார்.

**கொல்லங்கலட்டி வ. குமாரசாமி பீ.ஏ** அவர்கள் சட்டத்தரணியும் பேரறிஞருமாவார். யாழ்ப்பாண மக்களின் சமூக நிலையை ஆராய்ந்து 'ஞாயிறு' என்ற இதழில் தொடர் கட்டுரைகள் எழுதியவர். யாழ்ப்பாண வரலாற்றோடு தொடர்புடைய கதிரமலைப்பள்ளு, தண்டிகைக் கனகராயன்பள்ளு ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். யாழ்ப்பாணத்தில் இயற்றப்பட்ட முதல் வரலாற்று நூலாகிய 'கைலாய மாலை'யைப் பதிப்பிக்க ஏற்பாடுசெய்துகொண்டிருந்தபோது காலமானார். மகன் கு. வன்னியசிங்கம் அவர்கள் சகோதரி இராசேசுவரி கணேசலிங் கத்தைக் கொண்டு உரை எழுதுவித்து, தமிழக அறிஞர் செ. வே. ஜம்புலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது.

**வித்துவசிரோமணி சி. கணேசையர்** அவர்கள் வறுத்தலைவிளான் மருதடிவிநாயகர் ஆலயத்தடியில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்த மகான். பிறப்பிடம் புன்னாலைக்கட்டுவன் எனினும் அவரது வாழ்விடமாக அமைந்தது வறுத்தலைவிளானே. இலக்கண இலக்கியத் துறையில் மாபெரும் முனிவராகத் திகழ்ந்து பல பேரறிஞர்களை உருவாக்கியுள்ளார்.

ஐயரவர்கள் தொல்காப்பிய உரைகள் மீது தீவிர ஈடுபாடுகொண்டிருந்தார். கற்பிக்கும் போது ஏற்படும் ஐயங்களைக் குறித்து விளக்கவுரை எழுதினார். இவரது மாணவன் குரும்பசிட்டி நா. பொன்னையா அவர்கள் தனது திருமகள் அழுத்தகத்தில் தொல்காப்பிய உரைக்குறிப்புகளைப் பதிப்பிக்க முன்வந்தார். அவை

I. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியார் உரை 1935
II. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை – 1938
III. தொல்காப்பியம் - பொருளதிகாரம் இரண்டாம் பாகம் பின்னான்கியல்களும் பேராசிரியம் -1943
IV. தொல்காப்பியம் - பொருளதிகாரம் முதலாம் பாகம் முன்னைந்தியல்களும் நச்சினார்க் கினியம் 1948

அவரின் பெரும்புகழுக்கு இந்நூற் பதிப்புகளே காரணமாயின. இவற்றின் சிறப்பை ஐயர் அவர்களின் தலைமாணக்கர் இலக்கண வித்தகர். பண்டிதர் இ. நமசிவாயம் பின்வருமாறு கூறியுள்ளார்.

"தொல்காப்பியமாகிய பெருங்கடலிற் புகுவோர்க்கு ஐயரவர்களின் குறிப்புக்கள் மரக்கலம்போல உதவுவன. இது ஐயர் தொண்டுகளில் மிக உயர்ந்தது." தமிழகத்தின் மிகச்சிறந்த பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே சாமிநாதையர் அவர்கள் கணேசையரின் பெருமையை

"நூலிலே அன்புவைத்து அதன் பாலுள்ள விஷயங்களை வெளிப்படுத்துதலையே தனி இன்பமாகக் கொண்டு பலகாலம் ஆராய்ந்து பதிப்பிக்கும் முயற்சியுடையார் சிலருள் ஐயர் ஒருவர்"

இவர் மேகதூதக்காரிகை உரை 1925 அகநானூறு (1 – 100) உரை, 'நாணிக்கண் புதைத்தல்' என்ற ஒரு துறைக் கோரிக்கைப் புத்துரை முதலியவற்றையும் எழுதியுள்ளார். அத்துடன் ஈழத்துத்தமிழ்ப் புலவர் வரலாறுகளை "ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்" என்ற தனிப்பெருநூலாக வெளியிட்டுள்ளார். ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு முன்னோடியாக அமைந்தது இது எனலாம்.

யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் எழுந்த அரசகேசரியின் இரகுவம்சத்திற்கு 1915 இல் மிகவிரிவான உரையை எழுதிவெளி யிட்டுள்ளார்.

மாணவர்க்கேற்ற உரைநடைநூலாக 'குசேலர் சரிதம்' என்ற நூலையும், 1966 குமாரசுவாமிப்புலவர் சரித்திரம் 1925 என்ற நூலையும் எழுதியுள்ளார்.

மறையவரான இப்பேரறிஞர் நிறைந்த பக்தி உடையவர். வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் மீது பக்தியை வெளிப்படுத்தும் வகையில் இருபா இருப·.து, அந்தாதி, கலிவெண்பா, கலிநிலைத்துறை, ஊஞ்சல் முதலிய பலவகைப் பிரபந்தங்களையும் பாடியுள்ளார்.

இவரது இலக்கணக்கட்டுரைகள் விமரிசனக் கட்டுரைகள் பல தமிழ்நாட்டு "செந்தமிழ்" பத்திரிகையில் வெளிவந்துள்ளன.

மாணவருக்குத் தொண்டு அடிப்படையில் கற்பித்தல், ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைதல், சிறுவர்களுக்கான எளியநடை நூல்கள் எழுதல், இலக்கியவாழ்க்கை வரலாற்றுநூல் யாத்தல், தொல்லிலக்கியங்களுக்கு உரைவகுத்தல், இலக்கண நூல்களை உரைவிளக்கக் குறிப்போடு பதிப்பித்தல், செய்யுள் இலக்கியம் படைத்தல் முதலாம் கல்வித் தொண்டில் தன்னேரில்லாத் தமிழ்ப் பேரறிஞராக விளங்கியுள்ளார்.

**மாவை நவநீதகிருஷ்ணபாரதியார்** (பரிதி மாற்கலைஞர்) வித்துவசிரோமணி சி.கணேசையர் காலத்தில் வாழ்ந்த அறிஞர். தமிழகத்தவரான இவர் சேர்.பொன்.இராமநாதனால் ஆசிரியப்பணி புரிவதற்காக ஈழத்திற்கு அழைத்துவரப்பட்டார். அதனால் மாவிட்டபுரத்தில் நிலையாக வாழ்ந்தார். இவர்மிகச் சிறந்த புலவர். "உலகியல் விளக்கம்"(1922) என்ற கவிதை நூலையாத்தார். உலகின் இயல்பு எவ்வாறு விளங்கவேண்டும், எது செய்யலாம், எது செய்யக்கூடாது என்ற ஒழுக்கநெறிகளை அகவற்பாவில் கூறியுள்ளார். இந்நூலுக்கு மட்டக்- களப்பு அறிஞரான வித்துவான் ச.பூபாலபிள்ளை பேருரை எழுதியுள்ளார். சுவாமி விபுலானந்த அடிகள் இதனை 1922இல் வெளியிட்டுள்ளார்.

மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் முழுமைக்கும் விரிவான விளக்கவுரை எழுதி வெளியிட்டுள்ளார்.

மாணவருக்கான இலக்கணநூலை பாரதீயம் I, பாரதீயம் II என இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி, இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் தலைமைத் தமிழாசிரியராகப் புகழ்பெற்றுள்ளார்.

மேலும் பறம்புமலைப்பாரி, செழுங்கதிர்ச் செல்வம், திருவடிக்கதம்பம் முதலாகியபல நூல்களையும் ஆக்கியுள்ளார். இவருக்கு ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச்சங்கம் "புலவர்மணி" என்னும் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது.

**பன்னாலை சிவானந்தையர்:-** நாவலர் மரபிலே ஒருவராகவிளங்கிய சைவத்தமிழ் அறிஞர். இலக்கணம். இலக்கியம், சமயம் என்பவற்றோடு மெய்யியலிலும் சிறந்து விளங்கினார். சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி அவர்கள் இவரிடம் பாடங்கேட்டவர் என்பர். பண்டிதமணி பின்வருமாறு கூறுவர்:-

"........ அக்காலத்திலே பிரசித்திபெற்ற வித்துவான் சிவானந்தையரிடம் படிக்கும் ஒழுங்கு செய்யப்பட்டது. வடக்கே அரசஞ்சண் முகனார் என்றால் இங்கே ஒருசிவானந்தையர். ஐயர் மிகக்கூரிய மகாவிவேகி........." (சிந்தனைக் களஞ்சியம் 1978 பக் 239.)

சிவானந்தையர் பலநூல்களை எழுதியும் உரைவிளக்கம் செய்தும், மொழிபெயர்த்தும், பதிப்பித்தும் உள்ளார்.

இலக்கணம் - அகப்பொருள்விளக்கம் 1907
இலக்கியம் - புலியூர்ப்புராணம் 1936
தசகாரியம்
நகுலமலைக்குறவஞ்சி
நவக்கிரக கவசம்
புலியூர்யமக வந்தாதி
வரலாறு - தருக்கசங்கிரகம்

என்பவற்றுடன் திருக்குறள் முதலதிகார விருத்தியுரை, நீதிநெறி விளக்கவுரை, நீதிவெண் பாவுரை, சனிதுதி (1910) என்பவற்றையும் எழுதிப்பதிப்பித்துள்ளார்.

பாவலர் துரையப்பாபிள்ளை அம்பனையில் மகாஜனக்கல்லூரியை நிறுவினார். சிவானந்தையர் அதற்கு பக்கத்தில் பன்னாலையில் வசித்தார். ஒவ்வொரு நாளும் மாலையில் சிவானந்தையர் துரையப்பாபிள்ளையைச் சந்தித்து உரை யாடுவார். சிவானந்தையரின் தொடர்பு பாவலர் துரையப்பாபிள்ளையைச் சைவத்தமிழ் அறிஞராக மலர உதவியது.

**அளவெட்டி சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி** அவர்கள் அறிவியல் மாணி (B.Sc)

பட்டம் பெற்றவர். மெய்யியல் அறிஞராக விளங்கினார். தமிழிலும் சைவத்திலும் பேரறிஞராக விளங்கினார். ஈழத்தில் நாவலரின் வாரிசாக விளங்கியவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். இவர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை யில் தமிழ்ப்பேராசிரியராக விளங்கினார். அங்கு சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி அவர்கள் உப அதிபராயிருந்தார். பண்டிதமணி இவரைத் தனது குருநாதர் என்கிறார். அவர் தமது சிந்தனைகளைப் பண்டிதமணி மூலம் பரவச் செய்தார். பண்டிதமணி அவரிடம் கற்றது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஒரு நாள் (15 – 10 – 1940) மிக்க அச்சத்துடன் பேனையும் கையுமாய் குறிப்புப் புத்தகத்துடன் அந்த மகானை அணுகினேன். பாஷை இரண்டென்று தொடங்கி ஆரியமும் தமிழும் என்றபாடம் நடந்தது. அவர் எனக்கு நடத்திய பாடம் ஆயிரத்திற்குக் குறையா. 'உப அதிபர் ஆயிரம்' என்று ஒருவாறு ஒரு புத்தகம் தொகுக்கலாம் போலும்.... பெரும்பாலும் அவர்சிந்தனைகளை எட்டமுடியவில்லை. எல்லா வற்றையும் எழுதிக் கொண்டேன். அவர் தொடாத துறைகளே இல்லை.
- சித்தனைக்களஞ்சியம் அளவெட்டி தந்த அறிவுச் செல்வம் 1978 பக் 232 – 239.

பண்டிதமணி சிந்தனைச் செல்வர் கற்பித்தவற்றையெல்லாம் முடிந்தவரை எழுதிக்கொண்டார். இவற்றைப் பலருக்குப் படிக்கக் கொடுத்தார். பண்டிதமணி மறைந்தபின்னர் பேராசிரியர் சு.சுசீந்திரராசா, திரு .சபாரத்தினம் இருவரும் அவற்றைப் யாழ்பல்கலைக்கழக சார்பில் வெளியிட்டு அவரின் சிந்தனைகளுக்கு நிலைத்த வாழ்வைக் கொடுத்துள்ளனர். அவர்கள் பதிப்பித்த இந்த நூலுக்கு இலக்கிய கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா B.A விளக்கவுரை எழுதியுள்ளார்.

சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி 1902 இல் பிறந்தார். 2002 ஆம் ஆண்டு அவரது பிறந்த நூற்றாண்டு.

இவரின் அறிவாற்றலை வளர்க்க முதலில் காரணமாக விளங்கியவர் பன்னாலை சிவானந்தையர். இவரிடமே ஆங்கிலம், வடமொழி அறிவினை இளமையிலேயே பெற்றுக் கொண்டார்.

**ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (1860-1944)**

வயாவிளானில் பிறந்து வாழ்ந்தவர். அஞ்சாமைக்கு இலக்கணமானவர். எடுத்த எடுப்பில் பாடக் கூடியவர். ஆதலால் ஆசுகவி எனப் போற்றப்பட்டார். கல்லடி வேலன் என்றால் கடந்த நூற்றாண்டில் அறியாதார் இல்லை. உயர்ந்த ஆன்மீகக் கவிதைகள், கண்டனக் கவிதைகள், நகைச்சுவைக் கவிதைகள் முதலாகப் பண்டிதரையும், பாமரரையும் ஒருங்கே கவரவல்ல பாடல்களைப் பாடினார். பாமரர்கள் இவரை *விகடகவி* என்றே எண்ணியிருந்தனர். இவரது வாழ்க்கை வரலாற்றை இவரது பேரனும் தென்னிந்திய திரைப்பட நடிகருமான சிலோன் விஜயேந்திரன் "கல்லடி வேலுப்பிள்ளை வாழ்க்கை வரலாறு" எனும் நூல் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளார். 1860 மார்ச் 7ம் திகதி பிறந்த இவர் 1902 முதல் 1944 வரை "சுதேச நாட்டியம்" எனும் வீராவேசமும், சுதந்திர உணர்வும், ஆக்க இலக்கியத்திறனும் மிக்க பத்திரிகையை நடத்தியவர். இவர் எழுதிய நூல்களிலே மிகப்புகழ் பெற்றது "யாழ்ப்பாண வைபவகௌமுதி" எனும் யாழ்ப்பாண வரலாற்றுப் பெருமை கூறும் நூலாகும். போலிப்புலவர்களைச் சாடி 'யதார்த்தவாதி'> 'வெகுசன விரோதி' என முழக்கமிட்டுத் தமிழ் இனத்தின். பெருமைக்காக வாழ்ந்திட்ட கல்லடிவேலன் எல்லாரும் நயக்கும் இனிய அறிஞன்.

ஆசுகவி பற்றி :............

"......... இவர் ஒரு கண்டனப்புலி நினைத்தவுடன் பாடும் தெய்வீக சக்தி மிக வாய்க்கப் பெற்றவர்" – பேராசிரியர் ஆ. சதாசிவம்

"ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" "பிள்ளை அவர்களுடைய தமிழ்நடை ஒரு தனிரகத்தைச் சேர்ந்தது. இக் காலத்து மறுமலர்ச்சி இயக்ககாரர் பிள்ளை அவர்களைத் தமக்கு வழி காட்டியாகக் கொள்வார்களாக. "ஈழகேசரி நா.பொன்னையா (ஈழகேசரி 1944)

"..... ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞரிலே கவிதை, உரைநடை, பத்திரிகை, கண்டனம், கட்டுரை, வரலாறு, ஆராய்ச்சி முதலிய பல துறைகளில் முன்னணியில் வைத்துக் கணிக்கப்பட வேண்டியவர் கல்லடி வேலுப்பிள்ளை"– பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

(ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை – வாழ்த்துரை 1973)

அறுபதுகளில் மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் நாவலர் மரபில் வந்த வித்துவசிரோமணி சி.கணேசையரின் மாணவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்கள் 'பண்டிதர் கழகம்' ஒன்றை நடத்தினார். அங்கு பண்டிதர், பாலபண்டித வகுப்புகள் நடைபெற்றன. இலக்கணவித்தகர் பண்டிதர் இ.நமசிவாயம், பண்டிதர் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் க. நாகலிங்கம், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, பண்டிதர் ச. துரைசிங்கம், பண்டிதர் மு. கந்தையா,

வித்துவான் கந்தசாமி முதலியோர் கற்பித்தனர். இங்குபயின்று பலர், பண்டிதர், பாலபண்டிதர், சைவப் புலவர் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

இங்கு கற்பித்தவர்களில் மூவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளது. பண்டிதர் நமசிவாயம் அவர்களுக்கு "இலக்கணவித்தகர்" எனும் பட்டமும், பண்டிதர் மு. கந்தையா அவர்களுக்கு 'இலக்கியகலாநிதி' என்றபட்டமும், செல்விதங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு 'கலாநிதி' என்ற பட்டமும் வழங்கப்பட்டன.

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட **சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள் உலகளாவிய மட்டத்தில் வாழும் சைவத்தமிழ்ப் பெண்கள் எல்லோரிலும் முதன்மையானவராகத் திகழ்கிறார்.

பண்டிதர், சைவப்புலவர் பட்டங்களைப் பெற்று ஆசிரியராக முப்பத்தொரு ஆண்டுகள் பணிபுரிந்த இவர் தன்னுடைய பேச்சுத் திறத்தால் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா,இங்கிலாந்து முதலான நாடுகளில் பெரும்புகழ் பெற்றுள்ளார். ஆங்காங்குவாழும் தமிழ்மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பத்துஆண்டுகள் பொருளாளராக இருந்த இவர் 1977 தொடக்கம் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். இவரது காலத்தில் துர்க்கையம்மன் கோயில் பேரெழுச்சிகண்டது. வலி வடக்கில் துர்க்காபுரம் எனும் நகரம் உருவாகி வலிவடக்கின் தலைநகரம் எனும் அளவுக்கு வளர்ச்சி காண்கின்றது.

ஆசிரியப்பணி, சமூகப்பணி. ஆலயஅறங் காவல்பணி, சொற்பொழிவுப்பணி ஆகியபன் முகப்பணிகளால், தான் தலைமை தாங்கும் கோயிலை அறக் கோட்டமாக, இறைபணியுடன் மக்கள் பணியும் செய்கின்ற முன்மாதிரியான சேவையைச் செய்து வருகிறார்.

இங்கு மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், சைவத்தமிழ் ஆய்வு நூலகம் என்பவற்றினூடாக இவர் ஆதரவற்றோர்க்குச் செய்யும் தொண்டு கணக்கிடமுடியாதது. இவரது சமய, சமூகப்பணிகளைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் (1997) வழங்கிக் கௌரவித்தது.

இவர் பலநூல்களின் ஆசிரியராகவும், பலபழம் பெரும் நூல்களின் பதிப்பாசிரியராகவும் திகழ்கிறார். சிங்கப்பூர் மலேசியச் சொற்பொழிவுகள், இலண்டனில் ஏழுவாரம், பத்துச் சொற்பொழிவுகள், கந்தபுராணச் சொற்பொழிவுகள் முதலானவை இவரது நூல்கள்.

இவரைத் தலைவியாகக் கொண்ட நூல்கள் பல மணிவிழா மலர், சிவத்தமிழ் இன்பம், பவளவிழாமலர், தங்கம்மாநான் மணிமாலை, தங்கத்தலைவி முதலான பல நூல்களும், கவிதைகளும் எண்ணில்லாதன எனலாம்.

இவரால் பதிப்பிக்கப் பெற்றவை பெரியபுராண வசனம், அரியவும் பெரியவும் பகுதிI, பகுதி II, சைவபோதம், அபிராமி அந்தாதி, கந்தபுராணச் சுருக்கம், சைவக் கிரியைகளும் விரதங்களும் முதலான பலவாகும்.

ஆண்டுதோறும் "சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அறநிதியத்தின்" மூலம் தனது பிறந்ததினமான ஜனவரி 7இல் செய்யும் அறப்பணிகள்மிகமுன்மாதிரியானவை. நோயாளர், ஏழைகள், வலது குறைந்தோர், அகதிகள் முதலானவர்க்கு நிறுவனரீதியான அறப்பணிக் கொடைகளை வழங்குதல் இவரது முக்கிய பணியாகும்.

2000. 01. 07 இல் எழுபத்தைந்து வயது நிறைவுபெற்றுப் பவளவிழாக்கண்டு, தன் அறக்கொடை மூலம், வயோதிபரான ஆதரவற்ற பெண்களுக்கு அன்னையர் இல்லம் அமைத்தும், சைவத்தமிழ்ப் பழம்பெரும் நூல்களைத் தேடி எடுத்துச் சைவத் தமிழ் ஆய்வுநூலகம் அமைத்தும், உள்ளபணிகளுடன் உச்சமான இப்பணிகளையும் இணைத்துச் செய்யும் இணையிலா அன்னையென இவரைப் போற்றுதல் தகும்.

மயிலிட்டி தெற்கு கட்டுவனூர் வித்துவ சிரோமணி, **இலக்கணவித்தகர், பண்டிதர் இ.நமசிவாயம்** அவர்கள் வித்துவசிரோமணி சி. கணேசையரின் முதல் மாணாக்கர். ஐயர் அவர்களின் முதுமைக்காலத்தில் அவரது பண்டித ஜமாணவர்களுக்கு அவர் முன்னிலை யிலேயே அவருக்குப் பதிலாகக் கற்பித்து அவரின் பாராட்டைப்பெற்ற பெருமைக்குரியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் "இலக்கணவித்தகர்" பட்டம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டவர். இலக்கணவித்தகர் பட்டம் வழங்கிய போது பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு விதந்துரை வழங்கினார்.

"இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியத்தின் இலக்கணக் கொடுமுடி கணேசையர் பாரம்

பரியத்தின் திருக்கொழுந்தாக விளங்குபவர் இராமசாமி நமசிவாயம்.

1915 இல் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியின் பின்னர் 1932 இல் கணேசையரிடம் சென்றடைந்தார். பிரவேசவகுப்பில் தொடங்கிய உறவு பின்னர் நமசிவாயம் அவர்களை அந்தக்கணேசையர் கல்லூரியில் பண்டிதவகுப்புகளையே நடத்தும் ஆசானாக்கியது.

யாழ்ப்பாணத்துக் கல்விப்பாரம்பரியத்தின் இலக்கணச் செம்மையைப் பலருக்கும் ஊட்டி வந்துள்ள நமசிவாயம் அவர்கள் வீமன்காமம் வித்தியாலயத்தில் தமிழ்ப் பேராசானாகவும் தலைமையாசிரியராகவும் விளங்கியவர். இவர் தமிழ் இலக்கணத்தெளிவும், சைவசித்தாந்த அறிவும் நிறைந்தவர்.

மாண்புமிகு வேந்தர் அவர்களே!
யாழ்ப்பாணத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்குரிய இலக்கண ஆற்றலின் தலைசிறந்த பிரதிநிதிகளுள் ஒருவராக விளங்கும் இராமசாமி நமசிவாயம் அவர்களை 'இலக்கணவித்தகர்' எனும் பட்டத்துக்குரியவராக் குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்."(1980)

மல்லாகம் பண்டிதமாணவர்கழகத்தில் கற்பித்துப் பல பண்டிதர்களை உருவாக்கிய ஒப்பற்ற இவருக்கு 19.03.2000 பூரணையன்று நல்லையாதீனத்தில் சதாபிஷேகமும், துர்க்காமணி மண்டபத்தில் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் பாராட்டுவிழாவும் நடைபெற்றது. குடாநாட்டின் அத்தனை பேரறிஞர்களும் அங்கு கூடியிருந்து வாழ்த்தியமை இவரது பெருமைக்குச் சான்றுபகரும்.

இவரைப்பற்றிய "தேசிகம்" எனும் நூலும் இவரது ஆக்கங்களைக் கொண்ட "வித்தகர் தரிசனம்" எனும் நூலும் அவ்விழாவில் வெளியிடப்பட்டன. இவ்விருநூல்களும் இவரது அறிவின் பெருமைக்கு உரைகல் எனல் தகும்.

மேலும் இவர் சந்நிதிக்கந்தன் சதகம் (1973), மாவைக்கந்தன் பதிகம், நகுலேசர் திருவந்தாதி முதலான பல நூல்களையும் செய்துள்ளார்.

இவருக்கு யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாஅபிவிருத்திச்சங்கம் "வித்துவசிரோமணி" எனும் பட்டம் (1998) அளித்துக் கௌரவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வலி வடக்குப்பிரதேசத்தில் இளவாலைக் கிராமத்தில் வடக்குப்பகுதியும் இடம் பெறுகின்றது. இளவாலைவடக்கு, இளவாலை வடமேற்கு ஆகிய பகுதிகள் இதில் அடங்கியுள்ளன. இளவாலை வடமேற்கில் உள்ள மயிலங்கூடல் எனும் சிற்றூரில் பண்டிதர் த.கனகரத்தினம், பண்டிதர் சி. அப்புத்துரை, புலவர் ம.பார்வதி நாதசிவம், கூடல்இறை பி. நடராசன் ஆகியோர் குறிப்பிடக் கூடிய அறிஞர்கள்.

மயிலங்கூடலூர்த.கனகரத்தினம் அவர்கள் பன்மொழிப் புலமை மிக்கவர். தமிழ், சிங்களம், சமஸ்கிருதம், ஆங்கிலம், பாளி, ஹிந்தி, மலையாளம் ஆகிய மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றவர்.

தற்போது கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் "சங்கப்புலவர்" எனும் பெருமைமிகு பதவியில் இருக்கும் இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராகிப், பண்டிதராகிப், பட்டதாரியாகி ,ஆசிரியத் தொழில் புரிந்து, கல்விஅமைச்சின் பாடநூல் வெளியீட்டுப் பிரிவுப் பணிப்பாளராயிருந்து ஓய்வு பெற்றவர்.

இவருடைய ஆக்கங்களிற் சிறுகதைத் தொகுதி ஒன்று தமிழ், சிங்கள இனஒற்றுமை இணைப்பை நோக்காகக் கொண்டு 'சேதுபந்தனம்' எனும் பெயருடன் தமிழிலும் "தெமிள கெற்றிகதா" எனும் பெயருடன் சிங்களத்திலும் (1979) இவரே எழுதி வெளியிட்டு தமிழ், சிங்கள அறிஞர்களின் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 'இலக்கிய உறவு' எனும் நூலும் (1996) இவரது ஆக்கங்களில் பல அறிஞர்களாலும் விதந்துரைக்கப்படுகின்றது.

இளமை முதல் சாரணராகவும், பின்சாரணர் ஆசிரியராகவும், பின்சாரணர் ஆணையாளராகவும் இருந்து ஜனாதிபதி விருது பெற்ற இவர், 'சாரணன்' எனும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பல சாரணீய நூல்களின் ஆசிரியராகவும் விளங்குகிறார்.

பழம் பெருந்தமிழ் இலக்கியங்களுடன், நவீன இலக்கியங்களிலும், உலகளாவிய பன்மொழி இலக்கியங்களிலும் திறமை பெற்ற இவர் பல விருதுகளையும், பரிசில்களையும் பெற்றவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

மயிலங்கூடலூர் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் மல்லாகம் பண்டிதர் கழகத்தில் பயின்று பண்டிதர் பட்டம் பெற்றவர். அத்துடன் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் "சைவப்புலவர்" பட்டமும் பெற்றவர்.

ஆசிரியராயிருந்து முதலாந்தர அதிபராகப் பணிபுரிந்து மயிலிட்டி (பேய்க்கோயில் பள்ளிக்கூடத்தை) அ.மி.பாடசாலையை வளர்த்து

மயிலிட்டி வடக்கு கலைமகள்மகாவித்தியால யமாகப் பாரிய வளர்ச்சிகாண வைத்தவர்.

பழந்தமிழ் நூல் பயிற்சியுடன், நவீன இலக்கிய கவிதைத் துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர். இலக்கணசந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் முதலான இலக்கண நூல்களையும், தண்டிகைக் கனகராயன் பள்ளு, பாரதி என்ற சஞ்சிகை, மழலைச் செல்வம் (1963) முதலான பல நூல்களையும் பதிப்பாசிரியராகவிருந்து பதிப்பித்துள்ளார்.

வரலாற்று முக்கியத்துவமுடைய வலி வடக்கின் 'காங்கேசன் கல்வி மலரின்' கௌரவ ஆசிரியர்களில் முதன்மையானவர். 'மாவைக் கவிப்பூங்கொத்து' எனும், மாவை முருகன் மீது இதுவரை காலமும் எழுந்த இலக்கியங்களை அறிமுகம் செய்யும் வரலாற்று ஆவணமான நூலைத் தன் தாயாரின் நினைவாக வெளியிட்ட பெருமைக்குரியவர்.

உலகளாவிய பல சஞ்சிகைகளில் சமய, தமிழ் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிக் கொண்டிருக்கும் இவர் மரபுவழிச் செய்யுள் வகையில் ஒல்லுடைமும்மணிமாலை, கொட்டாஞ் சேனைவரதராசர் இரட்டைமணிமாலை, சதகம் முதலான கவிதை நூல்களையும் - "நற்சிந்தனை நாற்பது" எனும் வானொலி உரைநூலையும் ஆக்கியுள்ளார்.

**புலவர் ம.பார்வதிநாதசிவம்** அவர்கள் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மயிலங் கூடலை வாழ்விடமாகவும் கொண்டவர். குருகவி மகாலிங்கசிவம் அவர்களின் மகனாகிய இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று 'புலவர்' பட்டம் பெற்றவர்.

சங்க இலக்கியங்களில் ஆழமான பயிற்சியுடைய இவர் பத்திரிகையாளராக நீண்ட கால அனுபவத்துடன் பணிபுரிகின்றார். சங்கஇலக்கியங்களையும் நவீன இலக்கியங் களையும் ஒப்பிட்டு ஆய்வுசெய்து கட்டுரை ஆக்கங்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார்.

ஈழநாடு, முரசொலி ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய புலவர் தற்போது உதயன், சஞ்சீவியில் பணியாற்றுகிறார்.

நவீன இலக்கியப் போக்கில் கவிதையில் அமைந்த 'காதலும் கருணையும்' 1972 "இருவேறு உலகம்" 1980, நூல்களும் குறுங்காவியங்களான "இரண்டுவரம் வேண்டும்" 1985 "இன்னும் ஒரு திங்கள்" முதலானவை இரசிகர்களின் பெருவரவேற்பைப் பெற்றவையாகும்.

வசன ரூபத்தில் "நுண்மாண் நுழைபுலம்" 1999 என்ற நூல் வெளிவந்துள்ளது, கையெழுத்துப் பிரதிகளாகப் பல நூல்கள் இருக்கின்றன.

சஞ்சீவியில் வந்தபோது "பசிப்பிணி மருத்துவன்" என்னும் செய்யுள் நடையிலான குறுங்காவியம் இரசிகர்களின் கவனத்தை ஈர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. புற நானூற்றுச் செய்தியைத் தாங்கிவரும் நவீன காவியம் இது. இவரது செய்யுள்நடை மிக இலகுவானதும் சுவையானதுமாகும். உதாரணமாக

"அறமிதென்றும் மறமிதென்றும் எடுத்துக் கூறும்
அற்புதநூல் திருக்குறளும் நமக்குச் சொந்தம்
உறுவிதியின் ஆற்றலினை விளக்கிக் கூறும் உயர்
நூலாம் சிலம்பும் தான் நமக்குச் சொந்தம்"....

இவரது கவிதையில் நகைச்சுவை இழையோடுவதையும், அதேநேரம் ஆழமான கருத்தோட்டம் இருப்பதையும் காணலாம். உதாரணமாக, வைத்தியசாலையில் ஒரு காட்சி,

"நாடியைப்பார்த்தாரில்லை,
நயனத்தைப் பார்த்தாரில்லை.
மாடியைப் பார்த்தவாறே
மருந்தினை எழுதித்தந்தார்.
நாடியைப் பார்த்துத் தந்தால்
நன்றென்றேன் அயலில் நிற்கும்
லேலடியைப் பார்க்க வேண்டும்
'லேற்' இன்னேவோபோ என்றார்."

இக்கவிதை இவரது சமகால நோக்கையும் காட்டுகிறது.

**மயிலங்கூடல் பி.நடராசன்** அவர்கள் சிறந்த திறனாய்வாளர், வெளியீட்டாளர், எழுத்தாளர், வரலாற்று ஆய்வாளர், கவிஞர் எனும் பன்முகத்திறன் வாய்ந்தவர்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "ஈழத்தமிழ் இலக்கியம் (செஞ்சுரிபுக் ஹவுஸ் சென்னை 1987 V XXII) முன்னுரையில்,

"மயிலங்கூடல் நடராசன் போன்றோர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினைத் தெளிவுசெய்யும் ஆக்கங்களை வெளியிட்டுள்ளனர்"........

இவர் 'கைலாயமாலை' (1983) 'வையா' என்னும் நாட்டுவளப்பம் (1993) 'கவிராசரின் கோணேசர் கல்வெட்டு' ஆகிய வரலாற்று நூலகளை அன்பளிப்பு மலர்களாக வெளியிட்டுள்ளார்.

இவர் இனிய கவிஞருமாவார். குழந்தைப் பாடல் இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் தான் பல குழந்தைப் பாடல்களை எழுதியதுடன் "ஈழத்துக் குழந்தைப் பாடல் (தொகுப்பு) 1979, மழலைத் தமிழ்ப்பாக்கள் 1985, ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்"

இலக்கிய வழியின் இனிய நறுமலர் 1972 எனும் நூலும் இவரது வெளியீடாகும்.

மகாஜனக் கல்லூரியின் கலைப்பாரம் பரியத்தில் முகிழ்த்த ஒருமுத்து எனக் கொள்ளப்படும் இவர் ஆரம்பத்தில் விஞ்ஞான ஆசிரியராகவும், பின் கல்விவள நிலைய இயக்குநராகவும் இருந்து பல்வேறு புனை பெயர்களில் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதியுள்ளார்.

ஈழத்துச்சிறுவர் கதைப்பாடல், மழலைத் தேன், கதிரேசன் பாலர் கதைப்பாடல், மழலை இன்சொல், தெய்வ அம்மா, சிறுவருக்கான அறிவியற் பாடல்கள் முதலான பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

### மாவை. பண்டிதர் க.சச்சிதானந்தம்

மிகச் சிறந்த கவிஞர், தமிழறிஞர். ஆங்கிலத்திலும், தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். உளநூல், கல்வி நூல் விற்பன்னர். பண்டிதர், பீ.ஏ.எம்.பில் முதலான பல பட்டங்களைப் பெற்றவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் உபஅதிபாரயிருந்து ஓய்வு பெறறவர் சுவாமி விபுலானந்தர் 'யாழ் நூல்' உருவாக்கிய காலத்தில் அவருடன் இருந்து ஆய்வுகளுக்கும் எழுத்துப்பணிக்கும் உதவிய பெருமைக்குரியவர். கீழைத்தேய, மேலைத்தேய இருவழிக் கல்வியிலும் ஈடுபாடும் புலமையும் மிக்கவர்.

கவிதை, சிறுகதை, நவீனம், காவியம் முதலாம் பல்துறை இலக்கியத்திறன் படைத்த இவரின் நவகவிதைகளின் தொகுப்பாக 'ஆனந்தத் தேன்' என்ற நூல் 1954 இல் வெளி வந்தது.

"சாவில் தமிழ்படித்துச் சாகவேண்டும் என்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்"
என்ற பாடல் வரிகள் மிகவும் பிரபலமானவை.

ஈழத் தமிழர்களின் பெருந்தலைவர்களில் ஒருவரான மாவை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம் அவர்களது வாழ்க்கை வரலாற்றை "தியாக மாமலை" எனும் நூலாக எழுதி 1960ல் வெளிவந்தது. "மாவை முருகன்" எனும் நூல் 1952 இல் வெளிவந்தது.

1998 இல் இவர் 'யாழ்ப்பாண காவியம்' என்ற பெரு நூலை வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாண அரசின் 1450 – 1467 காலப்பகுதியில் யாழ்ப்பாண அரசனாக இருந்த கனக சூரியசிங்கையாரியனை கோட்டை அரசன் ஆறாம் பராக்கிரமபாகு ஆட்சியின்போது அவனுடைய வாரிசான சம்புமால் குமனரையன் வென்று யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி ஆண்டதான வரலாற்றுச் செய்தியும், தமிழ் நாட்டிலிருந்து வந்தபடை விஜயபாகுவை வென்று ஆட்சியைக் கைப்பற்றிய செய்தியும் இதன் கதையம்சமாக அமைந்துள்ளது. இரண்டாயிரம் பாடல்களுக்கு மேற்பட்ட இந்நூலில் பாயிரம் வழங்கிய பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

"வரத்தினால் கவிசொல் மாண்பால் வரகவிஎன்னத்தக்கான்
கருத்தொடு காலங் கண்டு பலன்சொல்லுங் கணிமேதாவி
விருத்தத்தால்யாழ்ப்பாணக்காவியப்பொன்னைவிளைத்தான் வீரன்
தருக்கமும் வல்லான் சச்சிதானந்தன் சகத்தோர் போற்ற"

எனக் கூறுவது இவரது ஆற்றலைக் காட்டுவதாகும்.

இவ்வறிஞரின் நூல்கள் பல அச்சுப்பெறாமல் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளன. அவற்றிற் சில அடுத்து வெளிவரவுள்ளன.

'பருவப் பாலியர் படும்பாடு நாலாயிரத்து முந்நூறு கவிதைகளிலான மகாகாவியம். 1950 முதல் 42 வருட கால இலங்கை வரலாற்றுக் காவியம். செல்வன் என்னும் தமிழ்ச் சிறுவனும் அவன் பள்ளி மாணவரும் பத்துவருட காலத்தில் என்ன பாடுபடுகின்றார்கள் என்பதைக் கருவாகக் கொண்டது. நெஞ்சை உருக்கும் ஒரு கண்ணீர்க் காவியம். இலங்கைக் காடுகள், யாழ்ப்பாணக் கிராமங்கள், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திரிகோணமலை, வவுனியா, கிளாலித்துறைமுகம் என்பவற்றை நிலைக்களமாக கொண்டது.

"மஞ்சு காசினியம்" "இயங்கு தமிழியல்" மொழியியல், தொல்காப்பிய அடிப்படையில் தமிழுக்கோர் பிரயோக இலக்கணம் இன்றைய வழக்கையும் இலக்கண வரம்புக்குள் அடக்குவது.

மரபு இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்களிலும் ஆற்றல் மிக்க இவர் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் பேரறிஞர்களுள் ஒருவர். 'தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம்' இவரது

ஆக்கங்கள் பற்றி "மாவை பண்டிதர் க. சச்சிதானந்தன் இலக்கியப் பணி" எனும் கைநூல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஈழகேசரி மறுமலர்ச்சிக் கால இப்பிரதேச 'புனைகதை ஆசிரியர்' எனப் போற்றப்படும் கவிஞர் க. சச்சிதானந்தன் அவர்களின் 'அன்ன பூரணி', எனும் தொடர்நவீனம் ஈழகேசரியில் (1942.07.12 – 1942.12. 20) தொடர்ந்து வெளிவந்து பல புனைகதை ஆசிரியர்கள் உருவாக முன்னோடியாயிருந்தது.

**கோகிலா மகேந்திரன்**

தெல்லிப்பழை, விழிசிட்டி – கோகிலா மகேந்திரன் அவர்கள் ஒரு முன்னணிப் பெண் எழுத்தாளர் மட்டுமல்ல, சிறந்த கல்வியாளர், உளவியலாளர், கவிஞர், நாடகக் கலைஞர், உளநலவியலாளர், முதலான பன்முகத் திறமை படைத்தவர். விஞ்ஞான ஆசிரியராயிருந்து, அதிபராகித் தற்போது கல்வி நிர்வாக சேவையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருக்கிறார்.

இவரைப்பற்றி பேராசியர் சு.வித்தியானந்தன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையிலே கோகிலா அவர்கள், தனக்கெனத் தனிப் பண்புகளுடன் வேறுபட்டுத் திகழ்வதை அவரது படைப்புகள் எமக்குப் புலப்படுத்துகின்றன...... நோய் தீர்க்கும் மருத்துவர் ஒருவர் நோயாளியைப் பகுப்பாய்வு செய்து நோயின் மூலத்தை இனங்காண முயல்வது போலக் கோகிலா அவர்கள் சமூக நோய்களுக்கான காரணிகளை உளவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்பவராக அமைகிறார்"

(தூவானம் கவனம், பின்னிணைப்பு பக்-151) தலையாய விமர்சகரான பேராசிரியர் கா. சிவத்தம்பி கோகிலா மகேந்திரனை மிகவும் போற்றி மதிப்பீடு செய்கிறார்.

"இப்பத்தாண்டு காலத்தில் (1978 – 1987) புனைகதைத் துறையில்..... பெண் எழுத்தாளர்களுள் முக்கிய இடம் பெறும் கோகிலா மகேந்திரனும் முதன்மை இடத்தைப் பெறுவார்." (ஈழத்தமிழ் இலக்கியம் 2 ஆம் பதிப்பு 1987 பக் XXII)

இவர் இதுவரை பல சிறுகதைத் தொகுதிகளையும் நவீனங்களையும் கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். மனித சொருபங்கள்- 1982 முரண்பாடுகளின் அறுவடை- 1984 துயிலும் ஒரு நாள் கலையும்- 1986, தூவனம் கவனம்- 1988, கிரேக்கத்தின் தொல்சீர்அரங்கு- 1997, தங்கத் தலைமை – 2000, எங்கே நிம்மதி – 2000 முதலான பல நூல்களை வெளியிட்டுள்ள இவர் மும்முறை சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றுள்ளார்.

நவீன நாடகத் துறையில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். பல அரங்கக் கலைஞர்களை உருவாக்கியுள்ளார். பெண்ணி லை எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவும் திகழ்கிறார்.

***மங்களநாயகம் தம்பையா***

எழுத்துலகில் ஆண்களும் பெண்களும் எழுதுகின்ற போதிலும்,பெண்களில் ஒரு சிலரே எழுத்துத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். இது வலிகாமம் வடக்கிற்கும் பொருந்துவதாகும்.

ஈழத்தின் முதற் பெண் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மங்கள நாயகம் தம்பையா அவர்கள். இவர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புகழ்பெற்று விளங்கினார். பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

"இக் காலகட்டத்திலே இலங்கையிற் தமிழ் நாவல் இலக்கியம் நிலைபேறுடைய இலக்கியமாக வளரத் தொடங்கும் உண்மையையும் நாம் இங்கு அவதானிக்க வேண்டும். மங்களநாயகம் தம்பையாவின் "நொறுங்குண்ட இதயம்" (1914)ம. வே. திருஞானசம்பந்தபிள்ளையின் "காசிநாதன் நேசமலர்"(1924) "கோபால நேசரத்தினம்" (1928) முதலியன முக்கியமானவையாகும்."

(ஈழத்தில் தமிழ் இலக்கியம் 1978. ப36)

மங்கள நாயகம் தம்பையா "நொறுங்குண்ட இருதயம்" "அரிய மலர்" ஆகிய இரு நாவல்களையும் "அநுபவக் களஞ்சியம்" என்ற கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். இவரது கணவர் அப்புக்காத்து, பெரிய படிப்பாளி, ஐசாக் தம்பையா இக் கட்டுரை நூலை "ரேஸ்ட் அன் சீ" என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். (1922) மங்கள நாயகம் தம்பையா தெல்லிப்பழை ரீ. டபிள்யூ.பி குமாரகுல சிங்க முதலியாரின் (1826 – 1883) கனிஷ்ட புதல்வியாவர். முதலியார் "பதிவிரதை விலாசம்" எனும் நாடக நூலாசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (1909)

"ஈழத்துத் தமிழ் மக்களது சமுதாயப் பிரச்சனைகளை பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட

முதல் நாவல் என்ற சிறப்பு திருமதி மங்கள நாயகம் தம்பையாவின் "நொறுங்குண்ட இருதயம்" (1914) நாவலையே சாரும்.-பேராசிரியர். நா. சுப்பிரமணியம் (ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் 1978)

"சமுதாய சீர்திருத்தக் காலம் என்ற காலகட்டத்தின் முதல்வராக அமைவது இவரின் நாவல்களின் பெருமையாகும்.

**பாவலர் துரையப்பாபிள்ளை**

பாவலர் துரையப்பாபிள்ளை தெல்லிப் பழையில் சைவ சமயியாகப் பிறந்தவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றபோது கிறீஸ்தவரானவர், 1910இல் மீண்டும் சைவரானவர். இன்றைய யூனியன் கல்லூரியின் முன்னோடிப் பாடசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய பின் 1910 மகாஜனா உயர் நிலைப்பள்ளி என்ற பாடசாலையை நிறுவி அதன் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்தார். இதுவே இன்று புகழ் பூத்த மகாஜனக் கல்லூரியாகத் திகழ்கிறது.

"பாவலர் ஈழம் பெற்றெடுத்த புதுமைத் தமிழ்க்கவிஞர்களுள் ஒருவர். தலையாயவர். அவரது புகழை எமது நாடு இன்னும் பூரணமாக அறியவில்லை. அறியும் போது தேசியக் கவிஞர் வரிசையில் முதலிடம் பெறுவர் என்பதில் ஐயமில்லை."

(தினகரன் 24 – 06 – 1970)

கலாநிதி செ. வேலாயுதபிள்ளை அவர்கள் தனது ஒப்பியல் ஆய்வில் "பாரதி தமிழ் நாடு தந்த செல்வம், அந்தப் பாரதியைப் போலவே கவிதை உள்ளம் படைத்த ஒருவர் நமது ஈழநாட்டிலே யாழ்ப்பாணத்திலே ஏறத்தாழ ஒரே காலப்பகுதியில் விளங்கினார். அவர் தான் பாவலர் துரையப்பாபிள்ளை. இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னே பிள்ளை அவர்களின் பதங்களும், கீர்த்தனைகளும், கும்மிகளும், பிற பாடல்களும், யாழ்ப்பாணத்திலே பிரசித்தி பெற்றிருந்தன.... அவரது கன்னிப்படைப்பான "இதோபதேச கீதரசமஞ்சரி" என்னும் நூல் 1901 ஆம் ஆண்டில் வெளி வந்தது.... பாரதியாரின் முதற் கவிதையாகிய "தனிமை இரக்கம்"1903 –04இல் வெளிவந்தது. இதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே துரையப்பாபிள்ளையின் கீதரசமஞ்சரி வெளி வந்துவிட்டது.

(பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர் மகாஜனாக் கல்லூரி 1972 பக் 65)

பாவலர், சிவமணி மாலை, யாழ்ப்பாண சுதேசக் கும்மி, எங்கள் தேசநிலை என்பவற்றுடன் பல தனிப்பாடல்களையும் பாடினார். 1960 ஆம் ஆண்டு மேற்கூறப்பட்ட அவரின் ஆக்கங்கள் அனைத்தினதும் தொகுப்பாக "சிந்தனைச் சோலை" எனத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பொன்விழா நினைவாக ஜவெளியிட்ப் பட்டது.

இவரால் நிறுவப்பட்ட தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி இப் பிரதேசத்திற்கு எண்ணிலா அறிஞர்களைத் தந்து தலைநிமிர்ந்து நிற்கின்றது.

**குருகவி ம. வே. மகாலிங்கசிவம்**

மாவிட்டபுரத்தை சேர்ந்த ம. வே மகாலிங்கசிவம் அவர்கள் சிறந்த தமிழறிஞர். செய்யுள் யாப்பதில் வல்லவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். அக்காலத்தில் விழா மலர்களிலும், இதழ் மலர்களிலும், பாராட்டு விழாக்களிலும் இவரது பாடல்கள் சிறப்பாக இடம் பெற்றன. இவரைக் "குருகவி" என அறிஞர்கள் அழைப்பர். 'கற்பனைச் சுரங்கம்' எனப் போற்றப்பட்டவர்.

தமிழகத்திற் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராக இருந்தவரும், ஈழத்தமிழர்களின் வரலாறு கூறும் "ஈழ மண்டல சதகம்" எனும் நூலின் ஆசிரியரும் புகழ்பெற்ற உரையாசிரியருமான மட்டுவில் ம.க.வேற்பிள்ளை அவர்களின் புதல்வர் இவர்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இவரைப் பற்றித் தன் "இலக்கிய வழி"(1994 பக்கம் 91) நூலில் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"கவிசமயம் என்று ஒரு சமயஞ் சொல்லுவார்கள். அந்தச் சமயம் சைவசமயம் முதலிய சமய வகைகளைச் சேராதது. கவிஞன் ஒருவன் ஓர் உணர்ச்சி கைவந்த பிறகு அதன் பரிபக்குவ பருவம் நோக்கி, நன்றாகக் கனிந்துவிட்டது என்று கண்ட பொழுது, ஏற்ற சந்தர்ப்பங்கள், பாத்திரங்களை நாடி அதனை இன்னும் இன்னும் பொறாது, பொறுக்க முடியாது, கருவுயிர்த்தற்கு சொல்லுருவத்திற் கண்டு களித்தற்கு முகஞ் செய்கின்றான். அம் முகத்திற்குக் கவிச்சமயம் என்று பெயர் வைத்துக் கொள்வோம். அப்படி ஒரு சமயம் மகாலிங்க சிவத்திற்கு இல்லை. எந்தச் சமயமும் அந்த கவிஞருக்குக் கவிசமயமே. இருடி கருப்பத்திற்கு "இனி" என்ற வார்த்தையில்லை. மகாலிங்க சிவத்திற்கும் பிறகு என்ற பேச்சில்லை."

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர் ஒருவர் படிப்பிப்பதற்கு ஒரு பாடல் எழுதித் தரும்படி கேட்டார். உடனே அவர் சொன்ன பாடல் இது.

"மங்கையிவள் செல்லும் வழியில்
நறுந்தருக்கள் நிழல் செய்து
மலிக மற்றும் பொங்கு மணல்
தாமரையின் பொலன் தாது
போற் பொலிக, புனித வாவி
எங்கு மலர்ந்திலங்கிடுக
மந்தமாருதம் வீச இனிய
தோகை யுங்குயிலும்
துணையாக அறு தொடர்க்கண்
உகரம் போல் உறுக தூரம்."

எளிமையும் ஆழமும் மிக்க இப்பாடல் அவர் கவிசமயத்துக்குச் சான்று பகரும், பழநிக்குமரன் மீது நூல் யாத்துள்ளார்.

**பேராசிரியர் சு. வித்தியானந்தன்**

கற்பித்தலை நோக்கமாகக் கொண்ட அனைவரும் அறிஞர்கள் ஆவர். எனினும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தொடர்ந்து புதிது புதிதாக ஆராய்ந்து கற்கும் அறிஞராவர். இவர்கள் கலைமாணி (B.A) கலை முதல்வர் (M.A) கலாநிதி (Ph. D)ஆகிய பட்டங்களைப் பெற்று பெருமதிப்போடு விளங்குவர். வலிகாமம் வடக்கைப் பிறப்பிடமாகவோஅல்லது புகுந்த இடமாகவோ கொண்ட பலர் பல்கலைக்கழக அறிஞராக விளங்கினர்; விளங்குகின்றனர். பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், ஆ. சதாசிவம், சு. சுசீந்திரராசா, நா.சுப்பிரமணியன், விரிவுரையாளரான நா. சண்முகலிங்கன், கனகசபாபதி நாகேஸ்வரன் முதலிய அறிஞர் பல்கலைக் கழக அறிஞராவர்.

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேரறிஞர் சுப்பிரமணியம் வித்தியானந்தன். சட்டத்தரணி சுப்பிர- மணியத்தின் புதல்வராவர். சட்டத்தரணி சுப்பிரமணியம் கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்டு மாவிட்டபுரத்தில் வீமன்காமம் மகாவித்தியாலயத்தை நிறுவினார். பேராசிரியர் வித்தியானந்தன், முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம் ஆகிய பேரறிஞர்களிடம் பல்கலைக் கழகத்தில் பயிலும் பெருவாய்ப்பைப் பெற்றார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை யிடமிருந்தே பேராசிரியர் சு.வி. ஆராய்ச்சித் திறமை, கலை ஈடுபாடு, கற்பிக்கும் ஆற்றல் என்பவற்றைப் பெற்றார். கலை முதல்வர் பட்டம் பெற்றதும் பல்கலைக் கழகத்தில் இவருக்கு உதவி விரிவுரையாளர் பதவி கிடைத்தது.

1948 இல் லண்டன் பல்கலைக்கழகத் தில் கலாநிதிப் பட்டப் பயில்வுக்குச் சென்று பட்டம் பெற்றார். இலண்டன் அறிஞர்களான அல்பிறட் மாஸ்ரர், தி.செ. பிலிப்ஸ், ரி.பறோ ஆகியோர் அவரது கலாநிதி ஆய்வை நெறிப்படுத்தினர். "பத்துப்பாட்டு வரலாறு, சமூகவியல் மொழியியல் நோக்கு" என்னும் பொருளில் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டு 1950 இல் பட்டம் பெற்றார். ஆங்கிலத்தில் அமைந்த இந்தக் கட்டுரையை தமிழில் **தமிழர் சால்பு** என்ற அரிய நூலாக வெளியிட்டார். (1954) இந்த நூல் தமிழக பேரறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இப்பட்டத்தினாலும் சிறந்த கற்பித்தலாலும் தொடர்ந்த ஆய்வுகளாலும் இரண்டாந்தர விரிவுரையாளர் (1950), முதலாந்தர விரிவுரையாளர் (1956) ஆராய்ச்சித் துறைத் தலைவர்(1963), பேராசிரியர்(1970) ஆகிய பதவியுயர்வுகள் கிடைத்துப் பெருமை பெற்றார்.

1977 இல் யாழ்ப்பாண வளாகத் தலைவர் பதவி பெற்றார். 1979 இல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் உருவாகிய போது அதன் முதலாவது துணைவேந்தராகப் பெரும் பதவியுயர்வு பெற்றார். இப்பதவிகளைப் பெற்றபோதும் பேராசிரியர் தமிழ் பயிற்றும் பணியை விடவில்லை, மிகச்சிறந்த தமிழறிஞர்களை உருவாக்கும் பணியை அவர் தொடர்ந்து மேற்கொண்டார்.

தமிழ்த் துறையிற் தலைமை தாங்கிய பேராசிரியர், கலைத்துறையிலும் பேரார்வம் உடையவராக விளங்கினார். ஈழம் முழுவதும் பரந்துவிளங்கிய மரபுவழித் தமிழ்க் கூத்தை (நாடகம்) நவீன நாடகம் போலக் குறுகிய காலத்தில் நடத்திப் பேராதரவு பெறச் செய்தார். இக்கலைக்குப் பேராசிரியர் கொடுத்த ஆதரவை அவருடைய சிறந்த மாணவர்களுள் ஒருவரும் நாடக ஆசிரியருமான திரு. த.சண்முகசுந்தரம் பின்வருமாறு விளக்குகின்றார்.

"பழமைவாதிகள் விடிய விடிய நடத்தும் கூத்தைச் சுருக்கிக் காலத்திற்கு ஏற்றபடி மரபு கெடாமல் களரி ஏற்றி வந்தார் வித்தியானந்தன். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கூத்துக் கலை கைதேர்ந்த மாணவர் பலரும் இருந்தனர். இந்த மாணவர்களைக் கொண்டு கர்ணன்போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை ஆகிய நாடகங்களை முதலில் அரங்கேற்றியவர் பேராசிரியர் வித்தியானந்தன். பின்னர் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், தெல்லிப்பழை ஆகிய இடங்களிலும் அரங்கேற்றினார். தமிழ் நாடக வளர்ச்சியிலே வித்தியானந்தனின் முயற்சி புதியதொரு யுகத்தை உண்டாக்கியது......"

வடமோடி, தென்மோடித் கூத்துடன வித்தியானந்தன் நிற்கவில்லை. இக்கலை பற்றிய

ஆராய்ச்சி அரங்குகளை இவர் ஈழத்தின் பல பகுதிகளிலும் நடத்தினார்; கட்டுரைகளை எழுதினார். கூத்துக் கலை பற்றிய ஆய்வு பலவற்றிற்கும் பேராசிரியர் வழிகாட்டியாக நின்றார். கொட்டகைக் கூத்து வடிவங்களுக்கும் இவர் புத்துயிர் கொடுக்க உதவினார்.

கலைமகிழ்நன், மணிவிழாக்கழகம் தெல்லிபழை மே, 1984. பக் 21-22

பேராசிரியர் அண்ணாவிமாரைக் கௌரவிக்கும் மகா நாடுகளையும் நடத்தினார். கலையில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட பேராசிரியர் சு.வி. "கலை மகிழ்நன்" என்ற புனை பெயரில் மறைந்து நின்று பல கட்டுரைகளைப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதினார்.

இவருடைய அறிவாற்றலையும் கலைத் திறமையையும் அறிந்த கலை நிறுவனங்கள் இவரை உறுப்பினராக்கியும், தலைமைப் பதவியை வழங்கியும் இவரது செயலாற்றலைப் பயன்படுத்திக் கொண்டன.

1. இலங்கைக் கலைக் கழக நாடகக் குழு
2. இலங்கை சாகித்திய மண்டலம்
3. இலங்கைத் தேசிய நாடக நூற்கட்டளை நிறுவனம்
4. ஐ.நா.கல்வி, விஞ்ஞான,கலை நிறுவனத்தின் இலங்கைக் கிளை

மேலே குறிப்பிட்ட கலைப்பணிகளை இந்நிறுவனங்கள் மூலம் பேராசிரியர் சிறப்பாக ஆற்றினார். கலைக்கழக நாடகக் குழு மூலம் நாடகப் பிரதியாக்கப் போட்டிகளையும், நாடகப் போட்டிகளையும் நடத்தினார். நாடகப் பிரதியாக்கப் போட்டியில் முதல் பரிசு பெற்ற பிரதிகளை நூல்களாக வெளியிட்டும் உதவினார். பாடசாலைகளிடையே நாடகப் போட்டிகளை நடத்தினார். இப்போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து முதற் பரிசு பெற்றுச் சாதனையை நிகழ்த்தியது. நாடக நூற்கட்டளை நிறுவனத்தின் மூலம் (1962) அலங்கார ரூபன் நாடகம், எண்டிறிக் எம்பரதோர் நாடகம் (1964) முதலிய பல மரபு வழிக் கூத்துக்களை புதுப்பித்து வெளியிட ஏற்பாடு செய்தார். நாடகக் கலையை மட்டுமன்றி கரகம், காவடி, புரவி ஆட்டம், வசந்தன், கப்பற்பாட்டு முதலிய கலை விழாக்கள் 1969 ஆம் ஆண்டு வரையான சில ஆண்டுகள் ஒழுங்காக நடைபெற ஏற்பாடு செய்து, அவை மக்கள் மத்தியில் நிலைபெற வழிவகுத்தார்.

பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்க வளர்ச்சிக்குத் துணைபுரிந்த பேராசிரியர் சு.வி. பின்னர் பல்வேறு கலைநிறுவனங்களூடாகப் பணிபுரிந்தமையை மேலே கண்டோம். இவற்றை விட மேலானது இவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஆற்றிய பணியாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய பெருமை வண. தனிநாயகம் அடிகளைச்சாரும். அவருடன் சேர்ந்து பேராசிரியரும் பணியாற்றினார். இலங்கையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் தலைவராகப் பதவி வகித்தார். கோலாலம்பூர், சென்னை, யாழ்ப்பாணம், பாரிஸ், மதுரை ஆகிய இடங்களில் உலகளாவிய நிலையில் மகாநாடுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் 1974ல் இம் மகாநாடு நடைபெற்றது.

பேராசிரியர் வித்தியானந்தன் கலையும் பண்பும், தமிழியற் சிந்தனை ஆகிய நூல்களை வெளியிட்டார். இவை இவரது பேரறிவையும் ஆராய்ச்சித்திறனையும் வெளிப்படுத்துவனவாகும். "வித்தியானந்தம்" (1984)> "துணைவேந்தர் வித்தி", "அரங்குகண்டதுணைவேந்தர்" "கலைமகிழ்நன்" முதலான நூல்கள் அவரைப் பற்றி எழுந்துள்ளன.

**பேராசிரியர் ஆ. சதாசிவம்**

அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சதாசிவம் மாவிட்டபுரத்தில் திருமணம் புரிந்து கொண்டார். எனவே அவருக்கு வலிகாமம் வடக்கும் வாழிடமாக அமைந்தது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையிலே 1947 இல் சித்தியெய்தினார். இதே ஆண்டில் மதுரைத் தமிழ் பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். 1948 – 1952 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்று சிறப்புக் கலைமாணி முதற்பிரிவில் சித்தியெய்தினார். 1952 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் துணைஜவிரிவுரை யாளாரானார். அங்கு 1954 இல் கலைமுதல்வர்(M.A) பட்டம் பெற்றார். 1954 – 1956 இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பயின்று கலாநிதிப் பட்டம் பெற்றார். 1956 முதல் 1965 வரை பேராதனையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் 1965 முதல் 1980 வரை கொழும்புப் பல்கலைக் கழகத்தில் விரிவுரை- யாளராகவும், தலைவராகவும், பேராசிரியராகவும் பதவி வகித்தார். 1981 முதல் 1988 இல் அமரராகும்வரை பேராதனையில் பேராசிரியராகப் பதவி வகித்தார். இவர் மொழியியலில் தீவிர ஆய்வாளராக விளங்கியதால் உலகின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் புலமைப் பரிசில் பெற்றார்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம், இலத்தீன், சமஸ்கிருதம், மலையாளம், பாளி, தெலுங்கு, கன்னடம், ஜேர்மன் முதலிய மொழிகளிற் புலமை

சான்றவராக விளங்கினார். ஞானப்பிரகாச அடிகளாரின் பின், பன்மொழிப் புலமையில் தலையாயவராக விளங்கியவர் இவரே. சுமேரிய மொழியையும், திராவிட மொழியையும் ஒப்பியல் முறையில் ஆராய்ந்து சுமேரிய மொழியையும் திராவிட மொழி என நிறுவினார்.

பேராசிரியராக இருக்கையில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் விளங்கினார். எனவே மரபு வழியில் தமிழ் மொழியைக் கையாள வேண்டுமென்று உரத்து உரைத்தார். பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை இவரது இந்த நெறியைப் பின்வருமாறு விளக்குகிறார்.

"பேராசிரியர் சதாசிவம் பல்கலைக்கழகம் புகுவதற்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதராகிவிட்டார். பண்டிதர் பயிற்சி அவருடைய ஆளுமையிலே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. பழமையிலும் சமய இலக்கியங்களிலும் அவருக்கு ஆழமான பற்று இருந்தது. சைவத்திற்கும் சைவசித்தாந்ததிற்கும் நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் அவர் குரல் கொடுக்கத் தயங்கியதில்லை. அறுபதுகளிலே தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் என்போர் இக்காலத் தமிழ் எழுத்திலே மரபு எந்த அளவுக்குப் பேணப்பட வேண்டுமென்பதை விவாதப் பொருளாக்கும் போது பழைய மரபு பேணப்பட வேண்டுமென்ற கட்சிக்குப் பேராசிரியரே தலைமை தாங்கினார்."

– பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம்
அவர்களின் நினைவுமலர்
கொழும்பு 31.7.1988 பக் 1-2

1960 களிலே "மரபுத் தமிழா? பேச்சுத் தமிழா? என்ற போர் ஈழத்தில் நிகழ்ந்தது. பேச்சுத் தமிழ் என்பதன் தலைவர்களாகப் பேராசிரியர்கள் கைலாசபதியும், சிவத்தம்பியும் விளங்கினர். மரபுத் தமிழ் என்பதன் தலைவர்களாகப் பேராசிரியர் சதாசிவமும் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையும் விளங்கினர். இந்தப் போராட்டத்தில் சதாசிவம் அவர்களின் நிலைப்பாட்டின் விளைவுயாது எனப் பேராசிரியர் சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். (மேலது ப. 10)"

"பேராசிரியர் சதாசிவம் அவர்களின் மிகப்பெரிய சான்றாக அமையப் போவது மொழி அறிவின் பேராசிரியர்கள் பறோ, எமனோவினால் தொகுக்கப் பெற்ற Dravidian Etymological Dictionary (திராவிட சொற்பிதிர் வழி அகராதி) யில் வரும் முன்னுரைக் குறிப்பாகும். உலகப் பிரசித்தியடைந்துள்ள இவ்வகராதியின் தொகுப்புக்கு பயன்படுத்தப்பட்ட தமிழுக்கான ஆய்வுச் சான்றுகளில் ஒன்று பேராசிரியர் சதாசிவத்தின் கலாநிதிப்பட்ட ஆய்வான The structure of the Tamil verb... ஆகும்."

கருத்துரைக் கோவை (1959), ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை (1963) என்னும் இரு நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். போர்த்துக்கேயர் காலத்தில் ஈழத்தில் கிறிஸ்தவ மதம் பரவியது. கதிரமலைப் பள்ளு முதலிய தமிழ்ப் பள்ளுகளின் வழியில் கிறிஸ்தவ அறிஞர் ஒருவர் புலமை நலத்துடன் ஞானப்பள்ளு (1963) என்ற நூலை எழுதினார். இந்நூலைப் பேராசிரியர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். சுமேரிய மொழி திராவிட மொழி என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவியது. இதனை மேலும் விரிவாக ஆராய்ந்து சுமேரிய மொழி ஒரு திராவிட மொழி (Sumerian A Dravidian Language) என்ற ஆங்கில நூலை 1965 இல் வெளியிட்டார்.

சங்க காலம் முதல் சமகாலம் வரை பல புலவர்கள் ஈழத்தில் மரபு வழிச் செய்யுள் இலக்கியங்களைப் படைத்தனர். இவை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிவதற்கும் உருவாக்குவதற்கும் இவ்விலக்கியங்களைத் தொகுத்துப் பதிப்பது மிகவும் இன்றியமையாதது. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1966) என்ற நூலைத் தொகுத்து வெளியிடும் பொறுப்பை இலங்கைச் சாகித்திய மண்டலம் இவரிடம் கொடுத்தது. "இந்நூல் ஈழத்துத் தமிழ்ச் செய்யுட் பாரம்பரியத்தினை விளங்கிக் கொள்ள உதவும்" எனப் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார். (மேலது ப. 10) இவர் "தமிழ் மொழி வரலாறு தொகுதி I" என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். பேராசிரியர் சதாசிவம் வெளியிடுவதற்கு ஏற்றதாகச் சில நூல்களைத் தட்டச்சு வடிவில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள் அகராதி I – V (1973) தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி (1986), சுமேரிய திராவிட மொழிகளின் சொல்லிலக்கணத் தொடர்பு (1988) ஆகிய மூன்று நூல்களையும் அச்சில் வெளியிட்டால் இவரது பெருமை வெளிப்படும்.

வண. ஞானப்பிரகாசம் அடிகளார், வணதாவீது அடிகளார் போன்ற மொழியியற் பேரறிஞர்கள் போலப் பேராசிரியர் சதாவசிவமும் ஈழத்தின் மொழியியற் பேரறிஞராக விளங்கினார்.

**பேராசிரியாஇ சு. சுசீந்திரராசா**

பேராசிரியர் சு. சுசீந்திரராசா மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருநெல்வேலி

சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நீண்ட காலம் அதிபராக இருந்த அறிஞர் சுவாமிநாதனின் புதல்வர் ஆவார். தமிழ் நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம் புகழ் பெற்றது. அதில் தமிழ்த்துறையைத் தொடங்கி முதற் பேராசிரியராக விளங்கியவர் விபுலாநந்த அடிகளாவார். மொழியியல் அறிஞராக விளங்கிய சுசீந்திரராசா அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக விளங்கினார். பின் ஈழத்திலுள்ள கொழும்புப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் கற்பித்தார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மொழியியல் துறையிற் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பல ஆண்டுகள் விளங்கினார்.

ஓராண்டு இங்கிலாந்தில் எடின்பரோ பல்கலைக் கழகத்தில் உயர் ஆய்வு செய்து உலகளாவிய நிலையில் மொழியியல் அறிஞர்களின் தொடர்பையும் மதிப்பையும் பெற்றார். அமெரிக்காவிலுள்ள மொழியியற் பேராசிரியர் ஜேம்ஸ் கெயர், கொல்கேற் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோன் றொஜ் காட்டர், எடின்பரோ பல்கலைக் கழகத்தின் மொழியியல் பேராசிரியர் ஆர். ஈ. ஆஷா, ரஷ்ய நாட்டு மொழியியல் பேராசிரியர் அந்திரநோவ் முதலியோரின் பெரும் மதிப்பைப் பெற்றார்.

தமிழ் நாட்டுப் பேராசிரியர்களான தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், மு.வரதராசன் ஆகியோரின் பெருமதிப்பையும் பெற்றார். தமிழக மொழியியல் அறிஞர் முத்து சண்முகம், ஈழத்து தமிழ் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழகத் தமிழரின் தொடர்பை இழந்து தூய தமிழ் மொழியாக நிலை பேறடைந்தது" என்று கூறினார். இக் கட்டுரையில் யாழ்ப்பாணத் தமிழ் ஆய்வுக்கு வேண்டிய துணையைப் பேராசிரியர் சுசீந்திரராசா வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். இது சுசீந்திரராசாவின் மொழியியல் ஆய்வின் சிறப்புக்குச் சான்றாகும்.

பேராசிரியர் சுசீந்திரராசா பல ஆய்வு நூல்களையும், கட்டுரைகளையும் தனித்தும் புகழ்வாய்ந்த அறிஞர் சிலருடன் இணைந்தும் ஆக்கியுள்ளார்.

பேராசிரியர் சுசீந்திரராசாவின் பெயர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இதுவரை வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாற்று அகராதிகள் சிலவற்றிலும் இடம் பெற்றுள்ளமை அவரது சர்வதேசப் புகழுக்குச் சான்றாகும்.

"இங்கிலாந்தில் கேம்பிறிஜ்ஜில் உள்ள அகில உலக அறிஞர் வாழ்க்கை வரலாற்று நடுமையம் இந்த ஆண்டு (2000) இறுதியில் வெளியிட உள்ள இருபதாம் நூற்றாண்டில் புகழ்பெற்ற 2000 அறிஞர்கள் என்னும் நூலில் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்தில் மொழியி யல் பேராசிரியராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்றுள்ள பேராசிரியர் சுவாமிநாதன் சுசீந்திரராசாவின் பெயரும் இடம் பெறவுள்ளது."

- உதயன் 4. 3. 2000 ப. 9

மொழியியற் துறையில் புகழ்பெற்ற ஆய்வாளராக விளங்கிய சுசீந்திரராசா அவர்கள் சைவசித்தாந்தத் துறையிலும் ஈடுபாடு உடையவராக விளங்குகிறார். பண்டிதமணி கலாநிதி சி.கணபதிப்பிள்ளை சிறந்த சைவ தமிழ்ப் பேரறிஞர் அவருடைய குருநாதர் அளவெட்டி பொ. கைலாசபதி பண்டிதமணி அவரிடம் தாம் சைவசித்தாந்தத்தைப்பயின்றமை பற்றி விரிவாக எழுதியுள்ளார். எனினும், சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி பற்றி யாரும் ஆராயவோ, எழுதவோ இல்லை. பேராசிரியர் சுசீந்ரராசாவின் தந்தையார் சுவாமிநாதன் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபராக இருந்த காலத்தில் பொ. கைலாசபதி துணை அதிபராக இருந்தார். பண்டிதமணி பேராசிரியாரகப் பணியாற்றினார். பண்டிதமணி சிந்தனைச் செல்வரிடம் ஒழுங்காகச் சைவசித்தாந்தம் பற்றிப் பயின்றார். பயின்றபோது அவருடைய கருத்துக்களை உடனுக்குடன் எழுதிக் கொண்டார். அவர் எழுதிய குறிப்புக்களைச் சிலர் பெற்றுப் பிரதிசெய்து வைத்திருந்தனர். பண்டிதமணி அமரரான பின் இக் குறிப்பேடுகளை வைத்திருந்தவர்களிடம் பெற்று தொகுத்துவெளியிட்ட பெருமை பதிப்பாசிரியர்களான திருவாளர் சுசீந்திரராசா ஆ. சபாரத்தினம் ஆகியோருக்கு உரியதாகும். இவர்கள் இருவரும் 1994 இல் "பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்" என்ற நூலாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டனர். 2002 ஆம் ஆண்டு சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதியின் நூற்றாண்டு விழா ஆகும். அதனை விரிவாகக் கொண்டாடு வதற்கான நூலாக இது அமைந்தது.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம்பெற்ற பண்டிதர்,கலைமாணி மு.கந்தையா அவர்களின் மூலமாக பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் என்ற ஆய்வு நூலை விரிவாக எழுதி "கைலாசபதி ஸ்மிருதி" என்னும் பெயரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூலம் வெளியிட்டார். 1999இல் வெளிவந்த இந்நூல் நூற்றாண்டு விழாவுக்கான இன்னொரு உந்துசக்தியாக அமைந்துள்ளது. பேராசிரியர் சு.சுசீந்திரராசா, திரு. ஆ.சபாரத்தினம் ஆகிய

இருவருடைய பெரும் பணியே சிந்தனைச் செல்வர் பற்றிய ஆய்வுக்கு மூலமாக அமைந்துள்ளது. பேராசிரியர் சுசீந்திரராசா இளமைக்காலம் முதலே கைலாசபதியின் பெருமையைத் தந்தையார் மூலம் அறிந்துள்ளார் என்பதை,

"சைவாசிரிய கலாசாலையில் நீண்ட காலம் (1929 – 1951) அதிபராக இருந்த மயிலிட்டி எஸ். சுவாமிநாதன் அவர்கள் கைலாசபதி அவர்கள் பற்றிப் பேசும்போதெல்லாம் அவரை 'நல்ல ஒரு விவேகி" எனக் குறிப்பிடுவதுண்டு. இவ்வாறு கூறுவதை நான் இளமையிலேயே கேட்டுள்ளேன்."

-பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனை முன்னுரை என்ற கூற்றின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது அதன் விளைவே அண்மைக் காலத்தில் அவர் மேற்கொண்ட ஆய்வுகளுக்கும் பணிகளுக்கும் மூலமாக அமைந்தது.

**பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர்**

பல்கலைக் கழக ஆசிரியர்களுள் ஒருவராக விளங்குபவர் பேராசிரியர் நாகராஜ ஐயர் சுப்பிரமணியம். இவர் 25.12.1942 இல் முல்லைத்தீவைச் சேர்ந்த முள்ளியவளைக் கிராமத்திற் பிறந்தார். திருமணத்தின் மூலம் தெல்லிப்பழை இவரது புகுந்த இடமாக உள்ளது.

இவரது குடும்பமும் இளமைக் கால வாழ்வும் கோயில் சார்ந்தனவாக அமைந்தன. இதனால் புராணபடனம், பாராயணம் இவரைப் புராணங்களிலும் திருமுறைகளிலும் ஆட்சி உடையவராக்கின. இதனாற் சைவசித்தாந்த சாத்திரங்கள், பகவத்கீதை, திருக்குறள் முதலியவற்றிலும் புலமைமிக்கவராக விளங்குகிறார். சோதிடக் கலையிலும் இவர் வல்லவராக விளங்குவதோடு சோதிட மன்றத்தின் தலைவராகவும் விளங்குகிறார். இளமையில் மரபு நிலைப்பட்ட அறிவுத் துறைகளில் ஈடுபட்டவராயிருந்த போதிலும் அவருக்கேயுரிய புதுமை நாட்டம் நாவல், சிறுகதை முதலான நவீன துறைகளிலும் ஈடுபட வைத்தது. இவற்றால் அவர் பன்முக ஆளுமையுடையவராக விளங்குகிறார்.

கொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகங்களில் பயின்று 1969இல் தமிழில் சிறப்புக் கலைமாணிப்பட்டம் பெற்றார்.

1970 ம் ஆண்டு தொடக்கம் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராகப் பதவி பெற்றார். அக்காலத்தில் "ஈழத்துத் தமிழ் நாவல்கள்" என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வுக்காக கலைமுதல்வர் (எம்.ஏ) பட்டம் பெற்றார். இவ்வாய்வேடு ஈழத்துத் தமிழ் நாவல் என்ற பெயரில் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் 1979 இல் வெளியிடப்பட்டது."

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் குறிஞ்சிக் குமரன் மீது 'ஆற்றுப்படை பாடி தங்கப்பதக்கப் பரிசில் பெற்றார். இது கவிதைத் துறையில் இவர் கொண்டுள்ள ஈடுபாட்டிற்குச் சான்றாகும். 1985 இல் "தமிழ் யாப்பு வளர்ச்சி" என்ற ஆய்வேட்டைச் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில் சமர்ப்பித்துக் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

1978 இல் யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறையில் துணை விரிவுரையாளராகப் பதவியேற்றார். பின்னர் பதவிஉயர்வு பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1995 இல் இணைப் பேராசிரியரானார். 1997 –1998ம் ஆண்டுகளில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். இப்போதும் யாழ். பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பதவி வகிக்கின்றார்.

பண்டைய இலக்கியம், நவீன இலக்கியம், சமயம், தத்துவம், யாப்பியல், அணியியல், திறனாய்வு, ஈழத்துத் தமிழிலக்கியம்என்பவற்றில் ஈடுபாடு கொண்டுள்ளார். எழுத்துத் துறையிலும், பேச்சுத்துறையிலும் இவர் சிறப்புடன் விளங்குகின்றார்.

'இந்தியச் சிந்தனை' மரபு என்ற நூலை இவர் தம் துணைவியாரோடு இணைந்து எழுதியுள்ளார். தமிழகத்தில் வெளியிடப்பட்ட இந்நூல் ஈழத்திலும் தமிழகத்திலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இந் நூலின் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 1996இல் சிறப்பான வடிவிற் தமிழகத்தில் வெளி வந்துள்ளது.

ஆய்வுக் கட்டுரை எழுதுவதில் சிறந்து விளங்கும் இவர் இருபதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றுட் பல ஆய்வரங்குகளில் வாசிக்கப்பட்டன. அனைத்துலக தமிழாராயச்சி மகாநாடுகள் (யாழப்பாணம் 1974, மதுரை 1981) அனைத்துலக இந்து மகாநாடு (கொழும்பு 1982), மொழியியல் பண்பாட்டு ஆய்வரங்கு (புதுச்சேரி 1992), ஞாலத் தமிழ் மாநாடு (மதுரைப் பல்கலைக் கழகம் 1992) பாரதி ஆய்வகக் கருத்தரங்கு (காந்தி கிராமம் பல்கலைக் கழகம் திண்டுக்கல் 1993) முதலியன இவர் கலந்து கொண்ட உயர் நிலை மகாநாடுகள். சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வரங்குகள் பலவற்றிலும் இவர் பங்கு பற்றியுள்ளார் சமயச் சொற்பொழிவுத் துறையிலும்

இவர் சிறந்து விளங்குகிறார். நல்லையாதீனம் இவருக்குக் "வித்தியாபூஷணம்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

திறனாய்வில் இளமைமுதலே ஈடுபாடு கொண்ட இவர் அண்மைக் காலத்தில் திறனாய்விற் தீவிர ஆர்வம் காட்டிக் கருத்தரங்குகளில் உரையாற்றி வருகின்றார். ஈழத்திலும் தமிழகத்திலும் சிறந்த திறனாய் வாளராகிய பேராசிரியர் கைலாசபதியின் மாணவராகப் பல்கலைக் கழகத்தில் விளங்கிய இவர் கைலாசபதியின் விமர்சனப் போக்கை மதிப்பிடும் வகையில் "தமிழ் ஆய்வியலில் கலாநிதி க. கைலாசபதி" (சவுத்விஷன், சென்னை 1999) என்ற ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார்.

தெல்லிப்பழை கலையிலக்கியக்களம் என்ற நிறுவனத்தின் தலைவராக விளங்கும் கலாநிதி நா. சுப்பிரமணியம் பல ஆய்வரங்குகளை நெறிப்படுத்தியுள்ளார்.

**கலாநிதி நா. சண்முகலிங்கன்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல், சமூகவியற் துறைகளின் தலைவராக விளங்கும் நாகலிங்கம் சண்முகலிங்கன் மயிலிட்டி தெற்குத் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணி (B. Ed) சிறப்புப் பட்டப் பயிற்சி பெற்ற இவர் முதலாம் வகுப்புப் பட்டம் பெற்றார். பின் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலாப் பல்கலைக் கழகத்தில் உயர்பட்ட ஆய்வு பயிற்சியைப் பெற்றார். யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பதவியேற்றார். இங்கு கலை முதல்வர் (எம்.ஏ), கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்றார். "விவசாய மாற்றமும் சமூகக்கட்டமைப்பும் என்ற பொருள் பற்றி ஆய்வேடு சமர்ப்பித்து "கலை முதல்வர்" (M.A) பட்டம் பெற்றார். "துர்க்கையின் புதிய முகம் இன்றைய யாழ்ப்பாணத்தின் சமய, சமூக மாற்றங்கள்" என்ற ஆய்வேட்டைச் சமர்ப்பித்துக் கலாநிதிப் பட்டம் பெற்றார். அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்ரன் பல்கலைக் கழக மானுடவியல் பேராசிரியர் கணநாத் ஒபயசேகரா இவரது ஆய்வு வழிகாட்டியாக விளங்கினார்.

நாடகத் துறையிலும் இசைத்துறையிலும் இளமை முதலே சிறந்து விளங்கும் இவர் பல்வேறு பரிசுகளையும் பெற்றார். கலைக்கழகம் பாடசாலைகளிடையே நடாத்திய நாடகப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மகாஜனாக் கல்லூரியின் "குரு தட்சிணை" நாடகத்தில் இவர் முக்கிய பாத்திரத்தில் நடித்தார். சன்மார்க்க சபை நடாத்திய நாடகப் போட்டியில் 'வன்றொண்டன' நாடகத்தில் நடிகருக்கான முதல் தங்கப் பதக்கப் பரிசு பெற்றார். மேலும் பல நாடகங்களில் பதக்கப் பரிசுகள் பெற்றார்.

வட இலங்கை சங்கீதசபை நடாத்தும் சங்கீதத் தேர்வில் 5ஆம் ஆண்டுத் தேர்ச்சி பெற்றார். வானொலியில் அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணியாற்றிய இவர்,,ஆக்க இசைக் கலைஞராகவும் பாடகராகவும், கவிஞராகவும் கலந்து கொண்டார். "கங்கையாளே" என்ற முதல் தமிழ் மெல்லிசைத் திரட்டில் இவரது இரு இசைப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திரு எஸ். கே. பரராசசிங்கத்தின் 'ஒலி ஓவியத்தில்' இவரது ஆறு இசைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பல ஆக்க இசை அரங்குகளிலும் பங்குபற்றியுள்ளார். இசை, நாடகத்தில் மட்டுமன்றி, இயற் துறையாகிய பேச்சுப் போட்டியிலும் முதல் தங்கப் பரிசு பெற்றுள்ளார். சிறந்த பேச்சாளராகவும் விளங்குகிறார்."

சிறந்த ஆய்வாளராக விளங்கும் இவர், பல சர்வதேச கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டார். பல சர்வதேச ஆய்வேடுகளிலும் இவரின் ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

திரைப்படத்துறையிலும் இவர் ஆர்வ முள்ளவராக விளங்குகிறார். 1973ல் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனப் பயிற்சிமுகாமில் கலந்துகொண்டு சான்றிதழ் பெற்றார். 1979 இல் இலங்கை -இந்தியக் கூட்டுத் தயாரிப்பான மாமியார் வீடு திரைப்படத்தின் இணை இயக்குநராகவும் பணியாற்றினார். "மட்டக்களப்பில் அம்மன் சடங்கும் வழிபாடும்" என்ற காட்சிசார் மானிடவியல் விவரணத் திரைப்படத்தை நெறிப்படுத்தி 1999 இல் தயாரித்தார்.

சமூக சர்வதேச மட்டத்துக் கல்விப் பணிகளில் மதிப்பீட்டாளராகவும் ஆலோசகராகவும் பதவி வகிக்கின்றார். ஐ.நா. சமூக பண்பாட்டு மேம்பாட்டுத் திட்டங்களில் மதிப்பீட்டாளராகவும், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்புக்களின் ஆய்வு ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.

சண்முகலிங்கன் இதுவரை எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார். முதலாவது நூல் இதய ரஞ்சனி (காந்தளகம் சென்னை 1988) இதில் இடம்பெற்றுள்ள படைப்புக்கள் இலங்கை வானொலி வர்த்தக

ஒலிபரப்பின் 'இதயரஞ்சனி' நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டன. நம் பண்பாட்டின் சமூக பண்பாட்டு நிகழ்ச்சிகளான விழாக்கள், வழிபாட்டு மரபுகள், கிராமியக் கலைகள், சடங்குகள், நம்பிக்கைகள், மனவெழுச்சிகள், தொடர்புச் சாதனங்கள், ஆளுமைகள் முதலியன இடம் பெற்றுள்ளன.. எஸ்.கே. பரராசசிங்கம் இதன் இணையாசிரியர் ஆவார். இரண்டாவது நூல் சண்முகலிங்கனின் தந்தையாராகிய அமரர் நாகலிங்கன் அவர்களின் வரலாற்றை கூறும் என் அப்பாவின் கதை ஆகும். (1988)1988 இல் ஒரு தனி மனிதனின் நிறுவனம், மகாஜனாக் கல்லூரியின் இலக்கியப் பாரம்பரியம் ஆகிய சிற்றேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. மகாஜனா... பாரம்பரியம் என்ற நூல் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பயின்ற மாணவரின் எழுத்தாற்றலை நிரற்படுத்தும் மிகச்சிறந்த நூலாகும். பாடசாலைகள்தோறும் இத்தகைய ஆய்வுநூல்கள் வெளிவந்தால் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை மிகச் சிறப்பாக உருவாக்கலாம். சந்தனமேடை (௧௯௯௨), நாகரிகத் தின் நிறம் (1993) என்பன சண்முகலிங்கன் வெளியிட்ட இரு கவிதை நூல்கள். இவரது 'சான்றோன் எனக் கேட்ட தாய்' பரிசு பெற்ற சிறுவர் நாவல் நூலாகும். 'உள,சமூக மேம்பாடு' என்பது மிக அண்மையில் வெளியான நூலாகும்.

வலிகாமம் வடக்கிலுள்ள கிராமங்களில் குரும்பசிட்டியும் பல எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், பதிப்பாசியர்களையும் உருவாக்கித்தந்த பெருமைக்குரியது.

இரசிகமணி கனகசெந்திநாதன், கலைப் பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, கவிஞர் வி.கந்தவனம், இரா.கனகரத்தினம், கலாகேசரி ஆ. தம்பித்துரை, பண்டிதர் வ. நடராசன், வேல். அமுதன், மு. திருநாவுக்கரசு, வெற்றிமணி மு.க. சுப்பிரமணியம் முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

**குரும்பசிட்டி நா. பொன்னையா** அவர்கள் பத்திரிகை, நூல் பதிப்பித்தற் துறையில் வரலாற்றுப் பெருமைபெற்றவர். இவர் 1930 ஆம் ஆண்டு 'திருமகள் அழுத்தகம்' என்ற அச்சகத்தை நிறுவினார். அதே ஆண்டில் "ஈழகேசரி" வார இதழை வெளியிடத் தொடங்கினார். ஈழகேசரி மூலம் பல இளம் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. மறுமலர்ச்சிக் கால இலக்கியகாரர்களை வளர்த்துவிட்டவர் இவர் எனக் கூறுதல் தவறாகாது. பிற்காலத்தில் ஈழத்து இலக்கிய வானில் பிரகாசித்த – பிரகாசித்துக் கொண்டிருக்கும் வரதர் (திச.வரதராசன்), அ. செ. முருகானந்தன். அ.ந. கந்தசாமி, மகாகவி உருத்திரமூர்த்தி, கனக. செந்திநாதன் முதலியவர்களுக்குக் களம் அமைத்துக்கொடுத்த பெருமை ஈழகேசரிக்கு உண்டு. திருமகள் அழுத்தகம் நாவலர் நெறிநின்று எழுத்துப்பிழைகள் எதுவுமின்றி மிக உயர்ந்த தரத்தில் நூல்களை வெளியிட்ட பெருமைக்குரியது. வித்துவசிரோமணி ச. கணேசையரின் தொல்காப்பிய உரை விளக்கம் முதல், பாலபாடம் முதலான பாடநூல்கள் வரை பதிப்பித்த தனிப்பெருமைக்குரியவர் ஈழகேசரி பொன்னையா என்றால் தவறில்லை.

**குரும்பசிட்டி இரசிகமணி கனக. செந்திநாதன்** அவர்கள் சிறுகதை, நாவல், நாடகம், விமரிசனம், கட்டுரை முதலான பல துறை ஆற்றல் படைத்தவர். ஒரு நல்லாசிரியராக விளங்கிய இவர் ஈழத்து எழுத்தாளர்களை எழுச்சிபெற வைத்தவர். தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு ஈழத்து எழுத்தாளர்கள் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்ற தன்நம்பிக்கையை ஊட்டி, அவர்களை உற்சாகப்படுத்திய பெருமைக்குரியவர். ஏராளமான நூல்களை எழுதிப்பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

வெண்சங்கு (1967), ஒருபிடி சோறு (1976), விதியின்கை, கவிதைவானில் ஒருவளர்பிறை, மூன்றாவது கண், ஈழத்துக்கவி மலர்கள், நாவலர் அறிவுரைகள், ஈழத்துத் தமிழ் நூல் வழிகாட்டி, கவின்கலைக்கு ஓர் கலாகேசரி, என்கதை முதலான பலவாம்.

பூச்சரம் (கவிஞர்கந்தவனம்) மலர்மாலை (இளவரசு எஸ். செல்லத்துரை) என்பன இவரைப் பற்றிய தொகுப்பு நூல்கள்.

**குரும்பசிட்டி கலாகேசரி ஆ.தம்பித்துரை** அவர்கள் சிறந்த ஓவிய சிற்பக்கலைஞர். கவின்கலைப்பாட உதவிக்கல்விப் பணிபாளராக இருந்தவர்.ஓவியக்கலையில் பலசாதனைகளைப் படைத்துள்ளார். குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைவராகப் பலகாலம் இருந்து இலக்கிய – சமயக் - கலைப்பணிகள் செய்துள்ளார்.

ஓவியக்கலையை இலவசமாகவே கற்பித்து மாணவர்களை ஊக்குவித்ததோடல்லாமல் பல்கலைக்கழகத்தில் ஓவியம் கற்பிக்கப்பட வேண்டுமென்று அயராது உழைத்தவர்.

சிறுவர் சித்திரம் (1961), ஓவியக்கலை (1962) யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள் (1982) முதலான பல நூல்களை ஆக்கியுள்ளார்.

தேர்க்கலையில் மிகமுன்னணி வகித்த இவரால் உருவாக்கப்பட்ட தேர்கள் பல நூற்றுக் கணக்கானவை.

இவரைப்பற்றி "கவின்கலைக்கோர் கலாகேசரி" எனும் நூலை இரசிகமணி கனக செந்திநாதன் வெளியிட்டுள்ளார்.

**குரும்பசிட்டி கலைப்பேரரசு ஏ.ரி .பொன்னுத்துரை** அவர்கள் பல்துறைஅறிஞர். நாடகத்துறையில் இன்று மிகமுக்கியமான ஒருவராகக் கருதப்படுபவர். பட்டதாரி ஆசிரியராயிருந்த இவர் பல நாடகநூல்கள், வரலாற்று நூல்கள், விழாமலர்கள் என்பவற்றின் ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் விளங்குகின்றார்.

இறுதிப்பரிசு (1967), நாடகம் (1969) கூப்பியகரங்கள் (1970), பக்திவெள்ளம் முதலான பல நாடக நூல்களைத் தந்துள்ளார்.

அரங்கு கண்ட துணைவேந்தர் (1984), கலையுலகிற் கால்நூற்றாண்டு (1974), அரங்கக் கலைஞர் ஐவர் (1998) முதலான பல வரலாற்று நூல்களையும் தந்துள்ளார்.

அத்துடன் வெள்ளிவிழா மலர் (1974), இரசிகமணி நினைவு மஞ்சரி முதலான மலர்களின் பதிப்பாசிரியராயும் விளங்குகின்றார்.

சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூலாசிரியர் என்ற பெருமையும் 'கலாபூசணம்' விருது பெற்ற பெருமையும் இவருக்குண்டு. தொடர்ந்து நூல்கள் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**குரும்பசிட்டி கவிஞர் வி.கந்தவனம்** அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர்; கல்லூரி அதிபராயிருந்தவர். இலக்கியம், கவிதை, நாவல், வரலாறு முதலான பல்துறை சார்ந்த நூல்களை எழுதியுள்ளார். இலக்கிய உலகம் (1964), ஏனிந்தப் பெருமூச்சு (1967), கீரிமலையினிலே (1969), பாடுமனமே (1972), கவியரங்கிற் கந்தவனம் (1972) முதலானவை இவரது கவிதை நூல்கள். ஒன்றரை ரூபா இவரது நாவல் ஆகும். "நுணாவிலூர்" இவரது வரலாற்று நூல்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

மேலும், கூனியின் சாதனை (1970), முறிகண்டிப்பத்து (1964), குரும்பசிட்டி விநாயகர் பத்து (1971), நல்லூர் நாற்பது (1971), தங்கம்மா நான்மணிமாலை முதலான பல நூல்களையும் தந்துள்ளார்.

தற்போது கனடாவிலிருந்து புலம் பெயர் இலக்கிய, சமயப் பணிபுரியும் இவர் பல்துறை அறிஞர் ஆவார்.

**குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்** அவர்கள் உலகளாவிய மட்டத்தில் தமிழர்களின் கலைகள், பண்பாடுகள், சுவடிகளை அறிமுகம் செய்யும் அறிஞர் ஆவார்.

உலகத் தமிழர் பண்பாட்டியக்கத் தலைவராயிருக்கும் இவர் "சுவடிகள் காப்பகம்' ஒன்றை வைத்துள்ளார். தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களை அன்றுமுதல் இன்று வரை ஆவணப்படுத்தவல்ல ஆதாரங்களை இன்றைய கணனியுக நவீன வழிமுறைகளிற் பேணும் பெருமைக்குரியவர்.

சிறுகதை ("சீசரின் தியாகம் 1952") வரலாற்று நூல்கள் பலவற்றைத் தந்துள்ளார்.

அலைகடலுக்கு அப்பால் தமிழர் (1973), உலகத் தமிழர் ஐக்கியத்தை நோக்கி (1974), இறியூனியன் தீவில் எங்கள் தமிழர் (1979), மொறிசியஸ்தீவில் எங்கள் தமிழர் (1980) முதலான பல வரலாற்று நூல்களைத் தந்துள்ளார்.

தொடர்ந்து உலக அரங்கிற் தமிழர் பண்பாட்டை நிலைநிறுத்தவல்ல பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

**குரும்பசிட்டி பண்டிதர் வ. நடராசன்** பழந்தமிழ்ப் பேரறிஞர். ஈழகேசரிப் பொன்னையா வின் திருமகள் அழுத்தகப் பாடநூல்கள் வரிசையில் பல செந்தமிழ் நூல்களை எழுதி ஒரு தலைமுறையின் தமிழ் அறிவை வளம்படுத்திய பெருமைக்குரியவர்.

நாவலர்வழிவந்த வித்துவசிரோமணி கணேசையர் முதலான தமிழறிஞர்களிடம் பயின்ற இவர் பலதமிழறிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

இவரது நூல்கள் செந்தமிழ் வளமும், இலக்கியச் சுவையும், தூய இனியவசன நடையும் வாய்க்கப் பெற்றவை. "சகுந்தலை சரிதை" இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இவர் கடைசியாக எழுதி வெளியிட்ட நூல் "இறைவர் ஒருவர்" அறிஞர்களின் சிந்தனையைத் தூண்டவல்ல இந்நூல் தனித்துவமான சிந்தனை வளம்மிக்கது.

**விழிசிட்டி பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை** அவர்கள் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரிடம் நீண்டகாலம் பயின்றவர். புலவர் எழுதிய சில நூல்களை உருவாக்குவதிலும் ஈடுபட்டவர். இவர் நீண்ட காலம் ஆசிரியராகவும் பாடசாலை அதிபராகவும் இருந்து பணியாற்றினார். அதனால் அவர் நூலாக்கத்துறையில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் உயிருள்ள புத்தகங்களாகிய பெருந்தொகைத் தமிழறிஞர்களை உருவாக்கினார்.

அவருடைய மகன் பண்டிதர் க. உமாமகேஸ்வரன் சிறந்த அறிஞர். அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய பன்மொழிப் புலவர். கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவர். அண்மையில் இங்கிலாந்து சென்ற அவருடைய "அதீதரன்" என்ற கட்டுரைத் தொகுப்புநூலை அங்குள்ள அம்பனைக் கலைப் பெருமன்றம் (ஐ.இ) (U.K) வெளியிட்டது. (1998).

**விழிசிட்டி அறிஞர் செ. சிவசுப்பிரமணியம்** அவர்கள் நகுலகிரிப் புராணத்திற்கு விரிவான உரை எழுதியுள்ளார்கள். இந்நூல் கீரிமலை நகுலேஸ்வரர் மீது புன்னாலைக்கட்டுவன் கவிஞர் சிகாமணி கா, அப்பாசாமி ஐயர் அவர்களாற் பாடப்பட்டது. பதினொரு படலங்களையும் 628 விருத்தப்பாக்களையும் கொண்டது. அறிஞர் சிவசுப்பிரமணியம் அவர்கள் சிறந்த ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்தவர். இவரது உரைச்சிறப்பை "இவர் முகத்திலே சிவப்பொலிவும், அகத்திலே சிவமணமும், வாயிலே சிவவார்த்தையும் மிளிர்வதை யாவரும் அறிவர். இத்தகைய பெருமக்களே உரை எழுதத்தகுதி வாய்ந் தவர்கள், மெய்ப்பொருளை உணர்ந்தவர் தான் இத்தகைய பாடல்களுக்கு உரையெழுதும் ஞானப்பக்குவம் உடையவர். ஆகவே மேற்படி ஆசிரியர் அவர்கள் இப்பணியை மேற்கொண்டது சாலச்சிறந்தாகும்" எனக் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

இவர் அவ்வப்போது பாடிய பக்திப் பிரபந்தங்கள் யாவும் இவரது நினைவாக "இறைமணிமாலை" எனும் நூலாக வெளியிடப் பட்டிருக்கின்றது.

**மல்லாகம் ச. அம்பிகைபாகன்** அவர்கள் சிறந்த அறிஞராக விளங்கினார். இவர் யாழ் வைத்தீஸ்வரக்கல்லூரியில் அதிபராயிருந்தவர். ஆராய்ச்சித் திறன்மிக்கவர். சிறந்த பேச்சாளர்.

கச்சியப்பர் கந்தபுராணம் ஒரு தமிழ்க்காப்பியம் (1967, சுன்னாகம் செல்லாச்சி அம்மையார், யோகசுவாமிகள் (1972) கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி (1978) முதலான பல தமிழ் நூல்களையும் (ஈழநாட்டுத்தமிழ்ச்சங்கம்) Eelanadu and Tamil Sangam (1981) என்னும ஆங்கில நூலையும் எழுதிவெளியிட்டுள்ளார்.

**அகஸ்தியர்**

கீரிமலை வலித்தூண்டல் கிராமத்தை வாழ்விடமாகக் கொண்ட தலைசிறந்த ஆக்க இலக்கியகர்த்தாவாக விளங்கியவர்.

குறுநாவல்கள் பலவற்றைத் தந்துள்ளார். இருளினுள்ளே, கோபுரங்கள் சரிகின்றன திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள், மண்ணில் தெரியுதொரு தோற்றம், எரிநெருப்பில் இடைபாதை இல்லை முதலானாவை குறிப்பிடத்தக்கன.

நாட்டுக் கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்பு (1981), நீ (1968) முதலான வரலாற்று நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இவர்தனது இறுதிக்காலத்தில் புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து பல புலம்பெயர் இலக்கியங்களையும் படைத்தாக அறியமுடிகிறது.

**கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை**

அளவெட்டியிற் பிறந்த இவர் மகாஜனாக் கல்லூரியின் புகழ்பூத்த ஆசிரியராக இருந்து பல அறிஞர்களை உருவாக்கியுள்ளார். கவிஞர், நாடக ஆசான், சொற்பொழிவாளர், புராணபடன விற்பன்னர் எனப் பல்துறைத் திறமைகள் வாய்க்கப் பெற்றவர்.

தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் கலைக்கழக நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற இவரது நாடகங்கள் "பாரதம் தந்த பரிசு" எனும் பெயரில் 1980ஆம் ஆண்டு நூலுருவில் வெளிவந்தது.

தமது தாயின் நினைவாக "தாய்" எனும் நூலை 1977இல் வெளியிட்டுள்ளார்.

பக்தி நல மேம்பாடுள்ளவராதலாற் பல தெய்வங்கள்மேல் பதிகங்கள், இரட்டை, மணிமாலை, திருப்பள்ளி எழுச்சி, திருத்தல வெண்பா, ஊஞ்சல் முதலான நூல்களை எழுதியுள்ளார். வரத்தலம் கற்பகவிநாயகர் இரடைமணி மாலை (1974), தவளகிரி முத்துமாரியம்மை திருப்பள்ளி எழுச்சி, வீரகத்திவிநாயகர் திருத்தல வெண்பா (1983) என்பன சிலவாகும்.

இவரது கவிதைகள் "கதிரேசன் கவிதைகள்" எனும் பெயரில் நூலுருப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தமிழருவி த. சண்முகசுந்தரம்**

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இவர் மகாஜனாக் கல்லூரியின் அதிபராயிருந்ததுடன் தலைசிறந்த இலக்கிய கர்த்தாவாகவும் திகழ்ந்துள்ளார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோராற் பெரிதும் மதிக்கப்பட்டவர். இலங்கைக்கலைக் கழகத்தின் உறுப்பினராக இருந்து கலைப்பணி புரிந்துள்ளார்.

நாடகம், நாவல், வரலாறு, கலை, இலக்கியம் ஆகிய பல்துறைப்படைப்புக்களைத் தந்துள்ளார்.

வாழ்வுபெற்றவர் வல்லி(1962), பூதத்தம்பி (1964), இறுதிமூச்சு (1965) முதலான நாடக நூல்களின் ஆசிரியர்.

இவரது 'மீனாட்சி' எனும் நாவல் 1974இல் வெளிவந்தது. 'பேராசிரியர் கணபதிப்பிள்ளை' எனும் நூலும் பேராசிரியர் வித்தியானந்தன் பற்றிய 'கலைமகிழ்நன்' (1984) நூலும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பற்றிய "சிவத்தமிழ்ச் செல்வம்" (1925) எனும் நூலும் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கு வளம் சேர்ப்பனவாகும்.

சமூக நோக்குடைய பல பக்தி இலக்கியங்களையும் படைத்துள்ளார். இசையும் மரபும் (1974), வெற்றிலை மான்மியம், ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து (1984) காகப்பிள்ளையார் மான்மியம் (1983) முதலான இருபத்தைந்திற்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். பல இளம் இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு.

**தெல்லிப்பளை ஆ. சிவநேசச் செல்வன் அவர்கள்**

மூத்தபத்திரிகையாளராக விளங்கினார். வீரகேசரிப் பிரதம ஆசிரியராக இருந்த இவர், தற்போது தினக்குரல் பிரதம ஆசிரியராகப் பணி புரிகின்றார்.

ஈழநாட்டிலே தமிழ்ப்பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் (1974) எனும் ஆய்வு நூலை யாத்துள்ளார். இவர் "காலத்தின் பின்னணியில் ஆறுமுக நாவலர், ஞானப் பிரகாசரும் தமிழாராய்ச்சியும், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை வாழ்க்கையும் பணியும் (1974) முதலான பல நூல்களின் ஆசிரியருமாவார்.

**தெல்லியூர் செ. நடராசா அவர்கள்**

பிரபலமான அறிஞர், சோதிடக் கலையில் வல்லவர். சிறுகதை, நாவல், வரலாறு முதலான பல்துறை சார்ந்த ஏராளம் நூல்களை வெளியிட்டுள்ளார். அத்துடன் பல நூல்கள், மலர்களின் பதிப்பாசிரியராகவும் விளங்குகின்றார். ஆண்டுதோறும் வெளிவந்து கொண்டிருக்கும் "நல்லைக் குமரன் மலருக்கு" கௌரவ ஆலோசகராயிருந்து வருவதே இவரின் அறிவுத்திறனுக்குச் சான்றாகும்.

இவரது சிறுகதைகளில் தேசபக்தி 1946, கோகிலம் 1946, நீலநிஞன் 1947, காதல் கொலை 1950, காலேஜ்காதல் 1951 இரகுநாதன் 1952, என்பனவும் நாவல்களில் அபலைப் பெண் (1965) என்பன குறிப்பிடத்தக்கன.

சோதிடத்தில் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ள இவர் திருமணம், எண்களில் மனிதவாழ்வு, ஜீவயாத்திரை (1960) சோதிடமும் நோய்களும் (1964) எனப் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

வரலாற்றுத் துறையில் பாண்டித்தியம் மிக்கவர் என்பதற்கு தமிழன்மாட்சி 1947, நல்லை நாவலர் 1949, ஈழநாட்டில் தமிழன் மானம் 1950, துறவி விவேகானந்தர் 1951 முதலான நூல்கள் சான்றாகும்.

**கட்டுவன் சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக்குருக்கள்**

அரசாங்கசேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சைவக்குருக்களாயிருந்தவர். சைவக் கிரியைகள் சம்பந்தமான ஆழமான அறிவும் அனுபவ விளக்கமும் உள்ள இவர், இதுசம்பந்தமான பல நூல்களை எழுதிவெளியிட்டுள்ளார். விவாகக்கிரியை விளக்கம் (1982), முத்திராலட் சணவிதி (1982), மகோற்சவ விளக்கம் (1984), மகாகும்பாபிஷேக தத்துவங்கள் (1984), மகோற்சவகாலத் தமிழ்வேதத் திருமுறைத் திரட்டு (1985) முதலான நூல்கள் இவரது சிறப்பாற்றலுக்குச் சான்றாகும்.

**அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர்**

உலகறிந்த அருளாளரும், கவிஞருமான இவர் அளவெட்டியில் வாழ்ந்து கொண்டு, தனது அறிவையும், அருளையும் வழங்கி மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறார்.

இவரது பாடல்கள் எவருக்கும் விளங்கத்தக்க இலகுவான அருள்வார்த்தை களாலானவை, அதேவேளை ஆழமான தத்துவக் கருத்துக்கள் புதுமைநயம் மிளிரவைக்கும் பாணியில் அமைந்தவை.

பல்லாயிரக்கணக்கான பல்வகைப் பாடல்களைப் ஆக்கியுள்ள இவரது நூல்கள் பலவெளிவந்துள்ளன. அண்மையில் வெளிவந்த "கந்தபுராண வசனகாவியம்" (2000) எனும் நூல் இவரது தனித்துவத்துக்கு எடுத்துக்காட்டாகும். வசன நடை, சுவையான கவிதை நடையாகவே அமைவது இவருக்கேயுரிய சிறப்பியல்பு எனலாம்.

வள்ளிநாயகன் (1983) செல்வச்சந்நிதி கந்தன் திருப்பாமாலை, அருண்மலர்மாலை (1983),

கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்கள் (1998) முதலான ஏராளமான நூல்களுக்கு இவர் ஆசிரியராவார்.

இவரது அறிவுறுத்திறன் சமய, சமூக சேவைகளினூடாக மக்களுக்குப் பயன்தருவது போற்றுதலுக்குரியதாகும்.

**அளவெட்டி பண்டிதர் க.நாகலிங்கம்**

மரபுவழித்தமிழ் கற்பிப்பதில்வல்ல பேரறிஞராக விளங்கும் இவர் அறுபதுகளில் மல்லாகத்தில் இயங்கிய பண்டித வகுப்பில் கற்பித்துப் பல பண்டிதர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் புகழ் பூத்த ஆசிரியராய் விளங்கியவர்.

தமிழ் இலக்கணத்தை மாணவர்கள் இலகுவாகச் சுவைத்துப் படிக்கத்தக்க வகையிற் கற்பிக்கும் சிறப்பாற்றல் மிக்கவர். தனது கற்பித்தல் அனுபவத்தைத்துணைக் கொண்டு. "செந்தமிழ் இலக்கண விளக்கம்" (2000) எனும் நூலை வெளியிட்டுள்ளார். தொல்காப்பியம் முதல் இக்கால இலக்கண நூல்கள் வரையான நூல்களை ஒப்பிட்டுக்காட்டி இலகுவான மொழிநடையில் எவரும் விளங்கக்கூடியதாக எழுதியிருப்பது இந்நூலின் சிறப்பு ஆகும். இதன் இரண்டாம் பகுதியும் வெளிவரவிருப்பது இந்நூலுக்கு இருந்த வரவேற்பிற்கு எடுத்துக்காட்டாகும். பாடசாலை மாணவர் முதல் பல்கலைக்கழக இலக்கண ஆய்வாளர்கள் வரை அனைவருக்கும் இந்நூல் பயன்படவல்லது என்பது அறிஞர்கள் கருத்தாகும்.

**அளவெட்டி பண்டிதர் மா.மாணிக்கம்**

வேலணையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வாழ்விடமாகவும் கொண்ட இவர் பாடசாலை அதிபராயிருந்து ஓய்வு பெற்றவர்.

பழந்தமிழ் நூல்களை இக்காலச் சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் இலகுவான மொழிநடையில் எழுதி வழங்க வேண்டும் எனும் கொள்கையுடையவர்.

கச்சியப்ப சிவாச்சாரியார் தந்த கந்தபுராணத்தைக் "கந்தபுராண வரலாற்றச் சுருக்கம்"(1989) எனும் இலகுதமிழ் நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். அதேபோல உலகப் பொதுநூல் எனப் போற்றப்படும் திருக் குறளையும் இலகு நடையில் "திருக்குறள் வசனச் சுருக்கம்"(1999) எனும் நூலாக வெளியிட்டுள்ளார்.

இந்நூல்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதும் அதன் பயனாக மேலும்பல நூல்களை எழுதிக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**குறமகள் - வள்ளி நாயகி**

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஈழத்தின் பெண் எழுத்தாளர்களில் மூத்தவராவார். அத்துடன் பெண்ணியம் சம்பந்தமான பெண்விடுதலை பற்றிய பல படைப்புக்களை ஆக்கிய பெருமைக்குரியவர்.

சிறுகதை, நவீனம், நாடகம் முதலான பல்துறையாற்றல் மிக்கவர். ஈழத்தின் மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களில் ஒருவரான பெருமைக்குரியவர். புலம்பெயர்ந்தும் வாழும் இவர் அங்கும் இலக்கியப்பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

**அநு. வை. நாகராஜன்**

சிறுகதை, சிறுவர் நவீனம், கவிதை, நாடகம், சமயஆய்வு, விஞ்ஞானஆய்வு முதலான பல்துறை எழுத்தாற்றல் மிக்க இவர் இத்துறைகள் சார்ந்த பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

புதுமையும், நயப்பும் மிக்க இவரது ஆக்கங்கள் இலக்கிய உலகிற் பிரசித்தமானவை.

சாகித்திய மண்டலப் பரிசும், இந்து கலாச்சார அமைச்சின் பரிசும் முதலான பல பரிசுகளைப் பெற்ற எழுத்தாளரான இவர், உதவிக்கல்விப் பணிப்பாளராயிருந்து ஓய்வு பெற்றவரும், சைவப் புலவருமாவார்.

**மகாகவி. து. உருத்திர மூர்த்தி**

ஈழத்திலும் தமிழகத்திலும் புகழ் பெற்ற ஒரு கவிஞராகிறார். மறுமலர்ச்சிக் காலத்தில் எழுத்துலகில் புகுந்த மகாகவி, 1971 வரை கவிதை, காவியம், கவிதைநாடகம் முதலிய பல்வேறு துறைகளிலும். கவிதை வடிவிலேயே தமது படைப்புகளை யாத்துள்ளார். ஆய்வாளரும் விமர்சகருமாகிய சண்முகம் சிவலிங்கம் மகாகவி உருத்திர மூர்த்தியின் பெருமையை வரையறை செய்யும் வகையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"மகாகவி ஒரு புதிய சந்ததியை விருத்தியாக்கும் ஒரு காலகட்டத்தவராகிறார். நாம் இன்னும் பாரதி யுகத்திலிருக்கிறோம் என்று சொல்லுவது தவறு. பாரதி ஒரு யுகசந்தி என்பது மெய்யே. ஆனால், அந்தயுக சந்தி பிரிந்துவிட்டது. அதன் ஒரு கிளை பிச்சமூர்த்தி என்றால் மறுகிளை *மகாகவியே.* பாரதி வளர்த்த சில கவிதைப்

பண்புகளின் தோல்வியே பிச்சமூர்த்தியென்றால், அத்தோல்வி நிகழாமல் அதனை இன்னொரு கட்டத்திற்கு உயர்த்திய வெற்றியே மகாகவி எனலாம்''

இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தின் தலைசிறந்த பெருங்கவிஞர் மகாகவியே என்பதை இக் கருத்து உறுதி செய்கிறது.

மகாகவியின் கவிதைகள் பெருமளவில் பத்திரிகைகளிலும் இதழ்களிலும் வெளிவந்துள்ளன. வள்ளி (1955), குறும்மா (1966), கண்மணியாள் காதை (1968), ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் (1971), கோடை (1970), வீடும் வெளியும் (1973), இரண்டு காவியங்கள் (1974), மகாகவி கவிதைகள் (1984), புதியதொரு வீடு (199..), மகாகவியின் ஆறு காவியங்கள் (2000) ஆகிய பத்து நூல்கள் மகாகவி வாழ்ந்த காலத்திலும் மறைந்த பின்னரும் வெளியாகியுள்ளன. இந்நூல்களிற் பெரும்பாலானவை வெளியாகக் கல்முனையைச் சார்ந்த கவிஞர் எம். ஏ. நு்.்மானே பொறுப்பாக இருந்து வருகின்றார். மேலும் சில பாடல்களை வெளியிட முடிவு செய்துள்ளார்.

இத்துணை அதிகமான நூல்களை வெளியிட்டமையல்ல மகாகவியின் பெருமைக் காரணம். "நவீன தமிழுக்குப் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியதே'' இவருடைய பெருமைக்குக் காரணமாகும் என்கிறார் அறிஞர் முல்லைமணி.

மகாகவி எழுதிய கோடை கவிதையில் மட்டுமன்றி நாடகத்திலும் சிறந்து விளங்குகிறது. சமகாலச்சமூக நோக்குப் போக்கிலேயே மகாகவியின் கவிதைகள் அமைகின்றன.

இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத்தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத்திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத்திக்கட்டுக்கள்
என்றிவை காணவோ மேடையில்லை

புதிய வெற்றிகள் இவைகளைப் புனையும் நாடகம் வேண்டி நம்மொழி கிடந்தது. கோடையை எழுதும் காலமும் குளிர்ந்தது என்று மகாகவி கூறுகிறார். இது அவரது அனைத்துக் கவிதைகளுக்கும் பெருந்தும்.

இலஞ்சம் எமது சமூகத்தின் கொடுமைகளில் ஒன்று. இலஞ்சம் கொடுக்க முடியாமல் ஏழைகள் வருந்துவது சாதாரண நிகழ்ச்சி. இதனை விளக்கும் வகையில் மகாகவியின் பின்வரும் குறும்பா அமைந்துள்ளது.

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்துநின்றான் காலன்
சத்தமின்றி வந்தவனின்
கைத்தலத்திற் பத்துமுத்தைப்
போத்தி வைத்தான் போனான் சூலன்.

இதன் மூலம் இலஞ்சத்தின் தீமையை மகாகவி விளக்குகிறார். மகாகவியின் சிறந்த கவிதை நூல்களில் ஒன்று குறும்மா. இது தமிழகத்திலும் பெரும் புகழ் பெற்றுள்ளது. நம்பார்த்தசாரதி (தீபம், செப்டெம்பர் 1968 ப. 80), தமிழக அறிஞர் சி.கனகசபாபதி எம்.ஏ.(தீபம் ஆகஸ்ட் 1978) ஆகியோர் குறும்மாவைப் பெரிதும் பராட்டினர்.

"தமிழ்க் கவிதைத்துறையில் மகாகவியின் தனிச்சிறப்புக்கள் இன்னும் சரியான முறையில் பரவலாக இனங்காணப் படவில்லை. மகாகவியின் படைப்புக்கள் அனைத்தும் நூலுருப் பெறுவதும் வரலாற்று ரீதியில் புறநிலைப்பட்ட ஆய்வு முறைக்கு அவற்றை உட்படுத்துவதும், மகாகவியைச் சரியான முறையில் இனங்கான உதவக்கூடும்''

என கவிஞர் எம்.ஏ.நு்.்மான் குறிப்பிட்டுள்ளார். இன்னும் மகாகவி து.உருத்திரமூர்த்தியின் பெருந்தொகையான கவிதைகள் நூலுருப் பெறவேண்டியுள்ளன. எனினும் அவர் ஈழத்தின் தலைசிறந்த கவிஞர் என இதுவரை வெளிவந்த நூல்களே சான்று பகர்கின்றன.

அ.ந.கந்தசாமி, அ.செ. முருகானந்தம், மகாகவி து. உருத்திரமூர்த்தி ஆகிய மூவரும் "மகாஜனா தந்த மும்மணிகள்'' என்றும் "அளவெட்டி தந்த மூவர்'' என்றும் "ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர்'' என்றும் போற்றப்படுகின்றனர்.

இவர்களுள் மகாகவி து. உருத்திர மூர்த்தியின் சிறப்பை முன்னரே பார்த்தோம். அ.ந.கந்தசாமியும் கவிதைத் துறையிற் சிறந்து விளங்கினார்.

கவிஞரும் விமர்சகருமான அறிஞர் இ.முருகையன், அ.ந.கந்தசாமி பற்றிப் பின்வரும் வினாவை எழுப்பியுள்ளார்.

"அ.ந. கந்தசாமியின் எதிர்காலச்சித்தன் பாடலைவிடக் கருத்தும் சிந்தனையும் பொதிந்த கவிதைகள் தமிழகத்தில் உள்ளனவா? இருந்தால் எடுத்துக் காட்டட்டும்''

கற்பகம் 1:2, தை,மாசி 1977 முருகையனின் இந்த ஒரு வினாவே அ.ந.க.வின் கவிதைச் சிறப்புக்குச் சான்றாகும்

அ.ந.க.வின் கவிதைகள் இதழ்களில் வெளியாகினவே தவிர நூல் வடிவம் பெறவில்லை. எனவே, விமர்சகர்கள் அவரது கவிதை ஆற்றலைச் சுட்டுவதில்லை. விமர்சகர் செ. யோகராசா அ.ந.கவின் சிறப்பைப் பின்வருமாறு உறுதி செய்கின்றார்

"ஈழத்து நவீன கவிதை மரபின் முன்னோடி சிலர் கூறுவது போன்று மகாகவி மட்டுமல்லர், வேறும் சிலருளர். அவர்களுள் மகாகவிக்குச் சற்று முற்பட்டவராகிய அ.ந.க.விற்கும் முக்கிய பங்குண்டு என்பது வலியுறுத்தப்பட்ட வேண்டிய தொன்றாகும். மல்லிகை.88, 11ஆம் ஆண்டு மலர் ஆகஸ்ட் 1975 ப.67 "மறுமலர்ச்சிக் குழுவினருள் அ.ந.கந்தசாமி (கவந்திரன்), மஹாகவி(உருத்திர மூர்த்தி) சாரதா (இ.சரவணமுத்து) முதலியோர் விதந்துரைக்கத் தக்கவராவார்"

"கவிதை உள்ளடக்கத்தைப் பொறுத்த வரையிலும் சமுதாயச் சார்புடைய கவிதைகளை பாடியவரென்ற விதத்திலும் அடிப்படையில் முற்போக்குக் கவிதைகளைத் தொடக்கி வைத்தவரென்ற விதத்திலும் மகாகவியை விட ஒருபடி முன்னிற்கிறார் அ.ந.கந்தசாமி மேலது, பக் 65,67"

முற்போக்குக் கவிதைகளை முதன் முதலிற் பாடியவர் கவீந்திரன். இக்கருத்தை அவரே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

சாதிக் கொள்கையை நையாண்டி செய்து நவாலிச் சோமசுந்தரனார் பாடிய "ஏறாதமேட்டுக்கு இரண்டு துலை இட்டிறைக்கும்" பேறான கதையைப் பலருக்கும் நான்பாடிக் காட்டிவந்த காலமது.

இப்படிப்பட்ட உணர்ச்சி பொங்கும் என் மனதிலே வில்லூன்றிக் கொடுமை ஒரு பெரும் புயலையே கிளப்பிவிட்டது. அப்புயலைக் கவிதை யாக்கினேன். ஈழத்திலே ஒரு கம்யூனிட் கட்சி கூட உருவாகாத அக்காலத்திலேயே (1940களில்) நான் தொழிலாளர் புரட்சி பற்றி ஈழகேசரியில் கவிதைகள் எழுதியிருக்கிறேன் என்று (மல்லிகை மார்ச் 1970) அ.ந.க. குறிப்பிட்டுள்ளார். இது அ.ந.க.வின் இலக்கியப் போக்கைத் தெளிவாகக் காட்டுகின்றது.

வில்லூன்றி மயானம், எதிர்காலச்சித்தன் பாட்டு, துறவியும் குஷ்டரோகியும், சத்திய தரிசனம், சிந்தனையும் மின்னொளியும், தேயிலைத்தோட்டத்திலே முன்னேற்றச் சேனை, இரவு, எல்லோருக்கும் எல்லாமும் முதலியன பலர் பாராட்டும் அ.ந.க.வின் கவிதைகள் ஆகும். முற்போக்கு எழுத்தாளர்களின் பிதாமகர் என்று போற்றப்படும் அ.ந.க சுதந்திரனில் 1950களில் பிரதம துணையாசிரியராக விளங்கினார்.

சுதந்திரனின் பிரதம ஆசிரியராக இருந்த தமிழீழத் தந்தை செல்வநாயகம் சுதந்திரனைச் சிறப்பாக வெளியிட்டு வந்தமையைப் பாராட்டி தமிழருவி த.சண்முகசுந்தரத்துக்கு எழுதிய கடித்தில் குறிப்பிட்டுள்ளார். சுதந்திரனைப் பல்வேறு புனைபெயர்களில் எழுதி வெளியிட்டார்.

அவர் தினகரன் இதழில் எழுதிய மனக்கண் என்ற நாவல் பெரிதும் பாராட்டுப் பெற்றதாகும். தொடர்ந்து நாவல்களை எழுதத் திட்டமிட்ட அவர் இறந்து விட்டதால் ஈழத்தமிழ் பல கதைகளை இழந்து விட்டது.

உலகப்புகழ் பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் எமிலிஜோலா. அவரது புகழ்பெற்ற நவீனங்களில் ஒன்று நானா .அ. ந. க. 1951 ஆம் ஆண்டில் சுதந்திரனில் "நானா" நவீனத்தை மொழி பெயர்த்து வெளியிட்டர்.

**அ. செ. முருகானந்தன்**

மகாஜனாக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலேயே சிறந்த எழுத்தாளராக விளங்கினார். அப்பொழுதே ஈழகேசரியின் ஆசிரியர் குழுவிற்சேர்ந்து தீவிரமாக எழுத்துத் துறையில் ஈடுபட்டார். இதே காலத்தில் மறுமலர்ச்சிச் சங்கத்திலும் முக்கிய உறுப்பினராக இருந்து செயற்பட்டார். அதே காலத்தில் இராஜ. அரியரத்தினம் ஈழகேசரியின் முதன்மையாசிரியராகப் பதவியேற்ற போதிலும், தமிழகம் சென்றுவிட்டதால் அ.செ.மு அவர்களே ஈழகேசரியின் ஆசிரியராகச் செயற்பட்டார். இதனால் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் இதில் எழுதிக் குவிக்க முடிந்தது.

அ.செ.மு ஈழகேசரியில் பீஷ்மன் என்ற புனைபெயரில் ஆங்கில நாவல் ஒன்றை அலிபாபாவின் குகை என்றதலைப்பில் தொடர்ந்து மொழிபெயர்த்து வெளியிட்டார். வண்டிச்சவாரி என்ற தலைப்பில் தொடர்கதை எழுதி ஈழகேசரியில் வெளியிட்டார். ஜெர்மன் மொழியில் வில்கெல்ம் ஸிமித் எழுதிய நாவலை 'போட்டி' என்ற பெயரில் எழுதி வெளியிட்டார்.

அ.செ.மு. 1950 களில் எரிமலை என்ற இதழைத் திருமலையில் இருந்து வெளியிட்டார. அப்போது எரிமலைப் பதிப்பகத்தில் புகையில் தெரிந்த முகம் என்ற புனைகதையை வெளியிட்டார். சில விமர்சகர்கள் இதனை நீண்ட சிறுகதை என்பர், வேறு சிலர் குறுநாவல் என்பார்.

அ.செ.மு யாத்திரை என்ற நவீனத்தை 1957 இல் ஈழகேசரியில் வெளியிட்டுவந்தார். 1958இல் ஈழகேசரி வெளிவராது நின்றவிட்டதால் இது ஈழநாட்டில் மீள வெளியிடப்பட்டது.

அ.செ.மு. சிறுகதை, நவீனம் (நாவல்) ஆகிய இரு புனைகதைத் துறைகளிலும் ஈடுபட்டிருந்த போதிலும் சிறுகதையிலேயெ சிறந்து விளங்கினார். இச்சிறுகதைகளில் சிலவற்றை யாழ் அரச செயலகம் நிறுவிய கலாச்சாரப் பேரவை தொகுத்து 'மனிதமாடு' என்ற பெயரில் வெளியிட்டது.

அ. செ. மு. வின் சிறப்பையும் பெருமையையும் கூறும் எழுத்தாளர் குகன் அவரது சிறுகதைகளின் சிறப்பை விதந்து கூறகிறார். "காளிமுத்துவின் பிரஜா உரிமை, மனிதமாடு" போன்ற இவரது சிறுகதைகள் காலத்தால் அழியாதவை. அழகான தமிழ் நடை, உணர்வு வெளிப்பாடுகள், மண்வாசைன சமூசகப் பிரச்சினைகள் என்பன இவரது சிறுகதைகளின் சிறப்பு அம்சங்களாகும். தமிழ்ச் சிறுகதைகளை ஆராயும் எவரும் அ.செ. முருகானந்தனை மேற்கோள் காட்டத் தவறவதில்லை.

மல்லிகை222 யூலை 1989

மருத்துவர் ச.முருகானந்தன் அ.செ.மு.வின் காளிமுத்துவின் பிரஜா உரிமையைப் பின்வருமாறு மதிப்பிடுகிறார்.

"பழம் பெரும் எழுத்தாளர் அ.செ.முருகானந்தம் எழுதிய காளி முத்துவின் 'பிரஜா உரிமை' என்ற அழகான நடையில் அமைந்த சிறுகதை மலையக மக்களின் அவலங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மலையமக்களும் இந்நாட்டு மக்களே என்ற உணர்வை முப்பாட்டனின் எலும்புக் கூடு மூலம் சொல்லாமற் சொல்லும்முறை கதையின் வெற்றியின் இரகசியமாகும்." அண்மையில் பதினைந்து ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. அவற்றுள் காளிமுத்துவின் பிரஜா உரிமையும் ஒன்றாகும். இது அவரது சிறுகதையின் சிறப்புக்குச் சான்றாகும்.

**முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம்**

இணுவிலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வாழ்விடமாகவும் கொண்ட புலவரவர்கள் நல்லாசிரியராய்த் திகழ்பவர். பல செய்யுள் நூல்களுக்கு ஆசிரியராவார். மரபுவழிப்பாடல்கள், பிரபந்தங்கள் இயற்றுவதில் புகழ்பெற்றவர். இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட நூல்கள் அச்சேற்றப்பட்டுள்ளன.

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய 'சுவாமி விபுலானந்தர் கவிதைப் போட்டி'யில் (1992) சுவாமிவிபுலானந்தர் நான்மணிமாலை எனும் இவரது பாடல் முதற்பரிசுபெற்றமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி 1994 இல் நல்லூர் இணைமணிமாலை எனும் நூலும் கொழும்புத் தமிழ்ச்சங்க முதற் பரிசு பெற்றுள்ளது.

இவர் ஊஞ்சல், நான்மணிமலை, மும்மணிமாலை, ஒருபாஒருபது, திருப்பள்ளி எழுச்சி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் வருக்கமாலை, அட்டமங்கலம் முதலான பல்வகைப் பிரபந்தங்களைப் பாடியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

**மரபுவழிப்பாடல்களையும் எலலோருக்கும் விளங்கக் கூடிய இலகுவான மொழிநடையில் எழுதுவது இவரது தனித்துவமான திறமையாகும்.**

**சைவப்புலர் சு. செல்லத்துரை**

இவர் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சைவப்புலவர், நல்லாசிரியராகவும், முதலாந்தர அதிபராகவும் விளங்கியவர். இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபராய் இருந்து ஓய்வு பெற்றவர். கவிஞர், நாடக ஆசிரியர், பேச்சாளர், எழுத்தாளர், கலைஞர் எனப் பல்துறை வல்லுநர் காங்கேயன் கல்வி மலர் (1985) மெய்கண்டான் பொன்மலர் (1978) மெய்கண்டான் பவள மலர் (1998) நகுலேஸ்வரகுரு பவள மலர்(2000) முதலான மலர்களின் ஆசிரியர். வாக்கும் வாழ்வும், வள்ளல் ஏழூர், ஆனந்தமாலை, கோலங்கள் ஐந்து முதலான நூல்களின் ஆசிரியர். இலக்கிய ஆர்வம்கொண்ட இவர், அரச பதவியினின்றும் ஓய்வுபெற்ற போதும் எழுத்தார்வத்தினால் இன்றும் சுறுசுறுப்பாக அனைவரதும் நன்மதிப்புடன் விளங்குகிறார். ஒல்லுடை ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையையும் முன்னின்று இயக்கிவருகிறார்.

(இக்கட்டுரையை எழுதுவதற்கு எனக்குப் பெரிதும் உதவியாயிருந்த மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்களுக்கு நன்றி.)

**சிறந்தவை இவை**

சிறந்த ஆசிரியர் – அனுபவம்
சிறந்த புத்தகம் - வாழ்க்கை
சிறந்த படிப்பு – பொறுமை
சிறந்த நண்பன் - கடமை
சிறந்த அணிகலன் - புன்னகை
சிறந்த பாதுகாப்பு – நேர்மை
சிறந்த பாதை – கல்வி
சிறந்த பொழுது போக்கு – சேவை
சிறந்த மதம் - சமத்துவம்

# வலிகாமம் வடக்கின் இசை வளர்ச்சி

**ந.யசோதா**
எழுதுனர் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை

"இசையால் வசமாகா இதயம் எது
இறைவனேஇசை வடிவம் எனும் போது"

என்ற கூற்று இசையின் மகத்துவத்தைக் கூறுகின்றது. இறைவன், இசை, மனித வாழ்க்கை, இம்மூன்றையும் பிரித்துப் பேசமுடியாது. இம்மைக்கும் மறுமைக்கும் வளம் தரும் கலையாக இசைக்கலை மிளிர்கின்றது. அப்படிப்பட்ட இசையின் தோற்றம், வியாபகம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

ஆரம்பத்திற் கிராமப்புற மக்கள் தாம் செய்யும் தொழிலின் போது ஏற்படும் களைப்பு, சோர்வு, பயம் என்பவற்றை நீக்கி சுறுசுறுப்பாக இயங்கவும், தமக்கும் நேர்ந்த துன்பத்தை நீக்கி கவலையை வெளிக்காட்டவும், சிறுவர்கள் விளையாடும்போதும் ஆடிப்பாடிச் செயற்பட்டனர். இவ்வாறாக கிராமப்புற மக்களால் பாடப்பெற்று வந்த பாடல்களே நாட்டுப்பாடல்களாகும். இந்நாட்டுப் பாடல்களே இசையின் தோற்றுவாயாக விளங்கியது.

வலிகாமம் வடக்கைப் பொறுத்தவரை எழுபத்தைந்து வருடத்திற்கு முன் பூதத்தம்பி விலாசம், அரிச்சந்திரமயான காண்டம், மதனகாமன் போன்ற கூத்து வகைகள் ஆடப்பட்டு வந்தன. அண்ணாவிமார்களான தம்பர், பொன்னர், இளையவர், வல்லிபுரம் போன்றோர் கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றினர். நாடகப்பாத்திரங்களை ஏற்றவர்களுடைய உறவினர்கள் சகல வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்கள். அளவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை என்பவர் கரகம், காவடி, வாளின் மேல் நின்று கரகமாடுவது போன்ற பாரம்பரிய கலைகளை பிரமிக்கத்தக்க வகையில் பழக்கி மேடையேற்றினர். 1950 களின் பின் காங்கேசன்துறை வைரமுத்து குழுவினர் அரிச்சந்திர மயானகாண்டம், காத்தவராயன் கூத்து போன்றவற்றை நூற்றுக்கும் மேற்பட்ட மேடைகளில் அரங்கேற்றியுள்ளனர்.

அளவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரையும் அவர் மகன் சிவபாதமும் உடுக்கு வாத்தியத்தை மிக நல்ல முறையில் வாசித்து வந்தனர். காவடிகள் நாட்டுக்கூத்துக்கள் போன்றவற்றைத் தொடர்ந்து பண்ணிசை வகுப்புக்கள், பஜனைகள் புராணபடனங்கள், கதாப்பிரசங்கங்கள் என்பன கோவில் நிகழ்வுகளில் மேடையேற்றப்பட்டு வளர்ச்சி கண்டன. கொட்டடித் தம்பர், சரவணை, சண்முகம், சிவஞானம், விஸ்வநாதன், தா.பொன்னம்பலம்,சோதி, எஸ்.பொன்னம்பலம், பொன் முத்துக்குமாரன், பண்டிதர் சச்சிதானந்தம், பண்டிதர் சிவசுப்பிரமணியம், பண்டிதர் நமசிவாயம், பண்டிதர் சங்கரப்பிள்ளை, அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவர், கருகம்பானை நமசிவாயம் போன்றோர் பண்ணிசை வகுப்புக்கள், பஜனைகள் புராணபடனங்கள் கதாப்பிரசங்கங்கள் என்பவற்றை நடாத்தி இசையை வளர்த்தனர்.

1917ம் ஆண்டு அளவெட்டி சைவவாலிபர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. 1940களில் இச்சங்கமானது பண்ணிசை புராணபடனம் கதாப்பிரசங்கம் என்பவற்றில் போட்டிகளை நடாத்தி மாணவர்களை ஈடுபடச் செய்தது. அக்காலத்தில் இச் சங்கத்தினர் இந்தியாவிலிருந்து செல்வக்கணேச தேசிகர், மறைக்காடு தேசிகர் என்போரை வரவழைத்துப் பண்ணிசை வகுப்புக்களை நடாத்தினர்

மாவிட்டபுரம் உருத்திராபதிராசா, சண்முகநாதன், அளவெட்டி அப்புலிங்கம் என்.கே.பத்மநாதன், எஸ்.சிதம்பரநாதன், கேதீஸ்வரன், எம்.பி.பாலகிருஷ்ணன் போன்றோர் நாதஸ்வரம் மூலம் மங்கள இசையை நமது பிரதேசத்திலும் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரவச்செய்தனர். உலகப் புகழ்பெற்ற தவில் மேதை தட்சணாமூர்த்தியும், அளவெட்டியைச் சேர்ந்தவர். இவருடன் என்.குமரகுரு, கணேசு சின்னக்கணேசு என்போரும் தவில் வாத்தியத்திற் சிறந்து விளங்கினர்.

நமது பிரதேசத்தில் அளவெட்டி சதானந்தா வித்தியாசாலையில், மாவிட்டபுரம் உருத்திராபதி, மணிஐயர், தெல்லிப்பளை விஸ்வநாதசர்மா, மூர்த்தி ஐயர் போன்றவர்கள் மூலம் இசை வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இதனால் கர்நாடக இசையைக் கற்கவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் உதித்தது. பன்னாலையில் பொன்.முத்துக்குமாரன், கருகம்பனையில் நமசிவாயம், மாவிட்டபுரத்தில் திருமதி.குமாரசுந்தரம் என்போர் இசையில் ஆரம்பப்பட்டம் பெற்றவர்களாக விளங்கினர். தெல்லிப்பளை கலாரஞ்சனசபா, மாவை முத்தமிழ்

மன்றம், அளவைஇசைக்கலை மன்றம் என்பன இசை வகுப்புக்களை நடாத்திவந்தன.
தெல்லிப்பளை கலாரஞ்சனசபா, மாவை முத்தமிழ் மன்றம், அளவைஇசைக்கலை மன்றம் என்பன இசை வகுப்புக்களை நடாத்தி வந்தன. அளவை இசைக்கலை மன்றம் அளவையூர் வி.கே.நடராஜா அவர்களை செயலாளராகக் கொண்டு சமாதான நீதவான் அமரர் செ.மயில்வாகனம் தலைமையில் 1962ம். ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு, இன்று வரை இசை வகுப்புக்களை நடாத்தி வருகின்றது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் இசையைப் பயின்று ரசிக்கும் ஆற்றலைப் பெற்றதோடு நாற்பத்தொன்பது இசை ஆசிரியர்களையும் மூன்று இசை ஆசிரிய ஆலோசகர்களையும உருவாக்கியுள்ளது.

இம்மன்றத்தில் இசைபயின்ற மாணவர்களில் அ.திலகேஸ்வரன் டென்மார்க்கிலும் திருமதி.கலாநிதி அவுஸ்ரேலியாவிலும் மா.சத்தியமூர்த்தி, நா.நாகசுகந்தன் என்போர் லண்டனிலும் சகோதரிகள் மாலதி, ரோகினி, சர்வலோஜினி ஆகியோர் கனடாவிலும் இசையை வளர்த்துவருகின்றனர். கட்டுவனைச் சேர்ந்த திருமதி.நேசபூபதி நாகராஜன், திருமதி.மாது சிரோன்மணி, என்போர் வாய்ப்பாட்டிலும் வறுத்தலைவிளான், கட்டுவனைச் சேர்ந்த திருமதி.தர்மபூபதி சிதம்பரநாதன் வயலின் வாத்தியத்திலும் சிறந்து விளங்கினர்.

1998ம் ஆண்டு 60 ஆவது அகவை நிறைவு விழாவினை திரு.வி.கே.நடராஜா அவர்களின் / மாணவர்கள் இணைந்து பெருவிழாவாகச் செய்தனர். அப்போது அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்களால் தேனிசை வாரி எனும் பட்டம் வழங்கி, பொற்கிளி வழங்கி பாமாலை சூட்டி கௌரவித்தனர். நாதஸ்வர வித்துவான் என்.கே.பத்மநாதனிற்கு “கலாசூரிய” விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அண்மையில் கொல்லங்கலட்டி செல்லத்துரை குளமங்கால் எல்.திலகநாயகம் போல் மாவிட்டபுரம் சிவஞானசுந்தரம், குரும்பசிட்டி ஏ.ரி.பொன்னுத்துரை என்போருக்கு இந்துகலாச்சார அமைச்சு விருது வழங்கி கௌரவித்தது.

இவ்வாறாக நாட்டுக்கூத்தில் ஆரம்பமான இசை கர்நாடக இசைவரை வளர்ந்துள்ளது கண்கூடு. இன்னும் மென்மேலும் வளர்ந்து இசைக்கலைஞர்களை உருவாக்க வேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். அவர்களின் மாணவர்கள் இணைந்து பெருவிழாவாகச் செய்தனர். அப்போது அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்களால் தேனிசை வாரி எனும் பட்டம் வழங்கி பொற்கிளி வழங்கி பாமாலை சூட்டி கௌரவித்தனர். நாதஸ்வர வித்துவான் என்.கே.பத்மநாதனிற்கு கலாசூரிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அண்மையில் கொல்லங்கலட்டி செல்லத்துரை குளமங்கால் எல்.திலகநாயகம் போல் மாவிட்டபுரம் சிவஞானசுந்தரம் குரும்பசிட்டி ஏ.ரி.பொன்னுத்துரை என்போருக்கு இந்துகலாச்சார அமைச்சு விருது வழங்கி கௌரவித்தது.

# எல்லை

1. நதி பலவாய் ஓடினுமெய்
   கடலே எல்லை
   மதி பலவாய்க் கடினுமென்
   வீதியே எல்லை
   வீதியே எல்லை (நதி)

2. இருள் பாதி ஒளி பாதி
   முடிவே இல்லை
   இனிந்தாலும் கசக்காமல்
   வாழ்வே இல்லை
   வாழ்வே இல்லை. (நதி)

3. கனியாத வாழ்வினிலே
   நாளும் தொல்லை
   கனிவாகிக் கதையாகிக்
   கதிவேறில்லை
   கதிவேறில்லை (நதி)

4. அலையெங்கே மோதிடினும்
   நிலை வேறில்லை
   அவனன்றி வேறில்லை
   எதுவும் இல்லை
   எதுவும் இல்லை (நதி)

# விளையாட்டுத்துறையில் வலிவடக்குப் பிரதேசம்

**செ. ரமணன், கு. முகுந்தன்**
விளையாட்டு உத்தியோகத்தர்கள்

விளையாட்டு என்பது விரும்பி ஆடுதல் எனப் பொருள்படும். கலிபோனிய பல்கலைக்கழக உடற்கல்விப் பேராசிரியர் "நிக்ஸன் கொஸனஸ்" என்பவர் "உடற்கூறுகளின் வளர்ச்சி, சமூகவியல் வளர்ச்சி, மனவெழுழ்ச்சிக் கட்டுப்பாடு செயற்பாடுகளை இலகுவாக்குதல், போன்றவற்றை விளையாட்டின் மூலம் மேம்படுத்திக் கொள்ளலாம்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். அது மட்டுமன்றி கிரேக்க அறிஞரான "பிளேற்றோ" சிறந்த நிர்வாகிகளை, ஒழுங்கமைப்பாளர்களை விளையட்டின் மூலம் உருவாக்கலாம் எனக் கூறியுள்ளார்.

மேற்கூறிய அறிஞர்கள் மாத்திரமன்றி பல அறிஞர்கள் விளையாட்டின் முக்கியத்துவம் பற்றி விளக்கியுள்ளனர். இவ் அறிஞர்களின் கருத்துக்களை நோக்கும்போது முகாமைத்துவம், மருத்துவம் போன்ற பல துறைகளின் அபிவிருத்திக்கு விளையாட்டுத்துறை முக்கியபங்கு வகிக்கின்றது, என்பது புலனாகும். முகாமைத்துவத்தை எடுத்துக் கொண்டால் மன அழுத்தத்தினை முகாமை செய்வதற்கு (Stress Management) உடற்பயிற்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல ஒரு நிர்வாகிக்கு இருக்க வேண்டிய உள்ளுணர்வு (Intuition) புரிந்துணதல் (Innovation) உருவாக்கற்திறன் (Creativity) போன்ற பண்புகளை விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடிகின்றது. உடலினையும் உளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்கவும், சிலவகையான நோய்களைக் குணப்படுத்தவும் உடற்பயிற்சிகளும், விளையாட்டுக்களும் மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படுகின்றன.

விளையாட்டுகள் சவால்களை எதிர் நோக்கக் கூடிய, ஒழுக்கமுள்ள பிரஜைகளை உருவாக்குவதற்கு பெரிதும் உதவுகின்றன. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி செயல் முறைக்கு அப் பிரதேச மக்கள் உடல் நலம் கொண்டவர்களாகவும் சீரான உளப்பாங்கு கொண்டவர்களாகவும், சிந்தனை ஆற்றல் மிக்கவர்களாகவும் திகழ்வது இன்றியமையாத தாகும். விளையாட்டு மைதானங்கள் இச்சீரிய நிலையினை அடைவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. என்பதனை வலிவடக்குப் பிரதேச மக்கள் நன்கு அறிந்தவர்களாக காணப்பட்டதனாலேயே மாவட்டத்தின் ஒரு பரந்த பிரதேசத்தை உள்ளடக்கியது தான் வலிவடக்குப் பிரதேசம். தற்போது சுமார் 19553 தொகையினர் இங்கு வாழ்கின்றனர். இராணுவ பிடிக்குள் 2/3 பகுதிப் பிரதேசம் முடக்கப்பட்ட போதும் இங்கு வாழும் மக்களது முயற்சியும், ஓயாத உழைப்புமே அவர்களது மூலதனமாகும். நிலத்தையும், கடலையும், நம்பி வாழும் மக்களே அதிகமாக இருந்தபோதும் கல்வி, விளையாட்டு போன்றவற்றிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் முன்நிற்கின்றனர். இப் பிரதேசம் மகாஜானக் கல்லூரி, யூனியன் கல்லூரி, அருணோதயக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், நடேஸ்வரக்கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம் போன்ற தரமான உயர்கல்வி பெறும் பாடசாலைகளைக் கொண்டு விளங்குவதனால் கல்வியில் முன்நிற்க இங்குள்ள மாணவர்களால் முடிகிறது. அதேபோல் விளையாட்டுத்துறையிலும் இவர்கள் முன்நிற்கிறார்கள் என்பது உண்மையே.

விளையாட்டுத் துறையினைப் பொறுத்த வரை ஆரம்பகாலத்தில் பாடசாலை ரீதியாக முன்நிற்கும் நிலையே காணப்பட்டது. உதாரணமாக உதைபந்தாட்டம் என்றால் அது குறித்த ஒரு கல்லூரியே முன்நிற்கும் நிலை இருந்தது. இன்று பாடசாலைகளில் விளையாட்டுத் துறைக்குஎந்தளவு தூரம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது ஆராயப்பட வேண்டியது.

பிரதேசச் செயலக மட்டரீதியில் ஒப்பிடும் போது அது ஏனைய பிரதேசங்களிற்கு எடுத்துக்காட்டாகவே விளங்கிவருகின்றது. குறிப்பாக இப்பிரதேச விளையாட்டு அலுவலராக இருந்த திரு. இ. றொகான் ராஜசிங்கம் அவர்களது காலத்தில் என்றுமில்லாதவாறு ஓர் உயர்நிலையில் இருந்தது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. 25 விளையாட்டுக் கழங்கள் ஒவ்வொன்றும் தத்தம் திறமைகளை வெளிக் கொணரும் அளவிற்குச் சிறப்பாகச் செயற்பட்டு வந்தன, செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு விளையாட்டுத் துறையில் தெல்லிப்பளை பிரதேசம் முன்னணியில் நிற்பதற்குக் காரணம், இப் பிரதேச விளையாட்டு அலுவலராகக் கடமைபுரிந்து இன்று திருகோணமலை விளையாட்டு அமைச்சின் திட்டமிடல் அதிகாரியாகப் பணிபுரியும் திரு. இ. றொகான் ராஜசிங்கம் அவர்களே வீரவீராங்கனைகளின் அன்புக்குப் பாத்திரமான இவரது வழிகாட்டலில் உருவான அத்தனை பேரும கல்வியிலும் சரி, விளையாட்டிலும் சரி முன்னணியிற் தான் இருக்கிறார்கள்.

மேலும் விளையாட்டுத்துறையில் அறிவும், முதிர்ச்சியும் பெற்ற திரு. எம். பத்மநாதன் (ஓய்வுபெற்ற யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி ஆலோசகர்) திரு. ப. முருகேசு (ஓய்வுபெற்ற உடற்கல்விப் பணிப்பாளர் உடற்கல்வி - வலிகாமம் வலயம்) போன்றோரை இப்பிரதேசம் கொண்டிருப்பது விளையாட்டுத் துறையில் ஒரு பக்கபலமாக உள்ளது. ஏனைய பிரதேசங்களைவிட காட்டிலும் எமதுள பிரதேசவீரர்கள் விளையாட்டுத் தொடர்பான அறிவையும், நுட்பங்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு எமது பிரதேசத்தில் துறைசார்ந்த நிபுணத்துவ அறிவு மிக்கவர்கள் இருப்பது ஒரு வரப்பிரசாதமாகும்.

மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை திரு. றொகான் ராஜசிங்கம் அவர்களால் உருவாக்கப்பட்ட வீர வீராங்கனைகள் மாவட்ட ரீதியில் மட்டுமல்ல மாகாணரீதியிலும் வெற்றி பெறவும் சாதனை படைக்கவும் முடிந்தது. செல்வி ச. தில்லானா சுமங்கல்யா, 100M, 200M, 400M நீளம் பாய்தல் என்பவற்றில் நிலைநாட்டிய சாதனை, செல்வி த. சந்திரமதி குண்டொறிதலில் நிலைநாட்டிய சாதனை என்பன பத்துவருடங்களாக நின்று நிலைக்கின்றன மேலும் செல்வி. சி. மனோன்மணி என்பவரால் முப்பாய்ச்சலில் வைக்கப்பட்ட சாதனை செல்வி வ. விமலினி என்பவரால் முறியடிக்கப்பட்டது. இவரது சாதனையைச் செல்வி. ச. குமுதினி என்பவர் சென்ற வருடம் முறியடித்துப் புதிய சாதனையை உருவாக்கியுள்ளார். இதிற் குறிப்பிடப்பட வேண்டியது யாதெனில் இம்மூவரும் தெல்லிப்பளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதே செல்வி. த. காந்தமதி என்பவரால் 100M, 400M, தடை தாண்டல்களில் சாதனையை ஏற்படுத்தினார். செல்விகள் தி.ஜீவிதா, மு.வளர்மதி, சே.சேந்தினி என்பவர்களும் மாவட்ட ரீதியில் முதலிடத்தில் வந்த வீராங்கனைகளே. அஞ்சல் ஓட்டத்திலும் 4X100, 4X400 என்ற இரண்டிலும் தெல்லிப்பளை வீராங்கணைகளது சாதனையே 1990 இல் இருந்துள்ளது.

ஆண்களினைப் பொறுத்த வரையில் திரு. பாஸ்கரன், திரு. நா.மதியழகன், திரு. இ. ஜெயந்தன் என்போர் நெடுந்துர ஓட்டவீரர்களாக இருந்துள்ளார்கள். திரு.க. மயில்வாகனம் எறிதல நிகழ்ச்சிகளில் முன்னணி வகிப்பவர். தற்போது விளையாட்டு அலுவலர்களாக இருக்கும் திருவாளர்கள் செ. மகிந்தன், செ. றமணன், என்ற இரு சகோதரர்களும் உயரம் பாய்தல், நீளம்பாய்தல், முப்பாய்ச்சல், கோலூன்றிப் பாய்தல், என்பவற்றில் முன்னனியில் இருந்தவர்கள். இவர்களுடன் இராஜ்குமார், சி.றஞ்சித்குமார், ஆனந்தன், செல்வி. வி.சேந்தினி, ஞானேஸ்வரி போன்றவர்கள் இப்பொழுது முன்னனியில் இருக்கிறார்கள்..

வடக்குக்கிழக்கு மாகாணப் போட்டியில் யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதிப்படுத்திச் சென்ற வீரவீராங்கனைகளில் திரு.றமணன் நீளம்பாய்தல், தத்திமித்துப் பாய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் முதலிடமும், ஏனைய நிகழ்ச்சியான உயரம் பாய்தலில் இரண்டாம் இடத்தினையும் பெற்றது மட்டுமல்லாது. முப்பாய்ச்சல், நீளம்பாய்தல், நிகழ்ச்சிகளில் சாதனை படைத்துத் தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டியிலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. செல்வி. ச. குமுதினி என்பவர் முப்பாய்ச்சல் நிகழ்ச்சியிற் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

குழு விளையாட்டுக்களில் இப்பிரதேசத்தின் வளர்ச்சியினையும் செயற்பாடுகளையும் நோக்குவோமாயின், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம்., ஹொக்கி, கூடைப்பந்தாட்டம், கபடி போன்ற விளையாட்டுகளில் முன்னணியில் திகழ்ந்தது. திகழ்ந்து கொண்டிருக்கின்றது

விளையாட்டுத்துறையில் உலகின் முதல் தர ஆட்டமாக உதைபந்தாட்டம விளங்குகின்றது. இவ் விளையாட்டிற்கு வலிவடக்குப் பிரதேச மக்களும் பெரும் முக்கியத்துவம் கொடுத்து ஆடி வருகின்றனர். இதற்குச் சான்றாக ஆண்டில் தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி, பாடசாலைகளுக்கிடையிலான தேசியப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தது அதேபோன்று யாழ் மாவட்டத்தில் பாடசாலைகள் சங்கம் (J.S.A) அமைக்கப்பட்டு முதலாவது பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டப் போட்டி நடாத்தப்பட்ட போது அப்போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வெற்றிபெற்றது. இவை மாத்திரமன்றி யூனியன் கல்லூரி, அருணோதயாக்கல்லூரி, மெய்கண்டான் மகாவித்தியாலயம், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் போன்ற பிரபல பாடசாலைகள் யாழ் மாவட்டத்தில் சிறந்த உதைபந்தாட்ட அணிகளை கொண்ட பாடசாலைகளாகத் திகழ்ந்து வருகின்றன. பாடசாலைகளில் சிறந்த

உதைபந்தாடட அணிகள் உருவாகுவதற்கு, இப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கழகங்களில் உதைபந்தாட்ட அணிகள் பெரிதும் உதவுகின்றன. இவ் வரிசையில் கிறாஸ்கொப்பர்ஸ், யங்றோயல், கணேசன், அளவெட்டி விநாயகர், யுத், விண்மீன், கண்ணகி, மல்லாகம் கிராம அபிருத்திச் சங்கம் (R.D.S) போன்ற கழகங்கள் யாழ் மாவட்டத்திலேயே உதைபந்தாட்டத்தில் சிறந்த நிலையில் இருந்து வந்திருக்கின்றன.

மேலும் பல தலைசிறந்த உதைபந்தாட்ட பயிற்சியாளர்களையும் இப்பிரதேசம் கொண்டு விளங்கியது யாவரும் அறந்ததே. குறிப்பாக திருவாளர் J.P பத்மநாதன் சிறந்த பயிற்றுனராக யாழ் மாவட்டத்தில் திகழ்ந்தார். புதிய நுட்பங்களையும், உதைபந்தாட்ட நுணுக்கங் களையும் இலகுவாகவும், விரைவாகவும் பயிற்றுவிக்கக்கூடிய திறமையுடைய ஒருவராக இவர் காணப்பட்டார். உதைபந்தாட்டம் தற்போது சற்றுப் பின்னடைந்தாலும் இனிவரும் காலங்களில் அது நன்நிலையில் வளரும் என்பது உறுதி.

எமது கலாச்சார சூழலானது ஆரம்ப காலங்களில் பெண்கள் விளையாட்டு துறையில் ஈடுபடுவதற்கு பெரிதும் தடையாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனால் வலிவடக்குப் பிரதேசம் விளையாட்டுத்துறையில் பெண்களுக்கு எதிரான அடக்கு முறையை உடைத்தெறிந்து அவர்களையும் விளையாட்டுகளில் ஈடுபட ஊக்குவித்ததோடு இதன் விளைவாக வலைப்பந்தாட்டத்தில் எமது பிரதேச பெண்கள் சிறந்த வீராங்கனைகளாகத் திகழ்கின்றனர். இவ் வலைப்பந்தாட்டத்தினை வளர்த்தெடுப்பதற்கு "கிறாஸ் கொப்பஸ்" விளையாட்டு கழகம் பெரும்பங்கு வகித்து வருகின்றது. இவ் விளையாட்டுக் கழகம் மாவட்டத்தில் தனிச்சிறப்புமிக்க அணியாக விளங்குவதற்கும், தேசிய வலைப்பந்தாட்ட அணியிற்கு அவர்கள் தெரிவு செய்யப்படுவதற்கும் சிறந்த பயிற்சிகளை அளித்து வளர்த்தெடுத்த பெருமை இப்பிரதேசத்தின் முன்னாள் விளையாட்டு அலுவலரும், தற்போது வடக்கு கிழக்கு மாகாண திட்ட அலுவலருமான திரு.றொகன் ராஜசிங்கம் அவர்களையே சாரும். 1986 தொடக்கம் ஈடுபட்டபோதும் 1990களில் இரண்டாம் இடத்தினை மாவட்டரீதியில் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெயரும் வரை வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கியே வந்தது. அக்காலப் பகுதியில் நடைபெற்ற சகல சுற்றுப் போட்டிகளிலும் இப்பிரதேச விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான கிறாஸ் கொப்பேஸ் அணியே வெற்றி பெற்று வந்தது குறிப்பிடத் தக்கது. யாழ் பல்கலைக்கழக அணியிற் சவாலாகவே இக்கழக அணி இருந்துவந்துள்ளது என்பது அதன் வரலாற்றினை நோக்கும் போது அறியமுடிகிறது. 1990 இல் யாழ் மாவட்ட அணித்தெரிவில் செல்விகள் சி.மனோன்மணி, த.சந்திரமதி, இ.இராஜபரம், போன்றவர்கள் தெரிவாகினர். இதில் சி.மனோன்மணி என்பவர் தேசிய அணித் தெரிவில் இடம்பெற்றபோதும் நாட்டுச் சூழலினால் அவர் செல்லமுடிய வில்லை. .1998, 1999, 2000 ஆம் ஆண்டுகளில் செல்விகள் த. சந்திரமதி, த.காந்திமதி, இ.உதயசுதர்சினி, க.சுபாசினி என்போர் தெரிவாகினர். யாழ் மாவட்டத்தில் இருந்து தேசிய அணிக்கும் தெரிவான மூவருற் ஒருவரான செல்வி த. சந்திரமதி என்பபடும் தெல்லிப்பளையைச் சேர்ந்தவரே. 1999ம் ஆண்டிலும் யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தினைப்பெற்று வெற்றிக் கேடயத்தை வலிவடக்கு தனதாக்கிக் கொண்டது. வலிவடக்குப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளிலும் வலைப்பந்தாட்ட அணிகள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. மகாஜணாக்கல்லூரி, யூனியன் கல்லூரி அணிகள் மாவட்ட மாகாண போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி வருகின்றன. 1999ம் ஆண்டு யூனியன் கல்லூரியின் 17 வயதிற்குட்பட்ட அணி மாகாணப்போட்டியில் வெற்றிபெற்று தேசியப் போட்டியிலும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

கரப்பந்தாட்டத்தின் வரலாற்றையும் அதன் போக்கையும் நோக்கும் போது 50 - 60களில் "ஓவர்கேம்" முறையில் ஆடப்பட்டு வந்த இவ்வாட்டமானது தென் இலங்கையிலிருந்து வந்த "கம்பகா" அணியினர் மூலமாக நவீன முறையான கரப்பந்தாட்டம் இப்பிரதேசத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட இவ் விளையாட்டினை பல கழகங்கள் விளையாட ஆரம்பித்தன. குறிப்பாக "காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்" இதனையே தனது கழகத்தின் பிரதான விளையாட்டாக கொண்டு அதிற் சிறப்பும் தேர்ச்சியும் பெற்று வந்தது.

இதனால், இக்கழகம் முதல்தர அணியாகத் திகழ்ந்தது திகழ்ந்தும் வருகின்றது. அதேபோல பாடசாலைகளிற் கரப்பந்தாட்ட அணிகளை நோக்கும்போது நடேஸ்வராக் கல்லூரி அணியானது பலகாலமாக மாவட்டமட்டத்தில் சம்பியனாக வந்ததோடு அகில இலங்கைப் போட்டிகளிலும் பங்குபற்றி வந்தது. எனினும் 1992 ஆம் ஆண்டின் பின்னர் மகாஜனாக்கல்லூரி, யூனியன் கல்லூரி என்பன யாழ்மாவட்டத்தில் சிறந்த கரப்பந்தாட்ட அணிகளை கொண்டிருந்ததோடு மாகாணப் போட்டியிலும் மகாஜனக்கல்லூரி அணி 1997ம் ஆண்டில் பங்குபற்றியிருந்தது. இப்பிரதேசத்தின் கரப்பந்தாட்ட வளர்ச்சியில் திரு. ஏ.முன்னைநாதவரப்பிரசாதம், திரு. இ. மனோகரன் ஆகியோரின் பங்கு அளப்பரியதாகும். 1980 ஆண்டு அருணோதயாக் கல்லூரி அகில இலங்கை ரீதியில் உடற்பயிற்சியில் முதலாம் 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டம் யாழ் மாவட்டத்தில் பிரசித்தமான ஒரு விளையாட்டு 1986,87 காலப்பகுதி தொடக்கம் ஏறத்தாள ஐந்து வருடங்களிற்கு குறையாது தெல்லிப்பளை தனக்கென ஓர் இடத்தினைத் தக்க வைத்திருந்தது என்பது உண்மை. யாழ்மாவட்டத்திலேயே இவர்களிற்கான இரசிகர் கூட்டமும் இருந்துள்ளது. காலஞ் சென்றவர்களான சிவசங்கர், சோதி என்போர். சிறந்த துடுப்பாட்டக்காரர்களாக விளங்கினர்.

ஹொக்கி விளையாட்டு பிரபல்யம் அடையாத காலத்திலிருந்து வலிவடக்கில் இருந்து வந்துள்ளது. யாழ் பல்கலைக் கழக அணியுடன் ஈடுகொடுத்து விளையாடும்திறன் உடைய்வர்கள்,. பல்கலைக்கழகத்தில் மட்டுமே விளையாடக்கூடிய நிலையில் இருந்த போது அங்கு செல்லும் மாணவர்களுள் வலிவடக்கு மாணவர்களே ஹொக்கிபற்றி அறிந்து கொண்டு சென்றவர்கள் என்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது கூடைப்பந்தாட்டம் ஆண், பெண் இருபாலாருமான அணிகள் உருவாகி வருகின்றன. இவ் அணிகள் இனிவரும் காலங்களில் சாதனை படைக்கும் என்ற நம்பிக்கையுடன் வளர்கின்றது.

கபடி விளையாட்டு தற்போது அறிமுகமாகி வரும் ஒரு தேசிய விளையாட்டு. சென்ற வருடம் பெண்கள் கபடி அணி வெற்றிக் கேடயத்தை தனதாக்கியுள்ளமை பெருமைப்பட வேண்டிய ஒன்றே

எமது பிரதேச வீரங்கணைகளான செல்விகள் மு.வளர்மதி, வி.விமலினி, பா.பாலறஜனி என்பவர்கள் கல்வியல் கல்லூரி மூலம் விளையாட்டுத் துறை ஆசிரியர்களாக விளங்குகின்றனர். தற்போது யாழ் மாவட்டத்தில் தெரிவான 14 விளையாட்டு உத்தியோகத்தர் களில் ஏழுபேர்வலிவடக்கை சேந்தவர்களே சென்ற ஆண்டு யாழ் மாவட்டத்தின் சிறந்த மெய்வல்லுனர்களாகத் தெரிவான செல்வன் சி.றஞ்சித்குமார், செல்வி வ.சேந்தினி, என்போர் திரு.இ.றொகானின் மாணவனான திரு.செ.றமணன் அவர்களது மாணவர்களாவார்.

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு பெரும்பங்கு நிதியையும் சாரும். வலிவடக்குப் பிரதேச செயலகம், தெல்லிப்பளை ப.நோ. கூ.சங்கம், இலங்கை வங்கி,(சுன்னாகம்), மக்கள்வங்கி(சுன்னாகம்) போன்ற அமைப்புகளும் வலிவடக்கு பிரதேசசபை முன்னாள் தலைவர் தி.ஸ்ரீ.பாஸ்கரன் போன்றவர்களும் இப்பிரதேசத் தின் விளையாட்டு அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றிவருகின்றனர். இனிவரும் காலங்களிலும் விளையாட்டுத்துறையில் இன்று இருப்பதைக்காட்டிலும் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் அதற்குச் சென்றகாலங்களில் பிரதேசசெயலர்களாக இருந்த திருவாளர்களான க. நடராசா, து.சந்திரராஜா, நா.வேதநாயகன் போன்றோர்கள் வழங்கிய ஆதரவினைப் போன்று தற்போது தலைவராக உள்ள திருமதி. ப. [illegible]நாயகம் போல் அவர்கள் ஆற்றிவரும் ஆதரவு அளப்பரியதாகும் அத்துடன் இவ் ஆதரவு மேன்மேலும் தொடர வேண்டும். அத்துடன் பாடசாலைச் சமூகம், பெற்றோர்கள் விளையாடும் பிள்ளைகளிற்கும், விளையாட்டிற் கும் ஊக்கம் தரவேண்டும்.

ஏறக்குறைய எமது பிரதேசம் பத்து வருடங்களாக பெரும்பாலான மக்கள் தமது சொந்த இடத்தை விட்டு புலம் பெயர்ந்த மக்களாக காணப்படுகின்றார்கள். இதனால் அவர்களது வாழ்க்கைத்தரம் பெரிதும் நலிவுற்றுள்ளது என்பது வெளிப்படையான

உண்மையாகும். இந்த நிலையில் சரியான போஷாக்குள்ள உணவுகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை இதனால் போதுமான பயிற்சிகளைஅளிப்பது இயலாத காரியமாக உள்ளது. அதேபோன்று அவற்றைகற்றுக் கொள்ள போதுமான வசதியுள்ள விளையாட்டுத்திடல்களும் இங்கு காணப்படுகின்றன. இவ்வாறான வசதிகள் காணப்பட்டாலும் விளையாட்டு வீரர்களது தேவைகளையும், பிரச்சனைகளையும் இனங்கண்டு நிவர்த்தி செய்வதன்மூலம் அவர்கள் தேசிய நிலைக்கு அப்பால் சர்வதேச அரங்கின் வாசலுக்கும் அழைத்துச் செல்லமுடியும். அந்த நிலையை எமது பிரதேசம் விரைவில் அடையும் என்பது உறுதி. அந்த உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேற இத்துறையுடன் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம் தடகள நிகழ்ச்சிகளில் மாவட்ட மட்டத்தில் எமது பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீரர்களின் சாதனைகள் பற்றிய விபரம் கீழே தரப்படுகின்றன.

| நிகழ்ச்சி | | பெயர் | திறமை | ஆண்டு |
|---|---|---|---|---|
| 100M | பெண் | ச. தில்லானா சுமங்கல்யா | 13.5செக் | 1990 |
| 200M | பெண் | ச. தில்லானா சுமங்கல்யா | 28.5செக் | 1989. |
| 400M | பெண் | ச. தில்லானா சுமங்கல்யா | - | |
| நீளம்பாய்தல் | பெண் | ச. தில்லானா சுமங்கல்யா | 4.98M | 1990 |
| முப்பாய்ச்சல் | பெண் | ச. குமுதினி | 10.12M | 1999. |
| 100M தடைதாண்டல் | பெண் | த. காந்திமதி | 20.8செக் | 1999 |
| 100ஆ, தடைதாண்டல் | ஆண் | சி. ரஞ்சித்குமார் | | |
| 400M தடைதாண்டல் | பெண் | வி. சேந்தினி | 1. | |
| 4X400 | வலிவடக்குபிரதேச பெண்கள் | | - | |
| 4X400 | வலிவடக்குபிரதேச பெண்கள் | | - | |
| குண்டுபோடுதல் | பெண் | த. சந்திரமதி | 7.91M | |
| 400M | ஆண் | க.இராஜகுமார் | 51.9 செக் | |
| 400M | ஆண் | சி.ரஞ்சித்குமார் | 17.8 செக் | |
| நீளம்பாய்தல் | ஆண் | சி.ரஞ்சித்குமார் | 6.52M | |
| 4X400 | ஆண் | அஞ்சல் ஓட்டம் | 46.3 செக் | |

மாகாண மட்டத்தில் எமது பிரதேச செயலக வீரவீராங்கனைகளின் சாதனைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| முப்பாய்ச்சல் | ஆண் | செ. ரமணன் | 14.20M | 1997 |
| நீளம்பாய்தல் | ஆண் | செ. ரமணன் | 7.06M | 1998 |
| முப்பாய்ச்சல் | பெண் | ச. குமுதினி | 10.72M | 1999 |

1997ம் ஆண்டுக்கான மாகாண மெய்வன்மைப் போட்டியிற் சிறந்த களவீரராகவும் சிறந்த மெய்வல்லுனராகவும் செல்வன் செ. ரமணன் தெரிவு செய்யப்பட்டார். அதேபோன்று 1998ம் ஆண்டுக்கான போட்டியிலும் சிறந்த களவீரராகத் தெரிவுசெய்யப்பட்டார். மேலும் 1999ம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் செல்வி. ச. குமுதினி சிறந்த கள வீராங்கணையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## சித்திரைப் பெண்.

என்றும் இளையவள் எண்ணில் இனியவள்
எழிலுடை அரசி வசந்தத்தின் புதல்வி
ஆண்டுகள் தோறும் அவள் அவதாரம்
காலங்கள் தோறும் புதுப் புதுநாமம்

அன்பு மலர அகம் குளிர
பண்பு மிளிர பாசம் வளர
இன்னல் ஒழிய இன்பம் பெருக
இனிது வந்தாளே சித்திரைப் பெண்ணாள்

இல்லம் தோறும் இன்பம் ஒளிர
பாரில் பேதம் அனைத்தும் ஒழிய
இன்ப சுகங்கள் அனைத்தும் பெருக
மின்னல் ஒளியாள் மிளிர்ந்து வந்தாளே

அமரகாவியம் அன்பு ஜீவிதம்
அழிகின் ஒவியம் அருகில் வந்துளாள்
துன்ப வேதனை அனைத்தும் மாளவே
இன்ப நாளிதை இனிது வாழ்த்துவோம்.

மைத்ரேயி

# வலிகாமம் வடக்கின் பத்திரிகைத்துயையும், பிரசுரத்துறையும்

ஏ.ரி. பொன்னுத்துரை

பத்திரிகைகள் படித்தல், காத்திரமான நூல்களை ஆழ்ந்துவாசித்தல் போன்ற பழக்கங்கள் முப்பதுகளுக்கு முன் மிகமிகக் குறைவே திண்ணைப்பள்ளிக் கூடக்காலமது. பாடசாலை அபிவிருத்திகள் கூட கணிசமான அளவு வளராதகாலம். பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்கும் போக்கு வலுவடையாத காலம் இந்நிலையில் பொதுவாசினை மக்கள் மத்தியில் குறைந்தவீதவளர்ச்சியடைந்த காலம் எனலாம்.

பொருளாதார மந்தநிலையும் பத்திரிகை, நூல்கள் வாங்குவதற்கு குறுக்கே நின்றது. கல்விகற்றோர் தொகை திருப்தியற்றிருந்தது. இந்தச்சூழ்நிலையில் அச்சகம் நிறுவி பத்திரிகை நடாத்துதல் முடியாதவிடயமாகவே இருந்தது. யாழ்குடாநாட்டில் இதரபிரதேசங்களைவிட வலிகாமம் இத்துறையில் முன்னோடியாக இருப்பது விந்தையே

கிறீஸ்த்தவ மிசனறிமார் வருகையுடன் யாழ்ப்பாணத்தில் உயர்தரகல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டன. அமெரிக்கமிஷன் தனது தொழிற் பாட்டுக்கு வலிகாமத்தை வாய்ப்பான இடமெனத்தேரந்தது. யூனியன் கல்லூரி அன்று அமெரிக்கமிஷன் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. அருகே துவிபாஷா பாடசாலையும், ஒரு அச்சகமும் நிறுவப்பட்டன.

இந்துக்களும் பல இடங்களில் பாடசாலை களை ஆரம்பித்தனர். மாணவர்களின் தொகை அபரிமிதமாக உயர பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கம் கூடத்தொடங்கியது. தெல்லிப்பழை அமெரிக்கமிஷன் அச்சகத்திலிருந்து காலத் திற்குக்காலம் பலநூல்கள் வெளிவந்தன. கிறீஸ்த்தவ மதவளர்ச்சியை முன்னிட்டும் பொதுவாழ்வை முக்கியப்படுத்தியும் 'உதய தாரகை' (Morning star) என்ற பத்திரிகை வெளியாகியது.

இதைவிட வலிகாமம் எல்லையை அடுத்த வபாவிளானில் ஆசுகவிகல்லடி வேலுப்பிள்ளை சிறு அச்சகம் அமைத்து 'சுதேசநாட்டியம்' என்ற பத்திரிகையை நடாத்தினார். சுதந்திர வேட்கையை தேசியகோட்பாட்டை முன்வைத்து இது வெளிவந்தது.

வலிகாமத்தைச் சேர்ந்த குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு நா. பொன்னையா அவர்களும் நீண்டகாலமாக பல பாடசாலைகளில் அதிபராகப் பணிபுரிந்த M.K. சுப்பிரமணியம் அவர்களும் முறையே 'ஈழகேசரி' வார ஏட்டினையும், 'வெற்றிமணி' என்ற சிறுவர் மாதப்பத்திரிகையையும் வெளியிட்டுள்ளார்கள். ஆக வலிகாமத்திலிருந்தும் வலிகாம மக்களால் நடாத்தப்பட்டதுமாகிய நான்குபத்திரிகைகள் குறிப்பிடத்தக்கவை எனலாம்.

I. உதயதாரகை (Morning star)
II. சுதேச நாட்டியம்
III. ஈழகேசரி
IV. வெற்றிமணி

இவற்றுள் ஈழகேசரி 28 ஆண்டுகள் நடாத்தப்பட்ட தேசிய வாரவெளியீடு என்ற வகையில் இதன் சிறப்பம்சங்களை நோக்குவோம். ஈழகேசரி பத்திரிகை நடாத்திய திரு. நா. பொன்னையா அவர்கள், அவ்வேளை பல சாதனைகள் செய்த அகில இலங்கைக்கும் கல்வியாளரால் அரசசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட (கல்வியாளர் தெரிவு) சேர். பொன். இராமநாதனை நினைவுகூரும் முகமாக ஈழகேசரியைத் தொடக்கினார். பெரும்பரோபகாரியாக கல்வி வளர்ச்சிக்குப் பணிபுரிந்த சேர். பொன் இராமநாதன் பல்கலைக்கழகம் போன்றமைப்பில் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி யையும், மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரியையும் நிறுவியவர். எத்தனையோ ஏக்கர் நிலங்களை இவைகள் அமைப்பதற் காகவும் காப்பதற்காகவும் கொடுத்த கொடை வள்ளல். இலங்கைப்பிரசைகளுள் உதாரண புருஷனாக ஒரு தமிழன் திகழ்ந்தான் என நாம் பெருமையுறும் வகையில் வாழ்ந்தவர். ஈழகேசரிப் பொன்னையா சுன்னாகத்தில் அமைத்த திருமகள் அழுத்தகத்தி லிருந்து 1930ல் ஈழகேசரி என்ற தேசிய வாரவெளியீடு வெளிவந்தது.

இதன் ஆசிரியராக ஆரம்பத்தில் திரு. நா. பொன்னையா அவர்களும் துணையாசிரியராக சுன்னாகம் குமாரசாமிப்புலவரது மைந்தன் திரு.அம்பலவாணர் அவர்களும் கடமையாற்றினார். வளர்ச்சியுற்ற நிலையில், பிரபல எழுத்தாளர் திரு சோ. சிவபாதசுந்தரம் அவர்களும், திரு. இராஜ.

அரியரத்தினம் அவர்களும், திரு. முருகானந்தன் அவர்களும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். ஈழகேசரி பொன்னையா அவர்களுக்குப்பின்னர் பிரசுரப் பொறுப்பாளராக (அலுவலகப் பொறுப்பு + வெளியிடுதல்) திரு. மு. சபாரத்தினம் அவர்கள் பணிபுரிந்தார்.

ஆரம்பத்தில் சமய இலக்கிய ஆக்கங்கள் அணி செய்தன. வித்துவசிரோண்மணி கணேசையர் போன்றவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பெரும்பயன் நல்கின.

பின்னர் காலத்துக்கேற்றவகையில் மறுமலர்ச்சியாக்கங்கள் வெளிவந்தன. நாவல், சிறுகதை, கவிதை போன்ற நவீன எழுத்தோவியங்கள் தலைசிறந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்டன. நவீன எழுத்தாளர்கள் பரம்பரை ஈழத்தில் உருவாகிவளர ஈழகேசரி பெரும் பங்களிப்பைச் செய்தது.

விமர்சனங்களும் (தென்னகத்தில் வெளிவந்த நூல்கள் பற்றியன) சிறப்பம்சமாக அமைந் திருந்தன. தென்னகத்து அறிஞர்கள், எழுத்தாளர்கள். 'ஈழகேசரியின் மதிப்புரை' என்ற பகுதியில் தங்கள் ஆக்கங்கள் பற்றிய விமர்சனம் வருவதைப் பெரிதும் வரவேற்றனர்; முக்கியப்படுத்தினர்.

முப்பதுகளில், நாற்பதுகளில், ஐம்பதுகளில், அறுபதுகளில் எனத்தொடர்ந்த பல தசாப்த நிகழ்வோட்டங்களை வரலாற்றுநோக்கிலும் சமூகநோக்கிலும் பல துறைவல்லுனர்கள் எழுதினார்கள். காலத்தோடு ஒட்டிய எழுத்துநடையும் விடயங்களும் உள்வாங்கப் பட்டதால், ஈழகேசரிக்குரிய மதிப்பும், படிக்க வேண்டுமென்ற துடிப்பும் துரிதமாக வளர்ந்தன. பொதுவாசினை என்ற விடயத்தில் ஈழகேசரி பெரிதும் கைகொடுத்துதவிற்று. இளம்வாசகர்களை, இளம் எழுத்தாளர்களை ஊக்கும்வகையில் பாலர்பகுதி, மாணவர்பகுதி என்பன சிறப்புற அமைந்தன.

இந்தியாவில் விடுதலை எழுச்சியும் சுதந்திர உணர்வோட்டமும் விஞ்சி ''காந்தீயம்'' என்ற கொள்கை மேலெழுந்தவேளை ஈழகேசரி மகாத்மா காந்தி, சுப்பிரமணிமய பாரதியார் போன்ற தேசிய வீரர்களைப் பற்றியும், அவர்களது கோட்பாடுகளை விளக்கியும் தலையங்கங்கள் எழுதிற்று. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற குறிக்கோளை ஈழகேசரி மக்கள் மன்றில் பரப்பியதெனலாம்.

அவ்வேளை யாழ்ப்பாணத்தில் ''வாலிப மகாநாட்டியக்கம்'' ஒன்று வளர்ந்தோங்கியது. அது பல முற்போக்குக் கொள்கைகளை இலட்சியமாகக் கொண்டது. இடதுசாரிகளின் கோட்பாடுகள் மேலோங்கி நின்றன. அதன் முக்கியஸ்த்தராய் விளங்கிய கல்விமானும் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபருமான திரு. கன்டிபேரின்பநாயகம் அவர்கள் ''ஈழகேசரி, கேசரி'' (ஆங்கிலம்) பற்றி ஈழந்தந்த கேசரி என்ற நூலின் முன்னுரையில் எழுதிய சிலவரிகளிலிருந்து பின்வருவனவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது.

"ஈழகேசரியை வெளியிட ஆரம்பித்த போதோ அல்லது அச்சகத்தை நிறுவிய போதோ திரு. நா. பொன்னையா செல்வந்தன் அல்லர். முதல்வைத்துக் கொண்டு அவர் எம்முயற்சியிலும் இறங்கியதில்லை. "உலையை அடுப்பேற்றிய பின்புதான் அரிசி தேடப்போவது என்னுடைய முறை'' என்று திரு. நா. பொன்னையா எனக்குப் பல முறை சொல்லியிருக்கிறார். ஏதோ ஒன்றைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தால் வேண்டிய முதலிருக்கிற தென்றோ அல்லது எண்னென்ன தடைகள் ஏற்படுமென்றோ சிந்திப்பது அவர் இயல்பல்ல. ''கேசரி'' என்ற ஆங்கிலப்பத்திரிகையை வெளியிட அவர் கையாண்டமுறையை நினைக்கும்போதெல்லாம் எனக்குத்திகைப்பு ஏற்படுகின்றது. அப்போது நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியனாக இருந்தேன். ஒரு நாள் ஈழகேசரி ஆசிரியர் சிவபாதசுந்தரமும் இன்னுமொரு பிரமுகரும் என் வீட்டிற்கு வந்து கேசரி என்னும் ஒரு ஆங்கிலப்பத்திரிகையை திரு.நா.பொன்னையா அவர்கள் நிறுவிவிட்ட தாகவும் அடுத்த கிழமை அதன் முதல் இதழ் வெளிவருமென்றும் நானே அப்பத்திரிகையின் ஆசிரியர் (E.DITOR) என்றும் சொன்னார்கள் பத்திரிகைத்துறை பற்றி எல்லாத்துறைகளிலும் நிறைந்த அறிவு அவருக்கிருந்தது. பத்திரிகை வெளியீட்டுக்கு வேண்டிய பல நுட்பங்கள் அவருக்கு வாலாயம்''

பக்கங்களின் அமைவு, பந்திவகுத்தல் கலம் (Culumn) வகுத்தல் போன்றசங்கள் பற்றி அவருக்கு நுண்ணறிவு இருந்தது. கேசரியின் மூலமோ, ஈழகேசரியின் மூலமோ திரு நா. பொன்னையா பொருளீட்டவில்லை. இரண்டு பத்திரிகையாலும் அவருக்கு நட்டமே ஏற்பட்டது. சிறந்த நோக்கம் கொண்டே (தேசியம்) இவை தோன்றின.

ஈழகேசரியில் இடையிடையே எழுதியிருக்கின்றேன். ஆறு ஆண்டுகளாக சித்திரைவருடப் பிறப்போடு ஈழகேசரி ஆண்டு மலர்கள் வெளிவந்தன. அவை ஒவ்வொன்றிலும் நானும் ஏதோ எழுதியிருக்கின்றேன். கேசரியில் கிழமை தோறும் ஆசிரியஉரை எழுதினேன்.

கேசரியைப் பலர் புகழ்ந்தார்கள். சமசமாசக் கட்சிப் பிரமுகர் கொல்வின் R.D சில்வா போன்ற

பலர் பாராட்டுக்கடிதங்கள் எழுதினர். பாராட்டு வந்தபோதும் பணவருவாய் திருப்தியாய் இல்லை. கேசரி மறைந்தது. திரு.பொன்னையா மறைந்து சில ஆண்டுகளில் ஈழகேசரியும் மறைந்தது. இவையிரண்டும் பெரும்பாலும் வாலிபர் மகாநாட்டின் கொள்கைகளையே பரப்பின. நாட்டின் விடுதலை, நாட்டுமக்களின் ஒற்றுமை, தாய்மொழிமூலம் கல்வி, தீண்டாமையகற்றல் போன்ற குறிக்கோள்களையே இவ்விதழ்கள் கடைப்பிடித்தன. ஈழகேசரி இத்துடன் இளம் எழுத்தாளர்களின் சிறுகதை கள், தொடர் கதைகள், பாடல்கள், நாடகங்கள், கட்டுரைகளை வெளியிட்டு உளப்பூரிப்பையும் ஊக்கத்தையும் கொடுத்தது.

ஈழகேசரியின் ஆசிரியர்களாக மிளிர்ந்தவர் களின் விபரங்களை நோக்கும் போது ஆரம்பத்தில் திரு. நா. பொன்னையா (பத்திராதிபர் பொன்னையா என்றே சமூகமழைத்தது)வும் அடுத்து ஆசிரிய தலையங்கம் குமாரசாமிப் புலவருடைய மைந்தனாலும் எழுதப்பட்டது.

அடுத்து, இன்று லண்டனில் வசித்துவரும் முன்னாள் இலங்கை வானொலி தமிழ் அதிகாரியுமாக இருந்தவரும், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும் பணிபுரிந்த பத்திரிகைத்துறை வல்லுனர் திரு.சோ.சிவபாதசுந்தரம் தொடர்ந்து கடமையாற்றினார். இவருக்குப்பின்னர் பிரபல எழுத்தாளராகிய இராஜா அரியரத்தினம் ஆசிரியராக விளங்கினார். அதனைத் தொடர்ந்து அளவெட்டியூரைச் சேர்ந்த அ. செ. முருகானந்தம் (பல பரிசுகள் பெற்றுப் புகழீட்டிய எழுத்தாளன்) ஆசிரியராகத் தொடர்ந்தார். ஈழகேசரி காலம் தவறாது எழுத்துப்பிழைகளற்ற முறையில், பிற்காலத்தில் பணிபுரிந்த பெருமைக்குரியவர் (பிரசுரகர்த்தா) குரும்பசிட்டியூர் மு. சபாரத்தினம் ஆவார்.

மேற்போந்த செய்திகளின் மூலம் வலிகாமத்தார் நடாத்திய பத்திரிகைகள் இலக்கிய பத்திரிகைகளாக வெளிவந்தன என்றும், இதனைத் தொடக்கிய நா.பொன்னையா அவர்கள் அச்சக, வெளியீட்டுக்கலை விண்ண னென்றும் நட்டம் வருமென்று தெரிந்தும் துணி வுடைமையால் இதனை சிறப்புற நடாத்தினார் என்றும் எழுத்தாளர்களை உருவாக்கி ஊக்குவித்தார் என்றும் தெரிய வருகிறது. இலக்கணப் பிழைகளற்ற முறையில் ஆக்கங்கள் இடம்பெற்றகாரணத்தால் வாசகர்களின் தமிழறிவையும் ஓரளவு கூட்டியிருக்கிறது எனலாம். பழைய தமிழ் எழுத்துப்பாங்கு, நவீன எழுத்துமுறை என்பன சமநோக்கில் வளர்க்கப்பட்டன.

வலிகாமத்தைச் சேர்ந்த திரு. மு.க. சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரிய உலகில் பிரபல்யம் பெற்ற ஒரு வல்லாளன். கோப்பாய் ஆசிரிய கலாசாலையால் வெளிவந்த ஆசிரியனாகையால் கல்வியோடு தொடர்புடைய பலவேறு துறைகளிலும் ஈடுபாடுடையவராய் விளங்கினார். மேலாக சமுதாயப்பிரக்ஞைமிக்க ஒரு பரோபகாரி. இவர் ஈழகேசரி நடாத்திய பொன்னையா அவர்களின் அடிச்சுவட்டில் ஒரு பத்திரிகை நடாத்த முன்வந்தார். சிறுவர்களுக்காக, மாணவர்களுக்காக 'வெற்றி மணி' என்ற மாதஏட்டினை 1955 அளவில் தொடக்கி 10 ஆண்டுகளுக்கு மேல் நடாத்தியுள்ளார். இவர் மலை நாடு, கொழும்பு போன்ற இடங்களில் தலைமையாசிரியராக கடமை புரிந்த காரணத்தால் வெளிமாகாண பெருமக்களின் தொடர்புகள் கூடின. இலங்கைபூராவும் பல்வேறு பாடசாலைகளிலும் படித்த மாணவர்களின் வழிகாட்டிபோல மிளிர்ந்தார். மாணவர்களைக் கட்டுரைகள், கவிதைகள் எழுத ஊக்குவித்தார். மாதா மாதம் விசேட ஆற்றலுள்ள மாணவர்களின் புகைப்படங்களைப் பிரசுரித்து முன்னணிக்கு கொண்டுவந்தார். தென்னகத்துக் இளம் எழுத்தாளர்களின். ஆக்கங்களும் "வெற்றி மணியில்'' இடம்பெற்றன. இளைஞர்களுக்கென பத்திரிகைகள் மிகக் குறைவாகஐ வெளிவந்தகாலத்தில் வலிகாமத்தைச் சேர்ந்த திரு. மு. க. சுப்பிரமணியம் "வெற்றி மணி" மூலம் ஆற்றிய சேவை ஒரு நோக்கில் முன்னோடியான சேவையே எனலாம்.

சாதாரண ஒரு தமிழாசிரியனால் ஒரு சிறுவர் பத்திரிகையை நடாத்துவதென்பது ஓரளவில் தியாகத்தின் பாற்பட்டது எனலாம். 40 ஆண்டுகளுக்கு முன்னரே இப்படியான சிந்தனை வலிகாமத்தான் உள்ளத்தில் ஊற்றெடுத்தமை அப்பிராந்தியத்தின் பின்னணியைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது. இதை நடாத்திய காலத்தில் இவர் பெரும் செல்வங் கொழித்த தனவந்தன் அல்ல.

இதன் மூலம் சிறு எழுத்தாளாராக ஆரம்பித்த பலர் பிற்காலத்தில் பெரும் எழுத்தாளர்களாக சாதனை செய்திருக்கிறார்கள்.

இவரது பத்தாண்டுப் பத்திரிகைக் கட்டுக்களை ஒட்டுமொத்தமாகப் பார்வையிடும் போது பிரமிப்படைகிறோம். இத்துனை தொழிற்பாடு சாதாரண ஒன்றல்ல. சிறந்த ஆணவமாகக் கூட அவை திகழ்கின்றன.

வலிகாமம் வடக்கு எல்லையில் அமைந்துள்ள வயாவிளான் கிராமத்தில் வதிந்த ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை ஒரு ஏட்டினைப்பிரசுரம் செய்தார். சுதேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்வகையில் நமது பாஷை, நமது பண்பு, நமது கலாச்சாரம் என்பனவற்றின் வளர்ச்சியை மையமாகக் வைத்து 'சுதேசநாட்டியம்' என்ற பெயரில் பல ஆண்டுகள் இப்பத்திரிகையைத் திறம்பட நடாத்தினார். இவர் இயல்பாகவே தன்மானம் மிக்கவர். அந்நிய

நாகரிகத்தலையீடுகளைக் கண்டித்தவர். ஒரு கண்டனப் பேர்வழி என்றும் கூறலாம். ஆகவே இத்துணிகரமான ஒருவரின் பத்திராதிபர் குறிப்பு, கட்டுரைகள், கவிதைகள் வாசிக்கும் கூட்டம் பெருகியது. நளினம், நக்கல் இளையோடும் வகையில் இவரது ஆக்கங்கள் அமைந்தன. சுதேசவாழ்வை, வளமார்ந்த பண்பு களை நாம் பேணவேண்டும் என்ற பெருநோக்கில் இவருடைய பேனா தொழிற்பட்டது. ஒரு நோக்கில் நாம் எமது விடுதலை வாழ்வைப் பேண வேண்டும் என்பது இவரது ஆக்கங்களில் தெரிந்தது. மலேசியா போன்ற நாடுகளிலும் இவருடைய பத்திரிகைக்குத் தனி வரவேற்பிருந்தது.

இதேவேளை தெல்லிப்பளையில் தொண்டாற்றி வந்த அமெரிக்கமிஷன் ஒரு அச்சகம் அமைத்தும் கல்விக்கூடம் அமைத்தும் கல்வித்துறையில், நற்பணி புரிந்தது. பல சிறந்த நூல்களைப் பிரசுரித்தது. கல்வியால் சிறந்து பொதுசேவையில் மிளிர்ந்த கிறீஸ்த்தவப் பேரறிஞர்கள், போதகர்கள், பண்பாளர்கள் பற்றிய கட்டுரைகளை "உதயதாரகை" என்ற பத்திரிகை மூலம் இவர்கள் பிரசுரித்தார்கள். கிறீஸ்த்தவ தத்துவ விளக்கங்கள் பற்றிய ஆக்கங்களும் அணிசெய்தன. நீண்டகாலம் இப்பத்திரிகை திறம்பட நடாத்தப்பட்டது. கல்வியாளர்கள் பெரிதும் வரவேற்றனர்.

ஈழகேசரி நா. பொன்னையா (குரும்பசிட்டி) அவர்கள் வெளியிட்ட நூல்கள்

I பழைய இலக்கியங்கள் - பகுதிகள் (உரை)

மகாபாரதம்

1. வரணாவதச் சருக்கம்
2. தூது போர்ச் சருக்கம்
3. பழம் பொருந்து சருக்கம்
4. நச்சுப் பொய்கைச் சருக்கம்
5. நாடுகரந்துறை சருக்கம்

இராமாயணம்

6. அகலிகைப்படலம்

நளவெண்பா

7. நளவெண்பா சுருக்கம்
8. சுயம்வர காண்டம், கலிதொடர்காண்டம்
9. நளவெண்பா சுயம்வர காண்டம்

இரகு வம்சம்

10. அயன் எழுச்சிப் படலம்

பிற இலக்கிய நூல்கள்

11. இராமோ தந்தம்
12. அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்
13. குசேலோ பாக்கியான சுருக்கம்

II இலக்கிய வசன நூல்கள்

14. இரகுவம்ச சரிதாமிர்தம்
    - அ. குமாரசாமிப் புலவர்
15. குசேலர் சரிதம்
    - மகாவித்துவான் சி. கணேசையர்
16. கண்ணகிகதை
    - அ. குமாரசாமிப்புலவர்
17. கிராதார்ச்சுனியம்
    - மகோபாத்தியாய வை.இராமசாமி சர்மா
18. சாவித்திரி
    - நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்
19. ஈழநாட்டு தமிழ்ப்புலவர் சரித்திரம்
    - மகாவித்துவான் சி. கணேசையர்.
20. சிசுபால சரிதம்
    - அ. குமாரசாமிப்புலவர்

III இலக்கியத்தொகுப்பு நூல்கள்

21. தமிழ் மலர்மாலை
22. தமிழ் இலக்கியச்சுடர்
23. தமிழ் இலக்கியக் கோவை
24. தமிழ் மஞ்சரி - I
25. தமிழ் மஞ்சரி – II
26. தமிழ் மஞ்சரி - III
27. உரைநடைச்சிலம்பு – I
28. உரைநடைச்சிலம்பு – II
29. தமிழ் இலக்கியத் திரட்டு

IV வாசிப்பு நூல்கள்

30. பாலபோதினி அரிவரிப்புத்தகம்
31. பாலபோதினி முதற்புத்தகம்
32. பாலபோதினி இரண்டாம் புத்தகம்
33. பாலபோதினி மூன்றாம் புத்தகம்
34. பாலபோதினி நான்காம் புத்தகம்
35. பாலபோதினி ஐந்தாம் புத்தகம்
36. பாலபோதினி ஆறாம் புத்தகம்
37. பாலபோதினி ஏழாம் புத்தகம்

V உபபாடப்புத்தகங்கள்

38. பரதன்
39. இராஜாதேசிங்கு
40. தமயந்தி
41. திருமாவளவன்
42. சந்திரமதி
43. இராமாயணச் சுருக்கம்
44. இதோபதேசம்

VI இலக்கிய மஞ்சரி நூல்கள்

45. இலக்கிய மஞ்சரி மூன்றாம் புத்தகம்
46. இலக்கிய மஞ்சரி நான்காம் புத்தகம்
47. இலக்கிய மஞ்சரி ஐந்தாம் புத்தகம்

VII இலக்கண நூல்கள்

48. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்
49. தொல்காப்பியம் - சொல்லதிகாரம்
50. தொல்காப்பியம் - பொருளதிகாரம் -I
51. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - II
52. நன்னூல் மூலம்

53. யாப்பிலக்கண வினாவிடை
54. அணியிலக்கண வினாவிடை

VIII பாஷைப்பயிற்சி நூல்கள்
55. மொழிப்பயிற்சி - I
56. மொழிப்பயிற்சி - II
57. மொழிப்பயிற்சி - III
58. மொழிப்பயிற்சி - IV
59. தமிழ்மொழிப் பயிற்சியும் தேர்ச்சியும் - தி. சதாசிவ ஐயர்
60. பயிற்சி மூலம் பாஷைத்தேர்ச்சி - இரத்தினம் - செல்லையா

IX சரித்திரம்
61. சரித்திரக் கதாவாசகம் இரண்டாம் வகுப்பு
62. சரித்திரக் கதாவாசகம் மூன்றாம் வகுப்பு
63. சரித்திரக் கதாவாசகம் நான்காம் வகுப்பு
64. சரித்திரக் கதாவாசகம் ஐந்தாம் வகுப்பு
65. சரித்திர வினாவிடை - த. தர்மலிங்கம்
66. பிரித்தானிய சக். சரித்திரச் சுருக்கம்
67. மேற்படி ஆங்கிலம் - திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அதிபர் . சி. சுவாமிநாதன் B.A

X பூமிசாஸ்திரம்
68. பூமி சாஸ்திரக் கதைகள் இரண்டாம் வகுப்பு
69. பூமி சாஸ்திரக் கதைகள் மூன்றாம் வகுப்பு
70. பூகோளத் தொடர் பூமிசாஸ்திரம் நான்காம் வகுப்பு
71. பூகோளத் தொடர் பூமி சாஸ்திரம் ஐந்தாம் வகுப்பு

XI சமய நூல்கள்
72. சைவ வினா விடை
73. ஈழ மண்டலத்திருத்தலத் தேவாரமும் திருப்புகழும்
74. சைவத் தோத்திர மஞ்சரி
75. நித்திய கரும விதி
76. திருவாதவூரடிகள் புராணமூலம்
77. சீகாளத்திப் புராணம், கண்ணப்பச் சருக்கம், நக்கீரச் சருக்கம்.
78. தெய்வீக வாழ்வு
79. அடியார் கதைத் தொகுதி - I
80. அடியார் கதைத் தொகுதி - II
81. ஆடியார் கதைத் தொகுதி - III
82. அடியார் கதைத் தொகுதி – IV

(78–82: சிவானந்தவல்லி கனகநாயகம்)

83. திருமுருகாற்றுப்படை மூலம்
84. தோத்திரத் திரட்டு

XII நீதி நூல்கள்
85. ஆத்தி சூடி
86. கொன்றை வேந்தன்
87. வாக்குண்டாம்
88. வெற்றி வேற்கை
89. உலக நீதி
90. நன்னெறி
91. நல்வழி
92. நீதி வெண்பா உரை
93. திருக்குறள் மூலம்

XIII பொது நூல்கள்
94. வைத்தியக் கைமுறைகள் - முதலியார் க. திருச்சிற்றம்பலம்
95. சுத்த போசன பாகசாஸ்த்திரம்
96. தென்னிந்திய சிற்ப வடிவங்கள் - கலைப்புலவர் க. நவரத்தினம்
97. சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு
98. வாழ்க்கை நூல் - ரீ. பி. மாசிலாமணிப்பிள்ளை
99. கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு வழக்கறிஞர் அ. அருளம்பலம்.
100. கணக்குப் பதிவு நூல் - கலைப்புலவர் க. நவரத்தினம்
101. பிள்ளைப்பாட்டு – வட மாகாண ஆசிரியர் சங்கம்

XIV பிறநூல்கள்
102. குடியியல் நூல் ஆறாம் வகுப்பு
103. குடியியல் ஏழாம் வகுப்பு
104. புத்திப் பரீட்சை – அ. சிவசம்பு
105. உயிரிளங்குமரன் நாடகம் - கா. சோமசுந்தரப் புலவர்
106. பவளகாந்தன் அல்லது கேசரி விஜயம் வரணியூர் க. இராசையா
107. அருணோதயம் அல்லது சிம்மக்கொடி
108. அயனாந்த தேசநோய் நூல் - டாக்டர் அ. சின்னத்தம்பி
109. First steps in Reading word Drill – Grace Thurainsigam
110. First steps to English.
111. Spoken English N. Thuraisingam.

ஒரு பிராந்தியத்தின் உயர்நிலை அப்பிராந்தியத்தின் கல்வி சம்பந்தமான தொழிற் பாடுகள், நிறுவனங்கள், மக்களின் அதிதீவிர ஈடுபாடுகள் என்பவற்றைப் பொறுத்தே அமைகிறது எனலாம். இக்கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது வலிகாமம் தனி வழி சென்றிருக்கிறது. எழிலார்ந்த நிலை எய்தியிருக்கிறது. என்றால் அது மிகையாகாது.

சிறப்பாக வலிகாம கல்வி வளர்ச்சியில் காத்திரமான அளவு தரமான பத்திரிகைகள் நடாத்தப்பட்டமை. நூற்றுக்கு மேற்பட்ட தலையாய பிரசுரங்கள் வெளியிடப்பட்டமை வியப்புற வைக்கும் அம்சங்கள் எனலாம். எவருமே சிந்திக்காத அளவிற்கு நயனட்டம் பாராது அறிவுச்சுடர் கொளுத்தும் அரிய நோக்கில் பல வல்லவர்களின் ஆக்கங்கள் அமைந்து இத்துறையை வளர்த்தமை ஈழத்தமிழ் மக்கள் மறக்கவொண்ணா அரியநற்சேவை எனலாம்.

# ஊரும் பேரும் வலிகாமம் வடக்கில் ஓர் ஆய்வு

**திருமதி ப. திலகநாயகம்**
**இ. நி. சேவை**

தனி ஒரு மனிதன், ஒரு உயிர், ஒருபொருள் அல்லது ஒருஇடம் அது உயர்திணையில் அமைந்தால் என்ன அ∴றிணையிலமைந்தாலென்ன, இவற்றை தனித்தும் பிரித்தும் பகுத்தும் அறிய ஒரு பெயர் வேண்டும். தனித்துவத்தைச் சுட்டிக் காட்டி உணர்த்தி நிற்பது பெயர். இதனாலேயே உலகில் தோற்றம் பெற்ற ஒவ்வொரு ஜீவரா சிகளுக்கும் ஒவ்வொரு தாவரத்திற்கும் ஒவ்வொரு இடத்திற்கும், ஒவ்வொரு காலத்திற்கும் அதாவது மனிதனால் கண்டும், கேட்டும் அனுபவித்தும், அறி யப்பட்ட உணரப்பட்ட அத்தனைக்கும் ஒவ்வொரு தனிப்பெயர் சூட்டப்பட்டு வந்தமை மனித வரலாறு காட்டும் உண்மை. மனிதன் வாழும் இடங்கள் அல்லது ஊர்கள் இதற்கு விதிவிலக்கானவை அல்ல. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு ஊரும் வெவ்வேறு இடப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய இடப்பெயர்கள் தோன்றியமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவ்வாறு வழங்கப்பட்ட பெயர்கள் காலப் போக்கில் நிலைத்ததும் உண்டு. சிதை வடைந்ததும் உண்டு. திரிபடைந்ததும் உண்டு. முற்றாகவே மாற்றமடைந்தது முண்டு. மாற்றப்பட்டதும் உண்டு. இத்தகைய இடங்களின் அல்லது ஊர்களின் பெயர் மூலங்களை அறிவதென்பது பிரம்ம பிரயத்தனமே.

இந்த ஊர்ப் பெயர் வரலாறானது உலகெங்கணும் பல மொழியியல் அறிஞர்களாலும் வரலாற்றாளர் களாலும் ஆராயப்பட்டு வருகின்றது. தமிழர் வாழ்ந்த வாழும் இடங்களின் குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்களின் அதிலும் வலிகாமத்தைச் சார்ந்த வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள ஊர்களின் பெயர் மூலங்களை அறியும் முயற்சியாகவே இக்கட்டுரை வரையப்படுகின்றது.

இருக்கு வேதகாலத்தில் மனிதன் எவ்வாறு இயற்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் பெயரிட்டு அழைத்து வழிபடத் தொடங்கினானோ அதே போலத் தான் வாழ்ந்த, பூமியில் தான் கண்ட அம்சங்களாக நிலம், நீர், மலை, பாறை, அணை, ஆறு, தாவரம், பறவை, ஆகியவற்றுக்கும் ஒவ்வொரு பெயரிட்டு அழைத்தது மட்டுமல்லாமல் அவை சார்ந்திருந்த இடங்களிற்கும் அவற்றின் பெயர்களையே பெயராகப் பயன்படுத்தினா மனிதன் காலப் போக்கில் அவர்களின் தொழில்,நிறம், குணம், பழக்கவழக்கம், கலை, பண்பாடு, பிற ஊர்மக்கள் அல்லது மன்னர்வருகை ஆகியவற் றினை மையமாகக் கொண்டும் இடப் பெயர்கள் உருவாயின. எடுத்துக் காட்டாக Mr. Black (கறுப்பு) Mr.Long (நீளம்) Mr.Rock (பாறை) Man (மனிதன்) ஆகியவை இன்றும் மனிதரை அழைக்கப் பயன்படும் பெயர்களாக மேல் நாட்டில் நிலவி வருகின்றதனைக் காணலாம். இங்கே கறுப்பாயி, வெள்ளை, சந்திரன், சந்தனம், குங்குமம், பவளம், சோதி, இரத்தினம்,ஆகிய பெயர்களும் தமிழ்மொழியிலும் இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. மாந்தி, ஒரு ஊர்மக்கள் வேற்றூரிற் போய் குடியேறும் பொழுது தாம் முன்பிருந்த இடத்தின் பெயரையே சூட்டி அழைப்பதுமுண்டு. உ+ம் கொல்லங்கலட்டி - இந்தியாவில் கொல்லம் என்ற இடத்திலிருந்து வந்தவர்கள் குடியேறிய இடம் என்பர். இவ்வாறே நாகர்கோவில், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பெயர்களும் இந்தியாவிலுள்ள ஊர்களின் பெயர்கள் இங்கு வந்தோராற் கொண்டு வரப்பட்டவையே.

முன்பு இலங்கையும் இந்தியாவும் நிலப்பரப்பில் ஒன்றாக இருந்ததென்றும் பின்பே கடற்கோளாற் பிரிக்கப்பட்ட தென்றும் வரலாறு கூறுவ தால் இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் இலங்கையின் பல பாகத்திலும் பல காலத்திலும் குடியேறிய காரணத்தால் அவர்கள் தாம் முன்பு உறைந்த ஊரின் பெயரையே இலங்கையிற் புகுந்த இடத்திற்கும் வழங்கி வந்தமை தெளிவாகும். இவ்வாறு தமிழரும் ஆரியரும் இந்தியாவிலிருந்து வருமுன் வடபகுதியில் நாகர் எனப்படுவோரும் தென்பகுதியில் இயக்கர் எனப்படு வோரும் வதிந்து வந்ததாக வரலாறு கூறும். நாகர்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வகை மொழியைப் பேசியதாக ஆராய்ச்சியாளர் கூறுவர். இதனால் அவர்கள் காலத்தில் வழங்கி வரப்பட்ட பல ஊர்ப் பெயர்கள் தற்பொழுது வழக்கிலும் உண்டு. சில திரிந்தும் சிதைந்தும் காணப்படுவதையும் அவதானிக்கலாம். மேலும் பல்லவ சோழ பாண்டிய நாயக்க மன்னர்கள் இந்தியாவில் சிறப்புற்றிருந்த காலத்திலும் அவர்களின் செல்வாக்காலும் இங்கும் பலபெயர்கள் அவர்களுடன் தொடர்புபட்டு உருவாயின.

இவை தவிர குறிப்பிட்ட ஒரு காலத்தில் இந்தியாவிலும் இலங்கை யாழ்ப்பாணத்திலும் குறிப்பாக வலிகாமம் வடக்கிலும் மக்கள் கூடுதலாக இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய பௌத்த மதத்தினைத் தழுவியிருந்த காரணத்தினால் அம்மதம் சார்ந்த பெயர்களும் கலந்து வரலாயின. இதனைத் தவறாகப் புரிந்து கொண்டு வட இலங்கையிலே அல்லது வலிகாமம் வடக்கிலே சிங்களம் பேசும் குடிமக்களும் சிங்கள அரசும் இருந்த காரணத்தினால் தான் இப்பெயர்கள் ஏற்பட்டன என்று சொல்வாருமுளர். முக்கியமாக வத்தை, கமம், புலம், புரம், சிட்டி, ஈட்டி, ஆகிய ஈற்றுக்களைக் கொண்ட பெயர்கள் தென்இலங்கையிலும் இருப்பதனால் அவ்வாறே இப்பெயர்கள் வந்திருக்க வேண்டும் என்பர் சில ஆய்வாளர். கல்லடி வேலனார் சுவாமி ஞானப்பிரகாசர் திரு. குமாரசுவாமி, ஹோர்ஸ்பரோ ஆகியோர் இப்பெயர்கள் சிங்களத்திலிருந்து வந்ததென்பர். ஆனால் நுணுகி ஆராயும்பொழுது இப் பெயர்கள் எல்லாம் பழந்தமிழ்ச் சொற்களின் அடிவழிப்பிறந்து பின் சிதைந்தும் திரிந்தும் தற்காலப் பெயர் நிலையை அடைந்ததென்பது தெளிவாகும். வத்தை என்பது மட்டுமன்றி பத்தை கொத்தை என்ற முடிவுள்ள இடப்பெயர்களும் உண்டு. மக்கள் வதிந்த இடம் வத்தை எனப்பட்டது.மக்கள் ஒன்று கூடி வட்டமாக இருந்த குடியிருப்புகள் வட்டம்(தமிழ்ச்சொல்) வட்டை- வத்தை என்று மாறியது. ஈரலிப்பான நிலம் வற்றிய பின் மக்கள் குடியேறி இருந்ததால் வற்றல் - வத்தல் வத்தை ஆகியிருக்கலாம். வத்தகப்பழம் அல்லது வத்தாப்பழம் என்ற பெயரையும் வத்தாப்பளை என்பதனையும் இதனுடன் ஒப்புநோக்கலாம். சோழியவத்தை, சோழராதிக்கத்தின்போது குடியேறிய மக்கள்வாழ்ந்த இடம் எனப்படலாம். இப்பெயர் துன்னாலையில் உண்டு. புலம்- புரம் என்பனவும் முறையே கிராமம் பட்டினத்தைக் குறிப்பனவே. வலிகாமம் செம்பாட்டுமண் கொண்டதா யினும் நிலத்தின் கீழ் பாரிய கற்பாறை களைக் கொண்ட காரணத்தால் கலட்டி, இட்டி, சிட்டி போன்ற முடிபுகளைக் கொண்ட ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றன.

வலிகாமம் என்ற பெயரை எடுத்துக் கொண்டால் வலிய +கமம் = வலிகமம் வலிகாமம் ஆகியது. அதாவது வலிய கற்பாறைகளைத் தன்னகத்தே கொண்ட நிலம் என்று பொருள்படும்.வலிய கமக்காரரை உடைய நிலம் என்றும் பொருள் கொள்ளலாம் "வெலிகம"என்ற சிங்களச் சொல்லே பின் இவ்வாறு மாறியதென்று கூறுவாருமுளர். சிங்களத்தில் வலி என்பதற்கு மணல் என்பது பொருள். அப்படியானால் வலிகாமம் மணல் கிராமம் என்ற பொருள்படும். ஆனால் வலிகாமமோ செம்பாட்டு நிலத்தைக் கொண்டது. எனவே அச்சொல் பொருந்தாது.

மேலும் மாருதப் புரவீகவல்லியை மணம்புரிந்த உக்கிரசிங்கன் பாதுகாப்புக்கருதி தன்தலைநகரை வல்லிபுரத்திற்கு - செங்கட நகருக்கு மாற்றினான் என்றும் அவ்விடமே அதாவது மாருதப்புரவீகவல்லி பட்டினம் என்னும் பொருள்பட
வல்லி + புரம் என அழைக்கப்பட்டது என்றும்கூறப்படுகிறது. மாருதப்புரவீக
வல்லியின் பெயரால் இவ்வாறு பல இடப்பெயர்கள் வழங்குகின்றன.

(மாருதப்புரவீக) வல்லி + புரம் என்பது வல்லிபுரம் என்பது போல
(மாருதப்புரவீக) வல்லி + கமம் = வல்லி கமம் >வல்லிகாமம்> வலிகாமம் என்று மருவி வந்திருக்கவும் இடமுண்டு. யாழ்ப்பாணத்தின் வடக்கேயுள்ள நிலப்பரப்பு மாருதப்புரவீகவல்லிக்குச் சொந்தமாக இருந்த காரணத்தினால் வல்லிகமம் வல்லிகாமம் என்றும் பின் வலிகாமம் என்றும் மாறியிருக்கலாம்.
வலிகாமம் இன்று வடக்கு, தெற்கு, கிழக்கு, வடமேற்கு, மேற்கு என ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் வலிகாமம் வடக்கு சகல வளங்களும் கொழிக்கும் பூமியைக் கொண்டதாக விளங்கியது. வலிகாமம் வடக்கைப் பொறுத்தவரை அனேகமான ஊர்களின் பெயர்களில் புலம், புரம், இட்டி, சிட்டி, கலட்டி, வத்தை, கடவை ஆகிய முடிபுகளைக் கொண்ட ஊர்ப் பெயர்களே கூடுதலாகக் காணப்ப டுகின்றன.அவற்றுள் புலம் என்ற முடிபைக் கொண்டவை பன்னிரண்டு ஊர்களும் புரம் என்ற முடிபைக் கொண்டவை 08 ஊர்களும் வரம் ஈற்றில் மூன்றும் ஊர்களும் வத்தை என்ற முடிபைக் கொண்டவை 25 ஊர்களும், இட்டி என்ற முடிபைக் கொண்டவை 08 ஊர்களும், கலட்டி என்ற முடிபைக் கொண்டவை 09 ஊர்களும், சிட்டி என்ற முடிபைக் கொண்டவை 04 ஊர்களும் கடவை என்ற முடிபைக் கொண்டவை 05 ஊர்களும் இருப்பதாக அறியக் கிடக்கின்றது. அவையாவன...........

**புலம்**

| | |
|---|---|
| காட்டுப்புலம் | தையிட்டிபுலம் |
| கோவிற்புலம் | பெரியபுலம் |
| மணற்புலம் | கருகப்புலம் |
| கட்டுவன்புலம் | குட்டியப்புலம் |
| ஒட்டகப்புலம் | மயிலயப்புலம் |
| பள்ளப்புலம் | முருங்கையப்புலம் |

**புரம்**

| | |
|---|---|
| மாவிட்டபுரம் | துர்க்காபுரம் |
| வசந்தபுரம் | வள்ளுவன்புரம் |
| அந்தோனிபுரம் | கிறிஸ்தவபுரம் |
| சுந்தரபுரம் | தந்தைசெல்வாபுரம் |

**வத்தை**

| | |
|---|---|
| நாவத்தை | நாக்கணாவத்தை |
| பத்தாவத்தை | செந்தாவத்தை |
| கிரியாவத்தை | கூத்தியாவத்தை |
| நீலாவத்தை | விளங்காவத்தை |
| களகட்டாவத்தை | மாவத்தை |
| இராவத்தை | குடவத்தை |
| சாத்தனாவத்தை | அம்பட்டாவத்தை |
| பொல்வத்தை | கொத்தாவத்தை |
| பள்ளியவத்தை | வவுணாவத்தை |
| கெயல்வத்தை | தம்பலாவத்தை |
| யார்வத்தை | அலவத்தை |
| வல்லுவத்தை | சங்குவத்தை |
| சாத்தாவத்தை | |

**இட்டி**

| | |
|---|---|
| போயிட்டி | அளவெட்டி |
| தேரிட்டி | மயிலிட்டி |
| தையிட்டி | கள்ளவெட்டி |
| தோலகட்டி | எருப்பிட்டி |

**கலட்டி**

| | |
|---|---|
| தடுவான்கலட்டி | மாவைகலட்டி |
| கொல்லன்கலட்டி | தலமன்கலட்டி |
| பெரியகலட்டி | சாத்தாகலட்டி |
| பயிரிக்கலட்டி | பரந்தகலட்டி |
| மூத்தான்கலட்டி | |

**சிட்டி**

| | |
|---|---|
| விளிசிட்டி | குரும்பசிட்டி |
| தஞ்சிட்டி | கஞ்சிட்டி |

**கடவை**

| | |
|---|---|
| பெருமாக்கடவை | வேர்க்குத்திக்கடவை |
| பட்டிக்கடவை | பத்தர்கடவை |
| றப்பியல்கடவை | |

**வரம்**

| | |
|---|---|
| நகுலேஸ்வரம் | கணேஸ்வரம் |
| நாகேஸ்வரம் | |

வலிகாமம் வடக்கின் ஊர்ப் பெயர்களை முழுமையாகப் பார்க்கும்பொழுது 45 கிராமஉத்தி யோகத்தர் (J/212 - J/256 ) பிரிவுகளைக் கொண்ட இப்பிரதேசம் 16 பெரும் கிராமங்களைக் கொண்டதாக அமைந் துள்ளது.

அவையாவன ∴

| | |
|---|---|
| 1.மல்லாகம் | 9.கீரிமலை |
| 2.அளவெட்டி | 10.கட்டுவன் |
| 3.இளவாலை | 11.குரும்பசிட்டி |
| 4.தெல்லிப்பளை | 12.மயிலிட்டி |
| 5.கொல்லங்கலட்டி | 13.தையிட |
| 6.பன்னாலை | 14.பலாலி |
| 7.மாவிட்டபுரம் | 15.வசாவிளான் |
| 8.பளைவீமன்காமம் | 16.காங்கேசன்துறை |

இத்தகைய 16 பெயர்களை யுடைய கிராமங்களும் மேலும் பல சிற்றூர்களாக அல்லது குறிச்சிகளாக வெவ்வேறு பெயர் கொண்டனவாகப் பிரிந்து அமைந்துள்ளன.
அவை வருமாறு∴

**1. மல்லாகம்** – (இக்கிராமம் 3 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது.
மல்லாகம் தெற்கு - J/212
மல்லாகம் மத்தி - J/213
மல்லாகம்வடக்கு-J/214

கல்லாரை, நிலியம்பனை, இக்கிரானை, நரியிட்டான், குளமன்கால், கொந்தனை, கோணப்புலம்

**2. அளவெட்டி** –(இக்கிராமம் 6 கிராம அலுவலர் குருக்கள்கிணற்றடி பிரிவுகளை உடையது)
அளவெட்டி வடக்கு J/215
அளவெட்டி மத்தி J/216
அளவெட்டி கிழக்கு J/217
கணேஸ்வரம் J/218
அளவெட்டி தெற்கு J/219
அளவெட்டி மேற்கு J/220

கணேஸ்வரம், கூத்தன்சீமா, அழகொல்லை, செட்டிச்சோலை, பத்தானை, தடுவான் கலட்டி, தேரிட்டி, கும்பழாவளை, அலுக்கை, கும்பலை, வெள்ளியம்பதி, மணற்புலம், பெரியகிணற்றடி, பத்தர் கடவை, கருகப்புலம், பெருமாக்கடவை, அலவத்தை, கலைநகர்- கெயல்வத்தை, மைலியப்புலம், அடுவம்பற்று,தம்பலாவத்தை, தம்மளை, நாக்கணாவத்தை, பத்துப்பனையடி, காட்டுப்புலம் , சாத்தா கலட்டி, வாரிசீமா, மாவத்தை, அம்பத்தை, குருவளை, குடவத்தை, முருங்கையப்புலம்- நுங்கையப்புலம் - முருகபுரம், இராவத்தை, பள்ளியவத்தை

**3.இளவாலை** – (இக்கிராமம் 2 கிராம அலுவலர் ஆனைவிழுந்தான் பிரிவுகளை உடையது.
இளவாலை வடக்கு-J/221
இளவாலை மேற்கு -J/222

பத்தாவத்தை, காடிவளை, சேந்தாங்குளம், மயிலன்கூடல், வேர்க்குத்திக்கடவை ( சென்ஜேம்ஸ்). ஒல்லுடை, சித்திரமேழி, வசந்தபுரம்,வலித்தூண்டில், இராகியிட்டி, கூவில், சீந்திப்பந்தல், வேரவில், மாரீசன்கூடல், உய்யனை, கருகம்பானை,சோடக்கன், பொல்வத்தை, இந்தனை, நாதோலை,

**4. தெல்லிப்பளை** – (இக்கிராமம் 4 கிராம அலுவலர் பிரிவுகளை உடையது.)
தெல்லிப்பளை கிழக்கு J/227
தெல்லிப்பளை J/228
துர்க்காபுரம் J/229
தந்தை செல்வாபுரம் J/230

கோவிற்புலம், தலமன்கலட்டி, சித்தியம்புளியடி, பெரியபுலம், முல்லாத்தனை, சூடுவிழுந்தான், சோலையாவளவு, கிளானை, நல்லகிணற்றடி, காகட்டாவத்தை, துர்க்காபுரம், சாத்தனாவத்தை, பகாதனை, சூழாம்பத்தை, தந்தைசெல்வாபுரம், புதுத்தோட்டம், அம்பனை, கட்டுவன்புலம், விராங்கொடை, வவுணாவத்தை,

**5. கொல்லங்கலட்டி** –(இக்கிராமம் ஒரு கிராம அலுவலர் பிரிவினை மட்டும் கொண்டது. மாவிட்டபுரத்திலிருந்து பிரிந்தது. கொல்லன்கலட்டி - J/225)

கிளானை, மாவைகலட்டி, சடசப்பை, அங்குடுவனை, யார்வத்தை, கப்பங்கிரி, கஞ்சிட்டி, பெரியாவுடை

**6.பன்னாலை** – (இக்கிராமம் 2 கிராம அலுவலர் பிரிவுகளையுடையது
வித்தகபுரம் - J/223
பன்னாலை -J/224)

தவளக்கிரி, வித்தகபுரம், - விளிசிட்டி, அட்டமட்டை, பரந்தகலட்டி, மயிலப்பை, தையிட்டிப்புலம், களனை, எருப்பிட்டி, நாவலடி, கள்ளவெட்டி, கொட்டடி, கம்பளை, நீலாவத்தை, நெருஞ்சியோலை, வல்லுவத்தை, பருத்தியோலை, கயந்தப்பை, கைக்குலப்பை

**7. மாவிட்டபுரம்** -- (இக்கிராமம் 2 கிராம அலுவலர் பிரிவுகளையுடையது)
மாவிட்டபுரம் - J/231
மாவிட்டபுரம் தெற்கு - J/232

சாயுடை,மடத்தடி, சிந்துவாமூலை, கருப்பணிக் கொத்தை, கொக்கன், போத்தலை, வேள்வை, செந்தாவத்தை, பட்டிக்கடவை கல்லுப்பிடுங்கி, மூத்தன்கலட்டி, இலகடி

**8.பளைவீமன்காமம்** – (இக்கிராமம் 2கிராம அலுவலர் பிரிவுகளையுடையது.)
பளைவீமன்காமம் வடக்கு J/236
பளைவீமன்காமம் தெற்கு J/237

வீணியவரை, பளை, கூத்தியாவத்தை, மயிலப்பை, றப்பியல்கடவை, கிரியாவத்தை

**9. கீரிமலை** – ( இக்கிராமம் ஒரு கிராம அலுவலர் பிரிவை மட்டும் கொண்டது.)
நகுலேஸ்வரம் - J/226

நகுலேஸ்வரம், கருகம்பானை, போயிட்டி

**10. கட்டுவன்** – (இக்கிராமம் 4 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது.)
கட்டுவன் - J/238
கட்டுவன் மேற்கு - J/239
தென்மயிலை - J/240
வருத்தலைவிளான் - J/241

பங்கிராய், தண்ணீர்தாழ்வு, ஊரங்குனை, பட்டன்தோட்டம், தென்மயிலை, வருத்தலைவிளான்

**11. குரும்பசிட்டி** – (இக்கிராமம் 2 கிராம அலுவலர் பிரிவுகளை உடையது.)
குரும்பசிட்டி - J/242
குரும்பசிட்டி கிழக்கு - J/243

மாயேளு, வவுனதம்பை, பலட்டன்

**12. மயிலிட்டி** – (இக்கிராமம் 3 கிராம அலுவலர் பிரிவுகளை உடையது )
மயிலிட்டி வடக்கு- J/246
மயிலிட்டி தெற்கு - J/248
மயிலிட்டி வடக்கு - J/251

கிராமக்கோட்டடி, ஆதிமயிலிட்டி, சங்குவத்தை முலவை, கொழுவியன்கலட்டி, வள்ளுவன்புரம் தென்னம்பிராய், திருப்பூர், வீரமாணிக்கதேவன்துறை பெரியநாட்டுதேவன்துறை, விளங்காவத்தை, கொத் தாவத்தை

**13. தையிட்டி** – (இக்கிராமம் 3 கிராமஅலுவலர் பிரிவுகளையுடையது.)
தையிட்டி கிழக்கு J/247
தையிட்டி வடக்கு J/249
தையிட்டி தெற்கு J/250

ஆவளை, ஊரணி

**14. பலாலி** (இக்கிராமம் 5 கிராம அலுவலர் பிரிவுகளை உடையது )
பலாலி தெற்கு J/252
பலாலி கிழக்கு J/253
பலாலி வடக்கு J/254
பலாலி வடமேற்கு J/255
பலாலி மேற்கு J/256

சம்புக்கிளானை-(பெரியகலட்டி), பயிர்க்கலட்டி, அந்தோனிபுரம், கிறிஸ்தவபுரம், பள்ளப்புலம், முருக்கடி, தொட்டுவை

**15. வயாவிளான்** (2 கிராம அலுவலர் பிரிவுகளை உடையது)
வயாவிளான் கிழக்கு J/244
வயாவிளான் மேற்கு J/245

சுந்தரபுரம், குட்டியப்புலம், ஒட்டகப்புலம், தோலகட்டி, வடமூலை, கோணாவளை, தேகாமம், மந்திரம்பிராய், கரம்பைக்கடவை, தென்மூலை, மானம்பிராய்

16. காங்கேசன்துறை (3கிராம அலுவலர் பிரிவு களை உடையது )

காங்கேசன்துறை மத்தி J/234

காங்கேசன்துறை தெற்கு J/235

காங்கேசன்துறை மேற்கு J/233

சந்தையடி,மான்கொல்லை, மாம்பிராய், ஊராவில், வயலடி, குருவீதி, கிரிசிட்டி, புதுவீட்டடி

இவ்வாறு வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் கிராமங்களும் குறிச்சிகளும் மேலே காட்டிய பெயர்களைக் கொண்டு விளங்குகின்றன. இவை இப்பெயர்களைக் கொண்டமைக்குக் காரணங்கள் எவையாக இருக்கலாம் என்று சற்று நோக்குவோம். பொதுவாக மக்கள் வாழும் இடங்களின் நிலம், நீர், சூழல், பயன்பாடு, பண்பாடு, குடிமக்கள், ஆட்சி, அந்நியர்ஆதிக்கம், ஆகியவற்றை மையமாகக் கொண்டே ஊர்ப்பெயர்கள் தோன்றி இருக்கின்றன என்று மொழியியலாளர்கள் அல்லது வரலாற்றாளர்கள் கருதுகிறார்கள். இந்தப் பெயர்களைப் பற்றி அல்லது பெயர்ப் பிறப்பாக்கத்தைப்பற்றி இலக்கண வலலுனர் பவண்நதி முனிவர் தன்னுடைய நன்னூலில் கூறியிருப்பதையும் கருத்தில் கொள்வது நலம். அவர் நன்னூல் சொல்லதிகாரத்தில் பெயரியலில் சொற்பாகுபாடு பற்றிக் கூறும்பொழுது அதுவே -

''இயற் சொற் றிரிசொ லியல் பிற்பெயர்வினை
என விரண்டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வட சொலணு காவழி''

எனக் கூறியுள்ளார். அதில் சொற்கள்

**1.இயற்சொல்**

**2.திரிசொல்**

**3.திசைச்சொல்**

**4.வடசொல்**

என நான்கு வகையாக வரும் என்கிறார். அதாவது

**இயற்சொல் :-** இயல்பால் பொருளுணரும் சொல்.
உதாரணம் - மண் , பொன்

**திரிசொல் –** இயற்சொல் போல அன்றி திரிபடைந்து வேறுபட்டு வருவது.
ஒரு சொல் குறித்த பல பொருளாயும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாயும் இது வரும்.

உதாரணம்:-

1.கிள்ளை, சுகம் ,தத்தை என்பன கிளி என்பதனைக் குறிக்கும்.

2.வாரணம் - என்பது யானை தோழி சங்கு ஆகிய மூன்றையும் குறிக்கும்.

**திசைச்சொல் -** பல திசைகளிலிருந்தும் வந்து சேர்ந்த சொல் உதாரணம்

ஆ - பெற்றம்
தாய் - தள்ளை
தந்தை - அச்சன்
சிறுகுளம் - பாழி

வடசொல் - இது வடமொழியிலிருந்து வரும் சொல் தற்பொழுது இது பிற மொழிகளில் இருந்து வரும் சொற்களனைத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இச்சொற்கள் தமிழ்ச்சொற்களை ஒப்பனவாகித் தமிழ்ச்சொல் போலவே வழங்கப்படுவன.

உதாரணம்

அமலம், கமலம், சுகி, போகி, அரண், அரி என்பன

பவணந்திமுனிவர் சொற்களுக்கு அல்லது சொல் வகைக்கு கூறிய இவ்விலக்கணம் இடச்சொல் அல்லது இடப்பெயர்களைப் பொறுத்தவரையிலும் பொருந்துவனவாகவே அமைந்துள்ளன. உதாரணம் -

**1.இயற்சொல்லில்அமைந்த இடம்:–**

செம்பாடு, மணற்புலம், காட்டுப்புலம், கொக்கன்

**2.திரிசொல்லில் அமைந்த இடம்:**

அளவெட்டி,அழுகொல்லை

**3.திசைச்சொல் சார்ந்த இடம்:–**

கிறிஸ்தவபுரம்,அந்தோனிபுரம், வீரமாணிக்க-தேவன்துறை

**4. வடசொல்லில் அமைந்த இடம்:–**

நகுலேஸ்வரம்

மேலும் அவர் பெயர்ச்சொல் பற்றிக் கூறும்பொழுது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''இடுகுறி காரண மரபோடாக்கந்
தொடர்ந்து தொழில காலந்தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணை மாலிடத் தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே''

இதன்படி பெயர்ச் சொல்லை

1. இடுகுறிப்பெயர்
2. காரணப்பெயர்
3. ஆகுபெயர்
4. சுட்டுப்பெயர்

என நான்கு வகைக்குள் அடக்கி அவற்றை மேலும் பல வகையினதாக விளக்கி நிற்கின்றார். அந்த வகையில் ............

**இடுகுறிப்பெயர்:–** என்பது காரணங் கருதாது தொன்று தொட்டு வழங்கப்பட்டுவரும் சொல் ஆகும். உதாரணம் - நரியிட்டான் , இக்கிரானை

**காரணப்பெயர்** என்பது காரணங்கருதி பண்டுதொட்டு வரும் செயல் உதாரணம்

ஆனைவிழுந்த இடமாதலால் - ஆனைவிழுந்தான்
கீரிமுனிவர் வாழ்ந்த இடமாதலால் - கீரிமலை
குதிரை முகம் நீங்கிய இடமாதலால் - மாவிட்டபுரம்
கல்லுப்பூமியாதலால் - கலட்டி இவை இரண்டும் அதாவது இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும் தொன்று தொட்டு மரபு வழிவந்தன.

ஆகுபெயர்:- என்பது மரபு போலத் தொன்றுதொட்டு வருதலன்றி நடுவிலே ஒரவரால் ஆக்கப்பட்டு வருதலே ஆகுபெயர். இவ்வாகுபெயரானது
பொருள்
இடம், காலம், சினை, குணம்
தொழில் என அறுவகையாலும் வரும். அதாவது பொருளால்வருபெயர் - வெற்றிலைக்கேணி இடத்தால் வரும் ஆகுபெயர்கள் அல்லது இடம்பற்றிவரும் பெயர்கள் பலவகைப்படும்.

**1.புராதன இடப்பெயர்**

உதாரணம் - மாரீசன்கூடல், மயிலன்கூடல்

**2.நிலத்தன்மையால் வரும் இடப்பெயர்கள்**

உதாரணம் - செம்பாடு , கலட்டி, மணற்புலம், கல்லுப்பிடுங்கி

**3. நீர்நிலை சார்ந்து வரும் இடப்பெயர்கள்**

உ+ம் - நீர்வேலி, நெடுங்கேணி, சேந்தாங்குளம், ஊறணி, தண்ணீர்த்தாழ்வு

**4. மக்கள் அல்லது குடியிருப்போர் சம்பந்தமான இடப்பெயர்கள்**

உ+ம்
புதுக்குடியிருப்பு, குட்டியப்புலம், பத்தர்கடவை, மூத்தான்கலட்டி, தந்தை செல்வாபுரம்,

**5. விருட்சங்கள் சார்ந்த இடப்பெயர்கள்**

உ+ம்
மருதடி, சீந்திப்பந்தல், பத்துப்பனையடி, புதுத்தோட்டம், சித்தியம்புழியடி, வேம்படி, நெல்லியடி

**6. ஆண்டோர் அல்லது ஆட்சியாளர்**

தொடர்பில் வந்த இடப்பெயர்கள்
உ+ம்
சங்கிலியன்தோப்பு, பெருமாக்கடவை, வீரமாணிக்கதேவன்துறை, பெரியநாட்டுத் தேவன்துறை, மயிலிட்டித்துறை

**7. தெய்வம் தொடர்பான இடப்பெயர்கள்**

உ+ம்
நகுலேஸ்வரம், நாகேஸ்வரம், கணேஸ்வரம், சாத்தாகலட்டி, நீலியம்பனை

**8. துறைமுகம் அல்லது வியாபாரம் சார்ந்த இடப்பெயர்கள்**

உ+ம்
காங்கேசன்துறை, மயிலிட்டித்துறை,சேந்தான்குளம், இராவத்தை, பெருமாக்கடவை

**காலத்தால் வரும்ஆகுபெயர்கள் அல்லது காலம் பற்றி வரும் இடப்பெயர்கள்**

அதாவது வருடம் பருவம் நட்சத்திரம் நாள் பொழுது ஆகியவற்றைச் சார்ந்து வரும் பெயர்கள்
உ+ம்
இராவத்தை, குடவத்தை

**சினையாகு பெயர்கள் அல்லது சினைபற்றி வரும் இடப்பெயர்கள்**

உ+ம்
சிறுவிளான், பெரியகிணற்றடி

**குணத்தால் வரும் ஆகுபெயர்கள் அல்லது குணம் சார்ந்து வரும் இடப்பெயர்கள்**

உ+ம்
சித்திரமேழி, வசந்தபுரம், புதுத்தோட்டம், அம்பனை, அம்பத்தை,

**தொழிலாகு பெயர்கள் அல்லது தொழில் சார்ந்து வரும் இடப்பெயர்கள்**

உ+ம்
அம்பட்டாவத்தை, தட்டாதெரு, பத்தர்கடவை

மேற்கண்டவாறு பவணந்திமுனிவர் பெயரியலில் பெயர்களின் தோற்றுவாய் பற்றிக்கூறிய விடயங்கள் ஊர்களின் பெயர்களை அறிவதற்கும் அல்லது பெயர் மூலங்களை அறிவதற்கும் ஓரளவு துணைபுரியும் எனக் கருதலாம். இனி வலிகாமம் வடக்கின் ஊர்ப்பெயர்கள் எவ்வாறு தோற்றம் பெற்றிருக்கலாம் என்பதனை நமக்குக் கிடைக்கக்கூடிய விபரங்களைக் கொண்டு ஆராயலாம். ஆராய்ந்து பார்ப்போம்.

**மல்லாகம்**

மல்லர் + கமம் அல்லது மல்லர் + அகம்
என்பது மருவியும் குறுகியும் மல்லாகம் எனப் பெயர் பெற்றிருக்கலாம். அன்று தொட்டு இன்று வரை இந்நிலப்பரப்பில்
கமம் செய்யப்படுவது யாவரும் அறிந்ததே.

**கல்லாரை**

இவ்விடம் கற்பாறைகள் நிறைந்தது. அதனால் கல்லை அரணாகக் கொண்டிருந்தது என்னும் பொருள்பட கல்+ அரண்= கல்லரண் என்பது நாளடைவில் சிதைந்து கல்லாரை எனவந்திருக்கலாம். இன்னும் ஆர்ப்பு என்ற சொல்சிறிய கற்களைக் குறிக்கும். எனவே கல்+ ஆர்ப்பு என்பது சிதைந்து கல் + ஆரை = கல்லாரைஎன்றும் வந்திருக்க வாய்ப்புண்டு.

**நீலியம் + பனை**

இவ்விடத்தில் முன்னொருபோது நீலி என்ற பெண் நடந்து வந்த களைப்பினால் அருந்த நீர் இன்றி தாகத்தினால் மிகவும் வருந்தி விநாயகரை வேண்டி நீருக்காக நிலத்தைத் தோண்டும்பொழுது விநாயகரின் உருவுடன் ஒரு கல்லும் நீரும் .கிடைத்தன என்றும் அப்பெண் நீரைப் பருகி விநாயகர் சிலையை அவ்விடத்திலேயே விட்டுச்சென்றதாகவும் பரம்பரைக் கதை ஒன்றுண்டு நீலியம்பனை விநாயகர் ஆலயமும் குளமும் இப்பெயரிலேயே வழங்கப்படுகின்றன. நீலி + அம் + மனை அல்லது நீலி + அமமன் + மனை என்பது நீலியம்மனை என்று வந்து நாளடைவில் அல்லது பேச்சு வழக்கில் நீலியம்பனையாக மாறியிருக்கலாம்.

**இக்கிரானை**

இதனை இக்கீரனை என்றும் சொல்வதுண்டு இக்கீரனை என்பது மருவி இக்கிரானை என வந்துள்ளது. வயல்வெளிகட்கு இடையே அணைபோல இவ்விடம் இருந்த காரணத்தினால் இந்த+ கிராம+ அணை என்பது தேய்ந்து இக் + கிராம +அணை இக்கிரானை என வந்திருக்கக் கூடும்.

**நரியிட்டான்**

நரியிட்டான் என்பது மரபு வழிவந்த இருகுறிப்பெயராகவும் இருக்கலாம்.

**குளமன்கால்**

இங்கே வெட்டுக்குளம், கட்டுக்குளம், என இருகுளங்கள் உண்டு. இக்குளங்களுக்கு அப்பால் இருந்த நிலம் குளத்திற்கு அங்கால் எனப் பேசப்பட்டு வந்த சொல் குளம் + அங்கால் பின் குளமங்கால் என வந்திருக்கலாம். அல்லது குளங்களுக்கு இடையேயுள்ள பாதையாக குளத்திலிருந்து நீர் எடுத்துச் செல்லும் வழியாக அல்லது வாய்க்காலாக கானாக இருந்ததால் குளம் + மண் + கான் என்பது திரிந்து குளமன்கால் என வந்திருக்கவும் வாய்ப்புண்டு.

**தொந்தனை**

இதன் பெயருக்குக் காரணம் அறிய முடியவில்லை.ஒன்றுக்கும் உதவாததை "தொந்தனா" என்று சொல்வதுண்டு இந்நிலம் எதற்கும் பயன்படாமல் இருந்திருக்கலாம்.

**கோணப்புலம்**

அய்கே இருந்த நிலம் அல்லது தோட்டம் கோணலாய் அமைந்திருக்கலாம். அல்லது கோணவடிவில் அமைந்திருக்கலாம். புலம் என்பது இடத்தைக் குறிக்கும். புலம் பெயர்ந்தவர்கள் என்று இடம் பெயர்ந்தவர்கள் அதாவது நிரந்தர இடத்தை விட்டுப் பிரிந்தவர்கள் -பெயர்ந்தவர்களை அழைப்பது வழக்கம். கோணல் + புலம் = கோணப்புலம் அல்லது கோணம் + புலம் = கோணப்புலம் என வந்திருக்கலாம்.

**2. அளவெட்டி**

அளறு + வெளி = அளவெட்டியாகத் திரிபடைந்து இருக்கலாம். அளறு என்றால் சேறு என்றும் ஒரு பொருள் உண்டு. என்று சூடாமணி நிகண்டு கூறுகின்றது. அளவெட்டி வழுக்கையாற்றில் மையமாகக் கொண்ட ஈரலிப்பான பசுமைப் பிரதேசம். ஈரலிப்பு நிறைந்ததனால் அளறு என்ற சொல் பொருந்தும்.வெளி என்பது காலப் போக்கில் வெடி என மாற்றமடைந்து அளறு + வெளி அளறு + வெடியென மாறிப் பின் திரிபடைந்து அளறுவெட்டியாகிப் பின் அளவெட்டி என அழைக்கப்பட்டிருக்கலாம். இங்கேயுள்ள விவசாய நிலப்பரப்பு சீரான அளவுள்ளதாக அளக்கப்பட்டு வெட்டப்பட்ட காரணத்தினாலும் அல்லது அளவான வாய்க்கால்கள் வெட்டப்பட்ட காரணத்தினாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கவும் இடமுண்டு.

**கணேஸ்வரம்:-**

கணேசன் எனப்படும் விநாயகர் ஆலயம் இருந்ததன் காரணத்தினால் இப்பெயர் பெற்றது. குருக்கள் கிணற்றடி.

குருக்களால் பயன்படுத்தப்பட்ட காரணத்தினாலும் ஆலயக்குரு ஒருவர் கிணற்றைச்சுத்தம் செய்யும்பொழுது பிள்ளையர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டு அருகில் வைத்து வணங்கப்பட்டதாலும் இப்பெயர் பெற்றதென அறியமுடிகின்றது.

**கூத்தன் சீமா :-**

பெயர்க்காரணம் அறியமுடியவில்லை. கூத்தாடலில் வல்ல சீமான் ஒருவரின் பெயரால் அழைக்கப்பட்டருக்கலாம் கூத்தாடும் இடம் (சீமா + இடம்) என்றும் பொருள்படும்.

**அழகொல்லை:-**

இங்கேயுள்ள கோயில் கட்டப்படும் பொழுது அதன் அளவுகள் பற்றிய விபரப்பத்திரம் தொலைந்து விட்டதாயும் அதனால் கட்டடத்தை தொடராமல் மெய்வருந்திய ஆசாரியார் மறுநாள் வேலைக்குத் திரும்பிய போது கட்டட அளவுகள் எழுதப்பட்ட 16 மடிப்புக்களைக் கொண்ட ஒலை ஒன்றை கண்டதாகவும் பின் அதன் படியே கட்டடம் முழுமையாக அமைக்கப்பட்ட தென்றும் கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு. அளவு + ஒலை = அளவோலை ஆசி பேச்சுவாக்கில் அளகோலையாக மாறி பின் அழகொல்லை என திரிபு பெற்றதெனக் கருதலாம். மேலும் இவ்விடம் முன்பு இராசதானி இருந்த பொழுது பூந்தோட்டமாய் இருந்திருக்கலாம் என்று ஆழுகு +கொல்லைஅழகொல்லை என கூறுவாருமுளர். அழகொல்லைப்பிள்ளையார் ஆலயமும் மாருதப்புரவீகவல்லியன் ஏற்பாட்டால் கட்டப்பட்ட ஏழு ஆலயங்களுள் ஒன்று என்பது வரலாறு.

**செட்டிச் சோலை:-**

இதுவும் முன்பு இராசதானி இருந்த பொழுது பூந்தோட்டப் பகுதியாய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

**பத்தானை:-**

இதன் பெயர் விபரம் தெரியவரவில்லை. இராசதானி அமைந்த காலத்தில் பத்து(10) ஆணைகளைக் கொண்ட சேனைகள் அங்கே தங்கி இருந்திருக்கலாம். மேலும் தஞ்சிட்டி, தடுவான்+கலட்டி, தேரிட்டி, ஆகியவை மரபு, வழி இடுகுறிப் பெயர்களாக அமையலாம். தேரிட்டி என்பது இராச பரம்பரையினரின் தேர் தரித்து நின்ற இடமாகவும். இருந்திருக்கலாம்.

**கும்பளாவளை:-**

இங்குள்ள பிள்ளையார் கோயிலும் மாருதப்புரவீகவல்லியின் கட்டளையின் பெயரில் அமைக்கப்பட்டது. அந்நாளில் குடிமக்கள் இங்கு கும்பலாக அதிகமாக வாழ்ந்திருக்கலாம் வளை என்பதும் குடியிருப்பு நிலத்தையே குறிக்கும் ஆழியவளை, கண்டாவளை என்ற பெயர்களையும் நாம் ஒப்பிடலாம் "எலிவளை ஆனாலும் தனிவளை வேணும் என்பது பழமொழி. கும்பி + ஆவளை மணல் கும்பிகள் சூழ்ந்த இடமாகவும் இருந்திருக்கலாம்

**அலுக்கை**

பெயர்க்காரணம் தெரியவரவில்லை அருகேயுள்ள வயல் வெளியில் தொழில்புரிந்த விவசாயிகள் அலுப்படைந்தபொழுது தங்கிய இடமாகவும் இருந்திருக்கலாம். அலுத்து + இருக்கை = அலுக்கை

**கும்பலை**

காணிகளில் தேங்கும் மழை நீரை வடிகால் வெட்டி சிறுவாய்க்கால்கள் மூலம் கும்பலாக வழுக்கையாற்றுடன் இணைக்கும் காரணத்தினால் கும்பலை அல்லது கும்பளை எனப் பெயர் பெற்றது,

கும்பல் + அளை = கும்பளை எனப்பட்டது கும்பல் என்பது குவியல் அளை என்பது சிறுவாய்க்கால் கும்பளை என்பது நிறைய வாய்க்கால்களைக் கொண்ட இடம்.

**வெள்ளியம்பதி**

இது வெள்ளியம்பத்தை எனவும் அழைக்கப்படும் அதாவது அதிகளவில் விளாமரங்களைக் கொண்ட இடம். விளாமரத்தினை வெள்ளி எனவும் அழைப்பர். வெள்ளி+ அம்+ பதி வெள்ளியம்பதி

**மணற்புலம்**

மணல் நிறைந்த பூமியைக் கொண்ட இடம் மணற்புலம் மணல் + புலம் = மணற்புலம்.

**பத்தர்கடவை**

பொற்கொல்லர் அல்லது பொற் தொழில் செய்வோர் வாழும் இடம் என்ற காரணத்தல் வந்த பெயர் பத்தர் + கடவை = பத்தர் கடவை இதனைத் தட்டாகடவை என்றும் அழைப்பர்.

**கருகப்புலம்**

கருவேப்ப மரங்கள் நிறைந்த இடமாக இருந்திருக்கலாம் கருவேம்பு + புலம் = கருவேப்புலம் இது நாளடைவில் கருகப்புலம் என மாறியிருக்கலாம். மேலும் இங்குபயிர் எப்போதும் கருகுவதாலும் இப்பெயர் வந்திருக்கலாம்.

**பெருமாக் கடவை**

இதுவும் மாருதப்புரவீக வல்லியால் அமைக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களில் ஒன்றாகும் பெருமாக்கடவை பிள்ளையார் கோவிலை அமைத்த பொழுது மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் பெரிதும் நீங்கியது எனறும். அதனால் பெருமாக்கடவை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறுவர். இதைவிட இராசதானி இருந்த காலத்தில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும்பொழுது வரிகட்டல், அனுமதிபெறல், இளைப்பாறல் முதலியவற்றைச் செய்யும் கடவையாகவும் இவ்விடம் இருந்திருக்கலாம் இங்கே பழைய பெருமாள் கோயில் ஒன்று இருந்திருக்க வேண்டுமென்று கருதுவாரும உளர்.

**அலவத்தை**

சேறு நிறைந்த ஈரலிப்பான் பிரதேசமாய் இருந்திருக்கவேண்டும். வத்தை என்பது கட்டுமரமென்றும் குடியிருக்கும் நிலமென்றும் பொருள்படும் நீர் வற்றி வறண்ட மரம் கட்டுமரமாக வத்தை எனப்படுகிறது. அதே போல சேறாக இருந்து நீர் வற்றி வறண்ட அல்லது காயந்த நிலமும் வத்தை எனப்படும் எனவே அலவத்தை என்பது சேறாய். இருந்து அல்லது ஈரலிப்பாய் இருந்து காய்ந்த நிலத்தில் மக்கள் குடியிருந்த பொழுது அளறு + வத்தை அளவத்தையாகி பின் அலவத்தை என அழைத்திருக்கலாம் . பழந்தமிழர் வாழ்வில் மக்கள் கூட்டம் வட்டமாகவே காணப்பட்டதால் அவர்களிருந்த கூட்டம் வட்டம் என அழைக்கப்பட்டது (தற்பொழுது கூட மாவட்டம் என அழைக்கப்படுவது அனைவரும் அறிந்ததே) எனவே வட்டம் என்பது வத்தை என மாற்றம் பெற்று மக்கள் இருப்பிடத்தை அல்லது வாழும் நிலத்தைக் குறிப்பிட்டிருக்கவேண்டும் இதனாலேயே வலிகாமம் வடக்கில் வத்தை என்ற முடிவைக் கொண்ட பல ஊர்களின் பெயர்கள் காணப் படுகின்றன. வலிகாமம் வடக்கில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களிலும் வத்தை என்ற முடிவைக் கொண்ட ஊர்களின் பெயர்களைக் காணலாம் உ+ம் வடமராட்சி துன்னாலை கரவெட்டியில் தலவத்தை,குடவத்தை

கொற்றாவத்தை, முதலியவும் சுண்ணாகத்தில் சூறாவத்தை போன்ற பெயர்களும் இருப்பதைக் காணலாம். இவ்வாறு அளவெட்டியில் ஒன்பதும் இளவாலையில் இரண்டும் தெல்லிப்பளையில் மூன்றும் கொல்லங் கலட்டியில் ஒன்றும் பளைவீமன் காமத்தில் இரண்டும் மயிலிட்டியில் மூன்றுமாக வத்தை என்ற முடிவினைக் கொண்ட ஊர்ப் பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை போல பத்தை, கொத்தை, பற்று. சப்பை, ஆகிய முடிவுகளைக் கொண்ட ஊர்ப் பெயர்களும் இங்கே காணப்படுகின்றன. வத்தை என்ற பெயர் முடிவுகளே பத்தை எனத் தரிபடைந்திருக்கலாம். இதைவிட முற்றாக இந்தப்பெயர்கள் மாற்றப்பட்டது. முண்டு. கெயல்வத்தை என்ற கிராமம் தற்பொழுது கலைநகர் என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

**வாரியப்புலம்**

புலம் என்பது மக்கள் வாழும் இடம் மேட்டுநிலம், வயல் ஆகியவற்றைக் குறிக்கும். சங்க நூல்களிலேயே புலம் என்பது பலதடவைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் புலம்பன் என்பதும் அகநானூற்றில் சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத் தலைவனைக் குறித்ததுடன் புலம் என்ற சொல் நெய்தல் நிலத்தையும் முல்லை நிலத்தையும் குறிப்பதாக வந்துள்ளமையைக் காணலாம். இங்கே வாரியப்புலம் என்ற பெயர் வாரியார் என்பவருக்குச் சொந்தமாக அமைந்த நிலமாகவும் இருக்கக்கூடும். வவுனியா செட்டிக்குளத்திலும் வாரிக்குட்டியூர் என்றிருப்பதனை நாம் இதனோடு ஒப்பிட்டு பார்க்கலாம். இதே போலவே புலம் என்ற ஈற்றுப் பெயர் கொண்ட 12 ஊர்ப்பெயர்களை வலிகாமம் வடக்கில் காணலாம். மல்லாகத்தில் ஒன்றும் அளவெட்டியில் நான்கும் தெல்லிப்பளையில் மூன்றும் பன்னாலையில் ஒன்றும் பலாலியில் ஒன்றும் வசாவிளானில் இரண்டுமாக புலம் என்ற முடிவினைக் கொண்ட ஊர்ப்பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இங்கே உள்ள **அருவம்பற்று, தஞ்சிட்டி தம்பளை** ஆகிய ஊர்ப்பெயர்களின் விபரம் அறிய முடியாதிருக்கின்றது. மேலும் நாக்கணா வத்தை பத்துப்பனையடி, காட்டுப்புலம் , முருங்கையப்புலம் என்ற ஊர்களும் உண்டு. நாக்கணவன் குருவிகள் அதிகம் தங்கி இருந்ததனால் நாக்கணாவத்தை என்றும் பத்துப்பனைகள் ஒன்றாக ஒரே இடத்தில் இருந்ததனால் பத்துப்பனையடி என்றும், செடிகள் வளர்ந்து காடுமண்டிக் கிடந்ததனால் காட்டுப்புலம் என்றும் பெயர் வந்திருக்கலாம். முருங்கை யப்புலம் முருங்கைமரம் அதிகம் இருந்ததனால் அப்பெயர் பெற்றது. தற்பொழுது முருகபுரம் என்று இது அழைக்கப்படுகின்றது. நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் தேவஸ்தானம் இருப்பதனால் இப்பெயர் உருவானது .குருவளை என்ற ஊர்ப்பெயரின் காரணம் அறியமுடியவில்லை எனினும் குருகு + அளை = குருவளை என வந்திருக் கலாம்.அதாவது குருகுமணல் சார்ந்த இடம் (அளை என்பதும் இடத்தைக் குறிக்கும் ) குருவளை வைரவர் கோயிலும் இங்குண்டு.

**3. இளவாலை**

இங்கு இளம் வாழைகள் அல்லது வாழைத்தோட்டங்கள் காணப்பட்டதுடன் இலைவாழை என்னும் வாழை இனம் ஏனைய இடங்களை விடச் செழித்து வளர்ந்த இடமாக இருந்த காரணத்தி னாலும் இலைவாழை என்பது நாளடைவில் திரிந்து இளவாலை எனப் பெயர் கொண்டிருக்கலாம்.எனக் கருத இடமுண்டு. மேலும் இளம் ஆலமரங்கள் இருந்த காரணத்தினலும், பல ஆலைகள் இருந்ததினாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்க வாய்புண்டு. இவ்வூரில் சாய வேர்களை வளர்த்து நூல்களுக்குச் சாயம் போடப்பட்டமை யையும் அதனாலேயே வேர்க்குத்திக் கடவை என்று ஒரு குறிச்சி அழைக்கப்பட்டமையையும் அறியமுடிகிறத சாயம்போட முடிகிறது சமயம் நூல்களை துணியாக நெய்வதற்கு ஆலைகள் இருதிருக்கலாம்.

**ஆனை விழுந்தான்**

ஆனை + விழுந்தான். சோடி இளவரசி மாருதப்புரவீக வல்லியின் யானை இங்குள்ளபிள்ளையாரை விழுந்து வணங்கியதென்றும், இளவரசியின் யானை விழுந்து இறந்த இடமென்றும் இரண்டு கூற்றுக்கள் உண்டு. ஆனை விழுந்ததால் ஆனை விழுந்தான் எனப்பட்டது.

**பத்தாவத்தை.**

இது ஒரு குறிச்சியின் பெயர். பத்தாவது + வத்தை அல்லது பத்தா - பத்தாத + வத்தை என்பதிலிருந்து வந்திருக்கலாம். பத்தாத + சிறியகுறிச்சி எனப்பொருள்படலாம்.

**மயிலன்கூடல்**

மயில் + ஒன்று + கூடல் மயில்கள் கூடுதலாகக் கூடி உறைந்ததால் இப்பெயர்வந்ததென்பர். மாவிட்டபுரம் ஆலய மயில்கள் கூடலாகவிருந்த இவ்இடத்திலேயே தங்கியதென்பர். மயிலாய் பூரிலிருந்து வந்தமக்கள் குடியிருந்த இடமென்றும் கூறுவர்.

**வேர்க்குத்திக்கடவை.**

ஒரு வகைச்சாய வேர்ச் செடிகளை வளர்த்துப்பின் புடவைகட்குச் சாய மூட்டுவதற்காக அவ்வேர்களைக் குத்திப் பிடுங்கிக் கொடுத்தோர் வாழ்ந்ததால் இப்பெயர் வந்த தென்பர். இவ்விடம் தற்பொழுது சென்ற ஜேம்ஸ் என அழைக்கப்படுகிறது. சென்ஜேம்ஸ் ஆலயம் இருக்கும் காரணத்தினாலாகும்.

**சேந்தாங்குளம்:.**

சேந்தன என்பது முருகனின் இன்னொரு நாமம். காங்கேசன் துறைபோல இங்கேயும் கடல் நீர் நிலையில் சேந்தன் என்று முருகனை வழிபட்டிருக்க இடமுண்டு. மேலும் தமிழகத்திலிருந்து வந்த சேந்தன் என்பவன் தளம் அமைத்து மீன்பிடித்த துறையென்பதால் சேந்தன் + தளம் என இருந்து பின் அது சேந்தன் குளம் என மருவி சேந்தான் + குளம் என அழைக்கப்படலாயிற்று என்றும் கூறுவர்.

**சித்திரமேழி**

சித்திரம் + மேழி - அழகிய கலப்பை கொண்டு உழுது விவசாயம் செய்ததால் வந்த பெயரென்பாருளர். தமிழகத்திலிருந்து சித்திர மேழிப் பெரிய நாட்டார் என்போர். உழவுத்தொழிலைச் செய்வதற்காக இங்குவந்து குடியேறி விவசாயம் செய்ததாலும் இப்பெயர் வந்ததென்பர்.

**வசந்தபுரம்.**

இது ஒரு குடியேற்றத்திட்டம் மக்கள் வாழ்வை வளம்படுத்தி மாதிரிக்கிராமமாக அமைக்கப்பட்டதால் இப்பெயர் சூட்டப்பட்டது. 02-06-1983இல் பிரதி அமைச்சர் கௌரவ P.C இம்புலான இக்குடியேற்றத்திட்டத்தைத் திறந்து வைத்தார். இது தவிர மாருதப்புரவீக வல்லியைக் காதலித்த ஈழத்தமிழ் மன்னன் உக்கிரசிங்கன் அவளை மணஞ்செய்து வசந்த காலத்தை இன்பமாகக் கழித்த இடம் என்பதாலும் இப்பெயர் பெற்றிருக்கலாம். எனக் கூறுபவருமுண்டு.

**வலித்தூண்டல்.**

வலிமை+ தூண்டில் + வலித்தூண்டில் - வலித்துாண்டலாகப் பின்நாளில் அழைக்கப்படலாயிற்று.

**கூவில்.**

கூடி+ இல் = கூவில் பலரும் ஒன்றாகக் கூடி வீட்டில் இருந்தவாறே குடிசைக்கைத்தொழிலாக கைப்பணி, பனங்கட்டி என்பவற்றைச் செய்வதால் இப்பெயர் வந்திருக்கலாம். இவ்விடம் செய்ததால் இப்பெயர் வந்திருக்கலாம்- இவ்விடம் கள்ளிற்கும், பனங்கட்டிக்கும் பேர் பெற்றது. யாரையும் கூவி அழைக்காமலே இல்லங்களை நாடிக் கள்ளருந்தப்பலரும் வந்த காரணத்தால் அல்லது ஆரம்பகாலத்தில் கூவி + இல் - கூவி இருந்த இடத்திலேயே கள் வியாபாரம் செய்ததாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். பனையிலிருந்து இறக்கியகள் கூவி - நுரைத்து - எழுந்ததாலும் இப்பெயர் வந்திருக்கலாம். கள்ளிற்கு இவ்விடம் விசேடமாகுமானது.

**சீந்திப்பந்தல்.**

சீந்தில் கொடிகள் பந்தலாகப் படர்ந்திருக்கலாம். இன்று இவ்விடம் வாழ்வகம் என அழைக்கப்படுகின்றது. 1983 இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு கப்பல் மூலம் வந்த மலையகத்தமிழரைக் குடியேற்ற கத்தோலிக்ககுருமார் ஏற்படுத்திய குடியேற்றத் திட்டமே வாழ்வகம்.

**மாரீசன் கூடல்.**

மாரீசன் + கூடல் இராமாயண கால மாரீசனின் பெயரில் வழங்குவதாகக் கூறுவாருமுளர். மயில்கள் கூடுவதாலும் இப்பெயர் வந்திருக்கலாம்.

**கருகம்பானை**

இவ்விடத்திலிருந்த பனை ஓலைகளிலும் குருத்துக்களிலும் கருமை நிறம் படர்ந்திருந்த காரணத்தினால் இப்பெயர் பெற்றது. கருமை+ அம்+ பனை = கருமையம்பனை இது பின் கருகம்பனையாகிப்பின் கருகம்பானயாக மருவி வந்தது. என்று கூறப்படுகின்றது.
இங்கே பிரசித்தி பெற்ற அம்மன் கோயில் ஒன்று உண்டு இங்கே வாழ்ந்த மக்கள் கருமாரி அம்மனை வழிபட்டிருக்கலாம். கரு + அம்மன் + மனை என்பது பின் கருகம்மன்மனை ஆகிப் பின் திரிபடைந்து கருகம்பானையாக மருவி வந்திருக்கவும் இடமுண்டு. இங்குள்ள அம்மன் தற்பொழுது இராஜராஜேஸ்வரி அம்மன் என அழைக்கப்படுகின்றமை யாவரும் அறிந்ததே.

**ஒல்லுடை**

இங்கே ஒல்லுடைப்பதி ஞானவைரவர் கோயில் ஒன்று இருப்பதனால் தலப் பெயனாக அமைந்திருக்கலாம். அவ்விட மக்கள் முழுநம்பிக்கையுடன் வைரவரை வழிபட்டுக் கேட்ட பலன் பெற்றதால் இவ்வாறு அழைத்திருக்கலாம். ''ஒல்லும் வகையால்'' குள்ளும் இதனை உணர்ந்தும்.

**தெல்லிப்பளை**

பளை என்ற இடம் இரண்டாகப் பிரிந்து தெல்லி + பளை = தெல்லிப்பளையாகவும் பளை + வீமன் காமம் பளைவீமன்காமம் எனவும் ஆயிற்று தெல்லி என்ற தலைவனின் கட்டளையின் கீழ் இருந்தநிலம தெல்லிப்பளை ஆயிற்று என்பர். மாவிட்டபுரத்தின் அடுத்ததாகவுள்ள கிராமம் தெல்லிப்பளை. மாருதப்புரவீகவல்லி தன்குதிரைமுகம் மாறப் பெற்றுத் தங்கியிருந்த இடம் தெல்லிப்பளை எனப்பட்டது சிலர் டெல்கி என்பது மாறித் தெல்லியாக வந்திருக்கலாம் என்பர். இதனைக் தெல்லிப்பள்ளி, தல்லிப்பள்ளி என்று அழைப்பாருமுளர் தெல்லிப்பளையில் 18ம்

எனத்திரிந்து வந்திருக்கின்றது. தாம் மயிலாப்பூர் வாசிகள் என்று இவ்வூர் மக்களும் கூறுவர். மேலும் மாவிட்டபுரத்தின் மயில்கள் வந்து கூடித்தங்கியதாலும் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

**மாவிட்டபுரம்**

குதிரை முகம் நீங்கிய இடம் மா + விட்ட + புரம் அதாவது குதிரைமுகம் நீங்கிய இடம் என்று பொருள். மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் நீங்கிய இடம் என்று பொருள், மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் நீங்கிய இடமாதலால் இப்பெயர் ஏற்பட்டது. என்பர். இதனை விட மகா விட்டன் என்ற தளபதி பொறுப்பாயிருந்த இடமாதலால் மகாவிட்டன் + புரம் = மகா விடடபுரம் என மாறிப்பின் மாவிட்டபுரம் என மருவியது என்று கூறுவாருமுளர்.

**வல்லிக்கிணற்றடி**

மாருதப்புரவீக வல்லி குளித்த கிணற்றடி வல்லிக்கிணற்றடி என அழைக்கப்பட்டது இப்பொழுது சாயுடை என அழைக்கப்படுகின்றது. என அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

**வேள்வை**

பண்டை நாட்டுத் தொண்டை மண்டலத்துக் காரைக்காட்டு வேளாளர் பலர் குடியேறி வாழ்ந்த இடம் என அறியக்கூடியதாய் உள்ளது. வேளாள் வசிக்கும் இடம் வேள்வை.

**பளைவீமன்காமம்**

வீமன் + கமம் என்பது வீமன் காமம் ஆயிற்று. இது வீமன் என்பவருக்குச் சொந்தமான நிலத்தை உடைய ஊர். மகாபாரத்தில் வரும் வீமனையும் இதனுடன் தொடர்புபடுத்துவர் கூத்தாடும் சிறந்த கலைஞனுக்கு கதாபாத்திரத்தின் பெயரை வைக்கும் வழக்கம் இன்றும் உண்டு. வீமன்பாத்திரமேற்ற சிறந்த நடிகனின் கமம் அல்லது நிலம் வீமன் காமம் எனப்பெயர் பெற்றிருக்கலாம். பஞ்ச பாண்டவர்கள் வந்து நகுலேஸ்வரத்தைத் தரிசித்ததாக வரலாறு கூறுகின்றது. கோயிலைத்திரிசித்த வீமன் விரும்பித் தங்கியிருந்த இடம் வீமன்காமம் என அழைக்கப்பட்டது. என்றும் கூறுவர்.

இங்கே வீணியவரை, கூத்தியாவத்தை, றப்பியல்கடவை, கிரியாவத்தை, ஆகியகுறிச்சிகளும் உள.

**கீரிமலை.**

இது தற்பொழுது நகுலேஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது. நகுலமுனிவர் தனது கீரிமுகம் நீங்க இங்குள்ள தீர்த்தக் கேணியில் நீராடி, இவ்வாலயத்தை நீண்டநாள் தரிசித்ததன் பலனாகக் கீரிமுகம் நீங்கப் பெற்றார் என்றும், அதனால் இவ்விடம் கீரிமலை என்று அழைக்கப்பட்ட தென்றும் வரலாறு கூறும்.

**போயிட்டி.**

போர் + ஈட்டி = போயிட்டி. இது கற்பாறைகள் நிறைந்த இடம். இவ்விடத்திலேயே காங்கேசன் துறை சீமேந்து தொழிற்சாலை அமைந்ததால் தற்பொழுது மக்கள் குடியிருப்புக்கு இடமில்லாமற் போய்விட்டது. இப்பொழுது போயிட்டி என்ற இடம் இல்லை. சீமெந்துத் தொழிற்சாலையே இருக்கின்றது.

**கட்டுவன்**

இந்தியாவில் சேரன் செங்குட்டுவன் ஆட்சி செய்த காலத்தில் இப்பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும். குட்டுவன் என்பது கட்டுவன் என நாளடைவில் திரிபடைந்து வந்திருக்க வேண்டும் குட்டுவனூரில் இருந்து வந்து குடியேறியவர்களின் இடம் குட்டுவனூரர் என்று வழங்கப்பட்டு பின் கட்டுவன் எனத்திரியடைந் திருக்கலாம்.

கட்டுவனில் பங்கிராய், தண்ணீர்த்தாழ்வு, ஊரங்குனை, பட்டன்தோட்டம் வறுத்தலை விளான், தென்மயிலை முதலிய பல குறிச்சிகள் இருக்கின்றன.

**தண்ணீர்த்தாழ்வு**

கட்டுவனில் கிணறு வெட்டும்போது தண்ணீர் மிகவும் தாழ்வாக அதாவது கீழாக இருந்த காரணத்தினால். தண்ணீர்த்தாழ்வு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**ஊரங்குனை**

ஊர் + அங்கு + நீர் = ஊரங்குநீர் ஊரங்குனி என்று வந்து பின்னர் ஊரங்குனையாக மாறியது. ஊரில் அங்கேதான் நன்னீர் இருந்தது. எனக்கொள்ளலாம்.

**வறுத்தலை விளான்**

இங்கே வெற்றிலைச் செய்கை பரந்திருந்த காரணத்தினால் இப்பெயர் பெற்றிருக்கலாம். தற்பொழுதும் நாட்டு வழக்கில் வெறுவெற்றிலை என்று வெற்றிலையைக் கூறும் வழக்கம் உண்டு வெறு + வெற்றிலை = வெறு வெற்றிலை என்பது நாளடைவில் வெறுத்தலை என மாறி வறுத்தலை என மாறி வந்திருக்க இடமுண்டு வெத்தலை என்று கூறுவது இன்னும் வழக்கிலுண்டு தென்மயிலை, பட்டன் தோட்டம், ஆகியன தொன்று தொட்டு காரணப்பெயர்களாக வழங்கிவரப்படுகின்றன.

**குரும்பசிட்டி**

குறும்பர் இனத்தினரிருவர் இங்கு வந்து பாளையம் அமைத்து வாழ்ந்தனர். என்றும் அவர்கள் வாழ்ந்த இடம் குரும்பசிட்டி, என அழைக்கப்பட்டதாயும், அதனால் அவ்விடக் காணிகளின் பெயரும் குரும்பசிட்டி என உறுதி முடிக்கப்பட்டதாயும் அறியக்கிடக்கின்றது. மேலும்

குறும்பர் என்ற இனத்தவர் அங்கு வாழ்ந்த காரணத்தாலும் குறும்பர் + சிட்டி என்பது குரும்பசிட்டி என மருவி வந்திருக்கலாம்.

இங்கு மாயெளு, மடத்தடி, பலட்டன் ஆகிய குறிச்சிப் பெயர்களும் உள்ளன அதிக பனை தென்னைகள் இங்கு இருந்த காரணத் தினாலும்,தென்னம் குரும்பை குரும்பட்டி என இன்றும் பேச்சு வழக்கில் அழைக்கப்படுகின்ற காரணத்தினாலும் ,குரும்பட்டி என்பது திரிபடைந்து குரும்பசிட்டி என வந்திருக்கலாம்.

**12. மயிலிட்டி.**

இங்குமயில்கள் தங்கியிருந்த இடமாதலாலும் இப்பெயர் வந்திருக்கலாம். தென் இந்தியாவிலிருந்து முக்கியமாக மயிலாப்பூர், மயிலாடுதுறை ஆகிய இடங்கிளிலிருந்து வந்துகுடியேறியோர் இருந்த இடமாகவும் இருக்கலாம். இங்கு குடியேறிய படைத்தலைவர்கள் இருந்த இடமாகவும் இருக்கலாம். வீரமாணிக்கதேவன்துறை, பெரிய பெரியநாட்டுத்தேவன்துறை என இரண்டு துறைகளைக் கொண்டது. மயிலிட்டித்துறை இது மயில் + ஈட்டி + துறை என்றும் வரும். அதாவது மயில்சின்னம் பொறித்த ஈட்டிகளைக் கொண்ட வீரர்கள் உறைந்த இடம் என்று பொருள்படும் மயில் + ஈட்டி + துறை என்பது பின்மயில் + இட்டி + துறை என மருவி வந்தது. துறை என்பது துறைமுகம் அந்நாளில் இந்தியாவிலிருந்து வந்திறங்கும் துறையாக இதனைப்பாவித்தனர். அண்மைக்காலத்திலும் இது மீன்பிடித்துறைமுகமாக இருந்து வந்துள்ளது. கடந்த வருடங் கூடத் தேவைகாரணமாக இத்துறைமுகத்தில் கொழும்பிலிருந்துவந்த பிரயாணிகளும், பொருள்களும் கப்பலிருந்து இறக்கிக் கொண்டுவரப்பட்டமை யாவரும் அறிந்ததே இங்கு உள்ள குறிச்சிகளின் பெயர்கள் அனேகமாகக் காரணங்கருதிதொன்று தொட்டு வழங்கி வருகின்றன. கிராமக்கோட்டடி, ஆதிமயிலிட்டி, சங்குவத்தை, கொழுவியன் கலட்டி, வள்ளுவன்புரம், தென்னம்பிராய், விளங்காவத்தை, ஆகிய பெயர்கள் இத்தகையனவாகக் காணப்படுகின்றன.

**தையிட்டி**

இங்கு தென்னிந்தியாவில் இருந்து வந்த வீரர்கள் அல்லது படையினர் இருந்ததாகக் கருத இடமுண்டு. அவர்கள் தெய்வப்பற்று மிக்கவர்களாக தெய்வ + ஈட்டி = தெய்வ ஈட்டிகளைப் போரிற் பயன்படுத்தியதால் இப்பெயர்வந்திருக்கலாம். அல்லது மிகக் கூரியபகைவரைத் தாக்கக்கூடிய அல்லது தைக்கக் கூடிய ஈட்டிகளை அவர்கள் வைத்திருந்திருக்கலாம். தை + ஈட்டி = தையீட்டி என வந்து பின் தையிட்டி என குறுகியிருக்கலாம்.

இங்கு ஆவளை, ஊறணி, என இருகுறிச்சிகள் உள்ளன.

**ஆவளை**

என்பது இடப்பெயர். கண்டாவளை ஆழியவளை என்பவற்றை இதனுடன் ஒப்பிடலாம்.

**ஊறணி**

இப்பெயர் பல பிரதேசங்களிலும் உண்டு. நீர் ஊறுகின்ற இடத்திற்கு மிக அண்மையில் உள்ள இடம் ஊறுதல் + அணி = ஊறணி என வழங்கப்படும்.

**பலாலி**

பலாலி என்பது அளை, ஆலை, ஆலி என்னும் இடப்பெயர் முடிபுகளைக கொண்ட சொல் வகையுள் அடங்கும் கிளாலி, நவாலி, என்பனவும் இத்தகைய முடிபுகளைக் கொண்ட ஊர்ப்பெயர்களே இது கடற்கரையை அண்மித்த பிரதேசம் பல் + ஆழி என்பது பல் ஆலியாக மாறிப்பின் பலாலியாகத் திரிபடைந்திருக்கலாம். பல் + ஆழி பலாலி கிளை + ஆழி கிளாலி நவ + அழி = நவாலி மேலும் பள்ளம் + ஆழி பள்ள + ஆழி பள் + ஆழி பல் + ஆலி பலாலி என திரிந்துவந்து மிருக்கல்படம் ஆழமான சமுத்திரத்திற்கு அண்மையில் உள்ள பிரதேசம் எனப்பொருள்படும் கிளாலி என்பதும் சமுத்திரத்தின் (கடல் நீரேரி ) ஒரு கிளையாதனால் கிளாலி என வந்திருக்கலாம் மேலும் பல் + ஆலி பலாலி என்பது பல மயில்கள் ஆலிக்கும் (மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்து ஆலிங்கனம் செய்தல்) இடம் என்று பொருள் கொள்வாருமுளர். இது தவிர பலசாலியான வீரர்கள் உறைந்ததிருந்த இடமாகவும் இருந்திருக்கலாம் பலசாலி பின் பலாலியாகத் திரிபடைந்திருக்கலாம்.

இங்கே பள்ளப்புலம், சம்புக்கிளானை பயிரிக்காட்டி, அந்தோனிபுரம், கிறிஸ்தவபுரம், முருக்கடி போன்ற குறிச்சிகளும் உள்ளன. இவை அனேமாகக் காரணப்பெயர்களாகவே அமைந்துள்ளன.

பள்ளம் + புலம் பள்ளப்புலம் சம்பு + கிளைனை ஸ்ரீ சம்புக்கிளானை, பயிரி + கலட்டி = பயிரிக்கலட்டி, அந்தோனி + புரம் அந்தோனிபுரம் கிறீஸ்தவபுரம் + புரம் கீறூஸ்தவம், முருங்கை + அடி = முருக்கடி எனப்படும் தொட்டுவை என்ற குறிச்சியும் இங்கே இருக்கின்றது.

**வசாவிளான் / வயாவிளான்**

சிறுவிளான் , பெரிய விளான் போல வசாவிளானும் ஒரு இடப்பெயராகும். வசதியாக வாழ்ந்தவர்கள் இருந்த இடம் வசதி + விளான்

வசாவிளான் இங்கு விளாமரங்கள் நிறைய இருந்திருக்கவேண்டும் .இங்கே ஒட்டகப்புலம், குட்டியப்புலம், தோலகட்டி, வடமூலை, தென்மூலை, கோணாவளை, சுந்தரபுரம், தேகாமம், மந்திரம்பராய், கரம்பைக்கடவைமுதலிய குறிச்சிகளும் இருக்கின்றன. இவைகள் அனேகமாக புதிய மக்கள் குடியேற்றங்கள் பற்றி வைக்கப்பட்ட இடுகுறிப்பெயராயும் காரணப்பெயராயும், காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சுந்தரபுரம் ஒரு மக்கள் குடியேற்றத்திற்கு எக்காரணமுமின்றி வைக்கப்பட்ட பெயர் ஆனால் *ஒட்டகப்புலம்* என்பது காரணப்பெயர் ஒட்டு + அகம் + புலம் = ஒட்டகப்புலம். இங்கே கை, கால், உடலில் ஏற்படும் முறிவுகளை சீராக ஒட்டவைத்து வைத்தியம் செய்யும் சமத்தர்பரம்பரை இருந்த காரணத்தினால் ஒட்டகப்புலம் எனப்பெயர் பெற்றது.

**தோல கட்டியில் இருந்த ஆச்சிரமம்** பேர்பெற்றது இங்கே இருந்த அருட்தந்தையரும் அருட்சகோதரிகளும் நெல்லி, திராட்சைப்பழங்களைக் கொண்டு பழரசங்களை நன்கு தயாரித்து உற்பத்தி செய்து வந்தனர். தோலை அகற்றிப் பழரசங்களை உருவாக்கியதால் தோல் + அகற்றி = தோலகற்றி என்பது தோலகட்டி என மருவி வந்திருக்கலாம். மேலும் தோலில் கட்டுக்கள் ஏற்பட்டதனால் செய்யப்பட்ட வைத்தியத்தினாலும், இப்பெயர் வந்திருக்கலாம் குருத்தோலை கட்டும் வழக்கம் இப்பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதாலும் குருத்தோலைகட்டி, தோலகட்டியாக திரிந்தும் வந்திருக்கலாம்.

**16. காங்கேசன் துறை**

காங்கேசன் என்ற முருகனின் விக்கிரகத்தினைக் கொண்டு வந்ததன் காரணத்தினால் இப்பெயர் பெற்றது என்பர். காங்கேசன் என்ற பெயருடைய படைத்தலைவன் வந்திறங்கிய இடமாதலால் இப்பெயர் பெற்றது. என்று கூறுவாருமுளர். இங்கே சந்தையடி, மான் கொல்லை, வயலடி, குறுவீதி, ஆகியகுறிச்சிகள் உண்டு.

வயல + அடி = வயலடி.
குரு + வீதி = குருவீதி ஆகியபெயர்கள் காரணங்கருதி அமைந்த பெயர்களாகக் காணப்படுகின்றன.

நிறைவாக வலிகாமம் வடக்கில் ஊரும் பேயரும் பற்றி என்னால் இயன்றவரை கிடைத்த நூல் ஆதராங்களைக் கொண்டும், பொது மக்கள் கிராம உத்தியோகத்தவர் வாயிலாக அறிந்த செய்திகளைக் கொண்டும், சுயமாகச் சிந்தித்தும் இக்கட்டுரையை வரைந்துள்ளேன். இன்னும் இவ்வூர்ப்பெயர்கள் பற்றி ஆராயப்பட வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. இக்கட்டுரையை வரைவதற்குத்தங்கள் பிரிவின் குறிச்சிப் பெயர்களைத் தந்துதவிய கிராமஉத்தியோகத் தர்களுக்கும், அப்பெயர்ப் பட்டியலைத் தொகுத்து உதவிய கிராம உத்தியோகத்தர் திரு. கே. கே. வேலாயுதம்பிள்ளை அவர்களுக்கும், தேவையேற்பட்ட போதெல்லாம் ஆய்வு செய்வதற்கு நான் தேடிய நூல்களை யெல்லாம் நூல் நிலையங்களிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் கொணர்ந்து உதவியதுடன் நான் சொல்வதை எழுதிபிரதியும் எடுத்துத் தந்துதவிய கலாசார உத்தியொகத்தர் திரு- மா- அருள்சந்திரன் அவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

## உசாத்துணை நூல்கள்


1. யாழ்ப்பாண தொன்மை வரலாறு
   கலாநிதி சி. க. சிற்றம்பலம்
2. யாழ்ப்பாண வைபவ கௌமுகி
   (கல்லடி வேலனார்) க. வேலுப்பிள்ளை
3. யாழ்ப்பாணத்தவர் வைபவ விமர்ச்சனம்
   சுவாமி ஞானப்பிரகாசர்
4. யாழ்ப்பாணத்தவர் வரலாறு
   கலாநிதி க. குணராசா
5. இடப்பெயர் ஆய்வு காங்கேசன் கல்விவட்டராம்
   கலாநிதி. இ. பாலசுந்தரம்
6. நன்னூல்
7. நிகண்டு
8. சதுரகராதி

# வலி வடக்கும் இடப்பெயர்வும்

**திருமதி. ம. மாலாதேவி**
**கிராம உத்தியோகத்தர்**

ஈழ மணித் திருநாட்டின் வடபால் அமைந்து சிரமென விளங்கும் யாழ்மாவட்டத்தின் வளம் நிறைந்த பிரதேசமாக வலி வடக்கு திகழ்கிறது. செழிப்பான மண்வளம், உடல்களைக்க வியர்வை சிந்தி மண்ணிற்கு உரம் சேர்க்கும் தொழிலாளிகள் வானம் பொய்க்கா மழைவளம், உளங்களை வளர்க்கும் கலைவளம் இன்னும் என்ன வளம் இல்லை? யுத்தம் எனும் போர்மேக மூட்டம் மட்டும் இல்லையெனில் வலிவடக்கு வளர்ச்சிப் பாதையின் எல்லையை முத்தமிட்டிருக்கும்.

எம்மவர்கள் கடின உழைப்பாளிகள் அவர்களின் உழைப்பின் பலாபலன்கள் கட்டிடங்களாகவும் சொத்துக்களாகவும் நிலபுலன்களாகவும் சேமிக்கப்பட்டிருந்தன. எண்ணியிருக்கவில்லை இப்படியொரு இடப்பெயர்வு இன்னலோடு வந்துசேருமென்று? மறக்க முடியுமா அந்த நாட்களை? ஒவ்வொரு மனித மனங்களிலும் செந்நிறக் குருதியில் எழுதி வைக்கப்பட்ட கல்வெட்டுக்களை.

சொந்த நிலத்தில் சுகமாக வீடுகட்டி கூடி இருந்தோம். பறவைக் கூட்டம் திசை தெரியாது பிரிந்து போகும் என சற்றேனும் சிந்திக்கவில்லை. "என்ர வீடு காணி" என எல்லை பல வகுத்து வாழ்ந்த நாம் எல்லையில்லா பெருவெளியில் இல்லை எமக்கு இவ்விடம் என எண்ணி எண்ணிப் பயணித்தோம்.

1995ம் ஆண்டு ஐப்பசி மாதம் முப்பதாம் திகதி ஆயுட் காலத்தில் மறக்க முடியாத நாள் அந்த நாளின் பின் பல நாட்காட்டிகளில் திகதிகள் கிழிக்கப்படவில்லை.

வன்செயல்கள் காரணமாக வலிவடக்கை விட்டு, எமது தாய்மண்ணை விட்டு ஒவ்வொரு அடியாக அடிமேல் அடிவைத்து தென்மராட்சி நோக்கி பயணம் இரவிரவாக ஆரம்பமானது.

ஷெல் சத்தங்களும், எறிகணைகளின் கூவல் ஓசையும் எம் ஊர்வலத்திற்கு வாத்திய இசைவழங்கின. வெளிச்சக் குண்டுகளின் ஒளியில் பாதையை இனம் காணக்கூடியதாக இருந்தது. மண்ணில் விழவந்த சில மழைத்துளிகள் பலருக்கு தாகம் தீர்க்கும் பானமாகியது. குறுகிய இரவானது எல்லோர் மனதிலும் நீண்ட மிக நீண்ட இரவாக விரிந்து கிடந்தது.

சிறுவர் வயோதிபர் என்ற பேதமின்றி தாயைப் பிரியும் சேய்போல எம்மை வாழவைத்த வதி விடத்தை விட்டு வழிப்பயணம் தொடர்ந்தோம் உயிர் சொந்த இடத்தில் இருக்க உடல்கள் மட்டும் பயணித்துக் கொண்டிருந்தன.

எமது இடப்பெயர்வானது நீண்ட காலப்பகுதியாக இருக்குமென சற்றும் எதிர்பார்க் வில்லை. நாளை அல்லது மறுநாள் மீண்டும் வந்து விடுவோம் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் இருந்தது.

பயணம் பல குடும்பங்களுக்கு பலநாள் தொடர்ந்தது. எங்கே போவது? அடுத்த வேளை உணவு கிடைக்குமா ஒரு சொட்டுத் தண்ணீர் கிடைக்குமா? என்று பல கேள்விகள் சொந்தங்களைக் கைவிட்டுத் தவறியவர்கள் தான் ஏராளம். பொழுது விடிந்தும் மனங்களில் விடிவு தோன்றவில்லை.

அத்தியாவசியப் பொருட்களை மட்டுமே எடுத்துக்கொண்டு கிளம்பிய மக்களே அதிகம். துவிச்சக்கர வண்டிகள் சுமக்க முடியாத பாரங்களைச் சுமந்து கொண்டு பயணித்தன. சிறுவர்களுடன் கைகளில்கூட மூட்டை முடிச்சுகள் சுமையேறி இருந்தன.

தவறவிட்ட உறவுகளைப் பெயர் கூவி அழைத்துக்கொண்டு தெருவோரங்களில் பலர் தவம்கிடந்தனர். கால் சோர, உடல் நலிய அடுத்த அடிஎடுத்து வைக்க இயலாது வேலியோரங்களில் குந்தியிருந்த முதியவர்களின் முகங்களில் சோகமும் விரக்தியும் தேங்யிருந்தன.

காலச்சக்கரம் சுழன்றது. தென்மராட்சிப் பகுதி வன்னிப்பகுதி, வடமராட்சி என மக்கள் தஞ்சம் புகுந்து கொண்டனர். ஒரு வீட்டில் ஏழு எட்டு குடும்பங்களும் ஒண்டி வாழ்ந்தனர். பகல் நேரங்களில் பொது இடங்களில் பொழுதைக் கழித்து விட்டு

உணவுக்கும் உறக்கத்திற்கும் மட்டும் பறவைகள்போல இருப்பிடங்களை நாடிச் சென்றவர்கள் அநேகர். அகதி முகாம் என்ற பெயரில் பல குடில்கள் ஒன்றுசேர்ந்தன. அங்கு வாழ்ந்த மக்கள் எதியோப்பிய மக்களை நினைவு படுத்தினர்.

தனித்தனி வீடுகளில் வசிக்கும்போதே சண்டைகள் பல உருவாகும் நம் சமுதாய அமைப்பில் இவ்வாறான நெருக்கமான சூழலில் சண்டை சச்சரவுகளுக்கு தட்டுப்பாடே இல்லை. ஆனால் பல பொருட்களுக்குத் தட்டுப்பாடு காணப்பட்டது. அரிசி, மா, சீனி, பருப்பு, நல்லெண்ணெய், மண்ணெய், தேங்காய்நெய் போன்ற அன்றாட பாவனைப் பொருட்களுக்கு கடைகளின் முன்னே நிற்கும் நீண்ட மனித நிரைகள் எறும்புகளின் நிரையை ஞாபகப்படுத்தும். காலை வேளைகளில் பாணிற்கு நிற்கும் கியூவில் பாண் கிடைக்காது திரும்பிப் போகின்றவர்களே அதிகம் குடிநீருக்கு மட்டுமல்ல நீருக்கே பெரும் தட்டுப்பாடுகள் நிலவியது. ஒரு முழம் நீர் கொண்ட கிணறுகளே அதிகம் அவற்றின் நிறங்களோ பல வர்ணம் "எங்கட ஊர் பச்சத்தண்ணியைக் குடிச்சுப் போட்டு பசியாறலாம்" எனப் பெருமூச்சு விட்டவர்கள் பலர்.

பாரதியார் பாடியது போல காணி நிலத்துடன் பத்துப் பதினைந்து தென்னை மரங்களுடன் சோலை நடுவினிலே மாளிகையோடு இருந்த பல குடும்பங்கள் ஏதிலிகளாய் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தம் வாழ் நாட்களை நகர்த்தினர்.

அன்றாட அத்தியாவசிய பொருட்களின் விலை உச்ச நிலையை அடைந்தநிலை உணவுத் தேவையை பூர்த்திசெய்ய பெரும்பாடுபட வேண்டியிருந்தது.

விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்த வலிகாமம் வாழ்மக்கள் இடப்பெயர்வின் பின் பல்வேறு நீண்ட தூரங்களிலிருந்து விறகுகளைத் துவிச்சக்கர வண்டிகள் மூலம் மக்கள் அடர்ந்து வாழும் பகுதிகளில் கொண்டுவந்து விற்றனர். தென்னை மட்டைகளைப் பதப்படுத்தி தும்பும் தும்புப் பொருட்களையும் உற்பத்தி செய்யப்பழகி கொண்டனர்.

*வாழ்வு தந்த வலிகாமம் **வாழ்வு** தந்த வலிகாம்*
*வாழ்வீழந்து நின்றது **வாழ் வீழந்து** நின்றது*
*வழிகள் ஏதும் இல்லையே **வளங்கள்** மீளச் செய்யவே*

*தொல்லை தரும் **இனப்பகை***
*தொலைந்து போவதெப்ப**வோ***
*தொலைதூரம் வந்துளோம்*
*தொழிலும் நமக்குக்கிட்டுமோ*

*வலிய உள்ளம் வாடலை*
*வியர்வை இன்னும் **வற்றலை***
*விரைந்து வீடு செல்**லுவோம்***
*சொந்தமண்ணில் **வாழுவோம்***

பாரிய எதிர் பார்ப்புகளுடன் காலம் கடந்து கொண்டிருந்தது. எவ்வளவு மனச்சலனகளும் நேரமின்மையும் இருந்தாலும் தினசரி பத்திரிகை பார்க்க எவரும் தவறுவதில்லை. ஏனெனில் எங்காவது ஒரு மூலையில், பேச்சு வார்த்தை மீளக் குடியமர்வு என்ற செய்தி வருமா! விடியல்ள எங்கள் வாசல் வந்து சேருமோ! என்ற எதிர்பார்ப்பிற் தான்.

அரச படையினர் தென்மராட்சிப் பகுதிக்கு வந்தபோது, மீளவும் வலி வடக்கினுள் கால் எடுத்து வைக்கும் வாய்ப்பு அனேகருக்கு கிட்டியது. சென்றவேகத்தை விட மீளவந்த வேகம் குறைவு எனினும் மனோவேகம் அதிகமாக இருந்தது பல எதிர்பார்ப்புக்களுடன் மீளவும் எம் மண்ணிற் கால் பதித்தோம்.

வளமான பிரதேசம் சோபையிழந்து காணப்பட்டது கட்டடங்கள் பல கவலையோடு காட்சிதந்தன. ஆனால் சரிந்திருந்த கட்டங்களை நிமிர்த்திடுவோம் என்ற அசையாத மனஉணர்வும் மட்டும் நிலைத்திருந்தது.

சர்தேச நிறுவனங்களின் உதவியும் அம்சின் சலுகைகளும் மீண்டும் மக்களுக்குக்கரம் நீட்டவலி வடக்கு புத்துயிர் பெறுகிறது. வளர்ச்சிப் பாதையில் புதுமெருகுடன் சிறந்த தலைமையின் **கீழ்** வலிவடக்கு வாழ்வு பெறுகிறது.

# என்று தீருமோ எம்துயர் !

**வை.சுரேஸ்**

கிராம உத்தியோகத்தர்

அகதியென்று பேரெடுத்தோம் நியாயமாகிவிட்டோம்
சுகதியில் வீழ்ந்து விட்டோம் நியதி இதுவென்றாகிவிட்டோம்.
அள்ளியிட்ட வாய்க்கரிசி போல் அரசாங்க நிவாரணமும்
கிள்ளிக் கொடுத்த ஐயாயிரமும் தள்ளிச் செல்லுமோ எம்வாழ்வை
கொள்ளிக்கும் சொந்த விறகில்லை கூடியழ இடமுமில்லை
பள்ளிக்கு நம் பாலர் பல தூரம் செல்லவேண்டும்.
முள்ளிச் செடி நடுவே முகட்டுக் கொட்டிலில் எம் வாழ்வு
வள்ளிக்கொடிபோல் வாடியே வதங்குகையில்
எள்ளியேயெமை நகைசெய்யும் ஈனம் தான்தீருமோ

தொட்டு விளையாடிச் சிறுகையால் அள்ளியுண்டு
பட்டு நிலவொளியில் பக்குவமாயச் சோறுண்டு
நித்தம் நீர் பாய்ச்சி நிழல்தரு மரம்நாட்டி
முத்தம் முழுவதும் முல்லைப் பூமரம் நாட்டி
மாடமொடு மாளிகையும் மழைவான நல்வீடும்
கூடமொடு கோபுரமும் கும்பிடக்கோயிலும்
பள்ளிக்கூடமும் பல்கலைக்கூடமும்
துள்ளிக்குதித்துத் துடுப்பாடத் தூய திடலும்
அத்தனையும் பூண்டு ஆரணங்காய் வீற்றிருந்தாள் எம் அன்னை
இன்று..

பற்றை மூடிப் படர்கொடி வளர்ந்து
கற்றையாயப் புல்மூடிக் கானகமாய் ஆகினளே!
முற்றும் முடிவாக்கி முழுதான சூனியமாக்கி
முந்தானை பிடித்திழுத்து முழுதாய் நிர்வாணமாக்கிவிட்டு
முகத்தினிலே கரி பூசி முள்ளால் மகுடமிட்டு
சற்றும் தயங்காமல் சகதியில் தள்ளிவிட்டார் எம் தாயை
சுற்றமிழநது சுடுகாட்டில் அபலையாகி
பெற்றெடுத்த பிள்ளைகளைப் பிரிந்து பேதையாய் வாழ்கின்றாள்
பெரும் பேர்கொண்டு பெருவாழ்வு கண்டிருந்த
கருஞ் சிவப்புக் கலையுடுத்த கனிவான எம்அன்னை.

பத்தாண்டு பஞ்சாயப் பறந்தோடி விட்டது
எத்துணை துயர் கொண்ட திவ் வாழ்வு
அத்தனையும் அடியோடு இழந்துவிட்டோம்.
இத்தனை நாளும் இப் புவி[illegible] வாழ்கின்றோம்.
செத்துமே போய்விட்டோம் சிதறியே வாழ்கின்றோம்
நித்தமும் நிலவாழ்வு நீர்க்குமிழியாகியதே
புத்தாயிரம் வந்திடப் புவியெல்லாம் கொண்டாட்டம்
எத்தாயிரம் வந்தாலும் என்றுதான் தீர்ந்திடுமோ எம்துயர்.

# வலி வடக்கில் நிர்வாகமும் மீள் குடியமர்வும்

கா. பீதாம்பரம்
நிர்வாக உத்தியோகத்தர்

வடக்கே வங்காள விரிகுடாக்கடலையும், தென் மேற்கே சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தையும், தெற்கே வலிகாமம் தெற்கு - உடுவில் பிரதேச செயலகத்தையும் கிழக்கே வலிகாமம் கோப்பாய் பிரதேசசெயலகத்தையும் எல்லைகளாகக் கொண்டு, "வலிவடக்குப் பிரதேச செயலகம்" என்று இன்று அழைக்கப்படும் இப்பிரதேசம் 1956ம் ஆண்டுவரை உடுவில் பிரதேச செயலகத்தோடு இணைந்திருந்தது. 1956ம் ஆண்டு இதன் எல்லைகளை மாற்றியமைக்க வேண்டும் என்னும் நோக்கில் இச் செயலகம் உருப்பெற்றது. 1956ல் "தெல்லிப்பழை இறைவரி உத்தியோகத்தர் பணிமனை" என ஆரம்பிக்கப்பட்ட இப்பணிமனைக்கு ஆரம்பத்தில் 16 கிராம அலுவலர் பிரிவுகள் இருந்தன. இதனது முதலாவது மாவட்ட அரசிறை உத்தியோகத்தராக நியமனம் பெற்றவர் திரு பாலச்சந்திரன் அவர்கள்.

1979ம் ஆண்டு திரு . கே. மகாதேவா அவர்கள் உதவி அரசாங்க அதிபராக இருந்த போது இப்பிரிவுகள் அதிகரிக்கப்பட்டு, 24 பிரிவுகளாகின. 1989ம் ஆண்டு திரு. வி. இராசையா அவர்கள் பதில் உதவி அரசாங்க அதிபராக இருந்தபோது இப்பிரிவுகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டன. இதன் மூலம் இப்பிரதேசம் 45 கிராம அலுவலர்களைக் கொண்டதாகிற்று. இக்காலத்தில் விசேட சேவை உத்தியோகத்தர்கள் (Special Serice Officers ) பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் (Cultivation Offiecers) நியமனம் பெற்றிருந்தவர்கள் கிராம சேவை அலுவலர்களாக மாற்றம் பெற்றனர்.

1987,1990 முதல் 1995 வரையான காலத்தில் காலத்துக்கு காலம் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக 1995ல் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் ஆட்களற்ற பிரதேசமாக்கப்பட்டது. பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாகின பிரசித்தி பெற்ற ஆலயங்கள் இடித்து நொருக்கப்பட்டன. நித்தியபூசை வசதிகள் இல்லாதொழிந்தன எத்தனையோ பேர் தங்கள் கணவனை இழந்து விதவைகளாகினர். தந்தையை, தாயை இழந்த குழந்தைகள் எத்தனையோ, வானம் பார்த்து விவசாயம் மேற்கொள்ளப்பட்ட நிலங்கள் விரிந்து பரந்து கிடந்த போதும், அங்கு விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை. கடற்றொழில் மூலம் பெரும் வருமானத்தை ஈட்டியவர்களைக் கொண்டிருந்த பிரதேசம், கடற்றொழிலைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

1996இல் மீளக் குடியமர குடாநாட்டு மக்கள் அனுமதிக்கப்பட்ட போதும், வலி வடக்குப் பிரதேசத்தின் 05 கிராம அலுவலர் பிரிவுகளும், 1997ல் மேலும் 08 கிராம அலுவலர் பிரிவுகளும், 1998 இன் இறுதிப் பகுதியில் 02 கிராம அலுவலர் பிரிவுகளுமாக மொத்தம் 15 கிராம அலுவலர் பிரிவுகள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களாகின. 1999ம் ஆண்டு கட்டுவன் மேற்கு, வித்தகபுரம் ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து மொத்தம் 17 கிராம அலுவலர் பிரிவுகள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டன.

மகாஜனக்கல்லூரி, யூனியன் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி போன்ற பிரபல்யமான பாடசாலைகள் அரசாங்கத்தின் அதியுயர் பாதுகாப்புவலயத்துள் இருந்து, மிக அண்மையில் முன் சொல்லப்பட்ட மகாஜனாக் கல்லூரி மட்டும் திரும்பவும் தனது சொந்தப் பிரதேசத்தில் செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை, அதனது சொந்தப் பிரதேசத்தில் செயற்பட வைக்க இராணுவத்தினருடனும், அரசாங்கத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்தி வெற்றி கண்ட வலிவடக்கின் பிரதேசச் செயலர் பாராட்டுக்குரியவரே. இதற்கு உறுதுணையாயிருந்து செயற்பட்ட பிரதேச சபையின் தலைவர் அமரர் பாஸ்கரன் அவர்களது சேவையும் மதிக்கப்படவேண்டியதே.

சொந்த இடத்திற் செயற்படமுடியாத தன்மையால், கல்வியைக் கற்பிப்பதிலும், கற்பதிலும் ஆசிரியர்களும், மாணவர்களும் அடையும் சிரமங்கள் கணக்கிலடங்காதவை. சொந்த இடத்தில் இப் பாடசாலைகளைச் செயற்பட வைப்பதன் மூலம் கல்விவளர்ச்சியில் அதிஉயர் பலாபலன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று நம்புவோம்.

இப்பிரதேசத்து மக்கள் பெரும்பாலும் விவசாயிகளாகவும், மீதமானோர் கடற்றொழிலிலும் ஈடுபடுவோராக உள்ளனர். அரச, கூட்டுத்தாபன உத்தியோகத்தரும் கணிசமான அளவு உள்ளனர். இவற்றின் மூலம் இப்பிரதேசத்தை வளமுள்ள பிரதேசமாக்கினர். ஆனால் இன்றோ நிலைமை மாறுபாடடைந்துள்ளது. விவசாய நிலங்கள் விவசாயம் செய்ய அனுமதிமறுக்கப்படாமலும், கடல்படு திரவியங்களைப் பெற்றுக் கொள்ள

அனுமதிக்கப்பட்ட நிலையிலும், இதனால் மக்கள் அன்றாட வாழ்வைக் கொண்டு செல்லக் கஷ்டமான நிலையிலும், அகதிமுகாம்களிலும், புனர்வாழ்வு நிலையங்களிலும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். அடிப்படைச் சுகாதார வசதிகளற்றநிலையில் அவர்களது வாழ்க்கைமிகவும் பரிதாபத்திற்குரியது. அத்துடன் சிறு சிறு குடில்களிலே அவர்கள் வாழ்ந்து வருவதால் ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் பலவாகும். என்றோ ஒரு நாள் நாங்கள் எமது சொந்த இடத்திற்குச் செல்வோம் என்ற நம்பிக்கையோடு அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, பாதுகாப்பு அரண்கள் (Bunds) விவசாய நிலங்களை ஊடறுத்துச் செல்வதால் சிறிதளவு செய்யப்படுகின்ற விவசாயத்தைக் கூட விரிவடையச் செய்ய முடியாதுள்ளது. மழைகாலங்களில் வெள்ளங்கள் வழிந்தோட முடியாதநிலையில் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டிருப்பதால் வசிக்கின்ற ஒரு சிலரும் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் தோன்றியுள்ளது.

''பாதுகாப்பு அரண்பிரதேசம்'' என்ற வரையறையின் கீழ் எமது பிரதேசம் ஓர் ஆக்கிரமிப்புக்குட்பட்ட பிரதேசம் போலக் காட்சி யளிக்கிறது. எமது சொந்த இடத்திற்கு எம்மைச் செல்ல அனுமதித்தால், வெறும் பச்சைத் தண்ணி யையாவது நிம்மதியாகக் குடித்து உயிர் வாழலாம். எத்தனை நாட்களுக்கு இரவல் வீட்டில் அவர்களது நச்சரிப்புக்கும் எச்சரிக்கைகளுக்கும் அடங்கி நடப்பது என்று அகதிகளாக - நண்பர், அறிந்தோர் வீடுகளில் வசிப்பவர்கள் அங்கலாய்த்துக் கொள்வதை நாம் கண்ணாற் பார்க்கிறோம், காதால் கேட்கிறோம் 1990ம் ஆண்டிலிருந்து 2000ம் ஆண்டு வரை சுமார் 10 வருடங்களாக இந்த இன்னல்களையும், இடைஞ்சல்களையும் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு இலங்கையின் முக்கிய பொருளாதார அலகாக ஸ்தாபிக்கப்பட்ட சீமெந்துத் தொழிற்சாலை அதன் தலையிலிருந்து கால்வரை தவழ்ந்து விளையாடிய அதனது ஊழியர்கள், அவர்களின் குழந்தைகள், அத்தாபனத்தின் செயற் பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு ஆட்களற்ற பிரதேசமாகக் காட்சியளிக்கும் இன்றைய நிலை, பெரும் துறைமுகங்களான பருத்தித்துறை, காங்கேசன்துறை அவற்றின் செயற்பாடுகள் மூலம், கொழும்பிலிருந்து பொருட்கள், இறக்குமதி செய்வது, ஏற்றுமதி செய்வது அதே போல் ஆட்களை ஏற்றி இறக்குவது போன்றவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயற்பாட்டைந்து கொண்டிருப்பதன் மூலம் துறை முகங்களை நாம் இன்னும் மறந்து விடவில்லை என்பதை நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன. ''வெற்றிலை போட்டால் உன்வாய் சிவக்கும்'' என்ற சினிமாப் பாடலுக்கேற்ப மாவிட்டபுரம், இளவாலைப் பகுதியிலும் கீரிமலைப் பகுதியிலும் பயிர் செய்யப்பட்டு குடாநாடு முழுவதும் பாவனைக்குரியதாயிருந்த வெற்றிலையின் விலை எதிர்பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்து சென்றமைக்கு அண்மைக் கால இராணுவநடவடிக்கையும், மக்கள் அதனால் இடம்பெயர்ந்தமையும் காரணமாகும். கொழும்பி லிருந்து வான் வழியாகவும் கப்பல் மூலமும் வெற்றிலை இங்கு கொண்டு வரப்பட்டதை நாம் மறந்து விடமுடியாது. அதுவும் ஒரு வெற்றிலை ரூபா 6/=, 7/= ஆக விற்பனை செய்யப் பட்டதை நாம் என்றும் மறந்துவிடமுடியாது. மாவிட்டபுரம், இளவாலையைச் சேர்ந்த இவர்களெல்லாம் இப்போது இடம்பெயர்ந்து சென்றகாரணத்தால் இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்கபடாத காரணத்தால் ஏற்பட்டதே இந்த நிலை என்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும்.

1999ம் ஆண்டு இடம்பெற்ற ''கலாபூஷண விருது'' வழங்கலின்போது விருது பெற்ற நான்கு கலைஞர்களும் தெல்லிப்பளைப்பிரதேசத்தை சேர்ந்தவர்களே! திருவாளர்கள் திலகநாயகம் போல் (சங்கீதம்) எஸ்.ஆர்.ஞானசுந்தரம் (நாதஸ்வரம்) ஏ.ரி. பொன்னுத்துரை (நாடகம்) செல்லத்துரை (சங்கீதம்) ஆகியோர் இவ்விருதுகளைப் பெற்றதன் மூலம் இப்பிரசேத்திற்குப் பெருமை சேர்த்தனர். இவர்கள் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ கலைஞர்கள் இடம்பெயர்ந்துள்ள தால், எங்கெல்லாமோ சென்று வாழ்கின்றநிலை ஏற்பட்டுள்ளது.

தனித்தனி ஒவ்வொரு துறையாக விபக்காமல் இத்துடன் நிறுத்தி, இந்நிலை மாறி, இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் சொந்த இடங்களிற் குடியமரும்நிலை தோன்றவேண்டும் எந்தவிதமான இடர்களுமின்றி மக்கள் வாழ வேண்டும். சந்தோஷமான ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும் சண்டை ஓய்ந்து, சமாதானம் நிலைக்க அதன் மூலம் ஏற்படும் நிம்மதியை நாம் அனுபவிக்க வேண்டும்.

# பிறந்த மண்

***க. சிவகௌரி***

எழுதுநர் தரம் II

மதிய நேரத்து வெயிலின் வெம்மை சற்றும் தணியவில்லை. முற்றத்து மாமரத்தி லிருந்த காகம் விட்டுவிட்டுக் கரைந்த சத்தமும், தூரமுழங்கும் ஷெல் சத்தமும் தவிர நிசப்தமாய் இருந்தது. முன் அறையில் படுத்திருந்த நாகலிங்கத்திற்கு மனம் நிலைகொள்ளாது தவித்து. வீடுபார்க்க என்று போன மகனை இன்னும் காணவில்லை இன்றும் வீடு பார்க்க விடவில்லையோ. உயர் பாதுகாப்பு வலயம் என்று சொந்தவீட்டை போக எத்தனைபாடு எத்தனை அலைக்கழிவு? வீடு எப்படி இருக்குமோ. எட்டு வருஷத்திற்கு மேலே ஆச்சு ஒவ்வொரு வியர்வைத்துளியும் ஒவ்வொரு கல்லாய் மாறி கட்டிய வீடல்லவோ. வீடுவளவு என சகல வசதியுடனும் வாழ்ந்த வாழ்வை நினைக்க இப்பவும் அவர் வாயில் புன்னகை பூக்கிறது. "இப்ப இரவல் வீட்டில் சொல்லுக்கு பழிக்கு அஞ்சி ஊர், பெயர் இல்லாத தற்குறி யாய் அகதி குடும்பம்" என்ற பெயரில் படும் கஷ்டங்களை நினைக்க கண்கள் பனித்து நெஞ்சு அடைத்துக் கொண்டுவந்தது அவருக்கு. தம்பிகள் உத்தியோகம் என வெளிக்கிடவும், மண்ணையும் வெற்றிலைக் கொழுந்தின் செல்வத்தையும் நினைத்து ஊரோடு இருந்தது தான் இப்படி வேதனைப்பட வேண்டி இருக்கிறதோ என நினைத்துப் பெரு மூச்சுவிட்டபடி திரும்பிப்படுத்தார். கண்ணிற்பட்ட மாவை கந்தன், படத்திலும் உயிர்ப்புடன் அருள்பாலிப்பது போல உணர்வு ஏற்பட சிலிர்த்துப்போனார்.

மாவிட்டபுரம், கீரிமலை கொடியேறி திருவிழா என்றால் ஊரே திருவிழாக் கோலம் தான். ஆடி அமாவாசை தீர்த்தமென்றால் கேட்கத்தேவையில்லை. ஊர்விட்டு போனவர் களும் வந்து சேர்ந்துவிட கொண்டாட்டம் தான். தீர்த்தத்திற்கு சாமி போய் தீர்த்தமாடி வர இருட்டிவிடும். இரவிரவாய் மேளக்கச்சேரியும் வாணவேடிக்கையுமாய் சுவாமி விடியத்தான் மாவிட்டபுரம் போய் சேரும் என பேரனுக்கு சொல்ல "ஊரடங்கு நேரத்தில் எப்படி போவியள்" என கேட்ட அந்த பிஞ்சு மனதில் இரவென்றால் ஊரடங்கு என்ற வரவை ஏற்படுத்திய நாட்டுப்பிரச்சினை எப்பதீரும். காங்கேசன் சீமெந்து ஆலை சங்கொலி வைத்து கடமையை செய்த காலத்தை பற்றி பேத்திக்கு கூற "இப்ப நாங்கள் விடிய அடிக்கிற ஷெல்லுக்கு திடுக்கிட்டு எழும்பிறமாதிரி தான் நீங்க சங்கொலி கேட்டு நடந்தீங்களா" என பகிடியாய்க் கேட்டாலும் குழந்தை உள்ளங்களின் காயங்களை உணரமுடிந்தது.

இந்தக் குழந்தைகள் வீடு, வளவு ஊரை மட்டுமல்ல எத்தனை சந்தோஷங்களையும் திருவிழாக்களையும் இழந்து நிற்குதுகள். நினைக்கவே அவருக்கு நெஞ்சு வலித்தது சாக முதல் வீட்டை போவேனோ? சொந்த மண்ணில் சாவேனோ என மனதிற்குள் புலம்பிய அவரது மனஓட்டம் படலை திறந்த சத்தத்தில் தடைப்பட்டது. மகன் வந்துவிட்டான் என உணர்ந்து எழும்பி உட்காந்தவர் காதில "வீடு,றோடு ஒழுங்கை என்று ஒன்றும் இல்லை. கல்லுக்குவியலும் பற்றையும் காட்டுமரங்களுமாய் பார்க்கவே முடியவில்லை. வெற்றிலைக் கொழுந்து நின்ற இடமே தெரியவில்லை. மரங்கள் எல்லாம் ஷெல்பட்டு முறிஞ்சு காய்ஞ்சு போய் நிற்குது. எனக்கு பார்க்க தலைசுற்றி கொண்டு வந்தது. இனிப்போய் எப்படி வாழப்போகிறோம். அங்கே. எனக்கென்றால் ஒன்றுமே யோசிக்க முடியாமல் இருக்கு. அப்பாவிட்டை சொல்லாதே தாங்க மாட்டார் என தன் மனைவிக்கு கூறிய மகனின் வார்த்தைகள் வீழ்ந்தது. அதிர்ச்சியில் அப்படியே சரிந்தார் நாகலிங்கம் ஊருக்குள் கதைபரவியது "அந்த அகதிக் குடும்ப வீட்டுக் கிழவன் இறந்துவிட்டாராம்." பிறந்த மண்ணின் பாசத்தில் அகதி என்ற பெயரில் ஒரு உயிரின் இழப்பு இன்னும் எத்தனை எத்தனையோ?

**மனம்**

முகை விரிந்தால் மலர் மலரும்
முகில் குளிர்ந்தால் மழை பொழியும்
இலை உலர்ந்தால் என்ன வரும்
மனம் உதிர்ந்தால் என்ன வரும்
நெஞ்சில் அழுகை வரும் (முகை)

நெருப் பெரிந்தால் பூகையும் வரும்
விற கெரிந்தால் கரியும் வரும்
பகல் எரிந்தால் வெயிலும் வரும்
மனம் எரிந்தால் என்ன வரும்
பெரும் மூச்சு வரும். (முகை)

*~சித்தி*

# மௌனங்கள்

மா. புவனராணி
பிரதேச செயலகம்

பிரிந்தவர் கூடும் போது
பேச்சற்ற மௌனம்
உரைத்திடும் கதைகளோ
உரையினில் அடங்காது

உறுதுணையை இழந்துநிற்கும்
ஒருவரின் உள்ளத்தில்
மௌனத்தில் இசைக்கின்ற
முகாரிகளோ ஆயிரமாம்

காதலர் இருவரில்
மோதுகின்ற பார்வையில்
பிறக்கின்ற மௌனங்கள்
பேசிடும் கதை ஆயிரம்

இரத்த உறவுகளின்
இரக்கமற்ற வார்த்தைகள்
இதயத்தைத் துளைக்கையில்
பேசும்மொழி மௌனம்

எதிராளி எதிர்த்துநின்று
எறிகணையாய்த் தாக்கும்போது
செயலற்ற மௌனத்தின்
செய்திகளோ ஏராளம்

மௌனங்கள் இசைக்கின்ற
மௌனகீதங்களில் உள்ள
மகத்தான செய்திகளை
மனங்கொண்டால் உணர்வீரே

# வலி வடக்குப் பிரதேசமும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளும்

***திருமதி ரதி நகுலேஸ்வரன்***
திட்ட உத்தியோகத்தர்

யாழ்.குடாவில் கடந்த காலங்களில் நிலவிவந்த போர்ச்சூழ்நிலை காரணமாக வலிவடக்குப் பிரதேசம் மிகவும் பாதிப்பிற் குள்ளாக்கப்பட்டதுடன், அதன் பல பகுதிகள் இன்றும் விடுவிக்கப்படாமல் இருப்பதும் இப்பிரதேசத்தின் துரித வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக அமைந்துள்ளன. 1995ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் பாரியதொரு இடப்பெயர்விற்கு முகம்கொடுத்த மக்கள் 1996 சித்திரை மாதத்தில் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பக்கூடிய சூழ்நிலை உருவானது. இச்சந்தர்ப்பத்தில், வலி வடக்கில் 1990ம் ஆண்டு முதல் இடம்பெயர்ந்த மக்களும் இப் பகுதியின் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மீளக் குடியமரத் தொடங்கினர். இவ்வாறான மீள் குடியமர்வின் போது மக்களுக்கு பலதரப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு வசதிகள் பலவற்றை மேற்கொள்ள வேண்டிய நிலையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இருந்தன.

ஆரம்பத்தில் வலி வடக்கையும் உள்ளடக்கியதான வலிகாமத்தின் சில பகுதிகள் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டிய நிலமையிலிருந்தன. குறிப்பாக உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அருகாமை யிலிருந்த சில பகுதிகள் அரசாங்கத்தினால் மீள்குடியேற்றத்திற்கென அனுமதிக்கப் பட்டபோது அப்பகுதிகளில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு அதனை மக்கள் பாவனைக்குகந்ததாக மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் மக்கள் நலம் நாடி, இப் பணிகளைத் துரிதப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவென அப்போதைய அரச அதிபரினால் 1997ம் ஆண்டு தெல்லிப்பளையில் "மீள் குடியேற்றத் திட்ட அலுவலகம்" ஒன்று திறந்து வைக்கப் பட்டது. இவ் அலுவலகம் தனது செயற் திட்டப் பிரிவுகளாக பிரதேச செயலர் பிரிவுகளான வலி வடக்கில் 15 கிராம அலுவலர் பிரிவுகளையும், வலி தெற்கில் 4 கிராம அலுவலர் பிரிவு களையும் வலி தென்மேற்கில் 3 கிராம அலுவலர் பிரிவுகளையும், கொண்டு செயற்படத் தொடங்கியது. இவ் அலுவலகத்தின் ஆரம்ப நோக்கங்களாக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

1. கண்ணிவெடிகள் அகற்றுதல்
2. பிரதான வீதிகள், ஏனைய பாதைகள், ஒழுங்கைகள் போன்றவற்றைத் துப்பரவு செய்தல்.
3. பற்றைக் காடுகளையும், பொது இடங்களையும் துப்பரவு செய்தல்.
4. தண்ணீர் வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்
5. சுகாதாரத் தேவைகளை உறுதி செய்தல்
6. வீட்டுவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
7. சமூக உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல்
8. சமையலறைப் பொருட்கள் கிடைப்பதற்கு வழி செய்தல்
9. உணவு விநியோகத்திற்கான வழிகளை மீள ஸ்தாபித்தல்
10. வருமானத்தை உருவாக்கும் திட்டங் களில் நிதியிடல்

1997ல் அலுவலகம் செயற்படத் தொடங்கியவுடன் மேற்கொள்ளப்பட்டபணிகள்.

1. உள்ளூர் மக்களைப் பயன்படுத்தி (கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு) (RRAN) வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபையின் உதவி யுடன் வீதிகள், பாதைகள், பொது இடங்கள் என்பன துப்பரவு செய்யப்பட்டன.
2. மக்களுக்கு தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக நீர் இறைக்கும் இயந்திரம், எரிபொருள் போன்றவை வழங்கப்பட்டு கிணறுகள் துப்பரவு செய்யப்பட்டன.
3. பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் பாதுகாப்பு அரணை அண்மித்த பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

1997ல் இம் மீள்குடியேற்ற அலுவலகத்தை மேலும் வினைத்திறனுடன் செயலாற்ற வைக்கவும், வலுவூட்டவும், துரித நடவடிக்கைகள் எடுக்கவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் (UNDP) முன் வந்தது. இந் நிறுவனத்தின் ஆதரவுடன் வலி வடக்குப் பிரதேச செயலகமும் இணைந்து

மீள்குடியேற்ற அலுவலகம் ஊடாக பணிகளை ஆரம்பித்தன. படிப்படியாக மக்கள் குடியேற்றம் ஆரம்பமாகத் தொடங்கிய போது யு.என்.எச்.சி.ஆர், யுனிசெவ் போன்ற நிறுவனங்களும் இப் பிரதேசத்தில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

ஆரம்பத்தில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் சேதமடைந்திருந்த வீடுகளைத் திருத்திக் கொடுக்கவும் வீதிகள் பொது இடங்கள் என்பவற்றை புனருத்தாரணம் செய்யவும் முன்வந்து அப்பணிகளை மேற்கொண்டது. இச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு குடும்பத்துக் கும் தலா ரூ10000/= பெறுமதியான வீடுகளுக்கான கூரைத் தகடுகள் வழங்கப்பட்டன.

மானிப்பாயில் இயங்கிவந்த தெல்லிப்பளை அரசினர் வைத்திய சாலையை தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில் இயங்க வைக்க யு.என.ஏச.சி ஆர். நிறுவனம் உடனடியான நிதித் தேவைகளை நிறைவு செய்தது.

1999ம் ஆண்டில் UNHCR நிறுவனம் நீர்ப்பாசன கிணறுகள் திருத்தியமைக்க உதவியதுடன் நொச்சிக்குளம் குளத்தையும் புனர்நிர்மாணம் செய்தது. அளவெட்டிப் பகுதியில் மழை-வெள்ளம் வடிய வடிகால் அமைப்பும் செப்பனிடப்பட்டது.

அளவெட்டி மத்திய மருந்தகம் பிரசவ நிலையத், திருத்தம் மற்றும் அளவெட்டி- மல்லாகம் ப. நோ. கூ. ச. கட்டடங்களின் திருத்தம் போன்ற அவசிய செயற்பாடுகளில் உதவிகளைப் புரிந்தது.

மேலும் 1998ல் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் சுந்தரபுர வீதி நிர்மாணத்திலும், அளவெட்டி, சுந்தரபுரம் சனசமூக நிலையங்களை புதுப்பித்தல், வலிவடக்கின் நெசவாலைகளை மீண்டும் இயங்க வைக்க நிதியுதவி வழங்கியமை, கட்டுவன் அ.த.க. பாடசாலையின் திருத்த வேலைக்கு உதவிய மேலும் தெல்லிப்பளை அரசினர் வைத்திய சாலையின் திருத்தங்களுக்கு உதவியமை போன்ற செயற்பாடுகளிற் பங்கெடுத்தது

மீளக்குடியமர்ந்த மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதியளிக்கும் பொருட்டு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் பாடசாலைத் திருத்த வேலைகளையும் மேற்கொண்டது. யுனிசெவ் (UNICEF) நிறுவனம் இப் பகுதியில் கிணறுகள் மலசல கூடங்களைத் திருத்தியமைத்ததுடன் புதிய கிணறுகள் மற்றும் மலசலகூடங்களைப் புதிதாக நிர்மானித்தும் கொடுத்தது இதன் நிமிர்த்தம் வலி வடக்கில் சுமார் 3 புதிய கிணறுகளும் 6 புதியகுழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட் டதுடன் 50 கிணறுகள் திருத்தியமைக் கப்பட்டன. அத்துடன் 50 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன் 8 மலசல கூடத் தொகுதிகள் அமைக்கப்பட்டன.

இவற்றைவிட இந்நிறுவனம் மக்கள் பாவனைக்குத் தேவையான சமையலறைப் பாத்திரங்கள் மற்றும் பிளாஸ்ரிக் பாய்கள் போன்றவற்றையும் விநியோகித்தது

யு.என்.டி.பி: நிறுவனத்தினர் விவசாய முயற்சி மற்றும் சிறுதொழில் முயற்சிகளுக்கென வலி வடக்கின் ப.நோ.கூ. சங்கங்களான அளவெட்டி, தெல்லிப்பளைக் கூட்டுறவுச் சங்கங்களூடாக சிறிய கடன் வசதிகளை அளித்தது. எமது பகுதியில் சுமார் 55 பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தனர்.

மேலும் யு.என்.டி.பி நிறுவனத்தினர், மக்கள் மத்தியில் சமூகப் பொறுப்புணர்ச்சி பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக தாமும். மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் இணைந்து. ஒரு சமூக அணிதிரட்டல் நிகழ்ச்சியினையும் நடாத்தினர். இவ்வாறு பொதுமக்களை விழிப்படையச் செய்ததன் மூலம் பொதுச் சொத்துக்கள் மீது அவர்கள் பொறுப்புணர்ச்சி அதிகரித்ததையும் அனுபவ வாயிலாகத் தெரிந்து கொண்டனர்.

இந்நிறுவனம் தொழிற்திறன் விருத்தி என்ற வகையில் 30 யுவதிகளுக்குத் தையற் பயிற்சி அளித்துள்ளது கிராம அலுவலர்களுக்கு அவர்களின் அறிவை மேலும் விருத்தி செய்யும் முகமாக 3 நாள் பயிற்சிப் பட்டறையையும் யு.என்.டி.பி நடாத்தியிருக்கிறது.

இவற்றை விட 1999ல் இந்நிறுவனம் எமது பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 5 உத்தியோகத்தர்களுக்கு 3 மாத காலக் கணனிப் பயிற்சியையும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் இம் மீள்குடியேற்ற அலுவலகத்தின் செயற்திட்டப் பிரிவினுள் கண்ணி வெடிகளை அகற்றும் பணிக்கு அலுவலக உத்தியோகத்தர்களின் உதவி வழங்கப்பட்டது.

1999ம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணிவெடி விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் குறிப்பாக வலி

வடக்குப் பிரதேசத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிப் பகுதி அளவெட்டி மேற்கு காட்டுப்புலம் பகுதி கட்டுவன் மேற்கு விடுவிக்கப்பட்ட பகுதி ஆகியவற்றில் கண்ணிவெடி அகற்றும் பணி இடம்பெற்றதை அவதானிக்க முடிகிறது.

இந்நிறுவனங்களை விட மேலும் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது சேவை களை வலி வடக்கிற்கு வழங்கி வருகின்றன.

**விவசாய உணவு ஸ்தாபனம்** :FAO

இந்நிறுவனம் வலி வடக்கின் சில கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு 1997ல் விவசாய உபகரணங்களான மண்வெட்டி, மருந்தடிக்கும் பம்பி, நீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றை வழங்கியது. 1999ம் ஆண்டில் மரக்கறி விதைகள், பூவாளிகள் போன்றவற்றை வழங்கி யுதவியது.

**பட்டினிக்கெதிரான நிறுவனம்** Action Faim:

இந் நிறுவனம் பழமர உற்பத்தி ஊக்கு விப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி வலி வடக்கின் பல கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்களுக்கு பழ மரக் கன்றுகளை விநியோகித்தது, அத்துடன் மக்களுக்கு மண்வெட்டிகள் வழங்கியதுடன், மாமரங்களுக்கு கிருமி-நாசினி விசிறலையும் மேற்கொண்டது. விவசாய உற்பத்திப் பொருட்கள் பதனிடும் பயிற்சியும், 1999ல் சில கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப் பட்டது.

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்** TRRO:

இந் நிறுவனம் மீளக் குடியமர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு சமையல் பாத்திரங்கள் வழங்கியதுடன் 34 குடிசைகள் மலசலகூடங்கள் கட்டிக் கொடுத்ததுடன் கிணறுகள் திருத்தத்திற்கும் உதவியது.

**சர்வோதயம் :**

இந் நிறுவனம் தெல்லிப்பளை கிழக்கு, கணேஸ்வரம், அளவெட்டி வடக்கு ஆகிய பகுதிகளில் முன்பள்ளிகளை நிறுவி அப்பகுதிகளில் உள்ள சிறார்களின் ஆரம்பக் கல்விக்கு உதவிபுரிந்தது.

G.T.Z.: **ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்:**

வலி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வருமானம் குறைந்த வறுமையிலும் வறியோரைத் தெரிவுசெய்து 1 லட்சம் ரூபா செலவில் வீடமைத்துக் கொடுக்கும் நோக்குடன் வீடுகள் புனர்நிர்மான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி யுள்ளது இதன் மூலம் 75 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயனடைந்துள்ளனர்.

**இளைஞர் சேவை மன்றம் :**

இந் நிறுவனம் அளவெட்டி தெற்கில் உள்ள வயல்வீதி ஒன்றைச் செப்பனிட்டுக் கொடுப்பதில் உதவியது. ஆங்கில வகுப்பு, தையற் பயிற்சி என்பவற்றை நடாத்தி இளைஞரின்தொழில்வளத்தைப் பெருக்கியது.

RRAN: **வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை**

இந் நிறுவனம் பல்வேறு புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் காலத்துக்குக் காலம் இப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் மக்கள் மீளக்குடியேறத் தொடங்கியவுடன் மீள் குடியேற்றக் கொடுப்பனவாக ரூபா 5000/= 1996ல் 530 குடும்பங்களுக்கும், 1997ல் 857 குடும்பங் களுக்கும், 1998ல் 2365 குடும்பங்களுக்கும், 1999ல் 435 குடும் பங்களுக்கும், 2000ம் ஆண்டில் 57 குடும்பங்களுக்குமாக மொத்தம் 4242 குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளது.

இதேவேளை 1500/-க்கு கீழான வருமான மட்டத்தைக் கொண்ட மக்களுக்கு வீடுகள் புனரமைப்புக்கென ரூபா 25000/= கொடுப்பனவு 3 கட்டமாக வழங்கப்பட்டு வருகிறது. இக் கொடுப்பனவின்போது ஒவ்வொரு கட்டத்திலும் கொடுப்பனவைப் பெற்றவர்கள் உரிய முறையில் அதனைப் பயன்படுத்துகிறார்களா? என்பதும் மதிப்பிடப் படுகிறது. 1998ம் ஆண்டிலிருந்து இதுவரை 17 கிராம அலுவலர் பிரிவுகளில் 1197 குடும்பங்கள் இக் கொடுப்பனவு மூலம் பயன்பெற்றுள்ளனர் இவர்களை விடக் குருவளை முகாம், கோணவளை முகாம் சுந்தரபுர முகாம், நீதவான் இல்ல முகாம், போன்ற முகாம்களிலுள்ள 257 பேருக்கு இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் 1500 ரூபாவுக்கு மேலான வருமான

மட்டத்தினை உடையோருக்கு அசையும், அசையாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்காக நட்டஈடு வழங்கு வதற்கான திட்டம் இந் நிறுவனத்தினால் 1998ல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இதனடிப்படையில் எமது பிரதேசத்திலும் அதிகளவு மக்கள் சொத்துக்களை இழந்துள்ளதால், அவர்களுக்கும் இக் கொடுப்பனவுகளை வழங்க தொடர்ச்சியாக நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அரசாங்கத்தினால் ஒவ்வொரு பிரதேசத் திற்கும் வருடாவருடம் ஒதுக்கப்படும் பிரமாண அடிப்படையிலான நிதி, பன்முகப்படுத்தப்பட்ட நிதி, போன்றவையும் வலி வடக்குப் பிரதேசத்தில் தற்போது பல்வேறு புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் பிரமாண அடிப்படையிலான நிதியாக ரு 1000000/= ஒதுக்கப்பட்டுவருகின்றது.

1997ம் ஆணடிற்குரிய பிரமாண அடிப்படையிலான நிதியைப் பயன்படுத்தி வலிவடக்குப் பிரதேச செயலர் பிரிவில் பின்வரும் வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதை அவதானிக்கமுடிகிறது.

வீதிகள் திருத்த வேலையைப் பொறுத்தவரையில் மல்லாகம் பங்களா வீதி, மல்லாகம் மில்லேன், அளவெட்டி பெரியமதவடி வீதி போன்றவை திருத்தப் பட்டன.

அத்துடன் ஆயுர்வேத வைத்தியசாலை, முன்பள்ளி போன்றவற்றிற்கான தளபாடங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான உபகரணங் கள், மின் பிறப்பாக்கி, நூல் நிலையத்திற்குத் தேவையான தளபாடங்கள், புத்தகங்களும் போன்றன கொள்வனவு செய்யப்பட்டன. மேலும் ஆயுர்வேத வைத்திய நிலைய உபகரணங்கள், மற்றும் போட்டோப் பிரதி இயந்திரம் போன்றன கொள்வனவு செய்யப்பட்டன இவற்றை விட நல்லின ஆடு உற்பத்திக்கு கடா, ஆட்டு நிலையம் அமைத்தமை, தென்னை நாற்று விநியோகம் ஆகிய செயற்பாடுகளும் இந் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறே 1998ம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து பின்வரும் வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

வீதிகளின் திருத்த வேலைகள் கோணற்புல வீதி, மகாத்மா வீதி, பன்னாலை - இளவாலை வீதி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டதுடன் கட்வடுவன்புலம் பாடசாலை ஒழுங்கையும் திருத்தப்பட்டது. முருங்கையப்புலம், துர்க்காபுரம், குட்டியப்புலம் போன்ற இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன.

மேலும் தெல்லிப்பளை பஸ்நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. பிரதேச சபை நூலகத்திற்குப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அத்துடன் பெரியதம்பிரான் குள அணைக்கட்டும் இந் நிதியிலிருந்து புனரமைக்கப்பட்டுள்ளது. கும்பலை முன்பள்ளிக் கூரைத் திருத்த வேலைகளும் இடம்பெற்றன.

இவற்றைவிட பால் பழுதடையாமல் பாதுகாக்க குளிரூட்டி கொள்வனவு பால் பிரிக்கும் இயந்திரம் கொள்வனவு போன்ற வையும் இந் நிதியிலிருந்து மேற்கொள்ளப் பட்டு தெல்லிப்பளை கால் நடைவளர்ப்போர் சங்கத்திற்கு வழங்கப்பட்டன.

1999ம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான நிதி பின்வரும் வேலைத் திட்டங்களில் பயன்பாட்டிற் குள்ளாக்கப் பட்டது.

பினாக்கைக் குளம், நக்கனாங்கட்டைக் குளம் போன்றவை புனரமைக்கபட்டன. வீதிகளைப் பொறுத்த வரையில் சோடாக் கம்பனி வீதி, குளமங்கால் வீதி, காட்டுப்புல வீதி, கோணாவளை வீதி, கும்பலைக்குள வீதி, காளி கோவில் ஆராய்ச்சிசீமா வீதி போன்றவை புனரமைக்கப்பட்டன.

இவற்றை விட முன்பள்ளித் திருத்த வேலை மதகு திருத்த வேலை ஆகியவை மேற்கொள்ளப் பட்டதுடன் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவும் இந் நிதியி லிருந்து மேற்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் வருடா வருடம் குறிப்பிட்ட தொகைப் பணம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியாக ஒதுக்கப்பட்டு வருகிறது.

1998ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து நடை முறைப்படுத்தப்பட்ட வேலைகளாக கொல்லன்கலட்டி

பிள்ளையார் கோவில் புனரமைப்பு, அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில் புனரமைப்பு அளவெட்டி மத்திய மருந்தகக் கட்டிடம் புனரமைப்பு போன்றன இடம் பெற்றன. இவ் வேலைத் திட்டங்களுக்கு ரூபா ஐந்து இலட்சம் செலவிடப்பட்டது.

இதனை விட பழமரச் செய்கையை ஊக்குவிக்கவென விவசாயத்திணைக் களத்திற்கு 250, 000/= நிதி வழங்கப்பட்டது.

1999ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தெல்லிப்பளை கிழக்குப் பகுதியிலமைந்துள்ள கலைச்செல்வி பாலர் பாடசாலை சனசமூகநிலைய கட்டட நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மகாஜனாக் கல்லூரிக்கு இரண்டு கணனிகளும் அதற்கான உபகரணங்கள் கொள்வனவும் மேற்கொள்ளப்பட்டது. இவ் விரு செயற்பாடுகளுக்குமென 647,700/= ஒதுக்கப்பட்டுள்ளது.

வலி வடக்குப் பிரதேசமானது தொடர்ச்சியாக புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளையே வேண்டிநிற்பதால் தொடர்ச்சியாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துக் காத்துள்ளது. இவ் எதிர்பார்ப்பினை உணர்ந்து இனிவரும் காலங்களிலும். இந் நிறுவனங்கள் தமது சேவைகளை இன்னமும்கூடியஅளவில் வழங்க முன்வரவேண்டும்.

குறிப்பாக வலி வடக்குப் பிரதேசத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்றது எனவே அவர்களின் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளை, தொழில் பெறும் வாய்ப்பிற்கான பயிற்சிநெறிகளில் ஈடுபடுத்தி தொழில் வாய்பினை ஏற்படுத்திக் கொடுக்குமிடத்து பெண்களின் சுமைகுறையக் கூடிய சந்தர்ப்பம் கிட்டும். அத்துடன் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினால் நிரப்பப்படும் பதவி வெற்றிடங்களுக்கும், இவ்வாறான பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளித்தல் விரும்பத்தக்கதாகும். பெரும்பாலான பெண்தலைமைதாங்கும் குடும்பங்களில் 80% மானவர்கள் கல்வியறிவற்று இருப்ப தனால் அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதியளிக்க சகல நிறுவனங்களும் முன்வர வேண்டும்.

வலி வடக்குப் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அதிகளவில் காணப்படுவதனால், இவற்றை விரைவாக அகற்றி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கு தொண்டர் நிறுவனங்கள் முன்னைய காலங்களில் ஒத்துழைப்பு நல்கியது போல் இனிவரும் காலங்களிலும் தமது அர்ப்பணிப்பான சேவையினை வழங்க வேண்டும். இக் கண்ணிவெடி அகற்றும் பணியில் தற்போது ஈடுபட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் நிதியுதவி யுடனான கண்ணிவெடி விழிப்புணர்வுத் திட்டம் வரவேற்கத்தக்கதும், முன்மாதிரியு மான ஒருநடவடிக்கையாகும்.

## *சிறுவர் பாதுகாப்பு நிதியம்*

கிராமிய சிறுவர் நலவாயங்கள் அமைத்து சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளது

### பகுத்தறிவு

பகுத்தறிவைக் கொடுத்தான்
ஆண்டவனே - அதைப்
பகைத்தறி கின்றான்
மானிடனே

விதித்ததை விடுத்தான்
விகற்பமாய் எடுத்தான்
கதிதனைக் கெடுத்தான்
கடமையை மறந்தான் - மனிதன்
கடமையை மறந்தான் மறந்தான்

சாத்திரம் வகுத்தான்
சாதியைப் படைத்தான்
சலனத்திற் கரைந்தான்
சகதியிற் புரண்டான் - மனிதன்
சகதியிற் புரண்டான் புரண்டான்

இறைவழி பகுத்தான்
கறைகளை வளர்த்தான் -மனிதன்
கருத்தினை மறந்தான்
கவலையை வளர்த்தான் - மனிதன்
கவலையை வளர்த்தான் வளர்த்தான்

*பிரக்ஞா*

# வலிவடக்கில் மீளக்குடியமர்வும் பெண்கள் தலைமைத்துவமும்

**வ. சக்தியசீலன்**
உதவித்திட்டபணியாளர்

வலிகாமம் வடக்கு பகுதியில் மீளக்குடியமர 1996ஆம் ஆண்டு சித்திரை மாதத்தின் பிற் பகுதியில் அனுமதிக்கப்பட்ட போதும், இப் பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை 15 கிராம அலுவலர் பிரிவுகள் படிப்படியாக அனுமதிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பிரதேச மக்கள் மீளக்குடியமர விரும்பியும், இது சாத்தியமாகாத நிலையில் உறவினர். நண்பர்கள் வீடுகளிலும் நலன்புரி முகாம்களிலு் பல சிரமங்கட்கு மத்தியிலேயே வாழவேண்டியுள்ளது.

இதற்கு மேலாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் தமது நாளாந்த வாழ்க்கையினைக் கொண்டு நடாந்துவதற்குப் பல விடயங்கள் முட்டுக் கட்டையாக உள்ளன. குறிப்பாகச் சொந்த வீடுகளில் பாதுகாப்புடன் அயலவர். உறவினருடன் சேர்ந்து வாழுந்து வந்தோரில் அனேகர் சொந்த வீட்டை இழந்த நிலையிலும், சொந்த வீட்டுக்குச் சென்று வாழ விரும்பியும் அயலவர்கள், உறவினர் இல்லாத காரணத்தினால் பாதுகாப்பு நிமித்தம் அவ்வாறு செய்ய முடியாத நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் மீண்டும் தமது பிரதேசங்களில் சென்று வாழ இராணுவ நடவடிககைகள் தடையாகவுள்ளன. அகதி முகாம் வாழ்க்கையை உதறித்தள்ளிவிட்டு தனிக் குடித்தன. அமைப்புக்குள் சென்று சுதந்திரமாக வாழ முடியாத இரும்புப் பிடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

சம காலத்தில் இராணுவம் மேற்கொண்டுவரும் கண்முடித்தனமான கைதுகள், ஷெல் வீச்சுக்கள், குண்டு வீச்சுக்கள் துப்பாக்கிச் சூடுகள், மிதி வெடிகளால் அங்கவீனார்களாவது அல்லது இறப்பது. பயத்தினால் குறிப்பாக ஆண்கள் பாதுகாப்பின் நிமித்தம் வெளிநாடு செல்வது. திடீரென காணாமற் போவது போராட்டக் குழுக்களில் இணைந்து கொள்வது. போன்ற காரணங்களின் எண்ணிக்கை இப் பிரதேசத்தில் துரிதமாக அதிகரித்துச் செல்கிறது.

இந் நிலையில் அல்லது இக்கால கட்டத்தில் எமது சமூக பொருளாதார பண்பாட்டு கட்டமைப்பில் ஆண், பெண் பால்களுக்கு இடையே சமூக மதிப்புக்கள் வித்தியாசமாகி விட்டன. இவை அவர்களது பாகுபாடான நடைமுறைக்கு வழிகோலின.

வறிய ஆண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தவர்களை விட வறிய பெண்கள்தலைமை தாங்கும் குடும்பத்தவர்கள் தான் அதிக துன்பங்களை அனுபவிக்கின்றனர் எனவும், அவர்களின் வறுமையின் தீவிரம் உயர் நிலையில் உள்ளது. எனவும், குறிப்பாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தவரிடையிலும் பிரதானமாக வருமானமீட்டும் உழைப்பாளராக பெண்கள் விளங்கும் குடும்பங்கள் அதிகம் காணப்படுகின்றதை உணர்முடிகிறது.

பெண்கள் குறைந்த வேதனத்திற்க வேலை செய்வதும்ஈ வேதனமற்ற வேலைகளை முழு நேரமும் செய்வதும், தேர்ச்சியற்றதும், அமைய அடிப்படையிலான வேலைகளில் அதிகம் ஈடுபடுவதும். ஒப்பீட்டளவில் பலவிதமான பொறுப்புக்களை இவர்கள் மீது திணித்துள்ளது.

### வாழ்க்கை அமைப்பு

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தமது உணவு மற்றும் அத்தியாவசிய வாழ்க்கைத் தேவைகளுக்காகப் பொதுவான ஏற்பாடுகளைச் செய்து சேர்ந்து வாழ்வது "குடும்பம்" ஆக அமைகிறது. இவர்கள் உறவினர்களாகவோ அல்லது உறவு முறை அற்றவர்களாகவோ அல்லது இரு சாராருமாகவோ அமையலாம்.

இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியமர்விற்கான நன்கொடைகள், சலுகைகள் என்பவற்றை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதனை நோக்காகக் கொண்டே தனிக் குடும்பங்கள் பெருமளவில் உருவாகத் தொடங்கின எனலாம்.

இந் நிலைமையானது கணவனை இழந்த மனைவியானவள் தானே தனது குடும்பத்தைக் கொண்டு நடத்துகின்ற வலுவைப் பெற ஊக்குவித்துள்ளது. அத்துடன் குடும்ப அலகு எண்ணிக்கை குறைந்துள்ளதால் தலைமை தாங்கும் குடும்பப் பெண்ணின் சுமையும் ஓரளவு குறைவுபட்டுள்ளதனையும் கருத்திற் கொள்ள முடியும். இன்று கணவனை இழந்த மனைவி தனது முன்னைய அனுபவ ரீதியான முடிவின்படி தொடர்ந்து தனியாகவே வாழ விரும்புகின்றாள்.

இவ்வடிப்படையில் இன்றைய சமூக அமைப்பில் அனேக இளம் வயதினர் விதவைகளாக மாறிக் கொண்டிருப்பதால் இவர்களை மறுமணம் செய்து கொள்ள ஆண்கள் முன்வர வேண்டிய கட்டாயச் சூழ்நிலையும் தோன்றியுள்ளதனை உணர்ந்து கொள்ள முடிகிறது. இந்த நிலைப்பாடானது சமுதாய ரீதியான வாழ்க்கை அமைப்பில் இதுவரை இருந்து வந்த கட்டுப்பாடுகள், விழுமியங்கள், சம்பிரதாயங்கள் போன்றவற்றை மீறுவனவாக அமைகின்றன.

கணவன் தொழில் நிமித்தமோ, பாதுகாப்பின் நிமித்தமோ வெளிநாடு அல்லது வெளி மாவட்டம் சென்றால் இவ்வகையான பெண்தலைமைத்துவத்திற்கு சமூகப் பாதுகாப்பு ஓர் அச்சுறுத்தலாகஇன்றுள்ளது. மறைமுகமாக பெண் குடும்பப் பொறுப்பை ஏற்று நடாத்தும் வலுவினைப் பெற வேண்டியதொரு கட்டாய நிலையும் உருவாகியுள்ளதனை இதிலிருந்து காண முடிகின்றது.

## குடும்ப அமைப்பு (பருமன்)

இலங்கையின் குடும்பங்களின் சராசரி குடும்ப அளவு வருடந்தோறும் படிமுறையாகக் குறைந்து வந்து 1993 இல் இது. 4.6 ஆக நிற்கின்றது. இவ்வியல்பு வெளிப்படையாகவே பெருமளவிற்கு நகர, கிராமப்புற கருவளவீத வீழ்ச்சியினைக் காட்டுவதாகவுள்ளது. ஆனால் இக்குறைவு வீட்டுப் பெண்களுக்கு சில குறித்த விடயங்களில் ஆறுதல் அளிக்கின்றது. எனலாம். அதாவது உணவு அளித்தல், அவர்களைப் பராமரித்தல் போன்ற விடயங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

யுத்த நிலைமையினாற் பெரிதும் பாதிப்புக்குட்பட்டதன் விளைவே இக்குறைவிற்கு அடிப்படைக் காரணம் எனக் கூறப்படுகிறது. ஆயினும் இதிலிருந்து வேறுபட்டதான ஒரு போக்கே பிரதேசத்தின் குடும்ப அளவிற் காணப்படுகிறது. அட்டவணை பார்க்கவும்

**குடும்ப அளவு - 1998**
**வலிகாமம் வடக்கு**

| குடும்ப அளவு | பெண் தலைமை |
|---|---|
| 1 | 12 |
| 2-4 | 61 |
| 5-6 | 26 |
| 7ம் அதற்கு மேலும் | 01 |
| மொத்தம் | 100 |

மூலம் - மாதிரி தரவு 1998

## வாழ்க்கை எதிர்பார்க்கை

நாட்டினது வாழ்க்கை எதிர்பார்க்கை தொடர்ச்சியாகவே வருடாவருடம் அதிகரித்த போக்கினைக் காட்டுகிறது. 1960 களில் ஆண்களுக்குச் சாதகமாகவே இப் போக்கு அடைந்த போதும் 1970 களிலிருந்து பெண்களுக்கு சாதகமாகவே இது அமைந்துளன்ளது. (புள்ளி விபரத் திணைக்களம்) இது சனத்தொகையில் முதியோர் அதாவது 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் தொகையில் பெண்களில் பங்கில் உறுதியான வளர்ச்சியைக் காட்டுவதாகவுள்ளது.

திட்ட அமுலாக்க அமைச்சின் 1997 ஆம் ஆண்டு கணிப்பின் படி ஆணின் ஆயுட் காலம் 72 வயதாகவும், பெண்ணின் ஆயுட்காலம் 76 வயதாகவும், உள்ளது. எனவே பெண் கூடியளவு காலம் சராசரியாக 4 வருடங்கள் குடும்பப் பொறுப்பினை ஏற்று நடாத்த நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளாள்.

வயது ரீதியான தலைமை தாங்கும் பெண்களின் எண்ணிக்கை

வலிகாமம் வடக்கு - 1998

| வயது | பெண் தலைமை தாங்குபவர்கள் |
|---|---|
| 20-29 | 08 |
| 30-39 | 30 |
| 40-49 | 28 |
| 50-59 | 26 |
| 60-69 | 6 |
| 70 ம் அதற்கு மேலும் | 2 |
| மொத்தம் | 100 |

மூலம் - மாதிரி தரவு - 1998

## மனநிலை

பொதுவாகவேச் மூகத்தில் தனது பொருளாதார நிலைமை, கல்வி, அந்தஸ்து என்பவற்றில் ஏறகத்தக்க ஓர் உறுதித் தன்மை ஏற்படும் வரை பெண் தனது திருமணத்தைப் பின் போடும் நிலை இன்று பரவலாகக் காணப்படுகிறது.

கடந்த 10 அண்டுகளாக ஒரு போதும் மணம் முடியாத ஆண், பெண் இருபாலாரிடையிலும், பெண்களின் இத்தகைய போக்கு வெளிப்படையாகவே அதிகரித்துக் காணப்படுகிறது. அதே வேளை ஒரு ஆண் மறுமணம் செய்து கொள்வதும் பெண் தான் முன்பு அனுபவித்த சொந்தம் விருப்பு வெறுப்புக்களிலிருந்து தனிமையில் வாழ விரும்புகின்ற போக்கும். காணப்படுகிறது.

இது மாத்திரமன்றி சட்ட ரீதியாக திருமணம் செய்து கொள்ளாத காரணத்தால் ஆண்வேறு திருமணம் செய்து கொள்ளும் போது பெண்ணே தனது குடும்ப பொறுப்பினை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குட்படுகிறாள். இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைகளாலும் முன்னைய அரசினால் விடப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு களினாலும் திருமண வயதுடைய ஆண்கள் வெளிநாடு சென்றமையும் பொதுவாகவே பெண்களின் திருமணவயதெல்லையை அதிகரிக்கச் செய்துவிட்டது.

பொதுவான சமூக அமைப்பில் ஆண்தலைமை தாங்கும் குடும்பங்களே ஏற்றுக்கொள்ளப்பட்டன. அப்போது ஆண்கள் எவருமே இல்லாத இடத்து மட்டும் பெண் குடும்பத்தைக் கொண்டு நடாத்தும் நிலையிருந்தது.

ஆனால் இன்று கணவனின் இறப்பால் திருமணபந்த முறிவால் பிரிந்து வாழ்வதால், வேலைவாய்ப்பின் நிமித்தம் கணவனைப் பிரிந்த நிலையினால், திருமணம் ஆகாத பெண்கள் தகப்பனை அல்லது சகோதரர்களை இழந்தமையால், அவள் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டியவளாக மாறிவிட்டாள்.

இவற்றுடன் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் காரணமாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கிற்று இவ்வதிகரிப்பு வேகம் 1977ம் ஆண்டில் செய்யப்பட்ட யுத்தப்பிர கடனத்தினால் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்ததுடன் ஆரம்பித்தது.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் [illegible] கூடுதலாகும். 1990 ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் கிடைக்கும் பதிவுகளின் படி 88787 பேர் கொல்லலப்பட்டுள்ளனர். இதில் 5373 மரணங்கள் வலிகாமம் பகுதியில் மட்டும் இடம்பெற்றுள்ளன. இது முழு மாவட்டத்தின் 61.15% மாகும். இது தவிர காயப்பட்டவர்கள். 56. 57 % மாகவுள்ளமையும் கவனத்திலெடுத்துக் கொள்ள வேண்டிய விடயமாகும்.

வலிகாமம் பகுதியில் மீளக்குடியமர்ந்த பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் காணாமற் போனவர்கள் எண்ணிக்கை சிறுகச் சிறுக அதிகரித்துக் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக 600 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு என்ன நடந்தது. என்பது இன்றுவரையும் கேள்விக்குறியாகவே உள்ளது. இந்நிலையின் வெளிப்பாடாக வெளி மாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று கொண்டிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

மேற்சொல்லப்பட்ட யுத்த கோரங்களினால் அதிகரித்துவிட்டது. இப் போக்கினால் வறுமைக் கோட்டுக்குள் உள்ள பெண் தலைமை தாங்கும் விதவைகள் 48% மும் வறுமைக் கோட்டுக்கு மேற்பட்ட பெண் தலைமை தாங்கும் விதவைகள் 59 % உள்ளனர் எனத் திட்ட அமுலாக்கல் அமைச்சின் மாதிரி ஆய்வு 1997 காட்டுவதும் பொருத்தமானதாகவுள்ளது.

திருமணம் செய்யும் போது பெண்ணின் வயது வலிகாமம் வடக்கு 1993

| வயது | எண்ணிக்கை |
|---|---|
| 10-14 | 02 |
| 15-19 | 48 |
| 20-24 | 26 |
| 25-29 | 22 |
| 30-34 | 02 |
| மொத்தம் | 100 |

மூலம் பதிவு - மாதிரிதரவு - 1998

பெரும்பாலும் 15 வயது தொடக்கம் 29 வயது வரையிலான காலப்பகுதியிலேயே திருமணம் நடைபெறறுள்ளமையைத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறிருந்தாலும் பெண்ணின் திருமண வயதெல்லை முன்னையிலும் பார்க்க அதிகரித்துக் கொண்டு செல்வதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

1940ல் 20.7 வருடமாக இருந்த திருமண வயது 1993 இல் 25.5 வருடங்களாக மாறியுள்ள போக்கு இதனால் புலப்படுகின்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு எல்லைக்குள்ள பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வயதினைக் கருத்தில் கொள்ளுமிடத்து நாட்டின் பயங்கரவாத நடவடிக்கைகள், யுத்தம், காணாமற் போதல் என்பவை இளவயது ஆண்களை பெருமளவில் பலி கொண்டதன் காரண மாகவே இளவயது அதாவது கருவளம் கொண்டது 15 - 49 வயதிற்குட்பட்டவர்கள் எண்ணிக்கை 100 பேரில் 66 பேராகவுள்ளது இந்த நிலை சமுதாயத்திலும், சரி, பொருளாதார வளர்ச்சியிலும் சரி பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவனதாகவுள்ளது.

கருவளம் கொண்ட குடும்பங்தலைவிகளின் செயற் திறன்களைப் பயன்படுத்தி, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது, பாதுகாப்பு அளிப்பது, பிள்ளைகளின் கல்வி, போசாக்கு என்பவற்றை அளிப்பதிலிருந்து இன்றைய சமுதாய நீரோட்டத்தில் இவர்களை ஒன்றிணைப்பதற்குப் பல நடவடிக்கைகள் தடையாகவுள்ளன. இதுவே. சமூகத்தில் பெரும் பிரிச்சனையாகவுள்ளது.

இவற்றுடன் இன்றைய சமூகத்தில் அனேக இளைஞர்கள் பாதுகாப்பின் நிமித்தமும், தொழில் நிமித்தமும் மீளக்குடியமர முடியாத நிலையிலும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இதனால் இளம் வயதுப் பெண்களின் திருமண வயது தானாகவே பின் போடப்படுகின்றது. மேலும் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து திருமணம் செய்து விட்டு திரும்பவும் சென்று மனைவியை தமது நாட்டுக்கு அழைக்கும் காலம் மிக நீணடதாக அமைந்துவிடும். போதும், தொழில் நிமித்தம் வெளிநாடுகட்குச் சென்றவர்களின் குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பற்ற நிலையும் இன்றைய நிலையில் மரபு ரீதியாகக் கட்டிக்காத்து வந்த விழுமியங்களை மீறுவதற்கு வாய்ப்பைத் தந்துவிட்டது. எனவே திருமணம் செய்தும் ஒன்றாக வாழ முடியாத நிலையில் இவ்வாறு பல தலைமைத்துவம் அதிகரித்துக் கொள்ளும் போக்கை இது மேலும் தீவிரமடையச் செய்து விட்டது.

ஒரு பெண் திருமணம் செய்து வாழ்ந்த முன் அனுபவத்தாலும் பலவித சமூகக் கட்டுப்பாடுகளாலும் மறுமணம் செய்து கொள்ள இலகுவில் விரும்புவதில்லை. மேலும் பெண்களின் மறுமணத்தை எந்தளவு தூரம் நியாய பூர்வமாக ஆண்வர்க்கம் ஏற்றுக்கொள்ளும் என்பதும், சமய சமுதாய கட்டுப்பாடுகள் எந்தளவு தூரம் விட்டுக் கொடுக்கும் என்பதும் பெரும் கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

## எழுத்தறிவு

கல்வித்தரம் குறித்து பெண் தலைமை தாங்கும் பெண்களை விட ஆண்களின் கல்வித்தரம் இங்கு வறுமை குறித்து குறைவாகவே காணப்படுவது சகஜமாயிருக்கிறது.

மகளிர் கல்வி, பொருளாதார ஸ்திரத்தன்மை அடையும் வழியாகவும், சில சமயங்களில் திருமணத்திற்கான சிறந்த வாயப்பாகவும் கருதப்படுகிறது. அத்துடன் அவர்களது தீருமணம் எடுக்கும் சக்தியை விரிவடையச் செய்துள்ளது எனலாம்.

பெண்கள் சமூக ரீதியாக ஈட்டியுள்ள சாதனைகள் குறித்து கல்வி தொடர்பான குறிகாட்டி இதனைத் தெளிவு படுத்துகின்றது. இது மறைமுகமாக நாட்டின் ஆயுள் கால எல்லையை அதிகரிப்பதற்கு துணை புரிகின்றது பெண்கள் நீண்ட காலத்தைக் கல்வி கற்பதில் செலவழிப்பதும் உயர் கல்விக்கு நீண்ட காலம் எடுப்பதும் முக்கிய அம்சமாக அமைந்து விட்டது இது தானாகவே பெண்ணின் திருமண வயதைச் சராசரியாக 25 வயதாக நீளச் செய்துவிட்டது.

மேலும் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் இடைநிலைப் பள்ளிகளில் ஆண்களிலும் பார்க்க பெண்கள் அதிகமாகப் படிக்கின்றனர் என்பதும் அபிவிருத்தித் திட்டமிடலில் கவனத்திற்கு விடயமாகவுள்ளது.

பள்ளிக் கல்வியை அதிகளவு பெறாத பெண்கள் பயிற்றப்படாத துறைகளில் எளிதாக வேலைகள் பெறமுடிகின்றது. எனினும் பெண்களின் கல்வி மட்டம் உயர்வடைந்தமையால் பல தொழில் சார் துறைகளில் பெரும் எண்ணிக்கையில் பிரவேசிக்க வழிவகுத்துள்ளது.

வலி வடக்கில் பெண்களின் கல்வித் தரம் அதிகரித்துள்ள போதும், குடும்பத் தலைமை தாங்கும் பெண்களில் பெரும் பங்கினர் ஆரம்பக் கல்வியை மட்டுமே பெற்றுள்ளனர். இதற்கு வறுமை, சமூகக் கட்டுப்பாடு என்பன கல்வியைத் தொடர முடியாத காரணிகளாக அமைந்துள்ளன.

இப் பிரதேசத்தில் வதியும் 769 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் அனேகர் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களாகவே இருக்கின்றனர். அத்துடன் 71 பெண்கள் ஓய்வுதியம் பெறுபவர்களாகவுள்ளனர். 05 குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் தங்கள் பிள்ளைகளைப் படிப்பித்து முன்னேற்றியதால் அப்பிள்ளைகள் மருத்துவதாதி, ஆசிரியை, தபால் ஊழியர், தென்னை பனம் பொருள் கூட்டுறவுச் சங்க அலுவலர் போன்ற பதவிகளில் தொழில் புரிந்த வருகின்றனர். (அட்டவனை பார்க்க)

| தொழில்கள் | குடும்பத்தலைவி | குடும்பஅங்கத்தவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. ஆசிரியைகள் | 5 | 2 | 7 |
| 2. ஓய்வூதியர் | 76 | 0 | 76 |
| 3. மருத்துவமாது | 0 | 1 | 1 |
| 4. தபால் ஊழியர் | 0 | 1 | 1 |
| 5. கூட்டுறவு ஊழியர் | 0 | 1 | 1 |
| மொத்தம் | 81 | 5 | 86 |

மூலம் - பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு

சமூகத்தில் நிலவி வந்த பெண் பருவமடைந்ததும் கல்வியைத் தொடர முடியாத நிலை இன்று பெருமளவிற்குக் குறைந்துள்ளது. பெண் கல்வி சமூக ரீதியாக ஈட்டிய சாதனை இப்பகுதிக் கான பிரதேச செயலர் கூட ஒரு பெண்ணாயிருப்பது ஒரு நல்ல சான்றாகும்.

மேலும் இம் மாவட்டத்தின் பிரதான ஆலயங்களில் ஒன்றான தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் ஓர் பெண்ணாக இருந்தே நிர்வகித்து வருகின்றமையும் இங்கு குறிப்பிட வேண்டியதே.

எழுத்தறிவு பெற்ற பெண் தலைமை தாங்கும் குடுபத்தினருக்கு அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகள் கண்டறியப்பட வேண்டியுள்ளதுடன் அதற்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டி உள்ளது. இன்று மொத்த ஊழியர்படையில் மகளிர் பங்கு அதிகரித்துக் கொண்டு வருவது அவர்களின் எழுத்தறிவு வளர்ச்சியினால் ஏறபட்டதே என்பதனை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

நீண்ட காலத்தில் போசாக்கு நிலையிலிருந்து குடும்பத்திட்டமிடல் வரையும் சமூகத்திற் சிறுவர் ஆரோக்கியத்திலிருந்து மகளிர் உரிமை வழங்கப்படுவது வரையிலுமான முன்னேற்றத்தின் அனைத்து அம்சங்களையும் ஒரு நாடு அதன் பெண் பிள்ளைகளுக்கு கல்வியூட்டி வருகின்றதா? இல்லையா? என்பதனைப்பொறுத்தே நிச்சயிக்கப் படுகிறது எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

கல்வியானது ஒரு பெண்ணுக்கு சகல விடயங்களிலும் அதிக விழிப்புணர்வையும் கூடுதலான சகிப்புத் தன்மையினையும், உயர் அளவிலான தன்நம்பிக்கையையும் வழங்கமுடியும். தனது கணவரின் கண்களிலும் குடும்பத்தவர்களின் பார்வையிலும், சமூகத்தின் நோக்கிலும் கல்வி என்பது ஒரு பெண்ணின் மதிப்பையும் அந்தஸ்தையும் நிச்சயமாக உயர்த்துகிறது. அத்துடன் குடும்பத் திட்டமிடல் ஒரு பெண்ணுக்கு தனிப்பட்ட ரீதியில் அதிக வாய்ப்புக்களையும், போதிய நேரத்தையும், நல்ல தேகாரோக்கியத்தையும் வழங்க முடியும் என்ற ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியத்தின் கருத்து சகல அம்சங்களிலும் பொருததமாகவே தெரிகின்றது.

## நிலவு

1. வானத்தில் ஆயிரம் நட்சத்திரம் – உள்ளே  
வண்ணமதி என்ன விசித்திரம்.  
மோனத்தில் ஆயிரம் அர்த்தங்கள் கூறியே  
மோகந் தருவதும் அதிசயம்

உ. கூனற்பிறைச் சிவன் நெற்றியில் ஓர்விழி  
போல ஒளிருது பவித்திரம்  
ஆனைமுகன் தம்பி ஆறுமுகன் கையின்  
வேலை நிகர்க்குதே சித்திரம்

3. வானவெளியினில் ஞானிகள் ஆயிரம்  
சூழவலம் வரும் உருத்திரன்  
ஞானக் கதிரவன் போல அவனியில்  
கண்மலர்ந்தே செலும் சரித்திரம்.

4. ஆனபுலவர்கள் அயிரம் வந்தாலும்  
பாடத்துடிப்பரே அற்புதம்  
காணவினிய கலைமதியால் என்றும்  
காதலர் உள்ளத்தில் உபத்திரம்.

– சித்தி

# கடந்த காலம் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள்

**பிரிவுகாரியதிகாரி / உதவி அரசாங்க அதிபர்**

1. திரு. ரி. முருகேசம்பிள்ளை
2. திரு. பி. எல். பற்றிக்
3 திரு. அமிர்தசாகரன்
4. திரு. ஏ. மகாதேவா
5 திரு. எஸ். சுப்பிரமணியம்
6. திரு. எஸ். ராஜரட்ணம்
7 செல்வி மைதிலி சோமசுந்தரம்
8. திரு. வை. இராசையா
9. திரு. க. நடராஜா
10 திரு. கா. சந்திரராஜா
11 திரு. நா. வேதநாயகன்
12 திரு. S. பாலச்சந்திரன் - காரியாதிகாரி
13 திரு. A. கந்தப்பிள்ளை - காரியாதிகாரி
14 திரு. A. பெருமையினார் - காரியாதிகாரி

**அலுவலக உத்தியோகத்தர்**

1 திரு. பொ. செல்லத்துரை - (பதவிநிலை உத்தியோகத்தர்)
2. திரு. ந. குலசிங்கம் - (பதவிநிலை உத்தியோகத்தர்)
3. திருமதி . இ.நடராஜசுந்தரம் - (எழுதுநர்)
4. திரு. வ. பாலசுப்பிரமணியம் - (எழுதுநர்)
5. திருமதி சி. ஜெயசக்தி - (எழுதுநர்)
6. திரு. இ. கையிலாயபிள்ளை - (எழுதுநர்)
7. திரு. த. நடராசா - (எழுதுநர்)
8. திரு. நா. பாலசுப்பிரமணியம் - (எழுதுநர்).
9. திரு. வ. நவரத்தினம் - (எழுதுநர்)
10 திரு. க. வடிவேலு - (எழுதுநர்)
11 செல்வி. மா. துஸ்யந்தி - (எழுதுநர்)
12 திருமதி வி. ரூபாவதி - (தட்டெழுத்தாளர்)
13 திரு. த. ஜெயசோதி - (எழுதுநர்).
14 திரு. இ. பரம்சோதி - (எழுதுநர்)
15 திரு. அ. யேசுதாஸ் - (எழுதுநர்)
16 திரு. செ நாகராசா - (கணக்காளர்)
17 செல்வி . சோ. இந்துமதி - (தட்டெழுத்தாளர்)
18 திருமதி. ச. கயல்விழி - (எழுதுநர்)
19 திரு. வி. ப. வேலாயுதபிள்ளை - (நிர்வாக உத்தியோகத்தர்)
20 திருமதி வி. உமா - (தட்டெழுத்தாளர்)
21 திரு. ஆ. சத்தியமூர்த்தி - (எழுதுநர்)
22 செல்வி லோ றோ. ஜெயராணி - (எழுதுநர்)
23 திருமதி சா. அலோசியஸ் - (எழுதுநர்)
24 திருமதி ம. சோமசுந்தரம் - (எழுதுநர்)
26. செல்வி சி.சிவசோதி - (எழுதுநர்)
27 திரு. முடிசிங்கராஜா - (எழுதுநர்)
28 திரு. சிவபாதம் - (எழுதுநர்)
29 திரு. உ. ரவீந்திரன் - (எழுதுநர்)
30 செல்வி சாந்தினி - (எழுதுநர்)
31 செல்வி. சுபத்திரா - (எழுதுநர்)
32 செல்விதர்மினி - (எழுதுநர்)

## சிற்றூழியர் சேவை

33 திரு. நே. வரப்பிரகாசம்
34. திரு. க. நவரத்தினம்
35. திரு. ந. நவரத்தினராசா - (சாரதி)
36 திரு. வ. சுந்தரமூர்த்தி - (வேலை மேற்பார்வையாளர்)
37 திரு. மகாலிங்கம்

## கிராம உத்தியோகத்தர்

1. திரு. ஆ. சுவாமிநாதன்
2. திரு. செ. உலகநாதன்
3. திரு. வே. வன்னியசிங்கம்
4. திரு. இ. இராசயோகன்
5. திரு. கு. கனகலிங்கம்
6. திரு. தி. இராசபாலன்
7. திரு. இ. கமலநாதன்
8. திரு. ஐ. ஜெகதீசன்
9. திரு. ம. சிறிமுருகவேள்
10 திரு. மு. கனகநாயகம்
11. திரு. கு. கந்தசாமி
12 திரு நா. கதிரேசன்
13. திரு. கி. மாசிலாமணி
14. திரு. சி.செ. நடராசா
15. திரு. சு. பரமசிவம்
16. திரு. க. இராசதுரை
17. திரு. க. சீவரத்தினம்
18 திரு. த. சண்முகநாதன்
19 திரு. ந. ஸ்கந்தராஜா
20 திரு..வை. குணாளன்
21 திரு. க. திருநாவுக்கரசு
22 திரு. மூ. சிவலிங்கம்
23 திரு. ந. கிருஸ்ணமூர்த்தி
24 திரு. இ. விக்கினேஸ்வரமூர்த்தி
25 திரு. த. தங்கராசா
26 திருமதி. இ. மகேந்திரன்
27 திரு. க. விசுவலிங்கம்
28 திருமதி.பொ. தங்கலிங்கம்
29 திரு. வ. சுந்திரலிங்கம்
30 திரு. க. சிவானந்தன்
31 திரு. இ. பரராசசிங்கம்
32 திரு. வே. பாலசுந்தரம்
33 திரு. செ. பத்மநாதன்
34 திரு. மு. வயவநாதன்
35 திரு. சு. அல்பிறெட்
36 திரு. ந. நாகபாதம்
37 திரு. சு. செல்வேந்திரன்
38 திரு. செ. தவராசா
39 திரு. செ. வசந்தகுமார்
40 திரு. அருளானந்தம்

## வெளிக்கள உத்தியோகத்தர்

1. திரு. ந. துரைராசா - (காணி. உத்.'.வெளிக்களப் போதாசிரியார்)
2. திரு. மூ. பாலசிங்கம் - (திட்டஅமுலாக்கல் உத்தியோகத்தர்)
3. திரு. கி. குணாளசிங்கம் - (திட்டஅமுலாக்கல் உத்தியோகத்தர்)
4. திரு. சு. சத்தியதாசன் - (வீடமைப்பு தொழில்நுட்ப அலுவலர்)
5. செல்வி. பொ. மஞ்சுளாவதி - (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
6 திருமதி ம. ஜெயராசா - (தையல் பயிற்சிப் போதனாசிரியர்)
7. திரு. நா. முத்துராசா - (வீடமைப்பு தொழில்நுட்ப அலுவலர்)
8. திரு. செ. யோகானந்தராசா - (சமூகசேவை அலுவலர்)
9 திரு. ஆ. ரகுநாதன் - (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
10 திரு. சு. கனகராஜா - (விளையாட்டு உத்தியோகத்தர்)
11 திருமதி. சி. இராஜேஸ்வரி - (பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)
12 திரு. க. சிறிபதி - (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
13 திரு. க. முத்துலிங்கம் - (புள்ளிவிபர உத்தியோகத்தர்)
14 திரு. அ. நிர்மலன் - (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
15 திரு. இ. றோகன் இராஜசிங்கம் - (விளையாட்டு உத்தியோகத்தர்)
16 திரு. தா. தியாகமூர்த்தி - (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
17 திரு. சி. மதிவதனன் - (தேசிய இளைஞர் சேவை அலுவலர்)
18 செல்வி. பா. கஜரதி - (தேசிய இளைஞர் சேவை அலுவலர்)
19 திரு. மா. இராஜேந்திரசீலன் - (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
20 திரு. க. கந்தையா - (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
21 செல்வி. வ. நிர்மலா - (கூட்டுறவு பரிசோதகர்)

| | | | |
|---|---|---|---|
| 22 | திரு. இ. புவன்றாஜ் | - | (கூட்டுறவு பரிசோதகர்) |
| 23 | திரு. ச. செல்வரத்தினம் | - | (கூட்டுறவு பரிசோதகர்) |
| 24 | திரு. எ. சின்னத்தம்பி | - | (கூட்டுறவு பரிசோதகர்) |
| 25 | திரு. நா. தவநாதன் | - | (கூட்டுறவு பரிசோதகர்) |
| 26 | திரு. ச. விவேகானந்தன் | - | (குடியேற்ற உத்தியோகத்தர்) |
| 27 | திரு. நா. பங்கலிங்கம் | - | (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| 28 | திருமதி ஜெ.செல்வி | - | (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| 29 | திருமதி. சி. முத்துராசா | - | (சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்) |
| 30 | திருமதி. ம. தேவாஜினி | - | (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| 31 | திருமதி. க. துரைசிங்கம் | - | (குடியேற்ற உத்தியோகத்தர்) |
| 32 | திரு. அ. சிவஞானசுந்தரம் | - | (சமூகசேவை உத்தியோகத்தர்) |
| 33 | திரு. இ. எழில் இளங்கதிர் | - | (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) |
| 34 | திருமதி சு. ஞானபூங்கோதை | - | (நெசவுப் போதனாசிரியர்) |
| 35 | திரு. பொ. தெட்சணாமூர்த்தி | - | (கூட்டு. பரிசோதகர்) |
| 36 | திருமதி க. சிவராஜா | - | (சிறு,நன். அதிகாரி) |
| 37 | திரு. ரமணன் | - | (விளையாட்டு உத்தியோகத்தர்) |
| 38 | திரு. நாகேஸ்வரன் | - | (வீடமைப்பு உத்தியோகத்தர்) |

# நிகழ்காலம் சேவைசெய்யும் உத்தியோகத்தர்கள்

## அலுவலக உத்தியோகத்தர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. ப.ல. திலயகநாயகம் | - | பிரதேச செயலர் |
| 2 | திரு. வ. சத்தியசீலன் | - | உ. தி. ப. |
| 3. | திரு. கா. பீதாம்பரம் | - | நிர்வாக உத்தியோகத்தர் |
| 4 | திரு. ந. சு. முருகையா | - | நிதி உதவியாளர் |
| 5 | திரு. கா. வல்லிபரம் | - | பதவிநிலை உத்தியோகத்தர் |
| 6 | திருமதி. சௌ. மகாராஜா | - | எழுதுநர் |
| 7 | திருமதி. க. கிருஸ்ணேஸ்வரன் | - | எழுதுநர் |
| 8 | திருமதி. ச. ஸ்ரீகந்தவேல் | - | எழுதுநர் |
| 9 | திருமதி இ. ஜெபரட்னம் | - | எழுதுநர். |
| 10 | செல்வி. க. சிவகௌரி | - | எழுதுநர் |
| 11 | செல்வி. செ. இந்திராணி | - | எழுதுநர் |
| 12 | செல்விமா. புவனராணி | - | எழுதுநர் |
| 13 | செல்வி பு. கலைச்செல்வி | - | எழுதுநர் |
| 14 | செல்வி கி. மதிவேணி | - | எழுதுநர் |
| 15 | செல்வி . தெ. அனிதா | - | எழுதுநர் |
| 16 | திரு. கு. சுவேந்திரன் | - | எழுதுநர். |
| 17 | செல்வி. அ. மரியவசந்தி | - | எழுதுநர் |
| 18 | செல்வி இ. தயாநிதி | - | எழுதுநர் |
| 19 | திரு. நா. கோணேஸ்வரன் | - | எழுதுநர் |
| 20 | திரு. ஏ. பகீரதன் | - | எழுதுநர் |
| 21 | செல்வி.க. தயாரஞ்சிதம் | - | எழுதுநர் |
| 22 | திரு. ஞா. லோகநாதன் | - | எழுதுநர் |
| 23 | திரு. பா. பிரசாந்தனன் | - | எழுதுநர் |
| 24 | செல்வி த. சசிகலா | - | சுருக்கெழுத்தாளர் |
| 25 | திருமதி. த. கிருஸ்ணமூர்த்தி | - | கணக்குப்பதியுனர் |
| 26 | திருமதி . ஐ. குகேந்திரராணி | - | தட்டெழுத்தாளர் |
| 27 | திருமதி. இ. தபோதினி | - | தட்டெழுத்தாளர் |
| 28 | செல்வி. வீ.சித்திரா | - | மொழிபெயர்ப்பாளர் |
| 29 | திருமதி. யா. நந்தகுமார் | - | அபிவிருத்தி இணைப்பாளர் |
| 30 | திரு. எஸ். சிவகுமார் | - | அபிவிருத்தி உதவியாளர் |

1 திரு. நீ. வில்லியவின்சன்
2. திரு. மா. சீவரத்தினம்
3 திரு. வை. இராசலிங்கம்
4. திரு. சி. தர்மலிங்கம்
5 திரு. செ. கெங்காவரதன்
6 திரு. க. நந்தகுமார்
7 திரு. செ. வைத்தீஸ்வரன்
8 திரு. வை. வன்னியசிங்கம்
9. திரு. பொ. சுந்தரலிங்கம்
9 திரு. ஆ. கோணேஸ்வரன்

# தற்போது கடமை புரியும் கிராம உத்தியோகத்தர்கள்

1. திரு. இ. சி. தெட்சணாமூர்த்தி
2. திரு. க. க. வேலாயுதபிள்ளை
3 திரு. சி. தவராஜா
4. திரு. பொ. இராஜேந்திரம்
.5. திரு. க. சிவலிங்கம்
6 திரு. செ. றொ.யேசுபாலன்
7 திரு. க. கலியுகவரதன்
8 திரு. சு. தர்மகுலசிங்கம்
9 திரு. செ. சிவயோகநாதன்
10 திரு. ச. சிவகுமார்
11 திரு. நா. சிவநாதன்
12 திரு. அ. தனபாலரத்தினம்
13 திரு. சி. சண்முகானந்தன்
14 திரு. சி. சாந்தநாயகம்
15 திரு. மு. அருமைநாயகம்
16 திரு. செ. சச்சிதானந்தம்
17 திரு. ந. முருகதாஸ்
18 திரு. க. கனகநாயகம்
19 திரு. க. கணேசதாஸ்
20 திரு. இ. கருணாரத்தினம்
21 திரு. இ. இந்திரஜித்
22 திரு. பொ. தயாநிதி
23 திரு. த. ஜெயகரன்
24 திரு. வை. சுரேஸ்
25 திரு. சே. ஸ்ரீஸ்கந்தராசா
26 திரு. சு. சூரியகுமார்
27 திரு. க. செல்வன்குமார்
28 திரு. ந. ரவீந்திரன்
29 திரு. இ. கங்காதரன்
30 திரு. ந. தவயோகராசா
31 திரு. சு. பூபாலசிங்கம்
32 திரு. நா. சோமஸ்கந்தமூர்த்தி.
33 திருமதி ம. மாலாதேவி
34 செல்வி. சி. சிவமேகலை.

## சமூர்த்தி முகாமையாளர்கள்

1 திருமதி பு. அருள்ராஜ்
2 திருமதி ஜெ. யேசுராஜா
3 செல்வி அ. பரமேஸ்வரி

## சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

1 திரு. க. கஜேந்திரப்பிரபன்
2 செல்வி அ.யூலியட்சுகந்தினி
3 செல்வி. அ.சந்திரகலா
4 செலவி. சு. இராஜகுலேந்தினி
5 செல்வி. சி. றஞ்சினி
6 செல்வி. மு. ஜெயந்தி
7 திரு. ப. சசிதரன்
8 செல்வி. வே. விமலாதேவி
9 செல்வி. சி. நிமலினி
10 செல்வி. தே. அனுஷா
11 செல்வி செ. கௌரிமலர்
12 திரு. த. கஜசிறி
13 திரு. இ. தர்மகுலசிங்கம்
14 செல்வி. கு. பிறீதினி
15 செல்வி. சி. மலர்விழி
16 திரு. ந. நவலோகன்
17 திரு. க. சத்தியதரன்
18 திரு. ந. உதயதரன்
19 திரு. தே. விக்கினேஸ்வரன்
20 திருமதி. எ. பரமேஸ்வரி
21 திருமதி கோ. சந்திரமதி
22 செல்வி. து. சசிகலா
23 செல்வி. ச. யோகநாயகி
24 செல்வி செ. ஜெயந்தினி
25 செல்வி. கி. ராசினி
26 செல்வி ஐ. அபிராமிதேவி
27 திரு. சி. ரவீந்திரன்
28 திரு. பி. ஜெயச்சந்திரன்
29 செல்வி பு. நளாயினி
30 செல்வி. சி.சிவாஜனி
31 திருமதி. ம. ஜெயரூபி
32 திரு. த. தங்கவடிவேல்
33 திரு. ச. குகதாசன்
34 செல்வி இ. அருமைநாய்கி
35 செல்வி பொ. வனிதா
36 செல்வி. க. மங்களேஸ்வரி
37 திர. செ. சிறிதரன்
38 திரு. செ. ஈஸ்வரன்
39 செல்வி த. திபிசாந்தி
40 செல்வி ஹஜமுகி
41 செல்வி. ந.சுபேந்தினி
42 செல்வி. க. பாலரூபி
43 திரு. சி. தயாபரன்
44 திரு. சி. சசிக்குமார்
45 திரு. ச. கிருஸ்ணதாசன்
46 திர. தி. பிரபாகரன்
47 திரு. ந. பார்த்தீபன்
48 செல்வி சா. சுகன்யா
49 செல்வி. வே. சுதாமதி
50 திரு. க. சபேசன்
51 திரு. ந. நதீஸ்வரன்

## வெளிக்கள உத்தியோகத்தர்கள்

| | | |
|---|---|---|
| 1 | திருமதி ரதி நகுலேஸ்வரன் | (திட்ட அலுவலர்) |
| 2 | திரு. சு. வரதபாஸ்கரன் | (ச.சே.உ) |
| 3 | திரு. சி. சிவகரன் | (சி. ந. உ) |
| 4 | திருமதி க. சிவராஜா | (சி. அ. உ) |
| 5 | திரு. ம. அருள்சந்திரன் | (க.உ) |
| 6 | செல்வி. க. விமலராணி | (தை. போ) |
| 7 | திரு. செ. சோதிராஜா | (கு.போ) |
| 8 | திரு. க.ரமணசுதன் | (நெ.போ) |
| 9 | செல்வி. ந. புனிதவதி | (நெ.போ) |
| 10 | திரு. ம. வைத்தீஸ்வரன் | (தொ.நு..உ) |
| 11 | திரு. கு. முகுந்தன் | (வி.உ) |
| 12 | திரு. செ. புஸ்பநாதன் | (வி.உ) |
| 13 | திரு. எஸ். கணபதிப்பிள்ளை | (இ.வி.உ) |
| 14 | திரு. எஸ். சிவசுப்பிரமணியம் | (கு. உ) |
| 15 | திருமதி லி. மரியஸ்ரான்லி | (நெ.மே) |
| 16 | திரு. எஸ். சிவசோதி | (புள்ளிவிபரவியலாளர்) |
| 17 | திருமதி. ஆ. வசந்தா | (தொ. நு. உ) |

### பெருமை

1கடல் ஓயாதழுவதுமேல் சொல்லடியோ
கலங்காதே வாழ்விலென்றோ சொல்லடியோ
கமலமுகம் கம்பவதேன் சொல்லடியோ
காதலியே பிரிவுமுண்டோ சொல்லடியோ
(கடல்)

2.புயல் வேகங் கொள்வதுமேல் சொல்லடியோ
புன்மை கண்டு பொங்கியதோ சொல்லடியோ
அலைதோன்றி மறைவதுபோல் சொல்லடியோ
நிலையாத உலகமென்றோ சொல்லடியோ

3.மழைமேகம் பொழில்மேன் சொல்லடியோ
மனமுவந்தே கொடுத்திமேன்றோ சொல்லடியோ
மலையோங்கி வளர்வதுமேன் சொல்லடியோ
மனம்போல வாழ்வென்றோ சொல்லடியோ
(கடல்)

4.மலர் வீசும் மனம் னோ சொல்லடியோ
மன (ம்) வாழ்விற் பொலிவதற்கோ சொல்லடியோ
புலர்காலை ஒளிர்வதுமேன் சொல்லடியோ
பனிவாழ்வில் ஒளிபெறவோ சொல்லடியோ
(கடல்)

### தலைமை

1. ஆட்டுவித்தான் ஆடுகிறேன்
ஆட்டுமவன் கத்தனன்றோ
பாடவைத்தான் பாடுகிறேன்
பாட்டுமவன் பாடல்லன்றோ (ஆட்டு)

2. ஏற்றுதொரு வேடமிட்டான்
எட்டநின்றே பார்த்திருந்தான்
நேற்றுவரை மாற்றமில்லை
நேரமவன் கையிலன்றோ (ஆட்டு)

3. ஆளுக்கொரு தோனியிலே
ஆடவிட்டான் கடலினிலே
மீளுதற்குத் துடுப்பமில்லை
மீகாமன் அவனல்லவோ. (ஆட்டு)

4. கூட்டிலெனை நுழைத்துவிட்டான்
கூடவொரு துணையிருந்தான்
மீட்டுகிறேன் அவனிசையை
மிதப்பதவன் நாதமன்றோ. (ஆட்டு)

5. சூத்திரனாய்த் தானிருந்தே
நாடகத்தை நடத்தகிறான்
பாத்திரம் நான் முடிவறியேன்
கதையுமவன் கதையல்லவோ. (ஆட்டு)

# நன்றிக்கு வித்தானோர்......!

மண்ணில் நல்ல வண்ணம் வாழ "நன்றே செய் அதுவும் இன்றே செய்" என்ற நல்வாக்கை உளங்கொண்டு வளம்நிறை வலிகாமம் வடக்கின் தளம்பற்றிய செய்திகளை இளைய தலைமுறையினரும், இதர தேசத்தினரும், இங்குவாழ் மக்களும் இனிதே அறிந்து கொள்ளவும், இடப்பெயர்வால் நிலைகுலைந்து, மனம் தளர்ந்து, இன்னலுறும், இப்பிரதேச மக்களை மீண்டும் நிலைநிறுத்தவும், உதவும் வகையில் யாவரும் அறிய - அரிய- ஆவணம் ஒன்று வேண்டும் என்ற எண்ணம் உதித்ததும் இப்பிரதேசமலர் தோற்றம் பெற்றது.

நிலவளம், கடல்வளம், தொழில்வளம் மனிதவளம், கொண்ட இப்பிரதேசத்தின் கல்வி, கலை, கலாச்சாரம், சமயம், சமூகம், பொருளாதாரம் போன்ற விடயங்களை ஓரளவு ஆய்வுடன் அறியவைக்கும் அல்லது பாதுகாக்கும் ஆவணமாக இது அமைய வேண்டும் என்று விரும்பியதனால் இவ்வூர்க் கலைஞர்கள், அறிஞர்கள், பிரதேசச் செயலக உட்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஒன்று கூட்டப்பட்டு மலர்க்குழு தெரிவு செய்யப்பட்டு இடையறா முயற்சியால் ஆக்கங்களும் சேகரிக்கப்பட்டன. மலரை வெளியிட நிதி வேண்டுமாதலால் வலிகாமம் வடக்கிலுள்ள வள்ளல்களை நாடியபோது இல்லையென்னாது மனமுவந்து நிதிவழங்கிய பின்வருவோரை மறக்கமுடியாது. அவர்களுக்கு எம் நன்றி.

| | | |
|---|---|---|
| 1. துர்க்காதேவஸ்தானம் | ரு | 10, 000.00 |
| 2. திரு. சி. சிறிதரன் | ரு | 10, 000.00 |
| 3. திரு. ஆறுமுகநாதன் | ரு | 5, 000.00 |
| 4. அளவெட்டி. மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் | ரு | 5, 000.00 |
| 5. தெல்லிப்பளை . ப. நோ. | ரு | 5, 000.00 |
| 7. திரு. கந்தையா, ஜெயந்தி[illegible]கமாளிகை | ரு | 500.00 |
| | | 35, 500 00 |

டொலர் பெறுமதி கூடக்கூட, அச்சுத்தாள் விலை ஏற ஏற, பயமும் நெஞ்சில் கூடக் கூட மலர் மலர்வது நின்றுவிடுமா என்று தவித்தது நிஜம். யானைப்பசிக்குச்சோழப்பொரி போதுமா? இந்நிலையில் கிராம உத்தியோகத்தர்களின் முயற்சி திருவினையாக்கியது. சிலர் தாமாகவும், சிலர் இயலுமான விளம்பரங்களைத் தேடியும் நிதிக்குதவினர். கிராம உத்தியோகத்தர்களுக்கும் விளம்பரங்களைத் தந்துதவிய அத்தனை பேருக்கும் மனம்நிறை நன்றி.

இந்நூல் சிறந்து விளங்க ஆசியுரை, மதிப்புரை வழங்கிய பெரியோருக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய அத்தனை அறிஞருக்கும், வலிவடக்கின் வளங்களைப் பிரதி பலிக்கும் வகையில் மலரின் முகப்பை அணிசெய்த கொழும்பு யுனி ஆட்ஸ் நிறுவனத்தினருக்கும் கட்டுரைகளைக் கணனி மயப்படுத்திய கணேசன் கொம்மூனிக்கேசன் அதிபருக்கும், மலரை அச்சிட்டு உதவிய பிள்ளையார் அச்சகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

மேலும் கொழும்பிலே நின்று மலரின் முகப்பை வளம்படுத்தியும் ஏனையபடங்களை ஏற்றவகையில் செய்வித்தும் உதவிய எஸ். சச்சிதானந்தம் கிராம அலுவலர் அவர்களுக்கும், அச்சேற்றுமுன் பிரதேசச் செயலருடன் எழுத்துக்களைச் செவ்வை பார்த்த சைவப்புலவர். சு. செல்லத்துரை, க.கணேசதாஸ், ந. ரவீந்திரன் ஆகிய கிராம அலுவலர்கட்கும், இம்மலரின் வெளியீட்டு நிகழ்வைச் சிறப்புடன் நிறைவு செய்ய உறுதுணையாக இருந்த வலிகாமம் வடக்குப் பிரதேசச் செயலக உட்கள, வெளிக்கள, உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், விழாவில் ஆசியுரை, வெளியீட்டுரை, மதிப்புரை வழங்கியோர் அனைவருக்கும், விழாவைச் சிறப்பிக்க வருகை தந்ததுடன் மலரை மனமுவந்து ஏற்றுக் கொள்வனவு செய்து எமது நிதிநிலையைச் சீர்செய்ய உதவிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் எமது மனமுவந்த நன்றியை நவில்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

மலர்க்குழுவும்
பிரதேசச் செயலக அலுவலர்களும்
வலிகாமம் வடக்கு.

மலரில் வரும் ஆக்கங்களுக்கும், ஆய்வுகட்கும் ஆக்கவாளர்களே பொறுப்பாவார்.

# நெஞ்சினிக்க வாழ்த்துகிறோம்



வலிகாமம் வடக்கின் வளம் நிறைந்த செய்திகளை ஏந்திவரும் வலிகாமம் வடக்குப் பிரதேச மலர் தீபம் போல் துலங்கவும் சிறப்புறவும் எங்கள் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.




சமுர்த்தி முகாமையாளர்களும்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்
வலிவடக்கு பிரதேச செயலகம்.

# PILLAIYAR CRUSHER

# பிள்ளையார் கிறஷர்

இளவாலை வடக்கு,
இளவாலை.

ILAVALAI NORTH,
ILAVALAI.



❖ வீடு கட்டுவோர், புதிய கட்டிடம் கட்டுவோர்,

❖ பாடசாலை கட்டுவோர்,

❖ வீதி திருத்துவோர்,

❖ சகல வகைக் கற்களையும்

பெற நாடவேண்டிய சிறந்த இடம்



உரிமையாளர்:-
இராஜேந்திரம் லோகேஸ்வரி

RAJENDRAM
LOGESWARY

காங்கேசன்துறைத் தொகுதி


# உணவு விநியோக நிலையக் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம்



(வரைவுள்ளது)

Kankesanthurai Electorate

# Food Supply Co - Operative Labour Society Ltd



Supply Station
Kankesanthurai

நீண்ட நெடுங்காலமாக எமது வலிகாமம் வடக்குப் பிரிவிற்குச் சொந்தமான ஒரு நிரந்தர பிரதேச செயலகக் கட்டடம் இல்லாதிருந்த ஒரு பெருங்குறையை எமது மதிப்பார்ந்த பிரதேசச் செயலரும், மேலதிக அரசாங்க அதிபருமாய திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அவர்களால் அவர்களது சேவைக்காலத்தில் அமைத்தமை பிரதேசச் செயலரின் சேவை அர்ப்பணிப்பை வலிவடக்குப் பிரதேசச் செயலக மாடிக்கட்டடம் எக்காலமும் பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு மகுடம் சூட்டினாற்போல அமைவது எமது பிரதேசச் செயலர் அவர்கள் வெளியிட உள்ள வலிகாமம் வடக்குப் பிரதேசமலராகும். பல அறிவு விருத்திசார் ஆக்கங்களையும், தகவல்களையும் தாங்கி தொழிலாளர் சார்பில் இறையாசிவேண்டி, பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் எமது சங்கம் பெருமையடைகிறது.

மலருக்கு வாழ்த்து வழங்க வாய்ப்பளித்தமைக்கு பிரதேசச் செயலர் அவர்களுக்கு நன்றி.

2000. 10 . 19

கனகர். கந்தசாமி
தலைவர்

பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# காங்கேசன் வெதுப்பகம்

# அன் கொமினிக்கேசன்

*மிகச்சிறந்த முறையில் தரமானதுமான*

**பாண்,** **கேக்,**

**பணிஸ்,** **பிஸ்கற்**

**வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.**


**ஓடர்களுக்கு குறைந்த விலையில் தரமான கேக் மொத்தமாகவும்**

**சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

# காங்கேசன் கொமினிக்கேசன்

உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்



**உள்நாடு - 070 - 212605**

**வெளிநாடு - 0094 - 70212605**

உரிமையாளர்

*கி. பரமகுருநாதன்*

முகவரி: -

காங்கேசன்துறைவீதி,

மல்லாகம்.


பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்

# ஆனந்தி அன்கோ

துர்க்கா புரம் மல்லாகம்

தொலை பேசி - 212817

- அரச ஒப்பந்தகாரர்
- கட்டிட உபபொருள் விநியோகஸ்தர்கள்
- சிற்ப படைப்பாளர்கள்





# ஆனந்தி அன்கோ


துர்க்கா புரம் மல்லாகம்

# Konnesh Maths Academy

Alaveddy South. Alaveddy


**ஆண்டு 04 முதல் A/L வரை பிரபல ஆசிரியர்களினால் வகுப்புக்கள் நடைபெறுகின்றன**

## O/L வரை



| | |
|---|---|
| கணிதம் | : திரு. நா. கோணேஸ்<br>திரு. ம. தயா |
| விஞ்ஞானம் | : திரு. வெ. ஜெகதீஸ்வரன் |
| தமிழ் | : திரு. வ. வசந்தன்<br>செல்வி செ. நிதி |
| ஆங்கிலம் | : திரு. அ. வாகீசர்,<br>திரு. க. பாலவிசாகன் |
| சமூகக்கல்வி வரலாறு | : திரு. இ. மகேஸ்<br>திரு. செ. ஜெகதீஸ் |
| சமயம் | : திரு. த. பிரதீஸ்<br>செல்வி . ஐ. சிவசோதி |
| வர்த்தகம் | : திரு. செ. ஜெகதீஸ்வரன் (ஜெகன்) |

## A/L



| | |
|---|---|
| தமிழ் | : திரு. லிங்கம் |
| இந்துநாகரிகம்<br>இந்துசமயம் : | : திரு. ஸ்ரீஸ் |
| அளவையியல் | திரு. பவான் |
| ஆங்கிலம் | : திரு. வாகீசர் |
| பொது உளச்சார்பு | திரு. எஸ் . வீ. எஸ் |

அழகிற்கு, அழகு செய்யும்
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு

# நதியா ஜுவல்லரி

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)

**இல : 2 கஸ்தூரியர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்
*சண்முகம் இராஜேஸ்வரன்*

தொலைபேசி இல : 021 – 3479

பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# ராஜன் தொழிலகம்

**சகலவிதமான கடைச்சல் வேலைகள்**
**போறிங் செய்தல், கிராங் வெட்டுதல்**
**நீர் இறைக்கும் இயந்திரங்கள் பழுதுபார்த்தல்**
**பம்புகள் செய்தல், மோட்டர் பழுதுபார்த்தல்**
மற்றும் சகலவிதமான இரும்பு வேலைகள்
உடனுக்கு உடன் செய்துதரப்படும்.

உரிமையாளர் மு. கனகசுந்தரம்

கே.கே.எஸ் வீதி,
மல்லாகம்

வண்ணவண்ணக் கனவாய்
எம்மனதில் நிலைத்திருக்கும்
எம் பிரதேசத்தின் மகிமைதனை
சிறப்புற எடுத்துக் கூறவும்
பிரதேசமலர் வளம் பெற
வாழ்த்துகின்றோம்

# ஈஸ்வரி மரக்காலை

**மரம் அரிவு வேலைகள்**
**பலகை வகை விற்பனை**
**தீராந்திகள் விற்பனை**
**தளபாடங்கள் விற்பனை**

**மொத்தமாகவும், சில்லறையாகவும்**
**பெற்றுக் கொள்ளலாம்**

# ஈஸ்வரி மரக்காலை


உரிமையாளர்
*வே. உதயகுமார்*

கே. கே. எஸ் வீதி,
மல்லாகம்.

# கட்டட ஒப்பந்தக்காரரும் கட்டடப்பொருள் வழங்குனரும்

## பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்





**தவராசா**
**கட்டட ஒப்பந்தக்காரரும் கட்டடப் பொருள் வழங்குனரும்**

# N.THAVARAJA

BUILDING CONTRACTORS AND MATERIALS SUPPLIERS




உரிமையாளர் :-நா. தவராசா
பதிவு இல :- 6350

உடுவில்
உடுவில், சுன்னாகம்.

# தயாளந்தா அரைக்கும் ஆலை


**கே.கே.எஸ்.வீதி,**
**பழம் பிள்ளையார் கோவில் அருகாமை,**
**மல்லாகம்.**




**சகலவிதமான தானிய வகைகளும்**
**உடனுக்குடன்**
**அரைத்துக் கொடுக்கப்படும்**

உரிமையாளர் :- க. அழகராசா

**கடல் வளம் நிறைந்து பனைவளம் ஓங்கி**
**பயிர் வளம் செழித்து அறிவாலயங்களும்**
**அறவாலயங்களும் நிறைந்த எமது பிரதேசத்தின்**
**வரலாற்றுப்பாதையில் ஓர் அடிச்சுவடென**
**மிளிரும் பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்**




# கிராம அபிவிருத்திச்சங்கம்

குரும்பசிட்டி

---

பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்

# ஆதித்தன்ஸ்



## கட்டிட ஒப்பந்தகாரரும் கட்டிடப்பொருள் வழங்குனரும்

## Aathiththans

**Building Contractors and Materials Suppliers.**

உரிமையாளர்
*சி. சிறீதரன்*
பதிவுஇல. **16627**

புகையிரத வீதி,
மல்லாகம்.

# ஜெயதுர்க்கா நகைத் தொழிலகம்

உங்கள் அழகிய தங்க நகைகளை விரும்பிய டிசைன்களில் செய்து பெற்றிடவும் ஓடர் நகைகளை குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில் செய்யவும் எம்மிடம் நாடுங்கள்

உரிமையாளர்
பா. நாகராஜன்

புகையிரத வீதி
மல்லாகம்

---

# சிறி இரும்புத் தொழிலகம்

சகலவிதமான கடைச்சல் வேலைகள் செய்யவும் வெல்டிங் வேலைகள் செய்யவும் மினிபஸ் திருத்தவும் கேற், கிறில் செய்யவும் மரம் அரியும் இயந்திரங்கள் செய்யவும், இருசக்கர உழவு இயந்திரப் பெட்டி செய்யவும் மற்றும் சகலவிதமான இரும்பு வேலைகள் செய்யவும் நாடவேண்டிய இடம்

## சிறி இரும்புத் தொழிலகம்


உரிமையாளர்
பொ. சிறிதரன்

காங்கேசன்துறை வீதி
மல்லாகம்

பிரதேச மலர் சிறப்புற வாழ்த்தும்

# துவாரகா பல்பொருள் வாணிபம்





## சகல விதமான பொருட்களை
## மொத்தமாகவும் - சில்லறையாகவும்
## பெற்றுக்கொள்ளலாம்




உரிமையாளர்
**இ. பரமேஸ்வரன்**

முகவரி
**புகையிரத வீதி**
**மல்லாகம்**


---

பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்



- **தொலைபேசி**
- **பக்ஸ் (FAX) சேவையும்**
- **கொம்பியூட்டர் அச்சுவேலைகள்**
- **போட்டோ பிரதி**
- **தமிழ் ஆங்கில தட்டச்சு வேலைகள்**
- **கவரிடுதல்**
- **றோணியோ வேலைகள் செய்யவும் மற்றும்**
- **பாடசாலை உபகரணங்கள்**
- **விண்ணப்பப்படிவங்கள்**






பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள்

# T.N.Complex



கே.கே.எஸ் வீதி
மல்லாகம்

உள்ளூர் இல : 070 - 212338
070 - 212648
வெளிநாடு இல : [illegible] - 70 - 212338
094 - 70 - 212648



மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# ஈஸ்வரி கொமினிக்கேசன்



தொலைபேசி இலக்கம் : 070 - 212623

சிறந்த தொலைபேசி சேவைக்கு உடன் எமை நாடுங்கள்

உரிமையாளர்
S.K. இலங்காபதி

புகையிரத வீதி,
மல்லாகம்.

மலர் சிறப்புற மல்லாகத்தில் அமைந்திருக்கும் சகல வர்த்தக நிறுவனங்கள் சார்பிலும் வாழ்த்துகின்றோம்




# மல்லாகம் வர்த்தகர் சங்கம்
# Mallakam Traders Association

காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.

- *வளம் நிறை பிரதேசமாம்*
- *வலி வடக்கின் செழுமையை விதந்துரைக்கும்*
- *பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்*

ஓடர்கள் குறித்த தவணைகளில் செய்து கொடுக்கப்படும்

# அஸ்வினி நகைமாடம்




கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

---

# Eswaran Clinic

**Regd No 8431**

Dr. N. Maheswaran
R.I.M.P &. D.A.M



Dutch Road ,
Alaveddy West ,
Alaveddy.

சகல விதமான சூறண செந்தூரபஸ்பங்களும் அத்துடன் கிரந்தி எண்ணெய் முதற் கொண்டு சகல விதமான எண்ணெய்களும் சித்த ஆயுர் வேதமுறைப்படி சிறந்த முறையில் தயாரித்து வழங்கப்படும். அத்துடன் சகல ரோகங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்
சிறப்புற சேவையாற்றவும் பிரதேச மலர் சிறப்புற விளங்கவும்
இனிது வாழ்த்தி நிற்கின்றோம்.

# நிலா நகை மாடம்

**மங்கையர் மனங்கவரும் அழகிய 22 கரட் தங்க நகைகளை நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில் ஓடருக்குச் செய்து கொள்ளவும்**

## யாழ் நகரில் தனித்துவமான நிறுவனம்

# NILA JEWELLERS

உரிமையாளர்: ஏ.கணேசலிங்கம்

280/1கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

**280/ Kasthuriar Road**
**Jaffna.**

---

சகல விதமான பலசரக்கு சாப்புச்சாமான்களையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்

# பொன்மலர் களஞ்சியம்

**அளவெட்டி**

சன்பிறான்ட் ஐசிங்சுகர், டொபி, இனிப்பு வகைகள், சுகாதாரமுறைப்படி
தாயாரித்து விநியோகிப்போர்

***அளவை கொன்பக்ஷனறி வேக்ஸ், அளவெட்டி.***

**உள்நாட்டு வெளிநாட்டு தொலைத்தொடர்புகளை உடனுக்குடன் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்**

# பொன்மலர் தொலைத்தொடர்பு நிலையம்

தொலைபெசி இல: 07-212558

பொன்மலர்

தெல்.பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி.

# கதிர்காமசிங்கம் சன்ஸ்

பிரதான வீதி,


அளவெட்டி தெற்கு

அளவெட்டி

பலசரக்குப் பொருட்கள் சில்லறையாகவும் மொத்தமாகவும்

மற்றும்

- ⇨சீமெந்து
- ⇨கம்பிவகை
- ⇨கட்டடப் பொருட்கள்
- ⇨ஆண் பெண் துவிச்சக்கர வண்டிகள் அவற்றின் உதிரிப்பாகங்கள்
- ⇨அலங்காரப் பொருட்கள்



நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

---


# ரீ.எஸ்.சுந்தரம் பல்பொருட் களஞ்சியம்



13, கே.கே. எஸ் வீதி, சுன்னாகம்

எம்மிடம்

- ❖ அன்பளிப்பு அலங்காரப் பொருட்கள்
- ❖ பாடசாலை உபகரணங்கள், குளிர்பான வகைகள்
- ❖ பிஸ்கட் வகைகள், பால்மா வகைகள்
- ❖ கேக் தயாரிப்பு, பேக்கரி உற்பத்திப் பொருட்கள்,
- ❖ எவர்சில்வர்
- ❖ அலுமினியம் பிளாஸ்ரிக் பொருட்கள்



# சிவம் படப்பிடிப்பு கலையகம்


சிவம் படப்பிடிப்பு கலையகம்





கே.கே.எஸ் வீதி,
பெரிய மதவடி,
சுன்னாகம்.


திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்,
பிறந்த நாள் கொண்டாட்டங்கள் எதுவாகவிருந்தாலும்
சிறந்த முறையில் படப்பிடிப்பு வீடியோ
என்பன செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.



உரிமையாளர்:- க. சிவகுமார்

---

# ஜீவா பல்பொருள் வாணிபம்



**K.K.S. வீதி, மல்லாகம்**

சகலவிதமான பொருட்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

# ஜீவா தொலைத்தொடர்பு நிலையம்

K.K.S.வீதி, மல்லாகம்



இரவு, பகல் தொலைத்தொடர்புச்சேவை

உள்ளூர்:- 070-212996
வெளியூர்:- 0094-70-212996

உரிமையாளர் :- மு.ரஞ்சன்

**தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம் .**

**22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு**

**உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.**

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள

தங்க வைர நகைகளுக்கு

சிறந்த ஸ்தாபனம்

# சிறி கணேஷன்

## ஜுவல் ஹவுஸ்

கே. கே. எஸ். றோட்

கோண்டாவில்

---

உ

சிவமயம்

# லக்சுமி புத்தக நிலையம்

# Lakshme Book Centre

📖 இந்தியாப் புத்தகங்கள்

📖 காகிதாதிகள்

📖 எழுதுகருவிகள்

📖 பாடசாலை, அலுவலக உபகரணங்கள்

*விநியோகஸ்தர்கள்*

## லக்சுமி புத்தக நிலையம்



உரிமையாளர்

திரு. பொ. பாலசுப்பிரமணியம்


குரும்பசிட்டி, தெல்லிப்பளை.

இல: 312(224) கே. கே.எஸ்.வீதி,

யாழ்ப்பாணம்.

# THAVAM STORES

## தவம் ஸ்ரோஸ்



தொலைத் தொடர்பு சேவை

வெளியூர் இல: 0094 - 70212863

உள்ளூர் இல :- 070 - 212863

அம்பலவாணர் வீதி, உடுவில்.

# சோதிட விலாச புத்தகசாலை

- பாடசாலைக்குரிய நூல்கள் உபகரணங்கள்
- சமய, அறிவியல் நூல்கள்
- இலக்கண இலக்கிய நூல்கள்
- சோதிட, எண்சோதிட நூல்கள்
- விஞ்ஞான நூல்கள்



எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்


இல 46, பெரியகடை, யாழ்ப்பாணம். கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.


39314

# ரட்ணைஸ்


## வைண்டிங் அன் மோட்டோர்ஸ்

219, ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.



## சிறி ரட்ணைஸ்

## ரஜீவன்



**வைண்டிங் அன் மோட்டோர்ஸ்**
**68, கே.கே.எஸ்.வீதி,**
**சுன்னாகம்.**

**மோட்டோர்ஸ் அன் எலக்ரிக்கல்ஸ்**
**1008, கே.கே.எஸ்.வீதி,**
**நாச்சிமார் கோவிலடி.**

---

# சித்திவிநாயகர் கல்வி நிலையம்



கல்வி உலகில் தனித்துவமான நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

A/L கலை வர்த்தகம் ஆசிரியர்குழு
பொருளியல் – **திரு.விக்கி**
கணக்கீடு – **திரு.D.SAM**
வணிகக்கல்வி – **திரு.உமாகாந்**
இந்துநாகரிகம் – **திரு.S.சுரேஸ்**
அளவையியல் - **திரு.N.மனோ**
தமிழ் - **திரு.மா.வை.லிங்கம்**
நாடகம் /அரங்கு ~ **திரு.I.சத்தியா**
ஆங்கிலம் - **திரு.ஜீவா**

ஆண்டு 6முதல் ழுஃடு வரையான ஆசிரியர்குழு
தமிழ் - **திரு.I.சத்தியா, செல்வி.I.சோதி**
கணிதம் - **திரு.மகேந்திரம், திரு.K.சுரேஸ்**
விஞ்ஞானம் - **திரு.டார்வின், திரு.மயூரன்**
சமூகக்கல்வி - **திரு.R.ரூபன்**
ஆங்கிலம் - **திரு.ஜீவா, திரு.ஐங்கரன்**
சைவசமயம் - **திரு.I.சிவா**
வர்த்தகம் - **திரு.பிரபா**



## வினோ நகைப்பூங்கா


தங்க வைர நகை வியாபாரம்

நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்.
௨௨ கரட் தங்க நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன
செய்து கொடுக்கப்படும்.


185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதேச மலர் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

## கௌரி கைத்தொழிற் சேவைகள்



மல்லாகம்.




உரிமையாளர் :க.முருகானந்தன்


# CITY PAINT HOUSE


14, Dr.SUPRAMANIAM ROAD,
CHUNNAGAM

## சிற்றி பெயின்ற் ஹவுஸ்



14, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
DUCO – DULUX
ROBBIALAC , LANKAPRIDE
& CERAMICS





சகல வகையான பெயின்ற் வகைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

பிரதேச மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்

# மக்கள் வங்கி

**உங்கள் வாழ்நாள் முழுவதும் நிழல்போல்**
**உங்களைத் தொடர்ந்துவரும் "மக்கள் வங்கி"**
**மக்கள் சேவையில் 39 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது!!**

✈60 இலட்சம் வாடிக்கையாளர்கள் !!

✈100ற்கும் மேற்பட்ட கிளைகள் !!!

இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில் நீங்களும் சேருங்கள்!!!

✈வங்கியின் வழமையான சேவைகளுடன்

- பாடசாலை மாணவர்களுக்கான விசேட சேமிப்புத்திட்டம் "மாணவர் மலர்ச்சி"
- மகளிருக்கான திட்டம் "மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு"
- ஆசிரியர்களுக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம் "குருசெத"
- சுகாதார சேவையிலுள்ள தாதியருக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம் "சுவசெவன"
- தொழில் அற்றோர் சுயதொழில் தொடங்குவதற்கான திட்டம் "சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்"
- முதியோருக்கான திட்டம் "மூத்த பிரஜைகள் யாத்திரைக் கணக்கு"
- வருடந்தோறும் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிர்ஷ்டலாபப் பரிசு வழங்கும் திட்டம்

✈இன்னும் பலப்பல திட்டங்கள் அனைத்தும் உங்கள் வளர்ச்சிக்கே!!!

✈இலட்சோப லட்சம் மக்களின் வங்கியாகிய மக்கள் வங்கியின் வாடிக்கையாளராகி நலம் பெறுவீர் !!

மக்கள் மனமறிந்த வங்கி "மக்கள்வங்கி"
பிரதேச தலைமை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# பிரதேச கீதம்

முந்தையரின் நுண்ணறிவே மூலதனமாக
எந்தையரும் அன்னையரும் வாழ்ந்த பிரதேசம்
செந்தமிழும் செந்நெறியும் செம்புலம்பெய் நீராய்
சந்ததமும் வளம் கொழிக்க வாழி! நிதம் வாழி!!

செங்கழனி நீர்நிலைகள் இறையருளின் தேக்கம்
நஞ்சையுடன் புஞ்சையுமே நம்மவரின் தேட்டம்
கொஞ்சும் எழில் மிஞ்சுமிடம் வலிகாமம் வடக்கே
பஞ்சமென்ன ! தொழில்வளங்கள் வாழி! நிதம் வாழி!!

பஞ்சரதம் ஊர்ந்துவரும் மாவிட்டபுரமும்
நெஞ்சுருகப் பண்ணிசைக்கும் பக்தர் பரவசமும்
சங்கரனின் அருள்பெற்ற நகுலமுனி பெயரில்
இங்கு நகுலேஸ்வரமும் வாழி! நிதம் வாழி!!

தங்கம் முதல் பொருள்களுடன் பொதுமக்கள் பலரும்
வந்திறங்கும் துறைமுகமே காங்கேசன் துறையாம்
வங்கமெனும் கடல்வெளியில் மீனவர்கள் துறையாய்
என்றுமுள மயிலிட்டி வாழி! நிதம் வாழி!!

தென்னகத்தின் தளபதியாம் காங்கேயன் வந்த
மண்ணினிலே சீமேந்துத் தொழிற்சாலை கண்டோம்
எம்மகத்தில் மேல்நாட்டார் கொண்டுவந்து  வைத்த
செஞ்சிலுவைக் கோயில்களும் வாழி! நிதம் வாழி!!

சிங்கமதன் மீதமர்ந்து அருளாட்சி செய்யும்
துர்க்கா புரம் உளது 'புஷ்கரணி' தீர்த்தம்
செங்கமலத் திருவுறையும் வெற்றிலை, முந்திரிகை
நிந்தமெனும் வலிவடக்கு வாழி! நிதம் வாழி!!

எங்கோ உயரப் பறந்துவரும் விமானங்கள்
தங்கும் பலாலி நிலையம் நமதன்றோ!
என்றோ உளநலமும் உடல் நலமும் பேணிவந்த
நன்றாம் வைத்தியசாலைகள் வாழி! நிதம் வாழி!!

சங்கீத சாகித்ய சமரச மெஞ்ஞான
வித்தகர்கள் வல்லுனர்கள், விற்பன்னர் மக்களுமே
மங்கள வாழ்வுடனே மங்காப்புகழும் பெற
வலிகாமம் வடக்குப் பிரதேசம் வாழி! நிதம் வாழி!!

''சிதம்பரபத்தினி''

Graphics Desingned & Printed by Unie Arts (Pvt) Ltd. Tel: 330195